திருக்குறள் அமைப்பும் முறையும்

சஞ்சீவி (ந)

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை
திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி
வெளியீடு—4

திருக்குறள் ஆராய்ச்சி: 4

# திருக்குறள் அமைப்பும் முறையும்

பொதுப் பதிப்பாசிரியர்:
டாக்டர் ந. சஞ்சீவி
தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகம்

1972

# THE STRUCTURE AND METHOD

## OF

# TIRUKKURAL

M. SHANMUKHAM PILLAI
Lecturer in Tamil
Tirukkural Endowment Research Centre
University of Madras

UNIVERSITY OF MADRAS
1972

திருக்குறள் ஆராய்ச்சி: 4

# திருக்குறள் அமைப்பும் முறையும்

ஆசிரியர்
மு. சண்முகம் பிள்ளை
தமிழ் விரிவுரையாளர்
திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி
சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகம்

1972

முதற் பதிப்பு—1972

© சென்னைப் பல்கலைக் கழகம்

விலை ரூ. 12–50

இரத்தினம் அச்சகம், சென்னை–1

# திருக்குறள் அமைப்பும் முறையும்

## முதற்பகுதி

## நூ ல மை ப் பு

# துணைவேந்தரின் அணிந்துரை

திருக்குறள் தமிழில் மலர்ந்தது; பல மொழிகளில் பெயர்ந்தது; உலகம் முழுவதும் மணம் பரப்பிவருவது; இது தமிழ் மறை; உலகப் பொதுமறை.

காலஞ்சென்ற டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சர் உலகப் பெருந் தொண்டர்களில் ஒருவர்; மாந்தர் தொண்டிற்குத் தம் வாழ்வைப் படைத்த நல்லார்; நுண்மாண் நுழைபுலம் மிக்க அறிஞர்; சிறந்த சிந்தனையாளர்.

அப்பெரியார்,

> "ஒழுக்கமே மனிதனுடைய உயர்ந்த குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதை மிகுந்த உறுதியோடு வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒவ்வொருவனும் தனக்குத் தானே செய்ய வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? என்பனவற்றையெல்லாம் சிறந்த பண்பாட்டோடும் மதிநுட்பத்தோடும் வள்ளுவர் பேசுகிறார். உலக இலக்கியத்தில், இத்தகைய, மாண்புமிக்க மெய்யறிவு, வேறு எந்நூலிலும் இத்துணைச் சிறப்பாகப் பொலிவுறவில்லை என்று சொல்லலாம்"

என்று திருக்குறளைப் போற்றியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறள் தோண்டத் தோண்டத் துலங்கும் மணிச் சுரங்கமாய் விளங்குகிறது. அவ்வக் காலத்திற்கேற்ற அறிவொளியை வழங்கி எக்காலத்திற்கும் எல்லார்க்கும் உரிய வாழ்க்கை இலக்கியமாய் விளங்குவதே திருக்குறளுக்குரிய சிறப்பாகும். திருக்குறளுக்கு இதுவரையில் எத்தனையோ ஆராய்ச்சி நூல்கள் வெளி வந்துள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் திருக்குறள் ஆராய்ச்சி வெளியீட்டு வரிசையில் **நான்காவதாக** வெளிவருவது **திருக்குறள் அமைப்பும் முறையும்** என்னும் இந் நூல். இதனைப் புலவர் திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்கள் அரிதின் உழைத்துச் செவ்விய முறையில் அமைத்துத் தந்துள்ளார். திருக்குறளின் அமைப்பையும் அதன்கண் ஆசிரியர் பொருள்களை எடுத்து நுவலும் பெற்றியையும் விளக்க முற்படுகிறது இந் நூல். இது திருக்குறளை நுணுகி ஆராய்வார்க்கு ஓர் அறிமுகம் போன்று வழிநடத்திச் செல்லும் துணை நூல் என்னத்தகும்.

வள்ளுவர் வழங்கிய பொதுமறையாகிய முப்பாலின் அமைப்பு முறைகளை—அஃதாவது பால், இயல், அதிகாரம், பாடல் அடைவுகளை—அகப்புறச் சான்றுகள் கொண்டு விளக்கிச் சொல்லுகிறது இந் நூல். அதிகாரப் பொருளடைவு, சொற்பொருள் ஒப்புமை என்னும் பகுதிகள் நூற்பொருளை வகுத்தும் தொகுத்தும் அறிய உதவுகின்றன. இயைபுடைய பொருள்களை வள்ளுவர் இணைத்து மொழிந்து, கற்பாரின் அறிவு விளக்கினைத் தூண்டும் வகைமை நன்கு விவரிக்கப்பட்டுள்ளது. பொருள்களைத் தக்க எடுத்துக்காட்டுகள் தந்து கேட்பார் உளத்து நன்கு பதியுமாறு திருவள்ளுவர் செய்கின்ற திறனும் பட்டியலிட்டு எளிதில் கண்டுகொள்ளுமாறு அகர வரிசையில் தந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

இத்தகைய விழுமிய ஆராய்ச்சி நூல்கள் திருக்குறளைப்பற்றி இயற்றப் பெறுவதற்குக் காரணமாக இருப்பது, தமிழக அரசு இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது, மனமுவந்து நிறுவிய ஆராய்ச்சி அறக்கட்டளையே யாகும். தமிழக அரசின் நல்லுதவி கிடைத்திராவிட்டால் இத்தகைய ஆராய்ச்சியும், இதன் விளைவான அரிய நூல்களும், ஊமையன் கண்ட கனவாகியிருக்கும். தமிழக அரசு காலத்தினாற் செய்த இப் பேருதவி, தமிழை வளர்க்கும் ஈரம். இவ்வறக் கட்டளையை நிறுவிய தமிழக அரசுக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. தமிழ் தழைக்கத் துணை நிற்கும் நல்ல நூல்களைத் தொடர்ந்து வெளியிடுவதையன்றி தமிழக அரசுக்கு என்ன கைம்மாறு செய்ய வல்லோம் ?

வான்புகழ் வள்ளுவர் நூலையே வாழ்க்கை நூலாகப் போற்றும் யான் துணைவேந்தனாய் முதல்முறை தொண்டாற்ற நேர்ந்த காலத்திலேயே தமிழக அரசால் நிறுவப்பெற்ற திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவின் முதல் நான்கு நூல்களையும் வெளியிட நேர்ந்தமையை நினைந்து நெஞ்சம் நெகிழ்கிறேன்.

தமிழ்ப் பொதுமறை மக்கள் நெறியாகுக ! அன்பும் அருளும் அறனும் பொதுவாகுக ! அவற்றிற்கு இத்தகைய நூல்கள் துணை ஆகுக.

நெ. து. சுந்தரவடிவேலு

27—5—72

(வைகாசி முழுமதி நாள்–திருவள்ளுவர் திருநாள்)

# நூன்முகம்

ஒரு நூலின் உட்பொருளை முற்றமுடிய உணர்வதற்கு அந் நூலின் ஆசிரியன் அதனை எந்நோக்கில் அமைத்துள்ளான் என்பதனை முதற்கண் அறிதல் வேண்டும். உலகியல் உரைக்க வந்த வள்ளுவர் தம் நூலை மூன்று கூறுகப் பகுத்து, அறம், பொருள், இன்பங்களை உணர்த்தி, 'முப்பால்' எனப் பெயரும் இட்டார். பாலின் உட்பிரிவாக இயல், அதிகாரப் பகுப்பும் அதிகாரத்திற்குப் பத்துக் குறட்பாக்களும் வகுத்துள்ள முறை திட்டமிட்டுச் செய்தது என்பதற்கு ஐயமின்று. இங்ஙனமாக வள்ளுவர் அமைத்துத் தந்த பொதுமறை நூலின் அமைப்புகளையும் நூற்பொருள்களை வள்ளுவப் பெருந்தகை எடுத்துரைக்கும் திறனையும் ஆய்வதனையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இந் நூல் ஆக்கப்பெற்றுள்ளது.

இந் நூல் இரண்டு பெரும் பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பகுதி நூலின் அமைப்பினை ஆராய்கிறது. இரண்டாம் பகுதி நூல் நுவலும் முறையினை விளக்கமுற்படுகிறது. நூலின் அமைப்பில் பால், இயல், அதிகாரம், பாடல் என்னும் அடைவில் ஆசிரியர் திருவள்ளுவர் தம் உளப்பாங்கினை அறிய முற்பட்டுள்ளேன். இப்பகுதியுள் அதிகாரப் பெயர் விளக்கமும் வைப்பு முறையும் என்னும் பகுதி மிகமிக விரிவாக எழுதப்பட்டுள்ளது. முந்திய உரைகாரர் கொண்ட கொள்கைகளின் அடிப்படையில் அவ்வவ் அதிகாரங்களில் வரும் பொருள் தொடர்புகளை வள்ளுவர் வாக்கினையே அடிநிலையாக வைத்து ஒன்றனோடு ஒன்றற்குள்ள இயைபினைக் காண முற்பட்டுள்ளேன். எனவே, இப் பகுதி ஓர் அறிமுகம் என்னும் நிலையில் நின்று கற்பாரை நூலினுள் ஆற்றுப்படுத்திச் செல்லும்.

நிற்க, இரண்டாம் பகுதியில் திருவள்ளுவர் நூற்பொருள்களைக் கேட்டார் உளம் கொள்ளச் செய்வதற்கு எவ்வெம் முறைகளைப் பின் பற்றுகிறார் என்பதனை அறிய முயலுகிறது. இவ்வாசிரியர் கொண்டுள்ள முறைகள் ஆன்றோர் வழக்கில் வழிவழியாகவரும் மரபு வழிப்பட்டனவே. தாம் ஒவ்வோர் அதிகாரத்தும் விளக்கப் புகுந்த பொருள்களுக்குத் தக்க வண்ணம், அவ்வற நெறியை எந்தெந்த வகையில் யார் யாரை முன்னிட்டுச் சொல்ல எண்ணுகிறாரோ அதற்கு ஏற்ற முறைகளை மேற்கொள்கிறார். நூல் முற்றும் பரவலாகக் காணும் பெருவழக்கான நெறிகள் ஒன்பது அத்தியாயங்களில் வகைப்படுத்தி விவரிக்கப் பட்டுள்ளன.

வள்ளுவர் ஒவ்வோர் அதிகாரத்தும் மிகுதிபற்றி ஒரு பொருளை நன்கு வற்புறுத்தினும் அப்பொருளோடு இயைபுபட்ட பொருள்களையும்

உடன் இணைத்து விளக்குகிறார். இதனை எடுத்துக்காட்டி அமைகிறது ஒன்பதாம் அத்தியாயம்.

பொருள்களை விளக்குமிடத்து அவ்வவற்றிற்குச் சான்றாக எடுத்துக் காட்டுகளை உவமை, உருவகம் வாயிலாகவும் பிறவாறும் எடுத்து மொழிதல் புலவர் மரபு. வள்ளுவர்தம் பெருநூலுள் சான்று காட்டி விளக்கப் பெற்ற பொருள்களை அகர வரிசைப்படுத்தி அவை ஒவ்வொன்றற்கும் அவர் தரும் எடுத்துக் காட்டினையும் ஒருசேர அகராதி அடைவில் அமைத்துத் தருகிறது பத்தாவது அத்தியாயம்.

பொதுவாகப் பார்க்கும்போது வள்ளுவர்தம் நூல் முழுமையும் ஒப்பு வகையான் பல்வேறு பொருள்கள் வெவ்வேறிடங்களில் விரவிவரக் காணலாம். எனவே, ஆசிரியர் திருவள்ளுவரின் சொற்பொருள்களிலும் ஒப்புமை காணக்கிடக்கிறது. இங்ஙனம் நூல் முற்றும் ஆசிரியர் வாக்கில் காணும் சொற்பொருள் ஒப்புமைகளை எடுத்துக்காட்டும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது இறுதி அத்தியாயம். பொருள்களை அகராதி அடைவிற்கொண்டு அப்பொருள்களோடு ஒப்புமையுடைய குறள்கள் ஒருங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சொற்பொருள் ஒப்புமை காரணமாக ஒரு பாடல் வெவ்வேறு பொருட் கூறுகளிலும் இடம் பெறும். அவ்வப் பொருள் நோக்கில் பார்க்கும்போது அந்தந்தப் பாடல் பொருத்தமாகவே காணப்படும். சொற்பொருள் ஒப்புமைப் பகுதி வள்ளுவர்தம் பெருநூலை முற்றும் சிந்திக்க வைப்பதோடு ஆசிரியரின் பொருளுணர்த்தும் திறனையும் காட்டுவது கண்டு மகிழ வாய்ப்பாகும்.

பொருள் விளக்கத்திற்கு இன்றியமையாததான குறிப்புகள் அந்தந்தப் பக்கங்களிலேயே அடிக்குறிப்பாக அமைக்காமல் அந்தந்த அத்தியாயங்களின் முடிவில் ஒருசேரத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் பொருட் குறிப்பு அகராதியும் இணைக்கப்பட்டிருக் கிறது. இதன்வழிக் குறித்ததொரு பொருளை நூலினுள் எளிதில் கண்டு கொள்ளலாம்.

இந்த ஆராய்ச்சிநூல் சென்ற ஆண்டிலேயே என்னால் எழுதி முற்றுவிக்கப் பெற்றதாகும். இப்பொழுது மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகத் திகழ்ந்துவரும் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் அவர்கள் சென்ற ஆண்டு இங்கே தமிழ்ப் பேராசிரியர் பதவியை விடுத்துச் சென்ற நாளில் அச்சிடுதற்குப் பரிந்துரை செய்தனுப்பியது இந் நூல். இதனை ஆக்குதற்கான வழிமுறைகளை வகுத்துத் தந்ததோடு, அவ்வப்போது உசாவி இதன் வளர்ச்சியைக் கண் காணித்தும் வந்துள்ளார்கள். அவர்களுக்கு முதற்கண் என் நன்றியும் வணக்கமும் உரியனவாகுக.

இந் நூல் இந்த ஆண்டு அச்சேறி வருங்கால், இப்பொழுது தமிழ்த் துறைத்தலைவராகப் பொறுப்பேற்றுள்ள டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள்

இதன் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாயிருந்து மேற்பார்வை செய்ததுடன் அவ்வப்போது ஊக்கந் தந்து இந் நூல் விரைவில் வெளிவர ஆவன செய்தார்கள். திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி விரிவுரையாளர் திரு. க. த. திருநாவுக்கரசு அவர்களும், ஆராய்ச்சித் துணைவர் திரு. இ. சுந்தரமூர்த்தி அவர்களும் அச்சுத்தாள்களைத் திருத்துவதில் அவ்வப்போது உதவிவந்துள்ளார்கள். இவர்கள் எல்லோருக்கும் என் உளமார்ந்த நன்றியும் வணக்கமும் உரியன.

இப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் வாய்ப்பினை எனக்கு அளித்து, நான் எழுதிய இந் நூலையும் வெளியிடுவதற்கு ஆவன செய்த சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழுவினருக்குப் பெரிதும் நன்றிக் கடப்பாடுடையேன்.

இந் நூலிற்குச் சிறந்ததொரு அணிந்துரை நல்கிய தாமரைத் திருவினர் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தர வடிவேலு அவர்களுக்கும் என் நன்றி நிறைந்த வணக்கங்கள் உரியன.

இந் நூலைச் செவ்விய முறையில் அச்சிட ஒத்துழைத்த இரத்தினம் அச்சகத்தாருக்கும் என் நன்றி உரியது.

சென்னை-5<br>
27—5—72

**மு. சண்முகம்**

# உள்ளுறை

## முதற் பகுதி

### நூலமைப்பு


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | முப்பால் | 3 |
| 2. | இயல் பாகுபாடு | 12 |
| 3. | அதிகாரப் பகுப்பு முறை | 20 |
| | 1. அதிகாரப் பகுப்புச் செய்தவர் ஆசிரியரே | 20 |
| | 2. அதிகாரப் பெயர்கள் | 21 |
| | 3. அதிகாரப் பெயர் அடைவு | 22 |
| | 4. அதிகாரப் பெயர் வகை | 24 |
| 4. | அதிகாரப் பெயர்விளக்கமும் வைப்புமுறையும் | 29 |
| 5. | அதிகாரப் பொருளடைவு | 172 |
| 6. | வள்ளுவர் வழங்கிய பா | 199 |
| 7. | பாடல் தொகை வகை | 204 |
| 8. | அதிகாரப் பாடல் அடைவு | 209 |


## இரண்டாம் பகுதி

### நுவலும் முறை


| | | |
|---|---|---|
| 1. | முன்னோர் மொழி போற்றுதல் | 215 |
| 2. | உலகின்மேலிட்டு உரைத்தல் | 221 |
| 3. | முரண்பாட்டால் விளக்கல் | 227 |
| | i. உடன்பாடு — எதிர்மறை | 227 |
| | ii. கொள்ளத்தக்கன — தள்ளத்தக்கன | 231 |
| | iii. செய்வதும் — செய்யாமையும் | 240 |

| எண் | | புக்கம் |
|---|---|---|
| 4. | விதிக்கும் முறை | 245 |
| | (அ) உளப்பாட்டுத் தன்மை | 245 |
| | (ஆ) வியங்கோள் | 246 |
| | (இ) இது செயல்வேண்டும் | 251 |
| | (ஈ) ஏகாரத்தால் ஏற்படும் பொருள் நலம் | 253 |
| 5. | வினவிப் பொருள் உணர்த்தல் | 260 |
| | (அ) வினவும் முறை | 260 |
| | (ஆ) எகர வினவும் அகரச் சுட்டும் | 266 |
| | (இ) வினவும் விடையும் | 268 |
| 6. | எண்ணல் பொருள் வரையறை | 271 |
| | (அ) எண்ணும் முறை | 271 |
| | (ஆ) செவ்வெண் மரபு | 276 |
| | (இ) தொகைப்பெயர் விளக்கம் | 280 |
| | (ஈ) எண் அளவும் பொருட் சிறப்பும் | 281 |
| | (உ) பொருள் அளவால் காட்டும் விளக்கம் | 283 |
| 7. | விளைவு கூறி அறிவுறுத்தல் | 286 |
| | (அ) பயன் கருதிய நெறி | 286 |
| | (ஆ) ஏது காட்டிய அறிவுரை | 288 |
| 8. | ஒரு நீதிக்கு மற்றொரு நீதி | 297 |
| 9. | இயைபுடைய பொருள்களை இணைத்து மொழிதல் | 301 |
| 10. | வள்ளுவர் உரைக்கும் பொருளும் எடுத்துக்காட்டும் | 350 |
| 11. | சொற்பொருள் ஒப்புமை | 379 |
| | பொருட் குறிப்பு அகராதி | 431 |

# I. முப்பால்

வள்ளுவப் பெருந்தகை தாம் விரித்து உரைக்கக் கருதிய பொருளைத் தெளிவாகவும் நுட்பமாகவும் ஆராய்ந்து, மூன்று பெரும் பகுதியாகத் தம்முடைய நூலை அமைத்துள்ளார். அவையாவன: அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பனவாம்.

'குறள்' என்னும் பாட்டு வகையினுல் நூலை ஆக்கியிருப்பதால், 'குறள்' என்பது கருவியாகு பெயராய் இவருடைய நூலுக்கும் பெயராக வழங்கப்பட்டு வருகிறது. 'திரு' என்பது இந் நூலின் சிறப்புக் கருதிக் கூறும் அடைமொழியாம். சங்க காலத்தில் 'திரு' என்னும் அடைபெற்ற மற்ருெரு நூல் 'திரு முருகாற்றுப்படை' ஆகும். 'குறள்', 'திருக்குறள்' என்பன திருவள்ளுவர் காலத்திற்குப் பிற்பட்டுத் தோன்றிய வழக்காய், இன்றும் பெருவழக்காய் உள்ளன.

ஆனுல், ஆசிரியர் திருவள்ளுவர் திருக்குறளுக்கு இட்ட பெயர் 'முப்பால்' என்பதாம். பாலாவது பகுப்பு அல்லது பகுதி என்னும் பொருள் தருவது. திருக்குறள் அறம், பொருள், காமம் என்னும் மூன்று பகுதிகளாக உள்ளமையின், 'முப்பால்' என்பது முதற் பெயராய் அமைந்ததாம். திருவள்ளுவரின் நூலுக்குப், 'பொய்யா மொழி,' 'பொதுமறை,' 'தெய்வநூல்' முதலியனவாகப் பல பெயரிட்டுப் பிற்காலத்தார் போற்றி வழங்கினுலும், 'முப்பால்' என்னும் பெயரையே பெரும்பாலார் குறிப்பிட்டுள்ளனர். திருக்குறளின் பல்வேறு சிறப்புக்களையும் கூறும் திருவள்ளுவமாலையில் 'முப்பால்' என்னும் பெயர் வழக்கே மிகுதியாயுள்ளது.[1]

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைத் தொகுத்து உணர்த்தும் 'நாலடி நான்மணி' என்று தொடங்கும் பழைய செய்யுளில்,[2] 'முப்பால்' என்பதுவே இந் நூலின் பெயராகத் தரப்பட்டிருக்கிறது.

தமிழ் நாவலர் சரிதையில்,

*அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்*
*திறமுரைத் தானும் புலவன்—குறுமுனி*
*தானும் புலவன் தரணி பொறுக்குமோ,*
*யானும் புலவன் எனின்?*

என்பது பொய்யாமொழிப் புலவரின் வாக்காகத் தரப்பட்டிருக்கிறது. அறமுரைத்தானும் புலவன் என்பது உலகிற்கு அருளறமாகிய திருவறத்தை அருளிய அருகதேவரைக் குறிக்கும். வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனை முற்கூறி அடுத்தபடியாக முப்பாலின் திறமுரைத்த வள்ளுவர் போற்றப்படுகிறார். இனி, 'அறமுரைத்தானும் புலவன்' என்பது ஆலமரத்தின் கீழிருந்து சனகாதி நால்வருக்கும் அறநிலை உரைத்த தக்கிணாமூர்த்தியாகிய பெருமானைக் குறிக்கும் என்பர் சிலர். இப் பெருமான் 'இறையனார்' என்னும் பெயருடன் தருமிக்காகச் சங்கப் புலவர் குழுவுக்கு வந்தார் என்று கருதுவாரும் உண்டு. இங்கே வள்ளுவர் தம் கோட்பாடுகளை உணர்த்தும் நூலை மூன்று பெரும் பகுதியாக அமைத்து, அதற்கு 'முப்பால்' என்னும் பெயரையும் வழங்கினார் என்பது குறிப்பிக்கப் படுதல் காணலாம்.

நன்னூல் உரைகாரராகிய சங்கர நமச்சிவாயப் புலவரைக் குறித்துக் கூறும் உரைப்பாயிரச் செய்யுளில்,

*முப்பால் பகுத்ததிரு வள்ளுவரே முதல்ஞான*
*நூல்கள் எல்லாம்*
*பகல்செய்வான்போல் இகத்தில் உரைசெயவல*
*சங்கர நமச்சிவாயன்*

என்று கூறப்பட்டிருக்கிறது. இங்கே திருவள்ளுவர் முப்பால் பகுத்து அளித்தார் என்பது தெளிவுறக் கூறப் பெற்றிருத்தல் காணலாம்.[4]

*நான்மறையின் மெய்ப்பொருளை*
*முப்பொருளா நான்முகத்தோன்*
*தான்மறைந்து வள்ளுவனாய்த்*
*தந்துரைத்த நூல்முறையை*

என்னும் திருவள்ளுவ மாலைப் பாடலால் (4) முப்பொருளாகத் தம் நூலை வள்ளுவர் முறைப்படுத்தினார் என்பதும் விளங்கும்.

இம் முப்பொருள்களும் எவை எவை என்பதை,

*அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்*
*திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்* (வள்ளுவமாலை, 50

என்றும்,

*இன்பம் பொருள்அறம் வீடுஎன்னும் இந்நான்கும்*
*முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்* (*வள்ளுவமாலை, 33*)

என்றும் வள்ளுவமாலைப் பாடல்கள் உணர்த்துகின்றன.

இந்த இரு பாடல்களிலும் 'வீடு தெளிந்தேம்' என்றும், 'வீடு என்னும் இந்நான்கும்' என்றும் வீடுபற்றிக் கூறிய போதிலும், 'வீடு' என ஒரு பகுப்புத் தனியாகத் திருக்குறளில் இல்லை. திருக்குறளின் பெரும் பகுப்பாக உள்ளவை அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றே.

*தப்பா முதற்பாவால் தாம்மாண்ட பாடலினால்*
*முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்* (*வள்ளுவமாலை, 19*)

என்பது கீரந்தையாரின் புகழ்மாலை. வள்ளுவர் தாம் உரைத்த முப்பாலில்தானே வீட்டுப்பாலையும் அடக்கிக் கூறியுள்ளார் என்பது இவர் கருத்து.

உரைகாரர் பரிமேலழகரும் இக் கருத்தினரே யாவர். இவர் தமது உரை நூலின் தொடக்கமாக எழுதியுள்ள 'உரைப்பாயிர'த்தில் பின்வரும் கருத்துகள் காணப்படுகின்றன :

> *"வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின் துறவறமாகிய காரணவகையான் கூறப்படுவதல்லது இலக்கண வகையான் கூறப்படாமையின், நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்"*

என்பது பரிமேலழகரின் உரைப்பாயிரம்[5]. இது குறித்தே முன்னர்க் காட்டிய திருவள்ளுவ மாலைப் பாடலிலும், அறம் பொருள் இன்பம் ஆகியவற்றை 'அறிந்தேம்' என்று கூறியவர், வீட்டையும் அறிந்தேம் என்று கூறாமல் 'தெளிந்தேம்' என்னும் வேறு வாசகத்தால் கூறினராதல் வேண்டும். வீடு பற்றிய செய்திகளைத் துறவறப் பகுதியில் ஆசிரியர் விளக்கியுள்ளார் என்கிறார் பரிமேலழகர்.

தொல்காப்பியப் பாயிர உரையில் நச்சினார்க்கினியரும் இவருடைய கருத்தை ஒத்தே வள்ளுவரின் கோட்பாட்டை விளக்கியுள்ளார். தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தின் உரைப்பகுதியில், "தொல்காப்பியர் வீடு கூறாரோ? எனின்" என்று ஒரு வினாவை எழுப்பிக்கொண்டு அதற்கு விடை கூறுமிடத்து, வள்ளுவரைச் சான்றுகாட்டி அவர் விளக்கம் தருகிறார். அவர்தம் கருத்துரை பின்வருமாறு :

"அகத்தியனாரும் தொல்காப்பியரும் வீடு பேற்றிற்கு நிமித்தம் கூறுதலன்றி வீட்டின் தன்மை இலக்கணத்தால் கூறூர் என்று உணர்க. அஃது,

'அந்நில மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப'
(தொல். பொருள். 418)

என்பதனுலும் உணர்க. இக் கருத்தானே வள்ளுவநாயனாரும் முப்பாலாகக் கூறி, மெய்யுணர்தலான் வீடு பேற்றிற்கு நிமித்தம் கூறினர்."

திருக்குறள் உரையாசிரியர்களுள் ஒருவராகிய பரிப்பெருமாள்,

"வீடாவது அறம் செய்தாரது பயனாதலின் அவ்வீடு பேற்றை அறத்தினுள் அடக்கி, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ரூர்"

என்று தம் உரைநூலின் தொடக்கத்தே தோற்றுவாய்ப் பகுதியில் கூறியுள்ளார்.

வீடு பற்றிய கருத்துரைகள் நூலுள் ஒருசிலவிடத்துப் பொதிந் திருந்தபோதிலும் திருக்குறளில் 'வீடு' என்னும் சொல் 'முத்தி' என்னும் பொருளில் பயன்படுத்தப்படவே இல்லை என்பதும் உளம் கொளத் தக்கது. விடுதல் என்னும் பொருளில்,

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு (குறள் 791)

என்னும் குறளிலே 'வீடில்லை' என்பது எடுத்தாளப்பட்டுள்ளது.

பரிமேலழகர் கூறியபடி வீடு என்பது அறம், பொருள், இன்பங் களைப் போன்று எடுத்துக்காட்டி விளக்கும் இயல்பில்லாதது. ஆதலால், பெரும்பாலும் நூல்களால் தெளிவுறக் கூறப்பெறும் பொருள்கள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றுமே என்பது தெளிவு.

இன்பமும் பொருளும் அறனும் என்ருங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
(தொல். பொருள். களவு. 1)

என்பது தொல்காப்பியர் வாக்கு. இங்ஙனமே புறநானூற்றிலும்,

அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம் (புறநா. 28 : 15-16)

என்றும்,

*சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்*
*அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல* (புறநா. 31 : 1-2)

என்றும் முப்பொருள்களும் வற்புறுத்தப்பட்டுள்ளன. நாலடியாரில் பொருளை முதன்மையாக வைத்து முப்பொருள் விளக்கப்படுகிறது:

*வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்*
*நடுவண தெய்த இருதலையும் எய்தும்* (நாலடி. 114)

எனவரும் நாலடிப் பாடல் பொருட்பேற்றால் ஒருவன் அறமும் இன்பமும் அடைவன் என்று அறிவுறுத்துகின்றது. இங்கே, குற்ற மற்ற இந்த உலகத்தில் நிலைபெற்ற பொருள் மூன்று; அவையாவன அறம், பொருள், இன்பம் என்பனவே என்பது 'வையத்து மன்னிய மூன்று' என்பதனால் உணர்த்தப்படுகிறது.

இந்த நாலடிப் பாட்டின் கருத்துரை,

*அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து*
*தீதின்றி வந்த பொருள்* (குறள் 754)

என்னும் குறளின் செம்பொருளினைத் தழுவியதாகும்.

*அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்*
*பெண்ஏவல் செய்வார்கண் இல்* (குறள் 909)

என்னும் குறளும் முப்பொருட் பேற்றினையே நினைவூட்டுகிறது.

*அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே* (நன். 10)

என்றும், பெருங்காப்பியம்,

*நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகி* (தண்டி. 8)

அமைவது என்றும் இலக்கண நூலார் நூல்-மரபு உரைத்தபோதிலும், முப்பொருள் உண்மையே எல்லா ஆசிரியராலும் தெளிவுற வகுத்துரைக்க இயலுவதாகும். வட நூலாரும் இவற்றைத் 'திரிவர்க்கம்' எனக் கொள்ளுவர்.[6]

தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் தம் கோட்பாடுகளை ஆன்றோர் மரபின்வழி அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால், என மூன்று பகுதியாக வகுத்துரைத்தனர்: நூற்பொருள் தெளிவுற விளங்கும் வகையில் 'முப்பால்' என்றும் அதற்குப் பெயர் சூட்டினர்.

"அறமானது அறமுதலான பொருள் நான்கினையும் பயத்தலின் முற்படக்கூறினர். பொருளானது வீடொழிந்த மூன்றினையும் பயத்தலின் அதன்பின் கூறினர்"

என்று முப்பாலுக்கும் முறைவைப்புக்குரிய காரணம் உரைக்கின்றார் பரிப்பெருமாள்.

பொருட்பால் என்பது பொருளின் பகுதி. இதில் அறனும் இன்பமும் ஒழிந்த ஏனைய பொருள்கள் எல்லாம் அடங்கும் என்பர். பொருளை ஆக்குதற்கு நேரே பயன்படுவனவும், அதற்குத் துணையான வழி வகைகளை வகுத்துரைப்பனவும் ஆக இருபெருங் கூறுகப் பொருட்பால் பகுதிகள் அமைந்துள்ளன. 'பொருள் செயல் வகை', 'உழவு' என்பன பொருள் ஆக்கத்திற்குத் துணைசெய்வன. ஏனைய கல்வி, கேள்வி முதலியன எல்லாம் அவற்றின் சார்பினால், பொருளாக்கம் உளதாதலைத் தெரிவிப்பன ஆகும்.

வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவண தெய்த இருதலையும் எய்தும் (நாலடி. 114)

என்றபடி பொருள் அறத்திற்கும் இன்பத்திற்கும் முதற் காரணமாய் இரண்டற்கும் உபகாரப்படுதல் நோக்கி, அவ்விரண்டற்கும் தொடர்பாக இப் பொருட்பால் நடு நாயகமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

அறத்தின் வழி ஒழுகிப் பொருள் தேடி இன்பம் துய்த்தலே வாழ்க்கை முறையாதலின், அறம் பொருள் இன்பம் என இன்பப் பொருளை உணர்த்தும் காமத்துப்பால் மூன்றுவதாக வைக்கப்பட்டிருக்கிறது, "ஈண்டு இன்பம் என்றது ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காமவின்பத்தினை" என்கிறார் பரிமேலழகர்.

கண்டுகேட்டு உண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள (குறள் 1101)

என வள்ளுவர் ஐம்புல இன்பங்களும் காதலன் காதலியரின் அன்பொத்த சேர்க்கையால் உளதாம் என்று கூறுதலும் இவர்தம் விளக்கத்திற்கு ஏதுவாக அமைகிறது.

இம் மூன்றும் பகுதியை 'இன்பப்பால்' என்னது 'காமத்துப்பால்' என்று ஆசிரியர் பெயரிட்டது ஏன் என ஆய்வாளர் சிலர் வினவி, 'காமத்துப்பால்' என்பதுவே ஆசிரியர் கருத்தாகும் என்று

துணிகின்றனர். இன்பத்திற்கு முதற் காரணமாக அமைவது இச்சையாகிய காமமே யாதலின் காமத்துப்பால் என்று கொள்வதே பொருத்தமாகும்.

> ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
> கூடியார் பெற்ற பயன் (குறள் 1109)

என்பதால் இன்பம் விளைக்கும் காமமே இங்கு முதன்மை பெறுதல் விளங்கும். எனவே, 'காமத்துப்பால்' என்பதுவே ஆசிரியர் வள்ளுவனாரின் உள்ளக்கிடக்கையாகும்.[7]

பரிப்பெருமாள் காமத்துப்பாலின் உரைத்தொடக்கத்தே கூறும் விளக்கம் பின்வருமாறு :

> "காமத்துப் பாலாவது மைந்தர்க்கும் மகளிர்க்கும் கலவி யானாய இன்பப்பகுதி கூறுதல். அஃது யாங்கனம் கூறினார் எனின், ஒருவனுக்கு இன்பம் நுகர்தற்கு இடம் கன்னியரும் கணிகையரும் பிறர்தாரமும் என மூவகை யல்லது இல்லை; அவற்றுள் பிறர்மனைக் கூட்டம் பாவம் தரும் என்று அறத்துப்பாலுள் கூறிக் கணிகையர் கூட்டம் பொருட்கேடு தரும் என்று பொருட்பாலுள் கூறினாராதலின், அறனும் பொருளும் இன்பமும் வழுவாமல் வருவது கன்னியர் கூட்டம் [illegible]று அது ஈண்டுக் கூறப்பட்டது என்க."

இதனாலும் காமத்துப்பால் ஏனைய இரண்டற்கும் பின்னர் வைத்துக் கூறுதலே வள்ளுவப் பெருந்தகையாரின் திருவுள்ளம் என்பது விளக்கமாகும்.

## குறிப்புகள்

1. 'குறள்வெண்பாவிற் சிறந்திடு முப்பால்' (39), 'முப்பால்' (44, 49), 'முப்பால் மொழிந்த முதற்பாவலர்' (18), 'முப்பாலின் நாற்பால் மொழிந்தவர் (19), வண்டமிழின் முப்பால்' (53), 'வள்ளுவர் முப்பால்' (10, 11, 31), 'வள்ளுவர் முப்பால் நூல்' (46), 'வள்ளுவர் தாம் செப்பவரும் முப்பால்' (30), 'வள்ளுவனார் முப்பால்' (12, 15, 17), 'வள்ளுவனார் முப்பால் மொழிந்த மொழி' (9)—ஆகப் பதினைந்து பாடல்களில் 'முப்பால்' என்னும் பெயர் நூலைக் குறிப்பதாகத் 'திருவள்ளுவ மாலை'யில் வழங்கப் பெற்றிருக்கிறது.

2. 'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு.'

3. 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்'

என்று திருநாவுக்கரசர் தேவாரப் பதிகத்தில் இந் நிகழ்ச்சியைப்போற்றி உரைத்துள்ளார்.

4. முப்பால் என்பதுவே திருக்குறளுக்கு வள்ளுவர் இட்ட பெயர் என்பது குறித்து, 'தமிழ்ச் சுடர் மணிகள்' என்னும் கட்டுரைத் தொகுதியில் (நான்காம் பதிப்பு, பக். 102) பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் தெளிவுற ஆராய்ந்து வரையறுத்துள்ளார்கள். இவர்களுடைய கருத்தை வேறு சிலரும் ஆதரித்து எழுதியுள்ளார்கள்.

5. பரிமேலழகர் உரைப்பிரதி இரண்டில் வேறாக எழுதப்பட்டிருந்த உரைப்பாயிரப் பகுதியும் இதனை ஒத்தே உள்ளது.

"புருடார்த்தமாகிய தன்மார்த்த காம மோக்கங்களுள் முதல் மூன்றனையும் வழுவா தொழுகவே மோக்க மெய்துதலான் அதற்கு வேறு வகுத்துக் கூறவேண்டுவது இன்மையின் அஃதொழித்து ஒழிந்த தன்மார்த்த காமப் பகுதிகளை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று பெயர் கூறுவார்.......

(செந்தமிழ், தொகுதி 1, பக், 246)

6. அறம், பொருள், இன்பங்களான மூன்று பற்றித் 'திரிவர்க்கம்' என்னும் ஒரு நூலைப் பிரம்மதேவர் இயற்றினர் என்னும் செய்தி மகா பாரதம் சாந்திபர்வம் 58ஆம் அத்தியாயத்துள் கூறப்பட்டுள்ளதாகப் பேராசிரியர் மு. இராகவையங்கார் தமது ஆராய்ச்சித் தொகுதியுள் குறித்துள்ளார்கள் (பக். 205. 206).

7. திருக்குறள் உரைவளம் காமத்துப்பால் பதிப்பின் தொடக்கத்தில் பதிப்பாசிரியர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதியுள்ள 'ஆராய்ச்சி' என்னும் பகுதியில், 'காமத்துப் பாலா? இன்பப் பாலா?' என்னும் தலைப்பில் இது குறித்து விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார்கள். அவர்தம் முடிந்த கருத்து வருமாறு :

(("சுருங்கக் கூறின் காமத்துப்பால் என்பதே வள்ளுவர் கருத்தாதல் வேண்டும் என்பதற்குரிய காரணங்களாவன :

1. காமம் என்ற சொல்லைப் பல இடங்களில் எடுத்தாண்டிருப்பது.

2. காமம் காரணமாகவும் அதன் பயன் இன்பமாகவும் கூறுதல்,

3. இன்பம் பல்வேறு வகையான் வரும் என்றல்.

4. இன்பம் என்னும் சொல் காம இன்பத்தை மட்டும் குறியாது ஏனைய இன்பங்களிலும் செல்லுதல்.

5. வள்ளுவ மாலையுள் காமத்துப்பால் பாகுபாட்டை மோசிகீரனுர் காமமென்றே யாளுதல்."

இதனைத் தொடர்ந்து 'இன்பப் பால்' என்பார் காட்டும் மேற்கோள்கள் பொருத்த மின்மையையும் ஏதுக்கள் காட்டி இவர்கள் மறுத்துரைத்துள்ளார்கள் (பக். 53-55). ))

# 2. இயல் பாகுபாடு

(‘பால்’ என்னும் பெரும் பகுப்பின் உட்பிரிவாக ‘இயல்’ என்னும் சிறு பகுப்பும் உரைகாரர் முதலியோரால் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த இயல் பகுப்பில் காணும் மாறுபாடுகளை நோக்கும்போது இவை ஆசிரியர் கொண்டவை அல்ல என்பது தெளிவாகத் தெரியவருகிறது.)) இயல் பகுப்புப்பற்றிய செய்திகளை முறையே நோக்குவோம்.

அறத்துப்பாலை ‘இல்லறம்’, ‘துறவறம்’ என இரண்டு இயல்களாகப் பரிமேலழகர் பகுத்துள்ளார். இவர் தம்முடைய உரைப்பாயிரத்தில்,

> “*எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொது இயல்பு பற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையால் கூறப்பட்டது*”

என்று எழுதுவதனால் இவருடைய கருத்துப் புலனாகிறது. இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற வழிமுறைகளின்படி அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடும் செய்யப்படுவதாம். துறவறமாவது இல்லறத்தில் வழுவாது ஒழுகி அறிவுடையவராய்ப் பிறப்பிற்கு அஞ்சி உலகப்பற்றினை விடுத்து, இறைப்பற்றில் ஊன்றி நிற்பதாகிய விரதம் முதலியவற்றை மேற்கொண்டு, மெய்யுணர்ந்து ஞானநிலை எய்திப், பற்றற்றான் பற்றினைப் பற்றுதலாகும். “துறவறமாகிய தவமேற்கொண்டு ஒழுகுதல்” என்றும், “அது வானப்பிரத்தம் சந்நியாசம் என இருவகைப்படும்” என்றும் பரிப்பெருமாள் விளக்கம் கூறுகிறார். மேலும், இவ்வுரைகாரர் தம் உரை நூலின் தொடக்கவுரையிலே,

> “*இனி, அறமாவது தானம், தவம், விரதம், பூசை என நால் வகைப்படும். தானமும் பூசையும் இல்வாழ்வார் அறஞ்செய்*

யப்படுதலானும், தவமும் விரதமும் துறந்தார் அறஞ்செய்யப் படுதலானும், அவை இல்லறம் துறவறம் என இரண்டு பகுதி யாக்கி அறத்துப்பால் கூறப்பட்டது"

என்றும் கருத்து விளக்கம் செய்கிருர்.

பரிமேலழகர் பகுத்துள்ளபடி இல்லற இயலில் இருபத்து நான்கும் துறவற இயலில் பதினுன்கும் ஆக முப்பத்தெட்டு அதி காரங்கள் அறத்துப்பாலில் உள. ஆயினும், இல்லற இயலின் முதல் நான்கு அதிகாரங்களையும் இவர் 'பாயிரம்' என்று கொண்டுள்ளார்.

ஒரு பழஞ்செய்யுள் 38 அதிகாரங்களையும் நான்கு பகுதி களாகக்கொண்டு கூறுகிறது. அது வருமாறு:

*பாயிரம் நான்கு இல்இருபான் பத்தோ டியைந்தமூன்று*
*ஒய்வில் துறவறம் ஒன்றூழாகத்—தூய*
*அறத்துப்பால் முப்பத்தெட் டாமென் றுரைத்தார்*
*திறத்துப்பால் வள்ளுவனுர் தேர்ந்து*

என்பதாகும். இதன்படி பாயிரம் 4 அதிகாரம்; இல்லறம் 20 அதி காரம்; துறவறம் 13 அதிகாரம்; ஊழ் ஓர் அதிகாரம்; ஆக 38 அதிகாரமும் இவ்வாறு நான்கு இயல்களாம். இப்பாடலே சில பாடபேதங்களுடன் திருவள்ளுவ மாலையில் (25) எறிச்சலூர் மலாடனுர் வாக்காக,

*பாயிரம் நான்கில் அறம்இருபான் பன்மூன்றே*
*தூய துறவறம் ஒன்றூழாக—ஆய*
*அறத்துப்பால் நால்வகையா ஆய்ந்துரைத்தார் நூலின்*
*திறத்துப்பால் வள்ளுவனுர் தேர்ந்து*

என வந்துள்ளது.

உரைகாரார் காளிங்கரும் இக் கருத்தினரே யாவர்.

பாலாகும் வேதப் பயனுகும் பாயிரம் நான்கு
ஏலாகேள் இல்லறமும் நாலைந்தாம்—மேலாம்
துறவு பதின்மூன்று தோமிலூழ் ஒன்றென்ப
அறிவுநெறி ஆய்ந்துடையர் தாம்

என்பது காளிங்கரின் அறத்துப்பால் உரைமுடிவில் காணும் பாடல். இதற்கு விளக்கவுரை தருவதுபோன்று உள்ளது பரிப்பெருமாளின் விளக்கம்:

"கடவுள் வாழ்த்தும் வான்சிறப்பும் நீத்தார் பெருமையும் அறன் வலியுறுத்தலும் ஓரோரதிகாரமாகவும், இல்வாழ்க்கை முதலாகப் புகழ் ஈருக இல்லறம் இருபது அதிகாரமாகவும், அருளுடைமை முதலாக அவாவறுத்தல் ஈருகத் துறவறம் பதின்மூன்று அதிகாரமாகவும், ஊழ் ஓர் அதிகாரமாகவும், ஆக முற்பட முப்பத்தெட்டு அதிகாரங்கள் கூறப்பட்டன."

இது பரிப்பெருமாள் உரையில் காணும் தோற்றுவாய்ப் பகுதி.[1]

காளிங்கரோ இவ்வறத்துப்பாலின் முடிவுரையாக இதன்கண் அடங்கிய பொருள்களைத் தொகுத்துத் தந்துள்ளார். காளிங்கரின் தொகுப்புரை வருமாறு :

"இனி, இவ்வாறு முடிந்த அறத்துப்பாலின் பொருட் குறிப்பு ஆவது: தாம் எடுத்துக்கொண்ட தொடர்பின் தொகுதி இனிது முடிதற்கு வணங்கி வாழ்த்திய கடவுள் வாழ்த்தும், கடல் உலகு உய்தற்குக் காரணமாகிய கால மழையும், நிகழ் புயல் பருவத்து எய்துவது ஆகிய நீத்தார் பெருமையும், அது பின்வருவதற்கு முன் உறுப்பு ஆகிய அறன் வலியுறுத்தலும், ஈங்கு இவை பயிற்றும் இயல்பின் ஒன்ருனது இல்லறத்து இயல்பு அஞ்சுவர்க்கமும், முத்தியும் தருதற்கு இயைந்த துறவறத்து இயல்பு விளங்கிய துறவின் வினைப்பயன் ஆகிய மெய்யுணர்வு என்னும் வீட்டின்பமும், அவ்வுணர்வு எய்தற்கு இடையூறு ஆகும். அவாவினையறுத்தலும், ஒருங்கு அவ்வாறு அறுத்தோர்க்கும் பிறர்க்கும் வந்து ஊட்டும் உறுதி கொள் ஊழும் வள்ளுவக் கடவுள் வகுத்து அமைத்து உரைத்த எள்ளறு சிறப்பின் அறத்துப்பால் முற்றும்."[2]

பரிமேலழகர் உரைப்பிரதிகள் இரண்டில் வேருக எழுதப்பட்டிருந்த உரைப்பாயிரப் பகுதி செந்தமிழ்ப் பத்திரிகையின் முதல் தொகுதியில் தரப்பட்டிருக்கிறது (பக். 246). இதில் அறத்துப்பாலின் இயல் முறைப் பகுப்புப்பற்றிய கருத்து பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் நால்வகை ஆச்சிரம நிலையை அடியாக வைத்துச் சொல்லப்பட்டிருக்கிறது :

"மங்கல வகையான் எப்பொருட்கும் முதலாகிய கடவுள் வாழ்த்தும், அக்கடவுளினது செய்கைத்தாகி இவ்வுலகு இன்றியமையாததாகிய வான்சிறப்பும், பிறப்பினில் சிறப்பெய்துதற்குரியராகிய முனிவரது பெருமையும், அவரால் கொண்டுய்க்கப்படுவதாகிய அறத்தினது வலியும் நான்கதிகாரத்தால் பாரித்து; பிரமசரியம், காருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாதம் என்னும் நால்வகைப்பட்ட அறத்தினுள் பிரமசரியம்

*சீடராய் நின்றேதுவதல்லது செய்வது பிறிதின்மையின் அதனைப் புதல்வரைப் பெறுதல் என்புழி அடக்கிக் காருகத்தம் இருபது அதிகாரத்தானும், வானப் பிரத்தம் பத்ததிகாரத் தானும், சந்நியாசம் மூன்று அதிகாரத்தானும், எல்லார்க்கும் பொதுவாகிய ஊழ் ஓரதிகாரத்தானும் ஆக முப்பத்து நான்கு அதிகாரத்தான் அறத்துப்பால் கூறி,......*

*(செந்தமிழ், தொகுதி 1, பக். 246)*

என்று இவ்வாறு விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

திருக்குறளின் பாயிரமாக விளங்கும் நான்கு அதிகாரங்களை யும் அறத்துப்பாலின் அங்கமாகக் கொள்வர் ஒரு சாரார்; வேறு சிலர் அவற்றை நூலுக்குப் புறம்பாகக் கொள்வர். பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ் என நான்கு பகுதி கொள்கின்றபோது, பாயிரம் அறத்துப்பாலின் ஒரு கூருய்விடும். திருவள்ளுவமாலையில் தொடித்தலை விழுத்தண்டினுர் ' அறம் நான்கு ' என்றது (22) மேலே சுட்டிய நான்கு பிரிவுகளைக் கருதிக் கூறினமையேயாகும். எறிச்ச லூர் மலாடனுர் பாடிய திருவள்ளுவமாலைப் பாட்டிலும் 'பாயிரம் நான்கு' என (25) அறத்துப்பாலின் பாயிரப் பகுதியையும் நூலினுள் கூட்டி உரைக்கின்ருர்.

ஆனுல், சிறுமேதாவியார் பாடிய திருவள்ளுவமாலைப் பாடலில் (20) பாயிரத்தை நூற்குப் புறம்பாகக் கொண்டு கூறியுள்ளார்.

*வீடொன்று பாயிரம் நான்கு விளங்கறம்*
*நாடிய முப்பத்துமூன் ருென்றூழ்—*

என்பது சிறுமேதாவியார் வாக்கு. இப்பாட்டின் உரையில் திருத்தணிகை சரவணப்பெருமாளையர்,

*"அறத்துப்பாலுள் அடங்காது அதனைவிட்டு நூற்கெல்லாம் பொதுவாய் நிற்றலின் வீடொன்று பாயிரம் என்று கூறினுர்"*

என்று கூறும் விளக்கமும் இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

திருவள்ளுவ மாலையின் 20ஆம் செய்யுள்,

*"வீடொன்று பாயிரம் மூன்று விளங்கறம்*
*நாடிய முப்பத்து நான்கு பொருள்—கூடிய*
*எள்ளில் எழுபது இருபத்தைந் தின்பமிவை*
*வள்ளுவர் சொன்ன வகை.*

என்னும் வடிவில் ஓர் ஏட்டுப்பிரதியில் காணப்படுகின்றது என்பர்.[3] இதில் பாயிரம் நான்கில் முதலாவதாகிய 'கடவுள் வாழ்த்து' வீடு

எனத் தனிப் பகுதியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஊழ் என்பது தனிப்பட்ட ஓர் இயலாக இப் பாடலில் குறிக்கப்படவில்லை. இங்ஙனமாக, அறத்துப்பாலைப் பகுத்துரைப்பதில் கருத்து வேற்றுமை பல உள என்பது தெளிவாகத் தெரியவருகிறது.

இனி, பொருட்பாலின் இயல் பகுப்பினைப் பார்ப்போம். இப் பாலின் இயல் பகுப்பிலும் ஓர் ஒருமைப்பாடு இல்லை. மணக்குடவர் அரசியல், அமைச்சியல், பொருளியல், நட்பியல், துன்பவியல், குடியியல் என அறுவகையாகப் பகுத்துரைக்கின்றார். இப் பகுப்பை ஆதரிக்கும் பழஞ் செய்யுள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

செந்தமிழ்ப் பத்திரிகையின் முதல் தொகுதியில் 245 ஆம் பக்கத்திலே பொருட்பால் பகுதி எழுபது அதிகாரங்களும் ஆறு பகுப்பாக ஒரு சாரார் கூறுவர் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அது வருமாறு:

> *"'இறைமாட்சி' முதலாக 'இடுக்கணழியாமை' ஈறுகக் கூறிய அதிகாரங்கள் இருபத்தைந்தும் பெரும்பான்மையும் அரசர்க்கு உரித்தாகலின் **அரசியல்** என்றும், 'அமைச்சு' முதலாக 'அவையஞ்சாமை' ஈருகக் கூறிய அதிகாரங்கள் பத்தும் பெரும்பான்மையும் அமைச்சருக்கு உரியவாகலின் **அமைச்சியல்** என்றும், 'நாடு' முதலாகப் 'படைச்செருக்கு' ஈறுகக் கூறிய அதிகாரங்கள் ஐந்தும் பொருளாதலின் '**பொருளியல்**' என்றும், 'நட்பு' முதலாகக் 'கூடா நட்பு' ஈறுகக் கூறிய அதிகாரங்கள் ஐந்தும் நட்பின் பகுதிய வாதலின் **நட்பியல்** என்றும், 'பேதைமை' முதலாக 'மருந்து' ஈறுகக் கூறிய அதிகாரங்கள் பன்னிரண்டும் கேட்டுக்குக் காரணமாதலின் **துன்பவியல்** என்றும் 'குடிமை' முதலாகக் 'கயமை' ஈறுகக் கூறிய அதிகாரங்கள் பதின்மூன்றும் மக்களது இயல்பு கூறுதலின் **குடியியல்** என்றும், ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரங்கள் எழுபதும் ஆறு பகுதியாயிற்று."*

இங்குக் கூறப்பெற்ற இவ் விளக்கம் மணக்குடவரின் இயல் பாகுபாட்டை ஆதரித்து அமைந்துள்ளது.

காளிங்கர் ஏழு இயல்களாகப் பகுத்துரைத்துள்ளார். இவருடைய கருத்து,

> *அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து*
> *உருவல் அரண்இரண்டு ஒன்ருெண்கூழ்—உரைசால்*

*படையிரண்டு நட்புப் பதினேழ்பன் மூன்று*
*குடியெழுபான் தொக்கபொருட் கூறு*

என வரும் பழஞ்செய்யுளை அடியொற்றியுள்ளது.

*படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு* (குறள் 381)

என இப்பொருட்பாலின் தொடக்கத்தில் வரும் குறளும் இவருடைய கொள்கைக்குச் சான்றாக அமைந்துள்ளது எனலாம்.

மேலே காட்டிய பழம்பாடலே சில பாடபேதங்களுடன் திருவள்ளுவமாலையில் 26ஆம் செய்யுளாகப் பின்வருமாறு காணப் படுகிறது :

*அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து*
*உருவல் அரண்இரண்டு ஒன்றொண்கூழ்—இருவியல்*
*திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்று*
*எண்பொருள் ஏழாம் இவை.*

இதன் இரண்டாம் அடியில்,

*உரைநாடு அரண்பொருள் ஒவ்வொன்று*

எனத் தந்து, எட்டுப் பகுப்பாகக் காட்டிய பழஞ்செய்யுளும் பெருந்தொகையில் (2005) காணப்படுகிறது. எட்டிற்கு மேலாக வும் பகுத்துக் கூறுதல் உண்டு என்பது பரிமேலழகர் உரையின் வேறு உரைப்பாயிரத்தால் தெரியவருகிறது.[4]

பரிமேலழகரோ அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்று இயல்களாகப் பகுத்துள்ளார்.[5] இக் கருத்தை ஆதரிக்கும் பழஞ் செய்யுள் எதுவும் காணப்பெறவில்லை. மணக்குடவர், காளிங்கர் பகுப்பினும் மாறுபட அமைகின்றது இவருடைய பொருட்பாலின் இயல் பகுப்பு.

காமத்துப்பால் அமைப்பிலும் இயல் பகுப்பில் மாறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. ஒருசாரார் இதனை ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று, இருபாற்கூற்று என மூன்று இயல் களாகக் கொள்வர்.

ஆண்பாலேழ் ஆறிரண்டு பெண்பால் அடுத்தன்பு
பூண்பால் இருபாலோ ராறாக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு

என்பது திருவள்ளுவமாலை (27). காளிங்கரும் தலைமகன் கூற்று, தலைமகள் கூற்று, இருபாற்கிளவி[6] எனத் தமது உரையில் பகுத்துக் காட்டியுள்ளாராதலால் மூன்று இயலாகப் பகுத்தல் இவருக்கு உடம்பாடே என்பது தெளிவு. தொல்காப்பியர் வகுத்துரைக்கும் கூற்று வகைகளை ஒத்து இவ்வாறு இவர் பகுத்தனர் என்று தோன்றுகிறது.

உரைகாரர் மணக்குடவர் தமது காமத்துப்பால் உரையின் அவதாரிகையில் அருமையிற் கூடலும் அதற்கு நிமித்தமும், பிரிந்து கூடலும் அதற்கு நிமித்தமும், ஊடிக் கூடலும் அதற்கு நிமித்தமும் என மூன்று பகுதிகளாகக் கொள்வர். அவர்தம் கருத்துரை வருமாறு :

> " இதனுள் 'தகையணங்குறுத்தல்' முதலாகப் 'புணர்ச்சி மகிழ்தல்' ஈறாக அருமையிற்கூடலும் அதற்கு நிமித்தமும் ஆகிய அதிகாரம் மூன்றும், 'நலம்புனைந்துரைத்தல்' முதலாக 'புணர்ச்சி விதும்பல்' ஈறாகப் பிரிந்து கூடலும் அதற்கு நிமித்தமுமாகிய அதிகாரம் பதினெட்டும், 'நெஞ்சொடு கிளத்தல்' முதலாக 'ஊடலுவகை' ஈறாக ஊடிக் கூடலும் அதற்கு நிமித்தமுமாகிய அதிகாரம் நான்கும் ஆக இருபத்தைந்து அதிகாரம் கூறப்பட்டது."

இதிலிருந்து மணக்குடவர் கொண்ட மூன்று பாகுபாடும், அவற்றுள் எந்தெந்த அதிகாரங்கள் அடங்கியுள்ளன என்னும் விவரமும் தெரியவரும்.

பரிமேலழகர் காமத்துப்பாலின் தொடக்கத்திலே,

> " புணர்ச்சியைக் களவு என்றும் பிரிவைக் கற்பு என்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து, அவற்றைச் சுவை மிகுதி பயப்ப உலக நடையோடு ஒப்பும் ஒவ்வாமையும் உடையவாக்கிக் கூறுவாரும் உளர்"

என்று தோற்றுவாய் செய்கின்றார். இதனால், களவு கற்பு என்னும் இரண்டே இயல்களில் பரிமேலழகர் காமத்துப்பாலை அடக்கியுள்ளார் என்பது விளங்கும்[7].

> புணர்தல் பிரிதல் பொருள்களவு கற்பென்று
> உணருமிரு கூறும் உரைக்கில்—புணரும்
> களவேழ் அறுமூன்று கற்பிவை ஐயைந்தா
> அளவறு காமத்துப் பாலாம்

என வரும் பெருந்தொகையில் காணப்படும் பழஞ்செய்யுள் (2006) பரிமேலழகரின் கருத்திற்கு ஆதாரமாக உள்ளது.

## குறிப்புகள்

1. திருக்குறள்–உரைவளம் : இரண்டாம் பதிப்பு–1957, பக். 2.

2. இந்தத் தொகுப்புரைநடை பதிற்றுப்பத்துப் பதிகங்களின் போக்கினை நினைவூட்டுவதாக உள்ளது.

3. தமிழ்ச் சுடர்மணிகள் : எஸ். வையாபுரிப் பிள்ளை, பக். 104.

4. "பொருட்பால் அரசனை முதலாக நாட்டி அவற்றுக்குப் புறத்துறுப்பான படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என ஆறாகப் பகுத்து, **அரசர்க்குரிய திறம்** இருபத்தைந்து அதிகாரத்தானும், **அமைச்சரது இயல்பு** பத்து அதிகாரத்தானும், **நாடும் அரணும் பொருளும்** ஓரோரதிகாரத்தானும், **படை** இரண்டதிகாரத்தானும், **நட்பு** ஐந்து அதிகாரத்தானும், **பகை** ஆறதிகாரத்தானும், **அரசர்க்கு அங்கமான** பெரியாரைப் பிழையாமை முதல் மருந்தீறாக **ஆறும்** ஆறு அதிகாரத்தானும், **அதற்குறுப்பு** ஆகிய குடிமை முதல் நாணுடைமை எனப்படுவன ஏழதிகாரத்தானும், அரசர்க்கும் ஏனை வருணங்கட்கும் ஒப்ப உரித்தாகிய **குடிசெயல்வகையும்**, அவருட் பார்ப்பார் ஒழித்துப் பெரும்பான்மை வேளாளர்க் குரித்தாகி ஏனையோர்க்கும் சிறுபான்மை உரித்தாகிய **உழவும்** ஓரோரதிகாரத்தானும், அவ்வாறு பொருள் செய்தவழி உளதாகும் **நல்குரவும்** அதுபற்றித் தோன்றும் **இரவும், இரவின்கண்** உளதாகிய **அச்சமும்**, இரப்போர்க்கு ஈயாதார் உள்ளிட்ட **கயவரது ஒழுக்கமும்** ஆகிய இந் நான்கும் ஓரோரதிகாரத்தானுமாக எழுபது அதிகாரத்தால் கூறி......"

(செந்தமிழ் : தொகுதி 2, பக். 246.)

5. அரசியல் 39–63 : 25 அதிகாரம் ; அங்கவியல் 64-95 : 32 அதிகாரம் ; ஒழிபியல் 96-108 : 13 அதிகாரம்.

6. **தலைமகன் கூற்று** (ஆண்பால் இயல் : 'தகையணங்குறுத்தல்' (109) முதல் 'அலரறிவுறுத்தல்' (115) ஈறாக ஏழு.

**தலைமகள் கூற்று** (பெண்பால் இயல்), 'பிரிவாற்றாமை' (116) முதல் 'அவாவயின் விதும்பல்' (127) ஈறாகப் பன்னிரண்டு.

**இருபாற்கிளவி** (இருவர் பாலியல்) : 'குறிப்பறிவுறுத்தல்' (128) முதல் 'ஊடலுவகை' (133) ஈறாக ஆறு.

7. **களவியல் :** 'தகையணங்குறுத்தல்' (109) முதல் 'அலரறிவுறுத்தல்' (115) ஈறாக ஏழு.

**கற்பியல் :** 'பிரிவாற்றாமை' (116) முதல் 'ஊடலுவகை (133) ஈறாகப் பதினெட்டு.

# 3. அதிகாரப் பகுப்பு முறை

## *1. அதிகாரப் பகுப்புச் செய்தவர் ஆசிரியரே*

மூன்று பாலிலும் இயல்பாகுபாடுபற்றிய அளவில் உரைகாரரும் பிறரும் வெவ்வேறு கருத்துகளைக் கொண்டிருப்பதால், இயல் பாகுபாட்டினை ஆசிரியர் வள்ளுவர் வகுத்துரைக்கவில்லை என்பது தெளிவு. ஆனால், அதிகாரப் பகுப்புச் செய்தவர் வள்ளுவரே. அதிகாரப் பெயர்களிலும் அவற்றின் அடைவிலும் பெரும் மாறுதலின்றி எல்லா உரைகாரர்களும் ஒருபடித்தாகக் கொண்டிருப் பதனுல் இவை ஆசிரியரால் தரப்பட்டவை என்று துணிய இடமுண்டு.

> *ஐயாறு நூறும் அதிகாரம் மூன்றுமா*
> *மெய்யாய வேதப் பொருள்விளங்க—பொய்யாது*
> *தந்தான் உலகிற்குத் தான்வள் ளுவனுகி*
> *அந்தா மரைமேல் அயன்*

என வரும் திருவள்ளுவமாலைப் பாடலால் (28) வள்ளுவர் நூற்று முப்பத்துமூன்று அதிகாரங்களாகத் தம் நூலைப் பகுத்துள்ளார் என்பது தெரியவரும்.

அதிகாரப் பெயர்கள் எல்லாம் ஆசிரியர் கூறியவையே என்று ஓர் இடத்துப் பரிமேலழகர் தம் உரையுள்ளும் குறிப்பிட் டுள்ளார். 'அவர்வயின் விதும்பல்' என்னும் அதிகாரத்தின் (127) தோற்றுவாய் பின்வருமாறு :

> *" அஃதாவது சேயிடைப் பிரிவின்கண் தலைமகனும் தலைமகளும் வேட்கை மிகவினுன் ஒருவரையொருவர் காண்டற்கு விரைதல். தலைமகன் பிரிவும் தலைமகள் ஆற்ருமையும் அதிகாரப்பட்டு வருகின்றமையின் இருவரையும் சுட்டிப் பொதுவாகிய பன்மைப்பாலாற் கூறினுர். பிறரெல்லாம் இதனைத் தலைமகனை*

நினைந்து தலைமகள் விதுப்புறல் என்றார். சுட்டுப் பெயர் சொல்லுவான் குறிப்பொடுகூடிப் பொருளுணர்வதல்லது தானென்றற்கும் பெயராகாமையானும், கவிக்கூற்றாகிய அதி காரத்துத் தலைமகன் உயர்த்தற் பன்மையால் கூறப்படாமை யானும் அஃது உரையன்மை அறிக.”

இங்கே, ‘கவிக்கூற்றாகிய அதிகாரத்து’ எனப் பரிமேலழகர் சொல்லும் உரைக்குறிப்பினால் அதிகாரப் பெயர்கள் எல்லாம் ஆசிரியர் திருவள்ளுவரால் இடப்பெற்றவை என்பது நன்கு தெளிவாம்.

## 2. அதிகாரப் பெயர்கள்

திருக்குறள் அதிகாரங்களுக்குத் தலைப்பெயராய் ஆசிரியர் திருவள்ளுவர் வைத்துள்ள பெயர்களைப்பற்றிய குறிப்பு அவ்வவ் அதிகாரப் பாடல்களில் ஏகதேசமாக ஆங்காங்கே வருவது உண்டு. சிற்சில அதிகாரங்களின் பெயராய் வரும் சொல்-தொடர்களை ஒருசில பாடல்களில் நாம் காணலாகும். வேறுசில அதிகாரங்களில் அதிகாரப் பெயரோடு அப் பொருள் தரும் வேறு பெயர்களும் பாடல் களிலே இடம்பெறுகின்றன. இங்ஙனமாக அதிகாரப் பெயர் அங்கங்கே சிற்சில அதிகாரங்களில் வரும் பாடல்களிலே ஓரிடத்தோ பலவிடத்தோ பயின்று வருவது உண்மையே.

என்றாலும் எல்லா அதிகாரங்களிலும் தலைப்பெயராய் அமைத்த சொற்களை ஆசிரியர் அதிகாரப் பாடல்களில் கொண்டு கூறியுள்ளார் என்று சொல்வதற்கு இல்லை. திருக்குறளின் முதல் அதிகாரப் பெயர் ‘கடவுள் வாழ்த்து’ என்பது எல்லாரும் அறிந்ததொன்று. இந்த அதிகாரத்திலுள்ள பத்துப் பாடல்களிலும் ‘கடவுள்’ என்னும் சொல்லோ, அல்லது ‘வாழ்த்து’ என்பதோ வரவே இல்லை. இங்ஙனமே, ‘கூடாவொழுக்கம்,’ ‘வினைத்தூய்மை,’ ‘பொழுது கண்டிரங்கல்’ என்றாற்போன்ற சில அதிகாரங்களில் அதிகாரப் பெயர்த்தொடர் அவ்வவ்வதிகாரத்தில் எந்தப் பாடலிலும் இடம் பெறவில்லை.

‘நீத்தார் பெருமை’ என்னும் அதிகாரத்துள் இத் தொடர் ஒரே ஒரு பாடலில், ‘ஒழுக்கத்து நீத்தார் பெருமை’ (குறள் 21) என இடம்பெற்றுள்ளது.

'மன்னரைச் சேர்ந்தொழுகல்' என்பது பொருட்பாலில் வரும் ஓர் அதிகாரப் பெயர் (70). இந்த அதிகாரத்தின் முதற்குறளோ,

*அகலா தணுகாது தீக்காய்வார் போல்க*
*இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்* *(குறள் 691)*

என்று உள்ளது. இதில் 'வேந்தர்ச் சேர்ந்தொழுகல்' என்பது வந்துள்ளது.) இதற்கு அடுத்த குறளில்,

*மன்னர் விழைப விழையாமை மன்னரான்*
*மன்னிய ஆக்கந் தரும்* *(குறள் 692)*

என 'மன்னர்' என்னும் சொல் இருமுறை வந்துள்ளது. ஆனால், 'சேர்ந்தொழுகல்' என்பது 'மன்னர்' என்பதனோடு சேர்ந்து வரவில்லை. இந்த இரண்டு குறள்களைத் தவிர, இந்த அதிகாரத்தில் உள்ள பிற எட்டுப் பாடல்களிலும் 'வேந்தர்', 'மன்னர்' என்னும் பெயர்களோ, வேறு பரியாயப்பெயர்களோகூட வரவில்லை. இதனால், அதிகாரத் தலைப்பெயராய் வரும் சொல்-தொடர் அந்தந்த அதிகாரப் பாடல்களில் தவறாது பயின்று வருகின்றன என்று சொல்வதற்கு இல்லை. இதனால், அதிகாரத் தலைப்பெயர் எல்லாருக்கும் எளிதில் விளங்கும் வகையில் அவ்வவ் அதிகாரப்பொருள் தெள்ளிதின் புலப்படக் கட்டுரைச் சுவைபட ஆசிரியர் அமைத்துள்ளார் என்று கருதலாம்.

## 3. அதிகாரப் பெயர் அடைவு

திருக்குறளின் அதிகாரப் பெயர்களைத் தொடக்க எழுத்தைக் கொண்டும், முடிவு பெறும் விகுதி, அசை முதலியவற்றின் ஒப்புமையினும் அகராதி அடைவுசெய்து பார்க்கும்போது, ஒருசில உண்மைகள் புலனாகின்றன. முதலாவதாக, அதிகாரப் பெயர்களுள் எத்தனை வகைக்கூறுபாடுகள் உள்ளன என்பது புலனாகும். ஒருசில அதிகாரப்பெயர்கள் ஒரு மொழியாயும், வேறுசில தொடர்மொழிப் பெயராயும் உள்ளமையும் பெறப்படும்.) அதிகாரங்களுள் எவை எவை பெயர், பொருள் ஒப்புமையாய் வருகின்றன என்பதும் தெள்ளிதின் விளக்கமாகும். இவ்வாறு பற்பல முறைகளில் ஆசிரியர் திருவள்ளுவரின் நூற்பொருளை அறிவதற்கு இவ்வதிகாரப் பெயர் அடைவு ஓர் ஆடி போன்று நமக்கு உதவும்.

செய்தக்க வல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் (குறள் 466)

என்று வள்ளுவப் பெருந்தகை உணர்த்தும் முறையில் செய்தக்கனவும் செய்யத்தகாதனவும் அதிகாரப் பெயர்களாலேயே விளக்கமாகும். 'செய்க' என ஆசிரியர் அறிவுறுத்துவனவற்றை 'விதி முறை அதிகாரம்' எனவும், 'செய்யற்க' என விலக்குவனவற்றை 'எதிர் மறைமுக அதிகாரம்' எனவும் வழங்குவர்.[1] 'கடவுள் வாழ்த்து,' 'விருந்தோம்பல்,' 'அருளுடைமை,' 'இறைமாட்சி,' 'நட்பு,' 'காலம் அறிதல்' என்றாற்போல வருவன விதிமுறை அதிகாரங்களாம். 'பயனில சொல்லாமை,' 'இன்னா செய்யாமை,' 'சிற்றினம் சேராமை' என்றாற்போன்று கடியத்தக்கனவற்றை எதிர்மறை ஆகாரமும் மைவிகுதியும் கூட்டி உரைத்துள்ளார். இன்னும் சில இடங்களில் 'தீவினையச்சம்,' 'அவாவறுத்தல்,' 'புலால் மறுத்தல்,' 'குற்றம் கடிதல்' முதலிய சொற்களாலும் ஒருவன் அஞ்சி நீக்கத்தக்க தீயவற்றைக் கூறுகின்றார். 'கூடாவொழுக்கம்,' 'கூடா நட்பு,' 'தீநட்பு' என்று இவ்வாறு முன்மொழி அடைகளால் தீய நெறிகளைக் குறிப்பிட்டும் இவை நீக்கத்தகுவன என அறிவுறுத்து கின்றார். இவை போன்றன எல்லாம் பின்வரும் அதிகாரப் பெயர் அடைவைக் கூர்ந்து நோக்கின் நமக்குப் புலனாகும்.

இல்வாழ்க்கை—துறவு; இனியவை கூறல்—பயனில சொல் லாமை; அன்புடைமை—அருளுடைமை—கண்ணோட்டம்; கொல் லாமை—புலால் உண்ணாமை; நல்குரவு—இரவு—இரவச்சம்; கல்வி—கல்லாமை; அவையறிதல்—அவையஞ்சாமை; பெரியாரைத் துணைக்கோடல்—பெரியாரைப்பிழையாமை—சிற்றினம் சேராமை; சான்றாண்மை—புல்லறிவாண்மை; அறிவுடைமை—கயமை; பிற னில் விழையாமை—கூடா ஒழுக்கம்—வரைவின் மகளிர்; வெஃ காமை—கள்ளாமை; பொறையுடைமை—வெகுளாமை; செங் கோன்மை—கொடுங்கோன்மை; தெரிந்து தெளிதல்—தெரிந்து வினையாடல்—தெரிந்து செயல்வகை; வினைத்தூய்மை—வினைத் திட்பம்—வினை செயல்வகை; ஊக்கமுடைமை—மடியின்மை: இவையெல்லாம் ஒன்றற்கொன்று ஒற்றுமை வேற்றுமையுடைய அதிகாரங்கள். இவை ஒன்றற்கொன்று பொருள் இயைபுடை யனவாய் வருதலும் நோக்கத்தகும்.

## 4. அதிகாரப் பெயர் வகை

(எண் : அதிகார எண்)


அச்சம் : இரவு அச்சம் 107
,, : தீவினை அச்சம் 21
அஞ்சாமை : அவை அஞ்சாமை 73
அடக்கமுடைமை 13
அணங்குறுத்தல் : தகை அணங்குறுத்தல் 109
அமைச்சு 64
அரண் 75
அருளுடைமை 25
அல் : இனியவை கூறல் 10
,, : நினைந்தவர் புலம்பல் 121
,, : பசப்புறுபருவரல் 119
,, : பெண்வழிச்சேறல் 91
,, : பெரியாரைத் துணைக்கோடல் 45
,, : மன்னரைச் சேர்ந் தொழுகல் 70
,, : விருந்தோம்பல் 9
அலரறிவுறுத்தல் 115
அவர் புலம்பல் : நினைந்து அவர் புலம்பல் 121
அவர்வயின் விதும்பல் 127
அவர்வயின் விரும்பல் [காளிங்கர்] 127
அவாவறுத்தல் 37
அவையஞ்சாமை 73
அவையறிதல் 72
அழித்தல் , கண்விதுப்பு அழித்தல் [காளிங்கர்] 118
அழிதல் : உறுப்பு நலன் அழிதல் 124
அழிதல் : கண்விதுப்பு அழிதல் 118
அழிதல் : நிறை அழிதல் 126
அழியாமை : இடுக்கண் அழியாமை 63
அழுக்காறாமை 17
அறன்வலியுறுத்தல் 4
அறிதல் : அவை அறிதல் 72
,, : இடன் அறிதல் 50
,, : ஒப்புர அறிதல் 22
,, : காலம் அறிதல் 49
,, : குறிப்பு அறிதல் 71, 110
,, : செய்ந்நன்றிஅறிதல் 11
,, : வலி அறிதல் 41
அறிவாண்மை : புல்லறி வாண்மை 85
அறிவுடைமை 43
அறிவுறுத்தல் : அலர் அறி வுறுத்தல் 115
அறிவுறுத்தல் : குறிப்பு அறி வுறுத்தல் 128
அறுத்தல் : அவா அறுத்தல் 37
அன்புடைமை 8
ஆடல் : ஒற்றாடல் 59
,, : தெரிந்துவினையாடல் 52
ஆண்மை : சான்றாண்மை 99
,, : புல்லறிவு ஆண்மை 85
ஆராய்தல் : நட்பு ஆராய்தல் 80
ஆல் : சுற்றம் தழால் 53
ஆள்வினையுடைமை 62
ஆற்றாமை : பிரிவு ஆற்றாமை 116
இகல் 86
இடனறிதல் 50
இடுக்கண் அழியாமை 63
இரங்கல் : படர்மெலிந்து இரங்கல் 117
இரங்கல் : பொழுது கண்டு இரங்கல் 123
இரவச்சம் 107
இரவு 106, 107
இல் செல்வம் : நன்றி இல் செல்வம் 101
இல்வாழ்க்கை 5
இல் விழையாமை : பிறன் இல் விழையாமை 15

இறை மாட்சி 39
இன்மை : மடி இன்மை 61
இன்னா செய்யாமை 32
இனியவை கூறல் 10
ஈகை 23
உ : இரவு 106
,, : உழவு 104
,, : துறவு 35
,, : நல்குரவு 105
உட்பகை 89
உடைமை : அடக்கம் உடைமை 13
,, : அருள் உடைமை 25
,, : அறிவு உடைமை 43
,, : அன்பு உடைமை 8
,, : ஆள்வினை உடைமை 62
,, : ஊக்கம் உடைமை 60
,, : ஒழுக்கம் உடைமை 14
,, : நாண் உடைமை 102
,, : பண்பு உடைமை 100
,, : பொறை உடைமை 16
உண்ணாமை : கள் உண்ணாமை 93
உணர்தல் : குறிப்பு உணர்தல் [காளிங்கர்] 110
,, : மெய் உணர்தல் 36
உரைத்தல் : கனவு நிலை உரைத்தல் 122
,, : காதற் சிறப்பு உரைத்தல் 113
,, : நலம் புனைந்து உரைத்தல் 112
,, : நாணுத்துறவு உரைத்தல் 114
உவகை : ஊடல் உவகை 133
உழவு 104
உறுத்தல் : அறன் வலியுறுத்தல் 4
,, : தகையணங்குறுத்தல் 109
உறுப்பு நலன் அழிதல் 124
உறு பருவரல் : பசப்பு உறு பருவரல் 119
ஊக்கமுடைமை 60
ஊடலுவகை 133
ஊழ் 38
ஒப்புரவறிதல் 22
ஒரு மொழிப் பெயர் :
,, : அமைச்சு 64
,, : அரண் 75
,, : இகல் 86
,, : ஈகை 23
,, : ஊழ் 38
,, : சூது 94
,, : தவம் 97
,, : தூது 69
,, : நட்பு 79
,, : நாடு 74
,, : புகழ் 24
,, : மருந்து 95
,, : மானம் 97
ஒழுக்கம் : கூடா ஒழுக்கம் 28
ஒழுக்கமுடைமை 14
ஒழுகல் : மன்னரைச் சேர்ந்து ஒழுகல் 70
ஒற்றாடல் 59
ஓட்டம் : கண்ணோட்டம் 58
ஓம்பல் : விருந்து ஓம்பல் 9
கடவுள் வாழ்த்து 1
கடிதல் : குற்றம் கடிதல் 44
கண்டு இரங்கல் : பொழுது கண்டு இரங்கல் 123
கண்ணோட்டம் 58
கண்விதுப்பழிதல் 118
கண்விதுப்பழித்தல் [காளிங்கர்] 118
கயமை 108
கல்லாமை 41
கல்வி 40
கள்ளாமை 29
கள்ளுண்ணாமை 93
கனவுநிலை உரைத்தல் 122
காதற் சிறப்பு உரைத்தல் 113
காலமறிதல் 49
கிளத்தல் : நெஞ்சொடு கிளத்தல் 125

குடி [மணக்குடவர்] 96
குடி செயல் வகை 103
குடிமை 96
குற்றம் கடிதல் 44
குறிப்பறிதல் 71, 110
குறிப்புணர்தல் [காளிங்கர்] 110
குறிப்பறிவுறுத்தல் 128
கூடா நட்பு 83
கூடா வொழுக்கம் 28
கூறல் : இனியவை கூறல் 10
கூறாமை : புறங்கூறாமை 19
கேள்வி 42
கை : இல்வாழ்க்கை 5
,, : ஈகை 23
,, : ஊடலுவகை 133
கொடுங்கோன்மை 56
கொல்லாமை 33
கோடல் : பெரியாரைத் துணைக் கோடல் 45
கோன்மை : கொடுங்கோன்மை 156
,, : செங்கோன்மை 55
சான்றாண்மை 99
சிற்றினம் சேராமை 46
சிறப்பு : வான் சிறப்பு 2
சிறப்பு உரைத்தல் : காதற் சிறப்பு உரைத்தல் 113
சுற்றம் தழால் 53
சூது 94
செங்கோன்மை 55
(செய்தல் : தல் என்னும் முடிவைப் பார்க்க.)
செய்ந்நன்றியறிதல் 11
(செய்)யாமை :
,, : அவை அஞ்சாமை 73
,, : அழுக்காறாமை 17
,, : இடுக்கண் அழியாமை 63
,, : இன்னா செய்யாமை 32
,, : கல்லாமை 41
,, : கள்ளுண்ணாமை 93
,, : கொல்லாமை 33
(செய்)யாமை : சிற்றினம் சேராமை 46
,, : நிலையாமை 34
,, : பயனில சொல்லாமை 20
,, : பிரிவு ஆற்றாமை 116
,, : பிறனில் விழையாமை 15
,, : புறங்கூறாமை 19
,, : பெரியாரைப் பிழையாமை 90
,, : பொச்சாவாமை 54
,, : வெஃகாமை 18
,, : வெகுளாமை 31
,, : வெருவந்த செய்யாமை 57
செயல்வகை : குடிசெயல்வகை 103
,, : தெரிந்து செயல்வகை 47
,, : பொருள் செயல்வகை 76
,, : வினை செயல்வகை 68
செருக்கு : படைச் செருக்கு 78
செல்வம் : நன்றி இல் செல்வம் 101
சேர்ந்தொழுகல் : மன்னரைச் சேர்ந் தொழுகல் 70
சேராமை : சிற்றினம் சேராமை 46
சேறல் : பெண்வழிச் சேறல் 91
சொல்லாமை : பயனில சொல் லாமை 20
சொல்வன்மை 65
தகையணங்குறுத்தல் 109
தல் (செய்தல்) :
,, : அவாவறுத்தல் 37
,, : குற்றம் கடிதல் 44
,, : தெரிந்து தெளிதல் 51
,, : நட்பாராய்தல் 80
,, : நெஞ்சொடு கிளத்தல் 125
,, : நெஞ்சொடு புலத்தல் 130
,, : பகைத்திறந் தெரிதல் 88
,, : புணர்ச்சி மகிழ்தல் 111
,, : புதல்வரைப் பெறுதல் 7
,, : புலால் மறுத்தல் 26
,, : மெய்யுணர்தல் 37

தவம் 27
தழால் : சுற்றம் தழால் 53
தனிப்படர் மிகுதி 120
திட்பம் : வினைத்திட்பம் 67
திறம் தெரிதல் : பகைத்திறம் தெரிதல் 88
தீ நட்பு 82
தீவினையச்சம் 21
துணை : வாழ்க்கைத் துணை 6
துணைக்கோடல் : பெரியாரைத் துணைக்கோடல் 45
துறவு 35
துறவு உரைத்தல் : நாணுத்துறவு உரைத்தல் 114
தூது 69
தூய்மை : வினைத்தூய்மை 66
தெரிதல் : பகைத்திறம் தெரிதல் 88
தெரிந்து செயல்வகை 47
தெரிந்து தெளிதல் 51
தெரிந்து வினையாடல் 52
தெளிதல் : தெரிந்து தெளிதல் 51
தொடர் மொழிப் பெயர் :
,, : உட்பகை 89
,, : கடவுள் வாழ்த்து 1
,, : கண்ணோட்டம் 58
,, : கூடாவொழுக்கம் 28
,, : தனிப்படர் மிகுதி 120
,, : நன்றியில் செல்வம் 101
,, : படைச் செருக்கு 78
,, : புலவி நுணுக்கம் 132
,, : வரைவின் மகளிர் 92
,, : வாழ்க்கைத் துணைநலம் 6
,, : வான் சிறப்பு 3
,, : வினைத்திட்பம் 67
,, : வினைத்தூய்மை 66
நட்பாராய்தல் 80
நட்பு 79
,, : கூடா நட்பு 83
,, : தீ நட்பு 82
நடுவு நிலைமை 12
நல்குரவு 105
நலம்புனைந்துரைத்தல் 112
நலம் : வாழ்க்கைத் துணை நலம் 6
நலன் அழிதல் : உறுப்புநலன் அழிதல் 124
நன்றியறிதல் 11
நன்றியில் செல்வம் 101
நாடு 74
நாணுடைமை 102
நாணுத்துறவுரைத்தல் 114
நிலை உரைத்தல் : கனவு நிலை உரைத்தல் 122
நிலைமை : நடுவு நிலைமை 12
நிலையாமை 34
நிறையழிதல் 126
நினைந்தவர் புலம்பல் 121
நீத்தார் பெருமை 3
நுணுக்கம் : புலவி நுணுக்கம் 132
நெஞ்சொடு கிளத்தல் 125
நெஞ்சொடு புலத்தல் 130
பகை : உட்பகை 89
பகைத்திறந் தெரிதல் 88
பகை மாட்சி 87
பசப்புறு பருவரல் 119
பசப்புறுதல் [மணக்குடவர்] 119
படர்மிகுதி : தனிப்படர் மிகுதி 120
படர்மெலிந்திரங்கல் 117
படைச் செருக்கு 78
படை மாட்சி 77
பண்புடைமை 100
பயனில சொல்லாமை 20
பருவரல் : பசப்புறு பருவரல் 119
பழைமை 81
பிரிவாற்றாமை 116
பிழையாமை : பெரியாரைப் பிழையாமை 90
பிறனில் விழையாமை 15
புகழ் 24
புணர்ச்சி மகிழ்தல் 111
புணர்ச்சியின் மகிழ்தல் [காளிங்கர்] 111
புணர்ச்சி விதும்பல் 129
புதல்வரைப் பெறுதல் 7

புல்லறிவாண்மை 85
புலத்தல் : நெஞ்சொடு புலத்தல் 130
புலம்பல் : நினைந்து அவர் புலம்பல் 121
புலவி 131, 132
புலால் மறுத்தல் 26
புறங்கூறாமை 19
புணர்ந்து உரைத்தல் : நலம் புனைந்து உரைத்தல் 112
பெண்வழிச் சேறல் 91
பெரியாரைத் துணைக்கோடல் 45
பெரியாரைப் பிழையாமை 90
பெரியார்ப் பிழையாமை [காளிங்கர்] 90
பெருமை 98
,, : நீத்தார் பெருமை 3
பெறுதல் : புதல்வரைப் பெறுதல் 7
பேதைமை 84
பொச்சாவாமை 54
பொருள் செயல் வகை 76
பொழுது கண்டு இரங்கல் 123
பொறையுடைமை 16
மகளிர் : வரைவு இல் மகளிர் 92
மகிழ்தல் : புணர்ச்சி மகிழ்தல் 111
மடியின்மை 61
மருந்து 95
மறுத்தல் : புலால் மறுத்தல் 26
மன்னரைச் சேர்ந்து ஒழுகல் 70
மாட்சி : இறை மாட்சி 39
,, : பகை மாட்சி 87
,, : படை மாட்சி 77
மானம் 97
மிகுதி : தனிப்படர் மிகுதி 120
மெய்யுணர்தல் 36
மெலிந்து இரங்கல் : படர் மெலிந்து இரங்கல் 117
மை : கயமை 108
,, : குடிமை 96
,, : சொல்வன்மை 65
,, : நடுவு நிலைமை 12
,, : நீத்தார் பெருமை 3
மை : பழைமை 81
,, : பெருமை 98
,, : பேதைமை 86
,, : மடியின்மை 61
,, : வாய்மை 30
,, : வினைத்தூய்மை 66
வகை : குடி செயல் வகை 103
,, : தெரிந்து செயல் வகை 47
,, : பொருள் செயல் வகை 76
,, : வினை செயல் வகை 68
வரைவின் மகளிர் 92
வலியறிதல் 48
வலியுறுத்தல் : அறன் வலியுறுத்தல் 4
வழிச்சேறல் : பெண்வழிச் : சேறல் 91
வன்மை : சொல்வன்மை 65
வாய்மை 30
வாழ்க்கை : இல்வாழ்க்கை 5
வாழ்க்கைத் துணைநலம் 6
வாழ்த்து : கடவுள் வாழ்த்து 1
வான் சிறப்பு 2
வி : கல்வி 40
,, : கேள்வி 42
,, : புலவி 131
விதுப்பு அழிதல் : கண் விதுப்பு அழிதல் 118
விதும்பல் : அவர்வயின் விதும்பல் 127
,, : புணர்ச்சி விதும்பல் 129
விருந்தோம்பல் 9
விழையாமை : பிறனில் விழை யாமை 15
வினை அச்சம் : தீவினை அச்சம் 21
வினை செயல் வகை 68
வினைத்திட்பம் 67
வினைத்தூய்மை 66
வினையாடல் : தெரிந்து வினை யாடல் 52
வினையுடைமை : ஆள்வினை யுடைமை 62
வெஃகாமை 18
வெகுளாமை 31
வெருவந்த செய்யாமை 57

# 4. அதிகாரப் பெயர்விளக்கமும் வைப்புமுறையும்

## தோற்றுவாய்

அதிகார வைப்புமுறையில் உரைகாரர்களிடையே எவ்வகையான வேறுபாடும் இல்லை. ஆதலால் இந்த வைப்புமுறை ஆசிரியர் வள்ளுவனாரால் அமைக்கப் பெற்றதே என்று துணியலாம். அதிகார அடைவை ஆசிரியர் எக்காரணம்பற்றிக் கொண்டார் என்பதுகுறித்து உரைகாரர் விளக்கம் தந்துள்ளனர்.

இப்பொழுது நமக்குக் கிடைக்கும் உரைகளுள் காளிங்கர் உரையிலும் பரிமேலழகர் உரையிலுமே அதிகார அடைவிற்குரிய காரணங்கள் எங்கும் முறையாக விளக்கப்பட்டுள்ளன. காளிங்கர் ஒவ்வோர் அதிகாரத்தின் இறுதியில் பத்தாவது பாட்டின் உரை முடிந்ததும் அடுத்த அதிகாரத்தினோடு அதற்குரிய தொடர்பினை விவரிக்கிறார். பரிமேலழகரோ, அதிகாரங்களின் தொடக்கத்தில் அதிகார அடைவை விளக்கியுரைக்கிறார். இவ்விருவரும் ஆசிரியர் திருவள்ளுவனாரின் உள்ளம் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று தம் கூர்த்த மதியினால் ஆராய்ந்து அமைதி கூறுகின்றனர். ஆதலால், இவ்விருவரும் அதிகார முறைமை குறித்துக் காட்டும் விளக்கங்களை ஊன்றிப் பார்த்தல் அவசியமாகும். இவர்கள் கூறுவதற்கும் மேலாக வேறு ஏதுக்களை நாம் சிந்தித்துத் தெளிவதற்கும் இவர்களுடைய கருத்துகளைத் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாத தாகிறது. ஏனைய உரைகாரர்களும் அதிகார முறை வைப்பின் காரணங்களை விளக்காவிடினும், அதிகாரப் பொருள்களை விளக்கியிருக்கின்றார்கள். ஆகவே, உரைகாரர்களின் துணைக் கொண்டு அதிகாரப் பொருள் விளக்கங்களையும், ஒன்றனோடு ஒன்றற்கான தொடர்புக்குரிய ஏதுக்களையும் நாம் கண்டு கொள்ளலாம்.

பிற்காலத்தில், அதாவது கி. பி. 14ஆம் நூற்றாண்டில், தொகுக்கப் பெற்றதாகக் கருதப்படும் 'புறத்திரட்டு' என்னும் தொகை நூல் திருக்குறளின் அமைப்பு முறையையே அடியொற்றி அமைந்துள்ளது. இந் நூலின் பால் அதிகார அடைவுகள் எல்லாம் திருக்குறளைப் போலவே உள்ளன. நூலின் பெரும்பகுப்பாக இதுவும் முப்பாலைக் கொண்டுள்ளது. அதுவுமன்றிச் சிறு பகுப்புகளிலும், அஃதாவது அதிகார அடைவிலும் குறளாசிரியர் வகுத்த நெறியினையே இப் புறத்திரட்டும் பின்பற்றிச்செல்லுகின்றது. திருக்குறளில் அறத்துப்பால் பொருட்பால்களில் உள்ள அதிகாரங்கள் 108; புறத் திரட்டிலும் புறத்திணை பற்றி வகுத்த பகுதியை நீக்கி ஏனையவற்றைக் கணக்கிட்டால் 108 அதிகாரங்கள் உள்ளன. இரு நூல்களிலும் அதிகாரங்களை அமைத்துள்ள முறையிலும் சிறிதும் வேறுபாடு இல்லை.

இனி, அதிகாரப் பெயர்களின் பொருள் விளக்கத்தையும் வைப்புமுறைக் காரணங்களையும் விளக்கமாக ஆராய்வோம்.

## அறத்துப்பால்

### *1. பாயிரம்*

#### *1. கடவுள் வாழ்த்து*

கடவுள் வாழ்த்தாவது கடவுளை வாழ்த்துதல். கடவுளை வாழ்க என வாழ்த்தாது, 'கடவுள் ஒருவர் உளர்-அவரை நினைந்து வாழ்த்தி வணங்க வேண்டும்' என்னும் கருத்துப்படக் கடவுளின் உண்மை கூறுவதாகும் இப் பகுதி.

எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்து ஒருநூலின் முதலிற் கூறப்படுதல் பழங் காலந் தொட்டு வரும் ஒரு மரபே.

*கொடிநிலை கந்தழி வள்ளி என்னும்*
*வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்*
*கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே*

(தொல். புறத். 33)

என வரும் தொல்காப்பிய நூற்பா கடவுள் வாழ்த்து நூலின் முதற்கண் வரும் என்னும் குறிப்பைத் தருகிறது.

கவி தான் வழிபடு கடவுளை வாழ்த்துதலும் எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்புடைக் கடவுளை வாழ்த்துதலும் என இக் கடவுள் வாழ்த்து இரு வகைப்படும் என்பதும், வள்ளுவர் கூறிய கடவுள் வாழ்த்து ஏற்புடைக் கடவுள் வாழ்த்தாகும் என்பதும் பரிமேலழகர் கருத்தாகும்.

> "சத்துவம் முதலிய குணங்களால் மூன்றாகிய உறுதிப் பொருட்கும் அவற்றான் மூவராய முதற் கடவுளோடு தொடர் புண்டு; ஆகலான் அம் மூன்று பொருளையும் கூறலுற்றார்க்கு அம் மூவரையும் வாழ்த்துதல் முறைமையாதலின், இவ் வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினார் என உணர்க"

என்பது இவர் கூறும் விளக்கமாகும். அறம் பொருள் இன்பம் என்பன முறையே சத்துவம், இராசதம், தாமசம் என்னும் குணங் களால் உளவாவனவாம். இங்கே இவருடைய கருத்துப்படி மூவர் என்றது அரி, பிரமன், சிவன் என்னும் மும்மூர்த்திகளைக் குறிக்கும்.

பரிப்பெருமாள் முற்பட இக் கடவுள் வாழ்த்து கூறப்பெற்றதற் குரிய காரணத்தைப் பின்வருமாறு விளக்கிக் கூறியுள்ளனர்:

> "கடவுள் வாழ்த்தாவது தெய்வ வணக்கம் கூறுதல். 'வழிபடு தெய்வ வணக்கம் செய்ய, எடுத்துக்கொண்டது இனிது முடியும்' என்பதனாலும், கடவுள் வழிபாடு நால்வகைப்பட்ட அறத்தினும் (தானம், தவம், விரதம், பூசை) பூசையாதலானும், இவரை வழிபட்டாதோர் செய்வதோர் அறமில்லை என்பதனானும் இவ்வதிகாரம் முற்படக் கூறப்பட்டது."

இவ் வதிகாரத்தில் திருவள்ளுவர் அதிகாரப் பெயரில் அமைந்த சொல்—தொடர்களை எந்தப் பாடலிலும் குறிப்பு வகையாற்கூடப் புலப்படுத்தவில்லை. ஆயினும், கடவுளின் தனிப்பண்புகளை ஒவ்வொரு பாடலிலும் குறிப்பிட்டுள்ளார். 'ஆதிபகவன்' என்பது தொடங்கி, 'இறைவன்' என்பது ஈறாகப் பத்துக் குறளிலும் ஒன்பது வகையான கருத்துடை யடைகளால் கடவுளின் ஒப்புயர்வற்ற தன்மையை விளங்க உரைத்துள்ளார். இப் பண்புகள் எல்லாக் கடவுளர்க்கும் ஏற்புடைய பொதுப் பண்புகளாம். எனவே, பொதுமறை தந்த வள்ளுவரின் கடவுள் வாழ்த்தும் பொதுமையாய் அமைந்து எல்லா ருடைய போற்றுதலையும் பெற்றுத் திகழ்கிறது.

## 2. வான் சிறப்பு

வான் சிறப்பாவது மழையினது சிறப்பு; 'மழையினது தலைமை' என்பர் மணக்குடவர். ஆகவே மழையினது பெருமையும் தலைமையும் இன்றியமையாமையும் எடுத்துரைப்பதே இவ் வதிகாரப் பொருள் என்பது விளங்கும்.

"கடவுளது ஆணையால் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு" ஏதுவாக உள்ளது இம் மழை.

*தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்*
*வானம் வழங்கா தெனின்* (குறள் 19)

என்னும் வள்ளுவர் வாக்கினால் இல்லறமும் துறவறமும் உலகில் நடைபெற மழை இன்றியமையாதது என்பது தெரியவரும். ஆகவே, கடவுள் வாழ்த்தினை அடுத்து அறத்திற்கு முதலாகிய மழையின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

*விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே*
*பசும்புல் தலைகாண் பரிது* (குறள் 16)

என்பதனால் ஓரறிவுயிராகிய புல்பூண்டுகள் உட்பட எல்லா வகை உயிரினங்களும் வாழ்வதற்கு மழை எவ்வளவு இன்றியமையாதது என்பது தெரியவரும். அதனால்தான் கடவுளைப்போன்று இவ் வுலகை நிலைபெறச்செய்கின்ற பெருமை மழைக்கு உண்டு என்று மழை வளத்தின் சிறப்புப் போற்றி உரைக்கப்படுகிறது.

அதிகாரப் பெயரில் வரும் 'சிறப்பு' என்னும் சொல் இவ் வதிகாரப் பாடல்களில் இடம்பெறவில்லை. 'வான்' என்பது முதற் குறளிலும் இறுதிக் குறளிலும் (1,10) வந்துள்ளது. இதனோடு 'அம்' சாரியை சேர்ந்து உண்டாகிய 'வானம்' என்னும் சொல் 8, 9 ஆம் குறள்களில் உள்ளன. ஏனையவற்றில் இதன் வேறு பெயராகிய 'விசும்பு' (6) என்பது ஒரு பாடலிலும், 'விண்' என்பது மற்றொரு பாடலிலும் (3), மற்றும் 'புயல்' (4), 'எழிலி' (7), 'மழை' (2, 5) என்னும் சொற்கள் ஏனைய பாடல்களிலும் வந்துள்ளன. இங்ஙனமாக இவ்வதிகாரப் பாடல்களில் எல்லாம் 'மழை' என்பதனைக் குறிக்கும் சொற்கள் பயின்று வந்துள்ளமை காணலாம்.

## 3. நீத்தார் பெருமை

'நீத்தார்' என்பதற்கு எல்லாப் பற்றுகளையும் முழுவதும் விட்டவர் என்பதுபொருள். 'நீத்தார் பெருமை' என்பதற்கு

'துறந்த முனிவரது பெருமை கூறுதல்'' என்று மணக்குடவரும் 'முற்றத் துறந்த முனிவரது பெருமை கூறுதல்'' என்று பரிமேலழகரும் விளக்கம் தருகின்றனர். முற்றத் துறத்தலாவது: 'யான்' என்னும் அகப்பற்றும், 'எனது' என்னும் புறப்பற்றும் ஆகியவற்றை விட்டு விடுதலையாதல். இக் கருத்தின் விளக்கத்தை,

*யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு*
*உயர்ந்த உலகம் புகும்* (*குறள் 346*)

எனத் துறவு அதிகாரத்துள் வரும் வள்ளுவருடைய வாக்கினால் உணரலாகும்.

இவ்வதிகாரத்தின் பெயரை, 'ஒழுக்கத்து நீத்தார் பெருமை' என முதற்குறளிலேயே வள்ளுவர் பொதிந்து வைத்துள்ளார். இதற்கு விளக்க முரைப்பார்போல இரண்டாவது குறளைத் 'துறந்தார் பெருமை துணைக்கூறின்' என்று தொடங்குகிறார். ஏனையவற்றில் துறந்தாரின் இயல்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இத் துறவியர் ஐம்புலன்களை அடக்கியாள்பவர்; இதனால் இவரை 'ஓரைந்தும் காப்பான்' (4) 'ஐந்து அவித்தான்' (5) என்று சுட்டுகின்றார். 'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிவான்' (7) என இத் துறவோருடைய தத்துவ உணர்வு எடுத்துக்காட்டப்படுகிறது. இத் துறவோர் அளப்பருங் குணங்களால் நிறைந்தவர்; ஆற்றல் வாய்ந்த சொற்களைப் பெற்றவர்; உலகிலுள்ள உயிர்களிடத்து அருள் பூண்டு, இவ்வுலகம் உய்யும்பொருட்டுத் துறவறம் மேற்கொண்டவர். இவ்வாறெல்லாம் இவர்தம் பெருமையை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். 'குணம்என்னும் குன்றேறி நின்றார்' (9), 'நிறைமொழி மாந்தர்' (8), 'எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு' (10), 'ஈண்டு அறம் பூண்டார்' (3) எனவரும் பாடற் பகுதிகளால் இவை விளங்கும். இவரை 'அந்தணர்' (10) என்றும், 'பெரியர்' (6) என்றும் போற்றுகிறார் வள்ளுவர்.

'' அறமுதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார் அவராகலின் (நீத்தார்) இது வான்சிறப்பின்பின் வைக்கப்பட்டது'' என்பர் பரிமேலழகர். உலகம் மழையினால் நிலைபெற, அவ்வுலகம் நெறி தவறாமல் நடக்க வழிகாட்டுகிறார் நீத்தார் என்பது கருத்து. '' கடவுளை வணங்கினாற் போல முனிவரையும் வணங்க வேண்டும்'' என்று உரைக்கிறார் மணக்குடவர். இவ் விருவருடைய கருத்தையும் தெளிவுற விளக்கும் வகையில் இராமாநுஜ கவிராயர் காட்டும் காரணங்கள் அமைந்துள்ளன. அவை வருமாறு:

5

*"காரியப்பட்டு நின்ற அந்த உலகம் முழுமையும் உள்ளபடி உணருவதற்கும், அந்த அறமுதலாகிய பொருள்களை உலகிற்கு உள்ளபடி உணர்த்துவதற்கும் உரியவர் அவராகி,*

*சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என் றைந்தின்*
*வகைதெரிவான் கட்டே உலகு* (குறள் 27)

*ஏன் உலகு என்பது அவருள் அடங்குதலானும்,*

*'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'*

*என இவரையும் உலகம் என்று சொல்லப்படுவதினாலும் வான் சிறப்பின்பின் இது வைக்கப்பட்டது."*

உரைகாரர் காளிங்கர் பாயிரப்பகுதி நான்கு அதிகாரமும் நூலுக்குரிய பதிகமாம் என்னும் கருத்தை முன்வைத்து அதிகார வைப்பு முறையை வகுத்துரைக்கின்றார்.

*"கடவுள் வணக்கமும் வான்சிறப்பும் துறவறம் இல்லறம் முதலாகிய எனைத்தொழுக்கத்துக்கும் இன்றியமையாப் பண்பின. ஆகலின், அவற்றின் பின்னர் அவ்விரு வகை ஒழுக்கத்திற்கும் தொகைநிலைப் பாயிரம் உணர்த்துகின்றார்"*

என்று கூறியுள்ளார். இவர் கருத்துப்படி 'நீத்தார் பெருமை' என்பது வீட்டுநெறிக்கு இயல்பாகிய துறவுநெறிப் பாயிரம் உணர்த்துவதாம்; அடுத்துவரும் அறன் வலியுறுத்தல் துறவறத்திற்கும் துணைக்காரண மாகிய பொது அறம் தொகுத்துரைப்பதாம்.

*இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றின் நின்ற துணை* (குறள் 41)

என் இல்லறவியலின் முதல் அதிகாரமாகிய 'இல்வாழ்க்கை'யின் முதற்குறளில் வள்ளுவர் எடுத்தியம்பும் கருத்தை அடிப்படை யாகக்கொண்டுள்ளது காளிங்கரின் கருத்துரை.

### 4. அறன் வலியுறுத்தல்

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றனுள் அறமே வலியு டையது என்பதனை அறிவுறுத்துகின்றது இவ்வதிகாரம். "பொரு ளும் இன்பமும் போலல்லாமல் அறமோ இம்மை, மறுமை, வீடு என் னும் மூன்றனையும் கொடுக்கும் இயல்பினால் வலிமையுடைத்தா கின்றது" என்று எடுத்துக்காட்டுகிறார் பரிமேலழகர். இதனால் முப்பாலில் அறத்துப்பால் முன்னர்க் கூறப்படும் காரணமும் புலனாகும்.

இந்த அறம் முனிவரால் கொண்டுசெலுத்தப்படுவதனுல் நீத்தார் பெருமையின் பின்னர் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வதிகாரத்தில் எட்டாம் பாடலைத் தவிர ஏனைய பாடல்களில் எல்லாம் 'அறம்' என்பதும், இதன் போலி வடிவாகிய 'அறன்' என்பதும் வந்துள்ளன. எட்டாம் பாடலில் அறம் என்னும் பொருளில் 'நன்று' என்னும் சொல்லை ஆசிரியர் தந்துள்ளார்.

*நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று* (குறள் 108)

என்னும் குறளிலும் நன்று என்பது அறம் என்னும் பொருளில் வழங்கப்பட்டிருத்தல் ஈண்டு ஒப்பு நோக்கத்தகும்.

பொது அறம் உரைக்கும் இவ்வதிகாரம் நூல் முழுமைக்கும் உரிய தோற்றுவாயாக உள்ளமை கவனிக்கத் தகும்.

*சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு.* (குறள் 31)

*அறத்தா றிதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோ டூர்ந்தா னிடை.* (குறள் 37)

*அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்*
*புறத்த புகழும் இல.* (குறள் 39)

*வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்*
*வாழ்நாள் வழியடைக்கும் கல்.* (குறள் 38)

இப் பாடல்களை நோக்குவோமாயின், பொருள் இன்பம் என்பன அறத்தால் வருவனவாம் என்பதனை அறிவித்தலோடு பிறவாமைப் பேருகிய வீட்டுச்செல்வத்தையும் இவ்வறம் பயக்கும் என்று அறிவுறுத்துகின்றமை விளங்கும். இதனுல் பொருள், இன்பம், வீடு என்பன எல்லாம் அறத்தின் பயனே என அறத்தின் முதன்மையும் இதனுல் உணர்த்தப்பட்டுள்ளமை காணலாம்.

தொல்காப்பியத்துள் புறத்திணையியலிலே பாடாண் திணைப் பகுதியில் 'வாழ்த்து' என்பது பற்றியும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

'அமரர்கண் முடியும் அறுவகையானும்' எனத் தொடங்கும் நூற்பாவில் தெய்வ வாழ்த்தும், தெய்வத்தைப்போலக் கொண்டு வாழ்த்தும் நிறைமொழி மாந்தர், அந்தணர், ஆனிரை, மழை, முடியுடைவேந்தர், உலகம் இவற்றை வாழ்த்துதலாகிய அறுமுறை

வாழ்த்தும் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ் வாறனுள் தெய்வ வாழ்த்து கடவுள் வாழ்த்திலும், நிறைமொழி மாந்தர், அந்தணர் வாழ்த்துகள் நீத்தார் பெருமையிலும், மழை வாழ்த்து வான்சிறப்பிலும் வள்ளுவரால் அமைக்கப்பட்டன என்று ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர்.

பேராசிரியர் மு. இராகவையங்கார் தாம் எழுதிய 'தொல் காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி' என்னும் நூலிலே,

*கொடிநிலை கந்தழி வள்ளி என்ற*
*வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்*
*கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'*
(*தொல். புறத். 33*)

என்னும் தொல்காப்பிய நூற்பாவை ஆதாரமாகவைத்துப் பாயிரம் நான்கு அதிகாரங்களுக்கும் வேறொரு வகையில் விளக்கம் தருகிறார். இச் சூத்திரத்தில் உயர்பின்வழி வரும் ஒடுச்சொல்லைக் கடவுள் வாழ்த்தொடு எனக் கூறுவதால், அவ் வாழ்த்து முதற்கண் வரும் சிறப்புடையது என்கிறார். கொடிநிலை என்பது மேகத்தை உணர்த்தும்; கந்தழி என்பது பற்றழிவு; அதாவது பற்று விட்ட துறவோர் தன்மையாம். வள்ளி என்பது அறம். இவ்வாறு சொற் பொருள் விளக்கத்தை ஏதுக்களுடன் எடுத்துக்காட்டி அமைதி காண்கிறார் இப் பேராசிரியர். [1]

## 2. இல்லறவியல்

### *5. இல்வாழ்க்கை*

இல்லறம் துறவறம் இரண்டிலும் இல்லறமே முதன்மை பெறுவது. துறவத்திற்கும் துணைக்காரணமாக உள்ளது இவ் இல்லறமே. இல்வாழ்க்கையாவது இல்லாளோடு கூடி வாழ்தலின் சிறப்பு உரைப்பது. அறன் வலியுறுத்தலில் அறத்தினைச் சிறப்பித்துக் கூறி, அதனைச் செய்க என்று ஆணையிட்டார். இது முதல் அறம் செய்யும் முறைமை விளக்கப்பெறுகின்றது. இந்த இல்வாழ்க்கை யறம் சீராக நடைபெருவிட்டால், ஏனைய துறவறமும் நிலைபெற முடியாது என்கிறார் திருவள்ளுவர்.

*துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை* (*குறள் 42*)

என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வதிகாரத்தில் துறவு வாழ்வை விடவும் இல்வாழ்வே ஏற்றமுடையது என்றும் (46, 47, 48, 49)

கூறி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலின் சிறப்பு எடுத்துரைக்கப் படுகிறது. துறவறத்தார் உட்பட ஏழை எளியவர்கள் எல்லாரையும் காக்கும் சிறப்பால் இல்வாழ்க்கை முதலில் சிறப்பித்துரைக்கப் படுகிறது.

'இல்வாழ்க்கை' என்னும் இவ்வதிகாரப் பெயர் ஐந்து பாடல் களில் (5, 6, 7, 8, 9) வந்துள்ளது. நான்காம் பாடலில் அடை மொழியின்றி 'வாழ்க்கை' என்றே இல்வாழ்க்கையைக் குறிப்பிடு கின்றார். இதனால் உலகில் வாழ்க்கை என்று குறிப்பிடுவதாயின், அது இல்வாழ்க்கையையே குறிக்கும் என்பதும் தெளிவாம்.

இல்வாழ்க்கை என்பது மனைவியோடுகூடி வாழும் வாழ்க்கை என ஆண்பாலரது முதன்மை இல்வாழ்க்கையில் எடுத்தோதப் படுகிறது. 'இல்வாழ்வான்' என ஆசிரியர் திருவள்ளுவர் முதலிரு பாடல்களில் எடுத்தோதியதோடு,

> *இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*
> *முயல்வாருள் எல்லாம் தலை*

என ஏழாம் குறளிலும்,

> *வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
> *தெய்வத்துள் வைக்கப் படும்* (குறள் 50)

என இறுதிக் குறளிலும் இல்வாழ்வானுடைய முதன்மை கூறியுள்ள மையால், ஆசிரியரின் கருத்து வெளிப்படையாகத் தெரிய வருகிறது.

இவ் வதிகாரத்தின் தொடக்கவுரையில் மணக்குடவர் இல்லற வியல் இருபது அதிகாரங்களின் தொடர்பு முறையையும் தொகுத்து விளக்கம் தந்துள்ளார். அவர்தம் கருத்துரையின் உட்கோள் பின்வருமாறு :

இல்வாழ்வான் வாழும் திறம் உரைப்பது முதல் அதிகாரம்: இல்வாழ்விற்குத் துணையான மனைவி இலக்கணம் உரைப்பது அடுத்துவரும் அதிகாரம். இல்லறப் பகுதியான பிரமசரியம், காருகத்தம் என்னும் இரண்டினுள் பிரமசரியத்திற்கு ஆதாரமான புதல்வரைப் பெறுதலை உரைப்பது பின்வரும் ஓர் அதிகாரம். இதனைத் தொடர்ந்து காருகத்த இலக்கணம் வகுத்துரைக்கப் படுகிறது. இஃது நல்கூர்ந்தார், நல்குரவின் நீங்கினார், செல்வர், வள்ளியோர் என்னும் நால்வராலும் கொண்டு செலுத்தப்படுவதாம். 'அன்புடைமை'

முதலாக 'ஒழுக்கமுடைமை' ஈறாக ஏழும் நல்கூர்ந்தாரால் செய்யப் படுவன; 'பிறனில் விழையாமை' முதலாகத் 'தீவினையச்சம்' ஈறாக வுள்ள ஏழும் இவரால் தவிரப்படுவனவாம். 'ஒப்புரவறிதல்' நல்குரவின் நீங்கினாரால் செய்யப்படுவது; செல்வரால் செய்யப் படுவது ஈதல். புகழோ வள்ளியோரால் ஈட்டப்படும். [2]

## 6. *வாழ்க்கைத் துணை நலம்*

வாழ்க்கைத் துணைநலம் என்பது இல்வாழ்க்கைக்குத் துணை யாகிய இல்லாளது நன்மை. "வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது பெண்மை இலக்கணம் கூறுதல்" என்கிறார் மணக் குடவர். இல்வாழ்க்கையைத் தொடங்கும்போது இல்லத் தலைவனைச் சுட்டி 'இல்வாழ்வான்' என்று அவனுடைய கடமைகளை வற்புறுத் தியது போலவே, இங்கு அந்த இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளின் மாண்பு பேசப்படுகிறது.[1]

எடுத்த எடுப்பிலேயே வள்ளுவர்,

*மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை* (குறள் 51)

என இல்லாளை 'வாழ்க்கைத்துணை' என்னும் பெயரால் குறிப்பிட்டு, அவளுடைய கடமைகளை முறையே விவரிக்கிறார்.

இவ் வாழ்க்கைத்துணை வீட்டுக்குத் தலைவியாதலின் அவ ளுரிமையைக் குறிப்பிப்பார்போல இல்லாள் (2) இல்லவள் (3) என்றும், ஆகுபெயர்ப் பொருள் தோன்றக்க 'இல்' என்றும் கூறி யுள்ளார். 'இல்' என்பது போன்றே அதன் பரியாயப் பெயரான 'மனை' என்பதனையும் மனைவி என்னும் பொருளில் வழங்கியுள்ளார் வள்ளுவர் (10). மற்றும், 'பெண்' (4,6), 'பெண்டிர்' (8), 'மகளிர்' (7) என்னும் பெயராலும் இல்லத்தரசியரை வள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார். 5 ஆம் பாடலில், மகளிர் தம் கணவரைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டுப் பணியாற்றினர் என்பதைக் குறிப்பித்துள்ளார். இவர்கள் மழையைப் பெய் என ஏவிப் பணி கொள்ளும் ஆற்றல் பெற்று விளங்கினர் என மகளிரின் கற்பு மேம்பாடு வள்ளுவரால் போற்றி உரைக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரத்தின் இறுதிக் குறளில் மனைக்கு விளக்கு மனையாள்; அவளுக்கு அணிகலம் நன்மக்கட் பேறு என்று இல்

வாழ்வார் பெறும் மக்கட் செல்வம் போற்றி உரைக்கப்படுகிறது. வழிவழிக் குலம் தழைக்க இல்வாழ்வும் மாண்புடை மனைவியும் நன்மக்கட் பேறும் இன்றியமையாதவை என்று எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது. அடுத்து வரும் அதிகாரத்திற்குத் 'தோற்றுவாய்' செய்வது போலவும் 'மங்கலம் என்ப' என்னும் பத்தாவது குறள் அமைந்துள்ளது.

## 7. புதல்வரைப் பெறுதல்

"புதல்வரைப் பெறுதலாவது புதல்வரைப் பெற்றதனுலாய பயன் கூறுதல்" என்பது மணக்குடவரின் விளக்கம். பரிமேலழகரோ, தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலினுலல்லது செய்ய இயலாது; ஆதலால் அக் கடன் இறுப்பதற்காக நல்ல மக்களைப் பெறுதலாம் என்று கருத்துரைக்கின்ருர். இக் கருத்து,

*தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்*
*பொன்போற் புதல்வர்ப் பெருதீரும் (புறம் 9:3–4)*

எனவரும் புறநானூற்றடிகளிலும் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம். இக் கருத்து முந்திய அதிகாரத்தின் முடிவில் 'நன்மக்கட் பேறு' என வள்ளுவர் குறித்தமைகொண்டு கூறப்பட்டுள்ளது. இவ்வதிகாரத்திலும் தொடங்கும் போதே அறிவறிந்த மக்கட்பேறே ஒருவன் பெறும் பேறுகள் எல்லாவற்றினும் சிறந்தது (61) என்று எடுத்துக் காட்டுகின்ருர். இங்ஙனமாக இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், புதல்வரைப் பெறுதல் என்பன மூன்றும் காரண காரியத் தொடர்புபட ஒன்றன்பின் ஒன்று ஆசிரியரால் வைத்து முறை செய்யப்பட்டிருக்கிறது.

மனைக்கு விளக்காக மனைவியைப் போற்றிவரும் பண்பாடு சங்கச்சான்ருேர் நாளிலிருந்தே வரும் தமிழ்ப் பண்பாடு.

*'மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்' (புறம். 314)*

*'மனைக்கு விளக்கு ஆயினள்' (ஐங். 405)*

*'கடவுட் கற்பொடு குடிக்கு விளக்காகிய' (அகம். 184)*

எனவரும் சங்கப் பாடற் பகுதிகள் இதற்குத் தக்க சான்ருய் அமைகின்றன. அடுத்துப் புதல்வர்ப் பேற்றினது சிறப்பும் இன்றியமையாமையும் பொத்தியார் கோப்பெருஞ்சோழன் உரையாடலாக

அமைந்த புறநானூற்றுப் பாடல்களால் விளக்கமாகத் தெரியவரும் (217-222).

> 'மனைக்கு விளக்கம் மடவாள்; மடவாள்
> தனக்குத் தகைசால் புதல்வர்'

எனவரும் நான்மணிக்கடிகைப் பாடற் பகுதியும் (101) இவ் வகை முறை மரபினை உள்ளடக்கி அமைந்துள்ளது காணலாம்.

இவ் வதிகாரப் பாடல்களில், 'புதல்வர்' என்னும் பெயராட்சி எங்கும் இல்லை; 'மக்கள்' என்பதனையே வள்ளுவர் வழங்கியுள்ளார். 'மக்கட் பேறு' என்று முதற்பாடல் குறிப்பிடுகிறது. மேலும், ஆறு பாடல்களில் 'மக்கள்' (2-6,8) என்பது வந்துள்ளது. 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி' (7), 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி' (10) என இருபாடல்களில் தந்தை மகன் ஆகியோரது கடமையை வற்புறுத்தும் வகையில் 'மகன்' என்னும் சொல்லாட்சி உளது. இதில் மகனால் தாய்க்கு உளதாகும் மகிழ்ச்சியும் உரைக்கப் பட்டுள்ளது (9).

இங்ஙனமாக, 'மகன்', 'மக்கள்' என்னும் சொல்லாட்சிகள் மிக்குவந்த போதிலும், ஆசிரியர் அதிகாரப் பெயராகப் 'புதல்வரைப் பெறுதல்' என்று அமைத்துள்ளார். சென்ற அதிகாரத்தின் இறுதிப் பாடலிலும் இந்த அதிகாரத்தின் தொடக்கத்திலும் 'மக்கட் பேறு' என வள்ளுவர் ஆண்டுள்ளமையால், 'மக்கட் பேறு' என்பதுவே இவ்வதிகாரத்திற்குப் பெயராதல் வேண்டும் என்பது ஒருசார் ஆராய்ச்சியாளர்களின் கருத்து. எல்லா இடத்தும் பாடலில் வரும் தொடர்கொண்டே ஆசிரியர் அதிகாரப் பெயர்களை அமைக்க வில்லை என்பது 'கடவுள் வாழ்த்து' என்னும் முதல் அதிகாரப் பெயரி லிருந்தே நாம் நன்கு தெளியலாம். ஆதலால், அதிகாரப் பாடல்களில் வரும் தொடரை வைத்துக் கொண்டுமட்டும் இவ்வதிகாரப் பெயரை 'மக்கட் பேறு' என்று ஆசிரியர் கொண்டார் என்று ஒருதலையாகத் துணிய இடமில்லை.

புதல்வரைப் பெறுதல் என்றே அதிகாரப்பெயர் இருப்பது பொருந்த முடையது என்றும் அது வள்ளுவர் கொடுத்த தலைப்பே என்றும் சான்று பல காட்டி வை. மு. கோபால கிருஷ்ண மாச்சாரியார் கூறுவது இங்குக் காணத்தக்கது. அவர்தம் விளக்கம் பின்வருமாறு:

" புதல்வரைப் பெறுதல் என்று தலையங்கமிருத்தல் சிறப்புடைத் தென்பதற்குச் சான்றுகள் காட்டுவாம் :

'வீறுசால் புதல்வற் பெற்றனை இவணர்க்கு
அருங்கட னிறுத்த செருப்புகல் முன்ப'
(பதிற். 74 : 21-22)

'இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கடன் இறுத்த வெல்போர் அண்ணல்'
(பதிற். 70 : 21-22)

என்ற பதிற்றுப்பத்தடிகளையும்,

'யாமொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினும் தந்தையர்க்கு
அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை' (புறம். 92 : 1–3)

என்ற புறநானூற்று ஔவை பாடலையும்,

'புதல்வன் பிறந்தபின் வா' (புறம். 222 : 3)

என்ற கோப்பெருஞ் சோழன் கூற்றையும், சிந்தாமணி 267இல் நச்சினார்க்கினியர் 'நன்பொருள்' என்பதற்குப் 'புதல்வன்' என்று உரை கண்டிருத்தலையும் காண்க. இவற்றிலும் சீரிய சான்றுகள் உளவோ? இதுவரை கூறியவாற்றான் 'புதல்வரைப் பெறுதல்' என்ற தலைப்பே அமைவுடைத்தென்பதும், அஃது வள்ளுவர் ஈந்த தலைப்பே என்பதும் பெறப்பட்டனவாம்."

## 8. அன்புடைமை

வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்களிடத்து விருப்புடையனுயிருத்தலே 'அன்புடைமை'யாம். இல்லறம் இனிது நடத்தலும், பிற உயிர்களிடத்து அருள் தோன்றுதலும் அன்பின் பயனாகும். எனவே, இஃது இல்லறத்திற்கு அடிநிலையாய் அமைந்துள்ளது. துறவு நிலைக்கு உரிய அருளைப்பயப்பதும் இந்த அன்புதான். இதனை 'அருள் என்னும் அன்பீன் குழவி' என்னும் வள்ளுவர் வாக்கு (குறள் 757) மெய்ப்பிக்கின்றது. ஆகவே, ஒருவனுடைய வாழ்க்கைக்கு ஆதாரமாகவுள்ள அன்புடைமையின் இன்றியமையாமையை இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம் புதல்வரைப் பெறுதல் எனவரும் அதிகாரங்களை அடுத்து முதற்கண் மொழிந்தார் வள்ளுவர் என்பது தெரியவரும். இவ் வதிகாரத்துள் அடங்கிய பத்துப் பாடல்களிலும் 'அன்பு' என்னும் சொல் பயின்று வந்துள்ளது. இதனை உடையாரையும் இல்லாரையும் முறையே

'அன்புடையார்,' 'அன்பிலார்' என இரண்டாவது குறளில் குறிப்பிட்டுக் கூறுகிறுர் வள்ளுவர்.

## 9. விருந்தோம்பல்

'விருந்து' என்னும் சொல் 'புதுமை' என்னும் பொருள் தருவது. 'புதுமை' என்னும் பொருள் தரும் இவ்'விருந்து' என்னும் சொல் இங்கே ஆகுபெயராய்ப் புதியராய் வந்தாரைக குறிக்கிறது. "விருந்தோம்பலாவது உண்ணுங் காலத்துப் புதியார் வந்தால் பகுத்துண்ண வேண்டும் என்பது கூறல்" என்று இச் சொற்பொருளைக் கருத்தில் கொண்டு விளக்கம் தருகிறுர் மணக்குடவர்.

*தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றுங்கு*
*ஐம்புலத்தாறு ஓம்பல் தலை* (குறள் 43)

என இல்வாழ்க்கை அதிகாரத்துள் இல்வாழ்வானுக்கு ஐவகை யறங்களைச் சிறப்பாகக் கூறியுள்ளார் வள்ளுவர். இவற்றுள் "முன்னைய இரண்டும் (தென்புலத்தார், தெய்வம்) கட்புலன் ஆகாதாரை நினைந்து செய்வன ஆகலானும், பின்னைய இரண்டும் (ஒக்கல், தான்) பிறர்க்கு ஈதல் அன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று" என்று விருந்தினரை ஓம்புதலின் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகின்றுர் பரிமேலழகர் (அதி. 9. விருந். தோற்றுவாய்).

ஒருவன் இல்லறத்தில் வாழ்ந்து பொருள் தேடி அதனைப் போற்றி வாழும் வாழ்வு எல்லாம் விருந்தோம்புதலுக்கே; விருந்தோம்பாதார் இல்லறமும் பொருள்வாழ்வும் பயனற்றனவாம். இவ் வதிகாரத் தொடக்கத்திலேயே,

*இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு* (குறள் 81)

என இதன் இன்றியமையாமையை வள்ளுவர் போற்றி உரைப்பதும் நோக்கத்தக்கது.

மேலும், பரிமேலழகர் விருந்தினரை இருவகையினராகப் பிரித்து மொழிகின்றுர். முன்பே அறிமுகமாகி அக் காரணத்தால் தம்மை எதிர்நோக்கி வந்தவர் ஒருவகையர்; முன்னர் அறிமுகமில்லாமல் எதிர்பாராது வந்தடுத்த புதியவர் மற்றொரு வகையர் என்று அவர் கருதுகின்றுர்.

"விருந்து என்பது புதுமை; அஃது ஈண்டு ஆகுபெயராய்ப் புதியராய் வந்தார்மேல் நின்றது ; அவர் இரு வகையர் ; பண்டு அறிவுண்மையிற்குறித்து வந்தாரும், அஃது இன்மையின் குறியாது வந்தாரும் என"

என்பது பரிமேலழகரின் விளக்கம். (குறள் 43. உரை.)

'விருந்தோம்பல்' என்னும் இவ் வதிகாரப் பெயர், அப்படியே ஒன்பதாவது குறளில் அமைந்துள்ளது. மற்றும் விருந்து (2, 3, 6, 7, 10) விருந்தோம்புதல் (1, 4, 5, 6, 8) என்பனவற்றை ஏனைய பாடல்களில் காணலாகும்.

வேருகாத அன்புடைய இல்வாழ்வானும் இல்லாளும் கூடியல்லது விருந்தோம்பல் அறம் தடையின்றி நடைபெருது. அன்றியும் அன்புடையாரிடத்து அல்லாமல் பிறரிடம் விருந்தினர் செல்லவும் மாட்டார்கள்.

*முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானும்*
*இன்சொலி னஃதே யறம்* *(குறள் 93)*

என மேல்வரும் இனியவை கூறல் அதிகாரத்துள் விருந்தோம்புதல் முதலிய அறம்புரிவார்க்கு முகமலர்ச்சியும், இனிய குளிர்ந்த பார்வையும், உளமார்ந்த இனிய பேச்சுகளும் இன்றியமையாதன என எடுத்துக்காட்டப்பட்டுள்ளமை காணலாம்.

கணவனைப் பிரிந்து வாழ்வாரிடம் விருந்தோம்பல் முதலிய அறங்கள் நடைபெரு. கோவலனைப் பிரிந்து வாழ்ந்த நிலையில் கண்ணகியால் இல்லறக் கடமைகளை இனிதே நடத்த இயலவில்லை. இதனைக் கண்ணகியே பின்னர் மதுரைமாநகரில் கோவலனிடம் கூறுவதாக வரும்,

*அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்*
*துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்*
*விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை*
*(சிலப். கொலைக். 71-73)*

என்னும் மறுமொழியால் உணரலாகும். இங்கே விருந்தோம்புதலைத் 'தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர்கோடல்' என ஆசிரியர் கூறுவதனுல் இவ்வறத்தின் முதன்மையும் தெரியவரும்.

மனைவியைப் பிரிந்து வாழும் தலைவனும் விருந்தினரைத் தக்கபடி உபசரித்தல் இயலாது. இராமனைப் பிரிந்து அசோக வனத்தில்

காவலுக்குட்பட்டிருந்த சீதையின் உள நினைவுகளைப்பற்றிக் கூறுமிடத்தில் கம்பர்,

*'விருந்து கண்டபோது என்னுறுமோ என்று அழுங்கும்'*
*(கம்ப. சுந்தர. காட்சிப். 15)*

என்று கூறுகிருர். இதனாலும் விருந்தோம்பும் அறம் சிறப்பாக இல்லாளுக்கே உரியது என்பது தெரிய வரும்.

இங்ஙனமாக வரும் இலக்கிய நிகழ்ச்சிகளும் அன்புடை இருவர் கூடியல்லது விருந்தோம்பல் இனிது நடைபெருது என்பதனையே அறிவுறுத்துகின்றன. ஆகவே, 'அன்புடைமை'யை அடுத்து 'விருந்தோம்பல்' அமைக்கப்பட்டுள்ளது.

*"விருந்தோம்புதலாவது தன் புதல்வனிடத்தில் வைத்த அன்பு போலவே பலரிடத்தும் அன்பு வைத்து உபசரித்தல்"*

என்று பரிதியார் தரும் விளக்கம் புதல்வரைப் பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல் என ஆசிரியர் அதிகார அடைவு செய்ததின் நோக்கத்தைப் புலப்படுத்துவதாயுள்ளது.

### *10. இனியவை கூறல்*

மனத்தில் உள்ள மகிழ்ச்சியைப் புறத்தார்க்கு வெளிப்படுத்தும் இனிய சொற்களைச் சொல்லுதல் என்பது இவ் வதிகாரப் பெயரின் உட்பொருள். ஒருவனுடைய உளமார்ந்த இன்சொற்கள் அவற்றைக் கேட்டார்க்கும் மனமகிழ்ச்சியை உண்டாக்கும்.

சென்ற அதிகாரத்தின் இறுதியில் விருந்தோம்புவார்க்கு இன்முகம் வேண்டும் என்று எடுத்துக்காட்டியுள்ளார் வள்ளுவர். இங்கே மோப்பக் குழையும் அனிச்சப் பூவினும் மெல்லியராகிய விருந்தினர்க்கு இன்சொற் கூறுதல் அவரை மகிழ்வுறச் செய்யும். ஆதலால், விருந்தோம்பலை அடுத்து இனியவை கூறல் வைக்கப்பட்டுள்ளது. முகத்தால் விரும்பி இனிதாகப் பார்த்து உளமார்ந்த இனிய சொற்களைச் சொல்லுதல் நல்லறம் என்பது இவ் வதிகாரத்தின் மூன்றும் பாடலில் எடுத்துக்காட்டப்படுகிறது. மேலும், இன்சொல் ஒருவனுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் உறுதுணையாவது என்றும் 7, 8 ஆம் பாடல்களில் அறிவுறுத்துகின்ருர். 'வன்சொல்' ஆகாது என்பதனை 9-10 ஆம் பாடல்களிலே ஆசிரியர் கடிந்துரைத்துள்ளார். இன்சொல்லின் இயல்பும் (1, 3, 7, 8, 9) இன்சொலனுதலின்

உள்ளம், உரை, செயல் ஆகிய மூன்றுனும் குற்றம் புரிதல் ஆகாது என்பர் பெரியோர். பிறர்க்கு இனியவை சொல்லியும் செய்தும் வருபவர் தமக்குப் பிறர் செய்யும் செய்ந்நன்றியும் போற்றும் தகுதியராவர். சொல்லால் இனியவை கூறலும் உளத்தால் செய்ந்நன்றி போற்றுதலும் அடுத்தடுத்து வருதலும் உள்ளம், உரை, செயல் என்பவற்றின் காரியமாதல் கவனிக்கத்தக்கது.

'செய்ந்நன்றி' என்பது ஒரு பாடலில்மட்டும் வருகிறது (10). நான்கு பாடல்களில் 'நன்றி' என்பதும் (2, 4, 8, 10), 'நன்று' என்பது ஒரு பாடலிலும் (9), மற்றும் மூன்று பாடல்களில் இதன் வேறு பெயராகிய 'உதவி' என்பதும் (1, 3, 5) வந்துள்ளன.

6, 7ஆம் பாடல்களில் ஒருவனுடைய துன்பக்காலத்தில் வந்து உதவி செய்தவர்களின் தொடர்பை மறவாது போற்றுதல் வேண்டும். என்பது அறிவிக்கப்படுகிறது.

சென்ற அதிகாரத்தில் இன்சொல்லுக்கு இனமான பணிவுடைமையை எடுத்துக்காட்டியதுபோல, இங்கும் செய்ந்நன்றியறிதலுக்குத் தொடர்பாக உதவி செய்தவரின் நட்பு போற்றத்தக்கது என்பது அறிவிக்கப்படுகிறது. 'கேண்மை' (6) 'நட்பு' (6,7) என்னும் சொற்பொருளாட்சியைப் பார்க்கும்போது இப் பாடல்கள் நட்பு அதிகாரத்தும் இடம்பெறுதற்குப் பெரிதும் பொருத்தமுடையவை என்பது தெரியவரும்.

## *12. நடுவு நிலைமை*

நடுவு நிலைமை என்பது எல்லார்க்கும் ஒப்ப நிற்கும் நிலை. இந் நிலையைத் துலாக்கோலின் நடுமுள்போல் சாய்தல் இல்லாமல் நேர்மையைக் கடைப்பிடித்தலாகும் என்பர். 'சமன்செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாமை' என 8 ஆம் பாட்டில் வள்ளுவர் தரும் விளக்கம் நடுவுநிலைமையின் பொருளை நன்கு விளக்குகிறது. நுகத்தடியின் பகலாணியை, அதாவது நுகத்தின் நடுவாக உள்ள முளையையும் நடுவுநிலைமைக்கு ஒப்புக் கூறுவது உண்டு. இந் நடுவு நிலைமையைத் 'தகுதி' (1), 'செப்பம்' (2, 9), 'தகவு' (4), 'நடுவு' (3, 6, 7) என்னும் சொற்களால் இவ்வதிகாரப் பாடல்களில் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். மற்றும் 'நெஞ்சத்துக் கோடாமை' (5), 'ஒருபால் கோடாமை' (8) என்று நடுவுநிலைமையின் பொருளைத் தெளிவுபடுத்தியும் உரைத்துள்ளார்.

''பகை, நொதுமல், நண்பு என்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை''யே நடுவுநிலைமை என்கிறார் பரிமேலழகர்.

> *'நெடுநுகத்துப் பகல்போல*
> *நடுவுநின்ற நன்னெஞ்சினோர்* (பட்டினப். 206-207)

என்று நடுவு நிலைமையின் இயல்பினைப் பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார்.

*நன்றி செய்தவரிடத்து அந் நன்றியை நினைத்தபோது கடமை* தவறுமல்லவா? அத்தகைய இடத்துங்கூட நடுவுநிலை தவறுதல் கூடாது என்பதை அறிவுறுத்தும்பொருட்டே 'செய்ந்நன்றி யறித'லின்பின், 'நடுவு நிலைமை' அதிகாரம் வைக்கப்பட்டது என்பது பரிமேலழகரின் கருத்து. பரிப்பெருமாள் இது செயல்பற்றிய அதிகாரம் என்கிறார். ''மனத்தானும் மொழியானும் செய்தலேயன்றி மெய்யோடும் செய்யப்படுதலானும் அதன்பின் (செய்ந்நன்றி யறிதலின் பின்) கூறப்பெற்றது'' என்பது *பரிப்பெருமாளின் உரை* விளக்கம்.

இவ் வதிகாரத்தின் முதல் ஏழு பாடல்களில் நடுவுநிலைமையின் சிறப்பும், நடுவு நிலைமையால் வந்த செல்வம் நலம் செய்தலும், நடுவு நீங்கியோர் செல்வம் தீங்கு பயத்தலும், எச்சத்தால் தக்கார் தகவிலர் என்பது அறியலாம் என்பதும், நடுவுநிலைமை தவறுவது கேட்டிற்கு ஏதுவாம் என்பதும், நடுவுநிலை தவறாதவனின் தாழ்வு இகழற்குரியது அன்று என்பதும் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

இறுதியில் உள்ள மூன்று பாடல்களுள் இரண்டு பாடல்கள் அவையத்தாரை நோக்கி உரைத்தனவாகும். இறுதிப்பாடல் வாணிகரை நோக்கிக் கூறியது. இவற்றால் நடுவுநிலைமை எல்லார்க்கும் வேண்டுமாயினும் அறம் கூறும் அவையத்தாருக்கும் வாணிகர்க்கும் இது சிறப்பாக வேண்டப்படுவது என்பது ஆசிரியர் கருத்தாம்.

'அவையறிதல்' (அதி. 72), 'அவையஞ்சாமை' (அதி. 73) என்பவை அமைச்சியலில் வருவதால் அவை சிறப்பாக மன்னர் அவையைக் குறித்துக் கூறப்பட்டன என்று கொள்ளவேண்டும். எனவே, இங்கே நடுவு நிலைமையிற் கூறப்பெறுவதோ அறங்கூறும் அவையம் என்பது தெளிவாகும்.

## 13. அடக்கமுடைமை

அடக்கமுடைமையாவது மனம், மொழி, மெய்கள் தீய நெறி களிலே செல்லாமல் அடங்கி ஒழுகுதல் ஆகும். இவ்வதிகாரத்தைத் தொடங்கும்போதே,

*அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை*
*ஆரிருள் உய்த்து விடும்* (குறள் 121)

என்று அடக்கத்தின் சிறப்பையும் அடங்காமையால் வரும் தீமை யையும் அறிவுறுத்துகிறார். மேலும், ' காக்க பொருளா அடக்கத்தை ' (2) என்று தொடங்கி ஐந்தாவது பாடல்வரை அடக்கத்தின் மேன் மையை எடுத்துரைக்கிறார். அதன்பின் மெய்யடக்கம் (6), மொழி யடக்கம் (7, 8, 9), மனவடக்கம் (10) ஆகியவற்றைச் சிறப்பாக வற்புறுத்தி உரைத்துள்ளார். ' அடக்கல் ' (6), ' அடங்கல் ' (10) ' அடங்க ' (3), ' அடங்கி ' (4) என்றிவ்வாறு அடக்கம் பற்றிய வினைவடிவங்களை ஆண்டதோடு ' பணிதல் ' (5) என்னும் சொல்லை யும் ஆசிரியர் இப் பொருளில் பயன்படுத்தியுள்ளார்.

பணிதலின் மேன்மை இவ் வதிகாரத்தில் மட்டுமன்றி முன்னர் இனியவை கூறல்பற்றிக் (அதி. 10) கூறவந்தவிடத்தும், பணி வுடைமையும் இன்சொல்லுமே ஒருவர்க்கு அணி (குறள். 95) என்று அறிவுறுத்தியுள்ளார். மற்றும் பிற்பகுதியில், பெருமைபற்றிய அதிகாரத்திலும் (அதி. 98),

*பணியுமாம் என்றும் பெருமை சிறுமை*
*அணியுமாம் தன்னை வியந்து* (குறள் 978)

என்று பெருமைக்குரிய தனிச்சிறப்புப் பணிதலே என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சென்ற அதிகாரத்தில் அறங்கூறும் அவையத்தாருக்கும் வணிகர்க்கும் நடுவுநிலைமையைச் சிறப்பாக அறிவுறுத்தியது போலவே இவ்வதிகாரத்தில் அடக்கம் அனைவர்க்கும் நன்மை தருவ தாயினும் செல்வர்க்கே அது சிறப்பாக வேண்டும் என்று எடுத்துரைக்கிறார் (5).

*பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய*
*சுருக்கத்து வேண்டும் உயர்வு* (குறள் 963)

என மானம்பற்றிய அதிகாரத்தும் (97) இக் கருத்து விளக்கப்பெற் றிருத்தல் சிந்தித்தற்குரியது.

(நடுவுநிலைமையை அடுத்து அடக்கமுடைமை வைக்கப்பெற்ற தற்குரிய பொருத்தம்குறித்து உரைகாரர் சிற்சில கருத்துகளை எடுத்துரைத்துள்ளனர்.) "ஒரு பக்கம் சாயாத நடுவுநிலைமை யாளர்க்கே நெஞ்சத்து ஆற்றலுண்டாவது ஆகலான், மற்று இதன் பின்னர் அடக்கமுடைமையைக் காட்டுகின்றது" என்கிறார் காளிங்கர். மெய் மொழி மனங்களின் அடக்கம், "ஏதிலார் குற்றம் போல் தம் குற்றமும் காணும்" (குறள் 190) நடுவுநிலையுடையார்க்கே உளதாகும் என்பது பரிமேலழகரின் கருத்துரை.

பரிப்பெருமாள் கூறும் விளக்கம் பின்வருமாறு உள்ளது: "மேல் மனமொழி மெய்களான் நல்லது செய்யவேண்டும் என்றார். இது அவையிற்றை அடக்கி யொழுகவேண்டும் என்பதனால் அதன்பின் கூறப்பட்டது." இங்கே இவர் மன மொழி மெய்களால் நல்லது செய்யவேண்டும் என்று ஆசிரியர் சொன்னார் எனக் குறிப்பிடுவது முன்னர் வரும் 'இனியவை கூறல்,' 'செய்ந்நன்றியறிதல்,' 'நடுவு நிலைமை' என்னும் அதிகாரங்களைக் குறிப்பதாகும்.) இவை முறையே மொழி, மனம், மெய்களால் செய்யும் நல்லறம்பற்றிக் கூறுவன. அடக்கமுடைமையோ முக்கரணத்தாலும் அடங்கி ஒழுகுதலை அறிவுறுத்துகின்றது. எனவே, செய்ந்நன்றியறிதல் முதலாக இது வரையில் மன மொழி மெய்களால் செய்வன கூறி, அவற்றிற் கெல்லாம் தலையாகத் தொடர்ந்து ஒழுக்கமுடைமையாகிய செயல் தூய்மையை வற்புறுத்துவது வள்ளுவர் நோக்கமாகும் என்பது கருதத்தகும்.

## 14. ஒழுக்கமுடைமை

ஒழுக்கமுடைமையாவது 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' (குறள். 140) ஆகும். அதாவது உலகத்தொடு பொருந்த நடத்தல்—உயர்ந்தோர் பலரும் ஒழுகிய நெறிப்படியே நடத்தல்—என்பதாகும். தத்தம் வருணத்திற்கும் தாம் மேற்கொண்டுள்ள இல்லறம் துறவறம் முதலிய நிலைகளுக்கும் ஏற்ற ஒழுக்கம் உடையராதல் எனப் பரிமே லழகரும் இவ்வதிகாரப் பெயருக்கு விளக்கம் தருகின்றனர். "தத்தம் குலமரபுக்குத் தக்க ஒழுக்கத்தினால் ஒழுகுதலே சிறந்தது" என்று கருத்துரைக்கின்றார் காளிங்கர். இவ்வதிகாரத்தில், 'ஒழுக்க முடைமை குடிமை' (3) என்றும், 'பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்' (4) என்றும் குலப்பிறப்புப்பற்றிக் காணப்படுவது கொண்டே மேற்குறித்த உரையாசிரியன்மார் 'வருணத்திற்கும்'

என்றும், 'குலத்திற்கும்' என்றும் எடுத்துக்காட்டுவாராயினர். மணக்குடவர் இல்லறநிலை மட்டும் சுட்டப் பரிமேலழகரோ பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் நிலைகளும் அடங்கும் வகையில், பொதுவாகத் 'தத்தம் நிலைக்கும்' என்று எடுத்துக்காட்டுவாராயினர். குல ஒழுக்கம், நிலையொழுக்கம்போன்ற சமுதாய ஒழுக்கமும் இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது.

*உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்* (குறள் 140)

எனவரும் இறுதிப்பாடலிலே சமுதாயத்தில்—உலகத்தில்—உயர்ந்தார் பலருடைய ஒழுக்கத்தொடு ஒத்து நடத்தல் வேண்டும் என்பது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'ஒழுக்கம் விழுப்பம் தரும்' (குறள் 131) என்றும், 'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' (குறள் 137) என்றும் எடுத்துக்காட்டி அவ்வொழுக்கத்தை 'உயிரினும் மேலாக மதித்துப் போற்ற வேண்டும்' (குறள் 131) என்றும் அறிவுறுத்துகின்றார். இங்ஙனமாக ஒழுக்கத்தின் சிறப்பை முதலில் எடுத்தோதி (1, 2), ஒழுக்கத்தினால் வரும் உயர்வும் ஒழுக்கமின்மையால் வரும் தாழ்வும் தொடர்ந்து கூறிவந்து (3-8), இறுதியில் உள்ள பாடல் இரண்டிலும் (9-10) சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கங்களைத் தொகுத்துக் கூறியுள்ளார்.

'ஒழுக்கமுடைமை குடிமை' எனத் தொடங்கும் மூன்றாவது குறளில் இவ்வதிகாரத்தின் பெயர் அப்படியே அமைந்து வருதல் காணலாம். பிற பாடல்களில், 'ஒழுக்கம்' என்பதும் (1-2, 4-9), 'ஒழுகல்' என்பதும் (10) வந்துள்ளன. ஒழுக்கத் தவறுதலை 'இழுக்கம்' (6-7) என்னும் சொல்லால் குறித்துள்ளார். அன்றியும், நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்னும் பாகுபாடும் எட்டாம் குறளில் வகுத்துரைக்கப்படுகிறது.

மன மொழி மெய்களில் தூயனாய் இனியவை கூறியும், செய்ந்நன்றியை நினைந்தும், நடுவு நிலைமையில் நின்று செயலாற்றியும் முக்கரணங்களாலும் அடக்கத்தை மேற்கொண்டு வாழ்பவன் உலகத்தாரொடு ஒத்து நடத்தல்வேண்டும் என அவனுடைய வாழ்வுக்கு நன்னெறி காட்டும் வகையிலே ஒழுக்கமுடைமையை எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர். மெய் முதலியன அடங்கினார்க்கல்லது 'ஒழுக்கமுடைமை கைகூடிவாராது என்று காட்ட அடக்கமுடைமையை அடுத்து ஒழுக்கமுடைமையை வைத்தார் எனப்

பரிமேலழகரின் விளக்கம் உணர்த்துகின்றது. இல்லறத்தார் மேற்கொண்டு ஒழுகவேண்டும் நெறிகள் எல்லாவற்றினும் மேன்மையான யுடைத்து நல்லொழுக்கமுடையனாய் வாழ்தல் என்பது இவ் வதிகாரத்துள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

## *15. பிறனில் விழையாமை*

அன்புடைமை முதற்கொண்டு ஒழுக்கமுடைமை ஈறாக ஏழு அதிகாரத்தால் இல்வாழ்வார் கடைப்பிடிக்கவேண்டிய அறங்களைக் கூறிவந்த வள்ளுவர், இந்த அதிகாரம் முதலாகத் தீவினையச்சம் வரையில் உள்ள ஏழு அதிகாரங்களில், தவிரத்தக்கவை இவை இவை என வகுத்துரைக்கின்றார்.

'இல்வாழ்க்கை' என்பதில் 'இல்' என்பது இல்லாளைச் சுட்டியது போல, 'பிறனில்' என்பதும் பிறனுடைய மனைவியைக் குறிக்கிறது. *காம மயக்கத்தால் பிறனுடைய மனையாளது* தோள் நலம் விரும்பாமை என்பதே இவ்வதிகாரப் பெயரின் பொருள்.

இல்லற ஒழுக்கம் பற்றிப் பேசிவருகின்ற வள்ளுவப் பெருந்தகை இல்லறத்தார்களிடையே எளிதில் நேரத்தக்கதான ஒழுக்கக்கேடு பிறனில் விழைதல் என்று கருதிக் கடியத் தகுந்தவற்றுள் அதனையே முதலில் வைக்கிறார். தவிரவும், "இஃது (பிறனில் விழையாமை) ஒழுக்கமுடையார்மாட்டே நிகழ்வது" என்று கருதி ஆசிரியர் திருவள்ளுவர் ஒழுக்கமுடைமையை அடுத்து இவ்வதிகாரத்தை வைத்தனர் என்று எழுதுகிறார் உரையாசிரியர் பரிமேலழகர்.

பொருட்பாலில் இருமனப்பெண்டிராம் வேசையரைச் சார்ந்து ஒழுகும் ஒழுக்கத்தைக் கடிந்துரைக்கின்றார். இங்கே இல்லறப் பகுதியில் 'பிறனில் விழைதல்' தகாது என்று விலக்குகின்றார். ஒருவனுக்குத் தன் செல்வச் செருக்கினாலோ, அப்பொருளைத் தேடிச் செல்லும் நிலையிலோ பொருளையே விரும்பும் பரத்தையரின் ஒழுக்கம் வாய்த்தல்கூடும் என்பது ஆசிரியர் கருத்தாகலாம். அதே நோக்கில் காம இச்சை காரணமாக இல்வாழ்க்கையில் வாழ்வாரிடையே பிறனில் விழைதலாம் தீயொழுக்கம் பற்றுதலும் நேரலாம் என்று கருதி, ஒழுக்கமுடையராயிருத்தல் வேண்டும் என்று பேசியவர், ஒழுக்கக் கேடுகளில் முதலில் பற்றக்கூடிய கேடு இது வெனக் கொண்டு *பிறனில் விழையாமையே* பேரறம் என்று பேசுகின்றார்.

பிறன் ஒருவனுக்குப் பொருள் போல உரிமையுடையராயிருக்கும் மனையாளை விரும்புவது அறியாமையே யாகும். இந்த அறியாமை அறநூல் பொருள்நூல்களை ஆராய்ந்து அறிந்தவர்களிடம் உண்டாகாது. இவ்வாறு இதமாக,

*பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து*
*அறம்பொருள் கண்டார்கண் இல்* (குறள் 141)

என்று கூறியவர், இறுதிப் பாடலில்,

*அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்*
*பெண்மை நயவாமை நன்று* (குறள் 150)

என்று எத்தகைய பாவம் செய்தாலும் பிறர் மனைவியை விரும்பாமையே சிறந்தது என்பதால், பிறர்மனை நயத்தல் பெரும்பாவம் என்று எடுத்துரைக்கின்றார்.

இவ்வதிகாரப் பெயரில் வரும் 'பிறனில்' என்பது 4 ஆம் பாட்டிலும், விழையாமை என்னும் பொருள் தரும் 'நயவாமை' என்பது 10 ஆம் பாட்டிலும் வந்துள்ளன. பிறனில் என்னும் பொருள் தரும் 'பிறர்மனை' என்பதனை 8 ஆம் பாடலில் காணலாம். ஏனைய பாடல்களில் பிறன் மனைவி என்பதை வெவ்வேறு தொடர்களால்—'பிறன்பொருளாள்' (1), 'பிறற்குரியாள்' (9), 'பிறன் வரையாள்' (10), 'பிறனியலாள்' (7), 'தெளிந்தாரில்' (3), 'இல் இறப்பான்' (5, 6), 'பிறன்கடை நின்றார்' (2) என்றெல்லாம்—எடுத்து மொழிகின்றார்.

இல்லறத்தார்க்குப் 'பிறனில் விழைதல்' தீது எனக் காமம் பற்றி நிகழும் தீமையை எடுத்துரைத்தது போலவே துறவறத்தார்க்கும் காமம்வாயிலாக வரும் 'கூடா ஒழுக்கம்' (அதி. 28) ஆகாது என்று துறவற இயலில் கடிந்துரைக்கின்றார் வள்ளுவர். மனம் பொறிவழி போகாது அடக்கும்பொருட்டு உண்டி சுருக்கல் முதலியவற்றால் தம் உயிருக்கு வரும் துன்பம் பொறுத்தும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமலும் அருள்வழி ஒழுகும் பற்றற்ற தவத்தினர்க்குத் தாம் விட்ட காம இன்பத்தை வலி இல்லாமல் மீண்டும் விரும்புதல் தகாது எனத் 'தவம்' என்னும் அதிகாரத்தை அடுத்துக் 'கூடா ஒழுக்கம்' என்னும் அதிகாரத்தில் கடிந்து உரைக்கின்றார் ஆசிரியர் திருவள்ளுவர். தவத்தினர்க்குக் 'கூடா ஒழுக்கம்' ஆகாமைபோல இல்லறத்தார்க்கும் 'பிறனில் விழைதல்' ஆகாது என்று வள்ளுவர் அறிவுறுத்தும் பாங்கு நுண்ணிதின் நோக்கி உணரத்தக்கது.

## *16. பொறையுடைமை*

தனக்குப் பிறர் செய்யத்தகாத கொடியவற்றைச் செய்த போதிலும், அவர் செய்த தீவினையால் அவர்க்கு வரும் துன்பத்திற்கு நோவதோடு, தாமும் அத்தகைய அறனல்லாதவற்றை அவர்க்கு எதிராகச் செய்யாமல் இருத்தலே நன்று என இவ்வதிகாரத்துள் வரும் ஏழாம் பாடலின் (குறள் 157) பொருளுரையே பொறையுடைமைக்கும் இலக்கணமாம். பரிமேலழகர், (பொறையுடைமையாவது) "காரணம் பற்றியாதல் மடமையானாதல் ஒருவன் தனக்கு மிகை செய்தவழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தலை யுடையராதல்" என்பர்.

பிறனில் விழைதல் பெரும்பாவம் என்று சென்ற அதிகாரத்தின் இறுதியில் உரைத்த வள்ளுவர், பெரும் பிழை செய்தாரையும் பொறுத்தலே அறம் என்று அடுத்துப் பொறையுடைமையின் மேன்மையை எடுத்து மொழிகின்றார். நெறி கடந்து தீங்கு செய் தாரையும் பொறுக்க வேண்டும் என்றும், செல்வம் முதலியவற்றின் செருக்கினால் தீயன செய்வாரையும் ஒருவன் தன்னுடைய பொறுமைக் குணத்தால் வென்றுவிட வேண்டும் என்றும் இவ்வதி காரத்தில் வற்புறுத்துகின்றார்.

பொறுமையைச் சிதைப்பது சினம். சென்ற அதிகாரத்தில் காமம்பற்றி வரும் தீங்கு தவிரக்கூறியவர் இங்கு கோபத்தால் வரும் தீங்குகளைத் தவிர்க்கும் உபாயம் அறிவிக்கின்றார்.

> *காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்*
> *நாமம் கெடக்கெடும் நோய்* (குறள் 360)

என மெய்யுணர்தலைக் கூறும்போது தவிரத்தக்க முக்குற்றம் போக்குதல் வேண்டும் என்று காட்டுவது இங்குக் கவனிக்கத் தகும். பிறனில் விழைதல் காமத்தால் வரும் தீங்கு. வெகுளியால் வரும் பொறுமையின்மையால் நேரும் தீங்குகளையும் அடுத்து விலக்கு வாராய் 'பொறையுடைமை' பேசுகிறார் வள்ளுவர்.

சான்றாண்மைக்கு அழகு பொறையுடைமையே எனக்கூறும்,

> *நிறையுடைமை நீங்காது வேண்டின் பொறையுடைமை*
> *போற்றி ஒழுகப் படும்* (குறள் 154)

என்னும் 4ஆம் பாடலில் 'பொறையுடைமை' என்னும் இவ்வதி காரப் பெயர் அமைந்துள்ளது. மற்றும், 'பொறை' (3), 'பொறுத்தல்'

(1, 2) என்னும் சொற்களும் வந்துள்ளன. 'தகுதி' என்பதை ஒரு பாடலில் (8) பொறுமை என்னும் பொருளில் வழங்கியுள்ளார். 'பொறுத்தார்' என்று இரு பாடல்களிலும் (5,6) இதே பொருளுடைய 'நோற்கிற்பவர்' (9) 'நோற்பார்' (10) என்பனவற்றை வேறு இரண்டு பாடல்களிலும் குறிப்பிட்டுள்ளார்.

ஒறுத்தார், பொறுத்தார் இருவர்தம் நிலைமையையும் 5,6 ஆம் குறள்களில் ஒருசேர வைத்து, இவ்விருவரும் எதிரெதிரான நிலையை உலகில் பெறுதலை எடுத்துக்காட்டி, நல்வழியில் நாட்டம் கொள்ளத் தூண்டியுள்ளார்.

'இன்னா செய்யாமை' (அதி. 32) என்பது குறித்துத் துறவற இயலில் கூறும் வள்ளுவர் இவ்வதிகாரத்தில் 'இன்னா சொல்லுதல்' பற்றி நினைவூட்டுகிறார். பிறர் கூறும் இன்னாச் சொற்களுக்கு எதிரே வெகுண்டு எழாது பொறுக்கும் பண்பாளரைத் துறவியரினும் தூய்மையுடைய பெரியார் என்று போற்றியுள்ளார் (குறள் 159,160).

சான்றாண்மை குறித்துத் தனி அதிகாரம் (அதி. 99) வகுத்துள்ள வள்ளுவர் சான்றாண்மையுடையார்க்குப் பொறையுடைமை வேண்டும் என இங்கு எடுத்துக்காட்டுகின்றார் (குறள் 154). சான்றோர் சான்றாண்மையில் குறைந்தால் நிலமும் பொறை தாங்காது (குறள் 990) என்று பின்னர் எடுத்துக் காட்டுவார், இங்கே அகழ் வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் வேண்டும் என்கிறார் (151). இங்ஙனமாகப் பொறையுடைமையில் சான்றாண்மைக் குணங்களும் பேசப்பட்டிருத்தல் நோக்கத்தகும்.

## *17. அழுக்காறாமை*

அழுக்காறாமையாவது பிறரிடமுள்ள ஆக்கம் முதலியன கண்டு பொறாமையால் மனம் மாறுபடாமையாகும். பிறருடைய ஆக்கம் பொறாமையாகிய அழுக்காறு என்பது அதனைச் செய்யாமை என்னும் பொருளில் எதிர்மறை ஆகாரமும் மை விகுதியும் பெற்று 'அழுக்காறாமை' என வந்துள்ளது.

பொறையுடைமைக்கு மாறுபட்ட ஒழுக்கமாகிய பொறாமையை விலக்கும்பொருட்டு இவ்வதிகாரம் பொறையுடைமையின் பின் வைக்கப்பட்டது என்பர் பரிமேலழகர்.

பொதுவறம் குறித்துத் தொகுத்துரைக்கும் பாயிரப் பகுதியிலே அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில்,

*அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்* (குறள் 35)

என்று அறத்திற்குச் சேராமல் நீக்கத்தக்க குணங்கள் இவை என்று எடுத்துரைக்கின்றார் வள்ளுவர்.

பிறராக்கம் பொறாமையும், புலன்வழிச் செல்லும் அவாவும் இவை ஏதுவாகப் பிறரைக் குறித்துத் தோன்றும் வெகுளியும், அவ் வெகுளியால் வரும் கடுஞ்சொற்களும் ஆகியவை ஒன்றினின்று ஒன்றாகப் பெருகி வளரும் தீமைகளாகும். இவற்றுள் முதலாவதாகிய அழுக்காற்றைப் போக்கவேண்டும் என்பதனை எடுத்துரைக்கிறது இவ்வதிகாரம்.

'அழுக்காறாமை' என்னும் இவ்வதிகாரப் பெயரின் கருத்து 'அழுக்காற்றின் அன்மை பெறின்' (குறள் 2) என இரண்டாம் குறளில் வரும் தொடரில் அமைந்துள்ளது. ஏனையவற்றில் 'அழுக்காறு (1, 4, 5, 7, 8, 10) என்னும் சொல்வழக்காறும், இதே பொருள் தரும் 'அவ்வியம்,' 'அவ்வித்து' என்பனவும் (9,7) வந்துள்ளன. பொதுவாகப் பொறாமையின் கேடும் பொறாமையுடையானின் அழிவும் பற்றியே கூறி, இப் பொறாமை தீது என்றும் கடியத்தக்கது என்றும் குறிப்பால் உணரவைக்கின்றார் வள்ளுவப் பெருந்தகை.

## *18.* வெஃகாமை

"வெஃகாமையாவது பிறர்பொருளை விரும்பாமை" (மணக்.) என்பதாம். "பிறர்க்கு உரிய பொருளை வௌவக் கருதாமை" என்பர் பரிமேலழகர்; வௌவுதலாவது அபகரித்துத் தனதாக்கிக் கொள்ளுதல்.

பிறருடைய ஆக்கம் கண்டு பொறாமைப்படுதலோடு அதனைத் தான் அபகரித்துக் கொள்ளக் கருதுதலும் குற்றமே என்பதனை அறிவுறுத்தும்பொருட்டே அழுக்காறாமையின்பின் இவ் வெஃகாமை அதிகாரம் வைக்கப்பட்டது என்பர்.

அழுக்காறாமை என்னும் மனத்தூய்மையால் பிறர் ஆக்கம் கண்டு இன்புறும் பெரியோர்க்கே தமக்கு நியாயமாக வரு

பொருளன்றிப் பிறர் பொருளை விரும்பாமையும் உளதாம். இதனால் அழுக்காறாமையை அடுத்து 'வெஃகாமை' அதிகாரம் வைக்கப் பட்டது என்று காளிங்கர் கருத்து உரைக்கின்றார்.

இவ்வதிகாரப் பெயர் 'வெஃகாமை வேண்டும்' என 8ஆம் குறளில் இடம்பெற்றுள்ளது. 'வெஃகுதல் செய்யார்' (4) 'வெஃகா அறிவுடையார்' என வெஃகாமை ஒழுக்கமுடையார் குறிப்பிடப் பட்டுள்ளனர். 'வெஃகி' (2, 3, 5, 6, 7), 'வெஃகின்' (1,10) எனும் எச்சச் சொற்கள் ஏனைய குறள்களில் இடம்பெற்றுள்ளன.

இங்கே இல்லறத்தார்க்கு 'வெஃகாமை வேண்டும்' என அறிவுரை கூறும் வள்ளுவர், துறவறத்தார்க்கும் பொருள்பற்றிய ஆசையால் பிறருடைய பொருளை வஞ்சித்தல் ஆகாது எனக் 'கள்ளாமை' என்னும் அதிகாரத்தில் (அதி. 29) கடிந்துரைக்கின்றார்.

துறவற இயலில் வேண்டாமையாகிய 'அவாவறுத்தல்பற்றி' ஓரதிகாரமே (அதி. 37) வகுத்துள்ளார். இங்கோ, இல்லறத் தாருக்கும் பிறன்கைப் பொருளை விரும்பாமை வேண்டும் என்று அறிவுரை தருகின்றார் (குறள் 178).

> *இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்*
> *வேண்டாமை என்னும் செருக்கு* (குறள் 181.)

என வேண்டாமை என்னும் செல்வம் வெற்றியைக் கொடுக்கும் என எடுத்துக்காட்டுகின்றார்.

### *19. புறங்கூறாமை*

காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்து பேசாமையே 'புறங்கூறாமை' ஆம். மனம் மொழி மெய்களால் நேரும் குற்றங்களுள் மொழிக்குற்ற மானது மனக்குற்றம் காரணமாக உளதாகும். எனவே, மனக் குற்றம்பற்றிப்பேசிய அழுக்காறாமை, வெஃகாமை அதிகாரங்களை அடுத்துச் சொற்குற்றமாகிய புறங்கூறுதலைத் தவிர்க்க வேண்டும் எனக் கூறும் இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வதிகாரப் பாடல்களில் பயின்றுவரும் 'புறங்கூறான்' (1), 'புறங்கூறி' (3), 'புறஞ்சொல்லும் புன்மை' (5), 'புறன் நோக்கிப் புன்சொல் உரைப்பான்' (9) எனவரும் தொடர்கள் அதிகாரப் பெயருடன் மிகவும் நெருக்கமாக உள்ளன. 'புறனழீஇப் பொய்த்து

நகுதல்' (2), 'பிறன்பழி கூறுவான்' (6), 'துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்' (8), 'பகச்சொல்லுதல்' (7), 'முன் இன்று பின் நோக்காச் சொல்' (4) என்பன புறங்கூற்றின் தன்மையையும் புறங்கூறுவார் தன்மையையும் உணர்த்துகின்றன.

வாய்மை அதிகாரத்துள் ஆசிரியர் பொய்யாமைபற்றி உரைத்துள்ளமைபோல, இப் புறங்கூறாமை அதிகாரத்துள் 'பொய்ம்மை வாழ்வு' பற்றிச் சுட்டியுள்ளார். 'பொய்த்து நகுதலும்' (2), 'பொய்த்து உயிர் வாழ்தலும்' (3) அறனன்று என்று விலக்குகின்றார்.

பிறர் மகிழுமாறு இன்சொற்கூறி நட்பாடுதல் பற்றியும் (7), நெருங்கிய நட்பாளர் குற்றத்தையும் புறம்பழித்துரைப்பார் இயல் குறித்தும் (8) கூறப்பெற்ற குறள்களும் நட்புப்பற்றிய நிலை...யை எடுத்துரைக்கின்றன, எனவே, பொருட்பாலில் நட்பு அதிகாரத்துள் வரும் பாடல்களை இவை நினைவூட்டுகின்றன.

## 20. *பயனில சொல்லாமை*

"பயனில சொல்லாமையாவது கேட்டார்க்கும் தனக்கும் நற்பயன்படாத சொற்களைக் கூறாமை" என்பது மணக்குடவர் தரும் விளக்கம். பரிமேலழகரோ நற்பயன் என்பதனை மேலும் விளக்கிக் கூறுவார்போன்று, "தமக்கும் பிறர்க்கும் அறம்பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை" என்று உரைக்கின்றார்.

சென்ற அதிகாரமாகிய புறங்கூறுதல் போல இதுவும் சொல்லிடத்து உளதாகும் குற்றமாதலால் அதனை அடுத்து வருதல் பொருத்தமுடைத்தாம்.

வாக்கின்கண் நிகழும் குற்றம் நான்கு என்பர். அவையாவன பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என்பனவாம்.

*பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்*
*சொல்எனச் சொல்லில் தோன்றுவ நான்கும்*

(மணி. 24:127-128; 30:68-69

எனவரும் மணிமேகலை அடிகளால் இது விளங்கும். இந் நான்கனுள் "பொய் துறந்தார்க்கு அல்லது ஒருதலையாகக் கடியலாகாமையி[illegible]
[illegible]து ஒழிக்க[illegible] ஏனை மூன்[illegible]

கடுஞ்சொல் இனியவை கூறலானும், குறளை புறங்கூருமையானும் விலக்கி, நின்ற பயனில் சொல் இதனுல் விலக்குகின்ருராதலின், இது புறங்கூருமையின்பின் வைக்கப்பட்டது'' எனவரும் பரிமேலழகரின் விளக்கம் அதிகார முறைவைப்பினை நன்கு விளக்குவதாயுள்ளது.

'பயனில சொல்லாமை நன்று' என்னும் இவ்வதிகாரத்தின் ஏழாவது பாடலில் அதிகாரப் பெயர் அப்படியே ஆளப்பட்டுள்ளது. மற்றும், 'பயனில் சொல்' (6), 'பயனிலாச் சொல்' (10), 'பயனில' (1,2,3,5) என்றும், இவற்றிற்கு விளக்கம் போன்று 'பயன் சாராப் பண்பு இல் சொல்' (4), 'பெரும்பயன் இல்லாத சொல்' (8) 'பொருள் தீர்ந்த சொல்' (9) என்னும் தொடர்களையும் பாடல்களில் ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

இத் தீயொழுக்கம் யாவர்க்கும் பொதுவாயினும் சான்ருேர்களிடம் இது அறவே அணுகுதல் கூடாது என்று சான்ருேர்களை இவ்வதிகாரத்துள் எடுத்து மொழிகின்ருர் (7). மற்றும் இவர்களை 'நீர்மையுடையார்' (5), 'அரும் பயன் ஆயும் அறிவினுர்' (8), 'மருள் தீர்ந்த மாசறு காட்சியவர்' (9) என்று அவர்தம் பண்பு நலம் சுட்டிப்பேசுகின்ருர்.

சான்ருண்மை அதிகாரத்தும் (அதி. 99),

> *கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை*
> *சொல்லா நலத்தது சால்பு* (குறள் 984)

எனத் தீமை சொல்லா நலம் சான்ருேர்க்குக் கூறப்பட்டுள்ளது. 'தீமை எவை' என்னும் வினவுக்குரிய விடைகளுள் ஒன்ருகப் 'பயனில சொல்'லும் ஒன்ரும் என்பது இவ்வதிகாரத்தால் புலனுகிறது.

## 21. தீவினையச்சம்

பாவச் செயல்களைச் செய்வதற்கு அஞ்சுதல் பற்றி எடுத்துரைக்கிறது இவ்வதிகாரம். இங்கே செயலுக்குக் கருவியாக அமையும் மெய்[illegible]னிடமாக நிகழும் பாவங்கள் எல்லாம் தொகுத்து விலக்குகின்ருர். சொல்லில் நிகழும் பாவமாகிய 'பயனில் சொல்லுதலை' [illegible]க்கியதை அடுத்துத் தீச் செயல்களை விலக்கியுரைக்கும் [illegible]ரம் வருதல் [illegible]

காளிங்கர் இவ்வதிகார வைப்பு முறையின் காரணத்தை விளக்கமாக எடுத்துரைத்துள்ளார். அவருடைய விளக்கம் பின் வருமாறு :

> *"இனி, யாவனொருவன், யாதானுமொன்றினை முயலுமிடத்து மனம் மொழி மெய் என்ற மூன்றும் முதற்காரணமாகக் கொண்டு, மனத்தினால் ஒன்றைக் கருதுதலும், வாக்கினால் ஒன்றை உரைத்தலும், காயத்தால் ஒன்றைச் செய்தலுமாய் அன்றே நிகழ்த்துவது; அவற்றுள் அடக்கமுடைமை வெஃகாமை எனப் பலவாறான மனக்கருத்தின் அறத்தியல்பு உணர்த்தி, பின்பு புறங்கூறாமை, இனியவை கூறல் எனப் பலவற்றால் வாய்மொழியின் அறத்தியல்பு உணர்த்தி, மற்று இனி தீவினையச்சம் ஒப்புரவறிதல் ஈகை புகழ் என்பனவற்றால் காயச்செய்தியின் அறத்தியல்பு உணர்த்துவான் எடுத்துக் கொண்டார். அவற்றுள் முன்னர் தீவினைக் குற்றம் அறிவிக்கின்றது."*

காளிங்கர் தரும் இவ்விளக்கத்தால் இவ்வதிகாரம் முதற் கொண்டு 'புகழ்' என்னும் அதிகாரம்வரை செயல்முறைபற்றிய அறம் ஆசிரியரால் விளக்கப்படுகிறது என்பது தெரியவரும். இவை ஒன்றனை அடுத்து ஒன்று அமைந்ததற்குரிய காரணத்தையும் இதனால் அவர் பெறவைத்தவராகின்றார்.

'தீவினையச்சம்' என்னும் இவ்வதிகாரப் பெயர்த் தொடர் அப்படியே இவ்வதிகாரப் பாடல்களில் இடம்பெறாவிடினும், 'தீவினை' என்பது மூன்று பாடல்களிலும் (1, 9, 10), 'அச்சம்' என்னும் பொருள்தரும் வினைவடிவங்களாகிய 'அஞ்சார்' (1), 'அஞ்சுவர்' (1), 'அஞ்சப்படும்' (2) என்பன முதல் இரு பாடல்களிலும் வந்துள்ளன. மற்றும் தீவினை என்பதைத் 'தீயவை' (2, 5, 8), 'தீய' (3), 'தீப்பால' (6) எனவும் குறித்துள்ளார். 'பிறன் கேடு சூழற்க' (4), 'வினைப்பகை வீயாது பின்சென்றடும்' (7) என வேறு வகையாகவும் தீவினையின் கொடுமை கூறித் 'தவிர்க' என அறிவுரை வழங்கியுள்ளார் வள்ளுவர்.

தமக்குத் தீமை செய்வார்க்கும் தாம் தீமை செய்யாது ஒழிதல் அறிவுகள் எல்லாவற்றுள்ளும் தலையாய அறிவு என்று சொல்லுவர் என 203 ஆம் பாடலில் வருகிறது. அறிவுபற்றிப் பேசும் இக் குறள் அறிவுடைமை என்னும் பொருட்பால் அதிகாரத் திற்கும் (43) ஏற்புடையதாம். இக் கருத்தை ஒப்பவே,

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு (குறள் 987)

எனச் சான்றாண்மை (அதி. 99) அதிகாரத்துள் வரும் பாடலும் இங்கு ஒப்பு நோக்கத் தகும்.

தீவினையாரைக் கூ ுவந்தவிடத்தில் விழுமியாருடைய நிலைமையை ஒப்பிட்டுக்காட்டி (குறள் 201) அறமுரைக்கும் இயைபும் காணலாம். இவ்விருவருடைய போக்கையும் முதலில் கூறிப் பின்னர்த் தீவினையின் கொடிய விளைவுகளையும் தீவினையாளர்க்கு வரும் கேடுகளையும் எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

வினைப்பகை நீங்காமல் நிழல் உள்ளடிகளில் அடங்கினாற் போலத் தொடர்ந்து சென்று வருத்தும் என்னும் கருத்து 207, 208 ஆம் பாடல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே 'வினைப் பகை' என்று இருபெயரொட்டுப் பண்புத்தொகையாய் உருவக வாய்பாட்டால் கூறுகிறார்.

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். (குறள் 674)

வினைசெயல்வகை என்ற இடத்தில் செய்வதாகிய வினையும் ஒழிவதாகிய பகையும் குறையின்றி முடிக்காவிடின், தீயின் குறை போன்று பெருகிக் கெடுக்கும் என்கிறார். இங்கே வினைபகை என்பது உம்மைத்தொடர். செய்வதாகிய வினைபற்றிக் கூறியது போலவே வள்ளுவரும் ஒழிக்க வேண்டுவதாகிய வினைப்பகையும் வளர்ந்து பெருகிக்கொல்லும் என்று காட்டுதல் சிந்தித்தற்குரியது. செய்வதாயினும் சரி, ஒழிப்பதாயினும் சரி, குறைவின்றி முற்ற முடியச் செய்தல் வேண்டும் என்பது இவற்றால் அறியத்தகும்.

## 22. ஒப்புரவு அறிதல்

ஒப்புரவு அறிதலாவது உபகாரியாம் தன்மையைப் பெறுதலாகும். யாவர்க்கும் வரையாது கொடுக்கும் ஆற்றல் ஒருவர்க்கு இல்லாதிருந்தாலும் தம் அளவிற்கும் தம் வருவாய்க்கும் ஏற்பத் தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தல் வேண்டும் என்பது கருத்தாகும்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள் 212)

என இவ்வதிகாரத்துள் வரும் குறளால் இது தெளிவாகும்.

பரிமேலழகர் ஒப்புரவாவது "உலக நடையினை அறிந்து செய்தல். உலகநடை வேதநடை போல அறநூல்களுள் கூறப் படுவதன்றித் தாமே அறிந்து செய்யும் தன்மைத்து ஆகலின் ஒப்புர வறிதல் என்றார்" என்று இவ்வதிகாரப் பெயர்க்கு விளக்கம் தந்துள்ளார்.

ஒழுக்கமுடைமை அதிகாரத்து, 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் வேண்டும்' (குறள் 140) என்றனர் வள்ளுவர். இதற்கு விளக்க வுரையாகப் பரிமேலழகர், "உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல். அறநூல் சொல் லியவற்றுள் இக் காலத்திற்கு ஏலாதன ஒழிந்து சொல்லாதவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான் உலகத்தோடு ஒட்ட என்றும் கூறினார்" என்பர். இவ்வுலக நடைக்கு விளக்கம் உரைக்கும்—பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது போலக் காணப்படுகிறது 'ஒப்புர வறிதல்' அதிகாரம்.

மன மொழி மெய்களால் செய்யத் தகுவன 'அன்புடைமை' முதல் 'ஒழுக்கமுடைமை' வரை ஏழதிகாரத்தால் கூறி, அதன் பின்னர் முக்கரணங்களாலும் தவிரத்தகுவன 'பிறனில் விழை யாமை' முதல் 'தீவினையச்சம்' வரையில் ஏழதிகாரத்தால் உணர்த்தப்பெற்றது. இதன்பின் செய்யத் தகுவனவற்றுள் எஞ்சி நின்றன கூறப்பட்டுள்ளன. ஆதலால், தீவினையச்சத்தை அடுத்து ஒப்புரவறிதல் வைக்கப்பட்டுள்ளது. இஃது பரிமேலழகரின் உரை யைத் தழுவிய விளக்கமாகும்.

"மேல் மனமொழி மெய்களால் தவிரத் தகுவன கூறினார். இனி செய்யத் தகுவனவற்றுள் எஞ்சிநின்றன கூறுகின்றாராகலின் தீவினையச்சத்தின்பின் வைக்கப்பட்டது" என்பது பரிமேலழகரின் உரைவாக்கியம் (ஒப்புரவறிதல் - தோற்றுவாய்).

இல்வாழ்க்கையின் நோக்கமே பிறர்க்கு உபகாரம் செய்வது தான்.

*இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு* (குறள் 81)

என இல்வாழ்க்கையின் குறிக்கோள் பேசப்பட்டுள்ளது. இல்லறத் தார் செய்வன தவிர்வன கூறிவந்த வள்ளுவர் இறுதியில் இல்வாழ்க் கையின் குறிக்கோளாகிய பிறர்க்கு உபகாரம் செய்தலைப் பேசி

இவ்வியலை நிறைவுறச் செய்கின்ற நோக்கில்தான் 'ஒப்புரவறிதல்' பற்றி விளக்க முற்படுகின்றார் என்று கொள்வது பொருத்தமாகும். இக் கருத்து இவ்வதிகாரத்துள் வரும்,

*தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு* (குறள் 212)

என வரும் பாடலாலும் விளக்கமுறும்.

அன்றியும், இதுவரை தனி மனிதன் ஒவ்வொருவனுக்கும் இன்றியமையாத தனி அறங்களைப் பேசி வந்த வள்ளுவர் இவ் வதிகாரம் தொடங்கி உலகினர் எல்லார்க்கும் ஒப்பவுரிய பொது வறம் உணர்த்துகிறார் என்றும் கொள்ளலாம்.

'ஒப்புரவறிதல்' என்னும் இவ்வதிகாரப் பெயரை விளக்குவார் போல 'ஒத்தது அறிவான்' என 4ஆம் பாடலில் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். 'ஒப்புரவு' என்பது 3, 8, 10ஆம் பாடல் களிலும், மற்றும் இப் பொருளில் 'கடப்பாடு' (1), 'வேளாண்மை' (2), நயன் (6, 9) என்பனவும் வந்துள்ளன. ஒப்புரவாளன் என்னும் கருத்தில் 'ஒத்தது அறிவான்' (4), 'உலகவாம் பேரறிவாளன்' (5), 'நயனுடையான்' (6, 9), 'பெருந்தகையான்' (7) 'கடனறி காட்சி யவர்' (8) என்னும் அடைமொழிப் பெயர்களையும் ஆக்கியளித் துள்ளார்.

'கடப்பாட்டாளனுடைய பொருள்' (குறள் 217 : பரி. உரை) எல்லார்க்கும் பயன்படுவதால், அவனிடம் அப் பொருள் தேக்க முற்றிருப்பதில்லை. அவன் பொருள் தேடத்தேட அதனை உலகிற்கு உபகாரமாகச் செய்துவிடுவான். இக் கருத்தை,

*நல்லிசை வேட்ட நயனுடைய நெஞ்சின்*
*கடப்பாட் டாள னுடைப் பொருள் போலத்*
*தங்குதற் குரிய தன்றுநின்*
*அங்கலுழ் மேனி பாய பசப்பே* (குறுந். 143 : 4-7)

என மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உவமையாக எடுத் தாண்டுள்ள இச் சங்கப் பாடற்பகுதியால் தெளிவுற உணரலாகும்.

## 23. ஈகை

"ஈகையாவது இல்லெ‌ன இரந்துவந்தார் யாவர்க்கும் வரை யாது கொடுத்தல்" என்கிறார் மணக்குடவர். பரிமேலழகரோ,

"வறியராய் ஏற்ருர்க்கு மாற்ருது கொடுத்தல்" என்கிருர். இவருடைய விளக்கம் வள்ளுவர் இவ்வதிகாரத்தின் தொடக்கக் குறளில் கூறும் 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை' என்னும் விளக்கத்தை அடியொற்றியுள்ளது. ஈகை ஒழிந்த பிற கொடைகள் எல்லாம் ஒரு பயனை எதிர்நோக்கிக் கொடுப்பனவாகும். பயன் எதிர் நோக்குதலை வள்ளுவர் 'குறியெதிர்ப்பை' (குறள் 221) என்கிருர். "குறியெதிர்ப்பையாவது அளவு குறித்து வாங்கி அவ் வாங்கியவாறே எதிர்கொடுப்பது" ஆகும் (குறள் 221, பரி. உரை).

'கொள்ளுதல் தீது கொடுப்பது நன்று' என்று இவ்வதிகாரத்து அறிவுறுத்தப்படுகிறது. ஒப்புரவோ இம்மைப் பயனும் குறி யெதிர்ப்புக் கருதிய கொடையாகும். ஈகையோ இம்மைப் பயனை எதிர்பாராது கொடுத்தலாகும். ஆகவே, இம்மைப் பயனைக் கருதிய ஒப்புரவின் பின் ஈகையறம் அறிவுறுத்தப்படுகிறது. "இது மறுமை நோக்கியது ஆகலின் இம்மை நோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது" என்று ஏதுகாட்டி விளக்குகிருர் பரிமேலழகர் (அதி. 23. ஈகை-தோற்றுவாய்).

எவ்வகைப் பயனையும் எதிர்பாராது ஈதலே சிறந்ததாம் என்பர் ஆன்ருேர்.

*இம்மைச் செய்தது மறுமைக் காம்எனும்*
*அறவிலை வாணிகன் ஆயலன் பிறரும்*
*சான்ருேர் சென்ற நெறியென*
*ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே* (புறம். 134)

என ஆய்வள்ளலின் கொடைச் சிறப்பைக் குறித்துப் புறநானூற்றுப் பாடல் கூறுவது இங்குக் கவனிக்கத் தக்கது. இக் கருத்து,

*நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்*
*இல்லெனினும் ஈதலே நன்று* (குறள் 222)

என்னும் வள்ளுவர் குறளிலும் அமைந்துள்ளமை காணலாம்.

'ஈகை' என்பதனேடு (1), 'ஈதல்' (2, 10) என்பதனையும் இவ்வதிகாரப் பாடல்களில் வழங்கியுள்ளார். 'ஈத்துவக்கும் இன்பம்' (8) என ஒரு பாடலில் ஈகையால் வரும் இன்பம் குறிக்கப்பட் டுள்ளது.

ஈகையைக் கூறவந்த இடத்தில் அந்த ஈகையைப் பெற வருவாரின் 'இரத்தல்' (9), அவருக்காக 'இரக்கப்படுதல்' (4)

பற்றியும் பேசப்பட்டுள்ளன. இரப்பாரின் நிலையை விளக்கும் வகையில், 'நல்குரவு' (அதி. 105), 'இரவு' (அதி. 106), 'இரவச்சம்' (அதி. 107) எனப் பொருட்பாலில் மூன்று அதிகாரங்களில் வறுமை யாளரின் நிலைமையை வள்ளுவர் விளக்கிக் காட்டியுள்ளார். அங்கும் இரவு அதிகாரத்தில், 'இரத்தலும் ஈதலே போலும்' (குறள் 1054), 'ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம்' (குறள் 1059) என முறையே 'ஈதல்' ஈவார் பற்றிப் பேசப்படுதலும் கவனிக்கத்தக்கது.

இவ்வதிகாரத்தில் முக்கியமாகப் பசிப்பிணிபற்றிக் குறிப்பிடப் படுதலும் நோக்கத்தகும் (குறள் 225, 226, 267). பசித்தோர்க்குப் பகுத்துக்கொடுத்து உண்ணுதல் பேரறம் என்பது எடுத்துக்காட்டப் பட்டுள்ளது (குறள் 227). இதனைப் பின்னர்,

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை* (குறள் 322)

எனக் கொல்லாமை அதிகாரத்தும் பசித்த உயிர்களுக்குப் பகுத்துக் கொடுத்துத் தாமும் உண்டு பிறவுயிர்களையும் புரத்தல் வேண்டும் எனக் காட்டுதலும் இந்த அதிகாரத்திற்கு ஒத்ததாகும்.

## 24. புகழ்

புகழாவது புகழுண்டாக இவ்வுலகில் வாழ்தலாகும். இல் வாழ்க்கை முதல் ஈகை ஈறுகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாது ஒழுகுவார்க்கு இம்மைப் பயனாய் இவ்வுலகில் நிலைத்து நிற்பது கீர்த்தி ஒன்றே.

"இது பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின் அதன்பின் வைக்கப்பட்டது" என அதிகார வைப்புக் காரணம் கூறுகிறார் பரிமேலழகர். ஆசிரியர் திருவள்ளுவரும் முந்திய அதிகாரப் பொருளை அனுவதித்துக் கூறுவாராய்,

*சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்*
*ஈதல் இயையாக் கடை* (குறள் 230)

என்னும் முந்திய அதிகாரத்தின் இறுதிப் பாடலில் வரும் 'ஈதல்' என்பதையே இவ்வதிகாரத்தின் முதற்பாடலின் முதற்சொல்லாய்க் கொண்டு,

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள் 231)

என்கிறார். இம் முதற்குறளிலும் 'ஈக', 'புகழுண்டாக வாழ்க' எனக் கூறியமை அதனோடு இவ்வதிகாரத்திற்குள்ள தொடர்பை நன்கு தெரிவிக்கின்றது.

இவ்வதிகாரப் பாடல்களில் ஆசிரியர் திருவள்ளுவர் 'புகழ்' என்னும் அதிகாரப் பெயரையும் (2, 3, 4, 6, 7), இதே பொருள் தரும் மற்றொரு சொல்லாகிய 'இசை' என்பதனையும் (1, 8, 9, 10) எடுத்தாண்டுள்ளார். இவற்றின் எதிரான பொருள் பயக்கும் 'இகழ்' (7), 'வசை' (9, 10) என்பனவும் ஒப்புவகையான் உடன் பேசப்பட்டுள்ளன.

புகழ் வாழ்க்கைக்கு உரிய வித்தகரின் மேன்மைகள் 234, 235ஆம் குறள்களில் போற்றி உரைக்கப்பட்டுள்ளன.

## 4. துறவறவியல்

நீத்தார்பெருமை அறன்வலியுறுத்தல் எனப் பாயிரத்துள் துறவறம் இல்லறம்பற்றிப் பொதுவாக இரு அதிகாரம் அமைத்துத் தொடர்ந்து 'இல்வாழ்க்கை' முதல் 'புகழ்' ஈறாக இருபது அதிகாரத்தால் இல்லற இயல்புகளை வள்ளுவர் விளக்கிவந்தனர். இனி, இத் துறவற இயலின் முதல் அதிகாரமாகிய 'அருளுடைமை' தொடங்கி 'மெய்யுணர்தல்' ஈறாகப் பதின்மூன்று அதிகாரங்களால் துறவறம்பற்றிய விளக்கம் தருகிறார்.

துறவறமாவது முற்கூறிய இல்லறத்தில் ஒருவன் வழுவாது ஒழுகி, அறிவுடையராய்ப் பிறவித்துன்பத்திற்கு அஞ்சி, வீடு பேற்றினை அடையும்பொருட்டுப் பற்றுவிட்ட துறந்தவர்களுக்குரிய அறமாகும். இப் பதின்மூன்று அதிகாரங்களையும் 'விரதம்', 'ஞானம்' என இரு கூறுபடுத்திக் காட்டுகின்றார் பரிமேலழகர்.

விரதமாவது வினைக்குற்றம் நீங்கி அந்தக்கரணங்கள் தூய வாதலின்பொருட்டு அத் துறவோரால் காக்கப்படுவது. "இன்னின்ன அறம் செய்வேன், இன்னின்ன பாவங்கள் ஒழிவேன்" என்று தத்தம் ஆற்றலுக்குத் தக்கபடி வரையறுத்துக்கொண்டு செயலாற்றும் நிலையே விரதநிலை. அற்றுள் சிறப்புடைய சிலவற்றையே ஆசிரியர் இப் பகுதியில் வகுத்துரைக்கின்றார்.

'அருளுடைமை' முதல் 'கொல்லாமை' வரை ஒன்பது அதிகாரங்கள் இவ்வகை விரதம்பற்றியன. விரதங்களால் கருவி கரணங்கள் தூய்மையுற்ற காலத்துத் தோன்றுவது ஞானமாம். நிலையாமை, துறவு, அவாவறுத்தல், மெய்யுணர்தல் என்னும் நான்கு அதிகாரங்களும் ஞானநிலை உரைப்பனவாம்.

பரிமேலழகர் விரதம், ஞானம் எனத் துறவறப் பகுதி அதிகாரங்களை வகைப்படுத்தி ஓதியதுபோலவே பரிப்பெருமாளும் துறவறப் பகுதி அதிகாரங்களின் முறைவைப்புக்குச் சிற்சில ஏதுக்களை எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வுரைகாரர் வானப்பிரத்தம் சந்நியாசம் எனத் தவவொழுக்கம் இரண்டு வகைப்படும் என்கிறார். முதலில் உள்ள அருளுடைமை வானப்பிரத்தம் பற்றியது என்றும், ஏனையவை துறவு நிலைபற்றியவை என்றும் இவர் கொள்கின்றார்.

அருளுடைமையும் புலால்மறுத்தலும் தவமும் ஓரோர் அதிகாரத்தால் உணர்த்தப்படுகின்றன. முதலன இரண்டும் இல்வாழ்வார்க்கும் ஏற்றதாதலால் இல்லறத்தின் பின்னாகத் தவத்திற்கு முன்னாக இவை வைக்கப்பட்டன என்பது இவ்வுரைகாரர் கருத்து.

*காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்*
*நாமம் கெடக்கெடும் நோய்* (குறள் 360)

என வள்ளுவர் மெய்யுணர்தலில் கூறிய பாடலின் கருத்து முற்றும் ஏனைய அதிகாரங்களில் அடக்கிக் கூறப்படுகின்றனவாம்.

தவத்தை அடுத்துக் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றத்திலும் காமப்பகுதியாயின தவிர்தல் மூன்று அதிகாரத்தானும் (கூடா ஒழுக்கம், கள்ளாமை, வாய்மை), வெகுளிப் பகுதியாயின தவிர்தல் மூன்று அதிகாரத்தானும் (வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை), மயக்கம் தவிர்தல் ஓர் அதிகாரத்தானும் (நிலையாமை) கூறப்பட்டுள்ளன. ஏனைய மூன்று அதிகாரங்களும் (துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல்) மயக்கம் நீங்கி அறிவுத் தெளிவுபெற்ற ஞானநிலையாளரின் ஒழுக்கம் உணர்த்துவதாகும் என்பதையும் இவ்வுரைகாரர் குறிப்பால் பெறவைத்துள்ளார்.[4]

## 25. அருளுடைமை

அருளுடைமையாவது தொடர்பு கருதாது இயல்பாக எல்லா உயிர்களிடத்தும் செல்வதாகிய கருணை. இது தன்னுயிர் போலப் பிறவுயிர்க்கும் இரங்கும் பண்பாகும். 'அருள் என்னும் அன்பீன்

குழ்வி' (குறள் 757) என்பதனுல் வள்ளுவர் அன்பின் முதிர்ச்சியே அருள் என்பதை நமக்கு உணர்த்துகிருர். தொடர்புடையார்மாட்டு வைக்கும் விருப்பமாகிய அன்பு, தொடர்பு கருதாது எல்லா உயிர்களிடத்தும் செலுத்தும்போது, அருள் என்னும் பெயரைப் பெறுகிறது. 'அருள்கருதி அன்புடைய ராதல்' (குறள் 285) என அவர் வேருெரு குறளில் கூறும் கருத்தும் இவ்வடிப்படையைக் கருதிக் கூறியமையேயாகும்.

இல்லறத்திற்கு அன்புடைமை போலத் துறவறத்திற்கு இவ் வருளுடைமை சிறந்தமையால் முதலில் கூறப்பட்டது என்று கருத் துரைக்கிருர் பரிமேலழகர். 'மன்னுயிர் ஓம்பி அருளாள்வான்' (4) என இவ்வதிகாரத்து வள்ளுவர் கூறுவதனுல், எல்லா உயிர்களையும் ஓம்புதல்தான் அருளுடைமைக்கு உரிய இலக்கணம் என்பது தெளிவாம். இல்லறத்தார்க்கு உரிய கடமைகள் வரையறைக்குட் பட்டிருத்தல் போலன்றி இத் துறவோர் கடமை 'உலகிலுள்ள அனைத் துயிர்க்கும் ஆற்றும் பணி'யாக விரிந்து பரந்து செல்கிறது. 'நல்லாற்ருல் நாடி அருளாள்க' என (242) அருளுடைமையைப் போற்றுமாறு உரைத்ததோடு அருளுடையார்க்கு உளதாம் நன்மையும் (3, 4, 5), அருளில்லார்க்கு உளதாம் தீமையும் (6, 7, 8, 9) எடுத்துக் காட்டியுள்ளார். முதற் குறளில் அருட்செல்வம் போற்றுக என்று தொடங்கியவர் இறுதிக் குறளில் அருள் பிறத்தற்குரிய நிலைக்களத் தையும் எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வதிகாரத்தில் உள்ள இறுதிக் குறளைத் தவிர ஏனையவற்றில் எல்லாம் 'அருள்' என்னும் சொல் பயின்று வருவதும் நோக்கத்தகும்.

அருளுடைமை அதிகாரத்தின் முறைவைப்புக் குறித்து உரை காரர் காளிங்கர் தரும் கருத்துரை பின்வருமாறு:

> *"இது மற்று இவ் இல்லறத்தின் பின்னரே துறவறம் அறிவிப் பான் எடுத்துக்கொண்டார். அஃதாவது மேல் வருகின்ற துற வறத்திற் கெல்லாம் முதற்காரணம் ஒருவன் தன் நெஞ்சத்து அருளுடைமையாகலான். அனைத்துயிர்க்கும் ஒப்ப நிகழ்வ தாகிய அருளில்வழி மற்றவர் செய்யுந் தவம் வஞ்சனையுடைத் தாய் அஞ்சத்தக்க தாகலானும், துறவறம் பூண்பார்க்கு நிறையருள் வேண்டும் என்பதனுலும், அதனை அறிவிக்கின்றது அருளுடைமை என்னும் அதிகாரம்."*

துறவிற்கு முதற்காரணமாய் அமைவது அருள்; இது அனைத் துயிர்க்கும் ஒப்ப நிகழ்வது. இவ் அருளில்லார் செய்யும் தவம்

வஞ்சனையுடையது; அஞ்சத்தக்கது. துறவறம் பூண்பார்க்கு நிறைவான அருள் அமையவேண்டும். இதனை அறிவிக்கும் பொருட்டாகவே அருளுடைமை துறவுபற்றிய பகுதியில் முதலிலே வைக்கப்பட்டுள்ளது என்பது இவருடைய கருத்து.

## *26. புலால் மறுத்தல்*

'புலால் மறுத்தல்' என்பது ஊனுணவு கொள்ளுதலைத் தவிர்தலாகும். ஊன் உண்டால் மீண்டும் கொலை செய்யவும் தின்னவும் ஆக இக் கொலைப்பாவம் காரணகாரியமாய்த் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். ஆகவே, கொலைப்பாவம் சேராதிருக்க ஊனுண்டலை ஒழித்தல் மிகமிக அவசியம் என்பது தெரியவரும்.

அருளுடையார் பிராணிகளைக் கொன்று ஊன் உண்ணார்; அருளில்லாதவரே கொன்று தின்பர். ஆதலால், அருளுடைமையை அடுத்துப் புலால் மறுத்தல் வைக்கப்பட்டுள்ளது. முன்னைய அதிகாரத்தொடு இந்த அதிகாரப் பொருளுக்குரிய தொடர்பைப் புலப்படுத்துவார் போல,

*தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூன் உண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்* (குறள் 251)

என வள்ளுவர் இவ்வதிகாரத்தின் முதற் குறளில் வினவுவது கொண்டும் நாம் உணரலாகும். 'எங்ஙனம் ஆளும் அருள்' என்பது அருளைக் கொண்டு செலுத்தல் கூடாது என்பது கருத்தாகும். எனவே, அருளுக்கு முதன்முதல் வேண்டுவது பிறிதோருயிரின் உடம்பைத் தின்னாமையேயாம்.

'புலால் மறுத்தல்' என்னும் இவ்வதிகாரப் பெயர் 'புலாலை மறுத்தானை' என இறுதிக் குறளில் வரும் தொடரில் பொதிந்துள்ளது. 'உண்ணாமை வேண்டும் புலாஅல்' (7), 'ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை' (9) எனவரும் பாடல் தொடர்கள் முற்கூறியதற்கு விளக்கம் போன்று உள்ளன. 'ஊனுண்பான்' (1), 'ஊன்தின்பவர்' (2), 'உடல்சுவை யுண்டார்' (3) என்று புலால் உண்பாரைக் குறிப்பிட்டு அச் செயல் தவிர்க்கப்படவேண்டும் என்பதனை அறிவுறுத்துகின்றார்.

இவ்வதிகாரத்தின் முதல் இரண்டு பாடல்களிலும், 'அருள்' 'அருளாட்சி' (251, 252) என்று பேசப்படுவன முன்னைய அதிகாரத்

தோடு தொடர்புடைய செய்தியாகும். இதனைத் தொடர்ந்து 3,4ஆம் குறள்களும் அருள்பற்றியே அமைந்துள்ளன.

ஊன் உண்ணுதல் காரணமாகக் 'கொல்லுதலு'ம், ஊன் விற்பதும் உளவாகின்றன என்று இதனோடு இயைபுபட்ட நிகழ்ச்சி களும் இவ்வதிகாரத்துள் கூறப்பட்டுள்ளன. 'கோறல்', 'கொல் லாமை', 'கொல்லான் புலாலை மறுத்தல்' என்னும் இவைபற்றி 254, 260 ஆம் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. வேள்வி காரணமாகக் கொலை புரிதலை ஆசிரியர் திருவள்ளுவர் கடிந்துரைத் துள்ளார் (259).

அறிவுடையார் ஊன் உண்ணார் என அறிவுடையாரின் ஒழுக்க நிலையும் கூறப்பட்டுள்ளது (258). 'அறிவுடைமை' அதி காரத்து (அதி. 43) வள்ளுவரால் பேசப்படும் அறிவுடையாரினும் இங்கே காட்டிய அறிவுடையார் வேறுவர். 'செயிரின் தலைப்பிரிந்த காட்சியார்' (குறள் 258) என்பதனால் இங்கே வரும் அறிவுடையார் என்பது மயக்கவுணர்வு நீங்கிய துறவோரைஎனக் கொள்ள வேண்டும்.

## 27. தவம்

"தவமாவது ஊணும் உறக்கமும் குறைத்தலும் வெயிலும் பனியும் தாங்கலும் தேவர் வழிபாடு முதலாயினவும் கொண்டு முயறல்" என மணக்குடவர் தரும் விளக்கம் இவ்வதிகாரத்தின் பெயர்ப்பொருளைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கின்றது. இவ ருடைய கருத்தையே இன்னும் சற்று விரிவாக எடுத்து மொழி கின்றார் பரிமேலழகர்.

"மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயில்நிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர் களை ஓம்புதல்" என்பது பரிமேலழகரின் உரை.

இவ்வுரை வள்ளுவனார் இவ்வதிகாரத்தின் தொடக்கத்தில் கூறியுள்ள,

> *உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
> *அற்றே தவத்திற்கு உரு* (குறள் 261)

என்னும் பாடலைத் தழுவி எழுதப்பட்டதாகும்.

இவ்வதிகாரத்தின் முதல் ஐந்து பாடல்களில் 'தவம்' என்னும் சொல்லாட்சியோடு அவ்வொழுக்கத்தின் இயல்பும் மேன்மையும் எடுத்திசைக்கப்படுதல் காணலாம். தவம் செய்வாருடைய இயல்பினை ஆறும் பாடல் அறிவுறுத்துகிறது. தவஞ்செய்தலை 'நோற்றல்' என்றும் உரைப்பர். 'நோற்றல்' (9), 'நோற்பார்' (10), 'நோற்கிற்பவர்' (7) என்னும் சொற்களால் தவம் செய்வார் இயல்புகள் மூன்று பாடல்களில் தரப்பட்டுள்ளன (7, 9, 10). தவம் செய்வாரை ஏனைய உயிர்கள் எல்லாம் தொழும் என்பது எட்டாம் பாடலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இல்வாழ்க்கை அதிகாரத்தில் தவம் செய்வார் நிலையினும் இல்வாழ்வார் நிலை வலியுடைத்து என்று கூறியவர் (குறள் 46-49) இங்கே இல்வாழ்வார் தாம் செய்யும் தானத்தின்மேல் விருப்பமிகுதியால் தவம் மறந்தார்போலும் என்று கூறித் தானத்தினும் தவம் மிக்கது என்று பேசுகிறார். இதனால் இல்வாழ்க்கைக்குத் தானம் சிறந்தாற்போலத் துறவு வாழ்க்கைக்குத் தவம் சிறந்தது என்று எடுத்துக்காட்டுதலே ஆசிரியர் கருத்தாம் என்பது தெளிவு.

*தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்*
*வானம் வழங்கா தெனின்* (குறள் 19)

எனவரும் வான் சிறப்புப் பாடலாலும் இருவகை அறத்தார்க்கும் முறையே சிறந்ததான தானம், தவம் ஆகியவை எடுத்துக்காட்டப் படுதல் இங்கு ஒப்புநோக்கத் தகும்.

புலால் மறுத்து உயிர்களிடத்து அருள் பெருகிய காலத்துச் செய்யப்படுவது தவமாதலால், புலால் மறுத்தலை அடுத்துத் தவம் பற்றிய இவ்வதிகாரம் அமைதல் அமைவுடைத்தாகும்.

## *28.* கூடாவொழுக்கம்

'கூடாவொழுக்கம்' என்னும் தொடர்ப்பெயர் 'பொருந்தாத நடத்தை' என்னும் பொருள் தருவதாகும். இங்கே 'தவம்' என்பதனை அடுத்து இக் கூடாவொழுக்கம் வைக்கப்பெறுவதனால் மேற்கூறிய தவத்திற்குப் பொருந்தாத ஒழுக்கம் என்று பொருள் கொள்ள வேண்டும்.

"ஒருவன் ஒழுகுகின்ற தவநெறி ஒழுக்கம் தனது மனக் குறிப்பினால் கடைப்பிடிக்க வேண்டுமே யன்றிப் புறத்தே தவமுடையோன்

போல ஒழுகினல் அது தவநெறிக்குக் கூடாஒழுக்கமாம்'' என்று அதிகாரப் பெயரின் கருத்து விளக்கம் கூறுகிருர் காளிங்கர். புறத் தோற்றத்தால் தவமுடையோன் போலக் காட்டி உளத்துறவு கொள்ளாது தகாத ஒழுக்கமுடைய தவசிகளைக் குன்றிமணிக்கு ஒப்பிட்டுப் பேசுகிருர் வள்ளுவர் (குறள் 277).

காமம் தன்னை நலியவும் அது தன்பால் இல்லை என்று கூறி உலகோரை வஞ்சிக்கும் ஒழுக்கக் கேடனுகிய தவசியை, 'வஞ்ச மனத்தான்' என்றும், அவருடைய நடத்தையைப் 'படிற்றொழுக்கம்' என்றும் முதற்பாடலிலேயே எடுத்துக் கூறி, கூடா வொழுக்கத்தின் போக்கினை நமக்கு வள்ளுவர் அறிவிக்கின்ருர். மற்றும், 'நெஞ்சில் துறவார், துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வார்' என ஆரும் பாடலில் வரும் விளக்கம் கூடா-ஒழுக்கம் என்பதற்கு ஏற்ற தெளிவுரையாம்.

இல்லறத்தார்க்குப் பிறனில் விழைதல் பெரும்பாவமாதல் போலத் துறவறத்தார்க்கும் காம இச்சையால் மகளிரைப் பிறர் அறியாமல் கூடும் புறத்தொழுக்கம் ஆகாது என்று இந்த அதிகாரத் தால் வள்ளுவர் கடிந்துரைக்கின்ருர். ஆகவே, 'தவம்' என்பதனை அடுத்து அவவொழுக்கமாகிய கூடாவொழுக்கம் கடியப்படல் வேண்டும் என இவ்வதிகாரத்தால் கூறப்படுகிறது.

'கூடா-ஒழுக்கம்' என்னும் இவ்வதிகாரப் பெயர் இதில் வரும் பாடல்களுள் எதிலும் இடம் பெறவில்லை. இதன் பொருளை விளக்கு வது போல் அமைந்த 'படிற்றொழுக்கம்' (1, 5) என்பதனை இரு பாடல்களில் அமைத்துள்ளார். இதனை மேலும் எளிதில் விளங்கும் வகையில், 'துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வார்' (6), 'மறைந் தொழுகும் மாந்தர்' (8) என்று எடுத்துரைக்கின்ருர். தோற்றத்தால் இவர் உலகோரை வஞ்சித்தலை அழகிய எடுத்துக்காட்டுகள் தந்து பல பாடல்களில் தெளிவுற விளக்கிக் கூறுகின்ருர் (2,3,4,7,9,10).

தவத்தோர் சிலர் தம் தலைமயிரைச் சடையாக வளர்த்தும் வேறு சிலர் மொட்டையடித்தும், மற்றும் குன்றிமணிபோல் சிவந்த துவராடை பூண்டும், புனித நீராடியும், வேறு பல வேடங்களைத் தரித்தும் அந் நாளில் வாழ்ந்தனர் என்பதும் முறையே இவ் வதிகாரத்தால் புலப்படும் (280, 277, 278, 279, 272).

## 29. கள்ளாமை

கள்ளாமையாவது யாதொரு பொருளேயும் களவினுல் கொள்ளாமையாம். "பிறருடைமையாயிருப்பது யாதொரு பொருளேயும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை" என்பர் பரிமேலழகர். கள்ளுதல் என்பது கள்ளக் கருதுதல் என்று கொண்டு நினைத்தலும் செய்தலோடு ஒக்கும் ஆதலின், வஞ்சித்துக் கொள்ளவேண்டும் என்னும் கருத்தே ஆகாது என ஆசிரியர் இவ்வதிகாரத்துள் கடிந்துள்ளார் என்றும் அவர் விளக்கம் தந்துள்ளார். இவ்வாருக ஆசிரியர் வள்ளுவர் இது முதலாகக் கொல்லாமை வரை ஐந்து அதிகாரங்களால் எண்ணத்தாலும் துறவறத்தார் கொள்ளக் கூடாதவை எவை எவை என்பதனை எடுத்து மொழிகின்ருர் என்றும் இவ்வுரைகாரர் கருத்துரைக்கின்ருர். பரிமேலழகர் காட்டும் விளக்கம் வருமாறு :

> *"இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டு வகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனம் கொள்ளினும் அமையும். துறந்தார்க்காயின் அதனைக் கருதியவழியும் பெரியதோர் இழுக்காம். ஆகலின், இது துறவறமாயிற்று. புறத்துப் போகாது மடங்கி ஒருதலைப் பட்டு உயிரையே நோக்கற் பாலதாகிய அவர் மனம் அஃது ஒழிந்து புறத்தே போந்து பஃறலைப்பட்டு உடம்பின் பொருட்டுப் பொருளை நோக்குதலே யன்றி அது தன்னையும் வஞ்சித்துக்கொள்ளக் கருதுதல் அவருக்குப் பெரியதோர் இழுக்காதல் அறிக. இவ்வாறு வாய்மை முதல் கொல்லாமை ஈருகிய நான்கு அதிகாரத்திற்கும் ஒக்கும்."*

இங்ஙனமாக உள்ளத்தாலும் துறவறத்தார் கருதலாகாப் பாவங்கள் இவையிவை என வள்ளுவர் இவ்வதிகாரம் முதற் கொண்டு கொல்லாமை ஈருகக் கூறுகின்ருர் என இவ்வுரைகாரர் கருதும் கருத்துக்கு ஏற்ப நூலுள் வரும் பகுதிகளும் உள்ளன என்பது கவனிக்கத் தகும்.

> *உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்*
> *கள்ளத்தால் கள்வேம் எனல்.* (கள்ளாமை–282)

> *உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்*
> *உள்ளத்துள் எல்லாம் உளன்.* (வாய்மை–294)

> *உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்*
> *உள்ளான் வெகுளி எனின்.* (வெகுளாமை–319)

*எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்*
*மாணாசெய் யாமை தலை. (இன்னாசெய்யாமை–317)*

*நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்*
*கொல்லாமை சூழ்வான் தலை. (கொல்லாமை–325)*

இவ்வாறாக வள்ளுவர் இவையெல்லாம் உள்ளத்தால் நினைத்தலும் ஆகாது எனக் கடிந்துரைப்பது கொண்டே மேற்குறித்த பரிமேலழகரின் விளக்கம் பிறந்துள்ளது என்பது தெளிவாகும்.

இக் கள்ளாமை அதிகாரம் பொருள்பற்றி நிகழும் குற்றத்தை விலக்குகிறது. ஆகலான், இது காமம்பற்றி நிகழ்வதாகிய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டிருக்கிறது.

பிறர் பொருளை வெளவக் கருதுதல் குற்றமாம் என இல்லறவியலில் இல்வாழ்வார்க்கு அறிவுரை கூறிய வெஃகாமை என்பதனோடு இங்கு வரும் இக் கள்ளாமை அதிகாரம் பெரிதும் இயைபுடைத்தாய் உள்ளமை சிந்திக்கத் தகும்.

'கள்ளாமை காக்கத் தன் நெஞ்சு' என இவ்வதிகாரத்தின் முதற்பாடலில் அதிகாரப்பெயர் அமைந்துள்ளது. ஏனைய பாடல்களில் 'கள்' என்பதன் அடியாகத் தோன்றும் 'கள்வேம்' (2), 'கள்ளம்' (2), 'கள்வார்' (10), 'கள்ளார்' (10), 'களவு' (3,4, 6,7,8,9) என்னும் சொற்கள் இடம்பெறுகின்றன. ஐந்தாம் பாடலில் 'பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்' என்று களவு நெறியாளரின் போக்கினை வெளிப்படுத்தியுள்ளார். துறவோரை இவ்வதிகாரத்துப் பாடல்கள் 'அளவென்னும் ஆற்றல் புரிந்தார்' (7), 'அளவறிந்தார்' (8) என ஆசிரியர் குறிப்பிடுதலின் காரணமும் கவனிக்கத் தகும். துறவோர்க்கு உரிய அளத்தல் நெறியை ஆறும் பாடலின் உரையில் பரிமேலழகர் தெளிவுற நன்கு விளக்கியுள்ளார். அவர் தரும் விளக்கவுரை வருமாறு :

> *" உயிர் முதலியவற்றை அளத்தலாவது காட்சி முதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான் உயிர்ப்பொருளையும் அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக் குற்ற விளைவுகளையும், அவற்றான் அது நாற்கதியுள் பிறந்து இறந்து வருதலையும், அது செய்யாமல் அவற்றைக் கெடுத்தற்கு உபாயமாகிய யோகஞானங்களையும் அவற்றான் அஃது எய்தும் வீட்டினையும் அளந்து உள்ளவாறு அறிதல். இதனை ஆருகதர் 'தருமத் தியானம்' என்ப. அதற்கு ஏற்ப ஒழுகுதலாவது அவ்*

*வகைப் பட்டனவற்றுள் தீயவற்றின் நீங்கி நல்லனவற்றின் வழி நிற்றல்" (குறள் 286 பரி. உரை).*

'அருள் கருதி அன்புடைய ராதல்' (குறள் 285) என அருளின் உணர்ச்சியை எட்டுதற்கு அன்புடையராய் ஒழுகுதல் வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். அன்பே அருளாகிய சிகரத்தில் கொண்டு சேர்க்கும் வழி என்பதாம் என்னும் இஃது அருளுடைமை அதிகாரத்தொடு தொடர்புடையதாயுள்ளது.

## 30. வாய்மை

வாய்மையாவது பொய் சொல்லாமை. இது சொல்லால் வரும் குற்றங்களுள் ஒன்று. பெரும்பான்மையும் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாகிய பொய்ம்மையை விலக்குகிறது இவ்வதிகாரம். எனவே, காமமும் பொருளும் பற்றி உண்டாகும் கூடாவொழுக்கம், கள்ளாமை ஆகியவற்றின்பின் வாய்மை அதிகாரம் வைக்கப்படுவது பொருத்தமாகும்.

வாய்மையின் இலக்கணத்தை வள்ளுவப் பெருந்தகை இவ்வதிகாரத்தின் தொடக்கத்தே இரு பாடல்களால் தெள்ளத்தெளிய எடுத்துரைத்துள்ளார். வாய்மையாவது பிறிதோர் உயிர்க்குத்தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல் என்றும், பிறர்க்கு நன்மை விளைவிக்குமானுல் பொய்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களினிடத்தைப் பெறும் என்றும் விளக்கம் தருகின்றார்.

*வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்.* (குறள் 291)

*பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்* (குறள் 292)

என வருவன வாய்மைபற்றிய வள்ளுவருடைய எண்ணங்களின் வெளிப்பாடு. "இவை இரண்டு பாட்டாலும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும், நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை எனவும், நன்மை பயவாத நிகழாதது கூறலும், தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மை எனவும் அவற்றது இலக்கணம் கூறப்பட்டது" எனவரும் பரிமேலழகரின் தொகுப்புரை கொண்டும் மெய்ம்மை பொய்ம்மைகளின் தன்மையைத் தெளிவுற உணரலாகும்.

வாய்மை என்னும் இவ்வதிகாரப் பெயர் முதலிரு பாடல்களில் மட்டுமன்றி 5, 8, 10ஆம் பாடல்களிலும் வந்துள்ளது. இதனை

எதிர்மறை முகத்தால் 'பொய்யாமை' (6, 7) 'பொய்யா விளக்கு' (9) என்றும் எடுத்துக் கூறியுள்ளார். 'பொய்யற்க' (3), 'பொய்யா தொழுகின்' (4) என வருவனவும் இக் கருத்திறை் கூறப் பட்டனவே. வாய்மைப் பொருளைக் குறிக்கும் மற்றொரு சொல்லாகிய 'மெய்' என்பது பத்தாவது குறளில் ஆசிரியரால் எடுத்தாளப் பட்டுள்ளது. 'மெய்ப்பொருள்' (குறள் 249, 355, 356, 423), 'மெய்யுணர்வு' (354) எனவரும் இடங்களிலும் இம் மெய் என்பது 'உண்மை' என்னும் பொருள் தந்து நிற்பது காணலாம்.

'ஒழுக்கமும் வாய்மையும் நாணும்' (குறள் 952), 'அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை' (குறள் 983) எனப் பிற சீரிய குணங்களுடன் ஒன்றாக வைத்துப் போற்றப்பட்டதோடு அடை மொழியாகவும் 'வாய்மை வழியுரைப்பான்' (குறள் 688), 'வாய் மைக் குடிக்கு' (குறள் 953) என இவ் வாய்மை ஆசிரியரால் போற்றியுரைக்கப்பட்டுள்ளது.

## *31. வெகுளாமை*

கோபம் கொள்வதற்கு உரிய காரணம் உள்ள இடத்தும் சினவா திருத்தலே வெகுளாமையாம். பொய்ம்மை காரணமாக உண்டாகும் வெகுளியை விலக்குவதனால் 'வாய்மை' அதிகாரத்தை அடுத்து இயைபுடையதாக இவ் 'வெகுளாமை' வைக்கப்பட்டுள்ளது.

"வாக்கினால் பொய் சொல்லாதது போலவே மனத்தினால் குற்றமாகிய கோபத்தையும் விடுக" எனவரும் பரிதியார் உரைக் கூற்றால் முன்னது வாக்கினால் நிகழும் குற்றம் நீக்கக் கூறியது; இது மனக் குற்றம் நீக்கக் கூறியது என ஒன்றனோடு ஒன்றற்குள்ள இயைபும் உணரலாகும்.

'வெகுளாமை நன்று' என இவ்வதிகாரப் பெயர் ஒரு பாடலில் (8) அமைந்துள்ளது. 'மறத்தல் வெகுளியை யார்மாட்டும்' (3) என வேறொரு வகையாலும் இந்த அதிகாரத்தின் பெயர்ப் பொருள் உணர்த்தப்படுகிறது. மற்றும் கோபம் என்னும் பொருளில் 'வெகுளி' (3, 9) என்பது ஈரிடத்தும், பிற இடங்களில் 'சினம்' என்பதும் (1, 2, 4, 5, 6, 7, 10) பாடல்களில் பயன்படுத்தப் பட்டுள்ளன. சினத்தை ஆசிரியர் நெருப்பாக உருவகம் செய்து, 'சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி' (6) எனக் கூறும் தொடர்

சினத்தினுல் விளையும் கேட்டினைத் தெளிவாக எடுத்துக் கூறுவதா யுள்ளது.

### *32. இன்ஞ செய்யாமை*

ஒரு பயன் நோக்கியோ சோர்வாலோ ஓருயிர்க்கும் துன்பம் தருவனவற்றைச் செய்யாமையாம். இவ்வின்ஞ வெகுளி காரண மாகத் தன்னை மறந்து நிகழும் செயலாதலின், வெகுளாமையை அடுத்து இன்ஞ செய்யாமை அதிகாரம் வைக்கப்பட்டுள்ளது. நகையாகிய முகமலர்ச்சியையும் உவகையாகிய மனமகிழ்ச்சியையும் அழித்துவிடும் கோபமே (குறள் 304) பிறருக்கு இன்ஞ செய்யவும் தூண்டு கோலாகும் என்பது கருதத்தக்கது.

வாக்கு மனம் ஆகியவை பற்றிவரும் கெடுதல்களைக் கடிந் துரைக்கும் முந்திய இரு அதிகாரங்களையும் அடுத்துச் செயலால் நிகழும் பாவமாகிய இன்ஞ செய்தலை இது விலக்குவதனுல் முன்ன வற்றேடு இவ்வதிகாரம் வந்தமைக்குரிய காரணமும் புலனுகும்.

'இன்ஞ செய்யாமை' என ஆசிரியர் அமைத்துள்ள அதிகாரப் பெயர் முதலிரண்டு பாடல்களில் வந்துள்ளது. இப் பெயரின் கருத்தை விளக்குவதுபோல் உள்ளன 'மாஞ செய்யாமை' (7), 'நோய் செய்யார்' (10) எனப் பின்வரும் பாடல்களில் பயின்றுள்ள தொடர்கள். 'இன்ஞ செயல்' (8, 9), 'இன்ஞ செய்தார்' (4) குறித்தும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இங்கே துன்பம் என்னும் பொருளில் 'நோய்' என்பது எடுத்தாளப்பட்டுள்ளது போல (5, 10) இந்நூலுள் வேறு பல இடத்தும் இச்சொல் ஆளப்பட்டிருக்கின்றது (261, 359, 429, 442, 1160, 1162, 1174, 1200, 1226, 1241, 1243, 1266, 1303).

### *33. கொல்லாமை*

"கொல்லாமையாவது யாதோர் உயிரையும் கொல்லாமை" என்பது மணக்குடவர் விளக்கம். இதற்கு விரிவு காண்பார் போன்று பரிமேலழகர், "ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையன ஈருக உயிர்களைச் சோர்ந்தும் கொல்லுதலைச் செய்யாமை" என்று எழுதியுள்ளார்.

"பிறர்க்கு இன்னுங்கு செய்தலை அஞ்சுவார் கண்ணதே பிற உயிர்க்கு அழிவு செய்யாமை"யாகிய பண்பும் உளதாகும். என்பது

நோக்கி, இன்னா செய்யாமையை அடுத்துக் கொல்லாமை அதிகாரம் அமைக்கப்பட்டது என்பது காளிங்கரின் கருத்து.

மேலே சொல்லிய அறங்கள் எல்லாவற்றினும் சிறப்புடைத் தாய்க் கூறாத அறங்களையும் இது அடக்கிக் கொண்டிருத்தலால் தவத்தார்க்குக் கூறிவரும் விரதம் பற்றிய பகுதியில் இறுதியாக இவ்வதிகாரம் வைக்கப்பட்டது என்று பரிமேலழகரின் விளக்கம் அறிவிக்கின்றது.

"அருளுடைமை முதல் கொல்லாமை ஈறாகச் சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல்லப்படாத விரதங்களும் அடங்கும். அஃது அறிந்து அடக்கிக்கொள்க. ஈண்டு உரைப்பின் பெருகும்" என்று பரிமேலழகர் இவ்வதிகாரத்தின் இறுதிப்பாடலின் உரையில் முடிவுரையாக எழுதியுள்ளார். எனவே துறவோர்க்குரிய ஒழுக்கங்கள் எல்லாம் வள்ளுவர் வகுத்துரைத்துள்ள இவ்வதிகாரங்களுள் உள்ளன என்பது இவ்வுரைகாரர் கருத்தாகும் என்பது தெரியவரும்.

இல்லறவியலில் உள்ள 'ஒப்புரவறிதல்' போலத் துறவற வியலில் இக் கொல்லாமையும் பொதுமையான தொகுப்புரை அதிகாரமாக அமைந்துள்ளது என்னலாம்.

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை* (குறள் 322)

என்னும் பாடல் இவ்வதிகாரப் பொதுமைக்குத் தக்க சான்றாம்.

'கொல்லாமை' என்னும் ஆசிரியர் அமைத்த அதிகாரப் பெயர் செம்பாதியாக ஐந்து பாடல்களில் இடம் பெற்றுள்ளமை (1, 3, 4, 5, 6) கவனிக்கத்தக்கது. கொல்லுதலைப் 'பிறிது இன்னுயிர் நீக்கும் வினை' (7), 'உயிருடம்பின் நீக்கியார்' (10) என வருவனவற்றாலும், கொலைத் தொழில் புரிவோரைக் 'கொலை வினைய ராகிய மாக்கள்' (9) என்னும் தொடராலும் ஆசிரியர் குறித் துள்ளார்.

பொய்யாமையினும் கொல்லாமை நன்று என ஈரறத்தினும் கொல்லாமைக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்கிறார் வள்ளுவர் (குறள் 323).

### *34. நிலையாமை*

நிலையாமை, துறவு, மெய்யுணர்தல் அவாவறுத்தல் எனவரும நான்கு அதிகாரங்களும் மெய்ப்பொருள் உணர்வதற்கு உதவு வனவாம். இவையெல்லாம் ஞானம் பற்றியனவாம் என்பர் பரிமேலழகர். ஞானமாவது மயக்கத்தான் வரும் பொய்த்தோற்றங் களை அகற்றி உண்மையை ஓர்ந்து அறிதலாம்.

இவற்றுள் நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலைத் தல் இல்லை என்பதனை உணர்த்தலாம். "மயக்கத்தால் தான் என்று நினைத்திருக்கிற யாக்கையும் தனது என்று நினைத்திருக்கிற பொருளும் நிலை நில்லாமையைக் கூறுதல்" என்கிறார் மணக்குடவர். இது 'யான் எனது என்னும் செருக்கறுப்பான்' (குறள் 346) எனத் துறவியின் நிலைமைபற்றி வள்ளுவர் பின்னர் எடுத்துக்காட்டும் கருத்திலிருந்து பெறப்பட்ட பொருளாகும். இவ்வதிகாரத்துள் நில்லாத பொருள்களை ஒருசேர முதற்பாட்டில் கூறிப் பின்னர், செல்வம் நிலையாமையை இரு பாடல்களிலும் யாக்கை நிலையா மையை ஏழு பாடல்களிலுமாக வள்ளுவர் விளக்கியுரைக்கிறார்.

> *"இத் துறவோர்க்குக் கொல்லாமை என்னும் குறிக்கோள் உண்டாயிற்று உடம்பும் உயிரும் உடன்வாழும் நிலை அழிதல் அஞ்சியன்றே? இதனால் அது காரணமாகக் கொண்டு அனைத்து வகைப்பட்ட உடம்பும் உயிரும் வினைவழி வினைவழிப் பிறந்து வருகின்ற நிலைமையைத் தேர்தலும் அவரது நிலைக்கு உரித்து. ஆகலான் இதன் (கொல்லாமை) பின்னரே அதனை அறிவிக் கிறது மேலை அதிகாரம்."*

இவ்வாறு கொல்லாமை அதிகாரத்தை அடுத்து நிலையாமை அதிகாரம் வைக்கப்பட்டதற்குரிய காரணத்தைக் காளிங்கர் தம் உரையுள் விவரிக்கின்றார்.

சென்ற அதிகாரத்துள் வரும்,

> *நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்*
> *கொல்லாமை சூழ்வான் தலை* (குறள் 325)

என்னும் பாடல் துறவுநிலைக்கு ஒருவனை உந்துவது, 'நிலையச்சம்' என்பதனை எடுத்துக்காட்டுகிறது. இங்கே வரும் 'நிலை அஞ்சி நீத்தார்' என்பதற்கு, "பிறப்பு நின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப் பொருட்டு மனைவாழ்க்கையைத் துறந்தார்" என்பது பரிமேலழகரின் விளக்கம். "வினைவழி வருகின்ற பிறவித் தன்மையை அஞ்சிப்

பிறவாமைக்குக் காரணமாகிய தவநெறி இயற்றுவார்" என்கிறார் காளிங்கர். இங்கே இவ்விருவரும் பிறவிநிலை என்பது மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து வருகின்ற நிலையாமையைத்தான். இக் கருத்து, "யாக்கை நிலையாமை அறிந்து துறந்தார்" எனவரும் பரிதியார் உரையில் தெளிவாகத் தெரியவருகிறது. இதனால் நிலையாமை உணர்வும் அதன் காரணமாகத் துறவு உள்ளம் உண்டாதலும் கூடும் என்பது அறியலாம். பின்னர்த் தொடர்ந்து ஆசிரியர் அமைத்துள்ள 'நிலையாமை', 'துறவு' என்னும் அதிகாரங்களின் முறை வைப்பை முன்னறிவுறுத்தலாக உள்ளது இப் பாடல் என்றும் கொள்ளலாம்.

'நிலையாமை' என ஆசிரியர் தரும் இவ்வதிகாரப் பெயர் இவ்வதிகாரப் பாடல்களில் எங்கும் இடம் பெறவில்லை. 'நில்லாத வற்றை' என்றும் (1), 'அற்கா இயல்பிற்று செல்வம்' (3) என்றும் வரும் தொடர்கள் நிலையாமை என்னும் பொருளைத் தருவன. எனினும், பத்துப்பாடல்களிலும் நிலையாமைக் கருத்துகள் வெவ் வேறு வகையாக உவமை முதலியவற்றால் தெளிவாக விவரிக்கப் பட்டுள்ளன.

## *35.* துறவு

துறவு என்பது பற்றுள்ளத்தைத் துறத்தலாம். "புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் பற்றினை அவற்றது நிலையாமை நோக்கி விடுதல்" என விளக்கம் தருகிறார் பரிமேலழகர். இதனையே வள்ளுவர், 'யான் எனதென்னும் செருக்கு அறுப்பான்' என்று மொழிகின்றார்.

சிறிது சிறிதாகப் பற்றுகளை விட்டுப் பின் முற்றிலும் பற்றற்ற நிலை பெறுதல் வேண்டும் என்பது வள்ளுவரின் உள்ளம்.

*யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனின் இலன்* (குறள் 341)

என்றும், 'தலைப்பட்டார் தீரத் துறந்தார்' (குறள் 348) என்றும் இவ்வதிகாரத்துள் வருவன இதற்குச் சான்றும். பற்று அறாதவர் நிலையாமை வாழ்வில் சுழலுவர். இதனைத்தான்,

*பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்றும்*
*நிலையாமை காணப் படும்* (குறள் 369)

என்னும் பாடல் அறிவிக்கின்றது. நிலையாமையை உணர்ந்தாரே பற்றுள்ளத்தை நீத்தல் கூடும். எனவே, நிலையாமையை அடுத்துப் பற்று விடுதலாகிய துறவு அதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

"இவ்வுலகத்து உடலும் உயிரும் பொருளும் பிறவும் நிலையாமை தெரிந்த பெரியோர் இங்ஙனம் வருகின்ற பிறவியை அஞ்சித் துறவு இயற்றுவரன்றே, வீட்டின்பம் கருதி" என்று காளிங்கர் தமது உரையில் நிலையாமை உணர்ந்தார் துறவறம் புக முற்படுவர் எனக் கூறும் விளக்கமும் மேலையதிகாரத்தோடு இந்த அதிகாரத்திற்குள்ள இயைபினைப் புலப்படுத்தும்.

'துறக்க' (2), 'விடல்வேண்டும்' (3), 'பற்றுவிடற்கு' (10), 'பிறப்பு அறுக்கல் உற்றார்' (5) என இவ்வதிகாரத்தில் பற்றுகளை விட்டுப் பிறவிப் பிணியைப் போக்குதற்கு அறிவித்துள்ளார் ஆசிரியர். தவம் செய்தலை 'நோன்பு' (4) என்று கூறுகின்றார். துறவு நெறியாளரை நீத்தார் பெருமையுள் கூறியதுபோல 'துறந்தார்' (8) என்று குறிப்பிட்டுள்ளார்.

முற்கூறிய தவமும் (அதி. 27), இத் துறவும் (அதி. 35) பூண்ட பெரியோராம் துறந்தார் பெருமையைக் கூறுவது 'நீத்தார் பெருமை' (அதி. 3) என்னும் அதிகாரம். இந்த மூன்று அதிகாரங்களும் ஒன்றற்கொன்று நெருங்கிய தொடர்புடையன. துறவுநிலை குறித்துப் பொதுவாகப் பாயிரப் பகுதியுள் சொன்னதற்கு விளக்கமாக அத் துறந்தாரின் துறவு வாழ்க்கையும் தவநெறியும் இத் துறவற இயலில் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன என்பதும் உணரத்தகும்.

### *36. மெய்யுணர்தல்*

மெய்யுணர்தலாவது மெய்ப்பொருளை உள்ளவாறு உணர்தலாம். 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' (5) என இவ்வதிகாரத்துள் வருவதும் நோக்கத் தகும். எக்காலத்திலும் எவ்விடத்திலும் அழியாது நிற்கும் பொருள் இஃது என்னும் உணர்ச்சி துறந்தார்க்கு ஏற்படும் உள்ள நிகழ்ச்சியாகும்.

மெய்யுணர்தலாவது "பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களான் அன்றி உண்மையான் உணர்தல். இதனை வடநூலார் தத்துவ ஞானம் என்ப" என்கிறார் பரிமேலழகர்.

இம் மெய்யுணர்ச்சி இறைப்பற்றால் உளதாவது என்பதனை உணர்த்துவார்போன்று வள்ளுவர் சென்ற அதிகாரத்தின் இறுதிப் பாடலில்,

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு* (குறள் 350)

என்று கூறுகின்றார். பற்றுவிட்டநிலையில் மெய்யுணர்வு மேலோங்குதல் இயல்பு. ஆகவே, இவ் இரண்டிற்கும் உள்ள நெருங்கிய ஒற்றுமைபற்றித் துறவினை அடுத்து இம் மெய்யுணர்தல் வைக்கப் பட்டுள்ளது.

'மெய்யுணர்வு' என்னும் அதிகாரப் பெயர் 4ஆம் பாடலில் இடம்பெற்றுள்ளது. 'மருள் நீங்கி மாசறு காட்சியவர்' (2), 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்' (3), 'மெய்ப்பொருள் கண்டார்' (6) எனவரும் தொடர்களால் மெய்யுணர்ச்சியின் தன்மையை விளக்கி, அதனை உணர்ந்தார் பெறும் மேன்மையையும் அறிவித்துள்ளார். 'பிறப்பு என்னும் பேதைமை நீங்க'லே (8) இம் மெய்யுணர்தலின் பயன் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

## *37. அவாவறுத்தல்*

'அவா' என்பது பொருள்களின்மேல் செல்லும் பற்றுள்ளம் என்பர். அதாவது பொய்ப் பொருள்கள்மேல் செல்லும் ஆசையைத் தவிர்த்தலாம்.

முன்னும் பின்னும் வினைத்தொடர்பு அறுத்தார்க்கும் நடுவு நின்ற உடம்பும், அது கொண்ட வினைப்பயன்களும் நிற்கும். வேதனை காரணமாக ஒரோவழித் துறக்கப்பட்ட புலனுசை பழைய பயிற்சி காரணமாக எழவும் கூடும். அத்தகைய நினைவுகூடப் பிறவிக்குக் காரணமாகும் என மெய்ப்பொருள் உணர்வான் முற்றும் நீத்தல் வேண்டும் என்பது இங்கு அறிவுறுத்தப்படுகிறது. மெய்யுணர்வின் பயன் அவாவினின்றும் முற்றும் நீங்குதல் என்றும், அதுவே வீட்டின்பம் தரும் பெருநிலை என்றும் கூறப்படுவதனால் இது மெய்யுணர்வின்பின் வைக்கப்பட்டது.

இதுவே துறவறப் பகுதியின் இறுதியான அதிகாரம். இதன் இறுதிக் குறள்,

*ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும்* (குறள் 370)

எனப் பேராவியற்கையாம் வீடுபேறுதான் முற்றமுடிந்த பயன் என்பதனை அறிவித்தலோடு முடிகிறது.

பின்வரும் காளிங்கர் தரும் விளக்கமும் இங்குக் காணுதல் அமைவுடைத்து:

"இனிக் கீழ்ச் சொல்லிய காமம் முதலிய மூன்றினும் காமம் என்பது ஒன்றனை அவாவுதல் அன்றே. மற்று அஃது எய்தாக்கால் வரும் வெகுளியும், அதனது முதிர்ச்சிக்கண் தனது உள்ளம் மயங்கும் மயக்கமும் என்னும் இவை இரண்டும் பிறவும் நிகழ்வது ஒன்றனைக் காமித்தல் என்னும் அவாவினான் ஆதலால், கீழ்ச் சொன்ன மெய்யுணர்விற்குக் காரணம் ஆகிய விவேகம் என்னும் தெரிந்துணர்வினான் முன்னம் அனைத்திற்கும் காரணம் ஆகிய அவாவினை அறுக்கவே, மற்ற மெய்யுணர்வு என்னும் பேருணர்வு வந்து வெளிப்படும். ஆதலால், இவ்வுணர்வு இல்லோர்க்கும் இதனது நிகழ்ச்சிக்கு ஏதுவாக அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்."

'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்தில் வரும்

*காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்*
*நாமம் கெடக்கெடும் நோய்* (குறள் 360)

என்னும் இறுதிப்பாடல் அடுத்து வரும் அவாவறுத்தலுக்குரிய தோற்றுவாயாக உள்ளமையை இவ்வுரைகாரர் எடுத்துக்காட்டியுள்ளார்.

"துறவுள்ளம் பிறந்த பின்னர் எப்பொருட்கண்ணும் பற்றற்ற மிகுதிக்கு இக் குறளை நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டாகத் தருதலும் கவனிக்கத் தக்கது (தொல். பொருள். 77).

'அவாவினை ஆற்ற அறுப்பின்' எனத் தொடங்கப்பெறும் 7ஆம் குறள் ஒன்றில்தான் 'அவாவறுத்தல்' என்னும் அதிகாரப் பெயர்த் தொடரின் சொற்கள் இடம்பெற்றுள்ளன. வேறு பாடல்களில், 'அவாவின்மை' (4), 'அவா நீப்பின்' (10), 'வேண்டாமை' (2, 3) என்று இக் கருத்தை விளக்குகிறார். 'வேண்டாமை' என்னும் சொல் பயின்ற இருபாடல்களைத் தவிர (2, 3) ஏனைய எட்டுப் பாடல்களிலும் 'அவா' என்னும் சொல் பயின்றுளது. அவாவின் விளைவினைப் பற்றி 361, 366ஆம் பாடல்களும், அதனை விட்டுவிடுவதால் உளதாகும் பயன்பற்றிப் பிற பாடல்களும் அமைந்துள.

### 38. ஊழ்

"ஊழாவது முன்பு செய்த வினை பின்பு விளையும் முறை" என்பது மணக்குடவர் தரும் விளக்கம். பரிமேலழகரோ, ஊழ், பால், முறை, தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருள் தரும் சொற்கள் என்று இப் பொருள்தரும் பிற சொற்களையும் எடுத்துக் காட்டி, "அஃதாவது இருவினைப் பயன் செய்தவனையே சென்று அடைவதற்கு ஏதுவாகிய நியதி" என்று அதிகாரப் பெயர்ப் பொருளுக்கு விளக்கமும் தந்துள்ளார். இவர் இங்குச் சுட்டியதற் கேற்ப இவ்வதிகாரத்தில், 'ஊழ்' (1, 2), 'பால்' (6, 8), 'வகுத்தான்' (7) என்னும் சொற்கள் பாடல்களில் வருவது சிந்திக்கத்தக்கது.

"துறந்தார்க்கும் மற்றும் அல்லாதார்க்கும் முன் செய்து அமைந்த இருவினைகள் நீக்க முடியாமையாக இத்துன்பங்கள் அடர்ந்து நிகழ்ந்தனவே யாயினும் இதுபற்றித் தாம் மேற்கொண்ட நற்குண நிலைமைகளின் வழுவி நிற்கத் தகாது" என்று எடுத்துக் காட்டும்பொருட்டாக இல்லற துறவறப் பகுதிகளை அடுத்து இரண்டற்கும் பொதுவாக 'ஊழ்' அதிகாரம் இங்கு வைக்கப் படுகிறது என்பது உரைகாரர் காளிங்கரின் கருத்து.

"இது பொருள் இன்பங்கள் இரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற்கூறிய அறத்தோடு இயைபுடைமையானும் அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டது" என்பது பரிமேலழகரின் உரை வாக்கியம். இதனால் முப்பாலில் ஊழ் அதிகாரம் அறத்துப்பாலின் ஈற்றில் அமைந்ததற்கு அமைதி தரப்படுகிறது.

இவர்தம் கருத்து மணக்குடவர் கருத்தைத் தழுவியதாகும். மணக்குடவர்தான் இக்கருத்தைச் சற்று விளக்கமாக உரைத்தவ ராகிறார். மணக்குடவர் கூறும் அதிகார முறை வைப்புக் காரணம் பின் வருமாறு:

> *"மேற்கூறிய அறப் பகுதியும் இனிக் கூறுகின்ற பொருட் பகுதியும் இன்பப் பகுதியும் முன் செய்த நல்வினையால் வருதலையும், இவற்றிற்கு மாறான பாவமும் வறுமையும் துன்பமும் தீவினையால் வருதலையும் அறியாதே அவை உலகத்தில் மக்கள் பலர் தமது முயற்சியால் வந்தன*

*என்பரன்றே. அதற்காக இது கூறப்பட்டது. ஒருவன் செய்த வினை தனது பயனை வழுவின்றிப் பயத்தல் அறத்தினுகு மாதலான் இஃது அறத்தின் இறுதிக்கண் கூறப்பட்டது.''*

இவர் சுட்டிக் காட்டுகின்றபடியே ஆசிரியர் வள்ளுவர் ஆகூழ் போகூழ் பற்றியே முதலில் பேச ஆரம்பிக்கின்றார். இவற்றை 'ஆகலூழ்,' 'இழவூழ்' (2) என்றும் குறிப்பிடுவர். கல்வி, செல்வம் முதலியன எல்லாம் ஊழினால் ஒவ்வொருவருக்கு ஒரோசமயம் வாய்த்தல் கூடும் என்றும் வள்ளுவர் இவ்வதிகாரத்துள் சுட்டி யுள்ளார்.

## பொருட்பால்

### *1. அரசியல்*

### *39. இறைமாட்சி*

அரசனுக்குரிய மாட்சிமையைக் கூறுதல். மாட்சி என்பது நன்மை, பெருமை என்னும் பொருள் தருவதாம். அஃதாவது அரசனுக்குரிய நற்குண நற்செய்கைகளை விவரித்தலாம். 'மனை மாட்சி' (குறள் 60) என்றாற்போல உள்ளது இத்தொடர்மொழி. மனைமாட்சி என்பதற்கு ''மனையாளது நற்குண நற்செய்கைகள்'' என்று பரிமேலழகர் முன்னே கூறியதற்கு ஏற்பவே இங்கும் பொருள் கூறுகிறார்.

மணக்குடவர், ''இறைமாட்சியாவது இறைவனது உண்மை கூறுதல்'' என்றும், பரிதியார், ''இராச நீதியைச் சொல்லுதல்'' என்றும் விளக்கம் கூறுகிறார்கள். ஆகவே, இவ்வதிகாரம் அரசனது இயல்புகளையும் அவனது சிறப்புகளையும் தொகுத்துரைப்பது என்று கொள்ளலாம்.

இவ்வதிகாரத்திலே ஆசிரியர் தொடக்கமாகக் கூறும்,

*படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு* *(குறள் 381)*

எனவரும் முதற்பாடலும்,

*கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்*
*உடையானாம் வேந்தர்க் கொளி* *(குறள் 390)*

எனவரும் இறுதிப் பாடலும் இப் பொருட்பாலின் உள்ளடக்கமாக அமைந்துள்ளன. ஏனைய பாடல்களில் கூறப்படும் இயல்புகளாகிய,

‘அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம்’ (குறள் 382) ‘தூங்காமை, கல்வி, துணிவுடைமை’ (குறள் 383), ‘மறனிழுக்கா மானம்’ (குறள் 384), ‘இயற்றலும் ஈட்டலும் காத்தலும்’ (குறள் 385), ‘முறை செய்து காப்பாற்றும் மன்னவன்’ (குறள் 388) என்பன வெல்லாம் ஆசிரியர் வள்ளுவனாரால் தொடர்ந்து அரசியலில் விரித்துக் கூறப்பெறும் அதிகாரங்களின் கருப்பொருள்களாக உள்ளன. பலவகையாலும் கூர்ந்து நோக்கினேமாயின் இம்முதல் அதிகாரம் பொருட்பாலின் சட்டகமாகவும் அரசியலின் தொகுப்புரையாகவும் உள்ளது என்பது புலனும்.

இவ்வதிகாரப் பொருள் அரசரைக் குறித்தமையானும் அரசனே மக்களுள் சிறந்தவனுதலானும் ‘இறைமாட்சி’ என்னும் இவ்வதிகாரம் முதலில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும்,

*முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப் படும்* (குறள் 388)

எனவரும் இவ்வதிகாரப் பாடலில் அரசன் மக்கட்குக் கடவுள் என்று மதிக்கத் தக்கவன் என்று பாராட்டப்படுகிறுன். இங்கே ‘தலைவன்’ என்று கூறினுலும் அரசனின் முதன்மையையே காட்டும். பரிமேலழகர், “உலகபாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின் இறை என்ருர்; ‘திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்’ என்று பெரியாரும் பணித்தார்” என்று மன்னனே மாந்தர்க்குத் தெய்வம் என்னும் கருத்தை நன்கு விளக்கியுள்ளமையும் காணலாம். எவ்வாற்ருல் பார்ப்பினும் நாடு காக்கும் மன்னனே நாட்டிற்கு உயிர் நாடி. அவனது தலைமையும் சிறப்பும் கருதி ‘இறைமாட்சி’ பேசும் அதிகாரம் முதலில் அமைக்கப்படுவது பொருத்தமாகும்.

இவ்வதிகாரத்துள் ‘இறை’ என்பதும் (8), ‘மன்னன்’ (6), ‘வேந்தன்’ (9), ‘வேந்தர்’ (2, 10), ‘அரசர்’ (1), ‘அரசு’ (4, 5) என்னும் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ‘நிலனுள்பவன்’ (3) என அரசருடைய தொழிலைச் சுட்டியும் ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வரசர்க்கு இன்சொல்லும் ஈகையும் இன்றியமையாதன என்று 7ஆம் பாடலில் கூறியுள்ளதோடு கொடையும் அளியும் வேண்டும் என்று இறுதிப் பாடலிலும் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

இன்சொல் ஈகை பற்றிக் கூறும் இந்த 7-ஆம் பாடல் அறத்துப்பாலில் வரும் 'இனியவை கூறல்' (அதி. 10), 'ஈகை' (அதி. 23) என்னும் அதிகாரங்களுக்கும் ஏற்புடையது என்பது கவனிக்கத்தக்கது. இங்கே அரசனுக்கு ஆளும் உலகுபற்றி ஏற்புடைமை கூறினும் ஏனையோர்க்கு வாழும் உலகுபற்றி அவை வாய்ப்புடையனவே.

## *40.* கல்வி

கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்பதாகும். அரசர்க்குக் கற்றற்குரிய நூல்களாவன: "அறநூலும் நீதிநூலும் யானை குதிரை தேர் படைக்கலம் என்ற இவற்றின் நூல்களும் முதலாயின" என்று எடுத்துக்கூறுகிறார் பரிமேலழகர். அரசன் அறிவுடையனாதல் அவனுயிர்க்கேயல்லாமல் பிறவுயிர்களுக்கும் பயன்படுமாதலால் இக் கல்வி அரசியலுள் வைக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், இஃது எல்லார்க்கும் நன்மை பயக்கும் சிறப்பால் பொதுவாக இதன் இன்றியமையாமையை எடுத்து மொழிகின்றார். 'என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு' என வள்ளுவர் கூறுமாப்போல (குறள் 397) ஒருவன் தன் வாழ்நாள் முற்றும் கல்வி பெற அயராது முயல வேண்டும்.

மேலே அதிகாரத்துள் 'தூங்காமை கல்வி' (குறள் 383) எனத் தோற்றுவாய் செய்ததனை ஒட்டி இங்கு அக்கல்வி மாட்சியை விவரித்துக் கூறுகின்றார். எனவே, இது முந்திய அதிகாரத்தொடு தொடர்புடையதாய் அமைகின்றமை விளங்கும்.

பொருட்பால் பகுதியாகிய இதில் பொருள் வரவு இயற்றும் திறம் பேசுகின்ற வள்ளுவர், அங்ஙனம் இயற்றுதலுக்குக் கல்வி முந்துற வேண்டும் என இது முதற்கண் உணர்த்தப்படுவதாக மணக்குடவர் கருதுவர். காளிங்கர் விளக்கமும் இவர் கூற்றை ஒட்டியே அமைந்துள்ளது. "அரசியற் பொருளிற் சிறந்த செல்வமாவது கல்விச் செல்வம் ஆகலான், மற்று இதன் (இறைமாட்சி) பின்னரே அதனை அறிவிக்கின்றது" என்பது காளிங்கரின் உரை விளக்கம்.

'கல்வி' என்னும் இவ்வதிகாரத் தலைப்பெயரை எட்டு ஒன்பதாம் குறள்களில் மாற்றமின்றி அப்படியே காணலாம். 'கற்க' என

எடுத்த எடுப்பில் கட்டளையிட்ட வள்ளுவர் (குறள் 391) ‘கற்றோர்’ (குறள் 393), ‘கற்றார்’ (குறள் 395), ‘கற்றறிந்தார்’ (குறள் 399) ‘புலவர்’ (குறள் 394) ஆகியோரின் இயல்புகளை எடுத்துரைத்துள்ளார். கல்வியால் அறிவு வளரும் தகைமையும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது (குறள் 396).

## *41. கல்லாமை*

கல்லாமையாவது கல்வியில்லாமையால் உளதாகும் குற்றம் எடுத்துக்காட்டப்படுவதாம். மேலே, கல்வி அனைவர்க்கும் வேண்டும் என்றவர் அஃது இல்லாதார்க்கு உளவாகும் குற்றங்களை எடுத்து இதில் மொழிகின்றார். ஆகவே, கல்விப் பொருள் முன்னதிகாரம் ஒன்றனுள் மட்டும் விதி முகத்தால் கூறியது முற்றுப்பெருமையால் அடுத்துக் ‘கல்லாமை’ என எதிர்மறை முகத்தாலும் எடுத்துக் காட்டுவதால் முன்னதனோடு இது தொடர்புபடுகிறது.

இதனை அடுத்து மேலும் தொடர்ந்து வரும் கேள்வி, அறிவுடைமை என்பனவும் கல்வியொடு தொடர்புடைய அதிகாரங்களே. நூல்களைக் கற்பது கல்வியாளர்க்கு மிகமிக அவசியம் என்பதனை இவ்வதிகாரத்தின் முதலும் முடிவுமான இருபாடல்களிலும் சுட்டிக் காட்டியுள்ளார் (குறள் 401, 410). பிற பாடல்களில் எல்லாம் கல்லாதவரின் இழிநிலை பேசப்பட்டுள்ளது. இறுதி இரண்டு பாடல்களிலும் கற்றாரோடு கல்லார்க்கு உளதாம் வேறுபட்ட நிலைமைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன (குறள் 409, 410).

கல்லாமை என்னும் இவ்வதிகாரப் பெயர் இதே வடிவுடன் இவ்வதிகாரப் பாடல்களுள் பயின்று வரவில்லை. ‘கல்லாதான்’ (குறள் 403, 406), ‘கல்லா ஒருவன்’ (குறள் 405), ‘நுண்மாண் நுழைபுலம் இல்லான்’ (குறள் 407) என்று இவ்வாறு பாடல்களில் வரும் சொல்-தொடர்கள் கல்லாமைக் கருத்தை விளக்குதலானும் கல்வியின் மேன்மை புலப்படுத்தப்பட்டுள்ளது.

## *42. கேள்வி*

கேள்வி என்பது கேட்பதற்குரிய நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டலாம். கற்றவர்க்கோ இப்படிப்பட்ட கேள்வி மேலும் அவர்களுடைய அறிவைப் பெருக்கும். கல்லாதவர்க்கோ கேள்வியின்

பயனாக அறிவு உண்டாகும். ஆகவே, கேள்விச் செல்வம் கற்றார் கல்லாதார் இரு சாராருக்கும் துணை செய்வது என்பது தெரியவரும். கல்வி கல்லாமை அதிகாரங்களை அடுத்து இவ்வதிகாரம் வருவதற்கும் இதனால் ஏற்புடைமை உண்டு.

மணக்குடவர் காளிங்கர் இருவரும் நூல்களைக் கற்கமாட்டாதார் பொருட்டாகவே கேள்வி அறிவுபெற அறிவுறுத்தப்படுகிறது என்று கொள்கின்றனர். காளிங்கர் தரும் விளக்கம் பின் வருமாறு :

> *"கல்லாத மக்களும் என் செயற்பாலது எனின் கற்றுணர்ந்த சான்றோருழைச் சென்று மற்று அவர் உரைக்கும் கல்விநெறிப் பாட்டைப் பல நாளும் பயிலக் கேட்க. மற்று இங்ஙனம் கேட்கவே இவர் இனிய உணர்வினர் ஆவர்."*

'கற்றில னாயினும் கேட்க' (குறள் 414) என வருவது கல்லாதாரை மட்டும் நோக்கியதுபோல் காணப்படினும் ஏனைய பாடல்களைக்கொண்டு கற்றார் கல்லார் இருவர்க்கும் கேள்வி அறிவால்வரும் செவிச்செல்வம் வேண்டும் என்பதே ஆசிரியர் கருத்தாகும் என்பது தெளிவாகும்.

> *கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்*
> *தோட்கப் படாத செவி* (குறள் 418)

எனவரும் பாடல் எல்லார்க்கும் கேள்வி அவசியம் என்னும் கருத்தில் கேள்விச் செல்வம் பெறாதார் செவிடரே என்று அறிவிக்கின்றது. எனவே, பரிமேலழகர் கூறியபடி, "கற்றவழி அதனினாய அறிவை வலியுறுத்தலானும் கல்லாத வழியும் அதனை உண்டாக்குதலானும் இது கல்வி கல்லாமைகளின் பின் வைக்கப்பட்டது" என்னும் விளக்கம் பொருத்தமுடையதே யாகும்.

'கல்வி' அதிகாரத்துள் 'கற்க' (குறள் 391) எனப் பணித்த வாறே 'கற்றிலனாயினும் கேட்க' (குறள் 414), 'எனைத்தானும் நல்லவை கேட்க' (குறள் 416) என இங்கும் வள்ளுவர் கட்டளையிடு கிறார். கேள்விப் பொருளைச் 'செவிச் செல்வம்' (குறள் 411), 'செவிக்குணவு' (குறள் 412), 'செவியுணர்விற் கேள்வி' (குறள் 413), 'செவியிற்சுவை' (குறள் 420) என்று போற்றியுரைக்கின்றார். 'கேள்வியர்' (குறள் 419) 'கேள்வியவர்' (குறள் 417), 'கேள்வி யுடையார்' (குறள் 413) என இக் கேள்விச் செல்வம் பெற்றாரைக் குறிப்பிடுகின்றார்.

'கேள்வி' என்னும் அதிகாரத் தலைப்பு 'கேள்வியால்' என 8ஆம் பாடலில் மட்டும் வருவதோடு 'கேள்வியர்' (குறள் 419), 'கேள்வியவர்' (குறள் 417), 'கேள்வியுடையார்' (குறள் 413) என இதனடியாகப் பிறந்த சொற்களிலும் விரவி வருகின்றமை காணலாம்.

> *இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே*
> *ஒழுக்க முடையார்வாய்ச் சொல் (குறள் 415)*

என்பதில் யாரிடம் கேட்டல் வேண்டும் என்பது பற்றி உரைக்கப் படுகின்றது. இஃது ஒழுக்கமுடைமை அதிகாரத்திற்கும் ஒத்த பாடலாக உள்ளமை கருதத்தக்கது. 'வணங்கிய வாயின ராதல் அரிது' (குறள் 419) என்பது நாவடக்கம் பற்றி அடக்கமுடைமையில் ஆசிரியர் கூறிய கருத்துகளை (குறள் 127, 128, 129) நினைவூட்டுகிறது.

## *43. அறிவுடைமை*

கல்வி கேள்விகளினுல் உண்டாவதாகிய உண்மை அறிவை உடையராதல் அறிவுடைமையாம்.

கல்வியும் கேள்வியும் உடையவராஞலும் கேட்ட பொருள்களை உள்ளவாறு உணர்ந்தறிதல் வேண்டும் என அறிவுறுத்தப்படுவதனுல், முந்திய கல்வி, கல்லாமை, கேள்வி அதிகாரங்களை அடுத்து இந்த அறிவுடைமை அதிகாரம் அமைவது பொருத்தமாகும்.

"உலகத்து அரசர்க்கும் பிறர்க்கும் இக் கல்வியும் கேள்வியும் சிறந்த ஞானத்தைப் பயக்கும். ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலே அதிகாரம்" எனக் காளிங்கர் வரும் அதிகாரத்தோடு இயைபு கூறுதலும் முற்கூறிய கருத்திற்கு விளக்கமாகும்.

உலகத்து உயர்ந்தாரொடு இணங்கி, அவருடைய ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுதலே அறிவுடைமை என்று ஆசிரியர் திருவள்ளுவனர் எடுத்துக்காட்டுகின்றர் (குறள் 425, 426). 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' (குறள் 140) என அறத்துப்பாலில் ஒழுக்கமுடைமை பற்றிக் கூறிய கருத்தின் விளக்கத்தை இவ்வதிகாரத்துள் காணலாம்.

*தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது* *(குறள் 68)*

எனப் புதல்வர்களின் அறிவுடைமை பற்றிப் பேசியவிடத்து அமைந்த தொடர் இவ்வதிகாரப் பெயராக அமைந்துள்ளது. இவ்வதிகாரத்துள் 'அறிவுடைமை' என்னும் தலைப்பெயர் அவ்வாறே முற்றும் அமையா விடினும், 'அறிவுடையார்' (குறள் 427, 430) என வருமிடத்து அதன் சுவடு உள்ளமை தெரியவரும். மற்றும் அதன் முற்கூறுகிய 'அறிவு' என்பதும் (குறள் 1, 6), இதே பொருள் தரும் 'ஒட்பம்' (5) என்பதும் வந்துள. மற்றும் இதன் அடியாகப் பிறந்த 'அறிவார்' (8), 'அறிவினர்' (9) என்பனவும் பயின்று வந்துள.

*அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது*
*அஞ்சல் அறிவார் தொழில்* *(குறள் 428)*

என இவ்வதிகாரத்து அறிவாரைக் கூறும் முகமாகப் பேதைமை யுடையான் இயல்பும் உடன்காட்டியுள்ளார். இது 'பேதைமை' என்னும் தனி அதிகாரத்து (84) இடம் பெறும் பொருத்தமுடைய பாடலாகவே அமையும். வேற்றுமை நயம் பற்றியும் பொருள் களிடையே ஒப்புக்கூறும் முறையால் இங்குப் 'பேதைமை'யும் உடன் கூறப்பெற்றது என்று கொள்ளலாம்.

## *44. குற்றங் கடிதல்*

குற்றங் கடிதலாவது குற்றங்கள் அணுகாமல் அவற்றை நீக்கி ஒழுகுதலாம். "மக்கட்கு அறிவுடைமையின் பேறுவது குற்றத்தின் ஒருஉவுதலும் குணத்தின் நடத்தலும் ஆம்" என்பதனால் குணகுற்றம் அறிவான் ஒருவன் குற்றங்களை விடுத்து ஒழுகுதல் வேண்டும் என்பது இங்குக் கூறப்படுகிறது.

"காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட குற்றங்கள் ஆறனையும் அரசன் தன்கண் நிகழாமல் கடிதல்" என்று விளக்கம் தருகிறார் பரிமேலழகர். வடநூலார் இவற்றைக் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் ஆறு 'பகை வர்க்கம்' என்று கூறுவர்.

*செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்*
*பெருக்கம் பெருமித நீர்த்து.* *(குறள் 431)*

*இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா*
*உவகையும் ஏதம் இறைக்கு.* *(குறள் 432)*

இவ் வதிகாரத்துள் வரும் மேலே காட்டிய முதலிரு பாடல் களிலும் வள்ளுவர் அறுவகைக் குற்றங்களையும் நீக்குதல் பற்றி எடுத்துரைத்துள்ளமையும் கவனிக்கத் தக்கது. இதனைத் தொடர்ந்து குற்றங் கடிதலைப் பொதுவகையாக நான்கு பாடல்களில் கூறி, பின்னர்ச் சிறப்பு வகையால் பற்றுள்ளமாம் லோபம் (குறள் 437, 438), மதம், மானம் (குறள் 439), காமம் (குறள் 440) பற்றிய குற்றப்பாடுகளின் விளைவுகளையும் விளக்கியுள்ளார்.

'குற்றமே காக்க பொருளாக' எனவரும் (குறள் 434) ஆசிரியரின் கட்டளை இவ்வதிகாரக் கருத்தை நன்கு விளக்குகிறது. இவற்றைக் குற்றம் என்று அறிதலும் கடிதலும் அறிவுடையார்க் கல்லது கூடாமையின் இ∴து அறிவுடைமையினை அடுத்துவைத்து முறைப்படுத்தப் பட்டிருக்கிறது.

## *45. பெரியாரைத் துணைக்கோடல்*

பெரியாரைத் துணைக்கோடலாவது பேரறிவுடைய பெரியாரைத் தனக்குத் துணையாகப் பெறுதலாம். பரிமேலழகர் இங்கே பேரறி வுடையார் என்பதற்கு "அரசர்க்கும் அங்கங்கட்கும் மானுடத் தெய்வக் குற்றங்கள் வாராமல் காத்தற்கு உரிய அமைச்சர், புரோகிதர்" என்று கொள்வர். ஏனெனில், இவர்களே தக்க சமயத்தில் அரசனுக்கு வழிகாட்டும் தகுதி படைத்தவராயிருக் கின்றனர் இப் பெரியாரை 'இடிப்பார்' (குறள் 448), 'இடிக்குந் துணையார்' (குறள் 447) என்று வள்ளுவர் தமது நூலில் குறிப்பிட் டுள்ளமையும் கருதத்தகும்.

குற்றமும் குணமும் தெரிந்துணரும் இயல்பு கற்றுணர்ந்த பெரியோர்க்கே இயல்பாக உண்டு. ஆகவே, தீநெறி விலக்கி நன்னெறி செலுத்துவார் அப்பெரியாராகலின் குற்றங்கடிதலை அடுத்து இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

'பெரியாரைப் பேணித் தமராக் கொளல்' (குறள் 443), 'தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்' (குறள் 444) எனவரும் இவ்வதிகாரப் பாடற் பகுதிகள் அதிகாரப் பெயர்ப் பொருளைப் பெரிதும் உள்ளடக்கி யுள்ளன. ஏனைய பாடல்களில், 'அறனறிந்து மூத்த அறிவுடையார்' (குறள் 441), 'தக்கார்' (குறள் 446), 'நல்லார்' (குறள் 450), 'சூழ்வார்' (குறள் 445), 'இடிக்குந் துணையார்' (குறள் 447),

'இடிப்பார்' (குறள் 448) என்று இவர்களுடைய இயல்பினை வள்ளுவர் புலப்படுத்தியுள்ளமையும் காணலாம்.

இவ்வதிகாரத்தின் முதற்பாடலும் இறுதிப்பாடலும், 'அறிவுடை யார் கேண்மை' (குறள் 441), 'நல்லார் தொடர்' (குறள் 450) என அப் பெரியார்களோடு உளதாகும் நட்புப்பற்றிப் பேசுகின்றன. எனவே, இவை நட்புப் பற்றிய அதிகாரங்களுக்கும் ஒத்த பாடல்களாம்.

*முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்*
*சார்பிலார்க்கு இல்லை நிலை* (குறள் 449)

எனவரும் பாடல் பொருள்செயல்வகை அதிகாரத்திற்கும் (அதி. 76) ஏற்புடையதாகும். ஒப்புமை வகையால் இரண்டும் ஒன்றற்கொன்று எடுத்துக்காட்டாகும். ஆகவே, இப் பாடல் பொருள்செயல்வகை அதிகாரத்துள் வரினும் ஏற்புடைத்தாகும்.

### *46. சிற்றினம் சேராமை*

சிற்றினம் சேராமையாவது சிறியோர் கூட்டத்துடன் கூடாமை யாம். மணக்குடவர், "சிற்றினம் சேராமையாவது காமுகரையும் சூதாடிகளையும் பெண்டிர் முதலாயினோரையும் சேர்ந்தொழுகினால் வரும் குற்றமும் சேராமையால் வரும் நன்மையும் கூறுதல்" என்கிறார். "சிறிய இனமாவது நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென்போரும் விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு" எனப் பரிமேலழகர் எவர்எவர் சிறியோர் என்று உரைக்கின்றார்.

பெரியாரைத் துணைக்கோடல்வேண்டும் என்றவர் அடுத்து எதிர்மறைமுகத்தால் 'சிற்றினம் சேராமை' என்று சிறியோர் கூட்டத்தைத் தவிர்தல் வேண்டும் என்பதனையும் மொழிகின்றார். பெரியோர் துணை கிடைத்த போதிலும் ஒருவனுக்குச் சிறியார் சேர்க்கையும் இருந்தால் அது தீங்கு பயக்கும் என்று எடுத்துக் காட்டப்படுகிறது. இச் சேர்க்கை பெரியார் துணையால் உளதாம் பயனையும் கிடைக்க வொட்டாது. எனவே, பெருமை வேண்டுவார் சிற்றினம் சேர்தல் தகாது என்றும், பெரியோர் சிறியோர் கூட்டத் தைச் சேரார் என்றும் முன்னை அதிகாரத்தோடு இயைபுபட முதற் குறளில் தானே,

*சிற்றினம் அஞ்சும் பெருமை; சிறுமைதான்*
*சுற்றமாச் சூழ்ந்து விடும்* (குறள் 451)

என்று எடுத்துக்காட்டுதலும் நோக்கத்தகும். இக் கருத்தையே வலியுறுத்தும் வகையில்,

*நல்லினத்தின் ஊங்குந் துணையில்லை தீயினத்தின்*
*அல்லற் படுப்பதூஉம் இல்* (குறள் 460)

என இறுதிக் குறளிலும் கூறியுள்ளார்.

'சிற்றினம் அஞ்சும்' எனத் தொடக்கப் பாடலிலேயே அதிகாரப் பெயர்ப்பொருளைக் கொண்ட தொடர் வந்துள்ளது. ஏனையவற்றில், 'இனம்' எனும் சொல் வந்துள்ளது. 'இனந்தூய்மை' (குறள் 455, 456), 'இனநலம்' (குறள் 457, 458, 459) என்பனவும் எடுத்தாளப் பட்டுள்ளன.

முதற்பாடலும் இறுதிப் பாடலும் தவிர ஏனையவற்றில் எல்லாம் இனம், இனந்தூய்மை, இனநலம் என்று இவ்வாறு பொதுவாகச் சார்ந்த இனம்பற்றிய விளைவுகளை எடுத்து இயம்புகின்றனர். எனவே, பெரியோர் சிறியோர் என ஒருவன் சாரும் எல்லா இனத்தாரையும் சுட்டிக் கூறியதாகவும் இவை உள்ளமை நோக்கத் தகும்.

## 47. தெரிந்து செயல்வகை

"தெரிந்து செயல்வகையாவது வினை செய்யுங்கால் அதனை எண்ணிச் செய்யவேண்டும் என்று கூறுதல். அறிவுடையவனாய்க் குற்றம் கடிந்து, மந்திரி புரோகிதரைத் துணையாகக் கொண்டு, சிற்றினம் சேராது ஒழுகும் அரசனும் வினை செய்யுங் காலத்து முன்பே எண்ணிச் செய்யவேண்டுதலின் அவையிற்றின்பின் இது வைக்கப்பட்டது" என மணக்குடவர் இவ்வதிகாரப் பொருளினையும் இதனோடு முந்திய அதிகாரங்களுக்குள்ள தொடர்புகளையும் விளக்குகின்றார். நலமும் தீங்கும் தெரிந்து செய்ய வேண்டும் என்பதனை,

*தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு*
*அரும்பொருள் யாதொன்றும் இல்* (குறள் 462)

என இவ்வதிகாரத்து வரும் பாடலால் வள்ளுவர் அறிவுறுத்துவது முன்னை அதிகாரத்தோடுள்ள இயைபினையும் காட்டுவதாயுள்ளது. மணக்குடவர் இப் பாடலை இவ்வதிகாரத்தின் முதற் பாடலாகக் கொண்டுள்ளமையும் அதிகார வைப்பு முறைக்கு மிகவும் ஏற்புடையதாகும்.

*நன்ருற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்*
*பண்பறிந் தாற்ருக் கடை* (குறள் 469)

எனவரும் பாடலும் நல்லன தீயன சாரும் இனத்தாரின் இயல்பு தெரிந்து வினைசெயல் வேண்டும் என்பதனைத் தெளிவுறக் கூறுகிறது.

'தேர்ந்தெண்ணிச் செய்வார்' (குறள் 462), 'வகையறச் சூழா தெழுதல்' (குறள் 465), 'எண்ணித்துணிக' (குறள் 467) 'எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும்' (குறள் 470) எனவரும் குறட்பாடற் பகுதிகளும் ஆராய்ந்து வினை செய்தலைக் குறிப்பிட்டுக் கூறுகின்றன.

*ஆக்கம் கருதி முதலிழக்குஞ் செய்வினை*
*ஊக்கார் அறிவுடை யார்* (குறள் 463)

எனவரும் பாடல் 'பொருள் செயல் வகை' (அதி. 76), 'அறிவுடைமை' (அதி. 43) என்னும் அதிகாரப் பொருள்களுக்கும் பொருத்தமுடைய பாடலாகும்.

## *48. வலியறிதல்*

ஒருவன் தனக்குள்ள வலிமை, துணை வலிமை முதலியவற்றை அறிந்து செயலில் இறங்க வேண்டும் என்பதுபற்றிக் கூறுகிறது. மேலை அதிகாரத்து இனம் தெரிந்து செயலைச் செய்தல்வேண்டும் என்றவர் மேலும் என்னென்னவற்றைத் தெரிதல்வேண்டும் என்று இவ்வதிகாரம் தொடங்கி மூன்றதிகாரங்களில் கூறுகிருர். முக்கியமாக வலியறிதல், காலம் அறிதல், இடன் அறிதல் மூன்றும் அரசன் தான் தொடங்கும் வினையுள் வெற்றி பெறுவதற்கு முதன்முதல் விசாரித்து அறியவேண்டியது அவசியமாகும்.

*வினைவலியும் தன்வலியும் மாற்ருன் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல்* (குறள் 471)

என அரசன் நால்வகை வலிமையையும் அளந்து அறிதல் வேண்டும் என்று இவை ஒவ்வொன்றின் இன்றியமையாமையையும் எடுத்துக் காட்டுகள் தந்து விளக்கிக்கூறுகிருர் வள்ளுவர்.

'வலியும் தூக்கிச் செயல்' (குறள் 471) 'வலியறியார்' (குறள் 473) என்றும் வருவன இவ்வதிகாரப் பெயராம் 'வலியறிதல்' என்பதனை நினைவூட்டுகின்றன. 'அளவறியான்' (குறள் 474), 'அளவறிந்து வாழாதான்' (குறள் 479) என்பன வினைவலி, துணை வலி முதலியவற்றைச் சீர் தூக்கியறிதலை வலியுறுத்துகின்றன.

‘ஆற்றின் அளவறிந்து ஈக’ (குறள் 477) என்பது முதலாக வரும் இறுதியில் உள்ள நான்கு பாடல்களும் பொருளின் அளவினை ஆய்ந்தறிதல்பற்றி உரைக்கின்றன.

‘அளவறிந்து ஈக’ (குறள் 477), ‘உளவரை தூக்காத ஒப்புர வாண்மை’ (குறள் 480) என்பன ஈகை (அதி 23), ஒப்புரவாண்மை (அதி. 22) என்னும் அதிகாரங்களோடும் இயைபுடையன. ஒப்புர வாண்மையும் ஈதலும் சிறந்த அறமாயினும் தன் அளவறிந்து செய்தலே முறைமை என்பது இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது.

*ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்*
போற்றி வழங்கும் நெறி (குறள் 477)

என்பது முதலாக வரும் நான்கு பாடல்களும் பொருள் செயல்வகை (அதி. 76) எனவரும் அதிகாரத்துடன்வைத்துப் போற்றத்தக்க பொருளமைதியுடையன.

## *49. காலம் அறிதல்*

ஒருவன் தனக்குரிய வலிமை, வினைசெய்யும் வலிமை, மாற்றான் வலிமை, இருவர்க்கும் துணையாவாரின் வலிமை என்னும் வலிமை நிலைமைகளை ஆராய்ந்து கண்டபோதும், வெற்றி வாய்ப்புக்கு உரிய காலம் அறிந்து வினை தொடங்காவிடில் தோல்வியுண்டாம் என்பது கருதி வினைக்கு உரிய காலம் அறிதல்பற்றி எடுத்துரைக்கின்றது இவ்வதிகாரம்.

‘காலம் அறிந்து’ (குறள் 438), ‘காலம் கருதி’ (குறள் 484, 485), ‘காலம் பார்த்து’ (குறள் 487) என இவ்வதிகாரப் பாடல் களில் வருவன ‘காலம் அறிதல்’ என்னும் அதிகாரப் பெயரை உள்ளடக்கியனவாம். ‘பருவத்தோடு ஒட்ட ஒழுகல்’ (குறள் 482) என்பது காலம் அறிந்து வினை செய்க என்பதனை அறிவுறுத்துகின்றது.

## *50. இடன் அறிதல்*

இடன் அறிதலாவது வினை செய்வதற்குரிய இடத்தினை அறிதலாம். வலியும் காலமும் அறிந்து பகைவன்மேற் செல்லும் ஒருவன் தான் வெல்வதற்கு ஏற்ற நில வாய்ப்பினைத் தெரிதலும் இன்றியமையாததாம் என்பதுபற்றி இது வலிஅறிதல், காலம்

அறிதல் அதிகாரங்களின் பின்னர் வைத்து முறை செய்யப் பெற்றுள்ளது.

*ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தாற் செயின்* (குறள் 484)

என முந்திய அதிகாரத்துள் வரும் பாட்டு வினையைக் காலம் அறிந்து இடத்தொடு பொருந்தச் செய்தலை அறிவிக்கின்றது. இப் பாடலை மணக்குடவர் சென்ற அதிகாரத்தின் இறுதிப் பாடலாகக் கொண்டிருக்கின்றார். இவர் கொண்ட பாடல் முறைவைப்பினால் இப்பாட்டு வரும் அதிகாரமாகிய இடன் அறிதலுக்கும் தோற்றுவாய் செய்வதாக அமைந்துவிடுகின்றது.

'இடன் அறிந்து' (குறள் 493, 494), 'இடத்தால் செயின்' (குறள் 497) என வருவன இவ்வதிகாரப் பெயரை நினைவூட்டு கின்றன.

## *51. தெரிந்து தெளிதல்*

தெரிந்து தெளிதல் என்பது தமக்குத் துணையாக அமைந்த அமைச்சர் முதலாயினாரை ஆராய்ந்து கொள்ளுதலாகும். அமைச்சர் முதலாயினோரின் பிறப்பு, குணம், அறிவு என்பனவற்றையும் செயலையும காட்சி, கருத்து, ஆகமம் என்னும் அளவைகளால் ஆராய்ந்து தெளிய வேண்டும் என்று இவ்வதிகாரத்துள் கூறப் பட்டுள்ளது.

ஒருவன் வினைக்காம் காரியத்தை நன்கு எண்ணி அதற்குரிய வலிமை, காலம், இடம் எல்லாம் வாய்த்தலை அறிந்திருந்தபோதிலும் அவ்வினை முடித்தற்குத் துணைவராம் அமைச்சர் முதலாயினோரையும் தக்கபடி ஆராய்ந்து, அவர்தம் தகுதி முதலியன தெளிந்து வினைமேற் செல்லவேண்டும் என்பதனால் இது முந்திய அதிகாரங்களை அடுத்து வைக்கப்பட்டுள்ளது.

'தெரிந்து செயல் வகை' என்பது (அதி. 47) செய்வதற்குரிய வினைபற்றித் தெரிதலை உணர்த்துவது; 'தெரிந்து தெளிதலோ, வினைக்குத் துணையாவாரைத் தெரிந்து தெளிதல்பற்றியது. மேலும், தெரிந்து செயல் வகையும், அதனைத் தொடர்ந்து வரும் வலிஅறிதல், காலம் அறிதல், இடன் அறிதல் என்பனவும் ஆராய்ச்சி வேண்டும் என்பதனை எடுத்துக்கூறுவன. அங்ஙனம் ஆராய்வான் ஒன்றனைத்

தெளிந்தால் மட்டுமே வினையாற்ற இயலும். எனவே, ஆராய்வான் ஒன்றனைத் தெளிதலே வினைக்கு வேண்டுவது என்பது கருதித் 'தெரிந்து தெளிதல்' கூறப்படுகிறது என்று கருதலாம்.

அமைச்சர்க்குரிய 'வினைசெயல் வகை'யைக் குறித்துப் பேசுமிடத்து வள்ளுவர்,

*சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு*
*தாழ்ச்சியுள் தங்குதல் தீது* (குறள் 671)

எனத் துணிதல்பற்றிக் கூறியது போன்று, இங்கும் அரசர்க்குத் துணிவுவேண்டும் என்பது இவ்வதிகாரத்தால் கூறப்படுகின்றது என்றும் கொள்ளலாம்.

'திறம் தெரிந்து தேறப்படும்' என உரைக்கும் முதற் குறள் (501) ஆராய்ந்து துணிவு பெறுதலை எடுத்துக் கூறுகிறது.

காளிங்கர் உரையுள் வரும் பின்வரும் இவ்வதிகார முறைவைப்பிற்குரிய காரணமும் இங்கு ஒப்பு நோக்கிக் காணத்தக்கது. அவர் தம் உரைப்பகுதி வருமாறு:

*"இனிப் பெரியாரைத் துணைக்கோடல் தொடங்கி மற்று வலியறிதல், காலமறிதல், இடனறிதல்காறும் எஞ்சாமல் தெரிந்து, பின் ஒன்றனைத் தேறுதலே கடன் என்பதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்."*

மேலும், இவ்வுரைகாரர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும் முறையாகத் தெரிந்து, அவற்றுள் தனக்கு ஏற்றது ஒன்றனை அரசன் தேர்ந்தெடுத்தல் வேண்டும் என்றும் கருதுகிறார். வள்ளுவர் தம் நூலுள் வேறு எவ்விடத்தும் வெளிப்படக் கூறாது விடுத்த 'வீடு' என்பதனை 'உயிரெச்சம்' என்னும் தொடரால் குறித்துள்ளதாகவும் இவர் துணிகின்றார்.

*அறம்பொருள் இன்பம் உயிரெச்சம் நான்கின்*
*திறம்தெரிந்து தேறப் படும்* (குறள் 501)

எனவரும் இவ்வதிகாரத்தின் முதற்பாடலுக்குக் காளிங்கர் தரும் உரைவிளக்கம் ஊன்றி நோக்கி ஆராயத்தக்கதாகும். காளிங்கரின் விளக்கவுரை வருமாறு:

*"மறை முதலாகிய நூல் யாவற்றினும் சொன்ன அறம் பொருள் இன்பம் வீடு என வகுத்த நால்வகையாகலின், அவற்றுள் அறமானது பாவம் அனைத்தையும் பற்று அறுப்பது என்றும்,*

இருமை இன்பம் எய்துவிப்பது என்றும், அவற்றுள் பொருளானது பலவகைத் தொழிலினும் பொருள் வருமேனும் தமக்கு அடுத்த தொழிலினுகிய பொருளே குற்றமற்ற நற்பொருள் என்றும், மற்று இனி இன்பமாவது கற்பின் திருந்திய பொற்புடையாட்டி இல்லறத் துணையும் இயல்புடை மக்களும் இருதலையானும் இயைந்த இன்பம் என்றும், மற்றும் இவற்றுள் உயர்ந்த வீடாவது பேதைமையுற்ற பிறப்பு இறப்பு என்னும் வஞ்சப்பெருவலைப்பட்டு மயங்காது நிலைபெற நிற்கும் வீடு இது என்றும் இங்ஙனம் இவை நான்கின் திறம் தெரிந்து, பின் தமக்கு அடுத்தது ஒன்றினைத் தலைத்தேறித் தெளிய அடுக்கும் அரசர்க்கு உயிரெச்சம் என்ற முத்தி என்றது.''

இவருடைய கருத்தும்,

> ''தன்மம் அர்த்தம் காமம் மோட்சம் என்னும் நாலுகாரியமும் விசாரித்து யாதொரு காரியமும் செய்வான்''

எனவரும் பரிதியார் உரைக்கருத்தும் ஒப்ப இருத்தலால், இக் கருத்து பழைய வழக்கு முறையில் வழிவழி வந்ததோர் பழங் கருத்தாகும் என்றும் துணியலாம். [5]

## 52. தெரிந்து வினையாடல்

வினை செய்தற்குரியாரைத் தெளிந்தறிந்தபின் அவரால் செய்யப்படும் வினைகளை ஏவி அவரைக் கொண்டு செய்வித்தலைக் கூறுவதே இவ்வதிகாரப்பொருள். இதனை,

> இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல் (குறள் 517)

என இவ்வதிகாரத்து வரும் பாட்டு நன்கு விளக்குகிறது.

சிலரைத் தெளிந்தபின் அவரைக்கொண்டு தம் கருமத்தை முற்றுவித்தல் வேண்டும் என்பதனால் முந்திய அதிகாரத்தோடு இது இயைபுடைத்தாகின்றது.

'தெரிந்து வினையாடல்' என்னும் பெயருக்கு ஏற்றாற்போல, 'வினை வகையான்' (குறள் 514), 'வினைதான் சிறந்தான்' (குறள் 515), 'வினை செய்வான்' (குறள் 520) என்னும் தொடர்கள் இவ்வதிகாரத்துள் பயின்று வந்துள்ளன.

*குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல்* (குறள் 504)

என முந்திய அதிகாரத்துள் வரும் கருத்தை ஒட்டியே அந்நாட்டத்தால் நலம் சிறந்தான் வினைக்குரியனாகக் கொள்ளப்படும் என்று இவ்வதிகாரத்தின் முதற்குறள்,

*நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த*
*தன்மையான் ஆளப் படும்* (குறள் 511)

என அமைதல் இரண்டதிகாரத்திற்கும் உள்ள தொடர்பைப் புலப் படுத்துவதாயுள்ளது.

## *53. சுற்றம் தழால்*

அரசன் தன்னுடைய சுற்றத்தாரைத் தன்னை விட்டு நீங்காமல் பாதுகாத்தலே சுற்றம் தழுவுதலாகும். தழால் என்பது தழுவுதல் என்னும் பொருளதாம்.

வினை செய்வாரைக் கூறி, ஏனைய சுற்றத்தாரையும் ஆதரித்தல் அரசனுடைய கடமை என்று எடுத்தோதப்படுவதனால் வினை செயல் வகையை அடுத்து இந்தச் சுற்றம் தழால் அதிகாரம் அமைக்கப் பட்டுள்ளது.

'சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்' (குறள் 524), 'சுற்றத்தால் சுற்றப்படும்' (குறள் 525) என வருவன 'சுற்றம் தழால்' என்னும் அதிகாரத் தலைப்பெயரின் கருத்தைப் புலப்படுத்துவன. 'சுற்றத்தார்' (குறள் 521) 'சுற்றம்' (குறள் 522, 529), 'மருங்குடையார்' (குறள் 526) 'உழை' (குறள் 530) என்பனவும், 'அளவளாவு' (குறள் 523) என வருவதும் 'சுற்றம்' என்னும் கருத்தையும் தழால் என்பதையும் குறிப்பித்தவாரும்.

செல்வப் பயன் கூறும் பாடலும் (குறள் 524), மற்றும் கொடுத்தல், இன்சொல், கொடை என்பவற்றைக் கூறும் பாடல் களும் (குறள் 525, 526), காக்கை போல் சுற்றம் தழுவி உண்ணல் (குறள் 527) பற்றி வரும் பாடலும் முறையே பொருள் செயல்வகை (அதி. 76), இனியவை கூறல் (அதி. 10), ஒப்புரவறிதல் (அதி. 22), ஈகை (அதி. 23) என்னும் அதிகாரப் பொருள்களோடும் தொடர் புடையனவாம்.

### 54. பொச்சாவாமை

பொச்சாவாமையாவது மறவாமை. இவ்வதிகாரப் பெயர்க்கு மணக்குடவர் தரும் விளக்கம் மிகவும் தெளிவாக உள்ளது. அவர் கூறுவதாவது :

> *"பொச்சாவாமையாவது மறவியின்றி ஒழுகுதல். அது தனது சோர்வு பார்த்துப் பிறர் வஞ்சகம் செய்யும் இடங்களிலும், அறம் பொருள் இன்பங்கள் செய்யவேண்டும் இடங்களிலும் மறத்தலின்மை. பொச்சாப்பு எனினும், மறவி எனினும், இகழ்ச்சி எனினும் ஒக்கும்."*

இதற்குமுன் அமைச்சரிடத்தும் சுற்றத்தாரிடத்தும் ஒழுகும் முறைமை குறித்துக் கூறிய வள்ளுவர், எல்லார்மாட்டும் அரசன் கடமை தவருது இருப்பதற்குத் தான் மறதியிலனய் இருத்தல் வேண்டும் என்று அரசனுடைய நிலையை நினைவூட்டுகின்ருர். தன் வெற்றிக்கு உறுதுணையாயினரை மறவாது போற்றுதல் அரசனுடைய புகழ் வளர்வதற்கு ஏதுவாம் என அரசனுக்குரிய கடமையை நினைவூட்டிக் கூறுகிறது இவ்வதிகாரம். எனவே, சுற்றம் தழுவுதலுக்கு அரசன் அவரை மறவாது போற்றுதல் இன்றியமையாதது எனக் கூறப்படுவதால் முன்னை அதிகாரத்தோடு இது இயைபுடைத்தாகின்றது.

'பொச்சாப்பு' என்னும் ஆட்சி இவ்வதிகாரப் பாடல்களில் வருதல் நோக்கத்தகும் (குறள் 532, 534, 537). இதே பொருளில் 'சோர்வு' (குறள் 531), 'இகழ்ச்சி' (குறள் 539) என்னும் சொற்களையும் வள்ளுவர் ஆண்டுள்ளனர். பொச்சாப்புடையாரைப் 'பொச்சாப்பார்' (குறள் 533) என்றும், இகழ்ந்தார் (குறள் 538) என்றும் கூறுகின்ருர்.

### 55. செங்கோன்மை

செங்கோன்மையாவது செவ்விதாகிய முறை செய்தலுடைமையாம். முறை என்பது ஒருபால் கோடாது செவ்விய கோல்போல் குற்றமும் குணமும் சீர்தூக்கி ஆராய்வதாகும். அது கோடாமையால், அதாவது தவருமையால் 'செங்கோல்' என்று பாராட்டப்படுகிறது.

> ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
> தேர்ந்துசெய் வஃதே முறை (குறள் 541)

எனவரும் இவ்வதிகாரத்தின் முதற்பாட்டே செங்கோலுக்கு உரிய இயல்புகளைத் தெரிவிக்கின்றது. 'முறை' என்பதனைச் 'செங்கோல்' என்னும் பொருளில் வேறு இரண்டுபாடல்களிலும் குறிப்பிட்டுள்ளார் (குறள் 547, 548). 'கோல்' எனவும் (542, 543, 546), 'கோலோச் சுதல்' (544, 545) எனவும் இவ்வதிகாரத்துப் பயின்று வருதல் காணலாம். 'கொடியாரை வேந்து ஒறுத்தல்' (குறள் 550), 'குடிபுறம் காத்தோம்பல்' (குறள் 549) எனஅரசனது செங்கோல், கொடியாரை ஒறுத்து, அல்லாரைப் பாதுகாத்தலாகும் என்பது தெளிவுற விளக்கப்பட்டுள்ளது.

செங்கோன்மை என்னும் இவ்வதிகாரப் பெயர் அடுத்து வரும் கொடுங்கோன்மை அதிகாரத்தில்,

*மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்*
*மன்னுவாம் மன்னர்க் கொளி* (குறள் 556)

எனவரும் பாடலில் இடம்பெற்றுள்ளமை காணலாம்.

சோர்வு இல்லாது கடமை புரியும் அரசனுல்தான் நன்கு முறைமை செய்ய இயலும் ஆகலின், பொச்சாவாமையின் பின் இவ் வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது. மணக்குடவர் முந்திய மூன்று அதிகாரங்களோடு இவ்வதிகாரம் எப்படிப் பொருள் தொடர்புபட்டு வருகின்றது என்பதைப் பின் வருமாறு விளக்கிக் கூறுகின்றுர்:

"மேல் அமாத்தியர்மாட்டும் சுற்றத்தார்மாட்டும் தன்மாட்டும் செய்யும் திறம் கூறினுர். உலகத்தார்மாட்டும் செய்யும் திறம் கூறுகின்றுராதலான் அதன்பின் இது கூறப்பட்டது." இதனுல் குடிகளுக்குக் கோமகன் செய்யவேண்டும் கடமையை உணர்த்துகிறுர் ஆசிரியர் என்பது தெளிவாம்.

### *56.* கொடுங்கோன்மை

மேலை அதிகாரத்துள் கூறிய செங்கோல் முறைமையிலிருந்து வழுவுதல் கொடுங்கோன்மையாம். செங்கோலுக்கு மறுதலைப் பட்டது கொடுங்கோல்; அதாவது முறைமை செய்யாமை. இவ்வதி காரத்தில் கொடுங்கோன்மையால் வரும் குற்றங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. கொடுங்கோன்மையால் வரும் குற்றம் "முறைமை செய்யாமையும், அருள் செய்யாமையும், பிறர் நலியாமற் காவாமையும், முறை கெடச் செய்தலும், குடிகளுக்குத் தண்டனை

ஆராயாது செய்தலும், குடிகளை இரத்தலும் எனப் பலவகைப்படும்'' என மணக்குடவர் எடுத்துக் காட்டுகின்றார். இவ்விளக்கம் இந்த அதிகாரத்துள் அமைந்துள்ள பாடல்களின் கருத்தை அடியொற்றிய தாகும்.

'கொடுங்கோன்மை' என்னும் இவ்வதிகாரப் பெயரின் கருத்து, 'அல்லவை செய்தொழுகும் வேந்து' (குறள் 551), 'கோல் கோடிச் சூழாது செய்யும் அரசு' (குறள் 554), 'முறை கோடி மன்னவன் செய்யின்' (குறள் 559), 'முறை செய்யா மன்னவன்' (குறள் 553, 558), 'காவலன் காவான்' (குறள் 560) என்பனவற்றால் தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

இது செங்கோன்மைக்கு மாறுபட்டு வருதலின் அதன்பின் வைக்கப்பட்டது.

## 57. வெருவந்த செய்யாமை

கொடுங்கோன்மை குற்றம் என்று அறிந்த மன்னன் முறை செய்கின்ற காலத்தும் குடிகள் அஞ்சத்தக்கனவற்றைச் செய்த லாகாது என்பதாம். இச் செய்கை அரசனுக்குக் கேடு தருவதாகும் என்று இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது.

> வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
> ஒருவந்தம் ஒல்லைக் கெடும் (குறள் 563)

என இவ்வதிகாரத்து வரும் பாடலைக் காளிங்கர் இவ்வதிகாரத்தின் முதற்பாடலாகக் கொண்டுள்ளது முன்னைய அதிகாரத்தோடு இதற்குள்ள தொடர்பினைக் காட்டுவதாயுள்ளது. வெருவந்த செய் தொழுகுதலே வெங்கோல்; அதாவது கொடுங்கோல் ஆகும். இவ் வதிகாரத்தின் பெயரும் இப் பாடலில் பொதிந்துள்ளமை காணலாம்.

"வெருவந்த செய்யாமையாவது பிறர்க்கு அச்சம் தருவன செய்யாமையும் தனக்கு அச்சம் வருவன செய்யாமையும் கூறுதல்'' என்கிறார் மணக்குடவர். இவர் கருத்தையே மேலும் விளக்கு வாராய், "அஃதாவது குடிகள் அஞ்சுவதும் பகுதி அஞ்சுவதும் தான் அஞ்சுவதும் ஆகிய தொழில்களைச் செய்யாமை'' என்று கூறியுள்ளார் பரிமேலழகர்.

'கடுமொழியும் கையிகந்த தண்டமும்' (குறள் 567), 'கடுங் கோல்' (குறள் 570) என்பன குடிகளுக்கு அச்சம் தருவனவாம்.

'தக்காங்கு நாடி......................ஒத்தாங்கு ஒறுப்பது' (குறள் 561), 'கடி தோச்சி மெல்ல எறிக' (குறள் 562) எனவரும் இரண்டு பாட்டானும் வெருவந்த செய்யாது குடிகளை ஒறுத்து ஆள்வது எப்படி என்பது அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*
*மீக்கூறும் மன்னன் நிலம்* (குறள் 386)

என அரசனுக்கு விதிக்கப்பட்டவற்றிற்கு மாறுபட்ட நிலைமையை, 'அருஞ்செவ்வி இன்னா முகத்தான்' (குறள் 565), 'கடுஞ்சொல்லன் கண்ணிலன்' (குறள் 566) எனவரும் இவ்வதிகாரப் பாடல்களில் கூறப்படுதலும் காணத்தகும்.

"தான் முறை செய்வாரைப் போன்றிருந்து அதனை உலகத்தார் வெருவுமாறு செய்வானாயின் அதுவும் கொடுங்கோலொடு ஒக்கும் என்று அதன்பின் இது கூறப்பட்டது" என மணக்குடவர் தரும் அதிகார முறைவைப்பு விளக்கமும் நோக்கத்தக்கது.

## *58. கண்ணோட்டம்*

கண்ணோட்டம் என்பது அரசனுடைய அருட்பார்வையைக் குறிப்பதாம். "கண்ணால் காணப்பட்டாரை அருள் செய்தல்" என மணக்குடவரும், "தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்க மாட்டாமை" என்று பரிமேலழகரும் இவ்வதிகாரப் பெயர்க்கு விளக்கம் தந்துள்ளனர்.

மேலை அதிகாரமாகிய வெருவந்த செய்யாமையுள் கூறிய அதனையே சிறப்புப்பற்றி விரித்துக் கூறுவதால் முந்திய அதிகாரத் தொடு இது தொடர்புடைய செய்தியாம்.

*கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்*
*நீடின்றி ஆங்கே கெடும்* (குறள் 566)

என முந்திய அதிகாரத்துள் கண்ணோட்டத்தின் இயல்புகளைப் பலவாறு எடுத்துரைக்கின்றது.

காளிங்கர் பின் வருமாறு முந்திய அதிகாரங்களோடு இவ்வதி காரம் அடைவு செய்யப்பெற்ற காரணம்பற்றிக் கூறுகிறார்:

> "மற்று இக்கொடுங்கோன்மை ஆகிய நீதி கேடும், மற்று இத்தன்மைத்தாகிய வெருவந்த செய்தலும் என்னும் இரண்டு குற்றமும் இல்லாத குணவேந்தன் கண்ணதே கண்ணோட்டம்.

*ஆகலின், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.''*

'கண்ணோட்டம்' என்னும் இவ்வதிகாரப் பெயர் முதல் ஒன்பது பாடல்களிலும் வந்துள்ளது (571-579). இப் பெயர்ப் பொருளினை 'நயத்தக்க நாகரிகம்' என்பதனால் இறுதிப் பாடலில் (குறள் 580) வள்ளுவர் குறித்துக்காட்டியுள்ளார்.

*ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப்*
*பொறுத்தாற்றும் பண்பே தலை* (குறள் 579)

என்ற பாடல் இல்லறத்தார்க்குக் கூறிய பொறையுடைமை அதிகாரப் பொருளை நினைவூட்டுகிறது. இங்கே இதுவோ வேந்தனின் பொறுத்தாற்றும் பண்பைக் கூறுவதாம்.

## *59. ஒற்றாடல்*

பகை, நொதுமல், நட்பு என்னும் மூன்று திறத்தார்மாட்டும் நிகழ்ந்தன அறிதற்கு வேந்தன் ஒற்றரை ஆளுதல் வேண்டும் என்று எடுத்துக் கூறுவதாம். "ஒற்றாடலாவது ஒற்றரை ஆளவேண்டும் என்பதும் அவ்வொற்றர் திறனும் கூறுதல்" என்கிறார் மணக்குடவர். ஒற்றர் திறம் கூறுவன நான்கு பாடல்கள் (குறள் 584-587). இவ்வொற்றர் மன்னனுக்குக் கண்போன்றவர் என்பதும் (குறள் 581), இவ்வொற்றரை எவ்வெவ் வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதும் (582, 583, 588-590) பிற பாடல்களில் விவரிக்கப் பட்டுள்ளன. இரண்டாம் பாடல் தவிர ஏனையவற்றில் அதிகாரப் பட்டுவரும் ஒற்றாடல் என்பதில் குறித்த 'ஒற்று' என்பது பயின்று வருகின்றமையும் காணலாம்.

கண்ணோட்டமுடைய அரசர் தம் கண் எதிர் அணுகாதார்க்கும் உள்ள இடர்களையும் தேர்ந்து குறிக்கொண்டு ஆவன செய்தல் வேண்டும் என்னும் கருத்தால் இது கண்ணோட்டம் என்பதனை அடுத்து முறை செய்யப்பட்டுள்ளது என்று காளிங்கர் கருதுகிறார்.

மணக்குடவர் கூறும் அதிகாரமுறை வைப்புக் காரணம் முன் பின் அதிகாரங்களோடு உள்ள இயைபினை நன்கு விளக்குகிறது. அவர் தரும் விளக்கம் வருமாறு :

*"பெரியாரைத் துணைக்கோடல் (அதி. 45) முதலாகக் 'கண்ணோட்டம்' (அதி. 58) ஈறாகத் தன் அரசிலிருந்து செய்ய*

வேண்டுவன கூறினர். அது செய்யுங்கால் அவரவர் செய்தியை ஒற்றரான் ஒற்றியறிய வேண்டுதலானும், இனிப் பிறர் நாடு கொள்ளுங்கால் செய்ய வேண்டுவன கூறுகின்றராதலின் அந்நாட்டு இயல்பு அறிந்து வினை செய்ய வேண்டுதலானும் இவ்வதிகாரம் வேண்டப்பட்டது. மேலதனோடு இயைபும் அது."

## 60. ஊக்கமுடைமை

வினைசெய்யும் காலத்தில் மனம் மெலிதலில்லாமல் கிளர்ச்சி உடையனாக இருத்தலாம். 'உள்ளம் உடைமை உடைமை' (குறள் 592), 'அசைவு இலா ஊக்கமுடையான்' (குறள் 594) என வரும் பாடற்பகுதிகள் உள்ளக்கிளர்ச்சியே ஊக்கமாம் என்பதைக் காட்டுவன. 'ஊக்கம்' என்பதனோடு (591, 593, 594), 'உள்ளம்' (592, 595, 598, 600) என்பதையும் இவ்வதிகாரப் பாடல்களில் ஆசிரியர் எடுத்தாளுகின்றார். 'உயர்வுள்ளல்' (குறள் 596), 'உள்ளத் தனையது உயர்வு' (குறள் 595) என்பன ஊக்கத்தின் எழுச்சியைக் காட்டுகின்றன.

ஒற்றரான் நிகழ்ச்சிகளின் உண்மையை அறிந்து வினை செய்யப் புகுவானுக்கு ஊக்கம் முதற்கண் வேண்டும் என எடுத்துக் காட்டுகின்றது. ஆதலின், ஒற்றுடலை அடுத்து ஊக்கமுடைமை அதிகாரம் வந்து அமைகிறது.

## 61. மடியின்மை

மடியின்மையாவது சோம்புதல் இல்லாமையாம். செய்ய வேண்டும் காரியத்தை உயர்வாக நினைத்தாலும் அதனைச் செய்து முடிக்கும் பொழுது சோம்பாமை வேண்டும் என்பதாம். எனவே, ஊக்கமுடைமையோடு மடியின்மையும் வேண்டும் என அடுத்துக் கூறப்படுகிறது.

'மடி' என்னும் சொல் இவ்வதிகாரப் பாடல்களில் எல்லாம் பயின்று வருதல் காணலாம். மடி என்பதனோடு 'மடிமை' (குறள் 608), 'மடியின்மை' (குறள் 609) என்னும் சொற்களும் ஆளப்பட்டுள்ளன. மடியால் உளதாகும் கேடுகளை எடுத்துக்கூறி, இறுதிப் பாடலில் (குறள் 610) மடியிலா மன்னவன் பெறும் பேறும் சொல்லப்பட்டிருக்கிறது.

## 62. ஆள்வினை உடைமை

ஆள்வினை உடைமையாவது இடைவிடாத மெய்ம்முயற்சி உடையவனுதல். 'ஆள்வினை' என்னும் அதிகாரப் பெயர் ஒரே ஒரு பாடலில் (குறள் 618) வருகின்றது. ஏனையவற்றில் இதன் பொருளை விளக்கமாகத் தரும் 'முயற்சி' (குறள் 611, 616, 619), 'வினை விழைவான்' (குறள் 615), 'உஞற்றுபவர்' (குறள் 620), 'தாள்' (குறள் 617), 'தாளாண்மை' (குறள் 613, 614) என்னும் வேறு சொற்களும் தொடர்களும் வந்துள்ளன.

*மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்*
*தாளுளாள் தாமரையி னுள்* (குறள் 617)

என்பது மடியிலானது முயற்சியை எடுத்துக்காட்டுவதோடு மடியுடையானது கேட்டையும் சுட்டிக்காட்டுகிறது. இப்பாடல் சென்ற அதிகாரத்தின் தொடர்பாக ஊக்கமுடன் மடியின்றி முயல்தல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

ஊக்கமும் மடியின்மையும் உள்ளத்தின் பாற்பட்ட எழுச்சிகளின் அடிப்படையில் அமைவன. ஆள்வினை உடைமையோ செயல் ஊக்கமாகிறது. உள்ளம் பற்றிய நிலைகளை அடுத்துச் செயலாற்றுதல் பற்றிக் கூறுதலால், இது முன்னை இரு அதிகாரங்களுடன் இயைபுடைத்தாய்ப் பின்னர் வைக்கப்பட்டுள்ளது என்று கொள்ள வேண்டும்.

## 63. இடுக்கணழியாமை

வினையிடத்து முயன்று செயற்படும்போது உளதாகும் துன்பங்களுக்குத் தளராது இருத்தல் வேண்டும் என்பதனைக் கூறுகிறது இவ்வதிகாரம். "வினையின்கண் முயல்வான் தெய்வத்தானுக, பொருளின்மையானுக, மெய் வருத்தத்தானுகத் தனக்கு இடுக்கண் வந்துழி அதற்கு மனம் கலங்காமை" என்று பரிமேலழகர் இவ்வதிகாரப் பெயருக்கு விளக்கம் தருகிருர்.

வினை முயற்சியில் உளதாகும் இடையூறுகளை எதிர்த்து மேலும் முயன்று வெற்றி பெறுதல் வேண்டும் எனக் கூறுதலால் ஆள்வினையுடைமையை அடுத்து இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

மணக்குடவர், "வினை செய்யும் காலத்தினை முடிவு செய்வதன் முன்னர்ச் சில இடையூறு வந்தால் அவற்றைப் பொறுத்துச்

செய்கின்ற வினையை முற்ற முயலவேண்டும் என்று அதன் பின் இது கூறப்பட்டது" என்று அதிகார முறைவைப்பை விளக்குகின்றார்.

'இடுக்கண் வருங்கால் நகுக' (621) என்னும் முதற்பாடற் பகுதி இடுக்கண் அழியாமையின் பொருளை விளக்குகிறது. 'இடுக்கண்' என்பதனோடு (621, 624, 625) ஒத்த 'இடும்பை' (622, 623, 627, 628) 'அல்லல்' (626), 'இன்னாமை' (630) 'துன்பம்' (629) என்னும் சொற்களும் இவ்வதிகாரப் பாடல்களுள் ஆசிரியரால் எடுத்தாளப் பட்டுள்ளன.

## 2. அமைச்சியல்

### 64. அமைச்சு

அமைச்சாவது அமைச்சனது தன்மை. அதாவது அமைச்சனுடைய குணம், செயல் முதலியவற்றை எடுத்துக் கூறுவதாகும்.

'இறைமாட்சி' தொடங்கி (அதி. 39), 'இடுக்கண் அழியாமை' (அதி. 63) ஈறாக 25 அதிகாரங்களால் அரசனுடைய மாட்சிமைகள் கூறப்பட்டன. இறைமாட்சியின் தொடக்கத்தில் கூறிய 'படை, குடி' (381) முதலிய ஆறு அங்கங்களுள் அரசனுக்குச் சிறந்த துணையாக விளங்கத்தக்க அமைச்சனது இயல்பு இது முதல் பத்து அதிகாரங்களால் கூறி, பின் நாடு, அரண் முதலியன பற்றியும் வள்ளுவர் விளக்கிச் செல்கின்றார்.

அமைச்சுபற்றிக் கூறப்பட்டுள்ள பத்து அதிகாரங்களின் முறை வைப்புக்குறித்து மணக்குடவர் தொகுப்புரையாகக் கூறிய பகுதியால் அதிகாரங்களின் வைப்புமுறைக்கான காரணங்களும் புலனாகின்றன. மணக்குடவரின் தோற்றுவாய்த் தொகுப்புரை பின்வருமாறு:

> *"அமைச்சாவது அமைச்சர் செய்யும் திறம் கூறுதல். அதாவது கூறிய அதிகாரம் பத்தினும் முற்பட அமைச்சர்க்கு இன்றியமையாக் குணங்களெல்லாம் ஓரதிகாரத்தானும், வாத மண்டலத்திலிருந்து செய்யவேண்டுவன நான்கு அதிகாரத் தானும், புறமண்டலத்திற்குப்போம் தூதர் இலக்கணம் ஓரதிகாரத்தானும், அவர் செய்யும் திறன் நான்கு அதிகாரத் தானும் கூறினார் என்று கொள்ளப்படும். மேல் அரசர் செய்யும் திறன் கூறினார்; இனி, ஒரு வினை செய்து முடிக்குங்கால் அமைச்சு வேண்டுதலின் அதன்பின் இது கூறப்பட்டது."*

இவர் தம் கருத்துக்கோவையைக்கீழ் வருமாறு வகுத்து அதிகார முறைமைகளின் உண்மை காணலாம் :

| | | |
|---|---|---|
| அமைச்சு : | அமைச்சனது பொதுத்தன்மை : குணமும் செயல்களும் | (அதி. 64) |
| வாத மண்டலத்தில் : | சொல்வன்மை | (அதி. 65) |
| அவர் கடமை : | வினைத்தூய்மை | (அதி. 66) |
| | வினைத்திட்பம் | (அதி. 67) |
| | வினை செயல்வகை | (அதி. 68) |
| புறமண்டலம் போம் தூதர் : | தூது | (அதி. 69) |
| தூதர் செய்யும் திறன் : | மன்னரைச் சேர்ந்தொழுகல் | (அதி. 70) |
| | குறிப்பறிதல் | (அதி. 71) |
| | அவையறிதல் | (அதி. 72) |
| | அவையஞ்சாமை | (அதி. 73) |

மேலே காட்டிய குறிப்புகளால் பத்து அதிகாரம் அமைச்சியல் என்றாலும், அவற்றுள் முற்பகுதி ஐந்து அதிகாரங்கள் அமைச்சர் திறம் பகர்வன, பிற்பகுதி ஐந்து அதிகாரங்கள் தூதர் திறம் உரைப்பன என்பது தெளிவாகும்.

'அமைச்சு' என்னும் இவ்வதிகாரப் பெயர் முதல் நான்கு பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இதற்குப் பரியாயப் பெயரான 'மந்திரி' என்பது ஒரு பாடலில் (குறள் 639) வந்துள்ளது. ஏனையவற்றில் 'உழையிருந்தான்' (குறள் 638), 'மதிநுட்பம் நூலோடுடையார்' (குறள் 636), 'தேர்ச்சித்துணை' (குறள் 635) என அவர்தம் இயல்புகளைக் குறிக்கும் தொடர்கள் பெயர்நிலையில் தரப்பட்டுள்ளன.

## 65. சொல்வன்மை

தான் கருதிய வினை முடியும் வகையில் அமைச்சியல் நடத்துவதற்கு ஏதுவாகிய சொற்களைச் சொல்ல வல்லவனாதல். சொல்லின் திறம்பற்றியும் சொல்லுதல் வல்லவனுக்கு உளதாகும் சிறப்புப் பற்றியும் இவ்வதிகாரம் எடுத்துரைக்கிறது. 'சொல் வன்மை' என்னும் அதிகாரப் பெயர்க் கருத்து 'சொலல் வல்லன்' (குறள் 647), 'சொல்லுதல் வல்லார்' (குறள் 648) முதலிய தொடர்களால் புலப்படுகின்றது. 'நாநலம்' எனவரும் முதற்பாடலாட்சி (குறள் 641) சொல்வன்மை என்பதைக் குறிப்பதற்கு ஆசிரியர் உரைக்கும் வேறு தொடர் ஆகும்.

"அரசர்க்குக் கல்வி இன்றியமையாததுபோல அமைச்சர்க்கு இஃது இன்றியமையாதது ஆதலின் அதன்பின் இது கூறப்பட்டது" என்றார் மணக்குடவர். அரசியலில் அரசனுடைய மாண்பு உரைக்கும் 'இறைமாட்சி' (அதி. 39) என்பதை அடுத்துக் கல்வி என்னும் அதிகாரம் (அதி. 40) உள்ளது. இதனை உளத்துக்கொண்டு அமைச்சியலில் அமைச்சனது மாண்புகளைக் கூறியதை அடுத்து வரும் சொல்வன்மையும் அமைச்சர்க்குச் சிறப்புடைமை கருதி 'அமைச்சு' என்பதனை அடுத்து வைக்கப்பட்டது என்று இவ் வுரைகாரர் கூறுகின்றார். இஃது அரசியல் அமைப்பை ஒத்து அமைச்சியலிலும் உளதாகின்றது என்னும் உண்மையையும் தெரிவிக்கின்றது.

திருக்குறளுக்குப் பேருரை கண்ட பரிமேலழகர்,

*தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்*
*சொல்லலும் வல்லது அமைச்சு* (*குறள் 634*)

என முந்திய அமைச்சு அதிகாரத்தில் வரும் பாடலுள், 'ஒரு தலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு' என்பதனையே சிறப்புப் பற்றி விரித்துரைக்கின்றமையால் அதன்பின் கூறப்பட்டது என்னும் விளக்கம் தந்துள்ளார். காளிங்கரோ, 'தெரிதலும்' எனத்தொடங்கும் பாடலையே சென்ற அதிகாரத்தின் இறுதிப்பாடலாகக் கொண் டிருக்கிறார். இவ்வுரைகாரரின் பாடல் அடைவைக் கொண்டு பார்த்தால் 'ஒரு தலையாச் சொல்லலும் வல்லது' என்பதன் விளக்க மாகத் தொடர்ந்து சொல்வன்மை அதிகாரம் அமைகிறது என்பது பெரிதும் பொருத்தமுடைத்தாம்.

மேலும், பின்வரும் தூதரிலக்கணம் கூறும் 'தூது' (அதி. 69) என்பதனை அடுத்து அவருக்குச் சிறப்புடைத்தான 'மன்னரைச் சேர்ந்தொழுகல்' அதிகாரம் (70) தொடர்ந்து வருவதுபோன்ற அமைப்பு இங்கும் உள்ளமையும் ஒப்பு நோக்கி உணரத்தகும்.

## *66. வினைத்தூய்மை*

வினைத்தூய்மையாவது செய்யும் வினையைக் குற்றம் எதுவும் பயவாமல் செய்தலாம். அதாவது செய்யப்படும் வினைகள் பொருளோடு அறமும் புகழும் தந்து நல்லனவாதல் வேண்டும் என்பதாம்.

சொல்லேயன்றிச் செயலும் நன்றாக வேண்டும் என்பதை அறிவுறுத்தும் பொருட்டுச் சொல்வன்மையை அடுத்து இவ்வதிகாரம் அமைக்கப்பட்டுள்ளது.

சொல்வன்மையை 'நாநலம்' என்று சென்ற அதிகாரத்தின் முதற்பாடலில் வள்ளுவர் சுட்டியது போல இங்கும் வினைத்தூய்மையை 'வினைநலம்' என்று தொடக்கப் பாடலில் (குறள் 651) குறிப்பிட்டுள்ளார். 'பழிக்கும் வினை' (குறள் 656), 'ஒளி மாழ்கும் செய்வினை' (குறள் 653), 'நன்றி பயவாவினை' (குறள் 652) ஆகியவை கூடா என்று கூறுமுகத்தான் வினைத்தூய்மையை வள்ளுவர் வற்புறுத்துகின்றார். வஞ்சனையாலும் (குறள் 660), பிறர் வருந்துமாறும் (குறள் 659) ஆன்றோர் கடிந்து கூறிய பழியொடுபட்ட செயல் செய்தல் கூடாது என்றும் (657, 658) விலக்குகின்றார். எனவே, 'வினைத்தூய்மை' என்னும் அதிகாரப் பெயரின் கருத்து எதிர்மறை முகத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை விளக்கமாகிறது.

### *67. வினைத்திட்பம்*

வினைத்திட்பம் என்பது தூயவினை முடிப்பானுக்கு வேண்டும் மனத்திண்மையாம்.

*வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்*
*மற்றைய எல்லாம் பிற* (குறள் 661)

என்னும் இவ்வதிகாரத்தின் தொடக்கப்பாடல் 'வினைத்திட்பம்' என்பதன் பொருளைத் தெளிவாகத் தருகிறது. அதிகாரத்தின் பெயர் இம் முதற்பாடலிலன்றி வேறு இரண்டு பாடல்களிலும் வந்துள்ளமை (குறள் 665, 670) காணலாம். செய்யத்தொடங்கிய வினையில் தளர்ச்சி கூடாது என்பதனை 'ஒல்காமை' (குறள் 662), 'வினைக்கண் துளங்காது தூக்கம் கடிந்து செயல்' (குறள் 669) எனவரும் ஆசிரியர் வாக்குகள் அறிவுறுத்தும். 668

சொல்லுதலிலும் ஒரு வினையைப்பற்றி அதில் உறுதியாக நின்று செயல்புரிதல் அருமையானது என வள்ளுவர்,

*சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்'* (குறள் 664)

என்னும் பாடலால் வினைத்திட்பத்தின் இன்றியமையாமையை எடுத்து இயம்புதலும் நோக்கத்தக்கது.

மேலே அதிகாரத்தில் தூய நல்வினையைச் செய்ய வேண்டும் என்று கூறினார். இந்த அதிகாரத்திலோ வினை செய்யும் பொழுது திண்ணியராய்ச் செயலில் ஊன்றி நிற்றல் வேண்டும் என்கிறார். ஆதலால், வினைத்தூய்மையை அடுத்து வினைத்திட்பம் என்னும் இவ்வதிகாரம் வைக்கப் பெற்றுள்ளது.

## *68 வினைசெயல்வகை*

மனத்திட்பமுடைய அமைச்சன் வினையைச் செய்யும் திறம் கூறுதல்.

> *பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்*
> *இருள்தீர எண்ணிச் செயல்.* (குறள் 675)
>
> *முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்*
> *படுபயனும் பார்த்துச் செயல்.* (குறள் 676)

எனவரும் பாடல்கள் வினைத்திட்பமுடைய அமைச்சன் வினை செய்ய வேண்டும் வகையைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

"மேல் வினை செய்யுங்கால் திண்ணியராக வேண்டும் என்று கூறினார். திண்ணியார் வினைசெய்யும் வண்ணம் கூறுகின்றாராதலின் அதன்பின் இது வைக்கப்பட்டது" என மணக்குடவர் கூறும் அதிகார முறைவைப்புக் காரணம் பொருத்தமுற அமைதல் காணலாம்.

சொல் வன்மையுடைய அமைச்சன் அரசர்க்கு வெற்றியும் புகழும் வாய்க்கும் வண்ணம் தூய நல்வினைகளைத் தெரிந்து, அதில் மனவுறுதியுடையனாய், அதனை முற்றுவிக்க வேண்டும் என அவனுடைய கடமைகள் நிரல்பட வகுத்துரைக்கப்படுவதனால் இவ்வதிகாரங்கள் ஒன்றன்பின் ஒன்று வருதல் அமைவுடைத்தாம்.

இதனைக் காளிங்கரும் தெளிவுற வகுத்துரைக்கின்றார். அவர் தரும் உரை விளக்கம் பின்வருமாறு:

> *"இனி, மற்று இங்ஙனம் அரசர்க்கு அரும்பொருள் உரைக்கும் சொல் வன்மை உறுதியுடையார் ஆகிய அமைச்சர், மற்று அச்சொல்லினால் அரசர் செய்யும் வினையினது தூய்மையை ஆராய்ந்த இடத்தும் அவற்றுள் நல்லனவற்றைப் பின்பு ஐயுறாது செய்ய வேண்டும்.........ஆய்ந்து ஓர்ந்து துளங்கிய வினைக்கண் திட்பமுடையான் பின்பு அதுமுடித்தல் அன்றே செயற்பாலது."*

## 69. தூது

'தூது' என்பது வேற்றரசரிடம் தூதாகச் செல்லுவாருடைய தன்மை. அமைச்சர்களே அரசர்க்காக வேற்று வேந்தரிடம் தூது வினைமேல் செல்லும் பொழுது தூதர் எனப்படுவர். 'தூதாவது மாற்றரசர்மாட்டுச் சந்துசெய்யும் அமாத்தியர் இலக்கணம் கூறுதல்' என்னும் மணக்குடவர் கருத்தும் இதன் உண்மையைத் தெளிவுபடுத்தும்.

பரிமேலழகர் இவருடைய கருத்தை மேலும் சற்று விளக்கத்துடன் கூறுதலையும் இங்கு நோக்குதல் பொருத்தமாகும்.

> *"அஃதாவது சந்தி விக்கிரகப்பட்டு வேற்று வேந்தரிடைச் செல்வாரது தன்மை. அவ்விரண்டையும் மேல் வினைசெயல் வகை என்றமையின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது."*

> *"தான் வகுத்துக் கூறுவான், கூறியது கூறுவான் எனத் தூது இருவகைப்படும். அவற்றுள் முன்னோன் அமைச்சனோடு ஒப்பான் ஆகலானும் பின்னோன் அவனிற் காற்கூறு குணம் குறைந்தோன் ஆகலானும் இஃது அமைச்சியலாயிற்று."*

பரிமேலழகரின் இந்த விளக்கத்தால் தூதர் தன்மைகளும் அமைச்சர்க்குரிய தன்மைகளே என்றும், அத்தூதர் அமைச்சரோடு ஒப்பார் என்றும், அதனால் தூதுப்பகுதி உரைக்கும் அதிகாரங்களும் அமைச்சியலின் பாற்பட்டனவே என்பதும் விளங்கும்.

இவ்வதிகாரத்தின் பெயர் ஐந்து பாடல்களில் இடம் பெறுதல் (குறள் 681, 682, 685, 686, 690) கவனிக்கத்தக்கது. ஏனைய வற்றில், 'வென்றி வினையுரைப்பான்' (குறள் 688), 'காலத்தால் இடனறிந்து எண்ணி உரைப்பான்' (குறள் 686, 687), 'விடுமாற்றம் வேந்தர்க்குரைப்பான்' (689) என இத்தூதரின் இயல்புகளைச் சிறப்பித்துரைக்கும் தொடர்கள் வந்துள்ளன.

## 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

மன்னரைச் சேர்ந்து ஒழுகலாவது — அரசரிடத்து அமைச்சர் ஒழுகுமாறு கூறுவது. தன்னரசரிடம் மட்டுமன்றி தூதுவினை முதலியன ஏதுவாக மாற்றரசர்களிடம் சென்று பணிபுரிய வேண்டுதலினால் இஃது அவர்க்கு மிக இன்றியமையாததாகும். எனவே, தூது என்பதனை அடுத்து இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

"இது முதலாக அவையஞ்சாமை ஈறுகக் கூறுகின்றவை தம் அரசர்மாட்டு வேண்டுமாயினும் மாற்றரசர்மாட்டும் வேண்டுதல் இன்றியமையாத சிறப்புடைத்தாதலின், அதன்பின் இது கூறப் பட்டது" என மணக்குடவர் விளக்கும் அதிகார வைப்பு முறைக் காரணமும் கவனிக்கத்தக்கது.

இவ்வதிகாரத் தலைப்புப் பெயரைக் கொண்ட தொடர் இதன் கண் வரும் பாடல்களில் இல்லை. ஆனால், முதற்பாடலில் வரும் 'வேந்தர்ச் சேர்ந்தொழுகுவார்' (குறள் 691) என்பது அதிகாரப் பெயரின் பொருளை உணர்த்தும் வேறு தொடராகும்.

அரசரை அடுத்துப் பணி புரிவார் தீக்காய்வார் போல அகலாதும் அணுகாதும் அளவோடு பழகி (குறள் 691) அவ்வரசர்க்குத் தம்பால் ஐயமெழாத வகையில், அவர்தம் குறிப் பறிந்து, அவ்வரசர் உவக்கும் வகையில் பேசித் தாம் எண்ணிய காரியத்தை முற்றுவிக்க வேண்டும் (குறள் 696) என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## *71. குறிப்பறிதல்*

அரசர் கருதிய பொருளை அவர் கூறுமலே குறிப்பினுல் அறியும் திறம் கூறுவது. 'கூறுமை நோக்கிக் குறிப்பறிவான்' (குறள் 701), 'குறித்தது கூறுமைக் கொள்வார்' (குறள் 705), 'குறிப்பிற்குறிப் புணர்வார்' (குறள் 703, 705) என இவ்வதிகாரத்து வரும் பாடற் பகுதிகள் குறிப்புணர்தலின் இயல்பினை எடுத்துக்காட்டுகின்றன. பிறருடைய முகம் (குறள் 706, 707, 708), கண் (குறள் 705, 709, 710) என்பன அவர்களின் உளக் கருத்தை வெளிப்படுத்தி விடுமாதலின், அவற்றினுல் குறிப்பு உணரப்படும் என்றும் விவரிக்கப்பட்டுள்ளன.

இக் குறிப்பறிதல் உணர்ச்சி அமைச்சர்க்கு மட்டுமன்றி அரசர்க்கும் வேண்டும் எனக் கருத்துரைப்பதும் உண்டு. 'மன்னரைச் சேர்ந்தொழுகல்' என்பதனை அடுத்து, அமைச்சியலின் பகுதியாக வருதலால் அமைச்சருக்கே கூறியது எனக் கொண்டாலும், பொதுவகையான் 'குறிப்பறிதல்' பேசப்படுதலால் இருவருக்கும் இத்திறம் அவசியமாம் என்று கொள்வர். உரைகாரர் பரிப்பெருமாள், "குறிப்பறிதலாவது அரசர் உள்ளக்கருத்தை

அமைச்சர் அறிதலும் அமைச்சர் உள்ளக்கருத்தை அரசர் அறிதலும்'' என்கிருர். மணக்குடவரின் கருத்தும் இதுவேயாகும்.

மணக்குடவர் கூறும் விளக்கம் பின்வருமாறு:

*" குறிப்பறிதலாவது அரசர் உள்ளக்கருத்தை அமைச்சர் அறிதல். இஃது அமைச்சியலாதலின் அமைச்சர் குறிப்பறிதல் கூறியது என்னையெனின், குறிப்பறிதல் அரசர்க்கும் வேண்டுமாதலின், இறந்தது காத்தல் என்னும் தந்திர உத்தியால் கூறப்பட்டது என்க. இது பெரும்பான்மையும் அரசர்க்கும் வேண்டுமாதலின் மன்னரைச் சேர்ந்தொழுகலின்பின் கூறப்பட்டது. "*

இதனுல் மன்னர்க்கும் மன்னரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சர், தூதர் முதலாயினுர்க்கும் இப் பண்பு இன்றியமையாததொன்று என்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளமை காணலாம்.

சென்ற அதிகாரத்தில் வரும்,

*குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில*
*வேண்டுப வேட்பச் சொலல்* (குறள் 696)

என்னும் பாடல் அடுத்து வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் போல உள்ளமையும் கவனிக்கத்தகும். இந்தப் பாடலை மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காளிங்கர் ஆகியோர் அதிகாரத்தின் முதற்பாடலாக வைத்து அடைவு செய்துள்ளனர். இம் முதற் பாடலின் தொடக்கமாக உள்ள 'குறிப்பறிந்து' என்னும் பண்பே வரும் அதிகாரமாகிய குறிப்பறிதலாய் அமைதலும் இரண்டிற்கும் உள்ள தொடர்பினைப் புலப்படுத்தும்.

## 72. *அவையறிதல்*

அவையறிதலாவது அரசனேடு இருந்த அவையினது இயல்பினை அறிதலாம். அரசனுடைய குறிப்பு அறிந்தாலும் அவையிலுள்ளாரின் போக்குகளையும் அறிந்து பேசவேண்டுமாதலால் குறிப்பறிதலை அடுத்து இந்த அவையறிதல் அதிகாரம் வைக்கப் பட்டுள்ளது.

'அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக' என இவ்வதிகாரத்தின் தொடக்கப்பாடலிலேயே (குறள் 711) 'அவையறிதல்' என்னும் அதிகாரப்பெயர் அமைந்துள்ளது. மற்றும் இருபாடல்களில் 'அவை' என்பதும் (குறள் 713, 719), இதே பொருள்தரும் 'கோட்டி'

(குறள் 720) என்பதும் எடுத்தாளப்பட்டுள்ளன. 'கோட்டி' என்பது கூட்டம் என்னும் பொருள் தரும்.

### 73. அவையஞ்சாமை

அவையஞ்சாமையாவது சொல்லுதற்குரிய அவையினை அறிந்து உரையாடும்போது அதற்கு அஞ்சாது கருதிய பொருளை எடுத்துரைக்க வேண்டும் என்பதாம். அவையறிந்தாலும் அஞ்சாது சொல்லுதல் வேண்டுமாதலால் அதன்பின் இது கூறப்பட்டுள்ளது.

அவையகத்து அஞ்சுபவன் கற்ற நூலறிவு பயனற்றது. அவன் கல்லாதவரினும் கீழாக மதிக்கப்படுவான் என்று இடித்துரைத்தலோடு கற்றாரவையுள் தாம் கற்ற பொருளை அவர்தம் உளம் கொளச் சொல்லுதல் வேண்டும் என்றும் ஆசிரியர் அறிவுறுத்துகின்றார்.

'அவை' (721, 723-729) என்பது பெரும்பான்மைப் பாடல்களில் இடம் பெற்றுள்ளது. 'அவை' என்னும் பொருள் பயக்கும் 'களன்' என்பது ஒரு பாடலில் (குறள் 730) வந்துள்ளது. 'அவையகத்து அஞ்சாதவர்' (குறள் 723), 'அவையஞ்சா மாற்றம்' (குறள் 725) எனவரும் தொடர்கள் இவ்வதிகாரப்பெயரை அறிமுகப் படுத்துகின்றன.

பகைப்புலத்திற்குச் செல்வதை விடவும் அவையகத்துச் செல்வதற்கு அஞ்சாமை மிகுதியும் வேண்டும் (குறள் 723) என்று கூறியதோடு அவையகத்து அஞ்சுபவன் கற்றநூல் பகைப்புலத்து வன்கண்மை இல்லாப் பேடியின் கையிலுள்ள வாள் போன்றது (குறள் 726, 727) என்றும் ஒப்புக்காட்டி அவையஞ்சாமையின் அருமையைப் புலப்படுத்தியுள்ளனர்.

## 3. பொருளியல்

### 74. நாடு

அரசனாலும் அமைச்சனாலும் கொண்டு செலுத்தப்படுவதாய், பிற அரண் முதலிய அங்கங்களுக்கும் இடமாகிய நாட்டின் இயல்பு குறித்து ஓர் அதிகாரத்தால் கூறுகின்றார். "நீதி அரசரும் அமைச்சரும் கூடிவாழினும் தாமே பரிந்து கொள்ளும் நாடு அன்றி இயல்பினால் வாழும் நாடு இவ்வாறே வேண்டும் என்பதனால்"

'நாடு' என்னும் அதிகாரம் அரசியல், அமைச்சியலை அடுத்து வைக்கப்பட்டுள்ளது என்பது காளிங்கரின் கருத்து.

*படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு* (குறள் 381)

என்னும் பாட்டில் குறித்தபடியே அரசு, அமைச்சுப்பற்றிக் கூறி, இது முதலாக நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பனபற்றி முறையே வகுத்துரைக்கப்படுகிறது.

மணக்குடவரும் பரிப்பெருமாளும், நாடு, அரண், பொருள் செயல் வகை, படைமாட்சி, படைச் செருக்கு என்னும் ஐந்து அதிகாரங்களையும் 'பொருளியல்' என்று வகுத்துள்ளனர்.

பொருளாக்குதற்கு இடமாகிய நாட்டின் இயல்பு உரைப்பது 'நாடு' என்னும் அதிகாரம். அடுத்து அந்நாட்டிற்குக் காவலாகிய அரண் இயல்பு கூறுவது ஓரதிகாரம். இவ்விரண்டினுலும் ஆக்கப்பட்ட பொருளின் இயல்பு கூறுவது 'பொருள் செயல் வகை' எனப் பின்வரும் அதிகாரம். இதன் பின்னர் பொருளினுல் ஆக்கும் படையின் இயல்பும், அப்படையின் நன்மையாலாக்கும் படைச் செருக்கும் முறையே படைமாட்சி, படைச்செருக்கு அதிகாரங்களில் கூறப்படுகின்றன. இவ்வாறு ஐந்து அதிகாரங்களும் பொருளுக்கு ஏதுவானவை என்று எடுத்துக்காட்டப்படுதலும் பொருத்தமான கருத்தேயாகும்.[6]

இவ்வதிகாரத்தில் நாட்டின் இயல்பும், அந்நாட்டிற்குரிய உறுப்பும், நலனும் சிறப்பித்துரைக்கப்பட்டுள்ளன. எல்லாப் பாடல்களிலும் 'நாடு' என்னும் இவ்வதிகாரப் பெயர் அமைந்து வருதல் சிறப்பானதோர் அமைப்பு ஆகும்.

நாடு எவ்வளவு சிறந்த வளமுடையதாயினும் செங்கோல் மன்னனின் ஆட்சியில்லையேல் பயனில்லை என இறுதிப் பாடலால் நாட்டிற்கு உயிர் நிலையான கருத்தை ஆணித்தரமாக வற்புறுத்திக் கூறியுள்ளார்.

*ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே*
*வேந்தமை வில்லாத நாடு* (குறள் 740)

என்னும் பாடலை மணக்குடவர் முதலிய எல்லா உரைகாரர்களும் இறுதிப் பாடலாகக் கொண்டிருத்தலும் நாட்டிற்கு அரசனே உயிர் என்பதனைத் தெளிவிக்கும் நற்சான்ருகும்.

## 75. அரண்

அரணாவது அரணின் இலக்கணம் கூறுவது.

*மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*
*காடும் உடைய தரண்* (குறள் 742)

என இவ்வதிகாரத்துள் வரும் பாடல் கருத்தை ஒட்டி "நாலுவகை அரண் அரசர்க்கு வேண்டும்" என்று பரிதியார் கூறுவர்.

அரண் என்பதனைக் கூர்ந்து நோக்கினால் அது நாட்டிற்கு ஓர் உறுப்பாய் அடங்குவதே. அங்ஙனமாகவும் அது தனியாகச் சிறப்பிக்கப் பெற்றதற்குக் காரணம் பகைவரால் அழிவு வரும் காலத்து நாட்டிற்கும் அரசனுக்கும் அவ்வரண் பாதுகாவலாய் உதவுவதினாலே யாகும். இது பரிமேலழகரின் கருத்துரை.

மணக்குடவரோ, "மேல் நாட்டு இலக்கணம் கூறினார்; நகர் இலக்கணம் கூறுகின்றாராதலின் அதன்பின் கூறப்பட்டது" என்கிறார். அரண் என்பது ஆகு பெயராய் அரண் சூழ்ந்த நகரைக் குறிப்பது என்பது இவர் கருத்தாம்.

*இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்*
*வல்லரணும் நாட்டிற் குறுப்பு* (குறள் 737)

என முந்திய அதிகாரத்தில் வரும் பாடலில் வல்லரண் என்பதற்கு 'அழியாத நகரியும்' எனப் பரிமேலழகர் பொருள் கூறுதலும் இதற்குச் சான்றாம். நாட்டிற்கு உறுப்பாகக் கூறிய அரண் என்பது நாட்டை அடுத்து விவரிக்கப்படும் பொருத்தத்தை இப் பாடலாலும் உணரலாகும்.

'அரண்' என்னும் அதிகாரப்பெயர் முந்திய அதிகாரத்திற் போல இங்கும் எல்லாப் பாடல்களிலும் பயின்று வருதலும் ஒரு சிறப்பாகும்.

காளிங்கரும் நாடு, அரண் என்னும் இரண்டும் அடுத்து வருவதன் காரணத்தைக் கூறவந்த இடத்தும் மேற்கூறிய கருத்து விளங்கும் வகையில்,

*"இங்ஙனம் பொதுவகையான் நாட்டு அரண் கூறிப் பின்னர் மன்னர் பதியரண் கூறுதலும் இயல்பு ஆகலான், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்"*

எனக் கூறுதலும் இங்கு ஒப்பு நோக்கி உணரத்தகும்.

### *76. பொருள் செயல் வகை*

பெரும்பாலும் நாட்டாலும் அரணாலும் ஆக்கவும் காக்கவும் படுவதாய பொருளைச் செய்வதன் திறம் உரைப்பது பொருள் செயல் வகையாம். பொருள்தேடுமாறும் அதனால் பயன்கொள்ளுமாறும் இது கூறுகின்றது.

*எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்*
*நல்லாள் உடையது அரண்* (குறள் 746)

எனச் சென்ற அதிகாரத்தில் வரும் பாட்டு, அடுத்து வரும் இந்தப் பொருள் செயல் வகை, இனிவரும் படை மாட்சி, படைச் செருக்கு அதிகாரங்களுக்குத் தோற்றுவாயாகவும் உள்ளது.

இந்தக் குறளைச் சென்ற அதிகாரத்தின் இறுதிக் குறளாகக் காளிங்கர் கொண்டுள்ளமையும் இவ்வதிகார வைப்பு முறையைக் காட்டும் குறிப்பே யாகும்.

'பொருள் செயல் வகை' என்னும் இவ்வதிகாரப் பெயர்க் கருத்து, 'பொருளாக்கம்' (குறள் 755), 'செய்க பொருளை' (குறள் 759) எனவரும் இடங்களில் உள்ளது. இரண்டாவது எட்டாவது பாடல்கள் தவிரப் பிறவற்றில் 'பொருள்' என்பது இடம் பெறுகிறது.

பரிதியார், "பொருள் செயல் வகையாவது மூன்று வகைப் பொருள் தேடும் முறைமை சொல்வது" என்று உரைக்கும் கருத்து,

*உறுபொருளும் உல்கு பொருளும் தன்ஒன்னார்த்*
*தெறுபொருளும் வேந்தன் பொருள்* (குறள் 756)

என இவ்வதிகாரத்துள் வரும் குறளை நோக்கி உரைக்கப் பெற்றதாகல் வேண்டும்.

### *77. படை மாட்சி*

படைமாட்சியாவது அரசனுக்கு உரிய படையினது நன்மை கூறுதலாம். "அரசன் படையின் பெருமையைச் சொல்லுதல்" என்று பரிதியார் உரைக்கின்றார்.

மேற்கூறிய பொருளினால் படை உண்டாகும் ஆதலானும் அப்பொருளை ஈட்டுதற்கும் நுகர்தற்கும் படையின் துணை வேண்டுத லானும் பொருள் செயல் வகையைத் தொடர்ந்து படை மாட்சி யதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வதிகாரப் பெயராகிய 'படை' என்பதும் (குறள் 761, 762, 764-766, 769), இதன் பரியாயப் பெயராகிய 'தானை' என்பதும் (குறள் 767, 768, 770) பாடல்களில் எடுத்தாளப் பட்டுள்ளன. 'வெல் படை' (குறள் 761), 'தொல்படை' (குறள் 762) என்பன பற்றியும் விவரிக்கிறார்.

### *78. படைச் செருக்கு*

இது படையினது வீர மிகுதியை எடுத்துரைத்தலாம். 'செருக்கு' என்பதற்கு 'மறமிகுதி' (பரிமே.), 'வீரியம்' (மணக்.), 'வெற்றிப்பாடு' (பரிதி) என்றெல்லாம் உரைகாரர் கருத்துரைக்கின்றனர்.

முந்திய அதிகாரத்துள்,

*கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்*
*ஆற்ற லதுவே படை* (குறள் 765)

எனப் படையின் ஆற்றல் கூறும் பகுதியே 'படைச்செருக்கு' என்னும் அதிகாரமாக விரிவுற்றுளது. இந்தக் குறளைச் சென்ற அதிகாரத்தின் இறுதிக்குறளாகக் காளிங்கர் கொண்டிருக்கும் முறை இந்த அதிகாரத்திற்குத் தோற்றுவாயாகவும் உள்ளது. இங்கே வள்ளுவர் வீரர்களின் வாய்மொழியாகப் படையினது ஆற்றலை வெளிப்படுத்துகின்ற திறனும் கவனிக்கத்தகும்.

## *4. நட்பியல்*

### *79. நட்பு*

நட்பாவது நட்பின் தன்மையை விவரிப்பதாம். படைபோல அரசனுக்கு வினையிடத்து உதவுவது நட்பே. அரசனுக்குரிய அங்கங்கள் ஆறனுள் அமைச்சு, நாடு, அரண், பொருள், படை ஐந்தும் கூறியவர் அவற்றை அடுத்து நட்பாமாறு கூறுகின்றார்.

நட்புப்பற்றித் திருக்குறளில் வரும் அதிகாரங்கள் பதினேழு. அவற்றுள் நட்பு (அதி. 79), நட்பாராய்தல் (அதி. 80), பழமை (அதி. 81), தீ நட்பு (அதி. 82), கூடாநட்பு (அதி. 83) என்னும் முதல் ஐந்தும் விதிமுகத்தான் உரைப்பவை என்றும், பேதைமை (அதி. 84) முதலாக மருந்து (அதி. 108) ஈறாக உள்ள பன்னிரண்டு அதிகாரங்களும் எதிர்மறை முகத்தான் நட்பிலக்கணம் கூறுவன என்றும் பரிமேலழகர் விளக்குகிறார்.

"படைச் செருக்கால் எதிர்மலைவு காட்டி மற்று இதன் பின்பு இனிது மேவி நட்புப்புரிந்து ஒழுகவேண்டி" படைச்செருக்கினை அடுத்து 'நட்பு' பற்றியதிறம் பேசப்படுகிறது என்கிறார் காளிங்கர்.

அரசன் நாடு அரண் பொருள்களைப் பெற்று, அவற்றை அழியாமல் காக்கும் படையை உடையனுயினும் நட்பினர் துணையும் அவனுக்கு இன்றியமையாது வேண்டும் என்பதாம். அரசன் காமத்தினுலாவது மயக்கத்தினுலாவது முறைபிறழ்ந்து நடந்தால் எல்லாப்பொருளையும் கெடுப்பதோடு தானும் கெடுவான். தன்னிலும் பெரியராகிய அமைச்சர் புரோகிதரை ஒழித்தும், தன் ஏவல்வழிப் படும் அமாத்தியரைக் கேளாதும் ஒழுகுவான். ஆதலால், அந்த இடத்தில் உடன்பட்டு நின்று பாதுகாக்கும் துணைவேண்டும் என்பது குறித்து இந்நட்பு அதிகாரம் இங்கு வைக்கப்படுகிறது என்பது அதிகார அடைவு பற்றிய பரிப்பெருமாளின் கருத்து.

நட்புப்பொருளை விவரிக்கும் விதிமுறை அதிகாரங்களின் போக்கும் முறையும் குறித்தும் பரிப்பெருமாள் இவ்வதிகாரத்தின் தோற்றுவாயுள் பின்வருமாறு விளக்குகின்றார் :

> *"அது கூறிய அதிகாரம் ஐந்தினும் முற்பட நட்பு இலக்கணம் ஓரதிகாரத்தானும், அவரை ஆராயுமாறு ஓரதிகாரத்தானும், நட்கப்படாதார் இலக்கணம் ஓரதிகாரத்தானும், மனத்தினுல் நட்பின்றி நட்டார்போன்று ஒழுகுவார்திறன் ஓர் அதிகாரத் தானும் கூறப்பட்டது."*

'நட்பு' என்னும் இவ்வதிகாரப்பெயர் பெரும்பான்மைப் பாடல் களிலும் இவ்வதிகாரத்துள் வந்துள்ளதோடு (குறள் 781, 782, 785-790) 'கேண்மை' (குறள் 782), 'தொடர்பு' (குறள் 783) என்னும் சொற்களாலும் இப்பொருளைக் குறிப்பிடுவர். பின்வரும் நட்புப்பற்றிய அதிகாரங்களில் இச் சொற்கள் எடுத்தாளப்படுதலும் கவனிக்கத்தகும். 'நட்டல்' என்று தொழிற்பெயர் வடிவிலும் ஒரு குறளில் (784) வந்துள்ளது.

### *80. நட்பாராய்தல்*

இது நட்பு ஆவாரை ஆராய்ந்துகொள்ளுமாறு கூறுவது.

> *குணனும் குடிமையும் குற்றமும் குன்றா*
> *இனனும் அறிந்தியாக்க நட்பு* **(குறள் 793)**

எனவரும் குறள் நட்பினரை ஆராயும் வகைமை உரைக்கின்றது. 'நாடாது நட்டல்' (குறள் 791), 'ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை' (குறள் 792) என்பன நட்பு ஆராய்தல் அவசியம் என்பதனை வற்புறுத்தும்பொருட்டே கூறப்பட்டுள்ளன. எவ்வெவ் வகையில் நட்பினரை ஆராய்ந்து பார்க்கவேண்டும், எவர்எவர் நட்புக் கொள்ளத்தக்கது (குறள் 791-796), எவர்எவர் நட்புத் தள்ளத் தக்கது (குறள் 797-800) என்றெல்லாம் இவ்வதிகாரத்துள் விவரித் துரைக்கப்பட்டுள்ளன. நட்பாளரைக் 'கிளைஞர்' (குறள் 796) என்று குறிப்பிடுகின்றார்.

நட்புச் செய்யும் காலத்து ஆராய்ந்து தெளிந்து நட்புக்கொள்ள வேண்டும் என்பதால் முன்னைய அதிகாரத்தோடு இது தொடர்புடை யதாக உள்ளது.

### *81. பழமை*

நட்டாரின் பழையராம் தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல் வேண்டும் என்பதாம்.

*பழமை எனப்படுவது யாதெனின் யாதும்*
*கிழமையைக் கீழ்ந்திடா நட்பு* (குறள் 801)

என இவ்வதிகாரத்தின் முதற் பாடலில் ஆசிரியர் பழமை என்பதன் பொருளை விளக்குகின்றார். அதாவது பழமை எனப்படுவது உரிமையை ஒருசிறிதும் சிதையாமல் அதற்கு உடம்படு நட்பாம் என்பது இதன் கருத்து. 'பழகிய நட்பு' (குறள் 803), 'தொல்லைக் கண் நின்றார் தொடர்பு' (குறள் 806), 'வழிவந்த கேண்மையவர்' (குறள் 809), 'பழையார்' (குறள் 810) என்று இவ்வாறு நட்பாளரின் பழமைத் தொடர்பு காட்டப்படுகிறது.

ஆராய்ந்து நட்புச் செய்யப்பட்டாராயினும் அவரிடம் ஊழ் வயத்தான் பிழை உளதாம் என்றும், அவரால் உரிமைபற்றிச் செய்வனவற்றையும் பொறுக்கவேண்டும் என்றும் எடுத்துக் கூறுவதால், இது நட்பாராய்தலின் பின் வைக்கப்பட்டுள்ளது ஆராய்ந்து நட்புச் செய்தவிடத்தும் நட்டாரிடம் பிழை காணப் பட்டால் பொறுக்க வேண்டும் என 'நட்பிற் பிழை பொறுத்தலை'க் கூறுவதால், முந்திய அதிகாரத்தோடு இது பெரிதும் தொடர் புடையதாம்.

*பேதைமை ஒன்ரோ பெருங்கிழமை என்றுணர்க*
*நோதக்க நட்டார் செயின்* (குறள் 805)

என்னும் குறள் பிழை பொறுக்கும் வகைமையை எடுத்துரைத்தலும் காணத்தகும்.

## *82. தீ நட்பு*

தீக்குணத்தாரோடு உளதாகிய நட்பு தீ நட்பாம். "தீ நட்பாவது தீய குணத்தாராகிய மாந்தரோடு நட்டதனுல் வரும் குற்றம் கூறுதல்'' என்கிருர் மணக்குடவர். குணத்தின் தீமை ஒற்றுமை பற்றி அதனை உடையார் மேலதாய், அது பின் அவரோடு செய்த நட்பின் பாலதாகின்றது. பொறுக்கக் கூடாத குற்றம் உடைமையால் இத்தீயார் நட்பு விடத்தக்கதாம்.

நட்பாராய்தலில்,

*குணனும் குடிமையும் குற்றமும் குன்ரு*
*இனனும் அறிந்தியாக்க நட்பு* (குறள் 793)

எனக் குற்றமுடையாரை ஆராய்ந்து விடுக்க எனச் சுருங்கச் சொல்லிய அளவில் அடங்காததால், குற்றமுடையாரைத் தீ நட்பினர், கூடா நட்பினர் எனக் கொண்டு இந்த அதிகாரத்திலும் வரும் அதிகாரத்திலும் முறையே விலக்கிக் கூறுகிருர்.

விடத் தகாத நன்னட்பாளரிடம் ஏதாகிலும் பிழை கண்டால் பொறுத்து அவருடைய நட்பை விடாது போற்றுக என்றதனை அடுத்து, பொறுக்கக்கூடாத அளவு மிகையான குற்றமுடைய தீ நட்பு, கூடா நட்புகளை விடுக என விலக்குவதனுல் முன்னைய அதிகாரத்தோடுள்ள தொடர்பு விளங்கும்.

'தீ நட்பு' என்னும் அதிகாரப்பெயர் இவ்வதிகாரப் பாடல்களில் இடம் பெறவில்லை. ஆனுல், நட்பு, கேண்மை, தொடர்பு என்னும் சொற்களோடு தீமையைக் குறிக்கும் வெவ்வேறு அடைமொழிகளைச் சேர்த்து, அதிகாரப் பெயர்ப் பொருளை வள்ளுவர் தெளிவிக்கின்ருர். 'கிளைஞர்' (குறள் 796) என்ருற்போல 'தமர்' என்னும் சொல் (குறள் 814) இவ்வதிகாரத்துள் வருகிறது.

'பண்பிலார் கேண்மை' (குறள் 811), 'ஒப்பிலார் கேண்மை' (குறள் 812), 'சிறியவர் புன்கேண்மை' (குறள் 815), 'பேதை பெருங்

கெழீஇ நட்பு' (குறள் 816), 'நகைவகையராகிய நட்பு' (குறள் 817) 'வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு' (குறள் 819) என்பன போன்ற தொடர்கள் இவ்வதிகாரத்துள் வந்துள்ளன.

நட்பு ஆராய்தலில் கூறிய கருத்தையே இங்கும் ஆசிரியர் கூறுவது கூறியது கூறலாகுமா என்னும் ஒரு வினவைப் பரிப்பெருமாள் எழுப்பி, அதற்கு விடையும் தருகிறார். அவை இவ்வதிகாரப் பொருளையும் முறையினையும் விளக்குதலால் இங்குப் பார்த்தல் பொருத்தமாகும். அவர் கூறும் தடைவிடை பின் வருமாறு:

> *"மேல் நட்பு ஆராய்தல் கூறுகின்றுழி நட்கப்படாதாரைக் கூறி ஈண்டும் கூறுதல் கூறியது கூறலாம் பிற எனின்— அற்றன்று: அதனுள் நட்கப் படாதாரைக் கூறினார். இதனுள் அவரால் பயனின்மை கூறினாராதலின் வேறு படுத்துக் கூறப்பட்டது என்க. மேல் நட்பினால் வரும் பயனும் அவரோடு ஒழுகும் திறமும் கூறினார்; இது நட்பினால் வரும் பயன் கூறுகின்றது. ஆதலின் அதன்பின் கூறப்பட்டது."*

## *83.* கூடா நட்பு

'கூடா நட்பு' என்பது பகைமை காரணமாக உள்ளத்தால் கூடாது இருந்து தமக்கு வாய்க்கும் இடம் வருவது வரையிலும் புறத்தால் கூடி ஒழுகுவார் நட்பு. செப்பின் சேர்க்கை போலச் சேர்ந்தும் சேராமல் இருக்கும் இயல்பினது என ஆசிரியர் வள்ளுவர் கூறும் (குறள் 887) 'உட்பகை' போன்றதே இக் கூடா நட்பும்.

'நேரா நிரந்தவர் நட்பு' (குறள் 821), 'இனம் போன்று இனமல்லார் கேண்மை' (குறள் 822), 'அகத்தின்னா வஞ்சர்' (குறள் 824), 'மனத்தின் அமையாதவர்' (குறள் 825), 'ஒட்டார்' (குறள் 826), என்று இவ்வாறெல்லாம் கூடாநட்பினரின் தன்மை இவ்வதிகாரத்து உணர்த்தப்பட்டாலும், 'கூடா நட்பு' என்னும் அதிகாரப் பெயர் அவ்வாறே எங்கும் பயிலவில்லை.

இவ்வதிகாரப் பொருளையும் முறைவைப்பையும் குறித்து மணக்குடவர் தரும் விளக்கமும் தெளிவாக உள்ளது. ஆதலின் இங்கு அவருரையையும் உடன்வைத்துப் பார்த்தல் பொருத்தமாகும். அவர் தரும் விளக்கம் வருமாறு:

> *"கூடா நட்பாவது சுற்றத்தாராயினும் பிறராயினும் மனத்தினால் கள்ளாது நட்டாரைப் போல ஒழுகுவாராது இயல்பும்*

*அவர்மாட்டும் ஒழுகுந் திறமும் கூறுதல். தமக்கு இனம் அன்றிக் கருமம் காரணமாக நட்பாரும், பகைவராய் நட்பாரும் என அவ்விருவகையாரையும் தீ நட்புப் போலக் கடிய வேண்டு தலின், அதன்பின் இது கூறப்பட்டது.''*

*"இனி இங்ஙனம் உறின் நட்டு அறின் ஒருஉம் தீ நட்பினும் கொடிது கூடாதார் நட்பே; அதனால், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்"*

என்னும் காளிங்கர் தரும் அதிகார முறைவைப்பு விளக்கமும் காணத்தகும்.

## *84.* பேதைமை

பேதைமையாவது கேட்டிற்குக் காரணமாகியவற்றை அறியாதோரின் இயல்பு கூறுதலாம்.

*பேதைமை என்பது யாதெனின் ஏதங்கொண்டு*
*ஊதியம் போக விடல்* (குறள் 831)

என இந்த அதிகாரத்தின் தொடக்கப் பாடலிலேயே வள்ளுவர் பேதைமையின் இயல்பினை விளக்குகின்றார். "தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுதல் பேதைமை" என்பதாம். 'பேதைமை' என்னும் இவ்வதிகாரப் பெயர் பாடல்களில் பயின்று வருவதோடு (குறள் 831, 832), பேதை (குறள் 833, 835 - 838, 840), பேதையார் (குறள் 834, 839) என்னும் சொற்களும் பாடல்களில் வந்துள்ளன.

இதுவரை இறைமாட்சி (அதி. 39) தொடங்கி, கூடாநட்பு வரையில் பொருட்பகுதியாகிய அரசும், அதற்கு அங்கமான அமைச்சும் நாடும் அரணும் பொருளும் படையும் நட்பும் என்று சொல்லப்பட்ட ஆறு உறுப்பும் வள்ளுவர் வகுத்துரைத்தனர்.

இனி, அவ்வரசர்க்கும் அவராலாக்கப்பட்ட பொருளுக்கும் கேடு வரும் நெறியை அறிந்து காக்குமாறு கூறத் தொடங்குவார் யாதும் அறியாமையாகிய பேதைமையின் கேட்டினை முதற்கண் எடுத்துக் கூறி விலக்குகின்றார்.

இது முதல் மருந்து ஈருகக் கூறிய அதிகாரங்கள் பன்னிரண்டனையும் மணக்குடவர் 'துன்பவியல்' எனப் பாகுபடுத்துகின்றார். பரிமேலழகரோ முற்கூறிய நட்பினை எதிர்மறுத்துப் பகைமுகத்தால்

கூறுவதாக உரைக்கின்றார். இதுபற்றி அவர்தரும் கருத்துரை வருமாறு:

"இனி அந் நட்பினை எதிர்மறுத்துப் பகைமுகத்தால் கூறிய தொடங்கினர். அப்பகைதான் முற்றக்கடியும் குற்றமன்மை யின் உளவாய வெகுளியானும் காமத்தானும் வருவதாம். அவற்றுள் வெகுளியான் வருவன ஐந்து அதிகாரத்தானும், காமத்தான் வருவன ஐந்து அதிகாரத்தானும் கூறுவார், அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை இருவகைப்படுத்து இரண்டு அதிகாரத்தான் கூறுவான் தொடங்கி முதற்கண் பேதைமை கூறுகின்றார்."

இங்ஙனமாக இது முதல்வரும் 12 அதிகாரத்திற்கும் ஆன முறைவைப்புக் காரணம் பரிமேலழகர் காட்டியபடி இவ்வாறு அமையும்:

1. மயக்கத்தால் வரும் பகை (குற்றம்):

| | | |
|---|---|---|
| (1) | பேதைமை | (அதி. 84) |
| (2) | புல்லறிவாண்மை | (அதி. 85) |

2. வெகுளியான்வரும் குற்றம்:

| | | |
|---|---|---|
| (1) | இகல் | (அதி. 86) |
| (2) | பகைமாட்சி | (அதி. 87) |
| (3) | பகைத்திறம் தெரிதல் | (அதி. 88) |
| (4) | உட்பகை | (அதி. 89) |
| (5) | பெரியாரைப் பிழையாமை | (அதி. 90) |

3. காமத்தால் வரும் குற்றம்:

| | | |
|---|---|---|
| (1) | பெண்வழிச் சேறல் | (அதி. 91) |
| (2) | வரைவின் மகளிர் | (அதி. 92) |
| (3) | கள்ளுண்ணாமை | (அதி. 93) |
| (4) | சூது | (அதி. 94) |
| (5) | மருந்து | (அதி. 95) |

மேற்கூறிய துன்பியல் கூறுகிய இவை ஒரு நாட்டிற்கு ஆகா என நாடு என்னும் அதிகாரத்துள் வள்ளுவர் விலக்கியனவாகும் என்பதும் ஈண்டுச் சிந்தித்தற்குரியது.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. (குறள் 734)

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு. (குறள் 735)

இக் குறள்களின் பொருளினை விரிவாக எடுத்துரைப்பனவே இகல், உட்பகை, மருந்து முதலியனவாக உள்ள அதிகாரங்கள்.

## 85. புல்லறிவாண்மை

புல்லறிவாண்மை என்பது புல்லிய அறிவினை ஆளும் தன்மை என விரிந்து சிற்றறிவினனுகும் இயல்பினை எடுத்துரைக்கும். ஒருவன் தான் சிற்றறிவினனுயிருந்தும் தன்னைப் பேரறிவினனுக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொற்களைக் கொள்ளா திருத்தலாம்.

'புல்லறிவு' (குறள் 846), 'அறிவின்மை' (குறள் 841), 'அறிவிலான்' (குறள் 842, 847), 'அறிவிலார்' (குறள் 843), 'வெண்மை' (குறள் 844) என்றெல்லாம் இவ்வதிகாரத்துக் கூறப் பட்டுள்ளன. என்றுலும், 'புல்லறிவாண்மை' என்னும் அதிகாரத் தொடர்ப் பெயர் இவ்வதிகாரப் பாடல்களில் இல்லை.

*நில்லாத வற்றை நிலையின என்றுணரும்*
*புல்லறி வாண்மை கடை* (குறள் 331)

என்ற பாடலில்தான் இத் தொடர் குறள் நூலகத்தே காணப்படுகிறது. இழிந்த அறிவு, தாழ்வான அறிவு என்பது இத் தொடரின் பொருள்.

இவ்வதிகாரத்தில் சிற்றறிவின் இயல்பும் அதனுல் வரும் குற்றமும் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. இது பேதைமையோடு ஒத்த இயல்பாதலால் அதன்பின் கூறப்பட்டது.

> "*தமக்குள்ள மதிகொண்டு பழுதுடன் சில கற்றும் கல்லாதும் பேரறிவு உடையர் ஆகப் பாவித்திருக்கும் புல்லறிவாளர் அறிவும் பேதைமையின்கண் ஓர் உரு ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலே அதிகாரம்*"

எனக் காளிங்கர் தரும் அதிகாரமுறைவைப்புக் காரணமும் இங்கே கருதத்தகும்.

## 86. இகல்

இகலாவது புல்லறிவினர்க்கு உண்டாம் மாறுபாடு. பிறரோடு மாறுகொண்டால் வரும் குற்றம் இங்கு எடுத்துக்கூறப்படுகிறது. பேதைமை, புல்லறிவாண்மை காரணமாக உளதாகும் வெகுளி

காமங்களுள் அரசர்க்கு வெகுளி பெரும்பான்மைத்து. ஆதலால் அதனுல் வருவன கூறுவார் முதலில் இகல் கூறுகின்ருர். இஃது அறிவின் மாட்சி இல்லாதார்க்கு உளதாம் ஆதலால் புல்லறிவாண் மையை அடுத்து இகலான் வரும் ஏதம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

*இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்*
*பண்பின்மை பாரிக்கும் நோய்* *(குறள் 851)*

என இகலின் இயல்பு இத்தகையது என முதற்குறளில்தானே வள்ளுவர் எடுத்துரைக்கின்ருர். எல்லா உயிர்களுடனும் கூடாமை என்னும் தீய குணத்தை வளர்க்கும் குற்றமே இகல் என்பது இதன் கருத்து.

இகல் என்னும் அதிகாரப்பெயர் இவ்வதிகாரத்துள் வரும் எல்லாப் பாடல்களிலும் பயின்றுவருகின்றன. இகல் என்பதன் எதிர்மொழி நகல்; அதாவது நட்பு.

*இகலானும் இன்னாத எல்லாம் நகலானும்*
*நன்னயம் என்னும் செருக்கு* *(குறள் 860)*

எனவரும் இவ்வதிகாரத்தின் இறுதிப்பாட்டு இகல் நகல் இவற்ருல் உளதாம் பயன்களை எடுத்துரைக்கின்றது.

## *87. பகை மாட்சி*

பகைமாட்சியாவது பகைகொள்ளுங்கால் தனக்கு நன்மை பயக்குமாறு கொள்ளுதல்வேண்டும் என்பதாம். மேலே அதிகாரத்துப் பகை கொள்ளலாகாது என்று விலக்கியவர் நன்மை பயக்குமாறுல் பகை கொள்ளலாம் என்பதால் அதன்பின் கூறப்பட்டது.

அரசர்க்கு எவ்வகையினும் முற்றும் பகையின்மை என்பது இல்லாத தொன்ரும். ஆகவே, மேல் பொதுவகையால் விலக்கப் பட்ட இகலை இங்குச் சிறப்பு வகையால் விவரிக்கின்ருர். எனவே, அதன்பின் இப் பகைமாட்சி கூறப்படுகிறது என்பது பரிமேலழகரின் கருத்து.

யார் யார் பகைக்கத்தக்கார், எத்தகைய பகைவர் வெல்லுதற்கு எளியர் என்றெல்லாம் எடுத்துரைத்துள்ளார். பகை (குறள் 861, 863, 867), பகைவர் (குறள் 869) என்பன இவ்வதிகாரப் பாடல் களில் பயின்றுவருகின்றன.

*காணுச் சினத்தான் கழிபெருங் காமத்தான்*
*பேணாமை பேணப் படும்* (குறள் 866)

என மிக்க சினமும் காமமும் உடையான் கெடுவன் என்றும், இவனுக்கு யாவரும் பகையாவர் என்றும் எடுத்துக்காட்டுதலால் இவரையெல்லாம் பகைவராகக் கருதி ஒழிப்பது நாட்டிற்கும் நன்மை என்பதும் அறியத்தகும்.

## *88. பகைத்திறம் தெரிதல்*

பகைவர்களின் நிலைமையை ஆராய்ந்து அறியவேண்டும் என்பதுபற்றிக் கூறுகிறது. பகையாயுள்ளாரில் வெல்லற்குரியார் அல்லாதார் நிலைமையை அறிதல்வேண்டும் என்பதாம். பகைவர் மாட்டு எண்ணிச் செயல்புரிய வேண்டுமாதலால் பகைமாட்சியை அடுத்து, அவர்தம்திறம் தெரிதல் கூறப்படுகிறது.

முன்பு, நட்பு (அதி. 79), நட்பாராய்தல் (அதி. 80) என இரு அதிகாரங்கள் அமைந்ததுபோல இங்கும் பகைமாட்சி, பகைத்திறம் தெரிதல் என ஈரதிகாரங்கள் வருதலும் ஒப்பு நோக்கி உணரத்தகும். சென்ற அதிகாரத்திற்போல இங்கும் பகை (குறள் 871-875), பகைவர் (குறள் 877-878), செயிர்ப்பவர் (குறள் 880) என்னும் சொற்கள் பாடல்களில் வருதலும் கவனிக்கத்தகும்.

பரிமேலழகர் இந்த அதிகாரப் பெயரை இரட்டுறமொழிதலாகக் கொண்டு பகையதுதிறம் என ஆறும் வேற்றுமைத்தொகையாகவும் பகையிடத்து ஆக்கும் திறம் என ஏழாம் வேற்றுமைத் தொகை யாகவும் கொண்டு பொருள் விளக்கம் செய்கின்றார்.

> *"மாணாத பகையை ஆக்குதற் குற்றமும் முன் ஆகிநின்ற பகையுள் நட்பாக்கற் பாலதும், நொதுமலாக்கற்பாலதும், அவற்றின்கண் செய்வதும், ஏனைக் களைதற்பாலதன்கட் செய்வனவும், களையும் பருவமும், களையாக்காற்படும் இழுக்கும் என்று இத்திறங்களை ஆராய்தல்"*

என்பது பரிமேலழகரின் உரைவாக்கியம்.

வில் வீரர் பகை கொண்டாலும் சொல்லின் திறமுடைய கற்றுணர்ந்த சான்றோரோடு பகைகொள்ளுதல் ஆகாது என்பது குறித்துவரும்,

வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை (குறள் 872)

என்னும் பாட்டு சொல்வன்மை (அதி. 65), சான்ருண்மை (அதி. 93) என்னும் அதிகாரங்களோடு பெரிதும் தொடர்புடையதாம்.

## *89. உட்பகை*

உட்பகை என்பது நட்பினர்போன்று உடன்கூடி வாழும் பகைவர். அஃதாவது இவர் வெளித்தோற்றத்தில் நட்பினர்போன்றும் சுற்றத்தாராயும் நெருங்கிப் பழகிக்கொண்டே உள்ளத்தில் பகைமை எண்ணிக்கொண்டிருப்பார் என்பதாம்.

இந்த உட்பகை வெளிப்பகைக்கு இடமளித்து அது வெல்லு தற்குத் துணைபுரியும் நோக்குடன் உள்ளதாகும்.

முந்திய அதிகாரத்தில் வெளியாய் நிற்கும் பகைவரைத் தெரியும் வகை கூறப்பட்டுள்ளது. இதில் உடன்வாழும் உட்பகை யின் திறம் கூறுகிருர். புறத்தே தெரியும் பகையைவிட உள்ளத்தே பகைகொண்டுள்ளவரின் தொடர்பு பெருங்கேடு என அடுத்து விளக்கப்படுவது தொடர்புகருதியும் ஒன்றில் ஒன்று மிகத் தீமை பயப்பது பற்றியுமேயாகும்.

'உட்பகை' என்னும் இந்த அதிகாரப்பெயர் பல பாடல்களில் வருவதோடு (குறள் 883-885, 887-889), 'கேள்போல் பகைவர்' (குறள் 882), 'உடம்பாடிலாதவர்' (குறள் 890) என உட்பகையின் பொருளை விளக்கும் தொடர்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. நட்பி னருள் 'கூடா நட்பு' (அதி. 83) போன்றதே பகைவருள் இந்த 'உட்பகை.'

## *90. பெரியாரைப் பிழையாமை*

பெரியாரைப் பிழையாமையாவது தம்மினும் பெரியாராகிய அரசர், முனிவர், அறிஞர் முதலாயினுரை அவமதித்து இகழாமையாம்.

பரிமேலழகர், இங்கே பெரியார் என்றது அரசரையும் முனிவரை யுமே குறிக்கும் என்று கூறுகின்ருர். "இரட்டுறமொழிதல் என் பதனுல் பெரியார் என்பது ஆற்றலால் பெரியராய வேந்தர்மேலும்,

துவத்தால் பெரியராய முனிவர்மேலும் நின்றது'' என்பது அவருடைய உரைவாக்கியம்.

பெரியாரைப் பிழையாமை என்னும் அதிகாரத்தின் பிரதிபலிப்பை, 'பெரியாரைப் பேணுது ஒழுகின்' (குறள் 892), 'பெரியார்ப் பிழைத்தொழுகுவார்' (குறள் 896) என இவ்வதிகாரத்துள்ள இரு பாடல் தொடர்களில் காணலாம். மேலும், பெரியாரை (குறள் 892), 'ஆற்றுவார்' (குறள் 891, 894), 'ஆற்றுபவர்' (குறள் 893), 'தக்கார்' (குறள் 897), 'குன்றன்னுர்' (குறள் 898), 'ஏந்திய கொள்கையார்' (குறள் 899), 'சிறந்தமைந்த சீரார்' (குறள் 900) என்னும் தொடர்ப் பெயர்களாலும் குறிப்பிட்டுள்ளார்.

பெரியார் பிறரைப் பகையாகக் கொள்ளாவிட்டாலும் அவரைப் பிறர் இகழும் இகழ்ச்சி காரணமாக அவரால் தீமை வரும் என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. வெகுளியான் வரும் துன்பங்களின் இறுதியில் எல்லாவற்றிற்கும் எச்சமாக இது வைக்கப்பட்டுள்ளது என்கிறுர் பரிமேலழகர்.

பெரியாரைத் துணைக்கோடல் (அதி. 45) வேண்டும் என முன்பு அரசியலில் கூறிய அதிகாரப் பொருளை எதிர்மறை முகத்தால் காட்டுவதே இவ்வதிகாரம். துணைக்கோடலுக்கு வழிநடத்திச் செல்வது இவ் இகழாமையாம்.

### *91. பெண்வழிச் சேறல்*

மனையாள்வழி ஒழுகுதலினுல் வரும் குற்றம். அதாவது மனையாளுக்கு அஞ்சி அவள் சொன்னதைச் செய்து ஒழுகுதலாம். தன் வழியே ஒழுகவேண்டியவளாகிய இல்லாளின் வழியே தான் ஒழுகுவது ஆக்கம் சிதையவும் அழிவுநேரவும் ஏதுவாம்.

இதுமுதல் மருந்து ஈருகிய ஐந்து அதிகாரங்களும் காமம் காரணமாகவரும் குற்றம் என்றும், இவை ஒருவனுடைய ஆக்கத்தை அழித்து அழிவைத் தரும் என்றும், இத் தொழில்களால் இவை பகையின்பாற்படும் என்றும் பரிமேலழகர் கூறுகின்ருர். வெகுளியால் வரும் தீங்குகளை அடுத்துக் காமம் பற்றிவரும் தீங்கினை எடுத்துரைக்கின்ருர் வள்ளுவர் என அவர் கருதுகிருர்.

இவ்வதிகாரங்களைத் துன்பப்பகுதி எனக் கொண்ட மணக்குடவர் இதுவரை பிறரால் நேரும் துன்பப் பகுதி கூறி, இது

முதலாகத் தன்னால் வரும் துன்பப்பகுதி கூறுகின்றார் என்பர். இவர் காட்டும் தன்னால் வரும் துன்பப் பகுதிகளாவன: (1) இன்பம் காரணமாக மனையாள்வழி ஒழுகுதல், (2) கணிகையரோடுகூடி ஒழுகுதல், (3) நறவுண்டு களித்தல், (4) சூதாடுதல், (5) தீய உண்டி மிக உண்டல்.

'பெண்வழிச் சேறல்' என்னும் இவ்வதிகாரத்துள் இவ்வகை இயல்பினரை வள்ளுவர் வெவ்வேறு தொடர்களால் விளக்கிக் காட்டும் பொருள் நுட்பம் சிறப்பாக உள்ளது. 'மனைவிழைவார்' (குறள் 901), 'பெண்விழைவான்' (குறள் 902) 'இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு' (குறள் 903), 'மனையாளை அஞ்சும் மறுமையிலாளன்' (குறள் 904), 'இல்லாளை அஞ்சுவான்' (குறள் 905), 'இல்லாள் தோள் அஞ்சுபவர்' (குறள் 906), 'பெண் ஏவல் செய் தொழுகும் ஆண்மை' (குறள் 907), 'பெண் ஏவல் செய்வார்' (குறள் 909), 'நன்னுதலாள் பெட்டாங்கு ஒழுகுபவர்' (குறள் 908), 'பெண் சேர்ந்தாம் பேதைமை' (குறள் 910). இவற்றால் மனையாளை அஞ்சுதலும், அவள் சொன்னது செய்தலும், அவளிடத்து அறம் சாரா மிக்க காதலும் தீங்குதரும் என்பதும் குறிக்கப்பட்டுள்ளமை காணலாம்.

## *92. வரைவின்மகளிர்*

வரைவின் மகளிராவது பொதுமகள் இயற்கை கூறுதலாம். இவர் தம் நலத்தை விலைகொடுப்பார் எல்லார்க்கும் விற்பரே யல்லாமல் அதற்கு ஆவார் இவர், ஆகார் இவர் என்று வரையறை கொள்ளாது ஒழுகும் இயல்பினர். இதனால் இவர் 'வரைவின் மகளிர்' என்னும் பெயர் பெறுகின்றனர்.

'வரைவிலா மாணிழையார்' என ஒன்பதாம் பாடலில் வரும் தொடர் அதிகாரப் பெயரை ஒட்டி அமைந்ததாகும். இவருடைய கருத்தெல்லாம் பிறர் தரும் பொருள்மேல்தான். இது கருதி, 'பொருள் விழையும் ஆய்தொடியார்' (குறள் 911), 'பொருட் பெண்டிர்' (குறள் 913), 'பொருட் பொருளார்' (குறள் 914) என்று குறிக்கப்படுகின்றனர். பொருள் விருப்பால் பிறரைச் சேரும் இவர் உண்மையான அன்பில்லா மாயச் செய்கையை உடையவராவர். 'பண்பில் மகளிர்' (குறள் 912), 'புன்னலம் பாரிப்பார்' (குறள் 916), 'பிற நெஞ்சிற் பேணிப் புணர்பவர்' (குறள் 917), 'இருமனப்

பெண்டிர்' (குறள் 920), 'பொதுநலத்தார்' (குறள் 915), 'மாய மகளிர்' (குறள் 918) என்றெல்லாம் வள்ளுவர் இவ்வதிகாரப் பாடல்களில் அறிமுகப்படுத்தும் தொடர்கள் இவர்தம் போக்கினை நன்கு எடுத்துக்காட்டுவனவாம்.

மேலே அதிகாரத்தில் தமக்குரிய மனைவியர்மாட்டு மிக்க காதலினால் வரும் குற்றம் கூறப்பட்டது; இது கணிகையரிடம் கொள்ளும் காமத்தினால் வரும் குற்றம் கூறுகிறது. ஆதலால், அதன் பின்னர் இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

## *93. கள்ளுண்ணாமை*

கள்ளுண்ணாமையாவது கள் உண்ணுதலைத் தவிர்த்தலாம். கள்ளுண்ணுதல் கணிகையர் கூட்டத்தினால் வரும் என்று கருது கிறார் மணக்குடவர். ஒருவனுடைய ஒழுக்கத்தையும் உணர்வையும் சிதைப்பதில் வரைவின் மகளிரோடு ஒப்பது கள்ளுண்டல். ஆகவே, கள்ளுண்ணாமையும் வேண்டும் என்று ஆசிரியர் இதில் அறிவுறுத்து கின்றார்.

பெண்வழிச் சென்றும், வரைவின் மகளிர் வயப்பட்டும் காமம் மிக்கு ஒழுகுவது போலவே கள்ளுண்பாரைக் 'கட்காதல் கொண் டொழுகுவார்' (குறள் 921) என்கிறார் வள்ளுவர். 'உண்ணற்க கள்ளை' (குறள் 922) என்றும், உண்பது 'கள்ளென்னும் பேணாப் பெருங் குற்றத்தார்க்கு' (குறள் 924) என்றும், கள்ளுண்பவன் உள்ளூராரின் நகைப்பிற்கு இடமாவதோடு (குறள் 927), சான்றோ ராலும் (குறள் 922) பெற்ற தாயாராலும் கூட வெறுத்து ஒதுக்கப் படுவான் (குறள் 923) என்றும் எடுத்துக்காட்டி கள்ளுண்டு களித்தல் ஆகாது என்று விலக்குகின்றார்.

முந்திய வரைவின் மகளிர் அதிகாரத்தின் (92) இறுதிக் குறளாகக் காளிங்கர் தவிர ஏனைய உரைகாரர் எல்லாம் கொண் டுள்ளது,

*இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்*
*திருநீக்கப் பட்டார் தொடர்பு* *(குறள் 920)*

என்பதாம். இதில் வள்ளுவர் திருமகளால் துறக்கப்பட்டாருக்கு நட்பாவன இருமனப்பெண்டிராகிய பொதுமகளிர், கள், சூது, என்னும் மூன்றுமாம் என்று கூறுகின்றார். இது பின்வரும்

கள்ளுண்ணுமை (அதி. 93), சூது (அதி. 94) என்னும் அதிகாரங்களுக்குத் தோற்றுவாயாகவும், இவ்வதிகாரங்களின் முறைவைப்பினை உணர்த்துவதாகவும் உள்ளது.

> *"ஒத்த குற்றத்தவாதலின் கள்ளும் சூதும் உடன்கூறப்பட்டன வட நூலாரும் இக்கருத்தான் 'விதனம்' என உடன் கூறினர். வருகின்ற அதிகாரமுறைமையும் இதனுன் அறிக"*

எனப் பரிமேலழகர் இக் குறளின் உரையில் எடுத்துக்காட்டுவதும் இங்கு அறியத்தக்கது.

### *94.* சூது

சூதாவது சூதாடுவதனுல் வரும் குற்றம் கூறுவது. கள்ளுண்டல் போலவே அறம் பொருள் இன்பங்களுக்குக் கேடு தருவது சூதாடலும் பிணியால் துன்புறுதலும் ஆம். இவ்விரண்டனையும் நீக்கவேண்டும் என்பதனை வலியுறுத்தும்பொருட்டே இந்தச் சூது அதிகாரமும் இதனை அடுத்து மருந்து அதிகாரமும் வைக்கப்பட்டுள்ளன.

'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்' (குறள் 920) என முன்பு ஆசிரியர் வரிசை முறை கூறியபடி இவ்வதிகாரத்திற்குக் 'கவறு' என்று பெயரிடாது 'சூது' எனப் பெயரிட்டுள்ளார். சூதாடும் இடத்திற்குக் 'கழகம்' என்பது பெயர். 'கவறும் கழகமும்' எனத்தொடங்கும் 935ஆம் பாடலில் மட்டும் 'கவறு' என்னும் சொல்லாட்சியினைக் காணலாம். ஏனைய பாடல்களுள் ஐந்தில்'சூது' என்பது பயின்று வருகின்றது (குறள் 931, 934, 936, 938, 940). சூதாடுபவரைச் 'சூதர்' (932) என ஆசிரியர் குறிப்பிடுகின்ருர். சூதாடும் கருவியை 'ஆயம்' (933, 939) என்பர். இது உருட்டி விட்டு ஆடும் வகையில் அமைந்த கருவி என்பது 'உருளாயம்' என ஆசிரியர் கூறும் (குறள் 933) அடைமொழியால் உணரலாகும்.

> வட்டும் சூதும் வம்பக் கோட்டியும்
> முட்டா வாழ்க்கை முறைமைய தாக (மணி. 14:63-64)

என்றும்,

> *வட்டினும் சூதினும் வான்பொருள் வழங்கிக்*
> கெட்ட பொருளின் கிளைகே டுறுதலின் (மணி. 16:7-8)

என்றும் மணிமேகலை சூதிற்கு இனமாக 'வட்டாடல்' என்பதனைக் குறிக்கிறது. ஆகவே, உருளாயம் என்பதும் வட்டுப் போன்றதொரு வடிவுடைய கருவி என்று கொள்ளலாம்.

### 95. மருந்து

மக்கட்கு வரும் நோய்களை அணுகாது நீக்குவதற்கும் உற்ற நோயைப் போக்குவதற்கும் ஆன உபாயங்கள் கூறுவது இம் மருந்து அதிகாரம். ஏற்ற உணவும், உணவு கொள்ளுதலில் நியமமும் நோய் வாராமல் காத்தலால் மருந்தாம். நோய் வருவதற்குக் காரணம் பேருண்டியும், வாத பித்த சிலேட்டுமங்கள் அளவிற் குறைந்தும் கூடியும் வரும் நிலைமையும் ஆகும் என்று கூறி, அது தீர்ப்பதற்குரிய வழிவகைகளும் இவ்வதிகாரத்துள் எடுத்துக் கூறுகின்றார். 'மருந்து' என்னும் அதிகாரப் பெயர் இரண்டு பாடல்களில் இடம் பெற்றுள்ளது (குறள் 942, 950).

ஒருவன் பிணியுறுதற்குக் காரணமாக அமைவனவற்றுள் பொதுமகளிர் சேர்க்கை, கள்ளுண்டல், சூதாடல் என்னும் மூன்றும் முக்கியமாவன. இவற்றால் பொருட்கேடும் உடல்நலக் குறைவும் உண்டாதல் இயல்பு. யாக்கை உறுதியுடன் இருந்தால்தான் வாழ்வு இன்பமுடையதாகும். எனவே, நோய்வரும் மூலங்களைக் கூறியவர் நோய் நீக்கத்திற்குக் காரணமான 'மருந்து' பற்றியும் அடுத்துக் கூறுதல் பொருத்தமுடையதாகும்.

*இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்*
*உழத்தொறூஉம் காதற்று உயிர்.* (*குறள் 940*)

எனச் சென்ற அதிகாரத்தின் இறுதியில் வரும் குறளால் உயிரானது பிணி முதலியவற்றால் துன்புற்றாலும் உடலோடு கூடி இருக்கவே விரும்பும் என்பது தெரியவரும். அத்தகைய ஆசையை நிறைவேற்றுவதற்குக் காரணமான நோய்போக்கும் மருந்து அடுத்துக் கூறப்படுகிறது என்றும் கொள்ளலாம்.

## 5. குடியியல்

### 96. குடிமை

'குடிமை' (அதி. 96) முதலாகக் 'கயமை' (அதி. 108) ஈறாக வரும் பதின்மூன்று அதிகாரங்களும் முந்திய அரசியல், அங்க இயல்களில் அடக்கிக் கூறப்பெறாத பொதுச்செய்திகளைக் கூறுவது என்றும், இப் பகுதியை 'ஒழிபியல்' என்றும் பரிமேலழகர் குறிப்பிடுகின்றார்.

ஆனால், இவருக்கு முந்திய உரைகாரர்களாகிய மணக்குடவரும் காளிங்கரும் இப் பகுதிக்குக் 'குடியியல்' என்று பெயரிட்டுள்ளனர். "குடியியலாவது அரசரும் அமைச்சரும் வீரரும் அல்லாத மக்களது இயல்பு கூறுதல்" என்பது மணக்குடவரின் விளக்கம். இதுவரை கூறியவை அரசர் முதலாயினார்க்குச் சிறப்பு வகையால் எடுத்துக் கூறினும் அவைகளும் நிலத்து வாழ் மக்களுக்கு எல்லாம் வேண்டும் பண்புகளே. அது போலவே குடிமை முதலாகக் கூறப்பெறும் பண்புகளை நிலத்து வாழ் குடி மக்களைச் சிறப்பாகக்கொண்டு கூறினும் அவை அரசர் முதலாயினார்க்கும் வேண்டும் பண்புகளேயாம். பொதுவகையான் நிலத்துவாழ் மக்கள் என்னும்போது அவரும் அடங்குவரன்றோ?

குடியியலில் மக்கட் பண்புகள் எவ்வெவ்வாறு வள்ளுவரால் எடுத்தாளப் பெற்றுள்ளன என்பது பரிப்பெருமாள் தரும் தொகுப்புரையால் தெளிவாக விளங்கும். அவர் தம் தொகுப்புரைக் கருத்து பின் வருமாறு :

1. *குடிப்பிறந்தார் இலக்கணம் ஓர் அதிகாரம்: குடிமை (96)*
2. *மானம் உடையார் இயல்பும் சான்றோர் இயல்பும் நான்கு அதிகாரம், (2-அ) மானம் (97), பெருமை (98), (2-ஆ) சான்றாண்மை (99), பண்புடைமை (100)*
3. *பண்பு இன்றிப் பொருள் ஈட்டினார்க்கு வரும் குற்றம் ஓர் அதிகாரம்: நன்றியில் செல்வம் (101)*
4. *இக்குற்றத்திற்கு அஞ்சும் 'நாணுடைமை' ஓர் அதிகாரம் (102).*
5. *நாணுடையார் குடும்பத்தை நோக்குமாறு ஓர் அதிகாரம்: குடி செயல்வகை (103)*
6. *குடும்பத்தை நோக்குதற்கு ஆகும் பொருள் வரும் நெறி ஓர் அதிகாரம்: உழவு (104)*
7. *பொருள் இல்லாத மக்கள் இயல்பு ஓர் அதிகாரம்: நல்குரவு(105)*
8. *பொருள் இல்லாராகிய நல்குரவாளர் பொருள் தேடுமாறு இரண்டு அதிகாரம்: இரவு (106), இரவச்சம் (107)*
9. *மக்களுள் இழிந்தார் இயல்பு ஓர் அதிகாரம்: கயமை (108)*

இங்ஙனமாகக் குடியியல் அதிகாரங்களின் வைப்புமுறைக் காரணங்களையும் இத்தொகுப்புரையுள் பரிப்பெருமாள் தந்துள்ளமை காணலாம்.

குடிமையாவது உயர்ந்த குடியில் பிறந்தாரது தன்மையாம். எத்தொழில் புரியும் எவ்வகைக் குடியில் பிறந்தாருக்கும் இத் தன்மைகள் சிறப்பாகவேண்டும் ஆதலால் இது முதலில் கூறப் படுகிறது.

'குடிமை' என்னும் அதிகாரப் பெயருக்குப் பொருத்தமாகக் 'குடி' (குறள் 953, 955), 'குடிப்பிறந்தார்' (குறள் 952, 954, 957) என்னும் சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. மற்றும் "குடி' என்னும் பொருளில் 'இல்' (குறள் 951) 'குலம்' (குறள் 956, 958-960) என்னும் சொற்களையும் தந்துள்ளார். 'குடிப்பிறந்தார்' என்பது போன்று 'இற்பிறந்தார்' (குறள் 951), 'குலத்தில் பிறந் தார்' (குறள் 959) என வள்ளுவர் கூறுதலும் கவனிக்கத்தகும். ஆக, இல், குலம், குடி என்பன எல்லாம் ஒருபொருட் சொற்களாம் என்பது தெரியவரும்.

இவ்வியலில் கூறப்படும் குடிப்பிறந்தாரின் பண்புகளாவன: செப்பம் (951), நாண் (951, 952), ஒழுக்கம் (952), வாய்மை (952), நகை (953), ஈகை (953), இன்சொல் (953), இகழாமை (953), பணிவு (960) என்பனவாம். இவ்வொழுக்கங்கள் குறித்துத் தனித் தனி அதிகாரங்கள் குறள் நூலுள் உள்ளமையும் நோக்கத்தகும். 'குன்றுவ செய்தல் இலர்' (954), 'சால்பில செய்யார்' (956) என வருவன வள்ளுவர் எதிர்மறை முகத்தான் கடிந்துகூறிய ஒழுக்கங் களை இவரும் விலக்கி நல்வழிச் செல்வார் என்பதைக் காட்டுகிறது. ஆகவே, குடிமை என்பது பல பண்புகளின் திரட்சியான ஒரு பிழம்பு என்று கருதலாம்.

*97. மானம்*

மானமாவது எக்காலத்தும் தம் நிலையிலிருந்து தாழ்வுறாமை யாம். ஒருகால் தாழ்ச்சி வருமாஞல் மானமுடையா உயிர் வாழாது தம் உயிர் கொடுத்துத் தம் குடியின் மாண்பை மேலும் உயர்த்துவர்.

குடிப்பிறந்தார்க்கு உரிய குணங்கள் கூறத்தொடங்குவாராய் முதலில் 'மானம் பெரிது' என எடுத்துக் கூறுகிருர். குடிப்பிறந் தார்க்குத் தம் நிலையில் திரியாமை மிக இன்றியமையாதது ஆதலின் குடிமை என்பதனை அடுத்து இதனை முறைப்படுத்தியுள்ளார்.

'மானம்' என்னும் இவ்வதிகாரப் பெயர் இறுதியாக வரும் இரண்டு பாடல்களிலே, 'உயிர் நீப்பர் மானம் வரின்' (குறள் 969), 'இளிவரின் வாழாத மானம் உடையார்' (குறள் 970) எனவரும் தொடர்களில் இடம் பெற்றுள்ளது. மற்றும், 'நிலை' (குறள் 964), 'பெருந்தகைமை' (குறள் 968), 'பேராண்மை' (குறள் 962) என வரும் சொற்களும் 'மானம்' என்னும் சொற் பொருட் கருத்தை உணர்த்துகின்றன.

### *98. பெருமை*

பெருமையாவது மானம் உடையார்க்கு வரும் மேன்மையாம். இங்கே மேன்மையுற்றோராகிய பெரியாரின் குணம் செயல்கள்பற்றி விவரிக்கப்பட்டுள்ளன. பொதுவாக மேன்மக்களின் இயல்பு இவ் வதிகாரத்துள் பேசப்படுகிறது என்னலாம்.

பரிமேலழகர், "செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர் குற்றம் கூறாமை என்று இவை முதலாகிய நற்குணங்களால் பெரியாரது தன்மை" என்று கூறுகின்றார். 'செயற்கரிய செய்வார் பெரியர்' (குறள் 26) என்றாற்போன்று நூலுள் பலவிடத்தும் கூறப் பட்டுள்ள பெரியார் இயல்புகள் எல்லாம் உடையாரே பெருமை உடையராவர்.

குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, கயமை என்று இக் குடியியலின் அதிகாரப் பெயர்கள் எல்லாம் பண்புபற்றிய பெயர் களாய் இருந்தாலும், இவையெல்லாம் மக்களொடு சார்த்தியல்லது உணரக்கூடாது ஆகலான் இவை எல்லாம் அவ்வப் பண்புடை யாரைக் குறிப்பன என்று உணர்தல் வேண்டும்.

'பணியுமாம் என்றும் பெருமை' (குறள் 978) என்னும் குறளில் பெருமை என்பது பெருமையுடையாரைக் குறித்தல் காணலாம். இவ்வதிகாரப் பெயராகிய 'பெருமை' என்பது வேறு நான்கு பாடல்களில் வந்துள்ளது (குறள் 974, 975, 979, 980). பெருமை யுடையாரைக் கூறுமுகத்தால் அவர்க்கு மாறான செயலுடைய சிறியாரையும் சுட்டிக்கூறி, இப் பெரியாரின் மேன்மையைப் புலப் படுத்தியும் உள்ளார். 'சிறுமை' (குறள் 978, 979, 980,) 'சிறியர்' (குறள் 976), 'மேலல்லார்' (குறள் 973), 'சீரல்லவர்' (குறள் 977) எனச் சிறியாரைக் குறிப்பிடுதலும் நோக்கத்தகும்.

பெருமையும் சிறுமையும் ஒருவருடைய குலத்தினுல் அறியப் படாது அவரவருடைய செய்தொழில்களின் ஏற்றத் தாழ்வுகளால் மதிப்பிடப்படும் என்பது,

> *“ பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
> *செய்தொழில் வேற்றுமை யான்* (குறள் 972)

எனவரும் குறளால் உணர்த்தப்பட்டுள்ளது.

நற்குடிப்பிறப்பும், தத்தம் நிலையில் திரியா மானமும் ஆகிய வற்ருல் அருஞ்செயல் புரிந்து பெரியார் எனப் போற்றப்படும் தகுதியை உடையவராவர் என்னும் முறைமைபற்றிப் ‘பெருமை’ அதிகாரம் அவற்றின் பின்னர் வைக்கப்பட்டுள்ளது.

## *99. சான்ருண்மை*

சான்ருண்மையாவது நற்குணங்கள் பலவற்ருனும் அமைந் தார் இலக்கணம் கூறுதல். பெருமையுள் அடங்காத குணங்கள் பலவற்றையும் உள்ளடக்கிக் கொண்டிருத்தலால் அதன்பின் இது வைக்கப்பட்டுள்ளது.

‘சால்தல்’ என்பது நிறைதல் என்னும் பொருள் தரும். நற் குணங்கள் பலவற்ருனும் நிறைதலே சான்ருண்மையாம். இதனைச் ‘சால்பு’ என்றும் வழங்குவர். இவ்வதிகாரத்துள்ள சான்ருண்மை என்பது மூன்று பாடல்களிலும் (குறள் 981, 989, 990), சால்பு என்பது ஐந்து பாடல்களிலும் (குறள் 983, 984, 986 - 988) வந் துள்ளன. சான்ருண்மையுடையார் சான்ருேர் (குறள் 982, 985) எனப்படுகின்றனர்.

சால்பு என்னும் பாரத்தை அன்பு, நாண், ஒப்புரவு, கண் ணுேட்டம், வாய்மை என்னும் ஐந்தும் தூண்களாய் நின்று தாங்கு கின்றன என்று வள்ளுவர் உருவக வகையால்,

> *அன்புநாண் ஒப்புரவு கண்ணுேட்டம் வாய்மையொடு*
> *ஐந்துசால்பு ஊன்றிய தூண்* (குறள் 983)

என விளக்குகின்ருர். இதனுல் இந்த ஐந்தும் சான்ருேர்க்கு இன்றி யமையாது வேண்டும் பெருங்குணங்கள் என்பது தெரியவரும். இவை ஒவ்வொன்றையும் குறித்துத் தனித்தனி அதிகாரங்கள் திருக் குறள் நூலகத்து உள்ளமை நோக்கத்தக்கது[7].

## 100. பண்புடைமை

"பண்புடைமையாவது யாவர்மாட்டும் அவரோடு ஒத்த அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும், பகுத்து உண்டலும், பழி நாணலும் முதலான நற் குணங்கள் பலவும் உடைமை" என்று விளக்கம் தருகிறார் பரிப் பெருமாள்.

'பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' (கலி. நெய்தல். 16) எனவரும் கலித்தொகை அடியை மேற்கோள் காட்டிப் பரிமேலழகர், "பெருமை சான்றாண்மைகளில் வழுவாது நின்றே எல்லாரியல்பு களும் அறிந்து ஒத்து ஒழுகுதல்" என்று கூறுவர். இவருடைய கருத்தும் பிறருடைய இயல்புகளை அறிந்து தம் பெருமை சான்றாண்மைகளுக்கு இழுக்கு நேராது நடத்தல் என்பதாம். எல்லாரிடத்தும் எளியராய் அன்புடன் நடத்தல் வேண்டும் என்பது இதன் கருத்து. இதனையே வள்ளுவர் 'மக்கட் பண்பு' (குறள் 997) என்கிறார்.

*நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்*
*பண்புள பாடறிவார் மாட்டு* (குறள் 995)

எனப் பிறர்தம் பண்பாடு அறிந்து ஒழுகுதல் பண்புடையாருக்குப் பகைவரிடத்தும் இயல்வதாகும் என வள்ளுவர் இக் குறள்வழித் தரும் கருத்தும் இங்கு ஒப்புக் காணத்தகும்.

இத்தகைய பண்பு சான்றாண்மையுடையார்க்கே இயல்வதாகும் என்பது கருதிச் சான்றாண்மையை அடுத்து இவ்வதிகாரம் வைக்கப் பட்டுள்ளது.

'பண்பு' (குறள் 993—995, 997, 998, 1000), 'பண்புடைமை' (குறள் 991, 992), 'பண்புடையார்' (குறள் 996) என்று இவ்வதி காரப் பொருளுக்கு ஏற்ற சொற்களை வள்ளுவர் பாடல்களில் பயன் படுத்தியுள்ளார். இறுதிக் குறளில் பண்பிலான் பெற்ற பெருஞ் செல்வம் பயன்படாமை பற்றிக் கூறப்பட்டுள்ளது.

## 101. நன்றியில் செல்வம்

நன்றியில் செல்வமாவது பயன்படாத செல்வம், அதாவது செல்வத்தைச் சேர்த்தவர்க்கும் பிறர்க்கும் பயன்படாத செல்வம்

என்பதாம். இக் கருத்தை 'பொருளானும், எல்லாம் என்று ஈயாது இவறும் மருள்' (குறள் 1002) என்னும் வள்ளுவர் வாக்கினுல் உணர லாகும். இவறுதலாவது பிறர்க்குக் கொடாது சேர்த்து வைக்கும் பற்றுள்ளமாம். இதனுல் இவர் விரும்பப்படாதவ ராகின்றனர். 'நச்சப்படாதவன்' (குறள் 1004, 1008) என்று இத்தகையோர் குறிக்கப்படுகின்றனர். பிறர்க்குக் கொடாது சேர்த்து வைப்பாரை 'ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர்' (குறள் 1003) என்கிருர் வள்ளுவர். இக் குணத்தை 'உலோபம்' என்றும், இக் குண முடையாரை 'உலோபர்' என்றும் கூறுவர். இக்காலத்தார் 'கருமி, 'கஞ்சன்' என வழங்குவது இத்தகையாரையே.

நன்றியில் செல்வம் என்னும் அதிகாரப் பெயர்ப் பொருளை ஆசிரியர் வெவ்வேறு வகையால் உணர்த்துகின்ருரேயன்றி, இந்தப் பெயர் எந்தப் பாடலிலும் இடம் பெறவில்லை.

சென்ற அதிகாரத்தின் இறுதியில் வரும்,

*பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்*
*கலந்தீமை யால்திரிந் தற்று* (குறள் 1000)

எனவரும் பாடலினுல் பண்பில்லாதவன் பெற்ற செல்வம் ஒருவருக்கும் பயன்படாது என்று கூறிய கருத்தின் தொடர்பாகவே இவ்வதிகாரம் அமைந்துள்ளதால், அதனேடு இதற்குள்ள இயைபு நன்கு புலனுகும்.

பரிமேலழகர், "அச்செல்வமும் பயன்படாது என்ற இதனுல் வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது" என்று எழுதியுள்ளமையும் அதிகார முறை வைப்பின் பொருத்தத்தை உணர்த்துவதாகும்.

காளிங்கர் உரையிலும் இத்தகைய கருத்து விளக்கத்தைக் காணலாம் :

*"இனி, மற்று இங்ஙனம் கூறிய பண்பு இல்லாதான் செல்வம் கொண்டு ஒரு பயனும் தனக்கு இல்லாமையின் அதன் பின்னரே இதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்."*

காளிங்கரின் இந்த விளக்கத்தைக் கொண்டு பார்க்குமிடத்து 'பண்பிலான் பெற்ற' என்னும் குறளைப் பத்தாவது பாடலாகவே அவர் கொண்டிருக்கவேண்டும் என்பது விளக்கமாகும். ஆனுல், காளிங்கர் உரைப்பதிப்பில் இதனை ஏழாவதாகவும், 'எண்பதத்தான்'

என்று தொடங்கும் குறளைப் பத்தாவதாகவும் அச்சிட்டிருப்பது ஆராய்வதற்குரிய தாகும்.

## *102. நாணுடைமை*

குணங்களால் உயர்ந்தோர் தமக்குப் பொருந்தாத கருமங்களில் நாணுதல் உடையராதலே நாணுடைமையாம். மன மொழி மெய்கள் ஒடுக்கத்தால் வரும் நாணம் குலமகளிர் நாணத்தை ஒக்கும் என்றும், இழிந்த கருமம் காரணமாக நாணுதலே நாணுடைமையாகும் என்றும்,

> *கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்*
> *நல்லவர் நாணுப் பிற* (குறள் *1011*)

என முதற்குறளில் கூறுகிறார். இங்கே மகளிர்க்கு இயல்பாக உடைய நாணத்தினும் மாறுபட்டது சான்றோரிடம் உள்ள நாணம் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

மாந்தர் எல்லார்க்கும் இந் நாணுடைமை சிறப்புத் தரும் என்றும் (குறள் 1012) சான்றோர்க்கு இஃது ஓர் அணிகலனாக உள்ளது என்கிறார் வள்ளுவர் (குறள் 1013, 1014). 'நாண்' (குறள் 1013, 1016, 1017, 1019, 1020), 'நாணு' (குறள் 1011) என்று இச் சொற்களை ஆண்டுள்ளதோடு 'நாணுடைமை' என்னும் அதிகாரப் பெயரையும் இரண்டு குறள்களில் (குறள் 1012, 1014) குறிப்பிட்டுள்ளமையும் காணத்தக்கது.

சான்றோர்க்குச் சிறப்பாகக் கூறப்பெறும் இந் நாணுடைமை, சான்றாண்மை, பண்புடைமை, நன்றியில் செல்வம் ஆகியவற்றினை அடுத்து வருதலால் சான்றாண்மையோடு இயைபுடையதாகின்றது. இச் சான்றாண்மைக்கும் நாணுடைமைக்கும் இடையிலுள்ளவை சான்றோர்க்குரிய பண்புடைமையும் பண்பின்மையும் பற்றிக் கூறுகின்றன. ஆதலால் இவையெல்லாம் சான்றோர் ஒழுக்கப் பண்பு குறித்துக் கூறப்பெற்றவை என்பதாம்.

மணக்குடவர் தரும் அதிகார வைப்பு முறைக் கருத்தும் இவ்வாறே உள்ளது. அவர்,

> "நாணுடைமை யாவது அறம் பொருள் இன்பங்களில் பிறர் பழியாமல் ஒழுகுதல். இது பண்புடைமையின் பின் கூறற்பாலது பண்பு இன்மையும் சேரச் சொல்ல வேண்டுதலின்

*பண்பின்மையாகிய நன்றியில் செல்வத்தைக் கூறி அதன்பின் கூறப்பட்டது."*

என்கிறார்.

### *103.* குடி செயல் வகை

ஒருவன் தான் பிறந்த குடியை உயரச் செய்தலின் திறமே குடி செயல் வகை. குடியோம்புதல் தாழ்வின்கண் நாணமுடையார் செயலாகலான் அதன்பின் வைக்கப்பட்டுள்ளது.

குடியின் உயர்ச்சி ஆள்வினையாலும் நிறைந்த அறிவினாலும் உளதாகும் என்கிறார். குடி (குறள் 1022, 1030) என்னும் சொல்லோடு 'குடி செயல் வகை' என்னும் அதிகாரப்பெயர் புலப்படும் வகையிலும் சில ஆட்சிகள் உள. 'குடி செய்வல்' (குறள் 1023), 'குடி செய்து வாழ்வான்' (குறள் 1025), 'குடி செய்வார்' (குறள் 1028), 'தம் குடியைத் தாழாது உஞற்றுபவர்' (குறள் 1021), 'குடும்பத்தைக் குற்றம் மறைப்பான்' (குறள் 1029) என வருவன நோக்கத்தகும். இதனை 'இல்லாண்மை' எனவும் ஒரு பாடலில் குறித்துள்ளார்.

குடிப்பிறந்தார் இயல்புகளைக் குடிமையில் கூறி (அதி. 96), தொடர்ந்து குடிப்பிறந்தார் பண்புகளையும் ஆறு அதிகாரத்தால் கூறி, பண்பால் சிறந்தார் தம் குடியை மேம்படுத்த வேண்டும் என்று கூறுவதால், இவை குடிமைப் பண்பும், குடி செய்தலும் எனப் பண்பு, செயல் என்பவற்றால் குடிமையொடு இவை இயைபுடைத் தாகின்றன என்று கொள்ளலாம்.

### *104.* உழவு

உழவின் திறனும் அதனால் வரும் பயனும் கூறுகின்றது. குடி செய்வார்க்கு இது இன்றியமையாது வேண்டுவதாம். எல்லாத் தொழில்களுக்கும் தலையாக உள்ளமையால் இது சிறப்பாக எடுத்துப் பேசப்பட்டுள்ளது.

*சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை* *(குறள் 1031)*

என முதற் குறளிலேயே இக் கருத்துக் காணப்படுகிறது. பொது வாகக் குடியோம்புமிடத்துத் தானியத்தால் அது செய்யக்கூடும்

என்பது கருதி 'உழவு' அதிகாரம் கூறப்பெற்றது என்பது பரிப்பெருமாளின் கருத்தாகும். இது பற்றித் தடைவிடைகளால் அவர் தரும் விளக்கம் பிறதொழிலினும் குடியோம்புவார்க்கு இது இன்றியமையாது வேண்டும் என்பதை விளக்குகிறது.[8] ஆகவே, குடிசெயல் வகை என்பதனை அடுத்து உழவு வருதல் ஏற்புடைத்தாம்.

'உழவே தலை' என முதற்பாட்டில்தான் இவ்வதிகாரப் பெயர் பொதிந்துள்ளது. ஏனைய பாடல்களில் இத்தொழில் செய்வாரைக் குறிப்பிட்டுக் கூறுகின்றார். 'உழுவார்' (குறள் 1032), 'கைசெய்தூண் மாலையவர்' (குறள் 1035), 'உழுதுண்டு வாழ்வார்' (குறள் 1037), 'உழவினர்' (குறள் 1036), 'அலகுடை நீழலவர்' (குறள் 1034) என்றெல்லாம் உழுவோர் திறம் சொல்லப்பட்டுள்ளது.

## *105. நல்குரவு*

(நல்குரவாவது நுகரப்படுவன எவையும் இல்லாமை. இஃது பொருளில்லார்க்கு உளதாகும் நிலைமை கூறுகிறது. உழவுத் தொழில் செய்யாதார்க்கு எதுவும் கிட்டாது ஆதலால் அதன்பின் கூறப்பட்டுள்ளது.

யாம் வறியோம் என்று வாடியிருப்பார் உழுதொழில் புரியாதாரே. ஆதலால் இவ்வாறு இருப்பாரைக் கண்டு நிலமகள் தன்னுள் சிரிப்பாளாம்.

> *இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்*
> *நிலமென்னும் நல்லாள் நகும்* (*குறள் 1040*)

என்பது உழவு அதிகாரத்தின் இறுதிப் பாடல்.

இது அடுத்துவரும் இல்லாமைபற்றிக் கூறும் 'நல்குரவு' அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்வதுபோல் அமைந்துள்ளது. "அது செய்யாத வழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. வருகின்ற அதிகார முறைமைக்குக் காரணமும் இதுவே" எனவரும் பரிமேலழகர் உரை விளக்கமும் இதற்குச் சான்று பகரும்.)

'நல்குரவு' என்னும் அதிகாரப் பெயர் இவ்வதிகாரத்துள் வரும் சில பாடல்களிலும் காணப்படுகின்றன (குறள் 1043, 1045, 1047). இதனையே 'இன்மை' என்றும் (குறள் 1041, 1042, 1044), 'நிரப்பு' (குறள் 1048, 1049) என்றும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். நல்குர

வாளரை, 'நல்கூர்ந்தார்' (குறள் 1046) என்றும், 'துப்புரவு இல்லார்' (குறள் 1050) என்றும் கூறுகின்றார். அதாவது நுகரப் படும் பொருள்கள் இல்லாதவர் என்பதாம்.

### *106. இரவு*

பிறரிடம் சென்று ஒருபொருளை இரந்து பெறுதலாம். இது நல்கூர்ந்தாருடைய செயலாகும் ஆதலால் அதன்பின் வைக்கப் பட்டுள்ளது.

மானம் தீரா இரவும் இரவாமையோடு ஒக்கும் என்று இதில் கூறப்படுகிறது. தம்மிடம் உள்ளது மறுத்தலைக் கனவிலும் எண்ணுதாரிடத்து ஒன்று இரப்பது முறையாம் என்கிறார். அது கொடுப்பதனை ஒக்கும் என்றும் கூறுகிறார்.

*இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்*
*கனவினும் தேற்றுதார் மாட்டு* *(குறள் 1054)*

என்னும் குறளின் கருத்து உலகில் இரப்பார் உண்மையை எடுத்துக் கூறுகிறது.

'இரவு' என்னும் அதிகாரப் பெயருக்கு ஏற்ப, 'இரத்தல்' (குறள் 1052, 1054), 'இரப்பு' (குறள் 1053) என்பன குறள்களில் பயின்று வருகின்றன. மற்றும் 'இரப்பவர்' (குறள் 1055), 'இரப்பார்' (குறள் 1058), 'இரப்பான்' (குறள் 1060), 'இரந்து கோள் மேவார்' (குறள் 1059) என்றும் இரத்தல் தொழில் செய் வாரைச் சுட்டியுள்ளார்.

### *107. இரவச்சம்*

இதில் இரத்தல் கூடாது; அதனைத் தவிர்தல்வேண்டும் என்பது கூறப்படுகிறது. இரவச்சமாவது இரத்தலுக்குப் பயப்படவேண்டும் என்பதாம்.

முந்திய அதிகாரத்துள் நல்கூர்ந்தாராகிய வறியோர் கொடுக்கும் பண்புடையாளரிடம் இரந்து பெறலாம் என்று பொதுப்படக் கூறினர். ஆயினும், மேலாயினர்க்கு அது தகாது என்பது குறித்துக் கூறுவதால் இது அவ்வவ்வதிகாரத்தோடு பொருள் தொடர்புடையதாயுள்ளது. ஆகவே, இரவு என்பதனை அடுத்து இரவச்சம் வருதல் அடுக்கும்.

'இரந்தும் உயிர் வாழ்தல் ஆகாது' என்று அறிவுறுத்துவாராய் இரவாமையின் சீர்மையை இவ்வதிகாரத்துள் ஆசிரியர் பேசுகின்றார். 'இரவச்சம்' என்ற அதிகாரப் பெயர் பாடல்களில் இடம் பெருமை கவனிக்கத் தகும். என்றாலும், அக் கருத்தினை 'இரவொல்லாச் சால்பு' (குறள் 1064) என்னும் தொடராலும் பிறவாறும் புலப்படுத்தியுள்ளார். இங்ஙனம் கூறுமிடத்து 'இரவு' என்னும் சொல் (குறள் 1066, 1068, 1069) ஆளப்பெறுகின்ற இயையும் நோக்கத்தகும்.

### *108. கயமை*

கயமையாவது கீழ்மை; அதாவது இழிகுணத்தாராகிய மாந்தரின் இயல்பு கூறுவதாம். இதுவரை ஆசிரியர் மாந்தர்க்கு வேண்டும் என எடுத்துக்கூறிய குணங்கள் எதுவும் இல்லாதார் இவர் என்று மாந்தரில் கடையானவரான கீழ்மக்களின் இயல்பைக் குடியியலின் இறுதியாகக் கூறுகின்றார்.

'கயமை' என்னும் குணப்பெயர் பெற்ற இவ்வதிகாரத்தில் இக்குணமுடையோரே கூறப்படுகின்றனர். எனவே, 'கயமை' என்னும் இவ்வதிகாரப் பெயரும் எந்தப் பாடலிலும் இடம் பெறவில்லை.

கயமை இயல்புடையாரைக் 'கயவர்' (குறள் 1071-1073, 1076, 1077, 1080) என்றும், 'கீழ்' (குறள் 1074, 1078, 1079) 'கீழ்கள்' (குறள் 1075) என்றும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

## காமத்துப்பால்

### *109. தகையணங்குறுத்தல்*

(வள்ளுவரின் காமத்துப்பால் தொல்காப்பியர் முதலியோர் தந்த இலக்கணத் தொன்னூல்களும், நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு முதலிய தொகை நூல்களும் கூறும் அகப்பொருள் மரபுகளின் சாரமாய் அமைந்துள்ளது. களவு, கற்பு எனக் காதலன் காதலியரின் இன்ப வாழ்க்கை உலக வழக்கொடு பொருந்த நாடகப் பான்மையில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

களவு என்பது உரு திரு பருவம் குலம் குணம் அன்பு முதலியவற்றால் தம்முள் ஒத்த தலைமகனும் தலைமகளும் எதிர்பாராத வகையில்

எதிர்ப்படுகின்றனர். இஃது இறையருளால் நேர்ந்த சேர்க்கை என்னும் கருத்தில் 'தெய்வப் புணர்ச்சி' என்றும் சொல்வதுண்டு. இவ்வாறு தலைமகனும் தலைமகளும் சந்திக்கின்றபோது ஒருவரை ஒருவர் வியப்புற்று நோக்குதலும், அதன் விளைவாக உள்ளக் கிளர்ச்சியும் எண்ணங்களும் தோன்றுதலும் இயற்கையே. என்றாலும், உள்ளுணர்வை வெளிப்படுத்திப் பேசுகின்றவன் தலைமகனாகவே இருப்பான். தலைமகள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் பெண்ணியல்புகளால் தலைதாழ்த்து நாணமுற்று நிற்பள். இந்த நிலையில தலைவன் தலைவியரிடையே நிகழ்வனவற்றைக் 'கைக்கிளை' என்பர். இது காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என நால்வகை நிலையாக ஒன்றன்பின் ஒன்று தோன்றுவதாகக் கூறப்படும்.

தகையணங்குறுத்தல், குறிப்பறிதல் என்னும் இரண்டும் முறையே காட்சி ஐயங்களையும் தெளிதல் தேறல் செய்திகளையும் உணர்த்துகின்றன என்று கொள்ளலாம்.

*அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலுமென் நெஞ்சு* (குறள் 1081)

என்று தலைமகளின் அழகில் ஈடுபட்டானொருவன் ஐயுறவாகப் பேசும் முறையில் தொடங்குகிறது 'தகையணங்குறுத்தல்' என்னும் முதல் அதிகாரம்.

தகையணங்குறுத்தலாவது எதிர்ப்பட்ட தலைமகன் தலைமகளுடைய வனப்பு தன்னை வருத்தமுறச் செய்வதாகச் சொல்லுதல். இஃது இருவரும் எதிர்ப்பட்ட பொழுதே நிகழுமாதலால் முதற்கண் கூறப்பட்டது.

பரிப்பெருமாள், "தகையணங்குறுத்தலாவது தலைமகனும் தலைமகளும் எதிர்ப்பட்ட இடத்துத் தலைமகளது கவின் தலைமகனை வருத்துதலும் தலைமகனது கவின் தலைமகளை வருத்துதலும்" என்கிறார். ஆனால் இவ்வதிகாரத்துள் கூறப்பட்டுள்ளனவெல்லாம் தலைமகன் கூற்றாக, அவன் தலைமகளது கவின் தன்னை வருத்துவது பற்றிக் கூறுவதாகவே உள்ளன. இவ்வாறுதான் அகப்பொருள் நூல்களின் போக்கும் உள்ளது. ஆகவே, வள்ளுவர் வகுத்துரைக்கும் இத்தகையணங்குறுத்தல் மரபுவழி அமைந்ததோர் அழகிய சித்திரமே யாகும்.

'பெண்தகை' (குறள் 1083, 1084) என இரு பாடல்களில் வரும் தொடர் 'தகையணங்குறுத்தல்' என்னும் பெயரின் சாயை பெற்றுள்ளது. என்றாலும், இக் காமத்துப்பாலில் கருத்து வகையால் அமைந்த கிளவித்துறை கூறுவதால், அறத்துப்பால் பொருட்பால் அதிகாரங்கள் பெரும்பாலானவற்றிற் போல அதிகாரத் தலைப்பெயர் அவ்வவ் வதிகாரப் பாடல்களில் பயின்று வருவதில்லை. இதில் வரும் அதிகாரப் பெயர்கள் மரபு வழியாக வரும் கருத்தமைதி கருதிக் கொடுக்கப்பெற்றன என்பது நினைவு கூரத்தக்கது.

## *110. குறிப்பறிதல்*

(குறிப்பறிதலாவது பிறர் தம் மனத்துள் எண்ணியவற்றை அவர் கூறாமலே அவருடைய தோற்றம் செயல் முதலியவற்றால் அறிந்து கொள்வதாகும்.

முந்திய பொருளதிகாரத்தில் மன்னரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சர், தூதர் முதலாயினார்க்குக் குறிப்பறிந்து ஒழுகும் பண்பு வேண்டும் என அங்கும் 'குறிப்பறிதல்' என ஓர் அதிகாரம் வள்ளுவர் அமைத்துள்ளார். அவ்வதிகாரத்துள், 'நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' (குறள் 706) என்றும், 'பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும்' என்றும் பிறருடைய முகக்குறிப்பு கண் குறிப்பு களால் அவர்தம் உள்ளக் கருத்தை உய்த்துணரலாம் என எடுத்துக் காட்டியுள்ளார். அது போலவே இங்கும் தலைமகளது கண்ணின் நோக்கினால், அவள்தன் உளக்குறிப்பு உணரப்படுவதாக உரைக்கப் பட்டுள்ளது.)

"குறிப்பறிதலாவது தலைமகள் உள்ளக் குறிப்பினைத் தலைமகன் அறிதல்" என்று கொண்டு மணக்குடவர் தலைவன் கூற்றாகவே இவ்வதிகாரத்தை அவனுக்கு உரித்தாக்குகின்றார். காளிங்கர் இதனை 'ஆண்பாற் கூற்று' என்கிறார்.

(பரிமேலழகரோ, இதனைத் "தலைமகள் குறிப்பினை அறிதலும், தோழி குறிப்பினை அறிதலும், அவள்தான் (தோழி) அவ்விருவர் குறிப்பினை அறிதலுமாம்" எனத் தலைவன் தோழி என்னும் இருவர் கூற்றாகக் கொண்டு கூறியுள்ளார்.)

தோழியின் பக்கமாகவைத்துக் களவியல் நூல்கள் கூறும் 'மதியுடம்பாடு' என்னும் நிகழ்ச்சியையும் பரிமேலழகர் இக் குறிப்பறிதலின் பகுதியாக வைத்துப் பொருள் காண்கிறார்.

'செருஅச் சிறு சொல்லும்' (1097), 'உருஅதவர் போல்' (1096) எனத் தொடங்கும் குறள்களைத் "தோழி சேட்படுத்தவழி அவள் குறிப்பறிந்த தலைமகள் தன்னுள்ளே சொல்லியது" என்றும், 'ஏதிலார் போலப்' (1099), 'கண்ணொடு கண்ணிணை' (1100) என்னும் குறள்கள் "தோழி மதியுடம்படுவாள் தன்னுள் சொல்லியது" என்றும் கொண்டு தோழி—தலைமகள் என்னும் இருவர்தம் கூற்று நிகழ்ச்சிகளாகக் கூறுகின்றார். 'உருஅதவர் போற் சொலினும்' (1096), 'உருஅர் போன்று உற்றார் குறிப்பு' (1097) எனவரும் இடங்களில் மட்டுமே 'குறிப்பு அறிதல்' என்னும் அதிகாரப் பெயர்ப் பொருளுக்கு ஏற்ற சொற்பொருளமைதி உளது. ஏனைய பாடல்கள் எல்லாம் கண்ணொடு கண் கலந்து பேசுகின்ற குறிப்பினால் உணரப் படும் போது வாய்ச்சொற்களுக்கு இடமில்லாது போகின்ற தன்மை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

தலைமகளது அழகால் அணங்குற்ற தலைமகன் அத்தலைமகளைக் கூடும்போது, அவளுடைய குறிப்பறிந்தே கூடவேண்டும் ஆதலால் இது தகையணங்குறுத்தலின்பின், வைக்கப்பட்டது. காளிங்கர் முதலிய எல்லா உரைகாரர் கருத்தும் இதுவே.

## *111. புணர்ச்சி மகிழ்தல்*

தலைமகளின் குறிப்பு அறிந்து அவளைப் புணர்ந்த தலைமகன் அப் புணர்ச்சியினை மகிழ்ந்து கூறுதலாகும்.

'காமம் கூடியார் பெற்ற பயன் - புணர்தல்' (1109) என ஒரு பாடல் 'புணர்ச்சி' என்ற அதிகாரப் பெயரை நினைவூட்டுகிறது. மற்றும், 'அரிவை முயக்கு' (1107), 'முயக்கு வீழும் இருவர்க்கு இனிதே' (1108) என்றும், 'உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் (1106) என்றும், 'செறிதோறும் சேயிழைமாட்டு' (1110) என்றும் வரும் இடங்களும் இருவரிடையும் உளதாகும் கூட்டத்தின் தன்மை யையும் அதனால் உளதாகும் இன்பத்தையும் எடுத்துரைக்கின்றன.

ஐம்புலன்களுக்கும் இன்பம் தருவது தலைமகளின் புணர்ச்சி என்பதும், அது என்றும் நிறைவுறாது வளர்வது என்பதும், இவ் வதிகாரத்துள் வரும்,

> கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள (குறள் 1101)

என்னும் முதற்பாடலாலும்,

*அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்*
*செறிதோறும் சேயிழை மாட்டு* (குறள் 1110)

என்னும் இறுதிப் பாடலாலும் நன்கு உணரலாம்.

தலைமகள் குறிப்பறிந்து அவளுடைய உடன்பாட்டையும் பெற்ற பின்பே கூட்டம் நிகழும் ஆதலால் குறிப்பறிதலை அடுத்துப் 'புணர்ச்சியின் மகிழ்தல்' வருவது முறையாகின்றது.

புணர்ச்சியின் மகிழ்தல் இருவர்க்கும் உளதாயினும், அதனை வெளிப்பட உரைத்து மகிழ்தல் தலைவனிடம் மட்டும்தான் நிகழும். "இது தலைமகட்கு உரித்தன்றோ எனின், அவட்கும் ஒக்குமாயினும் அவள்மாட்டுக் குறிப்பினான் நிகழின் அல்லது கூற்றினால் நிகழாது" எனப் பரிப்பெருமாள் தடை விடைகளால் உணர்த்துவதும் இங்கு அறியத்தகும்.

பரிமேலழகர் இவ்வதிகாரத்துக் கூறிய புணர்ச்சி மகிழ்தல், முதலில் நேரும் இயற்கைப் புணர்ச்சியில்மட்டும் நிகழும் மகிழ்ச்சியாகக் கொள்ளாது, பின்னரும் நேரும் இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம், ஆகியவற்றிலும் ஏற்படும் புணர்ச்சிகளிலும் மகிழ்வதாக வகுத்துரைக்கின்றார். இவர் தம் பகுப்பு பின்வருமாறு :

1. *இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது :*
   *'கண்டு கேட்டு'* **1101**

2. *இடந்தலைப் பாட்டின்கண் சொல்லியது :*
   *'பிணிக்கு மருந்து'* **1102**

3. *'நிரதிசய இன்பத்திற்குரிய நீ இச் சிற்றின்பத்திற்கு இன்னையாதல் தகாது' என்ற பாங்கற்குச் சொல்லியது :*
   *'தாம்வீழ்வார் மென்தோள்'* **1103**

4. *பாங்கற் கூட்டத் திறுதிக்கண் சொல்லியது :*
   *'நீங்கின் தெறூஉம்'* **1104**

5. தோழியிற் கூட்டத்து இறுதிக்கண் சொல்லியது :
   'வேட்ட பொழுதின்' **1105**
   'உறுதோ றுயிர்தளிர்ப்பத்' **1106**

6. 'இவளை நீ வரைந்து கொண்டு உலகோர் தம்மில் இருந்து தமது பாத்துண்ணும் இல்லறத்தொடு படல் வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது :

'தம்மில் இருந்து' 1107

7. 'ஒத்த அன்புடைய நுமக்கு ஒரு பொழுதும் விடாத முயக்கமே இனியது என வரைவு கடாவியாட்குச் சொல்லியது:

'வீழும் இருவர்க்கு' 1108

8. 'கரத்தல் வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே இன்பப் பயனுடைத்து' என வரைவு கடாவியாட்குச் சொல்லியது.

'ஊடல் உணர்தல்' 1109

9. புணர்ந்துடன் போகின்றான் தன்னுள் சொல்லியது :

'அறிதோ றறியாமை' 1110

(பரிமேலழகர் தரும் விளக்கங்கள் இலக்கிய இலக்கண மரபுகளில் காணும் பொருட் கூறுபாட்டை ஒட்டி இவ்வதிகாரம் அமைந்துள்ளது என்றும், களவுப் புணர்ச்சியின் வகையாக முன்னூலார் கூறும் திறம் எல்லாம் இதனுள் அடங்கும் என்றும் காட்டுகின்றார். இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியிற் கூட்டம், வரைவுகடாதல், உடன்போக்கு என்னும் களவியற் பகுதிகளின் கருத்தமைதிகள் இவ்வதிகாரப் பாடல்களில் உள எனப் பொருத்திக்காட்டும் அவர்தம் ஆற்றல் வியப்புக்குரியதாம்.)

பரிப்பெருமாள் உரையுள் இரண்டொரு இடங்களில் உள்ள கருத்துகள் பரிமேலழகர் கருத்துக்குத் தோற்றுவாய் போல உள்ளன. அவற்றுள் ஒன்று :

'நீங்கின் தெறூஉம்' (குறள் 1104) என்பதன் உரையுள், "இரண்டாம் கூட்டத்துக் கூடலுற்ற தலைமகன் தலைமகள் கேட்பது பயனாகச் சொல்லியது" என்பது.

மற்றொன்று :

'வீழும் இருவர்க்கு' (குறள் 1108) என்பதன் உரையில், 'தோழியிற் கூடிய தலைமகன் பகற்குறியாயினும் இரவுக்குறியாயினும் ஒழுகாநின்றுழிக் காவல் கடுகுதல், நிலவு வெளிப்பாடு, அல்லகுறி முதலாயினவற்றால் இடையீடுபட்ட தலைமகட்குத் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தமையும் தோன்ற ஊடற் குறிப்பினால் தலைமகன் கூறியது" என்பதாம்.

மற்றும் பரிதியார் 'அறிதோறறியாமை' எனத் தொடங்கும் இறுதிக் குறளில் (1110) கூறும், "புணர்ந்துடன் போகின்றான் தன்னுள் சொல்லியது" என்னும் கருத்தை அப்படியே அடி யொற்றிப் பரிமேலழகர் விளக்கவுரையும் உள்ளது.

இவ்வாறாக, முந்திய உரைகாரர் உரைகளில் காணும் குறிப்பு களை அடியாக வைத்து, அகப்பொருள் இலக்கண இலக்கிய மரபு களையும் நோக்கி, அம் மரபுகளுக்கு ஒப்ப இவ்வதிகாரப் பாடல்களை வள்ளுவர் அமைத்துள்ளார் என்று காட்டி, குறள் மரபுவழி நூல் என்பதனை உறுதி செய்கின்றார்.

*ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்*
*கூடியார் பெற்ற பயன்* (குறள் 1109)

என்னும் குறள் உரையில் பரிப்பெருமாள் தரும் விளக்கத்தால், இயற்கைப் புணர்ச்சி, பாங்கற்கூட்டம், தோழியிற் கூட்டம் முதலி யவைபற்றிய செய்திகளையெல்லாம் விரிவாகக் காணலாகும்.[9]

## 112. நலம் புனைந்துரைத்தல்

தலைமகன் தலைமகளது நலத்தினைப் புனைந்து அலங்கார வகை யால் கூறுதலே நலம் புனைந்துரைத்தலாம். (புனைந்துரை என்பதனைப் பாராட்டு, கொண்டாட்டு, மகிழ்ச்சி என்றும் உரைப்பர்.) புணர்ச்சி யினால் மகிழ்வுற்ற தலைமகன் தலைமகளிடம் துய்த்த ஐம்புல இன்பத் தின் சிறப்பைப் பலவாறு பாராட்டிப் பேசுகிறான். எனவே, புணர்ச்சி மகிழ்தலின் பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

தலைமகளின் மென்மைத் தன்மை (குறள் 1111, 1112), அவளுடைய மேனி, வெண்பல், இயல்பான நறுமணம், மைதீட்டப் பெற்ற கருங்கண் ஆகியவற்றின் அழகிய தன்மைகளை உவமை காட்டி உவந்து பேசுகின்றான் (குறள் 1113). அவளுடைய சுருங்கிய இடையழகினையும், பாதங்களின் மென்மைத் தன்மையை யும் போற்றிப் புகழ்கிறான் (குறள் 1115, 1120). முக்கியமாக மதியுடன் மடந்தையின் முகத்தை ஒப்பிட்டும் (குறள் 1116-1119), குவளை மலருடன் அவளுடைய கண்களை ஒப்பிட்டும் பேசும் பாடல்கள் (1112, 1114, 1119) பலவாக உள.

குறிப்பறிதல் பகுதியிற்போல இங்கும் இயற்கைப் புணர்ச்சி முதல் உடன்போக்கு ஈறாக வரும் நிகழ்ச்சிகளில் அவ்வப்போது

தலைமகனால் இந் நலம்புனைந்துரைத்தல் நிகழ்ச்சி நேர்ந்தது என்று காட்டுவர் பரிமேலழகர். அவர்தரும் கருத்து விளக்கம் வருமாறு:

1. *இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது:*
   *'நன்னீரை'* *1111*
2. *இடந்தலைப்பாட்டின்கண் சொல்லியது:*
   *'மலர் காணின்'* *1112*
3. *கூட்டுதலுற்ற பாங்கற்குத் தலைமகன் தலைமகளது இயல்பு கூறியது:*
   *'முறிமேனி'* *1113*
4. *பாங்கற் கூட்டத்துக்குச் சென்று சார்தலுறுவான் சொல்லியது:*
   *'காணின் குவளை'* *1114*
5. *பகற்குறிக்கண் பூவணி கண்டு சொல்லியது:*
   *'அனிச்சப் பூ'* *1115*
6. *இரவுக்குறிக்கண் மதிகண்டு சொல்லியது:*
   *'மதியு மடந்தை'* *1116*
   *'அறுவாய் நிறைந்த'* *1117*
   *'மாதர் முகம்போல்'* *1118*
   *'மலரன்ன கண்ணாள்'* *1119*
7. *உடன்போக்கு உரைத்த தோழிக்கு அதனது அருமை கூறிமறுத்தது:*
   *'அனிச்சமும் அன்னத்தின்'* *1120*

பெரும்பாலும் பாடலின் பொருட் போக்கினைக்கொண்டு பரிமேலழகர் ஓர் இயைபு காண்கிறார். இப் பரிமேலழகர் கருத்திற்கு மாறுபட்டுக் கூறுவாரும் உளர். எடுத்துக்காட்டாக, 'பாங்கற் கூட்டத்துச் சென்று சார்தலுறுவான் சொல்லியது' என இவர் கூறியதனை (குறள் 1114 உரை), தலைவியைப் பகற்குறிக்கண் பெற்று மகிழ்தற்கு மேற்கோளாக இளம்பூரணரும் (தொல். பொருள். 100), தலைவன் இரவுக் குறிக்கண் தலைவியைப் பெற்று மகிழ்தற்கு மேற்கோளாக நச்சினார்க்கினியரும் (தொல். பொருள். 103) கொண்டுள்ளமையைக் கூறலாம்.

### *113. காதற் சிறப்புரைத்தல்*

காதற் சிறப்புரைத்தலாவது தலைமகன் தன் காதல் மிகுதி கூறுதலும், தலைமகள் தன் காதல் மிகுதி கூறுதலும் ஆம். இங்ஙனம்

ஒருவரை ஒருவர் உணர்ந்து உரையாடும் இப் பகுதி புணர்ச்சியும் நலனும்பற்றி நிகழ்வதாகும். ஆகவே, புணர்ச்சி மகிழ்தல், நலம் புனைந்துரைத்தல் என்பவற்றை அடுத்து இவ்வதிகாரம் அமைக்கப் பட்டுள்ளது. இவற்றுள் முதலைந்து பாடல் தலைமகன் கூற்றாகவும், பின் ஐந்து பாடல் தலைமகள் கூற்றாகவும் அமைந்துள்ளன. காளிங்கரோ இப் பாடல்கள் பத்தையும் தலைமகன் கூற்றாகவே கொண்டு கூறுவர்:

"இனி இங்ஙனம் நலம்புனைந்துரைத்த தலைமகன் பிறர் ஆராயும் முன்னர்ப் பிரிந்து எய்துவதே கருமம் என்று எடுத்துரைத்தலும், இடம் அணித்து என்றலும், பிறவும் எல்லாம் இவட்கு உரைத்துப் பிரிந்த பின் தலைமகன் பாங்கற்கு உரைக்கின்றது மேலை அதிகாரம்."

இதனால் இது பாங்கற்குத் தலைமகன் கூறியதாகக் காளிங்கரால் கொள்ளப்பெற்றுள்ளது என்பது தெரியவரும்.

பரிமேலழகர் உரைக்கும் துறைப்பொருள்களும் இலக்கிய மரபை ஒட்டி அமைந்தனவே. அவை வருமாறு:

1. *இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் தலைமகன் தன் நயப்பு உணர்த்தியது:*
   *'பாலொடு தேன்'* 1121

2. *பிரிவச்சம் கூறியது:*
   *'உடம்பொடு உயிரிடை'* 1122

3. இடந்தலைப்பாட்டின்கண் தலைமகள் நீக்கத்துச் சொல்லியது:
   'கருமணியிற்' 1123

4. பகற்குறிக்கண் புணர்ந்து நீங்குவான் சொல்லியது:
   'வாழ்தல் உயிர்க்' 1124

5. ஒருவழித் தணந்துவந்த தலைமகன், 'நீயிர் தணந்த ஞான்று எம்மை உள்ளியும் அறிதிரோ?' என்ற தோழிக்குச் சொல்லியது:
   'உள்ளுவன்மன்' 1125

6. ஒருவழித் தணப்பின்கண் தோழி இயற்பழிக்கும் என்றஞ்சி அவள் கேட்பத் தன்னுள்ளே சொல்லியது:
   'கண்ணுள்ளின்' 1126
   'கண்ணுள்ளார்' 1127
   'நெஞ்சத்தார் காதலவர்' 1128

7. வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலைமகளாற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தவழி அவள் இயற்பட மொழிந்தது :

'இமைப்பின் கரப்பாக்' 1129

'உவந்துறைவர்' 1130

## 114. நாணுத்துறவு உரைத்தல்

நாணுத்துறவு உரைத்தலாவது நாணம் இல்லாமையை எடுத்துக் கூறுதல். தலைமகன் தோழியால் சேட்படுக்கப்பட்டு ஆற்றுனுய இடத்து அவளுக்குத் தன் நாண் துறவு உரைத்தலும், அறத்தொடு நிற்குமாறு தோழியை வேண்டும் தலைமகள் அவளுக்குத் தன் நாண் துறவு உரைத்தலும் ஆம். தலைமகன் தான் நாணத்தைக் கைவிட்டு மடலேறத் துணிவதாகப் பேசுகிறுன். காளிங்கர் இவ்வதிகாரம் மடலேற்றினைப்பற்றிக் கூறுவதாக உரைக்கின்றுர்.

*நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்*
*காமுற்றுர் ஏறும் மடல்* (குறள் 1133)

*காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு*
*நல்லாண்மை என்னும் புணை.* (குறள் 1134)

இவற்றுள் முதற்பாட்டு தலைவன் நாணமும் தன் ஆண்மைத் தன்மையும் விட்டு மடலேறத் துணிவதாகக் கூறுவதனைத் தெரிவிக்கிறது. மேலும், காமமாகிய வேகப்புனல் நாண், நல்லாண்மை என்னும் புணைகளை அடித்துச் சென்று விட்டதாகவும் அடுத்த குறளில் கூறப்பட்டுள்ளது. இவற்றுல் தலைவன் காமம் மிக்கு நாணம் துறந்து போகின்ற தன்மை புலனுகும்.

காதல் மிக்கார்க்கு நாணம் இல்லை என்பதனுல் காதல் சிறப்புரைத்தலின்பின் வைக்கப்பட்டுள்ளது. ஆக, நாண் துறவும் மடலேறலும் காதல் மிக்க இடத்து நிகழும் என்பது விளங்கும்.

இவ்வதிகாரத்தின் முதல் ஏழு பாடல்களும் தலைமகன் கூற்று, இறுதி மூன்று பாடல்களும் தலைமகள் கூற்று என்பது பரிமேலழகர் கருத்து. மடல் ஏறுதல் தகாது என்று விலக்கலுற்ற தோழிக்குத் தலைமகன் தலைமகளிடம் கொண்டுள்ள காமம் காரணமாக நாணும், தன் நல்ல ஆண்தகைமையும் விட்டு மடலேறும் தம் துணிவினை எடுத்துரைப்பதாக இவ்வேழு பாடல்களும் அமைந்துள்ளன.

அடுத்துத் தலைமகள் தனது காமம் காரணமாக வெளியார் அம்பலும் அலரும் தூற்றும் நிலையாயிற்று என்று தோழியோடு புலந்து பேசுவதாக உள்ளது.

காளிங்கர் இவ்வதிகாரப் பாடல்கள் எல்லாவற்றையுமே தலைமகன் கூற்றாகவே கொண்டு பொருள் உரைக்கும் திறம் நோக்கத் தகும்.

### 115. அலரறிவுறுத்தல்

களவு ஒழுக்கம் விரும்பும் தலைமகன் பிறர் கூறும் அலர் தமக்கு ஆகும் வகையைத் தோழிக்கு அறிவுறுத்தலும், தலைமகளும் தோழியும் அவ்வலரை அத் தலைமகனுக்கு அறிவுறுத்தலும் ஆம். நாணுத்துறவு உரைத்து இரவுக்குறிவந்து போகும் தலைமகனுக்கு அவனுடைய நடத்தையால் அம்பலும் அலரும் ஆகியுள்ளன என்று அறிவிக்கின்றாள். ஆகவே, நாணுத் துறந்தவழி நிகழ்வது இது வாதலால் அதன்பின் வைக்கப்பட்டது.

இவ்வதிகாரப் பாடல்களில் வரும் பேச்சு அலர் எழுந்தது பற்றித் தோழி உரைத்தவிடத்துத் தலைமகன் பேசுவதாகவும், தலைவி தோழியிடம் அவ்வலரால் உளதாகிய தன்னிலைபற்றிக் கூறுவதாக வும் அமைந்துள்ளதாகக் கருதிப் பரிமேலழகர் உரை விளக்கம் செய்கின்றார். மணக்குடவர் முதலியோர் கருத்தும் இதுவே. ஆனால், காளிங்கர் மட்டும் இவ்வதிகாரம் முற்றும் தலைமகன் தோழியை நோக்கி உரைக்கும் கூற்றாகவே கொண்டு பொருள் உரைக்கின்றார்.

பலர் கூறும் பழிச்சொல்லாகிய 'அலர்' என்பதனோடு (1141, 1142, 1146, 1149) இப் பொருளைத் தரும் 'கவ்வை' என்பதும் (1143, 1144, 1147, 1148, 1150) பாடல்களில் எடுத்தாளப் பட்டுள்ளன.

### 116. பிரிவாற்றாமை

'தகையணங்குறுத்தல்' முதல் இதுவரை களவு ஒழுக்கம் கூறி, இது முதலாகத் தலைவன் தலைமகளை மணந்துகொண்டு நடத்தும் கற்பு வாழ்க்கை கூறுவதாக மணக்குடவர், பரிப் பெருமாள், பரிமேலழகர் முதலியோர் கொள்வர்.

தலைவன் தலைமகளை மணந்து கொண்டபின் அறம் பொருள் இன்பங்களின்பொருட்டு நெடுந்தூரத்தோ அன்றி அந்த ஊரிடத்தோ அவன் தலைமகளைப் பிரிந்து செல்லுவான். அப்பொழுது அப் பிரிவினைத் தலைமகள் ஆற்றுளாம் தன்மைபற்றிக் கூறுவது இவ் வதிகாரம்.

அலரறிவுறுக்கப்பட்ட தலைமகன் தலைமகளை மணந்துகொண்டு இன்புற்றுலும், பிரியுங் காலத்து உளதாகிய ஆற்றுமை பற்றியது ஆதலால் அலரறிவுறுத்தலை அடுத்துக் கூறப் பெற்றுள்ளது என்று கருத்துரைக்கின்றுர் மணக்குடவர்.

பரிப்பெருமாள், "ஓதல், காவல், பகைதணிவினை, வேந்தற் குற்றுழி, பொருட்பிணி என்னும் ஐந்தினும் ஒன்று காரணமாக நாடிடையிட்டுத் தலைமகன் பிரியுங்காலத்து ஆற்றுமை என்று கொள்க" என உரைத்து, எவ்வெப் பிரிவுகளில் ஆற்றுமை என்பதனையும் விளங்க உரைக்கின்றுர்.

பிரிவாற்றுமையில் நான்கு வகையாகக் கூற்று நிகழும் எனப் பரிமேலழகர் பகுத்துணர்த்துதலும் உணரத்தகும். இவர் தம் பாகு பாட்டுரை வருமாறு:

1. *பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி கூறல்:* *1151*
2. *தோழிக்குத் தலைமகள் அத் தலைமகன் குறிப்பால் உணர்ந்து கூறல்:* *1152—1155*
3. *பிரிவுணர்த்தியவழிக் கூறல்:* *1156—1558*
4. *தலைமகன் பிரிந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறுதல்:* *1159—1160*

பரிமேலழகர் தொடக்கத்தில் அதிகாரப் பொருள் உணர்த்திய படியே பத்துப்பாடல்களுக்கும் கிளவிக் குறிப்புக் கூறியுள்ளார்.

பிரிவுபற்றிய செய்திகளையும் அதனுல் உளதாகிய துன்பத்தையும் இவ்வதிகாரப் பாடல்களில் குறிப்பிட்ட போதும், 'பிரிவாற்றிப் பின் இருந்து வாழ்வார்' (குறள் 1160) என்ற இடத்தில் பிரிவாற்றுமை என்னும் பெயர் வழக்கிற்கான அடிநிலை உள்ளமை காணலாம்.

### 117. படர் மெலிந்திரங்கல்

படர் மெலிந்து இரங்கல் என்பது தலைமகள் தலைமகனைப் பிரிந்த துன்பத்தால் நைந்து, எப்பொழுதும் அவன் நினைவேயாக உடல் மெலிந்து இரங்கி உரைத்தலாம். படராவது துன்பம.

பிரிந்தவிடத்து உளதாகும் துன்பமாவது தலைமகன் போனான் என்று கேட்ட காலத்து வருவதோர் மனநிகழ்ச்சியாதலின், இது பிரியப்பட்டார்க்கு முதற்கண் தோன்றுமாகலான், பிரிவாற்றுமை யின் பின்னர் இ∴து அமைக்கப்படுவதாயிற்று.

'படர்' என அதிகாரத் தலைப்புப் பெயரில் வரும் சொல் இவ் வதிகாரப் பாடல்களில் இல்லை, 'நோய்' (1161, 1162), 'துயர்' (1165), 'துன்பம்' (1166), 'கொடுமை' (1169) என்னும் சொற் களைப் பாடல்களில் காணலாகும்.

### 118. கண்விதுப்பழிதல்

தலைமகளது கண்கள் தலைமகனைக் காண்பதற்கு விரைதலால் வருந்துதல்பற்றிக் கூறுவது. துன்பத்தால் மெலிந்த காலத்து நிகழ்வதாதலால் படர்மெலிந்திரங்கலின் பின்னர் இவ்வதிகாரம் வைக்கப்பட்டுள்ளது.

பிரிவினால் துன்பமுற்றார்க்குக் கண்ணீர் முற்படத் தோன்று மாகலான், தலைமகனைப் பிரிந்த துன்பத்தால் வருந்தும் தலைமகளும் தனது ஆற்றாமையை ஒன்றன்மேலிட்டுக் கூறுவாளாய், கண்ணின் மேலிட்டுப் பேசுகின்றாள். இவ்வதிகாரப் பாடல்கள் எல்லாவற்றிலும் கண்ணை முன்னிட்டுக் கூறும் கருத்துரைகள் உள்ளமை நோக்கத் தகும். 'கண்' (1171, 1175-1179), 'உண்கண்' (1172, 1174) எனக் கண்ணுறுப்புப் பாடல்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இறுதிப் பாடலில் (1180) 'அறைபறைக் கண்ணார்' எனக் கண்ணை யுடைய மகளிர் பேசப்பட்டுள்ளனர். மூன்றும் பாடலில் 'கண்' என்னும் சொல் வாராவிடினும் 'நோக்கி' எனக் கண்ணின் வினை கூறப்பட்டுள்ளதால் அதிலும் கண்பற்றிய செய்திவருதல் புலப்படும்.

*பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்*
*காணா தமைவில கண்* (குறள் 1178)

என்ற பாடலில் தலைமகனைக் காண்பதற்குக் கண்கள் விரும்புகின்ற தன்மை தலைமகளால் பேசப்படுதல் காணலாம். மேலும், தலைமக

ளுடைய கண்கள் அவள்தம் உள்ளத் துயரைப் பறைபோல உலகிற்கு உணர்த்தி விடுகின்றன (குறள் 1180). இவ்வகையில் பிரிவுத் துயரம் வாட்டத் தலைமகள் கண்ணீர் உகுத்து வருந்தி மெலிந்து போம் நிலைமையை இவ்வதிகாரப் பாடல்களில் காணலாம்.

காளிங்கர், 'கண்விதுப்பழித்தல்' என்று அதிகாரப் பெயரைத் தருகின்றார். அவர் தரும் இவ் அதிகாரப் பெயரின் பொருள் விளக்கமும் முறைவைப்புக் காரணமும் பின்வருமாறு:

> *"இனி மற்று அப்பொருள் கடைக்கூட்டி வந்து எய்திய தலைமகன் இவளை வரைந்து எய்தி நெடுங்காலம் இன்புற்று இங்ஙனம் இயலும் என்பது பொருளாம் என அறிக.*
>
> *"இனி மற்று இவ்வாறு அன்றிப் பின்னும் அவன் வருதல் நீட்டித்தவிடத்து இவள் பெரிதும் காண்டல் விருப்பினளாகும் அன்றே தலைமகளை. அதனால் மற்று இதன் (படர்மெலிந் திரங்கல்) பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்."*

இதனால் இவ்வுரைகாரர் 'கண் விதுப்பு' என்பதற்குக் 'காண்டல் விருப்பம்' என்று பொருள் கொள்கிறார் என்பது புலனும். மேலும், 'அவர்வயின் விதும்பல்' (அதி. 127), 'புணர்ச்சி விதும்பல்' (அதி. 129) என்று இவர் கொண்டுள்ளமையும் இவருடைய கருத்தைத் தெளிவிப்பதாகும்.

## *119.* பசப்புறு பருவரல்

தலைமகள் தலைமகனைப் பிரிந்த காலத்தில் பசப்பு உற்றதனால் உளதாகிய வருத்தத்தினைக் கூறுவதாம். பசப்பு என்பது பிரிவாற்றாமையால் பெண்பாலார்க்கு உளதாம் ஒருவகை நிறவேறுபாடு என்பர். இது தலைமகனைக் காணப்பெறாத காலத்து உண்டாவது. ஆதலினால் கண்விதுப்பழிதலின் பின் இது வைக்கப்பட்டது.

பசப்பினால் வேறுபட்ட தலைமகள் தான் உற்ற பசலை நோயைத் தோழிக்குக் கூறுவதாக இவ்வதிகாரப் பாடல்கள் அமைந்துள்ளன.

> *சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா*
> *நோயும் பசலையும் தந்து (குறள் 1183)*

என்பது தலைவியின் மேனியழகும் நாணமும் தலைவன் பிரிவினால் அழிய, அவற்றிற்கு மாறாகப் பசலையும் காமநோயும் கைவரப்

பெற்றவளாகத் தலைவி இருக்கின்ற துயர நிலையைக் கூறுகிறது. எல்லாப் பாடல்களிலும் 'பசப்பு' என்பதும் (1182, 1184—1187, 1189), இதன் முதனிலையாகிய 'பச' என்பதன் அடியாகப் பிறந்த 'பசந்த' (1181) 'பசந்தாள்' (1188), 'பசக்க' (1189) 'பசலை' (1183) என்னும் சொற்களும் பயின்று வந்துள்ளன.

## *120. தனிப்படர் மிகுதி*

தனிப்படர் மிகுதியாவது தனிமையால் வந்த துன்ப மிகுதி கூறுதல். அறம் பொருள் இன்பம் என்னும் குறிக்கோளொடு செல்லும் தலைமகனிடம் பிரிதலால் உளதாம் இத்தகைய துன்ப மிகுதி நேர இடமில்லை. துணைவனைப் பிரிந்து வாழும் தலைமகளுக்கே இத்துயர மிகுதி உளதாம் என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

*பிரிவாற்ருது கண்விதுப்புற்று*, பசலை நோயால் பற்றப்பட்ட தலைமகளிடம் தனிமைத் துயரம் பொங்கி மேலெழுவதாம். எனவே, பிரிவுத் துயர் கூறும் முன்னையதிகாரங்களோடு இதற்கு இயை புள்ளமை தெளியலாம்.

தலைமகன் பிரியத் தனித்து வாழும் தலைமகளின் துயரம் மிகுதியாம் என்பதும், தலைவனின் தலையளியால் மட்டுமே அத் துயரம் நீங்கும் என்பதும் இவ்வதிகாரத்தில் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. இறுதிப்பாட்டு தலைமகள் தன் நெஞ்சை நோக்கிக் கூறுவதாக உள்ளது.

## *121. நினைந்தவர் புலம்பல்*

சேய்மையிலோ அண்மையிலோ பிரிந்த தலைமகனை இடை விடாது நினைந்த தலைமகளின் துன்ப நிலையை உணர்த்துதல்.

" 'நினைத்தவர் புலம்பல்' என்று பாடமாயின், அதற்கு அவரை நினைத்துப் புலம்பல் என்று பொருள் உணர்ந்து கொள்க" என்று மணக்குடவர் அதிகாரப் பெயர்க்கு ஒரு பாட பேதத்தைக் காட்டிப் பொருள் உரைக்கின்ருர்.

*பரிமேலழகரோ, பிரிவில் தலைவன் தலைவியர் இருவருக்கும் தனிமை நேர, தாம் முன்பு பெற்ற இன்பத்தினை நினைந்து* புலம்புவ தாகப் பொருள் செய்கின்ருர். இதனுல்தான் இருவர்க்கும்

பொதுவாக 'நினைந்தவர்' என அதிகாரப் பெயரைப் பன்மை வாசகத்தால் ஆசிரியர் அமைத்துள்ளார் என்று காரணம் காட்டுகின்றார்.

தனிப்பட்டோர் காதலரை எக்காலமும் இடையறாது நினைப்பர்; ஆதலால் தனிப்படர் மிகுதியை அடுத்து நினைந்தவர் புலம்பல் வைக்கப்பட்டுள்ளது.

'நினைபபவர் போன்று நினையார் கொல்' (1203), 'எனைத்து நினைப்பினும்' (1208), 'உள்ளினும்' (1201, 1207) எனவரும் சொல்லாட்சிகள் அதிகாரப் பெயர்ப் பொருளை நினைவுறுத்துவன. இறுதிப் பாடல் (1210) சந்திரனை முன்னிலையாக்கித் தலைமகளால் கூறப்படுவதாக உள்ளது.

## *122. கனவு நிலை உரைத்தல்*

தலைமகள் தான் கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்கு எடுத்துரைப்பதாம்.

கனவு என்பது நனவின் போதுள்ள நினைவு மிகுதியால் காண்பது ஆகலான், இது நினைந்தவர் புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

"காதலின் நினைவினாலே வருத்தமுற்ற துன்பம் கூறினாள், அந் நினைவினால் இக் கனவு நிலை உரைத்தல் கூறுகின்றமையின், இது பின் கூறப்பட்டது" என்பது பரிப்பெருமாள் கருத்தாகும்.

'கனவு நிலை உரைத்தல்' என்னும் பெயர்க்கு ஏற்பக் 'கனவு' என்பது அதிகாரப் பாடல்களில் எல்லாம் பயின்று வருகினறன (1211, 1213—1217, 1219, 1220). கனவு நிலைக்கு மாறுபட்ட 'நனவு' என்பதும் பெரும்பான்மைப் பாடல்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

உறக்க நிலையில் கனவு தோன்றுவதும் விழிப்பு நிலையில் நினைவில் உறைவதுமாக நிகழும் பான்மை,

*துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்*
*நெஞ்சத்தர் ஆவர் விரைந்து* *(குறள் 1218)*

எனவரும் பாடலால் உணரலாகும்.

## 123. பொழுது கண்டு இரங்கல்

பொழுது கண்டு இரங்குதலாவது மாலைப்பொழுது கண்டு தலைமகள் வருந்துவதாம். பிரிவு நிலையில் எல்லாப் பொழுதும் வருத்தம் செய்தபோதிலும், காலையும் நண்பகலும் போலல்லாமல் மாலைப் பொழுது வருத்தத்தை மிகுவிக்கும் என்பதாம். 'பொழுது' (1221), 'போழ்து' (1229) எனக் காலம்பற்றிப் பாடல்களில் வந்த சொல்லும் மாலை வந்து சூழும் பொழுதையே குறிப்பிடுகிறது. துன்பம் காரணமாகத் தலைவனைப் பிரிந்து தனித்துறையும் மகளிர்க்கு அப் பொழுது மயக்கம் செய்யும் பொழுதாகவே தோற்றுகிறது. 'மருள் மாலை' (1222, 1230) என மாலைக்கு 'மருள்' என்னும் அடை கொடுத்துப் பேசப்படுதலும் கவனிக்கத் தகும். 'மாலை நோய் செய்தல்' (1226), அஃது அழல் போலும் மாலையாகத் தோற்றுதலும் (1228) துன்பம் வளருமாறு வருதலும் இவ்வதிகாரப் பாடல்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வதிகாரத்தி லுள்ள பத்துப் பாடல்களிலும் 'மாலை' என்னும் சொல் வந்து, 'பொழுது கண்டு இரங்கல்' என்னும் தலைப்பு மாலைப் பொழுது கண்டு இரங்குதலே என்பதனைப் புலப்படுத்துகின்றது.

பரிமேலழகர், 'கனவு முந்துறுத வினை இல்லை' (பழ. நா. 2.) என்னும் பழமொழிப் பாடலடியை எடுத்துக்காட்டி, "பகற்பொழுது ஆற்றியிருந்தாட்கு உரியதாதலின் இது கனவுநிலை யுரைத்தலின் பின் வைக்கப்பட்டது" என்று அதிகார முறை வைப்புக் காரணமும் கூறுகிறார்.

கனவுநிலையுரைத்தல் பகற்பொழுதில் நிகழ, அதன்பின் மாலைப் பொழுது வர, அது கண்டு இரங்குவாள் என்பதாம்.

பரிப்பெருமாள் மாலைக்காலம் வருத்தம் மிகுதி செய்யும் காரணங்களை எடுத்துக்கூறி, நினைந்தவர் புலம்பலின்பின் கூறத் தக்கதாகிய இது கனவு நிலையும் சேரச் சொல்ல வேண்டுதலால், நினைவொடு கூடிய கனவை முற்கூறி, அதன்பின் பொழுது கண்டு இரங்கல் கூறப்படுகிறது என்று அதிகார முறைவைப்பின் காரணங்களையும் விரிவாக எடுத்துரைக்கின்றார்.[10]

## 124. உறுப்பு நலன் அழிதல்

பிரிவுத் துன்பத்தால் தலைமகளுடைய கண்ணும் தோளும் நுதலும் முதலாய அவயவங்களின் அழகு கெடுதல்பற்றிக் கூறுகிறது.

"காதல் மிக்கு இரங்குவார் அக் காதலை அயலார் அறியாமல் அடக்கின காலத்து வெம்மையுற்ற கொடிபோல அனைத்து உறுப்பும் வாடுதலான், இது பொழுது கண்டு இரங்கலின் பின் கூறப்பட்டது" என்னும் மணக்குடவர் கருத்தை ஒட்டியே பரிமேலழகரும், "இஃது இரக்கம் மிக்குழி நிகழ்வது" என்கிறார்.

படர் மெலிந்திரங்கல் (அதி. 117), கண்விதுப் பழிதல் (அதி. 118), பசப்புறு பருவரல் (அதி. 119) முதலியனவாக முன்னரும் துன்பத்தால் தலைவி மெலிதலும், கண் கலுழ்வதும், மேனி பசலையுறுவதும் கூறித் தலைவியின் மேனி அழகு துயரால் குறைவுறுவது கூறியவர் இங்கே உறுப்பு நலன் அழிதல் என்பதால் கண், தோள், நுதல் ஆகியவற்றைச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றார்.

பசந்து பனிவாரும் தொழிலால் கண் அழகு கெட்டுள்ளமையை நான்கு குறள்களில் (1231, 1232, 1239, 1240) ஆசிரியர் அறிவுறுத்தியுள்ளார். நுதல் பசந்து அழகிழந்தமையை ஒரு குறள் கூறுகிறது (1238). ஏனையவை தோள் நலம் கெட்டமைபற்றிக் கூறுகின்றன (1233-1237). இங்ஙனமாக, கண், நுதல், தோள் என மூன்று உறுப்புகளின் நலனழிவு கூறுதலால் ஆசிரியர் பொதுவாக 'உறுப்பு நலன் அழிதல்' என்று இவ்வதிகாரத்திற்குப் பெயரிட்டனர் என்பதும் தெளிவாம்.

இவ்வுறுப்பு நலன் அழிதல் உரைப்பது தோழியின் கூற்றாகவும் (1231-1235), அதனைக் கேட்ட தலைமகன் கூற்றாகவும் அமைந்துள்ளது (1236-1240).

### *125. நெஞ்சொடு கிளத்தல்*

நெஞ்சொடு கிளத்தலாவது நெஞ்சு முன்னிலையாகத் தலைமகள் சொல்லுதல். ஆற்றாமை மீதூரத் தலைமகள் தன் காதலை அடக்க இயலாது, பிறர்க்குச் சொல்லுதற்கு நாணமுற்றுத் தன் நெஞ்சை விளித்துக் கூறி ஆற்றுகின்றது. உறுப்பு நலன் அழிந்த காலத்து நிகழும் நிகழ்ச்சியாதலின் அதன்பின் வைத்தும் முறைப்படுத்தப் பட்டுள்ளது.

இவ்வதிகாரப் பாடல்கள் எல்லாம் நெஞ்சை விளித்துத் தனது ஆற்றக்கூடாத துன்பநிலைபற்றித் தலைவி அதனிடம் பேசுவதாக உள்ளமையால், ஒவ்வொரு பாடலிலும் 'நெஞ்சு' என்னும் சொல் இடம்பெற்றுள்ளமை காணலாம்.

*துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா*
*இன்னும் இழத்தும் கவின்* *(குறள் 1250)*

எனவரும் இறுதிப் பாட்டில் தலைவி முன் இழந்த புறக்கவினோடு மேலும் அகக்கவினும் நிறையும் இழப்பேம் என்று கூறப்பட்டிருத்தலைக்காணலாம்.

## *126. நிறை அழிதல்*

நிறை அழிதலாவது வேட்கை மிகுதியால் தன் நிலைமை அழிந்து தலைமகள் கூறுவதாம். 'நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை' (கலி. 133 : 12) என்று உரைப்பர். நெஞ்சொடு பேசியபோது அந்த நெஞ்சின் மிக்கது புலப்படும் ; ஆதலால் அதன் பின் இவ்வதிகாரம் வைக்கப் பெற்றிருக்கிறது.

காம வேட்கையாகிய கோடரி நாணுகிய தாழிடப் பெற்ற கதவைச் சிதைக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.

*காமக் கணிச்சி உடைக்கு நிறையென்னும்*
*நாணுத்தாழ் வீழ்த்த கதவு* *(குறள் 1251)*

என முதற்பாடலில் தோற்றுவாய் செய்து, மேலும் இந் நிறையழிதலின் விளைவாக நேர்வனவற்றையும் ஆசிரியர் இவ்வதிகாரத்துள் எடுத்து மொழிகின்றார்.

'நிறை' (1251), 'நிறையுடையேன்' (1254) எனவரும் சொற்கள் இரு பாடல்களில் உள. தலைவி தலைவனுடைய போக்கால் தன் பெண்மைக்கு அணிகலனாக உள்ள நிறை, நாண் முதலியன நீங்கித் துயருறும் அவலநிலை பேசப்படுதலைப் பெரும்பான்மைப் பாடல்கள் உணர்த்தும்.

நிறை, நாண் அழிந்தவள் தலைவன் கூறிய மெல்லிய சொற்களால் பிணைப்புண்டு, அத் தலைமகனோடு கலந்து, நெஞ்சம் நெகிழ்ந்து விடுகின்றாள் என்பதனை இவ்வதிகாரத்தின் இறுதி நான்கு பாடல்களில் (1257-1260) உரைக்கின்றார்.

## *127. அவர்வயின் விதும்பல்*

'விதும்பல்' என்பது விரைதல் என்னும் பொருள் தரும். சேயிடைப் பிரிவினால் வேட்கை மிகத் தலைமகனும் தலைமகளும்

ஒருவரை ஒருவர் காண்பதற்கு விரைதலாம். இங்கே, தலைமகன் பிரிவும் தலைமகள் ஆற்றுமையும் அதிகாரப்பட்டு வருகின்றமையால், இருவரையும் சுட்டி 'அவர்' எனப் பன்மையால் கூறினுர் என்கிறுர் பரிமேலழகர்.

தலைமகன் வரைவை நோக்கித் தலைமகள் பிரிவினுல் துக்க முற்றிருத்தல் என்கிறுர் மணக்குடவர். "நிறையழிந்தார் எப் பொழுதும் காதலர் வரவிற்கு ஆசையுற்றிருப்பாராதலான் அதன் பின் இது கூறப்பட்டது" என்றும் இவர் கூறுகிறுர்.

இவ்விரு உரைகாரர் கருத்தும் நோக்கின், தலைமகன் பிரிந்த விடத்து ஆற்றியிருக்கும் தலைவி அவன் வரவை நோக்கி, தனது நோய் நீங்கும் வகைபற்றிச் சிந்தித்துத் தோழியுடன் பேசுவதாக இவ்வதிகாரம் அமைந்துள்ளது.

*வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற*
*நாளொற்றித் தேய்ந்த விரல்* (குறள் 1261)

*ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்ருர்*
*வருநாள் வைத்தேங்கு பவர்க்கு* (குறள் 1269)

என்று இவ்வாறு பிரிவிடை ஆற்றியிருக்கும் தலைவியின் உள்ள நிலைமைகளை ஆசிரியர் அவளுடைய வாய்மொழியாக எடுத்துரைக் கின்றுர்.

இவ்வதிகாரத்தில் முதல் ஏழு பாடல்களைத் தலைவி கூற்றுகவும் இறுதி மூன்று பாடல்களைத் தலைவன் கூற்றுகவும் பரிமேலழகர் கொள்கிறுர். ஏனையோர் எல்லாம் எல்லாவற்றையும் தலைமகள் கூற்றுகவே கொண்டு உரைகண்டுள்ளனர்.

பரிமேலழகர் ஏனைய உரைகாரர்களினும் கருத்துமாறுபடுவதற்கு உற்ற காரணமும் அவர்தம் உரையால் விளக்கமாகும். அது வருமாறு :

> "இம் மூன்றும் உடம்பொடு புணர்த்திக் கூறப்பட்டன, அதன் மேலும் முன்னை வழக்குண்மையின். அதற்கு முன்னே யான் செல்ல வேண்டும் என்பது கருததாதலின், விதுபபாயிற்று. இது தலைமகள் கூற்றுயவழி இரங்கலாவதல்லது விதுப்பா காமை அறிக."

## *128. குறிப்பறிவுறுத்தல்*

குறிப்பு அறிவுறுத்தலாவது ஒருவர் மனத்துள் கருதிய நோக்கத்தினை எடுத்து உரைத்தலாம். " அஃதாவது தலைமகன், தலைமகள், தோழி என்று இவர் ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறிவுறுத்தல் " என்பர் பரிமேலழகர்.

இது பிரிந்து சென்ற தலைமகன் மீண்டு வந்து கூடியகாலத்து நிகழ்வதாம். அதனால், அவர்வயின் விதும்பலின்பின் வைக்கப் பட்டது.

இங்குக் கூறப்பெற்ற குறிப்பறிவுறுத்தல் இயற்கைப் புணர்ச் சிக்குப்பின் கற்பு வாழ்க்கையில் பிரியும் பிரிவுவரை உள்ள எல்லா நிலைகளையும் கருதிக் கூறியதாகும் என்று கருதுகிறார் பரிப் பெருமாள். மேலும், " இவை எல்லாம் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்பு இத்துணையும் பிரிந்துழி நிகழ்பவை கூறினார் ஆதலானும், இனிப் புணர்ச்சி விதும்பல் (அதி. 129) கூறுகின்றார் ஆதலானும், ஈண்டுக் கூறப்பட்டது'' என அதிகார முறைமைக் காரணமும் கூறுகின்றார்.

| | |
|---|---|
| *தலைமகள் குறிப்பறிந்து தலைமகன் சொல்லியது* | *1271* |
| *தலைமகன் தோழிக்குச் சொல்லியது* | *1272—1275* |
| *தலைமகள் தோழிக்குக் கூறியது* | *1276—1278* |
| *தோழி தலைமகற்குச் சொல்லியது* | *1279* |
| *தலைமகள் பிரியாமைக் குறிப்பினைத் தோழிக்கு உரைத்தல்* | *1280* |

கண், முறுவல், வளை முதலியவற்றின் குறிப்புகளால் உள்ளுணர்வுகளின் வெளிப்பாடு தெரியவருகின்றமையை இவ்வதி காரப் பாடல்களில் காணலாம்.

## *129. புணர்ச்சி விதும்பல்*

புணர்ச்சி விதும்பலாவது பிரிந்து கூடின தலைமகனும் தலை மகளும் புணர்தல் வேண்டி ஒருவரின் ஒருவர் முந்திவிரைதலாம்.

பிரிவுத் துயரால் தலைமகள் வருந்தி அழகிழந்த நிலையில் தலைவன் மீண்டுவர, அவள் முன் நிகழ்ச்சிகளை மறந்து, அவனோடு

கூடி இன்புற விழைகிருள். இத்தகைய தலைவியின் உள்ள நிலைமைகளை ஆசிரியர் இவ்வதிகாரத்துள் கூறியுள்ளார்.

*கண்ணில் துனித்தே கலங்கிஞள் புல்லுதல்*
*என்னினும் தான்விதுப் புற்று* (குறள் 1290)

எனத் தலைமகளின் புணர்வு வேட்கையைக் கண்டு தலைமகன் சொல்வதாக உள்ள பாடலைப் போன்றே ஏனையவும் இவ்வதிகாரத்துள் உள.

## 130. நெஞ்சொடு புலத்தல்

ஒருவர்க் கொருவர் புலக்க எண்ணுது புணர்ச்சியை விழைகின்ற நெஞ்சுடன் தலைமகன் தலைமகள் இருவரும் அந்நெஞ்சத் தொடு மாறுபட்டுப் பேசுதலாம். இது முதலாக உள்ள மூன்று அதிகாரங்களையும் 'ஊடிக்கூடல்' என்பர் மணக்குடவர். இது புணர்ச்சி விருப்பால் நெஞ்சொடு கூறுகின்றமையால் ஏனையதிகாரத் தொடு இயைபுடைத்தாகின்றது.

## 131. புலவி

புலவியாவது தலைமகனேடு தலைமகள் புலந்து கூறுதல். நெஞ்சொடு புலந்தவள் வெளிப்படையாய் அப்புலவியினை நிகழ்த்து வதஞல் அதன்பின் கூறப்பட்டது.

இப்புலவியும் காதலர்களின் காம விருப்பினை மிகுவித்தலால் இதுவும் அளவோடு வேண்டற்பாலதாம் என்பர்.

*துனியும் புலவியும் இல்லாயின் காமம்*
*கனியும் கருக்காயும் அற்று* (குறள் 1306)

*உப்பமைந் தற்றல் புலவி அதுசிறிது*
*மிக்கற்றல் நீள விடல்* (குறள் 1302)

என இவ்வதிகாரத்துள் வரும் பாடல்கள் புலவியின் அவசியமும் அளவும் குறித்துக் கூறுகின்றன.

'புலவி' என்னும் அதிகாரபபெயர் சில பாடல்களில் இடம் பெற்றுள்ளன (1302, 1306, 1309). புலவியின் வளர்ச்சியான ஊடல் என்பதும் ஒருசில பாடல்களில் (1304, 1307, 1310) வந்துள்ளன.

## 132. புலவி நுணுக்கம்

புலவி நுணுக்கமாவது தலைமகனிடம் தவறில்லாவிடினும் தலைவி தன் காதல் மிகுதியால், சொல்லெச்சத்தினாலும் குறிப்பெச்சத்தினாலும் வேறுபடப் பொருள் கொண்டு புலந்து கூறுவதாம். தலைமகனும் தலைமகளும் ஓர் அமளியில் உடன் கூடியிருந்தும், நுண்ணியதோர் புலவிக் காரணம் அவனிடம் உளதாக அவன்மேல் ஏறட்டுக்கொண்டு கூறுதல். இது புலவியினும் நுண்ணிய புலவி என்றமையால், முற்கூறிய புலவியின் வேறுபடுத்து, அதன்பின் ஆசிரியர் கூறுகிறார்.

சென்ற அதிகாரத்திற்போல, 'புலவி,' 'ஊடல்' என்னும் பிணக்கத்தைக் காட்டும் சொற்கள் இவ்வதிகாரப் பாடல்களில் இடம் பெறவே இல்லை.

தலைவனுடைய தும்மல், பேச்சு, செய்கை, அவன் அணிந்துள்ள பூ முதலியன எல்லாவற்றிலும் தலைமகன் வேறுமகளிர்பால் உள்ளம் கொண்டுள்ளானோ என்று ஐயுற்றுப் பேசும் பேச்சுகள் அவளுடைய மனப்பிணக்கத்தை வெளிப்படுத்துகின்றன. நுண்ணிய சொல், செயல்கள்பற்றி உரையாடுகின்ற இப் பகுதியில் காதலர்களிடையே யுள்ள அன்புப் பிணைப்பும் வெளிப்படுகிறது.

## 133. ஊடலுவகை

ஊடல் உவகையாவது இருவர்க்கும் நேர்ந்த பிணக்கமாகிய ஊடலை உவந்து கூறுவதாம். மற்றுள்ள நாள்கள் போலவன்றி ஊடலின்பின் நேர்ந்த புணர்ச்சி இருவர்க்கும் பெரியதோர் இன்பம் தருதல் கண்டு, அதற்குக் காரணமாகிய அவ்வூடலைத் தலைமகன் வியந்து கூறுதலும், அவ்வாறே தலைமகள் கூறுதலும் ஆம்.

புலவி, ஊடல்களுக்குப் பின் நேரும் புணர்ச்சியால் உளதாகிய இன்ப மகிழ்ச்சி பற்றிக் கூறுதலால் முந்திய புலவி, புலவி நுணுக்க அதிகாரங்களோடு இது இயைபுடைத்தாகின்றது.

ஊடலால் நேர்ந்த உவகைபற்றி இருவரும் பேசும் உரைகளின் வாயிலாக ஆசிரியர் புலப்படுத்துகின்றார். அன்றி, 'உவகை' என்னும் சொல் எந்தப் பாடலிலும் இடம் பெறவில்லை ஆயினும்' 'ஊடல்' என்பதும் (1322, 1326, 1327), மற்றும் இதன் சார்பாக

வரும் ' ஊடுதல் ' (1321, 1330), ' ஊடி ' (1328), ' ஊடுக ' (1329) என்பனவும், ' புலத்தல் ' (1323), ' புலவி ' (1324) என்பனவும் பாடல்களில் பயின்று வந்துள்ளன.

*ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்*
*கூடி முயங்கப் பெறின்* (குறள் 1330)

எனவரும் இறுதிக் குறள் இவ்வதிகாரப் பொருளுக்கு ஓர் ஏற்றம் தருகின்றது.

' அகர முதல ' எனத் தமிழ் நெடுங்கணக்கின் அகரத்தில் (அ) தொடங்கிய வள்ளுவப் பெருந்தகை, ' கூடி முயங்கப் பெறின் ' என்று இறுதி எழுத்தாகிய னகரத்தில் (ன்) முடித்துள்ளமை இந் நூலுக்கு உரிய தனிச் சிறப்பாகும் என அறிஞர் பலரும் போற்றுகின்றனர். இக் கருத்துப் பரிமேலழகரின் பாடல் முறை வைப்பினைக் கொண்டு கூறும் கருத்தாகும்.

ஏனைய உரைகாரர் எல்லாம் பரிமேலழகர் மூன்றும் பாடலாக வைத்த,

*புலத்தலின் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு*
*நீரியைந் தன்ன ரகத்து*

என்னும் பாடலை இவ்வதிகாரத்தின் இறுதிப் பாடலாக, நூலின் நிறைவுப் பாடலாக அமைத்துள்ளனர். "கலவி இன்பத்தினும் மிக்க இன்பம் தேவர் உலகத்திலும் உண்டோ?" என்பதும் இன்ப மிகுதி பற்றிய பேச்சே ; ஊடல் உவகையை வெளிப்படுத்துவதே.

மேலும், ' அகத்து ' என முடியும் நூலின் இறுதிச் சொல் ' அகர முதல ' என்னும் முதற்பாடலை நினைவூட்டுவதான அந்தாதி மண்டலிப்பு முறையில் உள்ளது போலவும் கருத இடமுண்டு.

## குறிப்புகள்

1. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி :
மு. இராகவையங்கார்.

2. "இல்லறமாவது இல்லின்கண் இருந்து தான முதலாயின செய்தல். அது கூறிய அதிகாரம் இருபதினும் இல்வாழ்வான் வாழுந் திறம் ஓரதிகாரத்தானும் அதற்குத் துணையான மனைவியிலக்கணம் ஓரதிகாரத்தானும் கூறி, அதன்பின் இல்லறப் பகுதியான பிரமசரியம், காருகத்தம் என்னும் இரண்டினுள்ளும் பிரமசரியத்திற்கு ஆதாரமாகிய புதல்வரைப் பெறுதல் ஓரதிகாரத்தாற் கூறிக் காருகத்த இலக்கணம் கூறுவார் நல்கூர்ந்தார், நல்குரவினீங்கினுர், செல்வர், வள்ளியோர்

என்னும் நால்வரினும் அன்புடைமை முதலாக ஒழுக்கமுடைமை ஈறாக நல்கூர்ந்தாராற் செய்யப்படுவன ஏழும், பிறனில் விழையாமை முதலாகத் தீவினையச்சம் ஈறாக இவரால் தவிரப்படுவன ஏழும் பதின்மூன்கு அதிகாரத்தால் கூறி, இவற்றோடுங்கூட ஒப்புரவறிதல் நல்குரவினீங்கினோரால் செய்யப்படும் என்று கூறி, இவற்றோடுங்கூடப் புகழ் வள்ளியோரால் செய்யப்படும் என்று கூறினாராகக் கொள்ளப்படும். இவ்வறம் முற்படக் கூறியது, துறவறத்தினோரையும் ஓம்புதல் இல்வாழ்வான் கண்ணது ஆகலான்.”

(மணக்குடவர் : இல்லறவியலின் தோற்றுவாய்)

3, வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் தமது திருக்குறள் பரிமேலழகர் உரைப் பதிப்பில், ‘பரிமேலழகருரைத் தன்மை’ என்பது பற்றிய ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியுள்ளார். அதில் இவ்வதிகாரத் தலைப்புப்பற்றிய கருத்து மாறுபாடுகளை எடுத்துக் கூறி, அவற்றிற்குச் சான்றுகள் பல காட்டி விளக்கம் தருகிறார். இவ் விளக்கத்தின் முடிவுரைப் பகுதியே இங்குத் தரப்படிருக்கிறது.

4. “துறவறமாவது தவமேற்கொண்டு ஒழுகுதல். அது வானப் பிரத்தம் சந்நியாசம் என இரண்டு வகைப்படும். அது கூறப்பட்ட அதிகாரம் பதின்மூன்றினும் வானப்பிரத்தம் அருளுடைமையும், புலால் மறுத்தலும் தவமும் ஓரோவதிகாரத்தானும், அவற்றின் பின் காமம் வெகுளி மயக்கம் மூன்று குற்றத்தினும் காமப் பகுதியாயின தவிர்தல் மூன்றதிகாரத்தானும்; வெகுளிப் பகுதியாயின தவிர்தல் மூன்றதிகாரத் தானும் மயக்கம் தவிர்தல் ஓரதிகாரத்தானும் கூறப்பட்டது. அவற்றுள் அருளுடைமையும் புலால் மறுத்தலும் இல்வாழ்வார்க்கும் ஏற்றதாதலால் அதன் பின்னாகத் தவத்திற்கு முன்னாகக் கூறப்பெற்றன.

(பரிப்பெருமாள் உரை)

5. இப் பாட்டில் பரிமேலழகர் ‘உயிரெச்சம்’ என்பதற்குப் பதிலாக ‘உயிரச்சம்’ என்று பாடம் கொள்கின்றார். அன்றியும், இப் பழங் கருத்தை மறுத்துப் பின் வந்த பேருரைகாரராகிய இவர் வடநூலாரின் அருத்த சாத்திரத்தில் காணும் நால்வகை உபதைகளை எடுத்துக்காட்டி வேறுபடக் கூறுகிறார்.

> “இவ் வடநூற் பொருண்மையை உட்கொண்டு இவர் (திருவள்ளுவர்) ஓதியது அறியாது பிறரெல்லாம் ‘உயி ரெச்சம்’ எனப் பாடம் திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்” என்கிறார். இது மேலும் நன்கு ஆராயப்பட வேண்டும் ஒரு கருத்துரையாகும்.

6. “பொருளியலாவது பொருளின் பகுதி : அது கூறிய அதிகாரம் ஐந்தினும் முற்படப் பொருளாக்குதற்கு இடமாகிய நாட்டியல்பு ஓரதிகாரத்தானும், அந் நாட்டிற்கு ஏமமாகிய அரணியல்பு ஓரதிகாரத்

தானும், அவ்விடங்களில் ஆக்கப்பட்ட பொருளியல்பு ஓரதிகாரத்தானும், அப் படையின் நன்மையாலாக்கும் படைச்செருக்கு ஓரதிகாரத்தானும் கூறப்படும். இஃது அமைச்சராற் செய்யப்படுதலின் அதன் பின் கூறப்பட்டது.''

(மணக்குடவர்—பரிப்பெருமாள் உரை)

7. அன்புடைமை (அதி. 8), நாணுடைமை (அதி. 102), ஒப்புர வறிதல் (அதி. 22), கண்ணோட்டம் (அதி. 58), வாய்மை (அதி. 30).

8. ''உழவு, தொழில், வரைவு, வாணிகம், சிற்பம், வித்தை என்று சொல்லப்பட்ட அறுவகைத் தொழிலும் குடிசெய்வார்க்கு வேண்டும் அன்றே? அவை எல்லாவற்றின் இயல்பும் கூறுதார் உழவு ஒன்றும் கூறியது எற்றுக்கு எனின், அவற்றுள் கல்வி பொருள் தரும் என்பது முன்பே கூறப்பட்டது. தொழிலாவது ஒருவன் ஏவல் செய்தல். அரசர் ஏவலால் அமைச்சர் செய்யும் தொழில் அமைச்சியலுள் கூறப்பட்டது. ஏனையோர் செய்யும் தொழிலும் வரைவு வாணிகமும் சிற்பமும் மேலை அதிகாரத்தில் (103)

'ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி'

(குறள் 1022)

என்றதனுலே சொன்னாராம். என்னை? அவை எல்லாம் முயற்சியானும் அறிவானும் வருதலின். ஆயின் உழவும் அதனுள் அடங்காதோ எனின், அடங்கும். அஃது ஈண்டுத்தொழிலை நோக்கிக் கூறப்பட்டது அன்று. முயன்று பொருளீட்டிஞரெல்லாரும் குடியோம்புங்கால் தானியத்தால் ஓம்பவேண்டுதலின் அதனை உண்டாக்கவேண்டும் என்று கூறப்பட்டது.''

9. ''காமம் கூடிஞர் பெற்ற பயன் என்றான், முன்பு இவை கண்டு அறியாமையால் இவை யெல்லாம் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லி னவும் தலைமகளே கேட்பது பயனுகச் சொல்லினவும் என்று கொள்ளப் படும். 'நீங்கின் தெறூஉம்' என்பது முதலாகக் கூறியது என்னையோ எனின், முதலாகக் கூறிய குறள் நான்கும் நலம் புனைந்துரைத்தலின் பின்னும் கூறற்பாலன ஈண்டுக் கூறியது களவு காலத்துக்கூடும் கூட்டமெல்லாம் அருமையுடைத்து ஆகலானும், ஆண்டுத் தனி ஓரதிகாரம் கூறவேண்டுதலானும், அது கூறுங்காலும் புணர்ச்சி மகிழ்தல் என்று கூறவேண்டுதலானும் ஈண்டுச் சேரக் கூறப்பட்டன ஆயின் இக் கூட்டங்கட்கு நிமித்தமாகிய நலம் புனைந்துரைத்தல் முதலாகிய அதிகாரங்களை அருமையிற் கூடல் என்று கூறவேண்டும் பிற எனின், ஒக்கும். அவை எல்லாம் புணர்ந்த பின்பு நிகழ்தலானும் பாங்கற் கூட்டமும் தோழியிற் கூட்டமும் இயற்கைப் புணர்ச்சியோ டொத்த இயல்பிற்று அன்மையாலும், அவைதாம் பெரும்பான்மையும் பிரிந்து கூடுதலானும், கூறப்படா என்க. இதனுள், ஆலிங்கனம்

முதலியன கூறுது பகுக்களைப்போலப் புணர்ச்சி மாத்திரமே கூறி விட்டது என்னை எனின்,

> கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள
>
> (குறள் 1100)

என்ருராகலின், அவை யெல்லாம் இதனுனே சொன்னுர் என்று கொள்ளப்படும். இது காமப்பகுதியன்றே ; இதனை வட நூலாசிரியர் கூறியவாறுபோல விரித்துக் கூருதது என்னை யெனின், அந்நூலகத்து விரித்துக் கூறியதெல்லாம் அளவும், காலமும், வேகமும், ஒவ்வாதாரை ஒப்பிக்கும் நெறியும், கைக்கிளை பெருந்திணைப் பாற்பட்ட கன்னியரைக் கூடுந்திறனும், கணிகையர் சீலமும் கூறினுர். ஈண்டு உழுவலன்பினுற் கூடுகின்ற நற்கூட்டம் ஆதலின், இவையெல்லாம் விதியினுலே ஒக்க அமைந்துகிடக்கும் ஆகலான் கூருராயினுர் என்க."

10. "என்னை வருத்தம் மிகுமாறு எனின், புள்ளும் மாவும் விடியலும் நண்பகலும் தத்தம் சேர்க்கையினின்று நீங்கி அந்திக்காலம் வந்து சேரும்: அவையிற்றைக் கண்டு நம் காதலர் நம்மை உள்ளு கின்றவர் என்றும், மைந்தரும் மகளிரும் விடியலும் நண்பகலும் அறத் தினும் பொருளினும் முயன்று அந்திக் காலத்தில் தம்மிற்கூடி இன்பம் நுகர்வது கண்டு யாம் இவ்வாறு நுகரப் பெறுகிலோம் என்றும் நினைத்தலான் வருத்தம் மிகும் என்க. நடுநாள் யாமத்தும் துன்பம் உறும் அன்றே; அதுவும் கூறவேண்டாவோ எனின், அக்காலத்து வரும் துன்பமும் இதனின் மிகுதியின்மையின் வேறு கூருராயினர். இது நினைந்தவர் புலம்பலின் பின் கூறற்பாலது. கனவு நிலையும் சேரச் சொல்ல வேண்டுதலின் இரண்டு சொல்லும் அவராகக் கொண்டு முன் கூற வேண்டும் என்பதனுல் நினைவொடு கூடிய கனவை முன் கூறி அதன்பின் கூறினுர் என்று கொள்ளப்படும்."

(பொழுது கண்டிரங்கல் : தோற்றுவாய்)

11. மேல் தலைமகள் குறிப்பு தலைமகன் அறிந்தான் என்றது அல்லது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கின தலைமகள் குறிப்புத் தோழி அறிதலும், இரந்துபின் நின்ற தலைமகள் தோழி குறிப்பு அறிதலும், குறை நயப்பித்தவழித் தலைமகன் குறிப்புத் தோழி அறிதலும், நொதுமலர் வரைய வந்துழி வேறுபட்ட தலைமகள் குறிப்புச் செவிலி அறிதலும், பிரிதல் உற்ற தலைமகன் குறிப்புத் தலைமகள் அறிதலும், பிரிவு உணர்த்தச் சென்ற தோழி குறிப்புத் தலைமகன் அறிதலும், அவ்வழித் தலைமகள் குறிப்புத் தோழி அறிதலும், இவை யெல்லாம் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்பு இத்துணையும் பிரிந்துழி நிற்பவை கூறினுர் ஆதலானும் இனிப் புணர்ச்சி விதும்பல் கூறுகின்ருர் ஆதலானும் ஈண்டுக் கூறப்பட்டது.

(குறிப்பறிவுறுத்தல் ; தோற்றுவாய்)

# 5. அதிகாரப் பொருளடைவு

திருக்குறள் உரைகாரர்களுள் மணக்குடவர், பரிமேலழகர் உரைகளிலேயே பாடல்களின் பொருட்சுருக்கம், பொருள்-தொகுப்பு, பொருள் அடைவு முதலியன காணப்பெறுகின்றன. இவ்விரு வருள்ளும் மணக்குடவர் ஒவ்வொரு பாடலுக்கும் கருத்துரை போல எழுதிச் செல்கின்றாரேயன்றி அதிகாரப் பொருள்களைக் காரண காரியத் தொடர்பு படுத்தித் தொகுப்புரை தரவில்லை. அதிகாரங்களில் வரும் எல்லாப் பாடல்களுக்கும் இடையீடின்றித் தொடர்ச்சியாகவும் இவருடைய விளக்கம் இல்லை. எடுத்துக்காட்டாக 7 முதல் 12 வரையுள்ள அதிகாரங்கள், மற்றும் 15—16 ஆம் அதிகாரங்களில் எவ்வகையான பொருட்சுருக்கக் குறிப்பும் இல்லாமல் இருப்பது கவனிக்கத் தகும். மேலும், சிற்சில பாடல்களுக்கு இவர்தரும் கருத்துரை பொருட் சுருக்கத் தலைப்புகள் போலவும் காணப் படுகின்றன. என்றாலும், பரிமேலழகர் உரையிற்போல அதிகாரப் பாடல்களைச் சுட்டிக் காட்டிப் பொருள்களைக் கூறுபடுத்திக் காட்டும் முறை எங்கும் ஒருபடித்தாகக் காணப்படவில்லை.

இப்பொழுது கிடைக்கும் திருக்குறள் உரைகளுக்குள்ளே பரிமேலழகர் உரை ஒன்றில் மட்டுமே அதிகாரப் பொருள் அடக்கம் தெளிவாகப் பாடல்களின் எண் குறிப்புடன் காணப் படுகிறது. எனவே இவ்வுரைகாரர் தரும் அதிகாரப் பொருள்-அடைவு திருக் குறள் கற்பார்க்கு அவ்வவ் அதிகாரப் பொருள்களின் தன்மை யையும் தனிச் சிறப்பையும் உணரப் பெருந்துணை செய்வதாக உள்ளது என்பது தெளிவு.

பரிமேலழகர் தரும் அதிகாரப் பொருள் அடைவும் பாடல்களைச் சுட்டிக்காட்டி, இன்னின்ன பாடல்களில் இன்னின்ன பொருள்கள் பொதிந்துள்ளன என வாக்கியமாகக் காணப்படுகிறது. இவ் வாக்கியங்களின் கருத்து மாறாத வகையில் தலைப்புகள் போல அவற்றைச் சுருக்கிப் பெரும்பான்மையும் அவர்தம் நடையை ஒட்டி இங்கே மேல்வரும் பொருளடைவு அமைத்துத் தரப்பட்டிருக்கிறது.

### 1. கடவுள் வாழ்த்து

| | |
|---|---|
| முதற் கடவுளது உண்மை | 1 |
| ஆகம அறிவுற்குப் பயன் அவன் தாளைத் தொழுது பிறவி அறுத்தல் | 2 |
| இறைவனை நினைப்பார் வீடு பெறுவர் | 3— 4 |
| அவனை வாழ்த்துவார் வீடு பெறுவர் | 5 |
| அவன் நெறி நிற்பார் வீடு பெறுவர் | 6 |
| அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்யாவழிப் படும் குற்றம் | 7— 9 |
| உலகியல்பை நினையாது இறைவன் அடியையே நினைப்பார்க்குப் பிறவியறுதலும் மாறி நினைப்பார்க்குப் பிறவியருமையும் | 10 |

### 2. வான் சிறப்பு

| | |
|---|---|
| உலகம் நடத்தற்கு ஏதுவாதல் | 1— 7 |
| அறம் பொருள் இன்பங்கள் நடத்தற்கு ஏதுவாதல் | 8—10 |

### 3. நீத்தார் பெருமை

| | |
|---|---|
| நீத்தாரது பெருமையே எல்லாப் பெருமையினும் மிக்கது | 1— 3 |
| பெருமைக்கு ஏது : (அ) ஐந்து அவித்தல் | 4— 5 |
| (ஆ) யோகப் பயிற்சி | 6 |
| (இ) தத்துவ உணர்வு | 7 |
| நீத்தாரது ஆணை | 8— 9 |
| ஆணையுடையராயினும் உயிர்கள்மாட்டு அருளுடையர் | 10 |

### 4. அறன் வலியுறுத்தல்

| | |
|---|---|
| அறத்தின் மிக்க உறுதி இல்லை | 1 |
| அறம் செய்யாவழிக் கேடு வரும் | 2 |
| அறம் செய்யும் ஆறு | 3 |
| அறத்தினது இயல்பு | 4— 5 |
| அறத்தினை நிலையாத யாக்கை நிலையின பொழுதே செய்க | 6 |
| அறம் பொன்றாத் துணையாதலைத் தெளிவித்தல் | 7 |
| அறம் வீடு பயக்கும் | 8 |
| அறம் செய்வாரே இம்மை இன்பமும் புகழும் எய்துவர் | 9 |
| செய்வதும் ஒழிவதும் நியமித்தல் | 10 |

### 5. இல்வாழ்க்கை

| | |
|---|---|
| இல்நிலை எல்லா உபகாரத்திற்கும் உரித்து | 1— 2 |
| இல்நிலையில் நின்றான் அறம் செய்யும் ஆறு | 3— 5 |
| இல்நிலையே பயனுடைத்து | 6— 9 |
| இல்நிலையது மறுமைப் பயன் | 10 |

### 6. வாழ்க்கைத் துணைநலம்

| | |
|---|---|
| மனைத்தக்க மாண்புடைமை, வருவாய்க்குத் தக்க வாழ்க்கையுடைமை—சிறந்தன | 1 |
| இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளதுமாட்சியே—பிறஅல்ல | 2— 3 |
| கற்பு நலத்தது சிறப்பு | 4 |
| கற்புடையவளது ஆற்றல் | 5 |
| தற்புகழ்தல் சிறப்பு | 6 |
| தற்காத்தல் சிறப்பு | 7 |
| தற்கொண்டானைப் பேணிய மகளிர் புத்தேளிரால் பேணப்படுவர் | 8 |
| தகைசான்ற சொற்காவா வழிப்படும் குற்றம் | 9 |
| வாழ்க்கைத் துணைக்கு ஆவதோர் அணிநலம் | 10 |

### 7. புதல்வரைப் பெறுதல்

| | |
|---|---|
| புதல்வர்ப் பேற்றினது சிறப்பு | 1 |
| நன் மக்கட் பெற்றார் பெறும் மறுமைப் பயன் | 2— 3 |
| இம்மைப் பயன் | 4— 6 |
| தந்தை கடன் | 7 |
| தந்தையினும் அவையத்தார் உவப்பர் | 8 |
| தாயின் உவகைக்கு அளவின்மை | 9 |
| புதல்வன் கடன் | 10 |

### 8. அன்புடைமை

| | |
|---|---|
| அன்பினது உண்மை | 1 |
| அன்பினது சிறப்பு | 2— 6 |
| அன்பில் வழிப்படும் குற்றம் | 7—10 |

### 9. விருந்தோம்பல்

| | |
|---|---|
| விருந்தோம்பலின் சிறப்பு | 1— 2 |
| விருந்தோம்புவார் இம்மைக்கண் எய்தும் பயன் | 3— 5 |
| மறுமைக்கண் எய்தும் பயன் | 6 |
| இருமையும் பயத்தற்குக் காரணம் | 7 |
| விருந்தோம்பா வழிப்படும் குற்றம் | 8— 9 |
| விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டும் | 10 |

### 10. இனியவை கூறல்

| | |
|---|---|
| இன்சொற்கு இலக்கணம் | 1 |
| இன்முகத்தோடு கூடிய இன்சொல் விரிந்தோம்புதற்கண் சிறந்தது | 2— 3 |
| இனியவை கூறுவார்க்கு இம்மைப் பயன் | 4— 5 |
| மறுமைப் பயன் | 6 |

இருமைப் பயனும் ஒருங்கு எய்துதல் 7— 8
இன்னாத கூறலின் குற்றம் 9—10

11. செய்ந்நன்றியறிதல்

காரணமின்றிச் செய்த உதவி 1
காலத்தினால் செய்த நன்றி 2
பயன் தூக்காராய்ச் செய்த உதவி 3
மூன்றும் அல்லாத உதவி அறிவார்க்குச் செய்தவழிப் பெரிதாம் 4— 5
நன்றி செய்தாரது நட்பு விடலாகாது 6— 7
மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறல் 8
நன்றல்லது அன்றே மறக்கும் திறம் 9
செய்ந்நன்றி கோறலின் கொடுமை 10

12. நடுவு நிலைமை

நடுவு நிலைமையது சிறப்பு 1
நடுவு நிலைமையால் வந்த செல்வம் நன்மை பயத்தலும் ஏனைச் செல்வம் தீமை பயத்தலும் 2— 3
தக்காரையும் தகவிலரையும் அறியுமாறு 4
கேடும் பெருக்கமும் கோடுதலான் வாரா 5
கோடுதல் கேட்டிற்கு ஏதுவாம் 6
கோடாதவன் தாழ்வு கேடன்று 7
அவையத்தார்க்கு-ஒரு பால் கோடாமை 8— 9
வாணிகர்க்கு-பிறவும் தமபோல் செயல் 10

13. அடக்கமுடைமை

பொதுவகையான் அடக்கத்தது சிறப்பு 1— 5
மெய்யடக்கம் 6
மொழியடக்கம் 7— 9
மனவடக்கம் 10

14. ஒழுக்கமுடைமை

ஒழுக்கத்தது சிறப்பு 1— 2
ஒழுக்கம் உள்வழிப்படும் குணமும் இல்வழிப்படும் குற்றமும் 3— 7
பின் விளைவு 8
சொல்லானும் செயலானும் வரும் ஒழுக்கங்கள் 9—10

15. பிறனில் விழையாமை

பிறனில் விழைவான்கட் குற்றம் 1— 6
பிறனில் விழையாதான்கண் குணம் 7—10

16. பொறையுடைமை

பொறையுடைமையது சிறப்பு 1— 4
பிறர் செய்தன பொறுத்தல் 5— 8
பிறர் மிகைக்கச் சொல்லியன பொறுத்தல் 9—10

| | |
|---|---|
| **17. அழுக்காருமை** | |
| அழுக்காறு இன்மையது குணம் | 1— 2 |
| அழுக்காறுடைமையது குற்றம் | 3— 8 |
| கேடும் ஆக்கமும் வருதற்கு ஏது | 9—10 |
| **18. வெஃகாமை** | |
| வெஃகலின் குற்றம் | 1— 7 |
| வெஃகாமையின் குணம் | 8— 9 |
| அவ்விருமையும் ஒருங்கு கூறல் | 10 |
| **19. புறங்கூருமை** | |
| புறங்கூருமையினது நன்மை | 1 |
| புறங்கூற்றினது கொடுமை | 2— 4 |
| புறங்கூறுவார்க்கு எய்தும் குற்றம் | 5— 9 |
| புறங்கூற்ருெழிதற்கு உபாயம் | 10 |
| **20. பயனில சொல்லாமை** | |
| பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றம் | 1— 6 |
| பயனில சொல்லாமையின் குணம் | 7— 9 |
| சொல்லப்படுவனவும் படாதனவும் | 10 |
| **21. தீவினையச்சம்** | |
| தீவினைக்கு அஞ்ச வேண்டும் | 1— 3 |
| பிறர்க்குத் தீவினை செய்யின் தாம் கெடுவர் | 4— 9 |
| தீவினை செய்யாதவன் கேடிலன் | 10 |
| **22. ஒப்புரவறிதல்** | |
| ஒப்புரவினது சிறப்பு | 1— 3 |
| உலக நடை வழு வேத நடை வழுப் போலத் தீர்திறன் உடைத்தன்று | 4 |
| கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு | 5— 7 |
| வறுமையான் ஒப்புரவு ஒழிதற்பாற்று அன்று | 8— 9 |
| ஒப்புரவிஞல் கெடுவது கேடன்று | 10 |
| **23. ஈகை** | |
| ஈகையது இலக்கணம் | 1 |
| ஈதலின் சிறப்பு | 2— 7 |
| ஈயாமையின் குற்றம் | 8—10 |
| **24. புகழ்** | |
| புகழது சிறப்பு | 1— 3 |
| புகழுடையார் எய்தும் மேன்மை | 4— 5 |
| புகழில்லாரது தாழ்வு | 6— 9 |
| வசையும் இசையும் | 10 |

**25. அருளுடைமை**

| | |
|---|---|
| அருளினது சிறப்பு | 1— 2 |
| அருள்-துணையுடையார்க்கு இருமையிலும் துன்பம் இல்லாமை | 3— 5 |
| அத்துணையில்லாதார்க்கு வரும் குற்றம் | 6— 9 |
| அருள் பிறத்தற்கு உபாயம் | 10 |

**26. புலான் மறுத்தல்**

| | |
|---|---|
| ஊன் தின்பார்க்கு அருளாட்சி இல்லை | 1— 2 |
| ஊன் தின்பார் மனம் தீங்கு நினைக்கும் | 3 |
| ஊன் உண்பார்க்கு பாவம் உண்டு | 4— 5 |
| ஊன் தின்பாரே கொலைக்குக் காரணம் | 6 |
| புலாலுண்டல் இழிந்தது | 7 |
| ஊனுண்ணாமையது உயர்ச்சி | 8—10 |

**27. தவம்**

| | |
|---|---|
| தவத்தது இலக்கணம் | 1 |
| தவத்தது சிறப்பு | 2— 5 |
| தவம் செய்வாரது உயர்ச்சி | 6— 9 |
| தவம் செய்யாதாரது தாழ்வு | 10 |

**28. கூடாவொழுக்கம்**

| | |
|---|---|
| கூடாவொழுக்கத்தின் இழுக்கம் | 1— 5 |
| கூடாவொழுக்கம் உடையாரது குற்றமும் அவரை அறிந்து நீக்கல் வேண்டும் என்பதும் | 6— 8 |
| இவ்வொழுக்கினரை அறியுமாறு | 9 |
| கூடாவொழுக்கம் இல்லாதார்க்கு வேடமும் வேண்டா | 10 |

**29. கள்ளாமை**

| | |
|---|---|
| களவாவது இது என்பதும் அது கடியப்படுவது என்பதும் | 1— 2 |
| கடியப்படுவதற்குக் காரணம் | 3— 4 |
| களவும் துறவும் இருளும் ஒளியும் போலத் தம்முள் மாறுகலின் ஒருங்கு நில்லா | 5— 7 |
| களவோடு மாறின்றி நிற்பது | 8 |
| கள்வார் கெடுமாறு | 9 |
| கள்வார்—கள்ளார்க்கு வரும் பயன் | 10 |

**30. வாய்மை**

| | |
|---|---|
| வாய்மை—பொய்ம்மை இலக்கணம் | 1— 2 |
| பொய் மறையாமையின் அது கூறலாகாது | 3 |
| இம்மைப் பயன் | 4 |
| மறுமைப் பயனது மிகுதி | 5— 7 |
| வாய்மை அறத்தினது தலைமை | 8—10 |

### 31. வெகுளாமை

| | |
|---|---|
| வெகுளாமைக்கு இடம் | 1 |
| வெகுளியது தீங்கு | 2— 4 |
| வெகுண்டார்க்கு வரும் தீங்கு | 5— 7 |
| வெகுளாமையது நன்மை | 8 |
| வெகுளாதார்க்கு வரும் நன்மை | 9 |
| வெகுள்வார்—வெகுளார் ஆகிய இருவர் பயன் | 10 |

### 32. இன்னா செய்யாமை

| | |
|---|---|
| ஒரு பயன் நோக்கிச் செய்தலை விலக்குதல் | 1 |
| செற்றம் பற்றிச் செய்தலை விலக்குதல் | 2— 4 |
| சோர்வால் செய்தலை விலக்குதல் | 5 |
| பொது வகையான் விலக்கல் | 6—8 |
| இன்னா செய்தார்க்கு வரும் தீங்கு | 9—10 |

### 33. கொல்லாமை

| | |
|---|---|
| கொல்லாமை அறத்தினது சிறப்பு | 1— 3 |
| இவ்வறத்தினை உடையதே நன்னெறி | 4 |
| இவ்வறத்தை மறவாதவனின் உயர்ச்சி | 5 |
| கொல்லாமை மேற்கொண்டாருக்கு வரும் நன்மை | 6 |
| கொலையது குற்றம் | 7— 8 |
| கொல்வார்க்கு வரும் தீங்கு | 9—10 |

### 34. நிலையாமை

| | |
|---|---|
| வீடு எய்துவார்க்கு பற்று இழுக்கு என்பது | 1 |
| செல்வ நிலையாமை | 2— 3 |
| யாக்கை நிலையாமை | 4—10 |

### 35. துறவு

| | |
|---|---|
| எனது என்னும் புறப்பற்று விடுதல் | 1— 4 |
| அகப்பற்று விடுதல் | 5 |
| இவ்விருவகைப் பற்றினையும் விட்டார்க்கே வீடு உளது | 6 |
| இவை விடாதவர்க்கு வீடு இல்லை | 7 |
| துறவும் பற்றும் | 8— 9 |
| பற்று விடுதற்கு உபாயம் | 10 |

### 36. மெய்யுணர்தல்

| | |
|---|---|
| பிறப்பு துன்பம்; அதற்கு முதற்காரணம் அவிச்சை | 1 |
| வீடாவது நிரதிசய இன்பம்; அதற்கு நிமித்த காரணம் கேவலப்பொருள் | 2 |
| மெய்யுணர்வுடையார்க்கே வீடுளது-மெய்யுணர்வின் சிறப்பு | 3— 4 |

மெய்யுணர்வினது இலக்கணம் 5
கேள்வி 6
விமரிசம் 7
பாவனை 8
மெய்யுணர்வின் பயன் : முன் கிடந்த துன்பங்களும் மேல்வரக் கடவ துன்பங்களும் இலவாதல் 9—10

37. அவாவறுத்தல்

பிறப்பிற்கு அவா வித்து 1
வேண்டாமையின் சிறப்பு 2— 3
அவாவறுத்தலும், அது வரு வழியும் 4
அவாவறுத்தாரது சிறப்பு : விதிமுகத்தானும் எதிர்மறை முகத்தானும் 5
அவாவின் குற்றம் – அதனை வாராமல் காப்பதே அறம் 6
அவாவறுத்தற் சிறப்பு 7
அவாவே துன்பத்திற்குக் காரணம் 8
அவாவறுத்தார் வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்துவர் 9
வீடாவது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே உளதாம் 10

38. ஊழ்

பொருட்குக் காரணமாய ஊழின் வலி 1— 6
இன்ப துன்பங்கட்கு காரணமாய ஊழின்வலி 7— 9
இருவகை ஊழின் வலியும் பொதுவாகக் கூறல் 10

39. இறைமாட்சி

அரசனுக்குரிய அங்கம் ஆறு : இவை முற்றும் உடைமையே அவன் வெற்றிக்கு ஏது 1
இறைவனின் (அரசனின்) மாட்சி 2— 5
அவனுடைய மாட்சியும் பயனும் உடன் கூறல் 6—10

40. கல்வி

கற்றல் வேண்டும்-கற்கப்படும் நூல்கள்-கற்கும் முறை-கற்றதனுல் பயன் 1
கற்கப்படும் நூல்கட்குக் கருவியாவனவும் அவற்றது இன்றியமையாமையும் 2
பொருள் நூல்களையும் கருவி நூல்களையும் கற்ருரது உயர்வும் கல்லாதாரது இழிவும் தொகுத்துக் கூறுதல் 3
கற்ருரது உயர்வு வகுத்துக் கூறுதல் 4
கற்ருரது உயர்வும் கல்லாதாரது இழிவும் 5
கல்வியது சிறப்பு 6—10

**41. கல்லாமை**

| | |
|---|---|
| கல்லாதார் அவைக்கண் சொல்லுதற்கு உரியர் அல்லார் | 1— 3 |
| கல்லாதாரது இயற்கையறிவின் குற்றம் | 4— 5 |
| கல்லார் பயன்படார் | 6 |
| அவர் வடிவழகால் பயனின்மை | 7 |
| அவர் திருவின் குற்றம் | 8 |
| அவர்தம் சாதி உயர்ச்சியால் பயனின்மை | 9 |
| அவர் மக்கட் பிறப்பால் பயன் எய்தாமை | 10 |

**42. கேள்வி**

| | |
|---|---|
| கேள்வியது சிறப்பு | 1— 2 |
| கேள்வியுடையாரது சிறப்பு | 3 |
| கேட்டார்க்கு வரும் நன்மை | 4— 7 |
| கேளாத வழிப்படும் குற்றம் | 8—10 |

**43. அறிவுடைமை**

| | |
|---|---|
| அறிவினது சிறப்பு | 1 |
| அறிவுடைமையின் இலக்கணம் | 2— 6 |
| அறிவுடையார் இலக்கணம் | 7— 8 |
| அவர்க்குத் துன்பம் இன்மை | 9 |
| அவரது உடைமையும் ஏனையோரது இன்மையும் | 10 |

**44. குற்றம் கடிதல்**

| | |
|---|---|
| குற்றங்களாவன இவை இவை எனல் | 1— 2 |
| அவற்றது கடிதற்பாடு பொதுவகையால் கூறல் | 3— 6 |
| உலோபத்தின் தீமை | 7— 8 |
| மதமானங்களின் தீமை | 9 |
| பெரும்பான்மைத்தாகிய காமம் நுகருமாறு கூறல் | 10 |

**45. பெரியாரைத் துணைக்கோடல்**

| | |
|---|---|
| பெரியாரது இலக்கணம் - அவரைத் துணையாகக் கோடல் வேண்டும் என்பதும் கொள்ளுமாறும் | 1— 2 |
| பெரியாரைத் துணைக் கோடலின் சிறப்பு | 3— 5 |
| துணைக்கோடலால் வரு பயன் | 6— 7 |
| துணைக் கொள்ளா வழிப்படும் குற்றம் | 8—10 |

**46. சிற்றினம் சேராமை**

| | |
|---|---|
| சிறிய இனம் பெரியோர்க்கு ஆகாது | 1 |
| ஆகாமைக்கு உரிய காரணம் | 2 |
| மனத்தானும் என்பாரை மறுத்துக் கூறல் | 3 |
| அறிவுக்கு மூலம் இனம் | 4 |
| இனந்தூய்மையால் சொல்லும் செயலும் தூயனுதல் | 5 |

இன நன்மையும் ஒருவர்க்கு வேண்டும் 6— 7
சிற்றினம் சேராமையது சிறப்பு நல்லினஞ் சேர்தலாகிய எதிர்மறை முகத்தால் கூறல் 8— 9
விதி எதிர்மறைகள் உடன் கூறப்படுதல் 10

**47. தெரிந்து செயல்வகை**

செய்யத்தகும் வினையும் அது செய்யுமாறும் 1— 2
ஒழியத்தகும் வினையும் ஒழியாவழிப்படும் இழுக்கும் 3— 5
செய்வன செய்து ஒழிவன ஒழிக 6
செய்வனவற்றிற்கு உபாயமும் அதனது உரிமையும் 7—10

**48. வலியறிதல்**

வலியின் பகுதி-அதனை அறிந்து மேற்செல்வார் எய்தும் பயன் 1— 2
தன்வலி அறியாவழிப்படும் இழுக்கு 3— 4
மாற்ருன் வலியும் அவன் துணைவலியும் அறியாவழிப்படும் இழுக்கு 5
வினைவலி அறியாவழிப்படும் இழுக்கு 6
முதலிற் செலவு சுருங்கின் பொருள் ஒருகாலும் நீங்காது 7
முதலும் செலவும் தம்முள் ஒப்பினும் கேடு இல்லை 8
முதலின் செலவுமிக்கால் வரும் ஏதம் 9
மூவகையாற்றலுள் பெருமையின் பகுதியாய பொருள்வலி அறிதல் 7—10

**49. காலமறிதல்**

காலத்தது சிறப்பு 1
காலம் அறிதற் பயன் 2— 4
காலம் வாராவழிச் செய்வது 5
ஊக்கமுடையான் ஒடுக்கத்தின் சிறப்பு 6
இருக்கும்வழிப் பகைமை தோன்ருமல் இருக்க 7— 8
காலம் வந்துழி விரைந்து செய்க 9
இருப்பிற்கும் செயலிற்கும் இலக்கணம் 10

**50. இடனறிதல்**

பகைவர் அரணின் புறத்திருப்பார் அதற்காம் இடமறிதல் 1— 4
வினை செய்தற்காம் இடனறிதல் 5— 7
பகைவரைச் சார்தலாகா இடனும் சார்ந்துழிப்படும் இழுக்கும் 8—10

**51. தெரிந்து தெளிதல்**

குணமும் குற்றமும் தெரிந்து குணமுடையாரைத் தெளிக 1— 3
குணமுடையார் உலகத்து அரியராகலின் இவ்வகை யாவரையும் தெளிக 4
குணங்குற்றங்கள் நாடற்குக் கருவி 5
தெளியப்படாதவர் இவர் ; அவரைத் தெளிந்தாற்படும் இழுக்கு ; தெளிவிற்கு எல்லை 6—10

52. தெரிந்து வினையாடல்

| | |
|---|---|
| ஆள்தற்கு உரியானது இலக்கணம் | 1— 3 |
| ஒருவகையால் ஒழிக்கப்படுவார் இவர் | 4 |
| வினையினது இயல்பு | 5 |
| ஆள்தற்கு உரியானை ஆளும் திறம் | 6— 9 |
| ஆண்டவழிச் செய்வது | 10 |

53. சுற்றம் தழால்

| | |
|---|---|
| சுற்றத்தது சிறப்பு | 1 |
| சுற்றம் தழால் செல்வத்திற்கு ஏதுவும் அரசனும் பயனுமாம் | 2— 4 |
| சுற்றமும் தழுவும் உபாயம் | 5— 8 |
| தழுவுமாறு | 9—10 |

54. பொச்சாவாமை

| | |
|---|---|
| பொச்சாப்பினது குற்றம் | 1— 2 |
| பொச்சாப்புடையார்க்கு வரும் ஏதம் | 3— 5 |
| பொச்சாவாமையது சிறப்பு | 6— 7 |
| பொச்சாவாது செய்ய வேண்டுவன | 8 |
| பொச்சாவாமைக்கு உபாயம் | 9—10 |

55. செங்கோன்மை

| | |
|---|---|
| செங்கோன்மையது இலக்கணம் | 1 |
| செங்கோலது சிறப்பு | 2— 3 |
| அதனைச் செலுத்தினன் எய்தும் பயன் | 4— 7 |
| முறை செலுத்தாதானது கேடு | 8 |
| செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந்தர்க்குத் தீயார்மாட்டு மூவகை ஒறுப்பும் ஒழியற்பாலவல்ல | 9—10 |

56. கொடுங்கோன்மை

| | |
|---|---|
| கொடுங்கோன்மையது குற்றம் | 1— 2 |
| கொடுங்கோலனுயின் எய்தும் குற்றம் | 3— 6 |
| அவன் நாட்டு வாழ்வார்க்கு வரும் குற்றம் | 7— 8 |
| அவன் நாட்டின்கண் நிகழும் குற்றம் | 9—10 |

57. வெருவந்த செய்யாமை

| | |
|---|---|
| குடிகள் வெருவந்த செய்யாமையது இயல்பு | 1— 2 |
| செவ்வியின்மை, இன்முகமுடைமை, கண்ணோட்டம் இன்மை, கடுஞ்சொற்சொல்லல், கையிகந்த தண்டம் என்று இவை குடிகள் அஞ்சும் வினை-இவை செய்தான் ஆயுளும் அடுமுரணும் செல்வமும் இழக்கும் | 3— 7 |
| பகுதியஞ்சும் வினையும் அது செய்தான் எய்தும் குற்றமும் | 8 |

தான் அஞ்சும் வினையும் அது செய்தான் எய்தும் பயனும் 9
வெருவந்த செய்தலின் குற்றம் 10

58. கண்ணோட்டம்

கண்ணோட்டத்தது சிறப்பு 1— 2
ஓட்டாது நின்ற கண்ணின் குற்றம் 3— 5
கண்ணோடாதாரது இழிவு 6— 7
கண்ணோடுமாறு 8
அரசர் அவரை ஒருது கண்ணோடற்பாலது தம் மாட்டுக்குற்றம் செய்துழியாம் 9— 10

59. ஒற்றுடல்

ஒற்றினது சிறப்பு 1
ஒற்றினாய பயன் 2
ஒற்றுடல் செய்யாத வழிவரும் குற்றம் 3
ஒற்றினது இலக்கணம் 4— 7
ஒற்றரை ஆளுமாறு 8
அவரான் நிகழ்ந்தன அறியுமாறு 9
அறிந்தால் சிறப்புச் செய்யுமாறு 10

60. ஊக்கமுடைமை

எய்தி நின்ற பொருளினும் அதற்குக் காரணமாய ஊக்கம் சிறந்தது 1— 4
ஊக்க முடையாரது உயர்ச்சி 5— 7
ஊக்கமில்லாதாரது இழிபு 8—10

61. மடியின்மை

மடியின் தீமை 1— 4
மடிமைக் குற்றங்கள் 5— 8
மடியிலாதான் எய்தும் பயன் 9—10

62. ஆள்வினையுடைமை

முயற்சியது சிறப்பு 1— 3
முயற்சி இல்லாதனது குற்றம் 4
அஃது உடையானது நன்மை 5
முயற்சி உண்மை இன்மைகளுக்கு ஏதுக்கூறல் 6— 7
தெய்வத்தான் இடுக்கண் வரினும் முயற்சி விடற்பாலதன்று 8—10

63. இடுக்கணழியாமை

ஊழினாய இடுக்கணான் அழியாமைக்கு உபாயம் 1— 2
தெய்வத்தானாயதற்கு அழியாமை 3— 5
பொருளின்மையானாயதற்கு அழியாமையும் அதற்கு உபாயமும 6
மெய் வருத்தத்தானாயதற்கு அழியாமையும் அதற்கு ஓர் உபாயமும் 7—10

### 64. அமைச்சு

| | |
|---|---|
| அமைச்சரது குணத்தன்மை | 1— 5 |
| அவரது சிறப்பு | 6 |
| அமைச்சர்தம் செயல் | 7— 8 |
| அமைச்சருள் விடப்படுவாரது குற்றம் | 9—10 |

### 65. சொல்வன்மை

| | |
|---|---|
| சொல்வன்மை அமைச்சர்க்கு இன்றியமையாதது | 1— 2 |
| சொல்லினது இலக்கணம் | 3 |
| அதனைச் சொல்லுமாறு | 4— 6 |
| சொல்லுதல் வல்லாரது சிறப்பு | 7— 8 |
| சொல்ல மாட்டாதாரது இழிபு | 9—10 |

### 66. வினைத் தூய்மை

| | |
|---|---|
| வினைத் தூய்மையது சிறப்பு | 1 |
| பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யற்க | 2— 6 |
| செய்யற்க என விலக்குதலுக்குற்ற காரணம் | 7—10 |

### 67. வினைத்திட்பம்

| | |
|---|---|
| வினைத்திட்பமாவது இன்னது என்பது | 1 |
| வினைத்திட்பத்தின் பகுதி | 2— 3 |
| அதனது அருமை | 4 |
| அதன் சிறப்பு | 5 |
| அஃதுடையார் எய்தும் பயன் | 6 |
| அவரை அழியுமாறு | 7 |
| அவர் வினை செய்யுமாறு | 8— 9 |
| வினைத் திட்பம் இல்லாதாரது இழிபு | 10 |

### 68. வினை செயல் வகை

| | |
|---|---|
| பொது வகையால் வினை செய்யும் திறம் கூறல் | 1— 2 |
| வலியான் ஒப்பான் மெலியான் என நிலை மூவகைத்து என்பதும், அவற்றுள் வலியது சிறப்பும் | 3 |
| வலியான் செய்யும் திறம் | 4 |
| ஒப்பான் செய்யும் திறம் | 5— 7 |
| மெலியான் செய்யும் திறம் | 8—10 |

### 69. தூது

| | |
|---|---|
| தான் வகுத்துக் கூறுவானுக்கும் கூறியது கூறுவானுக்கும் பொதுவிலக்கணம் | 1— 2 |
| தான் வகுத்துக் கூறுவானது இலக்கணம் | 3— 7 |
| கூறியது கூறுவானது இலக்கணம் | 8—10 |

**70. மன்னரைச் சேர்ந்தொழுகல்**

மன்னரைச் சேர்ந்தொழுகும் திறம் பொதுவகையால் கூறல் 1— 3
சிறப்பு வகையால் கூறல் 4— 7
பொறுப்பர் என்று அரசர் வெறுப்பன செய்யற்க 8—10

**71. குறிப்பறிதல்**

குறிப்பறிவாரது சிறப்பு 1— 3
குறிப்பறியாரது இழிபு 4— 5
குறிப்பதற்கருவி முகம் 6— 8
நுண் கருவி நோக்கு 9—10

**72. அவையறிதல்**

ஒன்று சொல்லுங்கால் அவை யறிந்தே சொல்லவேண்டும் 1— 2
அவையறியாக்கால் வரும் குற்றம் 3
அவையளவு அறிந்தார் செய்யும் திறம் தொகுத்துக் கூறல் 4
மிக்காரவைக்கண்செய்யும் திறம் 5
அவைக்கண் இழுக்கியவழிப்படும் குற்றம் 6
ஒத்தாரவைக்கண் எவ்வழியும் சொல்லுக 7— 8
தாழ்ந்தாரவைக்கண் ஒரு வழியும் சொல்லற்க 9—10

**73. அவையஞ்சாமை**

அவை அஞ்சாரது சிறப்பு 1— 3
அதனது ஒருசார் பயன் 4
அதன் காரணம் 5
அவை அஞ்சுவாரது இழிபு 6—10

**74. நாடு**

நாட்டது இலக்கணம் 1— 6
நாட்டின் அவயவம் 7
நாட்டின் அழகு 8
நாட்டிற்குளதாம் குற்றம் 9—10

**75. அரண்**

அரணினது சிறப்பு 1
அரணின் இலக்கணம் 2— 8
அரண் காப்பாரை இன்றியமையாது 9—10

**76. பொருள் செயல் வகை**

பொருளது சிறப்பு 1— 3
பொருளீட்டும் நெறி 4— 6
பொருளான் வரு பயன் 7—10

### 77. படைமாட்சி


அரசனுக்குப் படை ஏனையங்கங்களுள் சிறந்தது 1
அவற்றுள் மூலப்படை சிறந்தது 2
அதனுள் வீரன் சிறந்தான் 3
படையினது இலக்கணம் 4— 7
படைத்தகையின்மையான் வரும் தாழ்வு 8
அரசன் கொடைத் தாழ்வுகளான் வரும் தாழ்வு 9
தலைவர் இன்மையால் வரும் தாழ்வு 10


### 78. படைச்செருக்கு


ஒரு வீரன் தன் மறம் அரசன்மேல் வைத்துக் கூறியவாறு
இப் பாட்டு நெடுமொழி வஞ்சி 1
மாற்றரசன் படையொடு பொருதானேர் வீரன் அது புறங்
கொடுத்ததாக நாணிப்பின் அவன் தன்மேல்
செல்லலுற்றுனது கூற்று 2
இவை இரண்டு பாட்டும் தழிஞ்சி 2— 3
நூழிலாட்டு 4
ஊறஞ்சாமை 4— 6
உயிரோம்பாமை 7—10


### 79. நட்பு


இங்கே நட்பு என்பது முன் செய்த உதவிபற்றி வரும்
செயற்கையே ஆதலின், அதன் சிறப்புக் கூறுதல் 1
சிறப்பிற்கு ஏது 2— 3
நட்பின் பயன் 4
நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யொத்தல் என்னும்
மூன்றனுள் பின்னது சிறப்புடைத்து எனக் கூறல் 5
நட்பினது இலக்கணம் 6—10


### 80. நட்பாராய்தல்


ஆராயாவழிப் படும் இழுக்கு 1— 2
ஆராயுமாறும் ஆராய்ந்தால் நட்கப்படுவார் இவர் என்பதும் 3— 6
ஆராய்ந்தால் நட்கப்படாதார் இவர் என்பது 7— 9
நட்கப்படுவாரும் படாதாரும் 10


### 81. பழமை


பழமையாவது இப்பெற்றித்தாய நட்பு என்பது 1
பழமையான் வரும் உரிமையது சிறப்பு 2— 3
கேளாது செய்துழி அதனை விரும்புக 4
கெடும் வகை செய்யின் அதற்குக் காரணம் 5
கேடு செய்தற்கண்ணும் நட்பு விடற்பாற்றன்று 6— 7

பிழை பொறுத்தற் சிறப்பு 8
பழமை அறிவார் எய்தும் பயன் 9—10

82. தீ நட்பு

தீ நட்பினது ஆகாமை பொதுவகையான் கூறல் 1
தமக்கு உறுவது பார்ப்பார் நட்பின் தீமை 2— 3
தொலைவில் துணையாகாத நட்பின் தீமை 4— 5
பேதையார் நட்பின் தீமை 6
நகுவிப்பார் நட்பின் தீமை 7
இயல்வது செய்யாதார் நட்பின் தீமை 8
வஞ்சர் நட்பின் தீமை 9—10

83. கூடா நட்பு

கூடாநட்பினது குற்றம் 1— 2
குற்றத்திற்கு ஏதுவாகிய அவர் கொடுமை 3— 4
அவரைச் சொல்லால் தெளியற்க 5— 7
அவரைச் செயலால் தெளியற்க 8
அந் நட்பிடை ஒழுகுமாறு 9—10

84. பேதைமை

பேதைமையது இலக்கணம் 1— 2
பேதையது தொழில் பொதுவகையான் கூறல் 3— 4
அவன் மறுமைச் செயல் 5
அவன் செல்வம் படைக்குமாறு 6
செல்வம் எய்தியவழிப் பயன்கொள்ளுமாறு 7— 8
அவரது நட்பின் குற்றம் 9
அவன் அவையிடை இருக்குமாறு 10

85. புல்லறிவாண்மை

புல்லறிவினது குற்றம் 1
புல்லறிவுடையார் தம்மாட்டு நல்லன செய்தல் அறியாமை 2
அவர் தம்மாட்டும் தீயனசெய்தல் அறிவர் 3
அவர் தம்மை வியத்தற் குற்றம் 4— 6
உறுதிச்சொல் கொள்ளாமையது குற்றம் 7—10

86. இகல்

இகலது குற்றம் 1
இகலாதார்க்கு வரும் நன்மை 2— 5
இகலினர்க்கு வரும் தீங்கு 6— 7
இகலான் தீங்கும் நகலான் நன்மையும் 8—10

### 87. பகைமாட்சி

| | |
|---|---|
| பகைமாட்சி பொதுவகையான் கூறல் | 1 |
| அதனைச் சிறப்பு வகையால் கூறல் | 2— 7 |
| பகைமாட்சியான் வரும் பயன் | 8—10 |

### 88. பகைத்திறம் தெளிதல்

| | |
|---|---|
| பகை கோடற் குற்றம் பொதுவினும் சிறப்பினும் | 1— 3 |
| நட்பாக்கற்பாலது கூறப்படுதல் | 4— 5 |
| நொதுமலாக்கற்பாலது கூறப்படுதல் | 6 |
| நட்புமேற் சுட்டிய இரு பகுதிக்கண் செய்வது | 7 |
| களைதற் பாலதன்கண் செய்வன | 8 |
| களையும் பருவம் | 9 |
| களையாவழிப் படும் இழுக்கு | 10 |

### 89. உட்பகை

| | |
|---|---|
| உட்பகை ஆகாது | 1— 2 |
| தனக்கு வரும் தீங்கு | 3— 6 |
| அவன் குடிக்கு வரும் தீங்கு | 7— 8 |
| உட்பகை சிறிதென்று இகழப்படாது | 9 |
| கண்ணோடாதவரைக் கடிக | 10 |

### 90. பெரியாரைப் பிழையாமை

| | |
|---|---|
| பொதுவகையான் பிழையாமையது சிறப்பு | 1 |
| பொதுவகையால் அவரைப் பிழைத்தற் குற்றம் | 2 |
| வேந்தரைப் பிழைத்தலின் குற்றம் | 3— 4 |
| இக் குற்றமுடையார் அருமையுடைய அரண் சேர்ந்தும் உய்யார் | 5 |
| முனிவரைப் பிழைத்தலின் குற்றம் | 6— 9 |
| இக் குற்றமுடையார் சார்புபற்றியும் உய்யார் | 10 |

### 91. பெண்வழிச் சேறல்

| | |
|---|---|
| மனை விழைதற் குற்றம் | 1— 2 |
| அவளை அஞ்சுதற் குற்றம் | 3— 6 |
| அவள் ஏவல் செய்தற் குற்றம் | 7— 9 |
| விழைதல், அஞ்சல், ஏவல் செய்தல் என்னும் மூன்றும் எதிர்மறை முகத்தான் கூறல் | 10 |

### 92. வரைவின் மகளிர்

| | |
|---|---|
| வரைவின் மகளிர் சொல்லும் செயலும் பொய் | 1— 3 |
| அவரை உயர்ந்தோர் தீண்டார் | 4— 6 |
| வரைவின் மகளிரைச் சேர்வார் இழிந்தோர் | 7—10 |

**93. கள்ளுண்ணாமை**

உட்கப்படாஅமை ஒளி இழத்தலான் அரசு இனிது செல்லாது என்பது 1
ஒளி இழத்தற்குக் காரணம் 2— 4
அறிவிழத்தற் குற்றம் 5— 6
கள்ளுண்டல் மறைக்கப்படாது 7— 8
கள்ளுண்டவனைத் தெளிவித்தல் முடியாது 9
கள்ளை ஒழிதற் காரணம் 10

**94. சூது**

சூது வறுமை பயக்கும் 1— 5
சிறுமை பல செய்து அவற்றான் இருமையும் கெடுத்தல் 6— 9
சூது ஒழிதற்கு அருமையும் ஒழிந்தாரது பெருமையும் 10

**95. மருந்து**

யாக்கைகட்கு இயல்பான நோய் மூவகைத்து, அவை துன்பம் செய்தற்குக் காரணம் இருவகைத்து 1
உண்ணப்படுவனவும் அவற்றது அளவும் காலமும் பயனும் 2— 5
அவ்வகை உண்ணுவழிப் படும் இழுக்கு 6— 7
அவ்விழுக்குப் பட்டுழி மருத்துவன் தீர்க்குமாறு 8— 9
தீர்தற்கு வேண்டுவன எல்லாம் தொகுத்துக் கூறல் 10

**96. குடிமை**

குடிப் பிறந்தாரது இயல்பு 1— 3
அவர் வறுமையுற்ற வழியும் வேறுபடார் 4— 6
வேறுபட்டவழிப் படும் இழுக்கு 7— 8
குடிமைக்கு வேண்டுவன 9—10

**97. மானம்**

தாம் தாழ்தற்கு ஏதுவாயின செய்யாமை 1— 3
அவை செய்தலான் வரும் குற்றம் 4— 6
மானப் பொருட்டாய இறப்பினது சிறப்பு 7—10

**98. பெருமை**

பெருமையின் சிறப்பு 1
குடிமை மாத்திரத்தானும் செல்வம் மாத்திரத்தானும் அஃது உளதாகாமை 2— 3
பெருமை உளதாமாறு 4
பெருமை உடையார் செய்தி 5
பெருமையில்லார் செய்தி 6— 7
இருவர் செயலும் ஒருங்கு கூறல் 8—10

**99. சான்றாண்மை**

| | |
|---|---|
| சால்பிற்கு ஏற்ற குணங்களைப் பொதுவகையான் கூறல் | 1— 2 |
| சிறப்பு வகையான் கூறல் | 3— 7 |
| சால்பு குணங்களால் நிறைந்தாரது சிறப்பு | 8—10 |

**100. பண்புடைமை**

| | |
|---|---|
| பண்புடையராதற் காரணம் | 1— 2 |
| அதனையுடையாரது உயர்ச்சி | 3— 6 |
| பண்பில்லாரது இழிவு | 7—10 |

**101. நன்றியில் செல்வம்**

| | |
|---|---|
| ஈட்டியானுக்குப் பயன்படலின்மை | 1 |
| பிறர்க்குப் பயன்படலின்மை | 2— 4 |
| செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன்படாமை உடன் கூறல் | 5— 6 |
| அச் செல்வத்தது குற்றம் | 7—10 |

**102. நாணுடைமை**

| | |
|---|---|
| நாணினது இலக்கணம் | 1 |
| நாணுடைமையின் சிறப்பு | 2— 4 |
| நாணுடையார் சிறப்பு | 5 |
| நாணுடையார் செயல் | 6— 7 |
| நாணில்லாரது இழிவு | 8—10 |

**103. குடிசெயல் வகை**

| | |
|---|---|
| குடிசெயற்குக் காரணம் | 1— 2 |
| குடிசெய்வார்க்குத் தெய்வம் துணையாதல் | 3— 4 |
| குடிசெய்வார் எய்தும் சிறப்பு | 5— 7 |
| குடிசெய்யும் இயல்பு | 8— 9 |
| குடிசெய்வார் இல்லாத குடிக்கு உளதாம் குற்றம் | 10 |

**104. உழவு**

| | |
|---|---|
| உழவினது சிறப்பு | 1 |
| உழவு செய்வாரது சிறப்பு | 2— 6 |
| அது செய்யுமாறு | 7— 9 |
| அது செய்யாதவழிப் படும் இழுக்கு | 10 |

**105. நல்குரவு**

| | |
|---|---|
| நல்குரவின் கொடுமை | 1— 5 |
| நல்கூர்ந்தார்க்கு உளதாம் குற்றம் | 6— 9 |
| நல்குரவு உளதாயவழிச் செய்வது | 10 |

**106. இரவு**

நல்குரவான் உயிர் நீங்கும் எல்லைக்கண் இளிவில்லா
இரவு விலக்கப்பட்டது 1— 2
அங்ஙனம் இரக்கத்தக்கார் இயல்பு 3— 7
உலகிற்கு இரப்பார் வேண்டும் 8— 9
இரப்பார்க்கு இன்றியமையாததோர் இயல்பு 10

**107. இரவச்சம்**

இரவின் கொடுமை 1— 2
வறுமை தீர்வதற்கு நெறி இரவன்று 3
நெறியல்லதனைச் சால்புடையார் செய்யார் 4
நெறியினுன் ஆயது சிறிதேனும் அது செய்யும் இன்பம் பெரிது 5
அறனும் முயன்று செய்வதல்லது இரந்து செய்யற்க 6
மானம் தீரவரும் இரத்தலை விலக்குதல் 7
இரவின் குற்றமும் கரவின் குற்றமும் ஒருங்கு கூறல் 8—10

**108. கயமை**

கயவரது குற்ற மிகுதி 1
கயவர் பழி முதலியவற்றிற்கு அஞ்சார் 2
அவர் விலக்கற்பாடின்றித் தாம் வேண்டியவற்றைச் செய்வர் 3
கயவர் மேம்படுமாறு 4
கயவர் ஆசாரம் செயல் இயல்பன்று 5
அவரது செறிவின்மை 6
அவர் கொடுக்குமாறு 7— 8
கயவர் பிறர் செல்வம் பொறுமை 9
அவர் தாம் பிறர்க்கு அடிமையாயிருப்பர் 10

**109. தகையணங்குறுத்தல்**

தலைமகள் உருவு முதலியன முன் கண்டறிவன அன்றிச்
சிறந்தன்மையின் அவளைத் தலைமகன் ஐயுற்றது 1
மானுடமாதராதல் தெளிந்த தலைமகன் அவள் நோக்கினுனய
வருத்தம் கூறியது 2— 6
அவன் முலைகளினுய வருத்தம் கூறியது 7
நுதலினுய வருத்தம் கூறியது 8
அணி நலத்தாலுய வருத்தம் கூறியது 9
தலைமகள் குறிப்பறிதலுற்றுன் சொல்லியது 10

**110. குறிப்பறிதல்**

தலைமகன் தலைமகள் உளப்பாட்டுக் குறிப்பினை அவள்
நோக்கினுல் அறிந்தது 1— 2
நோக்கினுலும் நாணினுலும் அறிந்தது 3

நாணினுலும் மகிழ்ச்சியினுலும் அறிந்தது 4— 5
தோழி சேட்படுத்தவழி அவள் குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது 6— 7
தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக் கண்டு தலைமகன் கூறியது 8
தோழி மதியுடம்படுவாள் தன்னுள்ளே சொல்லியது 9— 10

### 111. புணர்ச்சி மகிழ்தல்

இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது 1
இடந்தலைப் பாட்டின்கண் சொல்லியது 2
நிரதிசய இன்பத்திற்குரிய நீ இச் சிற்றின்பத்திற்கு இன்னையாதல் தகாது என்ற பாங்கற்குச் சொல்லியது 3
பாங்கற் கூட்டத்து இறுதிக்கண் சொல்லியது 4
தோழிக் கூட்டத்து இறுதிக்கண் சொல்லியது 5— 6
இவளை நீ வரைந்து கொண்டு உலகோர் தம்மில் இருந்து தமது பாத்துண்ணும் இல்லறத்தோடுபடல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது 7
ஒத்த அன்புடைய நுமக்கு ஒரு பொழுதும் விடாத முயக்கமே இனியது என வரைவு கடாய தோழிக்குச் சொல்லியது 8
கரத்தல் வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே இன்பப் பயனுடைத்து என வரைவு கடாவியாட்குச் சொல்லியது 9
புணர்ந்துடன் போகின்றுன் தன்னுள்ளே சொல்லியது 10

### 112. நலம் புனைந்துரைத்தல்

இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது 1
இடந்தலைப் பாட்டின்கண் சொல்லியது 2
கூடுதலுற்ற பாங்கற்குத் தலைமகன் தலைமகளது இயல்பு கூறியது 3
பாங்கற் கூட்டத்துச் சென்று சார்தலுறுவான் சொல்லியது 4
பகற் குறிக்கண் பூவணி கண்டு சொல்லியது 5
இரவுக் குறிக்கண் மதி கண்டு சொல்லியது 6— 9
உடன் போக்குரைத்த தோழிக்கு அதனது அருமை கூறி மறுத்தது 10

### 113. காதற் சிறப்புரைத்தல்

இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் தலைமகன் தன் நயப்பு உணர்த்தியது 1
பிரிவச்சம் கூறியது 2
இடந்தலைப்பாட்டின்கண் தலைமகள் நீக்கத்துச் சொல்லியது 3
பகற்குறிக்கண் புணர்ந்து நீங்குவான் சொல்லியது 4
ஒருவழித் தணந்து வந்த தலைமகன், 'நீயிர் தணந்த ஞான்று எம்மை உள்ளியும் அறிதிரோ' என்ற தோழிக்குச் சொல்லியது 5

ஒருவழித் தணப்பின்கண் தலைமகனைத் தோழி இயற்பழிக்கும் என்றஞ்சி அவள் கேட்பத் தன்னுள்ளே சொல்லியது 6— 8
வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தன் மகளாற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தவழி அவள் இயற்பட மொழிந்தது 9—10

**114. நாணுத் துறவுரைத்தல்**

சேட்படுக்கப்பட்டு ஆற்றுனைய தலைமகன் சொல்லியது 1
நாணுடைய நுமக்கு அது முடியாதென மடல் விலக்கலுற்றாட்குச் சொல்லியது 2
நாணேயன்றி நல்லாண்மையும் உடைமையின் முடியாது என்றாட்குச் சொல்லியது 3
நாணும் நல்லாண்மையும் காமவெள்ளத்திற்குப் புணையாகலின் அதனால் அவை நீங்குவனவல்ல என்றாட்குச் சொல்லியது 4
இவ்வாற்றாமையும் மடலும் நுமக்கு எவ்வாறு வந்தன என்றாட்குச் சொல்லியது 5
மடலூரும் பொழுது இற்றைக்கும் கழிந்ததென்றாட்குச் சொல்லியது 6
பேதைக்கு என்கண் படல் ஒல்லா என்பது பற்றி அறிவிலராய மகளிரினும் அஃது உடையராய ஆடவரன்றே ஆற்றற் பாலர் என்றாட்குச் சொல்லியது 7
காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகியவழிச் சொல்லியது 8— 9
செவிலிக்கு அறத்தொடு நின்றுவைத்து, ‘யான் நிற்குமாறு என்னை’ என்று நகையாடிய தோழியொடு புலந்து தன்னுள்ளே சொல்லியது 10

**115. அலரறிவுறுத்தல்**

அல்லகுறிப்பட்ட பிற்றை ஞான்று வந்த தலைமகனைத் தோழி அலர் கூறி வரைவு கடாயவழி அவன் சொல்லியது 1— 5
இடையீடுகளானும் அல்ல குறியானும் தலைமகனை எய்தப்பெறாத தலைமகள் அவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ வரைவு கடாயது 6
வரைவு நீட ஆற்றாளாய தலைமகனைத் தலைமகன் சிறைப் புறத்தானாதலறிந்த தோழி ஊரவரலரும் அன்னை சொல்லும் நோக்கி ஆற்றல் வேண்டும் எனச் சொல்லெடுப்பிய வழி அவள் சொல்லியது 7— 8
வரைவிடை வைத்துப் பிரிவின்கண் ஆற்றாளாய தலைமகள் அவன் வந்து சிறைப் புறத்தானாதல் அறிந்து அலரஞ்சி ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது 9
தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப்பச் சொல்லியது 10

### 116. பிரிவாற்றாமை

பிரிந்து கடிதின் வருவல் என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது 1
பிரிவு தலைமகன் குறிப்பால் அறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது 2— 5
தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக்குச் சொல்லியது 6— 8
காமம் தீயே போன்று தான் நின்ற இடத்தைச் சுடுமாகலான் நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது 9
தலைவியர் பலரும் பிரிவாற்றியிருப்பர் அது நீ செய்கின்றலை என்ற தோழிக்குச் சொல்லியது 10

### 117. படர்மெலிந்திரங்கல்

காமநோயை வெளிப்படுத்தல் நின் நாணுக்கு ஏலாது என்ற தோழிக்குச் சொல்லியது 1
ஈண்டையார் அறியாமல் மறைத்தல் ஆண்டையார் அறியத் தூது விடுதல் என்னும் இரண்டனுள் ஒன்று செயல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது 2— 3
தலைவியர் காமக் கடற்படார், படினும் அதனை ஏற்ற புணையால் நீந்திக் கடப்பர் என்ற தோழிக்குச் சொல்லியது 4
தூதுவிடாமை நோக்கித் தோழியொடு புலந்து சொல்லியது 5
காமத்தினான் இன்புற்றார்க்கு அதனினும் துன்பமும் வரும் என்ற தோழிக்குச் சொல்லியது 6
காமக்கடல் நிறைபுணையாக நீந்தப்படும் என்றாட்குச் சொல்லியது 7
இரவின் கொடுமை சொல்லியது 8— 9
நின் கண்கள் பேரழகு அழிகின்றன ஆகலின் அழற்பாலையல்லை என்றாட்குச் சொல்லியது 10

### 118. கண் விதுப்பழிதல்

நின்கண்கள் கலுழ்ந்து தம் அழகு இழவா நின்றன, நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது 1— 7
காதலர் பிரிந்து போயினாரல்லர், அவர் ஈண்டுளர், அவரைக் காணுமளவும் நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது 8
நீயும் ஆற்றி நின் கண்களும் துயில்வனவாதல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது 9
காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர் கொடுமையை மறைக்க வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது 10

### 119. பசப்புறு பருவரல்

முன் பிரிவுடம்பட்ட தலைமகள் அஃதாற்றாது பசந்தவழித் தன்னுள்ளே சொல்லியது 1

ஆற்ருளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவலென்பது படச் சொல்லியது 2
அழகும் நாணும் அழியாமல் நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது 3
பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்றிறங்களையும் அறிதியாகலின் நீட்டியாது வருவர் என்ற வழிச் சொல்லியது 4
காதலர் பிரிந்து அணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலை என்ற தோழிக்கு முன்னிகழ்ந்தது கூறியது 5—7
நீ இங்ஙனம் பசக்கற்பாலையல்லை என்ற தோழியொடு புலந்து சொல்லியது 8—9
தலைமகளாற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகளை இயற் பழித்த வழி அவள் இயற்பட மொழிந்தது 10

### 120. தனிப்படர் மிகுதி

காதலரும் நின்னினும் ஆற்ருராய்க் கடிதின் வருவர் நீ அவரொடு பேரின்பம் நுகர்தி என்ற தோழிக்குச் சொல்லியது 1— 3
காதலரை இயற்பழித்தலை அஞ்சி அவர்அருளின்மை மறைத்த நீ கடவுட் கற்பினையாகலின் கற்புடை மகளிரால் நன்கு மதிக்கப் படுதி என்ற தோழிக்குச் சொல்லியது 4
அவர்மேல் காதலுடைமையின் அவர் கருத்தறிந்து ஆற்றினுய் என்ற தோழிக்குச் சொல்லியது 5— 7
தலைமகன் தூதுவரக் காணுது சொல்லியது 8— 9
தலைமகன் தூதுவரப் பெருது தான் தூதுவிடக் கருதியாள் நெஞ்சொடு சொல்லியது 10

### 121. நினைந்தவர் புலம்பல்

தூதாய்ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது 1— 2
தலைமகனை நினைத்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது 3— 5
அவரொடு புணர்ந்த ஞான்றை இன்பத்தை நினைந்து இறந்துபாடு எய்தா நின்ருய், அது மறத்தல் வேண்டும் என்ருட்குச் சொல்லியது 6— 7
இத் துன்பம் அறிந்து வந்து காதலர் நினக்கு இன்பம் செய்வர் என்ருட்குச் சொல்லியது 8
தலைமகன் தூதுவரக் காணுது வருந்துகின்ருள் வற்புறுத்தும் தோழிக்குச் சொல்லியது 9
வன்முறை எய்திரழிந்தாள் காமமிக்க கழிபடரால் சொல்லியது 10

### 122. கனவு நிலையுரைத்தல்

தலைமகன் தூதுவரக் கண்டாள் சொல்லியது 1
தூதுவிடக் கருதியாள் சொல்லியது 2

ஆற்றுளெனக் கவன்றாட்கு ஆற்றுவல் என்பது படச் சொல்லியது 3—6
விழித்துழிக் காணாளாயினுள், கனவிற் கூட்டம் நினைந்து, ஆற்றாளாய்ச் சொல்லியது 7
தான் ஆற்றுதற்பொருட்டுத் தலைமகனை இயற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது 8—10

**123. பொழுது கண்டிரங்கல்**

பொழுதொடு புலந்து சொல்லியது 1
தன்னுட் கையாற்றை அதன் மேலிட்டுச் சொல்லியது 2
ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது 3— 5
இன்று இன்னையாகின்ற நீ அன்று அவர் பிரிவிற்கு உடம்பட்டது என்னை என்றாட்குச் சொல்லியது 6
மாலைப் பொழுதின்கண் இனையையாதற்குக் காரணம் என்னை என்றாட்குச் சொல்லியது 7—10

**124. உறுப்பு நலன் அழிதல்**

ஆற்றாமை மிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது 1— 5
தான் ஆற்றுதற்பொருட்டு இயற்பழித்த தோழிக்குத் தலைமகன் சொல்லியது 6
அவ்வியற்பழிப்புப் பொருது தன் நெஞ்சிற்குச் சொல்லியது 7
வினை முடித்து மீடலுற்ற தலைமகன் முன் நிகழ்ந்தது நினைத்து தன்னுள்ளே சொல்லியது 8—10

**125. நெஞ்சொடு கிளத்தல்**

தன் ஆற்றாமை தீரும் திறன் நாடியது 1
தலைமகனைக் காண்டற்கண் வேட்கை மிகுதியால் சொல்லியது 2— 5
தலைமகள் கொடுமை நினைந்து செலவுடன்படாத நெஞ்சினைக் கழறியது 6
நாண் தடுத்தலின் அச்செலவொழிவாள் சொல்லியது 7— 9
அவரை மறந்து ஆற்றல் வேண்டும் என்பது படச் சொல்லியது 10

**126. நிறையழிதல்**

நாணும் நிறையும் அழியாமை நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது 1
நெஞ்சின்கண் தோன்றிய காமம் நெஞ்சால் அடக்கப்படும் என்றாட்குச் சொல்லியது 2
மகளிர் காமம் மறைக்கப்படும் என்றாட்குச் சொல்லியது 3— 4
நம்மை மறந்தாரை நாமும் மறக்கற்பாலம் என்றாட்குச் சொல்லியது 5— 6
பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனோடு நிறையழிவால் கூடிய தலைமகள் நீ புலவாமைக்குக் காரணம் யாது என்ற தோழிக்குச் சொல்லியது 7—10

### 127. அவர்வயின் விதும்பல்

தலைமகள் காண்டல் விதுப்பினால் சொல்லியது 1
ஆற்றாமை மிகுதலின் இடையின்றி நினைக்கற்பாலையல்லை, சிறிது மறக்கல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது 2— 4
தலைமகன் வரவு கூறி ஆற்றுவாய்ப் பசக்கற் பாலையல்லை என்ற தோழிக்குச் சொல்லியது 5— 7
வேந்தர்க்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் வினைமுடிவு நீட்டித் துழித் தலைமகளை நினைத்து தன்னுள்ளே சொல்லியது 8—10

### 128. குறிப்பறிவுறுத்தல்

பிரிந்து கூடிய தலைமகள் வேட்கை மிகவினால் புதுவது பன்னாளும் பாராட்டத் தலைமகள் இது ஒன்றுடைத்து என அஞ்சியவழி அதனை அவள் குறிப்பானறிந்து அவன் அவட்குச் சொல்லியது 1
நாணால் அவள் அது சொல்லாளாகியவழி அவன் தோழிக்குச் சொல்லியது 2— 5
தலைமகன் குறிப்பறிந்த தலைமகள் அதனை அது தெளிவிக்கச் சென்ற தோழிக்கு அறிவுறுத்தது 6— 8
தலைமகள் குறிப்பறிந்த தோழி அதனைத் தலைமகற்கு அறிவித்தது 9
தலைமகள் பிரியாமைக் குறிப்பினைத் தோழிக்கு அறிவுறுத்தது 10

### 129. புணர்ச்சி விதும்பல்

பிரிதற் குறிப்பினனாகியானோடு நீ புலவாமைக்குக் காரணம் யாது என நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது 1— 7
தலைமகள் புணர்ச்சி விதுப்பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது 8
உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகள் சொல்லியது 9—10

### 130. நெஞ்சொடு புலத்தல்

தலைமகன்கண் தவறு உண்டாய வழியும் புலவி கருதாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது 1— 4
வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது 5— 8
உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது 9—10

### 131. புலவி

வாயிலாகச் சென்ற தோழி தலைமகள் வாயில் நேர்தற் பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது 1
புலவியொழிந்து வாயில் நேரும் வகை அவள் சொல்லியது 2

பரத்தையரிடத்து நின்றும் வந்த தலைமகனோடு புலந்து சொல்லியது 3— 4
தலைமகளைப் புலவி நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது 5— 7
உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது 8—10

## 132. புலவி நுணுக்கம்

உலாப்போய்வந்த தலைமகன் பள்ளியிடத்தானாகத் தலைமகள் சொல்லியது 1
தலைமகன் நீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது 2
தலைமகள் புலவிக் குறிப்பினைக் கண்டு நீவிர் கூடி ஒழுகாநிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது 3—10

## 133. ஊடலுவகை

தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி அங்ஙனம் நீ புலக்கின்றது என்னை என்றாட்கு அவள் சொல்லியது 1
புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃது இழந்து புலவியான் வருந்துவது என்னை என்றாட்கு அவள் சொல்லியது 2— 3
அப் புலவி இனி யாதான் நீங்கும் என்றாட்குச் சொல்லியது 4
தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது 5—10

# 6. வள்ளுவர் வழங்கிய பா

பண்டை நாளில் பெருவழக்காக இருந்த நால்வகைப் பாவினும் வள்ளுவர் தம்முடைய கருத்துகளை வெளியிடக் கருவியாகக் கொண்டது வெண்பா வகைகளுள் முதலாவதான குறட்பா. பாக்களுக்குள் 'முதற்பா' எனப்பெறும் சிறப்பினைப் பெற்றதும் இதுவே. குறட்பாவினாலாகிய பெருநூல் திருக்குறளைத் தவிர வேறு ஒரு நூல் முன்பு இல்லையாதலால், இந் நூல் பாவகையாலே 'குறள்' என்றும், அதன் சிறப்புக் கருதித் திருக்குறள் என்றும் வழங்கப் பெற்றது என்பர்.

சிலப்பதிகாரவுரை, யாப்பருங்கல விருத்தியுரை முதலியவற்றில் குறட்பாவினால் அமைந்த இலக்கிய இலக்கணப் பாடல்கள் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன. இவற்றுள் சிலவற்றைப் பண்டை உரைகாரர் தாம் வகுத்துணர்த்தும் இலக்கண விளக்கத்தின் பொருட்டு அமைத்துக்கொண்ட உதாரணப்பாடல்கள் என்று கருதினும் பெரும்பான்மைப் பாடல்கள் வேறு நூல்களிலிருந்து எடுத்த மேற்கோளாகக் கொள்ள இடமுண்டு.

*வணக்கம் அதிகாரம் என்றிரண்டும் சொல்லச்*
*சிறப்பென்னும் பாயிரம் ஆம்.*

*யரல வழள இடையினம் என்ன*
*மரபு பிழையாத வைப்பு*

எனவரும் குறட்பாக்கள் யாப்பருங்கல விருத்தியுரையில் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன (யா. வி. பக். 11, 51-பவானந்தம் பிள்ளை பதிப்பு). இவற்றைக் கூர்ந்து நோக்கினோமானால் இவை குறட்பாட்டினால் அமைந்த ஓர் இலக்கண நூலிலிருந்து எடுக்கப் பெற்றிருத்தல்கூடும் என்று எண்ண இடமாகிறது.

*அஞ்சனக் கட்டி அரிதாரம் பச்சிலை*
*ஆரம் அகிலு றுப்போ ரைந்து.*

*கொட்டம் துருக்கம் தகரம் அகில்ஆரம்*
*ஒட்டிய ஐந்தும் விரை.*

இக் குறட்பாக்கள் இரண்டும் சிலப்பதிகார அரும்பதவுரையில் வரும் மேற்கோள் பாடல்களாகும்; நிகண்டு நூல்களில் விளக்கப் பெறும் தொகைப் பெயர் விளக்கமாக இவை உள்ளன. அகில் உறுப்பு ஐந்து, விரை ஐந்து என்பன மேற்குறித்த பாடல்களில் விவரிக்கப்பட்டுள்ளன. ஆதலால், இலக்கியங்களேயல்லாமல் இலக்கணம், நிகண்டு முதலியனவும் குறட்பாவினுல் அமைக்கப்பட்டு முன்பு வழங்கியிருத்தல் கூடும் என்று எண்ணலாம்.

இலக்கண நூல்களுள் பெரும்பாலனவும் நூற்பாவினுல் ஆக்கப் பெற்ற காரணம் சுருங்கிய சொற்களால் அரும் பொருள்களை எளிதில் எடுத்துக்கூற இயலும் என்பதனுல்தான். இது போன்ற அமைப்பு குறட்பாவிற்கும் உள்ளமை காரணமாகக் குறட்பாவையும் முன்னுளில் புலவர் பலர் இலக்கியம், இலக்கணம், நிகண்டு முதலிய வற்றிற்கு மேற்கொண்டிருத்தல் இயல்பே.

*இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்*
*மரப்பாவை சென்றுவந் தற்று* (குறள் 1058)

என்னும் குறள் உரையில் பரிமேலழகர்,

*'ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து*
*வாழ்வாரே வன்க ணவர்'*

என்ருர் பிறரும்' என ஒரு குறட்பாவை மேற்கோள் காட்டுகின்ருர்.

மற்றும் தொல்காப்பியச் சொல்லதிகாரவுரையுள் சேனுவரையர்,

*அடகுபுலால் பாகு பாளிதமு முண்ணுன்*
*கடல்போலுங் கல்வி யவன்* (தொல். சொல். 284)

என்று ஒரு குறள் வெண்பாவை எடுத்துக்காட்டியுள்ளார். இஃது இப்பொழுது நமக்குக் கிட்டியுள்ள அறநூல்களுள் காணப்படாத ஒன்று. முன்பு வழங்கிய அறநூல் ஒன்றனை இப் பாட்டுச் சார்ந்த தாதல் வேண்டும் என்பது இதன் பொருட்போக்கினுல் நன்கு விளங்கும். ஆகவே, குறட்பாவினுல் இயன்ற வேறு அறநூல்கள் சிலவும் பண்டு இருந்து பின்னுல் வழக்கொழிந்திருக்கலாம் என்று கருதலாம்.

மேலும், கலிப்பாவின் அமைப்புகளிலும் குறட்பா விரவி வருதல் காணலாம். இப் பாவின் உறுப்புகளுள் ஒன்ருகிய சுரிதகம் என்பது வெண்பா அல்லது ஆசிரியப்பாவின் தன்மை பெற்றுவரும் இயல்பினது. வெண்கலிப்பா அல்லது கலிவெண்பா என்பது

வெண்பாவின் இயல்பினைக் கொண்ட பாட்டே. "கலியாய் வந்து ஈற்றடி முச்சீராய் வெண்பாவே போன்று இறுதலானும், வெண் பாவிற் சிறிது வேறுபட்டுக் கலித்த ஓசைத்து ஆகலானும் கலி வெண்பா என்பதும் வெண்கலிப்பா என்பதும் காரணக்குறி" என விளக்கம் தருகிறார் யாப்பருங்கல விருத்தி உரைகாரர்.

*தன்தளை ஓசை தழீஇயுநின் றீற்றடி*
*வெண்பா இயலது கலிவெண் பாவே*

என்பது யாப்பருங்கலச் சூத்திரம் (85).

*திணைத்துணையும் தீயவை இன்மையிற் சேர்தும்*
*வினைத்தொகையை வீட்டுக என்று.*

இஃது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவின் இறுதியாக அமைந்த வெள்ளைச் சுரிதகம் (யா. வி. மேற்கோள்).

*வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்*
*கனைசுடர் கால்சியா முன்.*

*பொற்றொடி யேவப் புகையழல் மண்டிற்றே*
*நற்றேரான் கூடல் நகர்.*

சிலப்பதிகாரம், கலித்தொகை முதலிய நூல்களில் வரும் கலி வெண்பாட்டுகளை நோக்கின், அவற்றுள் குறள் வடிவம் பொருந்தி விளங்குதல் பெறப்படும்.

இவை சிலப்பதிகாரத்தில் கலிவெண்பாட்டாகக் காணும் 'கனாத்திறம் உரைத்த காதை,' 'வஞ்சின மாலை' களின் முடிவுகளாகும்.

கலித்தொகையில் வரும் கலிவெண்பாட்டு, கொச்சகக்கலி முதலியவற்றில் பொதிந்துள்ள குறட்பா வடிவங்கள் திருக்குறள் காமத்துப்பால் பாடல்களை நினைவூட்டுவன. சிற்சில கலிப்பாப் பகுதிகள் பின்வருமாறு :

*அணிமாலைக் கேள்வற் றருஉமா ராயர்*
*மணிமாலை யூதுங் குழல்.* (கலி. 101:34—35)

*ஏறெவ்வங் காணா வெழுந்தா ரெவன்கொலோ*
*ஏறுடை நல்லார் பகை.* (கலி. 102:34—35)

*கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்*
*புல்லாளே ஆய மகள்.* (கலி. 103:63—64)

*பாடுகம் வம்மின் பொதுவன் கொலையேற்றுக்*
*கோடு குறிசெய்த மார்பு.* (கலி, 104: 63—64)

மலையொடு மார்பமைந்த செல்வ னடியைத்
தலையினுற் றெட்டுற்றேன் சூள். (கலி. 108: 55—56)

புண்ணில்லார் புண்ணுக நோக்கு முழுமெய்யுங்
கண்ணளோ ஆய மகள். (கலி. 109: 11—12)

மத்தம் பிணித்த கயிறுபோல் நின்னலஞ்
சுற்றிச் சுழலுமென் னெஞ்சு. (கலி. 110:10—11)

படரும் பனையீன்ற மாவும் சுடரிழை
நல்கியா ணல்கி யவை. (கலி. 138:12—13)

உப்பியல் பாவை உறையுற் றதுபோல
உக்கு விடுமென் னுயிர். (கலி. 138:16—17)

காமக் கடும்பகையிற் றோன்றினேற் கேமம்
எழினுதல் ஈத்தவிம் மா. (கலி. 139:24—25)

அழல்மன்ற காம வருநோய் நிழல்மன்ற
நேரிழை ஈத்தவிம் மா. (கலி. 139:30—31)

பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய
கையுளே மாய்ந்தான் கரந்து (கலி. 142:35—36)

காலன்போல் வந்த கலக்கத்தோ டென்றலை
மாலையும் வந்தன் றினி. (கலி. 143:40—41)

ஈரமில் கேள்வன் உறீஇய காமத்தீ
நீருட் புகினும் சுடும். (கலி. 144:62—63)

வானும் நிலனும் திசையும் துழாவுமென்
ஆனுப் படர்மிக்க நெஞ்சு. (கலி. 145:43—44)

ஞாயிற்று முன்னர் இருள்போல மாய்ந்ததென்
ஆயிழை உற்ற துயர். (கலி. 145:65—66)

இங்ஙனமாக, இலக்கியம், இலக்கணம், நிகண்டு முதலிய வற்றில் குறட்பா மரபு முன்பு உள்ளமை கருதி, வள்ளுவரும் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதற்கு ஏற்புடையதாக இப் பாவினைத் தெரிந்து கொண்டார் என்னலாம். இலக்கண நூல்களுக்கு நூற்பாப் போல வாழ்க்கை இலக்கணம் வகுக்கும் இவரும் குறட்பாவினுல் கருத்துகளை வெளிப்படுத்தியது மிகவும் பொருத்தமுடைத்தே.

திருக்குறளுக்கு ‘ முதுமொழி ’ என்றும் ஒருபெயர் வழக்கு உண்டு. திருக்குறளை அப்படியே ஈரடியாகக் கொண்டு விளக்கம் தரும் திருக்குறள் வெண்பா நூல்களுள் ‘ முதுமொழிமேல் வைப்பு,’ ‘ சோமேசர் முதுமொழி வெண்பா ’ என்பனவற்றில் திருக்குறளை ‘ முது மொழி ’ என வழங்குதல் சான்றும். முதுமொழி என்றுல்

'பழ மொழி' என்பது பொருள். அதாவது பழமொழியாக வரும் உலகவசனம் போன்று சுருக்கமும் திட்பமும் தெளிவும் உடையது என்பது கருத்து. தொல்காப்பியர்,

*நுண்மையும் சுருக்கமும் ஒளியு முடைமையும்*
*எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்*
*குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்*
*ஏது நுதலிய முதுமொழி என்ப* (தொல். செய்யு. 177)

என்று முதுமொழி இலக்கணம் கூறுகிறார். கூரியதாய்ச் சுருங்கி விழுமியதாய் எளிதாக இயற்றப்பட்டு, அதனை விளக்கும் பொருளினையும் எடுத்துக்காட்டி அமைவது என்பது இதன் கருத்து. நுண்மை, சுருக்கம், ஒளியுடைமை, எண்மை (எளிமை) என்னும் பண்புகளைப் போற்றிக் கருத்துகளை விளங்க உரைக்க வள்ளுவர்க்குக் குறள் ஏற்ற பாவாக அமைந்தது என்னலாம். பாடம் போற்றிப் படிப்பார்தாமும் கருத்தில் நிறுத்துவதற்கும் நூற்பா போன்ற குறட்பா ஏற்றதாதலாலும் இதனைத் தேர்ந்தெடுத்தார் வள்ளுவர் எனல் பொருந்தும்.

திருமணம் செல்வக்கேசவராய முதலியார் தாம் எழுதிய திருவள்ளுவர் என்னும் நூலில், "நமது ஆசிரியர் இந் நூலை ஏனைப்பாக்களாற் கூருது குறட்பாக்களால் கூறிய எடுத்துக் கொண்டதனுல், சுருங்கச் சொல்லல் - விளங்க வைத்தல் - நவின்றோர்க்கு இனிமை - நன்மொழி புணர்த்தல் முதலான அழகுகள் இந் நூலில் இனிதாக அமைவனவாயின" என்று குறட்பாவால் வள்ளுவர் நூல் செய்ததனுல் நேர்ந்த பயன்களைக் கூறியுள்ளார்கள் (திருவள்ளுவர், பக். 40).

இங்ஙனமாக எல்லா வகையாலும் எளிய இனிய குறட்பாவினுல் இயன்று, அதனுல் 'குறள்' என்னும் சிறப்புப் பெயரையும் வள்ளுவருடைய நூல் பெற்றுள்ளமை இவர்தம் நூலுக்குரிய ஒரு தனிச் சிறப்பாகும்.

# 7. பாடல் தொகை வகை

## அ. ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள்

திருக்குறளில் உள்ள நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களிலும் அடங்கிய பாடல் தொகை 1330.

*ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்*
*பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்*
*வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ*
*ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்*

எனவரும் திருவள்ளுவ மாலைச் செய்யுள் (16) திருக்குறளின் பாடல் தொகை பற்றித் தெரிவிக்கிறது. இதே போன்று,

*எப்பாலும் ஏத்துவாம் இன்பம் பொருள்அறமா*
*முப்பாலும் ஆயிரத்து முந்நூற்று—முப்பதா*
*ஓரடி முக்கால் உரைத்ததிரு வள்ளுவனார்*
*ஈரடி முக்காலு மே*

எனவரும் பழம் பாடலும் (செந்தமிழ்: தொகுதி 1, பக். 294) முப்பாலின் பாடல் தொகை பற்றிக் கூறுகிறது.

## ஆ. அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்

அதிகாரம் ஒவ்வொன்றிற்கும் பப்பத்துக் குறளாகத் தம் நூலை வள்ளுவனார் அமைத்துள்ளார். பத்துப் பத்தாகப் பாடல்களைப் பகுத்துரைக்கும் வழக்கு முன்பு இருந்தமை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூல்களால் தெரிய வருகின்றது. 'பத்துப்பாட்டு' நீண்ட பத்துப் பாடல்களின் தொகுதியே. எட்டுத் தொகையுள் பதிற்றுப் பத்திலும் ஐங்குறு நூற்றிலும் பப்பத்துச் செய்யுட்களாக நூல் பிரிக்கப்பட்டுள்ளது. பதிற்றுப்பத்தில் எண்ணுப் பெயரால் முதற்பத்து, இரண்டாம் பத்து என்றாற்போலப் பெயர் தரப்பட்டிருக் கின்றது. ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு பத்திலும் வரும் சிறப்புச்

சொல்-தொடர்களைக் கொண்டும், விவரிக்கப் பெறும் கருத்துகளைக் கொண்டும் பெயர் தரப்பட்டிருக்கிறது. எருமைப் பத்து, வெள்ளாங் குருகுப் பத்து, சிறுவெண் காக்கைப் பத்து, அம்மவாழிப் பத்து, கிழத்தி கூற்றுப் பத்து, புலவி விராய பத்து என்றாற்போல வரும் பெயர் அமைப்புகளால் அந்தந்தப் பத்தின் முக்கிய கருத்துகள் விளக்கமாகின்றன. திருவள்ளுவரும் தாம் கூறப்படும் கருத்து விளங்கும் வகையில் அதிகாரப் பெயர்களை அமைத்துள்ளார்.

நாலடியாரைப் பால் இயல் அதிகாரங்களாக வகுத்த பதுமனார் திருவள்ளுவருடைய முறையையே பின்பற்றியுள்ளார். இந் நூலின் அதிகாரப் பெயர்களும் திருக்குறளை அடியொற்றி அமைந்துள்ளன. இப் பதுமனார் நாலடியாரின் ஒவ்வோர் அதிகாரத்திலும் பப்பத்துப் பாடல்களை அமைத்திருப்பது கொண்டு திருக்குறள் அதிகாரங் களிலும் பப்பத்துப் பாடல்களே இருந்தன என்பது விளக்க மாகின்றது.

## இ. பத்துப் பாடல் என்னும் வரையறையின் விளைவு

வள்ளுவப் பெருந்தகை ஒவ்வோர் அதிகாரத்தையும் பப்பத்துக் குறளால் கூறுவது என்று கொண்டுள்ள வரையறையால் இருவகையான இடர்ப்பாடுகள் உண்டாகின்றன என்கிறார் பேராசிரியர் திருமணம் செல்வக் கேசவராய முதலியார். இவர் தாம் எழுதிய 'திருவள்ளுவர்' என்னும் நூலில் இது குறித்துச் சான்று காட்டித் தக்க வண்ணம் விளக்கியுள்ளார். இக் கருத்தை முதன்முதல் தமிழுலகுக்கு அளித்த முதல்வரும் இவராகத்தான் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இவருடைய கருத்துரை வருமாறு:

> *"வள்ளுவர் ஒவ்வோர் அதிகாரத்தையும் பப்பத்துக் குறளாகக் கூறுவதென்று வரையறுத்துக் கொண்டதில் இரண்டு விதமான இடர்ப்பாடு உண்டு. அதிகாரப்பட்ட பொருள் பத்துக் குறட்குக் குறைவதாயின், கூறியது கூறல், மற்றொன்று விரித்தல், மிகை படக்கூறல் முதலான குற்றங் களுக்கு இடமுண்டாகும். அதிகாரப்பட்ட பொருள் பத்துக் குறளின் மிகுவதாயின், குன்றக்கூறல் முதலான குற்றங் களுக்கு இடமுண்டாகும். அன்றியும் விதி முகத்தானும் மறை முகத்தானும் பல அதிகாரங்கள் கூறவேண்டுவதுமாகும். கடவுள் வாழ்த்து அதிகாரப்பட்ட இடத்தில் நீடுவாழ்வார் இன்னார் என்பது இரண்டு குறளால் உணர்த்தினார் இவ்விரண்டு குறளையும் ஒன்றாக இணைத்திருக்கலாம்.*

*'அறவாழி யந்தணன்றாள் சேர்ந்தார்க் கல்லாற்*
*பிறவாழி நீந்த லரிது*

என்ற குறளையும்,

*'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவனடி சேரா தார்'*

என்ற குறளையும் ஒரு முடிபாக முடிப்பது நன்றாகும். இல்வாழ்க்கை அதிகாரப்பட்ட இடத்தில் துறவறத்தினும் இல்லறம் ஏற்றமுடையது என்பதற்கு,

*'அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்*
*போஒய்ப் பெறுவ தெவன்'*

என்றும்,

*'இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்*
*முயல்வாரு ளெல்லாம் தலை'*

என்றும்,

*'ஆற்றி னொழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை*
*நோற்பாரின் நோன்மை உடைத்து'*

என்றும் மூன்று குறள்கள் கூறினார். நட்பு அதிகாரப்பட்ட விடத்தில் கூறவேண்டுவனவெல்லாம் ஓரதிகாரத்தில் அடங்காமையால் பல அதிகாரங்களாக வகுத்துக் கொண்டார்."

திரு. முதலியார் அவர்கள் காட்டியபாங்கில் வேறும் சிற்சில இடங்களை நாம் குறள் நூலுள் காணுதல் கூடும். ஒருசில எடுத்துக் காட்டுகள் பின்வருமாறு:

*அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து*
*தீதின்றி வந்த பொருள்.* (குறள் 754)

*ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்*
*ஏனை இரண்டும் ஒருங்கு.* (குறள் 760)

இவ்விரண்டு குறள்களும் பொருள் செயல் வகை அதிகாரத்தில் உள. இவ்விரண்டிலும் கூறப்படும் கருத்து பொருளை அடைந்தவர்க்கு இன்பம் அறம் என்னும் இரண்டும் எளிதிற் கிடைக்கும் என்பதாம். இரண்டும் ஒரு சேரக் கிடைக்கும் என்கிறது 760ஆம் குறள் சொல்லும் முறையிலும் அமைப்பிலும் வேறுபட்டுள்ளனவே யன்றிக் கருத்து மாறுபாடு இல்லை. மேலும் ஓரிடம்,

*உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்*
*இன்னாச்சொல் நோற்பாரின் பின்.* (குறள் 160)

*துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்*
*இன்னாச்சொல் நோற்கிற் பவர்.* (குறள் 159)

இரண்டிலும் கூறப்பெற்ற பொருள் இன்னாச் சொல்லைப் பொறுப்பவர் துறந்தாரினும்மேம்பட்டவர் என்பதாம்.

*எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை*
*வீயாது பின்சென் றடும்.* (குறள் 207)

என்பதில் கூறிய கருத்தே அடுத்த பாட்டில்,

*தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை*
*வீயாது அடியுறைந் தற்று.* (குறள் 208)

என உவமை காட்டி மேலும் விளக்கப்படுவது ஒன்றே புதுமை.

*துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய*
*நெஞ்சந் துணையல் வழி.* (குறள் 1299)

*தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய*
*நெஞ்சம் துணையல் வழி.* (குறள் 1300)

என அடுத்தடுத்து வரும் இவ்விரு குறள்களின் கருத்துகள் பெரிதும் ஒத்துள்ளமை காணலாம்.

ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. செல்வக்கேசவராய முதலியார் நட்புப்பற்றிக் கூறியது போலவே கல்விப்பொருள் ஓரதிகாரத்தால் அடக்க இயலாமையால், கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என வேறுவேறு அதிகாரங்கள் அமைக்கிறார் ஆசிரியர். பெரியாரைக் குறித்துப் 'பெரியாரைத் துணைக்கோடல்,' 'பெரியாரைப் பிழையாமை' எனஈரதிகாரங்கள் கொண்டுள்ளார். 'சிற்றினம் சேராமை' கூட ஒருவகையால் பெரியாரைத் துணைக்கோடல் வேண்டும் என்பதையே அறிவுறுத்த எழுந்ததாகும். இவையெல்லாம் அதிகாரத்திற்குப் பத்துப்பாட்டு என்னும் வரையறையால் வந்த விளைவு என்பது நோக்கிக் காணத்தகும்.

மேலும் சிலர், இப் பத்து என்னும் வரையறையால் சில அதிகாரங்களில் உள்ள பாடல்கள் மிகச் செறிவாகவும், வேறு சில அதிகாரங்களில் உள்ள பாடல்கள் மிக நெகிழ்ச்சியாகவும் இருக்கின்றன என்றும் கருதுகின்றனர்.

ஒரு பொருளை உடன்பாட்டு முறையிலும் எதிர்மறை முகமாகவும் வற்புறுத்தும் இயல்புடையார் வள்ளுவர். ஒரே அதிகாரத்தில்கூட இவ்விரு முறைகளையும் மேற்கொண்டு பாடிய பாடல்களும் உள. பொருள் விரிவுடையதாக இருந்தால் தொடர்பாகப் பல அதிகாரங்களில் அவை விளக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஒரு நெறியில்தான் 'அதிகாரத்திற்குப் பத்துக் குறள்' என்னும் வரையறையை அவர் வகுத்து அளிக்கின்றார்.

ஒருசில இடங்கள் கூறியது கூறல்போல் தோற்றினும், அவற்றுள்ளும் சொல்லும் முறையில் சிறுசிறு வேறுபாடுகளைக் காணலாகும். ஆசிரியர் கட்டுப்பாட்டுடன் அதிகாரப் பொருள் வரையறுத் துணர்த்தலில் ஏகதேசமாக வரும் இவை இழுக்கல்ல.

*'கூறியது கூறினும் குற்றம் இல்லை*
*வேறொரு பொருளை விளக்கு மாயின்'*

என்றபடி வேறு வேறு வகையான குறிப்புப் பொருளுக்கு இடமாக ஆசிரியர் வள்ளுவர் தம் பாடல்களை அமைத்தார் என்று கொண்டே அவற்றை நாம் ஊன்றி நோக்குதல் வேண்டும். அவ்வாறு காண்கின்ற போது, இதுவரைக் காணாத புதுமைகள்—அதாவது புதுப்பொருள்கள், புதுக்கருத்துகள்முதலியன எல்லாம் புலப்படுதல் திண்ணம். அதனால் தான் இன்னும் புத்துரைகளுக்கும் புதுமைக் கருத்துகளுக்கும் குறள் இடம் தந்து நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

# 8. அதிகாரப் பாடல் அடைவு

ஒவ்வோர் அதிகாரத்திலும் அமைந்துள்ள செய்யுள்களின் வைப்பு முறையில் உரைகாரர்களிடையே பெருமாறுதல் காணப் படுகிறது. உரைகாரர் ஒவ்வொருவரும் தத்தமது நோக்கிற்குத் தக்கவாறு பாடல்களை முறைப்படுத்தி உரைவகுத்துச் செல்லு கின்றார்கள். இதனை விளக்குவதற்கு எடுத்துக்காட்டாக, 'செங் கோன்மை' (55), 'கொடுங்கோன்மை' (56) என்னும் இரண்டு அதிகாரங்களையும் தொடர்ச்சியாக எடுத்துக் கொண்டு உரைகாரர் கொண்ட குறள் வைப்பு முறையினை நோக்குவோம் :

பாடல் வரிசை

செங்கோன்மை

| பரிமேலழகர் | | மணக் குடவர் | பரிப் பெருமாள் | பரிதியார் | காளிங்கர் |
|---|---|---|---|---|---|
| ஓர்ந்து கண்ணோடாது | 1 | 1 | 1 | 1 | 1 |
| வானோக்கி வாழும் | 2 | 4 | 4 | 6 | 9 |
| அந்தணர் நூற்கும் | 3 | 7 | 7 | 4 | 3 |
| குடி தழீஇக் | 4 | 5 | 5 | 8 | 7 |
| இயல்புளிக் | 5 | 6 | 6 | 5 | 2 |
| வேலன்று | 6 | 8 | 8 | 3 | 5 |
| இறைகாக்கும் | 7 | 9 | 9 | 9 | 6 |
| எண்பதத்தான் | 8 | 10 | 10 | 10 | 8 |
| குடிபுறங் காத்தோம்பிச் | 9 | 2 | 2 | 7 | 10 |
| கொலையிற் கொடியாரை | 10 | 3 | 3 | 2 | 4 |

## கொடுங்கோன்மை

| | பரிமேலழகர் | | மணக் குடவர் | பரிப் பெருமாள் | பரிதியார் | காளிங்கர் |
|---|---|---|---|---|---|---|
| | கொலை மேற்கொண் | 1 | 8 | 7 | 10 | 6 |
| | வேலொடு நின்ருன் | 2 | 10 | 10 | 7 | 3 |
| | நாடொறும் நாடி | 3 | 2 | 2 | 1 | 1 |
| | கூழும் குடியும் | 4 | 7 | 6 | 2 | 2 |
| | அல்லற்பட்டு | 5 | 9 | 9 | 8 | 4 |
| | மன்னர்க்கு | 6 | 1 | 1 | 3 | 8 |
| | துளியில் ஊ ம | 7 | 4 | 8 | 6 | 7 |
| | இன்மையின் இன்னுது | 8 | 3 | 3 | 9 | 10 |
| | முறை கோடி | 9 | 6 | 5 | 4 | 5 |
| | ஆபயன் குன் றும் | 10 | 5 | 4 | 5 | 9 |

இவ்வாறுதான் ஒவ்வோர் அதிகாரத்திலும் செய்யுட்களின் வரிசை வேறுபட்டுக் காணப்படுகிறது. ஆனுல், வள்ளுவர் ஆதியில் முப்பால் வகுத்தபோது பாடல்களை ஏதாவது ஒருமுறையில்தான் அடைவு படுத்தியிருத்தல் வேண்டும். இம் முறையை இன்றைய சூழ்நிலையில் அறுதியிட்டுத் துணிந்து கூறுவது அத்துணை எளிய செயலன்று.

ஆயினும் பொதுவர்கத் திருக்குறளுக்கு 'முதல்முதல் தோன்றிய உரையில்' வள்ளுவருடைய அடைவுமுறை போற்றப்பட்டிருத்தல் கூடும் என்று கொள்ளலாம். திருக்குறளுக்குரிய பதின்மர் உரைகளுள், இன்று ஒருவாறு நிறைவுறக் கிடைப்பவை மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காளிங்கர், பரிமேலழகர் என்னும் ஐவர் உரைகளே. இவற்றுள் இறுதியாக வந்தது பரிமேலழகரின் உரை எனக் கொள்ள அவ்வுரைப் பாயிரம் இடம் தருகிறது.

'அறம் பொருள் இன்பம் வீடெனும் நான்கின்
திறம்தெரிந் துரைத்த செவ்விமுப் பாலுக்கு
ஒருரை யின்றி ஒன்பது சென்றும்
ஐயுற வாக நையுறு காலை
நூலவர் [illegible]...அரசரும் சென்றார்.
விழுப்பொருள் தோன்ற விரித்தினிது உரைத்தனன்
பரிமே லழகன் எனப்பெயர் படைத்துத்
தரைமேல் உதித்த தலைமை யோனே'

(பெருந்தொகை, 1543)

என வரும் பாடற்பகுதி இதற்குச் சான்றும்.

உரை நூல்களுள் கிடைத்த வரையில் மணக்குடவர் உரையே பழமையானது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். பரிமேலழகரின் உரையைப் போல ஏனைய உரைகள் எல்லாம் மேலும் ஆராய்ந்து செவ்விய முறையில் வெளிப்படுத்த வேண்டும் நிலையில்தான் உள்ளன. எல்லா உரைகளும் கிடைத்து அவையெல்லாம் அச்சில் திருந்திய முறையில் வெளிவந்த பிற்பாடுதான் முதலுரை இன்னது எனத் துணியக்கூடும்.

இது குறித்துப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் இங்கே சிந்தித்தற்குரியன. அவர்கள் கூறுவது வருமாறு :

"வள்ளுவரது முறையை உணருவதற்குப் பரிமேலழகரைக் காட்டிலும் பிற உரைகாரர்களே நாம் நம்பித் துணையாகக் கொள்வதற்கு உரியர். மணக்குடவர் நமக்கு உற்ற துணையாகலாம் எனத் தோன்றுகிறது. இவரது செய்யுள் வைப்பு முறை பெரும்பாலும் வள்ளுவரது ஆகலாம். ஆனால், இவர் உரை கிடைக்கக்கூடும் பிரதிகள் அனைத்தையும் ஒப்பு நோக்கி ஆராய்ச்சி முறையில் பதிப்பிக்கப் பெறவில்லை."

(தமிழ்ச்சுடர்மணிகள், நான்காம் பதிப்பு, பக். 111—112)

இதுவரையில் ஓர் அதிகாரத்தில் செய்யுள்கள் முன்பின்னாக வரும் உரைகாரர் அடைவு முறை பற்றிப் பார்த்தோம். அதிகாரம் விட்டு அதிகாரத்திற்குப் பாடல் பெயர்ச்சி, அறத்துப்பால் பொருட்பாக்களில் எதுவும் இல்லை. காமத்துப்பாலில் மட்டும் காளிங்கர் உரைக்கும் பிற உரைகாரர்களுக்கும் மூன்று இடங்களில் பிறழ்ச்சி காணப்படுகிறது.

1. காளிங்கர் உரையில் 'தனிப்படர் மிகுதி' என்னும் 120ஆம் அதிகாரத்தின் 10ஆம் செய்யுள்,

*உரம்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்*
*வரல்நசைஇ இன்னும் உளேன்*

என்பது. இதனை 'அவர்வயின் விதும்பல்' என்னும் 129ஆம் அதிகாரத்தில் மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் ஆகியோர் முறையே 9ஆவது 3ஆவது 7ஆவது பாடல்களாகக் கொண்டுள்ளனர்.

2. காளிங்கர் உரையில் 'நினைந்தவர் புலம்பல்' என்னும் 121ஆம் அதிகாரத்தின் 10ஆம் பாடல்,

*வீழ்வாரின் இன்சொற் பெறாஅ துலகத்து*
*வாழ்வாரின் வன்கணார் இல்*

என்பது. இது 'தனிப்படர் மிகுதி' என்னும் 120ஆம் அதிகாரத்தில் மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் ஆகியோரால் முறையே 10, 8, 9 ஆம் பாடல்களாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

3. காளிங்கர் உரையில் 'அவர்வயின் விதும்பல்' என்னும் 127ஆம் அதிகாரத்தின் 6ஆம் செய்யுள்,

*விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்*
*படாஅது வாழி மதி*

என்பது. இதனை 'நினைந்தவர் புலம்பல்' என்னும் 121ஆம் அதிகாரத்தில் மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் இம் மூவரும் 10ஆம் செய்யுளாகக் கொண்டுள்ளார்கள்.

மேற்காட்டியவற்றால் காளிங்கர் உரையில் மட்டும் 3 இடங்களில் அதிகாரப் பிறழ்ச்சி உளது என்பதும் ஏனைய உரைகளில் அதிகாரப் பிறழ்ச்சி இல்லை என்பதும் தெரியவரும். காளிங்கர் மூன்று இடங்களில் பாடல்களை மாற்றிப் போற்றியமை குறித்துப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் தரும் விளக்கம் பொருத்தமாகவே காணப்படுகிறது. அது வருமாறு:

> *'இம் மூன்று செய்யுட்களும் பொருள் பற்றிய அளவில் மேற்காட்டியவாறு அதிகாரம் பிறழ்ந்து வருவதற்கு இயைபு உண்டு. குறுந்தொகை முதலிய நூல்களில் தொகுத்தார் ஒரு களவித் துறையிலே அமைத்த செய்யுள் தொல்காப்பிய உரைகாரர்களால் பிறிதொரு களவித்துறைக்கு உரியதாகக் காட்டியிருப்பது நோக்கத்தக்கது.*
>
> *"ஆகவே,......காளிங்கர் பொருள் இயைபு பற்றி முன்வழங்கிய அமைப்பைக் கைவிட்டுப் புதிய தொரு அமைப்பு முறையை மேற்கொண்டார் என்று துணிவதே பொருத்தமாகலாம்."*

(*தமிழ்ச் சுடர்மணிகள்: நான்காம் பதிப்பு, பக். 114*)

# திருக்குறள் அமைப்பும் முறையும்

## இரண்டாம் பகுதி

## நுவலும் முறை

# I. முன்னோர் மொழி போற்றுதல்

(எல்லாப் பொருளும் இதன்பால்உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்

(திருவள்ளுவமாலை, 29)

என்று வள்ளுவர் தந்த திருமறையைப் போற்றுகிறார் மதுரைத் தமிழ் நாகனார். "பலவகை நூல்களாலும் சொல்லப்பட்ட எல்லாப் பொருளும் இந் நூலகத்து அடங்கியிருக்கின்றன. இதனிடத்தில் இல்லாத யாதொரு பொருளும் எந் நூலகத்தும் இல்லை" என்பது இப் போற்றுரையின் கருத்து.) இதனால் வள்ளுவரின் பொதுமறையுள் முன்னோர் செய்த நூல்களில் உள்ள சாரங்கள் எல்லாம் பொதிந்துள்ளன என்பது தெளிவாம். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள் பயக்கும் நூல்களையும் நன்கு ஓதித் தம் உலகியல் அறிவோடு ஒட்டித் தெளிந்து எல்லார்க்கும் ஏற்ற பொது நல்லறங்களை மட்டும் சிறப்பாக எடுத்துக் கூறுதலே இவர்தம் நூலின் தனிச்சிறப்பு.

(குறிப்பிட்ட ஒரு சமயத்தாருக்கு மட்டும் உரிய தனியறங்களை வள்ளுவர் தம் நூலுள் எடுத்து ஓதவில்லை. எல்லார்க்கும் உரிய பொதுக் கடமைகளையே எங்கும் வகுத்துரைக்கின்றார்.

*சமயக் கணக்கர் மதிவழி கூறாது*
*உலகியல் கூறிப் பொருள்இது என்ற*
*வள்ளுவன்* (கல்லாடம், 14)

என்று கல்லாடர் இவர்தம் உலகியல் பொது நோக்கினைப் பாராட்டுகின்றார்.)

உரைகாரர் பரிமேலழகரோ வள்ளுவப் பெருந்தகை வடநூற் கடலையும் நிலைகண்டு உணர்ந்து, அம்மொழி நூல்களில் கண்ட சாரங்களையும் தம் நூலுள் பயன்படுத்தியுள்ளார் என்னும் கருத்துகளை ஒரு சில இடங்களில் சுட்டியுள்ளார்.[1] வடநூற் கருத்துகளுக்கும் இவர்தம் வாய்மொழிக்கும் உள்ள ஒப்புமை கருதி இவ்வகை முடிவிற்கு இவர் வருகின்றார். இதில் ஓரளவு உண்மை

யிருப்பது போல் தோன்றினும் முற்றும் அவ் வடநூல் வழிகளையே மேற்கொண்டார் என்று கூறுவதற்கு இல்லை. தமிழிலும் எத்தனையோ துறைகளில் அருமையான பல நூல்கள் முன்னர் வழங்கிப் பின்னாளில் போற்றுவாரின்றிக் காலவெள்ளத்தில் மாய்ந்து போன குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. ஆதலால், இவர் வடநூலாரை நோக்கியே உரைத்தார் என்று ஒருதலையாகத் துணிய இடமில்லை.

வள்ளுவர் தமது நூலுள் சிற்சில இடங்களில், 'நூல் உரைக்கும்,' (743), 'பனுவல் துணிவு' (21), 'நூலோர்' (322, 533) என்று பொதுப்படக் கூறுகின்றாரேயின்றி இன்ன நூல் என்று சுட்டிப் பேச வில்லை. இங்ஙனமாக, முந்திய நூலோர் கருத்து இது என்றும், நூலோர் இவ்வாறு சொல்லுவர் என்றும் கூறிய இடங்கள் சில வற்றைத் திருக்குறளில காணலாம். என்றாலும், இவர் எவ் வகைப் பொருளைச் சுட்டி, எப்பகுதியில் கூறுகின்றாரோ அதைக் கொண்டு அக் கருத்துகள் அவ்வத்துறை பற்றிய நூல்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

*ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவல் துணிவு* (குறள் 21)

என்னும் இக் குறளில் நூல்கள் என்னும் பொருளில் 'பனுவல்' என்று கூறியுள்ளார். உரைகாரர் பரிமேலழகர், "பனுவல் எனப் பொதுப்படக் கூறியவதனான், ஒன்றையொன்று ஒவ்வாத சமய நூல்கள் எல்லா வற்றிற்கும் இஃது ஒத்த துணிவு என்பது பெற்றாம்" என்று விளக்கவுரை தருதலும் நோக்கத்தக்கது. இது கொண்டு 'நூல்' அல்லது 'நூலோர்' என வள்ளுவர் ஆளுமிடங்கள் வெவ்வேறு கொள்கையுடையார் கூறும் நூல்களை எல்லாம் குறிக்கும் என்று கொள்வது பொருத்தமாகும். மேலும், இக் குறட்பாப் பாயிரப் பகுதியைச் சார்ந்ததாதலின் எல்லா நூல்களையும் குறித்துப் பொதுப் படக் கூறினார் என்றும் கொள்ளலாம். அன்றியும், இஃது அறத்துப் பாலின் பகுதியாதலின் அறநூல்களைக் குறித்துக் கூறினார் என்றும் கருதலாம்.

*புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்*
*அறங்கூறும் ஆக்கம் தரும்.* (குறள் 183)

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.* (குறள் 322)

இவ்விரண்டும் அறநூல்களைச் சுட்டி உரைத்தனவே. 'அறம் கூறும்' என்பதற்கு 'அற நூல்கள் சொல்லும்' என்றும், 'நூலோர்'

என்பதற்கு 'அற நூலுடையார்' என்றும் பரிமேலழகர் உரை வரைதலும் இக் கருத்தினை அரண்செய்வதாக உள்ளது.

*பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து*
*அறம்பொருள் கண்டார்கண் இல்* (குறள் 141)

எனவரும் இக் குறளில் 'அறம் பொருள் கண்டார்' என்பது 'அற நூலையும் பொருள் நூலையும் ஆராய்ந்தார்' என்று கருதப்படும். "இன்பம் ஒன்றையே நோக்கும் இன்ப நூலுடையார் இத் தீயொழுக்கத்தையும் 'பரகீயம்' என்று கூறுவாராகலின், 'அறம் பொருள் கண்டார்கண் இல்' என்றார்" எனப் பரிமேலழகர் இக் குறளுக்கு எழுதியுள்ள விளக்கவுரையானும் இது தெளிவுறும்.

இங்ஙனமே வள்ளுவர் பொருட்பாலுள் நூல் குறித்து எடுத்துக் காட்டும் கருத்துகள் எல்லாம் பெரும்பாலும் அரசுமுறை நூல்களிலிருந்து ஆசிரியர் கண்டு கூறியவை என்று கொள்ளலாம்.

*ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்*
*தெற்றென்க மன்னவன் கண்.* (குறள் 581)

*மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்*
*யாஉள முன்நிற் பவை.* (குறள் 636)

*நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்*
*வென்றி வினையுரைப்பான் பண்பு.* (குறள் 683)

*உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்*
*அமைவரண் என்றுரைக்கும் நூல்.* (குறள் 743)

இவ்வாறு அறம், பொருள் முதலியவை உரைக்கும் நூல்களின் கொள்கைகளைக் காட்டித் தாம் கூறும் பொருள்கள் முன்னோர் மொழி பொருள்களே என உறுதிப்படுத்தி உரைப்பதும் வள்ளுவர் பொருளுணர்த்தும் முறையில் ஒரு திறனாகும். பின்வரும் பாடல்கள் பல துறை நூல்களையும் சுட்டிக் கூறுவனவாக அமைந்துள்ளன:

*நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்*
*உண்மை அறிவே மிகும்.* (குறள் 373)

*அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய*
*நூலின்றிக் கோட்டி கொளல்.* (குறள் 401)

*விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனை யவர்.* (குறள் 410)

*பொச்சாப் பார்க்குஇல்லை புகழ்மை அதுவுலகத்து*
*எப்பால் நூலோர்க்கும் துணிவு.* (குறள் 533)

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு. (குறள் 726)

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல். (குறள் 727)

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (குறள் 783)

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. (குறள் 941)

மேலே சுட்டியது போன்ற நுண்ணிய பொருள் உரைக்கும் இலங்கு நூல்கள் பலவற்றையும் வள்ளுவர் ஐயம் திரிபு அற நன்கு உணர்ந்து தெளிந்தவர். ஆகவே, விழுமிய நூலோர் பலர் தத்தம் நூல்களில் உரைத்த கருத்துகளுள் சிலவற்றை அந் நூலோர் கூற்றாகவே கொண்டு உரைக்கின்றார். 'என்ப', 'என்பர்' என்று வள்ளுவர் தம் பாடல்களில் கூறும் பொருளுரைகள் எல்லாம் முன்னூலாரும் அறிஞர் பெருமக்களும் உரைத்தனவாம். இவ் வகையில் வள்ளுவர் உரைத்த குறட்பாக்கள் பின்வருவன :

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. (குறள் 60)

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும். (குறள் 63)

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. (குறள் 73)

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு. (குறள் 75)

அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல். (குறள் 203)

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். (குறள் 238)

மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. (குறள் 244)

உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். (குறள் 330)

அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. (குறள் 361)

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (குறள் 392)

மடியுளான் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னுள். (குறள் 617)

கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லார் அவையஞ்சு வார். (குறள் 729)

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை. (குறள் 736)

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. (குறள் 738)

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. (குறள் 739)

பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. (குறள் 773)

இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய். (குறள் 851)

ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. (குறள் 918)

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. (குறள் 953)

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. (குறள் 981)

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (குறள் 991)

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். (குறள் 246)

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள். (குறள் 662)

இங்கு எடுத்துக்காட்டிய குறள்களில் வரும் 'என்ப', 'என்பர்' என்பன அறிவுடைய நல்லாரையும் சிறந்த நூல்களை ஆக்கிய நூலாசிரியர்களையும் குறிப்பனவாம் என்பது அவ்வப் பாடல்களைப் படித்தவுடனேயே விளங்கும்.[2] இவைதவிர ஏனைய பாடல்களில் வரும் கருத்துகளுள் பலவும் ஆசிரியர் தம் நுண்ணுணர்வால் அனுபவ வாயிலாக அறிந்து கூறியதோடு பிற பேரறிஞர்களுடைய கருத்துகளையும், அவர்தம் நூலுரைகளையும் தழுவியனவாகவும் இருத்தல் இயல்பே என்பதை ஊகித்து அறியலாம். என்றாலும், திட்டவட்டமாக ஆசிரியர் பிறர் கருத்துகள் என எடுத்தாண்டவை

இப் பகுதியில் காட்டிய குறட்பாக்களில் வருவனவே. இங்ஙனமாக முன்னோர் மொழி பொருள்களை வள்ளுவர் தம் நூலுள்கொண்டு கூறுதலும் பொருளுணர்த்தும் முறையில் ஒரு சீரிய முறையே யாகும்.

## குறிப்புகள்

1. அ. "இவர் பொருட் பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான்." (காமத்துப்பால் முகவுரை)

ஆ. "அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்." (உரைப்பாயிரம்)

இ. "தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகள் துணிபு தொகுத்துப்பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின்." (குறள் 662 உரை)

ஈ. "ஈண்டுப் பிரிவினை வடநூல் மதம் பற்றிச் செலவு, ஆற்றாமை, விதுப்பு, புலவி என நால்வகைத்தாக்கிக் கூறினார்."

(குறள் 1330 உரை)

உ. இவ் வட நூற் பொருண்மையை உட்கொண்டு இவர் ஓதிய அறியாது பிறரெல்லாம் இதனை உயிரெச்சம் எனப் பாடந்திரி தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்." (குறள் 501 உரை)

2. 'என்ப' என்பதற்குப் பரிமேலழகர் தரும் உரைக் குறிப்பும் இக் கருத்தினை நன்கு விளக்குகின்றது

'என்ப'—'என்று சொல்லுவர்' (729)

'என்ப'—'என்று சொல்லுவர் அறிந்தோர்'
(60, 63, 73, 75, 244, 330, 392, 617)

'என்ப'—'என்று சொல்லுவர் நல்லோர்' (203, 238)

'என்ப'—'என்று சொல்லுவர் நூலோர்'
(361, 736, 738, 739, 773, 851, 918, 953, 981, 991)

## 2. உலகின்மேலிட்டு உரைத்தல்

உலகு அல்லது உலகம் என்பது இடத்தைக் குறிக்கும் பெயராய்ப் பொதுவகையால் மண்ணுலகம், விண்ணுலகம் முதலிய எல்லா உலகங்களையும் உணர்த்தும் ஒரு சொல். என்றாலும், சிறப்பு வகையால் இச்சொல் நில உலகத்தையும் அதன்கண் வாழும் உயிர்த் தொகுதிகளையும், குறிப்பாக நன்மக்களையும், உலகியல் நடைமுறைகளையும் தெரிவிக்கப் பயன்படும். இவ்வகைப் பொருள்களில் நிலம், ஞாலம், வையகம் என்னும் சொற்களும் வருவது உண்டு. எனினும், உலகு எனக் குறிப்பிட்டு, 'உலக வழக்கம் இது' என எடுத்துக் காட்டுதலே பெருவழக்கு.

திருவள்ளுவரின் திருக்குறள் பாடல்களிலும் நிலம், ஞாலம், வையம், உலகம் என்பன அங்கங்கே எடுத்தாளப்பட்ட போதிலும் 'உலகம்' என்பதே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருத்தல் காணலாம்.

*ஆதிபகவன் முதற்றே உலகு* (குறள் 1)
*வானின் றுலகம் வழங்கி வருதலான்* (குறள் 11)
*மாரிமாட்டு என்னாற்றும் கொல்லோ உலகு* (குறள் 211)

என்றாற்போல பல இடங்களில் உலகு என்பது உலகத்து வாழும் உயிர்த்தொகுதிகளைப் பொதுவகையாகச் சுட்டும் முறையில் வந்துள்ளது.

*உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்*
*கூம்பலும் இல்லது அறிவு.* (குறள் 425)

*எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு*
*அவ்வ துறைவது அறிவு.* (குறள் 426)

*மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின்.* (குறள் 280)

*கெடுவாக வையாது உலகம் நடுவாக*
*நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.* (குறள் 117)

*எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு*
*கொள்ளாத கொள்ளாது உலகு.* (குறள் 470)

*எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்*
*வேண்டாரை வேண்டாது உலகு.* (குறள் 670)

*கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை*
*விடாஅர் விழையும் உலகு.* (குறள் 809)

*அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை*
*இன்மையா வையாது உலகு.* (குறள் 841)

இப் பாடல்களில் உலகம், உலகு என வள்ளுவர் காட்டும் சொற் பொருள் ஊன்றிக் கவனிக்கத்தகும். இங்கெல்லாம் உலகில் வாழும் உயர்ந்தாராகிய சான்றோர் கருத்து இதுவாகும் என்றும், அவர்கள் வழிநின்று ஒழுகுதலே அறிவுடைமையாகும் என்றும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. உரைகாரர்களும் ஆசிரியர் கருத்தறிந்து, 'உலகம் என்பது உயர்ந்தோரை' (117, 280, 425 உரை) 'உயர்ந்தோராகிய நல்லினத்தார்' (470, காளிங். உரை) என்று சுட்டிக்காட்டி விளக்கம் தருகின்றனர். உலகத்து உயர்ந்தோராகிய சான்றோரால் மதிக்கப்படும் நல்லறங்களே ஒருவன் போற்றிச் செய்யத் தக்கது என்பதும், அறவழியிலிருந்து தவறி நடப்போரை ஆன்றோர் பழிப்பர் என்பதும் எடுத்துச் சொல்லி நல்வழி நடக்க அறிவுறுத்துகிறார் ஆசிரியர் திருவள்ளுவர். ஒழுக்கத்தின் மேன்மையை வற்புறுத்தி உரைத்த வள்ளுவர் முடிந்த முடிபாக,

*உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்.* (குறள் 140)

என்று 'ஒழுக்கமுடைமை' அதிகாரத்தின் இறுதிக் குறளில் எடுத்துக் காட்டுகின்றார். எவ்வளவு கற்றவரானாலும் உலகத்தோடு பொருந்தி நடக்கத் தெரியாதவர் கல்லாதவரே என்பது கருத்தாம். இக் குறளின் உரையில் பரிமேலழகர்,

> "உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதனவொழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான் அவையுமடங்க 'உலகத்தோடு ஒட்ட' என்றும், கல்விக்குப் பயன் அறிவும் ஒழுக்கமும் ஆதலின் அவ்வொழுகுதலைக் கல்லார் பலகற்றும் அறிவிலாதார் என்றும் கூறினார்"

என்று தரும் விளக்கப் பகுதியும் படித்து இன்புறத்தக்கது. உயர்ந்தோர் பலரும் ஒழுகும் ஒழுக்கமே ‘ உலகியல் ’ என்றும் ‘உலகநடை’ என்றும் போற்றும் பெருமைக்குரியதாகும்.

*ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்.* (குறள் 214)

*ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு.* (குறள் 215)

*கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்*
*உண்மை நிலக்குப் பொறை.* (குறள் 572)

*பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்*
*தகைமைக்கண் தங்கிற்று உலகு.* (குறள் 874)

*பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்.* (குறள் 996)

*செய்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து*
*இயற்கை அறிந்து செயல்.* (குறள் 637)

இக் குறள்களில் வள்ளுவர் உலகநடை பண்புடைய ஆன்றோர் வழிப்பட்டது என்றும் அவ்வுலக நடையினை மேற்கொண்டு ஒழுகுதலே பேரறம் என்றும் எடுத்துக்காட்டுதல் காணலாம்.

*உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்*
*உள்ளத்துள் எல்லாம் உளன்.* (குறள் 294)

*உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து*
*அலகையா வைக்கப் படும்.* (குறள் 850)

இங்கெல்லாம் வள்ளுவர் ‘ உலகத்தார் ’ என்று கூறுவது உயர்ந்தோர்களையே குறிப்பதாகும்.

*உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்*
*வழக்கு வழிப்படுதல் செய்யுட்குக் கடனே.*
(தொல். பொருள். பொருளி. 21)

*வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே*
*நிகழ்ச்சி அவர்கட்கு ஆகலான.* (தொல். பொருள். மரபு 94)

இத் தொல்காப்பியச் சூத்திரங்கள் உயர்ந்தோர் கூற்றே கொள்ளத் தக்கது என்று அறிவுறுத்துகின்றன. இப் பழமையான கருத்தினை விளக்குவது போல,

*உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே*
(திவா. மக்கட்பெயர்)

என்னும் திவாகர சூத்திரம் அமைந்துள்ளது. மேலும், 'உலகம்' என்னும் சொல்லிற்கு இத்திவாகர நிகண்டு தரும் பொருளும் நாம் இங்குக் கருதத் தகும். அறிவுடையோர் பெயர்களுள் ஒன்ருக 'உலகம்' என்பதனையும் இந் நிகண்டு குறிப்பிடுகிறது.

*சான்ருேர் மிக்கோர் நல்லவர் மேலவர்*
*ஆய்ந்தோர் உயர்ந்தோர் ஆரியர் உலகு என*
*வாய்ந்த ஆன்ருேர் அறிவுடையோரே.*
*(திவா. மக்கட் பெயர்)*

இதில் தரப்பட்டுள்ள ஒன்பது பெயர்களும் அறிவுடை மாந்தராம் உலகத்து உயர்ந்த பண்பாளரைக் குறிக்க வழங்கப்படுவன வாகும். ஆகவே, வள்ளுவர் அறிவுடையார், காட்சியவர், காட்சியார், சான்ருேர் முதலிய பெயர்களால் எடுத்துக் கூறுவனவும் உலகின் மேலிட்டுக் கூறிய கருத்துகளாகவே கொள்ளத்தகும். காட்சியவர், காட்சியார் என்ருல் அறிவுடையவர் என்பது பொருளாம்.

*இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்*
*கடனறி காட்சி யவர். (குறள் 218)*

*செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணுர்*
*உயிரின் தலைப்பிரிந்த ஊன். (குறள் 258)*

*கொளப்பட்டோம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்*
*துளக்கற்ற காட்சி யவர். (குறள் 699)*

*இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்*
*நடுக்கற்ற காட்சி யவர். (குறள் 654)*

*இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற*
*புன்மையில் காட்சி யவர். (குறள் 174)*

*பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த*
*மாசறு காட்சி யவர். (குறள் 199)*

*இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி*
*மாசறு காட்சி யவர்க்கு. (குறள். 352)*

இப் பாடல்களில் அறிவுடையாரைக் குறிப்பிடும் காட்சியவர் என்பதற்கு வரும் அடைமொழித் தொடர்களால் அவர் உலகிற்கு வழிகாட்டியாய் விளங்கும் தகுதியையும் பான்மையையும் மேன்மையையும் உணரலாகும். 'கடனறி காட்சி யவர்' (218) என்பது அவர் உலகிற்கு ஆற்றி வரும் தொண்டுக் கடப்பாட்டைக் குறிப்பதாகும். 'துளக்கற்ற காட்சியவர்' (699), 'நடுக்கற்ற காட்சியவர்' (654) என்பன அவர் அச்சம் இன்றிக் கருத்துரைக்கும் பான்மையையும், 'செயிரின் தலைப்பிரிந்த காட்சியார்' (258) என்பது

அவரிடம் விருப்பு வெறுப்பு இன்றி அமைந்த நடுவு நிலைமைப் பண்பையும் உணர்த்துவனவாம். இத்தகையாரிடம் திரிபுணர்ச்சிகளோ, புலனுசைக்கு அடிமையாகும் இழி செயல்களோ, எதுவும் அணுகுவதே இல்லை. ஆதலால் இவர் 'புலம் வென்ற புன்மையில் காட்சியவர்' (174) என்று புகழப்படுகின்றனர். தவிரவும் இத் தகையாரை 'மாசறு காட்சியவர்' (199, 352) எனப் போற்றியும் வள்ளுவப் பெருந்தகை புகழ்ந்துரைக்கின்றார்.

*அரும்பய னாயும் அறிவினார் சொல்லார்*
*பெரும்பய னிலாத சொல்.* (குறள் 798)

*பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க*
*நாகரிகம் வேண்டு பவர்.* (குறள் 580)

என்பனவும் உலகிடை அறிவால் மிக்க சான்றோரின் சீர்மைகளை எடுத்துரைக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக வள்ளுவர் 'சான்றோர்' என்னும் பெயரைச் சுட்டி உரைத்த பொருள்களும் உலகின்மேலிட்டுக் கூறிய பொருள்களாகவே கொள்ளத்தக்கன. ஆன்றோர்க்குக் கூறிய அறநெறி உலகினர் அனைவர்க்கும் உரியனவாம் அன்றோ?

*கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்*
*கோடாமை சான்றோர்க் கணி.* (குறள் 115)

*சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர்க் கணி* (குறள் 118)

*பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு*
*அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு* (குறள் 148)

*நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்*
*பயனில சொல்லாமை நன்று* (குறள் 197)

*எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு.* (குறள் 299)

*நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்*
*கொன்றாகும் ஆக்கம் கடை.* (குறள் 328)

*மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு*
*இனநலம் ஏமாப் புடைத்து.* (குறள் 458)

*பழிமலைந் தெய்திய ஆக்கத்தின் சான்றோர்*
*கழிநல் குரவே தலை.* (குறள் 657)

*நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு*
*உப்பாதல் சான்றோர் கடன்.* (குறள் 802)

*குணநலம் சான்றோர் நலனே பிறநலம்*
*எந்நலத்து உள்ளதூஉம் அன்று* (குறள் 982)

*ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்*
*மாற்றாரை மாற்றும் படை.* (குறள் 985)

*அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்*
*பிணியன்றோ பீடு நடை.* (குறள் 1014)

*சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்*
*கொல்லப் பயன்படும் கீழ்.* (குறள் 1078)

இக் குறள்களில் சான்றோரை முன்னிட்டுக் கூறியனவெல்லாம் உலகம் எனப்படும் உயர்ந்தாரை முன்னிட்டுக் கூறியனவாம். இத்தகு சான்றோர் போற்றும் பண்புகளைக் கடைப்பிடித்து அவர்களால் பழிக்கப்பட்டன விலக்கப்பட்டன எல்லாவற்றையும் தவிர்த்தல் வேண்டும்.

*ஈன்றாள் பசிகாண்பா ளாயினும் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை* (குறள் 656)

என்னும் குறட்பா குற்றம் கடிந்து குணம் பயப்பனவற்றைச் செய்தலே முறைமையாம் என அறிவுறுத்துகின்றது.

இவ்வாறாக உலகத்து உயர்ந்த சான்றோரை முன்னிட்டு அறப் பொருளைக் காட்டும் மரபும் குறளகத்துப் பலவாக உள்ளமை தெரிய வரும். சான்றோர் அருளிய கொள்கைகளையும் நூல் துணிபுகளையும் எடுத்துக் கூறும் பகுதிகளும் இதனோடு சார்த்தி உணரத் தகுவனவாம்.

# 3. முரண்பாட்டால் விளக்கல்

## i. உடன்பாடு-எதிர்மறை

வள்ளுவர் பொருளுரையில் சில கருத்துகள் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் வைத்து விளக்கப்பட்டுள்ளன. சிற்சில அதிகாரங்கள்கூட இவ்வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இனியவை கூறல், அடக்கம் உடைமை, வாய்மை, கல்வி, பெரியாரைத் துணைக் கோடல் என்றாற் போல்வன உடன்பாட்டு முறையில் எடுத்துக்கூறப் பெற்றவை. அழுக்காறாமை, பயனில சொல்லாமை, வெஃகாமை, கல்லாமை, சிற்றினம் சேராமை போன்ற அதிகாரங்கள் எதிர்மறையாக அமைந்து, எடுத்துக்கொண்ட பொருளின் சாதகபாதகங்களை எடுத்துரைக்கின்றன.

கல்வி வேண்டும் என்னும் போதே கல்லாமை கூடாது என்பதும், பெரியாரைத் துணைக்கோடல் என்னும் போதே சிற்றினம் சேர்தல் ஆகாது என்பதும் பெறப்படும். என்றாலும், ஆசிரியர் தாம் எடுத்துக்கூறக் கருதிய பொருளின் நலம் தீங்குகளைக் கேட்பார் உள்ளம் கொள்ளச் செய்வதற்கு இம் முறை பயன்படுகிறது. ஒரு பாடலில் கூட இவ்வாறு ஒரே கருத்தை உடன்பாடு எதிர்மறையில் எடுத்துக்காட்டி, மேற்கொண்ட பொருளின் இன்றியமையாமை நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. 'செயற்கு அரிய செய்வார் பெரியர்' (குறள் 26) என்று வள்ளுவர் உரைக்கும் பொருளுரை கொண்டே சிறியர் செயற்கு அரிய செய்ய இயலாதவர் என்பது தெளிவுறும். எனினும், 'சிறியர் செயற்கு அரிய செய்கலாதார்' (குறள் 26) என உரைத்து, முன்னே சொன்ன கருத்தை எதிர்மறை முறையாலும் வலியுறுத்தி உரைக்கின்றார்.

> செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
> செயற்கரிய செய்கலா தார்

எனவரும் வள்ளுவர் வாக்கினுல் பெரியர் செயற்கரிய செய்வார் என்னும் கருத்துரை நன்கு தெளிவுற எதிர்மறை முகத்தானும் உரைக்கப்பட்டுள்ளமை விளக்கமாகும்.

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி (குறள் 40)

எனவரும் குறளில் செய்யத்தக்கது அறமே என்பது, பழி நீக்கத் தக்கது என எதிர்மறுத்து உரைப்பதாலும் நன்கு விளங்கும். ஆகவே, (ஒரே கருத்து உடன்பாடு - எதிர்மறை முகமாகக் கூறுதலால் வலியுறுத்தப்படும் வள்ளுவரின். பொருளுரைமுறை விளக்கமாகும்.)

இவ்வகை முறையில் மேலும் வந்துள்ள குறட்பாக்கள் பின் வருமாறு :

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (குறள் 72)

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. (குறள் 108)

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (குறள் 121)

ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். (குறள் 133)

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. (குறள் 137)

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (குறள் 138)

ஒறுத்தாரை ஒன்ருக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. (குறள் 155)

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்கு
பொன்றுந் துணையும் புகழ். (குறள் 156)

சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். (குறள் 200)

நல்லாறு எனினும் கொளல்தீது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (குறள் 222)

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். (குறள் 240)

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை; கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு. (குறள் 290)

ஆகூழால் தோன்றும் அசைவின்மை; கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி. (குறள் 371)

பேதைப் படுக்கும் இழவூழ்; அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. (குறள் 372)

அறிவுடையார் ஆவ தறிவார்; அறிவிலார்
அஃதறி கல்லா தவர். (குறள் 427)

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். (குறள் 428)

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (குறள் 430)

சிற்றினம் அஞ்சும் பெருமை; சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். (குறள் 451)

நல்லினத்தி னூங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். (குறள் 460)

செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும். (குறள் 466)

கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்; கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். (குறள் 577)

முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (குறள் 616)

மடியுளாள் மாமுகடி என்ப; மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள். (குறள் 617)

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (குறள் 664)

தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. (குறள் 672)

ஒளியார்முன் ஒள்ளிய ராதல்; வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல். (குறள் 714)

நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரும் நாடு. (குறள் 739)

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. (குறள் 752)

நிறைநீர நீரவர் கேண்மை; பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு. (குறள் 782)

மருவுக மாசற்றார் கேண்மை; ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. (குறள் 800)

இகலானும் இன்னாத எல்லாம்; நகலானும்
நன்னயம் என்னும் செருக்கு. (குறள் 860)

வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக; ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. (குறள் 861)

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. (குறள் 963)

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். (குறள் 973)

பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. (குறள் 978)

பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். (குறள் 979)

அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும். (குறள் 980)

சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். (குறள் 1078)

மேலே வந்துள்ள குறட்பாக்களில் எல்லாம் உடன்பாடு எதிர்மறைக் கருத்துகள் தனித்தனி வாக்கியங்களில் பொருந்தி வந்துள்ளமை காணலாம்.)மற்றும், ஒன்றற்கொன்று மாறுபட்ட எதிர் மொழிகளாலும் பொருள்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. முரண் பட்ட செய்திகளை உடன்வைத்துக் கூறுவது கொண்டு இரண் டனையும் ஒப்பு நோக்கி, அவற்றின் குண குற்றங்களைக் கேட்பார் நன்கு உணர்வர் என்னும் கருத்தால் ஆசிரியர் இம் முறையைப் பயன்படுத்தியுள்ளார் என்றும் கொள்ளலாம்.

மற்றும் வேறு சில குறட்பாக்களில் முரண்பட்ட கருத்துகள் தனித்தனித் தொடராகத் தெளிவுற அமையாது ஒன்றாய்ப் பிணைந்து வரும் வகையில் அமைந்துள்ளன. அவை வருமாறு :

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். (குறள் 10)

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு. (குறள் 201)

புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார். (குறள் 719)

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. (குறள் 39)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (குறள் 1033)

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. (குறள் 80)

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு. (குறள் 266)

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். (குறள் 348)

அற்றவர் என்பார் அவாவற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர். (குறள் 365)

இவற்றில் எல்லாம் கருத்துவகையான் நேர் முரண்பட்ட பொருள்கள் உடன் இணைந்து வருதல் காணலாம். ஒப்புமை காட்டிப் பொருள்களை விளக்குவது போன்றே மாறுபட்ட முரண்பாடு களைக் கொண்டும் ஆசிரியர் அறிவுறுத்தக் கருதிய பொருள்கள் விளக்கப்பட்டுள்ளமை மேலே வந்துள்ள பாடல்களால் தெரியவரும்.

## ii. கொள்ளத்தக்கன—தள்ளத்தக்கன

அறப்பொருள்களைக் கூறுமிடத்து நலம் வருவனவற்றை மட்டும் கூறாமல், அவற்றிற்கு எதிரிடையான தீமை தரும் சூழ்நிலைகளையும் சுட்டிக்காட்டி அவற்றைத் தவிர்க எனவும் பணித்துள்ளார் திருவள்ளுவர். அவர் இங்ஙனம் காட்டிய இடங்களுள் 'நன்று' என்று குறிக்கப் பெறுவன எல்லாராலும் போற்றி ஒழுகத் தக்கன என்பதும், 'தீது' என்பன எல்லாம் விலக்கத்தக்கன என்பதும் ஆசிரியர் தம் உளக்குறிப்பாகும். தீமையினால் விளையும் கொடுமை களுக்கு அஞ்சி அவற்றைச் செய்யாது, அவ்வத் தீமைப் பகுதி களிலிருந்து விலகிச் செல்லுதலும் பேரறமே.

ஈதலறம் இல்லறத்தாரால் பெரிதும் பேணத்தக்கது; இதற்கு மாறாகப் பிறரிடம் இரந்து அவர்தரும் பொருளைப் பெறுதல் விரும்பத் தகாதது என்னும் கருத்தை எடுத்துரைக்கப் புகுகின்றார் திருவள்ளுவர்:

நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (குறள் 222)

எனவரும் இக் குறளில், 'ஈதலே நன்று ; ஏற்றல் தீது' என அவர் எடுத்துக்காட்டுவது கேட்பார் உளங்களைக் கவர்வதாய் உள்ளது.

*ஈயென இரத்தல் இழிந்தன்று ; அதனெதிர்*
*ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று ;*
*கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று ; அதனெதிர்*
*கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று*
*(புறநா. 204 : 1-4)*

எனவரும் புறநானூற்றடிகளில் இக் கருத்துப் பொதிந்துள்ளமை ஒப்பு நோக்கிக் காணத்தகும்.

இதனைக் கேட்ட அளவில் ஈதலின்மேல் விருப்பமும் ஏற்றலின் மேல் வெறுப்பும் கேட்பார்க்கு உளதாகும். இங்ஙனமாக, 'நன்று' என்றும் 'தீது' என்றும் பொருள்களை வள்ளுவர் எடுத்துக்காட்டும் முறையைக் குறள் நூலகத்து வேறு பல இடங்களிலும் காணலாம். இவ்விரண்டனுள்ளும் முதற்கண் 'நன்று' (அறம்) என வள்ளுவர் போற்றிக் கூறிய செய்திகளைக் கவனிப்போம்.

*அகனமர்ந்து ஈதலின் **நன்றே** முகனமர்ந்து*
*இன்சொல னாகப் பெறின். (குறள் 92)*

*தகுதிஎன ஒன்று **நன்றே** பகுதியான்*
*பாற்பட்டு ஒழுகப் பெறின். (குறள் 111)*

*ஒல்லும்வாய் எல்லாம் வினை**நன்றே** ஒல்லாக்கால்*
*செல்லும்வாய் நோக்கிச் செயல். (குறள் 673)*

*நன்றென்ற வற்றுள்ளும் **நன்றே** முதுவருள்*
*முந்து கிளவாச் செறிவு. (குறள் 715)*

*ஏரினும் **நன்றால்** எருவிடுதல் கட்டபின்*
*நீரினும் **நன்றதன்** காப்பு. (குறள் 1038)*

இப் பாடல்களில் எல்லாம் 'நன்று' என்பது முதலடியின் இடையே நின்று கருத்து நிறைவினைக் காட்டி அமைந்துள்ளது. 'ஏரினும் நன்றால்' எனத் தொடங்கும் இறுதிப் பாட்டில் முதலடியில் மட்டுமேயன்றி இரண்டாம் அடியின் இடையிலும் முடிவுச் சொல்லாய் வந்துள்ளது.

இங்ஙனமின்றி, 'நன்று' என்பதனைப் பாடலில் இறுதிச் சொல்லாகவே கொண்டு முடியும் பாடல்களோ பல. (இவையெல்லாம் பொருளின் சிறப்பை உயர்த்திக் காட்டும் வகையில் மிகுந்த ஆற்றலுடன் காணப்படுகின்றன.)

அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை **நன்று.** (குறள் 150)

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை **நன்று.** (குறள் 157)

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை **நன்று.** (குறள் 259)

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் **நன்று.** (குறள் 967)

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை **நன்று.** (குறள் 297)

நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில செய்யாமை **நன்று.** (குறள் 197)

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை **நன்று.** (குறள் 236)

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை **நன்று.** (குறள் 655)

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை **நன்று.** (குறள் 323)

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறுத்தல் அதனினும் **நன்று.** (குறள் 152)

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை **நன்று.** (குறள் 815)

(எவ்வெவற்றைச் செய்தால் நன்மை பயக்கும் என்பது மேற்காட்டப்பெற்ற குறள்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வாறாகவே இதற்கு மாறான பயனை விளைவிக்கும் தீங்கு தருவனவற்றைத் ‘தீது’ எனத் தம் பாடல்களில் வள்ளுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.)

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை. (குறள் 182)

நல்லா றெனினும் கொளல்**தீது** மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (குறள் 222)

உள்ளத்தால் உள்ளலும் **தீதே** பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். (குறள் 282)

செல்லா இடத்துச் சினம்**தீது** செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற. (குறள் 302)

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை. (குறள் 295)

நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. (குறள் 325)

கடனறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை. (குறள் 687)

இப் பாடல்களில் எல்லாம் இப்படிப்பட்ட செயலுடையான் தலைவனாக மதிக்கப்படுவான் என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை காணலாம்.

'தலை' என்பது எல்லாவற்றிற்கும் மேலாக விளங்கும் நற்குண நற்செய்கையுடையாரைச் சுட்டிக்காட்டியது போலவே 'கடை' என்பது ஒதுக்கித் தள்ளப்படும் இழிநிலையுடையாரைக் குறிப்பதாகும்.

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. (குறள் 328)

நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை. (குறள் 998)

கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லார் அவையஞ்சு வார். (குறள் 729)

இங்கே முதலிரு பாடல்களிலும் 'கடை' என்பது ஈற்றுச் சொல்லாய் நின்று பொருளின் இழிவை வற்புறுத்திக் கூறுகிறது. இறுதிப் பாடலிலோ பெரியார்மேல் ஏற்றிக் 'கடை என்ப' என்று குறிப்பிடுகின்றார். இப் பாட்டு 'அறிவினுள் எல்லாம் தலை என்ப' என்னும் குறட்பாவின் (203) அமைப்பை ஒத்துள்ளது.

ஒருசில செய்யுள்களில் ஆசிரியர் தாம் எடுத்துக்கூறும் பொருளால் வரும் பயன் இனிமையானதா, கொடியதா, அல்லது துன்பம் தருவதா என்றும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். (குறள் 64)

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். (குறள் 66)

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை. (குறள் 230)

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல். (குறள் 839)

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொல்
தாமரைக் கண்ணான் உலகு. (குறள் 1103)

வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. (குறள் 1108)

இப்பாடல்களில் எல்லாம் 'இனிது' என்பது பாடலின் இடை நின்று, பொருள் முடிக்கும் சொல்லாய், அவ்வப் பொருளின் இனிமைப் பண்பினை எடுத்துக் காட்டுகின்றது. வேறுபல பாடல்களில் 'இனிது' என்பது பாடலின் இறுதிச் சொல்லாயும் பொருள் முடிக்கும் சொல்லாயும் அமைந்து பொருளைச் சிறப்பித்து உரைக்கின்றது. இவ்வகையில் அமைந்த பாடல்கள் பின்வருமாறு :

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (குறள் 68)

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. (குறள் 181)

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது. (குறள் 811)

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது. (குறள் 865)

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. (குறள் 1145)

ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது. (குறள் 1196)

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது. (குறள் 1201)

நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது. (குறள் 1215)

பாட்டின் இடையில் நின்று 'இனிது' என்பது பொருள் முடிபு காட்டிச் சிறப்பித்து வரும் பாடல்களினும் இறுதியில் நின்று சிறப்பித்து வரும் பாடல்கள் மிக்குள்ளன.

நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. (குறள் 1309)

உணலினும் உண்டது அறல் இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது. (குறள் 1326)

இப் பாடல்களில் 'இனிது' என்பது பாட்டின் இடையிலும் இறுதியிலும் நின்று, உவமை — பொருள் என்னும் இரண்டின் இனிமையையும் எடுத்துக் கூறுகின்றது. 'இனிது' என்பது காமத்துப்பால் பாடல்களில் மிகுதியும் பயின்று வருவது இன்பத்தின் அளவினை மேலும் மிகுத்துக்காட்டுவதாயுள்ளது என்னலாம்.

'இனிது' என்று இன்பத்தின் எல்லையைத் தொட்டுக் காட்டிய ஆசிரியர், 'இன்னது' எனத் துன்பத்தின் எல்லையையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

*இன்னது இரக்கப் படுதல் இரந்தவர்*
*இன்முகங் காணும் அளவு.* (குறள் 224)

*இன்னது இனனில்ஊர் வாழ்தல் அதனினும்*
*இன்னது இனியார்ப் பிரிவு.* (குறள் 1158)

*இரத்தலின் இன்னது மன்ற நிரப்பிய*
*தாமே தமியர் உணல்.* (குறள் 229)

*நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னதே*
*கல்லார்கண் பட்ட திரு.* (குறள் 408)

*இன்மையின் இன்னது உடைமை முறைசெய்யா*
*மன்னவன் கோற்கீழ்ப் படின்.* (குறள் 558)

*கனவினும் இன்னது மன்னோ வினைவேறு*
*சொல்வேறு பட்டார் தொடர்பு.* (குறள் 819)

*ஈன்றாள் முகத்தேயும் இன்னதால் என்மற்றுச்*
*சான்றோர் முகத்துக் களி.* (குறள் 923)

*நகையுள்ளும் இன்னது இகழ்ச்சி பகையுள்ளும்*
*பண்புள பாடறிவார் மாட்டு.* (குறள் 995)

*ஒருதலையான் இன்னது காமம்காப் போல*
*இருதலை யானும் இனிது.* (குறள் 1196)

இங்குக் காட்டிய பாடல்களுள் முதல் இரண்டு பாடல்களில் 'இன்னது' என்பது தொடக்கமாக அமைந்தாலும், அது முடிபுச் சொல்லாக உள்ளமை நோக்கத் தகும். இரண்டாவது பாட்டில் இடையிலும் இச் சொல் பொருள் முடிபுச் சொல்லாய் வருகிறது. இடையில் வந்து முடிக்கும் சொல்லாகவே 'இன்னது' என்பது குறட்பாடல்களில் மிகுதியும் இடம் பெற்றுள்ளது என்பது முன்னர்க் காட்டிய உதாரணங்களால் புலனாகும்.

இன்னது என்பது வினைமுடிபுச் சொல்லாய் வந்ததேயன்றி வினையாலணையும் பெயராகவும் ஈரிடங்களில் காணப்படுகின்றன.

*சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்*
*ஈதல் இயையாக் கடை.* (குறள் 230)

*இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்*
*இன்மையே இன்னா தது.* (குறள் 1041)

இப் பாடல்களில் 'இன்னாது' என்பது முறையே 'இல்லை' என்னும் குறிப்பு வினை முற்றையும், 'யாது' என்னும் வினாச் சொல்லையும் முடிவாகப் பெற்று எழுவாய்த் தொடராக அமைந்து வருகின்றமை தெரியவரும்.

இங்ஙனமே இன்னது செய்தல் அழகிது, சிறந்தது என்னும் பொருளில் 'அணி' என எடுத்துக் காட்டுதலும், இவையிவை துணையாகப் பயன்படுவன என்று கூறுதலும் சிற்சில இடங்களில் உள்ளன. மேலும் இன்னின்னவை தூய்மையானவை என்றும், இல்லறம் செய்தல் கடனும் எடுத்துக்காட்டுதலும் ஒருசில இடங்களில் உள.

*பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
*அணியல்ல மற்றுப் பிற.* (குறள் 95)

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி (குறள் 115)

*சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்*
கோடாமை சான்றோர்க்கு அணி. (குறள் 118)

*கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்*
*மாறாநீர் வையக்கு அணி.* (குறள் 701)

*பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்*
*அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.* (குறள் 738)

*அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அ·தின்றேல்*
*பிணிஅன்றோ பீடு நடை.* (குறள் 1014)

இவையெல்லாம் ஒருவனுக்கோ, ஒரு பொருளுக்கோ, அணி யாவது எதுஎது என்று எடுத்துக்காட்டப் பெற்ற பகுதிகளாம்.

*அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது*
*பொன்றுங்கால் பொன்றாத் துணை.* (குறள் 36)

*இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றின் நின்ற துணை.* (குறள் 41)

*துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை.* (குறள் 42)

*மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.* (குறள் 51)

*அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்*
*மறத்திற்கும் அஃதே துணை.* (குறள் 76)

*பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்*
*தேரினும் அஃதே துணை.* (குறள் 132)

துணையாக நின்று உதவும் பொருள்களை இங்குக் காட்டிய குறள்களால் உணரலாகும்.

*துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்*
*இன்னாச்சொல் நோற்கிற் பவர்.* (குறள் 159)

*புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை*
*வாய்மையால் காணப் படும்.* (குறள் 298)

இவை தூய்மையான செயல் எது; அகம்புறத் தூய்மைகள் எவ்வாறு உண்டாகின்றன என்று எடுத்துக்காட்டுகின்றன.

*அறிகொன்று அறியான் எனினும் உறுதி*
*உழையிருந்தான் கூறல் கடன்.* (குறள் 638)

*நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு*
*உப்பாதல் சான்றோர் கடன்.* (குறள் 802)

இவை அமைச்சரும் சான்றோரும் தங்கள் தங்கள் கடமையாகக் கொண்டொழுக வேண்டும் அறங்களை எடுத்து மொழிகின்றன. இவ்வாறாக ஏற்ற பல சொற்கள், தொடர்களினால் செய்வன—தவிர்வன எடுத்துக்காட்டுதலும் நூலுள் காணும் ஒரு மரபாகும்.

## iii. செய்வதும் செய்யாமையும்

பொருள் உணர்த்துமிடத்து ஆங்காங்கே ஒருசில இயல்புடையாரைச் சுட்டிக்காட்டி இவர்இவர் இன்னின்ன செய்வர் என்று கூறும் மரபு வள்ளுவரிடம் காணப்படுகிறது. இது போலவே, இத்தகையர் இவைஇவை செய்யார் என்றும் எடுத்துக் காட்டியுள்ளார். அதோடு இவர்இவர் இத்தகைய இயல்புடையார் என்று கூறுதலும் உண்டு.

உதாரணமாக, நீத்தார் பெருமையில் வரும் பெரியர், சிறியர் ஆகியோர் இத்தகைய ஆற்றலுடையார் என எடுத்துக் கூறும் பாடலைக் காண்போம் :

*செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்.* (குறள் 26)

இப் பாடலில் பெரியர் சிறியர் என்போரின் ஆற்றலின் அளவு வரையறுத்துக் கூறப்பட்டிருக்கிறது. பெரியர் இயல்பு அரிய செய்தலும், சிறியர் இயல்பு அதற்கு நேர்மாறாக அரிய செய்யாமையும், அதாவது எளிய செய்தலும் ஆம். இங்கே பெரியர்—சிறியர் எனவும், அரிய செய்தல்—அரிய செய்யாமை எனவும் முரண்பாட்டுச் சொற்கள் வருதலும் கவனிக்கத்தகும்.

*ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய*
*வழுக்கியும் வாயாற் சொலல்* (குறள் 139)

என்னுமிடத்து ஒழுக்க சீலர்கள் மறந்தும் தீய சொற்களைத் தம் வாயால் சொல்லமாட்டார்கள் என்பதனால் ஒழுக்கமுடையார் செய்யாது விலக்கும் தீமை உணர்த்தப்படுதல் காணலாம்.

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு* (குறள் 72)

என்னும் இக் குறளில் அன்புடையார் அன்பிலார் இயல்புகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறாகச் செய்வதும் தவிர்வதும் உரைத்துப் பொருளுரை கேட்பாரை அவ்வாறு நடக்கத் தூண்டுகின்ற போக்கையும் குறள் நூலுள் அங்கங்கே காணலாம்.

முதற்கண், இவ்வியல்புடையார் இன்னின்ன செய்யும் பண்புடையார் என எடுத்துக்காட்டும் குறட்பாக்களைப் பார்ப்போம்.

*அகடாரார் அல்லல் உழப்பர் சூதுஎன்னும்*
*முகடியால் மூடப்பட் டார்.* (குறள் 936)

*பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
*அருமை யுடைய செயல்.* (குறள் 975)

*இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு*
*இடும்பை படாஅ தவர்.* (குறள் 623)

*ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழாது உஞற்று பவர்.* (குறள் 620)

*மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
*உயிர்நீப்பர் மானம் வரின்.* (குறள் 969)

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர். (குறள் 1017)

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். (குறள் 487)

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார். (குறள் 921)

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. (குறள் 337)

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். (குறள் 399)

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். (குறள் 649)

காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர். (குறள் 485)

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். (குறள் 187)

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். (குறள் 433)

புகழ்பட வாழாதார் தந்நோவர் தம்மை
இகழ்வாரை நோவது எவன். (குறள் 237)

தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு. (குறள் 266)

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. (குறள் 356)

நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள். (குறள் 917)

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். (குறள் 580)

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். (குறள் 88)

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர். (குறள் 640)

இதுவரை உரைத்தவை இன்னார் இது செய்வர் என்றும், இத்தகையார் இவ்வியல்பினர் என்றும் கூறிப் பொருளுணர்த்துவன. இனி வருவன செய்யாது விலக்குவனவும், அவற்றை விலக்கி ஒழுகுவார் யார் யார் என்பதும் அறிவுறுத்தும் குறள்களாம் :

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு. (குறள் 201)

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். (குறள் 807)

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். (குறள் 952)

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன். (குறள் 258)

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். (குறள் 463)

இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர். (குறள் 218)

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். (குறள் 954)

இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல். (குறள் 627)

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார். (குறள் 956)

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். (குறள் 172)

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். (குறள் 173)

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். (குறள் 174)

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். (குறள் 165)

கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். (குறள் 699)

சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். (குறள் 962)

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல். (குறள் 198)

பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர். (குறள் 199)

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. (குறள் 806)

தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர். (குறள் 464)

பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். (குறள் 914)

பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர் (குறள் 915)

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். (குறள் 916)

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர். (குறள் 908)

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார். (குறள் 989)

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர். (குறள் 417)

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். (குறள் 721)

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல். (குறள் 526)

இவையெல்லாம் செய்யாது நீக்கத்தக்கனவற்றைச் சுட்டிக் கூறுகின்றன. நல்லறிவு படைத்தோர், சான்றோர் வெறுத்து ஒதுக்கும் தீமைகளைப் புரியார் என்பதும் இப் பகுதியால் விளங்குகிறது.

இந்நிலையுடையார் இவ்வகையாக உலகினரால் மதிப்பிடப் பெறுவர் என்று எடுத்துக்காட்டும் குறள்களும் உள:

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. (குறள் 752)

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு. (குறள் 107)

விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின். (குறள் 804)

இவற்றையும் மக்களின் இயல்புகளைச் சுட்டிச் செய்வன—தவிர்வன உரைக்கும் இப் பகுதியுடன் சேர்த்துக் காண்பது இயைபுடைத்தாம்.

# 4. விதிக்கும் முறை

## (அ) உளப்பாட்டுத் தன்மை

பொதுவாக உலகத்தாரை நோக்கியும் ஆன்றோரை முன்னிட்டும் படர்க்கையாகப் பற்பல கருத்துகளையும் உலக உண்மைகளையும் ஆசிரியர் திருவள்ளுவர் எடுத்துக்கூறும் இடங்களே குறளகத்து மிகுதியாக உள்ளன. என்றாலும், பொருளின் மேன்மை நன்கு உள்ளத்தில் பதியும் வகையில் தம்மை உளப்படுத்தித் தமது சொந்த அனுபவமாக ஆசிரியர் உரைத்துள்ள இடங்களும் சில உள. உளப்பாட்டுத் தன்மையாக வள்ளுவர் வகுத்துரைத்த இடங்களை முதலில் நோக்குவோம். தாம் ஆராய்ந்து கண்ட முடிவு இது எனக் கூறும்போது கவிஞரின் தனித்தன்மை வெளிப்படுகிறது.

இரப்பவர்களை நோக்கி, "நீங்கள் கரப்பவர்களிடம் சென்று இரவாதீர்கள் என்று உங்களை இரப்பேன்" என்கிறார் திருவள்ளுவர்.

*இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்*
*கரப்பார் இரவன்மின் என்று.* (குறள் 1067)

இங்கே ஆசிரியர் தம் கூற்றாக 'இரப்பன்' என்னும் தன்மை ஒருமைச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

இங்ஙனமே, 'யாம்' என்னும் தன்மைப் பன்மைச் சொல்லைப் பயன்படுத்தியும் ஒருசில கருத்துகளை வள்ளுவர் வெளியிட்டுள்ளார்:

*பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த*
*மக்கட்பே றல்ல பிற.* (குறள் 61)

*யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்*
*வாய்மையின் நல்ல பிற.* (குறள் 300)

*மக்களே போல்வர் கயவர் அவரன்ன*
*ஒப்பாரி யாம்கண்ட தில்.* (குறள் 1071)

மேலே குறித்த பொருள்கள் எல்லாம் ஆசிரியர், 'யாம் அறிவது,' 'யாம் கண்டது' எனத் தமது சொந்த அனுபவத்தை

எடுத்து மொழிவதாக உள்ளன. இங்ஙனமாக, ஆசிரியர் தாம் சொல்லும் பொருளோடு தம்மையும் உளப்படுத்திக் கூறுவது பொருளுரை கேட்பாரை விரும்பி ஏற்றுக் கொள்ளச் செய்யும் ஓர் உபாயமாம்.

### (ஆ) வியங்கோள்

'இன்னது செய்' என்றும், 'இன்னது செய்யாதே' என்றும் பணித்து அறமுரைத்தல் கேட்பாரை நோக்கிக் கட்டளையிடுவது போலாகும். மேலும், முன்னிலைச் சொல் தம் முன்னுள்ளாரை நோக்கிக் கூறியதாக மட்டுமே அமையும். ஏவலை உள்ளடக்கிய வியங்கோள் முறையோ கேட்பாரை வேண்டிக் கொள்வது போல அமைவதோடு இருதிணை ஐம்பால் மூவிடத்தாரையும் நோக்கி அறிவுறுத்துவதாகவும் அமைகிறது. கேட்பாரும் வியங்கோள் மொழிகளைக் கட்டளை எனக் கருதாது தமக்கு ஆசிரியர் விடுக்கும் வேண்டுகோளாகவே மதித்துப் போற்றுவர். ஏவல்போலாது வியங்கோள் பரந்துபட்டு எல்லா இடங்களில் உள்ளாரையும் தழுவி அமைவதால் இவை இரண்டையும் தனித்தனிப் பெயர்களாக வழங்குவது மரபாக உள்ளது.[1]

தொல்காப்பியர் காலத்தில் வியங்கோள் படர்க்கை இடத்தாரை நோக்கி உரைப்பதாகவே இருந்துவந்தது. எனவே, அவர் தன்மை முன்னிலை இடங்களில் இவ்வியங்கோள் வருதல் இல்லை என்று விதி கூறுகிறார் :

*அவற்றுள்*
*முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு*
*மன்னா தாகும் வியங்கோட் கிளவி* (தொல். சொல். 226)

என்பது தொல்காப்பியரின் விதிச் சூத்திரம். ஆனால், காலப் போக்கில் மொழியின் வளர்ச்சி நிலையில் முன்னிலை தன்மை இடங்களிலும் வியங்கோள் வழங்கத் தலைப்பட்டது. ஆகவே, பின்னூலாராகிய பவணந்தி முனிவர்,

*கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்*
*இயலும் இடம்பால் எங்கும் என்ப.* (நன். 338)

என எல்லா இடங்களிலும் எல்லாப் பாடல்களிலும் வரும் என்று கூறியதோடு, இவ்வியங்கோட் சொற்களுக்குரிய ஈறுகளையும் வரையறுத்துள்ளார். 'க,' 'ய,' என்னும் இரண்டு உயிர்மெய்யும்,

'ர்' என்னும் ஒற்றும் வியங்கோள் ஈறுகளாம் என்கிறார். வாழ்க, வாழிய, வாழியர் என்றாற்போல வரும் என்பது இவர் கூற்றால் விளங்குகின்றது. தொல்காப்பியர் வியங்கோள்பற்றித் தம் கால இயல்பு நோக்கி விதி கூறிய போதிலும் அவற்றின் ஈறுகளை அவர் விளக்கினாரில்லை. தொல்காப்பியர் அகர வீற்றுச் சொற்களின் புணரியல் கூறவந்த விடத்து,

*ஏவல் கண்ணிய வியங்கோள் கிளவியும்*
(தொல். எழுத்து. உயிர்மயங்கு. 8)

என்பதனால் பொதுவாக வியங்கோள் அகர வீற்றவாய் வரும் என்று உடன்பட்டு உடம்படு புணர்த்தலாக உணர்த்தினாராவார். நன்னூலார் காட்டும் 'க,' 'ய,' இரண்டும் தொல்காப்பியர் கூறிய அகர வீறு ஆம். 'ர்', ஒற்றும் வரும் என்பது பின்னூலார் காட்டிய புதுமை.

காலப்போக்கில் க, ய, ர் என்பனவேயன்றி அல், இ என்பனவும் வியங்கோள் ஈறுகளாக வந்துள்ளன.

*பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்*
*மக்கட் பதடி எனல்* (குறள் 196)

என்னும் இக் குறளில் 'அல்' விகுதி வியங்கோள் முன்னர் எதிர் மறையிலும், பின்னர் உடன்பாட்டினும் வந்தது என்று விளக்குகிறார் பரிமேலழகர்.

*செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்*
(தொல். சொல். 13)

*சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்*
(தொல். சொல். 463)

*மறைக்குங் காலை மரீஇயது ஒராஅல்*
(தொல். சொல். 443)

எனவரும் தொல்காப்பியச் சூத்திரங்களைக் காட்டி, 'அல்' ஈறு தொல்காப்பியர்க்கும் உடம்பாடு என்பது அவர் மேற்காட்டிய சூத்திரங்களில் உடம்பொடு புணர்த்தலாகப் பயன்படுத்தியிருப்பதால் தெரியவரும் எனச் சேனாவரையர் விளக்கியுள்ளார் (தொல். சொல். 226 உரை). 'போற்றி' என்பது தேவாரத் திருமுறைகளிலும் திருவாசகம் முதலியவற்றிலும் வருவதனால் இதில் வரும் 'இகர வீறும்' வியங்கோள் பொருளதாம் என்பது தெரியவரும்.[2]

திருவள்ளுவர் தமது நூலுள் பல கருத்துகளை வியங்கோளாக உரைத்துச் செல்லுகின்றார். அங்கெல்லாம் அவர் 'க', 'அல்'

என்னும் இரண்டினையும் ஈறுகப் பெற்றுவரும் வியங்கோள்-சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். 'பயனில் சொல் பாராட்டுவானை' என்னும் குறளில் (196) 'அல்' ஈறுக வரும் 'எனல்' என்பது உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் பயன்பட்டு வருதல் முன்னர்க் காட்டப்பெற்றது. "மகன் என்று சொல்லற்க, மக்களுட் பதர் என்று சொல்லுக" என்பது ஆசிரியரின் கட்டளை. இந்த ஓர் இடத்தில்மட்டுமே 'அல்' ஈறு எதிர்மறையாகக் குறளில் பயன்பட்டு வந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

இங்கே ஒரு பாடலினுள் அல் ஈற்று வியங்கோளை உடன் பாடாகவும் எதிர்மறையாகவும் பொருள் தரத்தக்கவண்ணம் அமைத்தது போலவே வேறு சில பாடல்களில் ககரவீறு, இருவகைப் பொருளிலும் வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

*சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்.* (குறள் 200)

*மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்*
*ஒருவுக ஒப்பிலார் நட்பு.* (குறள் 800)

*வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா*
*மெலியார்மேல் மேக பகை.* (குறள் 861)

*தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்*
*தேறுக தேறும் பொருள்.* (குறள் 509)

*வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக*
*கேள்போல் பகைவர் தொடர்பு.* (குறள் 882)

*உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்*
*எண்ணப் படவேண்டா தார்.* (குறள் 922)

இப் பாடல்களில் எல்லாம் செய்வதும் தவிர்வதும் கூறும் வகையில் வியங்கோள்-சொற்களை ஆசிரியர் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் ஆண்டுள்ளமை நோக்கி மகிழத்தகும். உடன் பாட்டு வாய்பாட்டாலோ, அன்றி எதிர்மறை வாய்பாட்டாலோ ஒன்றை உணர்த்த மற்றொன்று புலப்படுமாயினும் உரைக்கத்தக்க பொருளை நன்கு கேட்பார் உளம் கொளும் வகை நேர் எதிரான தன்மைகளையும் உடன்கூட்டிக் கூறினர் என்று கொள்ளலாம்.

இவ்வாறன்றி ஒரு பொருள் பற்றி வெவ்வேறான கருத்துகளை உடன் உணர்த்துமிடத்தும் அவற்றை வியங்கோளால் உரைத்து, ஒரு பாடலில் இரண்டு வியங்கோள் வருமாறு அமைக்கிறார்.

*மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க*
*துன்பத்துள் துப்பாயார் நட்பு.* (குறள் 106)

*வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க*
*நன்றி பயவா வினை.* (குறள் 439)

*தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்*
*இடங்கண்ட பின்அல் லது.* (குறள் 491)

*உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க*
*அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.* (குறள் 798)

*நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க*
*மென்மை பகைவ ரகத்து.* (குறள் 877)

ஒரு குறளில் இரு வியங்கோள் வரும் வகையில் இரு கருத்துகளை உணர்த்துதலும், ஒரே கருத்தை உடன்பாடு எதிர்மறை வகையால் உணர்த்துதலும் மேலே பார்த்தோம். இவை தவிர வேறு பல பாடல்களிலும் ஆசிரியர் திருவள்ளுவர் வியங்கோள்களை ஆற்றலுடன் பயன்படுத்தியுள்ளார். இவற்றுள் வியங்கோள்-சொற்களைப் பாடல் முதலிலோ இடையிலோ அமைத்துக் குறித்த கருத்துக் கேட்டோர் உளம் கொளும் வகையில் ஆசிரியர் கூறுகிறார். இவற்றுள்ளும் பாடல் முதலிலேயே கட்டளையுடன் தொடங்குவது சொல்லக் கருதிய பொருளின் முதன்மையை உணர்த்துவதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, கல்வி அதிகாரத்தில் அப்பொருளைத் தொடங்கும் போதே 'கற்க' என்று வியங்கோளாகத் தொடங்கினர். 'கற்க' என்று அதன் அவசியத்தைக் கூறியபின், அடுத்து எப்படி, எவற்றைக் கற்க வேண்டும்; கற்றவன் கடமை என்ன எனத் தொடர்ந்து படிப்படியாகப் பொருளை விவரிக்கிருர்.

*கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக* (குறள் 391)

என்னும் குறள் கற்க வேண்டும் கற்ற வழியிலே நிற்க வேண்டும் என்பதனைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வகையில் அமைந்துள்ளது. இதில் 'கற்க,' 'நிற்க' என வியங்கோள்-சொற்களை அமைத்து ஆற்றலுடன் ஆசிரியர் பொருளுரை கூறும் திறம் வியக்கத்தக்கது.

பின் வரும் பாடல்கள் எல்லாம் மேலே காட்டிய பாடலைப் போன்ற அமைப்பினை உடையவை:

*காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்*
*அதனினூஉங் கில்லை உயிர்க்கு.* (குறள் 122)

*சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்.* (குறள் 200)

*செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்*
*எஃகதனிற் கூரியது இல்.* (குறள் 759)

*மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்*
*ஒருவுக ஒப்பிலார் நட்பு.* (குறள் 800)

*இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்*
*அவர்பழி தம்பழி யன்று.* (குறள் 1051)

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு.* (குறள் 350)

*தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்*
*இடங்கண்ட பின்அல் லது.* (குறள் 491)

*தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்*
*தேறுக தேறும் பொருள்.* (குறள் 509)

*உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்*
*எண்ணப் படவேண்டா தார்.* (குறள் 922)

*உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க*
*அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.* (குறள் 798)

*நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க*
*மென்மை பகைவ ரகத்து.* (குறள் 877)

*மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க*
*துன்பத்துள் துப்பாயார் நட்பு.* (குறள் 106)

*வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க*
*நன்றி பயவா வினை.* (குறள் 439)

*வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்*
*மாண்டற் கரிதாம் பயன்.* (குறள் 177)

*வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்*
*தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.* (குறள் 931)

இங்குக் காட்டிய பாடல்களுள் முதல் ஆறும் உடன்பாட்டு வகையால் பொருள்களை உணர்த்துவன. 'தொடங்கற்க' என்பது முதலாக வரும் ஒன்பது பாடல்களும் எதிர்மறை முகத்தால் தவிரத் தகுவனவற்றை எடுத்து இயம்புவன. செய்வன தவிர்வன இவை இவை எனப் பொருளுணர்த்தும் முறையில் வியங்கோளாகத் தொடங்குவது கேட்டாரைப் பிணிக்கும் பேராற்றல் உடையதோர் முறையாகும்.

திருக்குறள் நூலின்வழி ஆசிரியர் வியங்கோள்-பொருளாக உணர்த்தியுள்ள பகுதிகளைக் கூர்ந்து கவனித்தால், சில வகைக் கட்டளைகளை ஆசிரியர் பலமுறை பயன்படுத்தியுள்ளார் என்பது தெரியவரும். பொதுவாகப் பார்க்கும் போது இக்கட்டளைச் சொற்கள் உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ அமைந்து வருதல் புலனாகும். உடன்பாடாகக் கூறியவற்றுள் கற்க, கேட்க, கொள்க, காக்க, சொல்லுக, செய்க என்பவை பலமுறை வருதல் நோக்கத்தகும். இவற்றைக் கூர்ந்து நோக்கும்போது ஒருவன் மனமொழி மெய்களால் செய்யத் தகுவனவெல்லாம் உள்ளடக்கிக் கூறப்பட்டதுபோல் உள்ளமை புலனாகும். இங்ஙனமே எதிர்மறை வாய்பாட்டில் கொள்ளற்க, சொல்லற்க, செய்யற்க என்பன பலமுறை கூறப் பெற்றுள்ளமை முற்கூறியதற்குப் பொருத்தமாகவும் காணப்படுகிறது. அல்-ஈற்று வியங்கோளில் செய்வன கூறுமிடத்துக் 'கொளல்,' 'செயல்' என்பனவும், தவிர்வனவற்றை உரைக்குமிடத் தெல்லாம் 'விடல்' என்பதும் ஆசிரியரால் பலமுறை கொள்ளப்பட்டுள்ளன என்பதும் விளக்கமாகும்.

## (இ) இது செயல்வேண்டும்

'வேண்டும்' என்பது 'விரும்பும்' என்னும் பொருள் தருவது. 'வேண்டுதல்' என்பதன் எதிர்மொழி 'வேண்டாமை,' 'வேண்டுதல் வேண்டாமையிலான்' என இறைவனைக் குறித்துக் கூறுகின்றார் வள்ளுவர் (குறள் 4). ஒரு பொருள்பற்றி உரைக்கும் பொழுது இன்னது செயல் வேண்டும் எனக் கூறும் வகையில் இது அமைந்து வரும். வியங்கோளாகப் பொருள்களை எடுத்துக்கூறுவதுபோல 'இது செயல் வேண்டும்' என்னும் பொருள்படவும் கூறுதல் உண்டு.

*அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்*
*வேண்டிய எல்லாம் ஒருங்கு.* (குறள் 343)

*உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன் றன்*
*புண்ணது உணர்வார்ப் பெறின்.* (குறள் 257)

*ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை*
*ஆஅதும் என்னு மவர்.* (குறள் 653)

இக் குறள்கள் 'இது செயல் வேண்டும்' என்னும் கிளவிகளைத் தொடக்கமாகக் கொண்டவை.

பாடல்களின் இடையிலும் இவ்வகை அமைப்புப் பெற்றுவரும் குறள்கள் பலவாம். அவை வருமாறு :

*வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி*
*மிச்சில் மிசைவான் புலம்.* (குறள் 85)

*தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்*
*காமம் நிறைய வரின்.* (குறள் 1282)

*உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு*
*அச்சாணி அன்னார் உடைத்து.* (குறள் 667)

*என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு*
*நன்றி பயவா வினை.* (குறள் 652)

*கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து*
*மாணாத செய்வான் பகை.* (குறள் 867)

*குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்*
*கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.* (குறள் 794)

*எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு*
*கொள்ளாத கொள்ளாது உலகு.* (குறள் 470)

*புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது*
*இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.* (குறள் 538)

*இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை*
*வேண்டும் பிறன்கண் செயல்.* (குறள் 316)

*நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்*
*வேண்டுக யார்க்கும் பணிவு.* (குறள் 960)

*பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய*
*சுருக்கத்து வேண்டும் உயர்வு.* (குறள் 963)

*வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது*
*வேண்டாமை வேண்ட வரும்.* (குறள் 362)

*பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்*
*வேந்தர்க்கு வேண்டும் பொழுது.* (குறள் 481)

*அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்*
*வேண்டிய எல்லாம் ஒருங்கு.* (குறள் 343)

*ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவல் துணிவு.* (குறள் 21)

*இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை*
*தானேயும் சாலும் கரி.* (குறள் 1060)

இங்ஙனமாக, 'இது செயல் வேண்டும்' என்னும் முறையில் பொருள்களை எடுத்துக் கூறும் மரபும் மிகப் பழைமையானதாகும். இவ்வாறு வரும் சொல்லமைதி குறித்துத் தொல்காப்பியர் தனிப்பட எடுத்துக்காட்டி விளக்கம் தந்துள்ளார்.

*இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி*
*இருவயின் நிலையும் பொருட்டா கும்மே*
*தன்பா லானும் பிறன்பா லானும்.* (தொல். சொல். 243)

என்னும் தொல்காப்பிய விதியால் இவ்வாறு வரும் சொல்லமைதி தன்னையும் பிறனையும் உளப்படுத்திக் கூறுவனவாம். 'ஓதல் வேண்டும்' என்றால், தான் ஓதலை வேண்டும், பிறன் ஓதுதலை வேண்டும் என இருவகையாய்ப் பொருள் தரும் சொல்லமைப்பாம்.[3] வியங்கோள் முறை போன்று 'இது செயல் வேண்டும்' என மொழிதலும் வழிவழி வரும் ஓர் உலகியல் வழக்கு முறையே என்பது மனங்கொள்ளத்தகும்.

## (ஈ) ஏகாரத்தால் ஏற்படும் பொருள்நலம்

'ஏ' என்பது தான் சேர்ந்துவரும் சொற்களின் பொருளை வேறுபடுத்திக் காட்டவும் பயன்படுகிறது. இது பொருள்களைப் பிரித்துக் காட்டும் நிலையில் 'இவற்றுள் இது' என வந்து பொருளின் தெளிவையும் அதன் ஏற்றத்தையும் உணர்த்தும். தவிரவும், பிரித்துக் காட்டும் பொருள்களுள் இதுவன்று இதுவே எனத் தெளிவுபட உரைக்கும் இடங்களைத் 'தேற்றம்' என்பர். மேலும், இது வினாப் பொருள் எண்ணுப்பொருள்களிலும் வரும். சொற்களின் ஈற்றில் அசையாக வருவதோடு பாடல்களில் சொற்களின் இசையை நிரப்புவதற்கும் இது பயன்பட்டு வரும். இவற்றை முறையே அசைநிலை, இசைநிறை என வழங்குவர். உயர்வு சிறப்பு இழிவு சிறப்பாகப் பொருள்களை எடுத்துக் காட்டுதற்கும் இது பயன்படுகிறது எனப் பிற்காலத்து ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

*பிரிநிலை வினாவெண் ஈற்றசை தேற்றம்*
*இசைநிறை யெனவா றேகா ரம்மே* (நன். 422)

என நன்னூலில் பவணந்திமுனிவர் கூறுகிறார். இவற்றுள் இசை நிறை, அசைநிலையாக வருவன பாட்டின் ஓசையை நிரப்புவதற்குப் பயன்படுவதல்லது தனிப்பொருள் தருவன அல்ல. ஏனையவற்றுள் வினாப்பொருள், எண்ணுப் பொருள் தரும் நிலையில் குறளில்

வருமிடங்கள் அவ்வப் பொருள் பற்றிக் கூறியவிடத்து எடுத்துக் காட்டப்பெறும். எனவே, இங்குப் பிரிநிலை தேற்றம் என்னும் பொருள்களைத் தரும் வகையில் அமைந்த குறள்களை நோக்குவோம்.

> *அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
> *பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.* (குறள் 49)

இங்கே இல்லறம் துறவறம் என்னும் இருவகை அறங்களுள் 'அறன்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்வாழ்க்கையே என ஏகாரம் இரண்டினுள் ஒன்றைப் பிரித்துக் காட்டுகிறது. எனவே, இது பிரிநிலையாம். பரிமேலழகரும் இக்குறளின் உரையில், "ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது; இதனால் பிரிக்கப்பட்டது துறவறமாகலின் அஃது என்னும் சுட்டுப்பெயர் அதன்மேல் நின்றது" எனத் தரும் விளக்கமும் இங்குக் கவனிக்கத்தகும்.

இப் பாடலிலேயே சொல்லுவான் குறிப்பிற்கு ஏற்ற வண்ணம் தெளிவுப் பொருள் தருவதாகவும் உரைக்கலாம். அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே, பிற அன்று என்று கருத்துக் கொண்டால் இது தேற்றப் பொருள் தருவதாக ஆகும். ஆகவே, பிரிநிலை, தேற்றம் என்னும் இரண்டும் சொல்லுவான் குறிப்பிற்கு ஏற்ற வண்ணம் கொள்ளலாகும். அதனால் தேற்றப் பொருளைப் பிரிநிலைப் பொருள் போல அத்தனை சிறப்பாகவும் கூறுவதற்கில்லை.

சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் உரையில் இது பற்றி எடுத்துக்காட்டுகளுடன் தரும் விளக்கம் இங்குக் கவனித்தற்குரியது:

> *"அவனே கொண்டான் என்பது ஒரு குழுவினின்றும் ஒருவனைப் பிரித்து நிற்றலின் பிரிநிலையாம்.........அவனே கொண்டான் என்பது துணிதற் பொருள் தரின் தேற்றம். இத் தேற்றப் பொருள் பிரிநிலைக்கண்ணே உளதாதலின் இப்பொருளை வேறெடுத்துக் கூறுதல் சிறப்புடைத்தன்று என்பார் இதனைப் பொருட் சிறப்பில்லா ஈற்றசைக்கும் இசை நிறைக்கும் இடையே கூறினர்."*

இவ் விளக்கத்தால் பிரிநிலை, தேற்றம் என்பன சொல்லுவான் குறிப்பிற்குத் தக்கவாறு கொள்ளத்தகும் என்பது தெரியவரும். வள்ளுவர் பொருளுரை கூறுமிடத்து இவ்விருவகைப் பொருளும் அமையும் வகையில் ஏகாரத்தைப் பல இடங்களில் பயன்படுத்தி யுள்ளார். திருக்குறள் உரைகாரர்களுள் விளக்கவுரை எழுதிய பரிமேலழகர் சிற்சில பாடல்களில் இது பிரிநிலை, இது தேற்றம்

எனவும் சுட்டிச் செல்லுகின்றார். மேலே எடுத்துக்காட்டிய 'அறன் எனப்பட்டதே' என்னும் குறளைத் (49) தவிரப் பின்வரும் குறள்களையும் (57,222) பிரிநிலை என்று பரிமேலழகர் குறிப்பிட்டுள்ளார்.

*சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்*
*நிறைகாக்கும் காப்பே தலை.* (குறள் 57)

*நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்*
*இல்லெனினும் ஈதலே நன்று.* (குறள் 222)

இவை தவிர வேறு பல பாடல்களும் பிரிநிலைப் பொருள் தருவனவாக உள்ளன :

*அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்*
*மறத்திற்கும் அஃதே துணை.* (குறள் 76)

*தகுதி எனவொன்று நன்றே பகுதியால்*
*பாற்பட்டு ஒழுகப் பெறின்.* (குறள் 111)

*நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை*
*அன்றே ஒழிய விடல்.* (குறள் 113)

*எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்*
*செல்வர்க்கே செல்வந் தகைத்து.* (குறள் 125)

*பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்*
*தேரினும் அஃதே துணை.* (குறள் 132)

*வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்*
*குறியெதிர்ப்பை நீர துடைத்து.* (குறள் 221)

*இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய*
*தாமே தமியர் உணல்.* (குறள் 229)

*நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்*
*தேரினும் அஃதே துணை.* (குறள் 242)

*அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை*
*வஞ்சிப்ப தோரும் அவா.* (குறள் 366)

*ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும்.* (குறள் 370)

*நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்*
*உண்மை அறிவே மிகும்.* (குறள் 373)

*காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
*அன்னநீ ரார்க்கே உள.* (குறள் 527)

*ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்*
*தேர்ந்துசெய் வஃதே முறை.* (குறள் 541)

*கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்*
*உகாஅமை வல்லதே ஒற்று.* (குறள் 585)

*பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்*
*பெண்ணே பெருமை உடைத்து.* (குறள் 907)

*அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்*
*குற்றமே கூறி விடும்.* (குறள் 980)

இப் பாடல்களை எல்லாம் வை. மு. கோபாலகிருஷ்ண மாச்சாரியார் பிரிநிலை என எடுத்துக்காட்டுகின்றார். அதோடு 366, 370, 373ஆம் பாடல்களைத் தேற்றம் என்றும் காட்டுகின்றார். இப்பாடல்களுக்குரிய குறிப்புரையில் முறையே பிரிநிலை தேற்றம், தேற்றம் பிரிநிலை எனக் குறிப்பிடுவது கொண்டு இரண்டு வகைப் பொருளும் சொல்லுவான் குறிப்பினால் உணரப்படுவது என்பது தெளியலாம்.

பின்வரும் பாடல்களையும் பிரிநிலைப் பொருள் தருவதாகக் கொள்ளலாம் :

*ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்*
*இந்திரனே சாலுங் கரி.* (குறள் 25)

*சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்*
*வகைதெரிவான் கட்டே உலகு.* (குறள் 27)

*அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்*
*புறத்த புகழும் இல.* (குறள் 39)

*நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று.* (குறள் 108)

*வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய*
*வாழ்வாரே வாழா தவர்.* (குறள் 240)

*தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்*
*தன்நெஞ்சே தன்னைச் சுடும்.* (குறள் 293)

*எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு.* (குறள் 299)

*பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்றும்*
*நிலையாமை காணப் படும்.* (குறள் 349)

*உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்*
*கடையரே கல்லா தவர்.* (குறள் 395)

*அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த*
*வன்க ணதுவே படை.* (குறள் 764)

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. (குறள் 765)

மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. (குறள் 766)

சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு. (குறள் 1024)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (குறள் 1033)

இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி. (குறள் 1060)

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து. (குறள் 1102)

இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்தற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர். (குறள் 1129)

கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து. (குறள் 1173)

நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது. (குறள் 1215)

பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண். (குறள் 1283)

இனி, ஏகாரம் தேற்றப் பொருளில் வரும் குறள்களை நோக்குவோம்:

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (குறள் 1)

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி. (குறள் 40)

கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. (குறள் 418)

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (குறள் 505)

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல். (குறள் 1071)

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. (குறள் 1101)

இப் பாடல்களில் வரும் ஏகாரங்களைத் தேற்றேகாரம் என்று கூறுகிறார் பரிமேலழகர். எனவே, இவையெல்லாம் தேற்றப் பொருள் தருவது என்பது அவர் கருத்தாம்.

பரிமேலழகர் உரைக்குக் குறிப்புரை வரைந்த வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் இவற்றோடு மற்றும் சில பாடல்களைத் தேற்றப்பொருள் தருவதாகச் சுட்டியுள்ளார்:

*கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை.* (குறள் 9)

*சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்*
*வகைதெரிவான் கட்டே உலகு.* (குறள் 27)

*நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று.* (குறள் 108)

*அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே*
*புறனழீஇப் பொய்த்து நகை.* (குறள் 182)

*உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற் குரு.* (குறள் 261)

*உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்*
*கடையரே கல்லா தவர்.* (குறள் 395)

*பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்*
*நன்கு செலச்சொல்லா தார்.* (குறள் 728)

இங்ஙனமே வேறு சில பாடல்களும் அமைந்துள்ளன. அவை வருமாறு:

*தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்.* (குறள் 305)

*மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை*
*ஐயப்பாடு இல்லதே ஒற்று.* (குறள் 587)

*அருமறை சோரும் அறிவிலான் செய்யும்*
*பெருமிறை தானே தனக்கு.* (குறள் 847)

*குணநலம் சான்றோர் நலனே பிறநலம்*
*எந்நலத்து உள்ளதூஉம் அன்று.* (குறள் 982)

*சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை.* (குறள் 1031)

*இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்*
*இன்மையே இன்னா தது.* (குறள் 1041)

*அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்*
*அவாஉண்டேல் உண்டாம் சிறிது.* (குறள் 1075)

*தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்ருரே*
*காமத்துக் காழில் கனி.* (குறள் 1191)

*எனைத்தொன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்*
*நினைப்ப வருவதொன்று இல்.* (குறள் 1202)

ஏகாரம் பொருளுரைக்கு ஏற்ற வண்ணம் சிற்சில இடங்களில் பிரிநிலையாகவும் தேற்றமாகவும் வரும் நிலையில் கூறுவதும் கேட்பார்க்குத் தெளிவு ஏற்படுத்துவதற்கு உதவும். பொருள்களை வரையறுத்து, வகைப்படுத்தி, இவற்றுள் இவை இவை இத்தன்மைய என்று காட்டுதலும் பொருளுணர்த்தும் முறையில் ஒருபடியாம்.

*ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்*
*இந்திரனே சாலுங் கரி.* (குறள் 25)

*தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்.* (குறள் 305)

இப்பாடல்களில் வரும் ஏகாரம் பிரிநிலை தேற்றமாகப் பொருள் தரும் என்று கொள்வது ஒருபாலாக, உயர்வுசிறப்புக் காட்டுகிறது என்றும் எடுத்துக் காட்டுகிருர் வை. மு. கோபாலகிருஷ்ண மாச்சாரியார். இதனுல் காலப்போக்கில் ஏகாரம் பிரிநிலை தொடக்க மாகப் பல பொருள்களில் வந்து, பாடல்களின் ஓசையமைதியை நிரப்புவதோடு உரைக்கப்படும் பொருளைச் சிறப்பித்து வருவதும் விளங்கும்.

## குறிப்புகள்

1. *"ஏவல் வியங்கோள் என்பன ஒரு பொருட் கிளவியாயினும் இருதிணை ஐம்பால் மூவிடங்களினும் சொல்லும் ஏவலை வியங் கோள் என்பது தொன்னெறி மரபாம் என்க."*
(நன். 338—சங்கர நமச்சிவாயர் உரை)

2. *சிலப்பதிகாரத்தில், 'பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி' (புறஞ்சேரி — 13:92) எனப் 'போற்றி'—என்பது வணக்கம் என்னும் பொருளில் வந்துள்ளது.*

3. *"ஓதல் வேண்டும் என்றவழி வேண்டுமென்பது ஓதற்கு வினை முதலாயினுற்கும் அவனுேதலை விரும்பும் தந்தைக்கும் ஏற்றவாறு கண்டு கொள்க" என்று விளக்கம் தருகிருர்— சேனுவரையர்.*

# 5. வினவிப் பொருள் உணர்த்தல்

## (அ) வினவும் முறை

பொருள்களைக் கோவையாகக் கூறிவரும்போது, அவைபற்றிய சில கருத்துகளைக் குறித்துக் கேள்வி கேட்டு, அதன் வாயிலாகவும் ஆசிரியர் தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது உண்டு. கடவுள் வாழ்த்துக் கூறப்புகுந்த இடத்தில், ஒருவன் கல்வி கற்றதனால் உளதாய பயன் இறைவன் திருவடி தொழுதலே என்று கூறவருகிறார் வள்ளுவர். இக் கருத்தை,

*கற்றதனால் ஆயபயன் என்கொல், வாலறிவன்*
*நற்றாள் தொழாஅர் எனின்?* (குறள் 2)

என வினா வாய்பாட்டால் எதிர்மறை முகமாகக் கூறி நமக்குப் புலப்படுத்துகின்றார்.

*நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்*
*அல்லற் படுவது எவன்?* (குறள் 379)

என்பதனால் தீங்கு வருங்கால் அது கண்டு தளராது, 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றபடி அதனைத் தன்னறிவால் கீழ்ப்படுத்தி மேன்மேலும் செயலாற்றி இன்பம் எய்துதல் வேண்டும் என்னும் கருத்து வெளிப்படுகிறது. நலந்தீங்குகளை ஒரு தன்மையாகக் கொள்ளல் வேண்டும் என்னும் உணர்வை 'அன்றாங்கால் அல்லற் படுவது எவன்?' என்னும் வினாவினால் ஆசிரியர் பெறவைத்துள்ளார். இங்கே வினாவாக வந்த பகுதி 'என்கொல்,' 'எவன்' என்பனவாம்.

*'ஆ, ஏ, ஓ அம்மூன்றும் வினா'* (தொல். எழுத்து. நூல். 32)

எனத் தொல்காப்பியர் ஆ, ஏ, ஓ என்னும் மூன்று எழுத்துகளும் வினாப்பொருளுக்குப் பயன்படும் என்கிறார். என்றாலும், யா, என்பனவற்றையும் அவர் உடம்பொடு புணர்த்தலாகத் தம் நூலுள் பிற இடங்களில் வினாவாகப் பயன்படுத்தியுள்ளார். ஒருசில

இடங்களில்ல இவற்றை வினாப்பொருள் தருவன எனவும் சுட்டி யுள்ளார்.[1] சங்கப் பாடல்களிலும் இவை வினாவாக அமைந்து வந்த இடங்கள் பல. இவ்வாறாகவே, காலப்போக்கில் எ, யா என்பனவும் வினாப்பொருள் தருவதாக இலக்கண நூலார் வரையறுப் பாராயினர். மேலும், இவ்வினா எழுத்துகள் ஒரு மொழியின் முதலிலோ ஈற்றிலோ அமைந்து வருதலும் காணப்பெற்றன. இவற்றையெல்லாம் உள்ளடக்கிப் பவணந்தி முனிவர் தமது நன்னூலில், எ, யா மொழிக்கு முதலிலும், ஆ, ஓ மொழிக்கு இறுதியிலும், ஏ என்பது மொழியின் முதலிலும் கடையிலும் வினாவாக வரும் என்பதை நன்கு ஆராய்ந்து வரையறுத்துள்ளார்.

*எயா முதலும் ஆஓ ஈற்றும்*
*ஏஇரு வழியும் வினா ஆகும்மே* (நன். 67)

என்பது நன்னூல் விதி.

இவ்வைந்தனுள்ளும் 'ஆ' என்பது வினாப்பொருளாகக் குறளில் எங்கும் வரவில்லை. ஏனையவற்றுள் 'ஏ' என்பது,

*அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே,*
*செல்வத்தைத் தேய்க்கும் படை?* (குறள் 555)

என்ற பாடலில் மட்டும் வந்துள்ளது. கொடுங்கோலனின் செல்வம் அழிந்துபடும் என்பது இதன் கருத்து.

'எ' என்பதுதான் வினாப் பொருளில் மிகுதியும் (27) வந்துள்ளது. எங்ஙனம், எவன் என்பவையும், 'எவன்' என்பதன் திரிபான என், என்ன, என்னை என்பனவும்[2] வினாவாக வந்துள்ளன.

*தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்?* (குறள் 251)

*சிறைகாக்குங் காப்புஎவன் செய்யும், மகளிர்*
*நிறைகாக்கும் காப்பே தலை?* (குறள் 57)

*வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்*
*தான்அறி குற்றப் படின்?* (குறள் 272)

*பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை*
*செய்தாங்கு அமையாக் கடை?* (குறள் 803)

*உளபோல் முகத்தெவன் செய்யும், அளவினால்*
*கண்ணோட்டம் இல்லாத கண்?* (குறள் 574)

*நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்*
*அல்லற் படுவ தெவன்?* (குறள் 379)

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல், பிறப்பறுக்கல்
உற்ருர்க்கு உடம்பு மிகை? (குறள் 345)

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது? (குறள் 99)

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனே உயிர்க்கு. (குறள் 31)

இனி, 'எவன்' என்பதன் விகாரமாகிய என், என்ன, என்னை என்ருற்போன்று வரும் வினு வடிவங்களைப் பெற்ற குறள்களைக் கவனிப்போம்.

இல்லதென், இல்லவண் மாண்பானுல்? உள்ளதென்,
இல்லவள் மாணுக் கடை? (குறள் 53)

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என், காவாக்கால் என்? (குறள் 301)

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்,
சாந்துணையும் கல்லாத வாறு? (குறள் 397)

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்? (குறள் 420)

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்,
என்குற்ற மாகும் இறைக்கு? (குறள் 436)

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு, நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு? (குறள் 726)

உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்? (குறள் 812)

அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு? (குறள் 862)

ஈன்ருள் முகத்தேயும் இன்னுதால் என்மற்றுச்
சான்ருேர் முகத்துக் களி? (குறள் 923)

ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை? (குறள் 1059)

கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்? (குறள் 2)

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினுர்
என்னைகொல் ஏதிலார் மாட்டு? (குறள் 188)

இனி, 'என்' என்பது என்ன, என்னும் என்று வினு வடிவம் பெற்று வருவதும் உண்டு.

*குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்*
*என்ன பயத்தவோ கண்?* (குறள் 705)

*எனைத்துணையர் ஆயினும் என்னும் தினைத்துணையும்*
*தேரான் பிறனில் புகல்?* (குறள் 144)

*அஃகி அகன்ற அறிவென்னும், யார்மாட்டும்*
*வெஃகி வெறிய செயின்?* (குறள் 175)

*பண்என்னும் பாடற்கு இயைபின்றேல் கண்என்னும்*
*கண்ணோட்டம் இல்லாத கண்?* (குறள் 573)

*ஒலித்தக்கால் என்னும் உவரி, எலிப்பகை*
*நாகம் உயிர்ப்பக் கெடும்?* (குறள் 763)

*வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னும்*
*தகைமாண்ட தக்கார் செறின்?* (குறள் 897)

'எ' என்பது போன்றே மொழிக்கு முதலாக வந்து விஞப்பொருள் தருவது 'யா' என்னும் உயிர்மெய். இது எவை என்னும் அஃறிணைப் பன்மைப் பொருளில் 'யா' என்றும், உயர்திணைப் பன்மைப் பொருளில் 'யார்' என்றும் வந்துள்ளமை குறட்பாடல்களால் தெரியவரும்.

*பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்*
*திண்மையுண் டாகப் பெறின்?* (குறள் 54)

*ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று*
*சூழினும் தான்முந் துறும்?* (குறள் 380)

*மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்*
*யாவுள முன்னிற் பவை?* (குறள் 636)

*செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்*
*வினைக்கரிய யாவுள காப்பு?* (குறள் 781)

*கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்*
*சொல்லாடப் போஒம் உயிர்?* (குறள் 1070)

*இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே*
*கெடுக்குந் தகைமை யவர்?* (குறள் 447)

*இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே*
*பிழைத்தது ஒறுக்கிற் பவர்?* (குறள் 779)

இப்பாடல்களால் 'யா' என்பது நான்கு இடங்களிலும் 'யார்' என்பது ஈரிடங்களிலும் வந்து விஞப் பொருள் தந்தமை தெரிய வரும். 'யாது' (11 முறை), 'யாங்கு' (1 முறை), 'யார்' (1 முறை) என்னும் விஞச்சொற்கள் பயின்று வரும் குறள்களையும் சேர்த்துப்

பார்த்தால், பத்தொன்பது இடங்களில் 'யா' வினு வந்துள்ளமை தெரியவரும்.

மொழியிறுதியாக வந்து வினப்பொருள் உணர்த்தும் 'ஓ' என்பது மொழிமுதல் 'எ' வினவிற்கு அடுத்தபடியாக வைத்துச் சொல்லத்தக்க வகையில் 'யா' வினவைப் போலவே மிகுந்து வந்துள்ளது (17 முறை).

*அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ், ஆர்வலர்*
*புன்கணீர் பூசல் தரும்?* *(குறள் 71)*

*ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்*
*தீதுண்டோ மன்னும் உயிர்க்கு?* *(குறள் 190)*

*நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்*
*பகையும் உளவோ பிற?* *(குறள் 304)*

*அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்*
*தன்நோய்போல் போற்ருக் கடை?* *(குறள் 315)*

*அருவினே என்ப உளவோ கருவியான்*
*காலம் அறிந்து செயின்?* *(குறள் 483)*

*அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று*
*ஓம்புதல் தேற்ருதவர்?* *(குறள் 626)*

*முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ, உவப்பினும்*
*காயினும் தான்முந் துறும்?* *(குறள் 707)*

*மருந்தோமற்று ஊனேம்பும் வாழ்க்கை பெருந்தகைமை*
*பீடழிய வந்த இடத்து?* *(குறள் 968)*

*இன்னுசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்*
*என்ன பயத்ததோ சால்பு?* *(குறள் 987)*

*அணிஅன்ருே நாணுடைமை சான்ருேர்க்கு அஃதின்றேல்*
*பிணிஅன்ருே பீடு நடை?* *(குறள் 1014)*

*வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி*
*மிச்சில் மிசைவான் புலம்?* *(குறள் 85)*

*புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்*
*துச்சில் இருந்த உயிர்க்கு?* *(குறள் 340)*

*எச்சமென்று என்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்*
*நச்சப் படாஅ தவன்?* *(குறள் 1004)*

*இன்றும் வருவது கொல்லோ நெருநலும்*
*கொன்றது போலும் நிரப்பு?* *(குறள் 1048)*

*இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ, குடும்பத்தைக்*
*குற்றம் மறைப்பான் உடம்பு?* (குறள் 1029)

*தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ,*
*மன்னுயிர்க்கு இன்னா செயல்?* (குறள் 318)

மேலே காட்டிய பாடல்களால் 'ஓ' என்பது சொற்களின் இறுதியில் இணைந்து வினாப்பொருள் தருதல் விளக்கமாகும். ஒரு சில பாடல்களில் இது 'கொல்' என்னும் அசைநிலைச் சொல்லோடு சேர்ந்து, 'கொல்லோ' என்றும், இடைக்குறைந்து 'கொலோ' என்றும் வருதலையும் காணலாம்.

'கொல்' என்பது அசைநிலையாக வருதலோடு ஐயப்பொருள் தந்தும் நிற்கும்.

*அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ? கனங்குழை*
*மாதர்கொல் மாலும்என் நெஞ்சு* (குறள் 1081)

என இப் பாடலில், 'தெய்வ மகளோ, அன்றி ஒருமயில் விசேடமோ, அன்றி ஒரு மானுட மாதரோ ?' எனத் தலைமகளைத் தனியிடத்தில் கண்ட ஒரு தலைவன் அவளுடைய அழகினை நோக்கி, உரைப்பதாக வருகிறது. இங்கே தலைமகன் வெவ்வேறு பொருள்களாகக் கருதித் துணிவுறா நிலையில் பேசுவது அவனது ஐயத்தைப் புலப்படுத்துகிறது. இவ்விடங்களில் எல்லாம் 'கொல்' ஐயப்பொருள் தரும் நிலையில் அமைந்துள்ளது.

ஐயமுற்றுக் கூறுவான் பேச்சில் அதுவோ இதுவோ என்று வினவுகின்ற பொருளும் தொனிக்கிறது. ஆகவே, 'கொல்' என்பது ஐயப்பொருள் சுட்டவரும் இடங்களில் வினாப் பொருண்மைக்கும் ஏற்ற ஓசையமைதி உள்ளது என்பது கவனிக்கத் தக்கது.

*ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை*
*வைத்திழக்கும் வன்க ணவர்?* (குறள் 228)

*துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்*
*மற்றை யவர்கள் தவம்?* (குறள் 263)

*கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்*
*உள்ளான்கொல் உண்டதன் சோர்வு?* (குறள் 930)

*ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்*
*நன்றெய்தி வாழ்வதோர் ஆறு?* (குறள் 932)

இங்குக் காட்டப்பெற்ற பாடல்கள் நான்கிலும் 'கொல்' என்பது 'போலும்' என ஐயப்பொருள் தருவதேனும், வினு வாய்பாடாகவும் வாக்கிய அமைப்பு உள்ளமை கருதத்தகும். இப் பாடல்களுக்கு உரிய பழைய உரைகாரர்களின் உரைப் போக்கைப் பார்க்கும் பொழுதும் இக் கருத்தின் உண்மை புலனுகிறது. ஆகவே, 'கொல்' என்பதும் விஞப்பொருள் தரும் நிலேயில் வந்துள்ளது என்று கொள்ளலாம்.

இங்ஙனமாக எ, யா, ஓ, ஏ என்னும் விஞப்பொருள் தரும் எழுத்துகளேயும், 'கொல்' என்னும் இடைச் சொல்லேயும் கொண்டு விஞவை எழுப்பித் தாம் கருதிய பொருள்களே ஆசிரியர் உய்த்துணர வைத்துள்ள பான்மை மேலே காணும் பாடல்களால் தெரியவரும். ஆசிரியர் விஞ எழுப்பும் இடம் நோக்கி, அவர் கூறிச் செல்லும் பொருள் நிலேக்கு ஏற்ப, அவ்விஞக்களுக்கு உரிய விடை யாக அவர்தம் உளக்கருத்துத் தொனித்தலே நாம் உணரலாகும். கற்பாரையும் கேட்பாரையும் சிந்திக்க வைப்பதோடு ஆசிரியர்தம் உள்ளுணர்வையும் வெளிப்படுத்துகின்ற முறைமையால் இவ் விஞவிப் பொருள் உணர்த்தும் வகை ஒரு சிறப்பான அமைப்பாகும் என்று கொள்ளலாம்.

பெருங்கவிஞர்களின் காவியங்களில் வேற்றுப்பொருள் வைப்பாக எடுத்துக்கூறும் செய்திகளேப் போன்று, இவ்வாருக விஞவாய்பாட்டால் பொருள் உணர்த்தும் முறையிலும் குறிப்புப் பொருள் தோன்றுதல் காணலாம். ஆசிரியரின் உள்ளுணர்வு இன்னது என்பதையும், எதனேக் கருத்தில் கொண்டு இவ்விஞவை எழுப்புகிருர் என்பதையும் அவ் விஞக்கள் சிந்திக்கவைக்கின்றன. இவ்வாருகக் கற்பார் கேட்பார் உள்ளத்தைப் பொருளில் ஈடுபடச் செய்யும் ஓர் உபாயமாகவும் இவ் விஞவும் முறை பயன்படுகின்றது.

### *(ஆ) எகர விஞவும் அகரச் சுட்டும்*

ஏதேனும் ஒரு பொருளேக் குறித்து விஞவி, பின்னர் விஞவப் படும் பொருளேச் சுட்டுச் சொற்களால் குறிப்பிட்டு விளக்கம் தரும் மரபும் புலவர்களிடையே காணப்படுகிறது.

*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லே வாழிய நிலனே* (புறம். 187:3—4)

எனவரும் ஔவையாரின் புறப்பாட்டில் இம்முறை பயின்றுள்ளமை காணலாம்.

*மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை*
*எக்கால் வருவது என்றி*
*அக்கால் வருவர்எம் காதலோரே.* (குறுந். 277:6—8)

என்பது 277ஆம் குறுந்தொகைப் பாடற்பகுதி.

*எப்பொரு ளாயினும் அல்லது இல்லெனின்*
*அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்.*
(தொல். சொல். கிளவி. 35)

*எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்*
*அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்*
*வந்த நிலத்தின் பயத்த வாகும்.*
(தொல். பொருள். அகத். 19)

இத் தொல்காப்பியச் சூத்திரங்களிலும் எகரவினாவும் அகரச்சுட்டும் இணைத்துக் கூறப்பெறும் முறையைக் காணலாம்.

*எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்*
*செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே* (நன். 388)

என்னும் நன்னூல் சூத்திரமும் இவ்வகை முறையில் அமைந்துள்ளது.

சடகோபர் அருளிய திருவாய்மொழியின் முதல் பாசுரம் முழுமையும் இவ்வமைப்புடைய தொடர்களால் கருத்து விளக்கம் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம்.

*உயர்வற உயர்நலம் உடையவன் எவன்,அவன்*
*மயர்வற மதிநலம் அருளினன் எவன்,அவன்*
*அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன்,அவன்*
*துயரறு சுடரடி தொழுதெழல் மனனே*

என்பது சடகோபரின் திருவாய்மொழி. எகரவினா வாக்கியம் கூறப்புகும் பொருளின் தன்மையை வினாவும் முறையில் வெளிப்படுத்தி, அடுத்து வரும் சுட்டுச் சொல்லால் அதற்கு மேலும் அப் பொருளின் இயல்புகளை மிகுத்துக் கூறி விளக்கம் தருதலை இங்குக் காணலாம்.

வள்ளுவர் வாக்கிலும் ஏகதேசமாக எகரவினாவும் அகரச்சுட்டும் இணைந்துவரும் வகையில் அமைந்த பாடல்கள் காணப்படுகின்றன.

*எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு.* (குறள் 355)

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு.* (குறள் 423)

*எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு*
*அவ்வ துறைவது அறிவு.* (குறள் 426)

*எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை*
*விட்டக்கால் கேட்க மறை.* (குறள் 695)

இப் பாடல்களில் எல்லாம் எகரவினாவாகக் குறித்த பொருளை அகரச்சுட்டு மேலும் விளக்கிவரும் முறைமை கவனிக்கத்தகும். இவற்றில் எல்லாம் வினாவாக்கியம் சிந்தையைத் தூண்டி அப் பொருளை மேலும் அறியும் அவாவினை எழுப்பச் சுட்டுவாக்கியம் அப்பொருளின் உண்மைத் தன்மையைத் தெளிவிக்கின்றது.

வினாவும் சுட்டும் அடுத்தடுத்து வரும் வகையிலும் சில குறள்கள் உள்ளன :

*துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்*
*அளியின்மை வாழும் உயிர்க்கு.* (குறள் 557)

*உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன*
*மடந்தையொடு எம்மிடை நட்பு.* (குறள் 1122)

இவற்றில் எகரவினாவும் அகரச் சுட்டும் அடுத்தடுத்துவந்து பொருளின் இயல்புகளை விளக்கியமைதல் காணலாம்.

## *(இ) வினாவும் விடையும்*

பொருள்களை எடுத்துரைக்கும்போது அவைபற்றிக் கவிஞர்கள் கொண்டுள்ள சில உணர்ச்சிகளை வினா எழுப்புவதன் மூலம் உணர்த்திக் கேட்பார் சிந்தனைகளையும் தூண்டுவது ஒருவகைமுறை என்பதனை மேலே பார்த்தோம். ஆசிரியர் தம்மிடம் பொருளுரை கேட்பாரின் வினாக்களைக் கேட்டு, அதனை எல்லாரும் உணரும் வண்ணம் அவ்வினாவையும் அதற்குத் தாம் கருதும் விடையையும் ஒருசேரக் கூறுவது போலவும் சில பாடல்கள் அமைந்துள. எடுத்துக்காட்டாக,

*வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்.* (குறள் 291)

என்னும் குறளை எடுத்துக்கொள்வோம். 'வாய்மை எனப்படுவது யாது?'' என்று ஒரு தனி வினாவாகவும் இங்கே பிரிக்கலாம். இவ் வினா ஆசிரியரே எழுப்பியதாகவும் இருக்கலாம்; அல்லது ஆசிரியரிடம் பொருளுரை கேட்டாராகிய மாணாக்கர் வினவியதாகவும்

இருக்கலாம். மாணவர் வினுவை ஆசிரியர் அவ்வாறே எடுத்துக் கூறி, அதற்கு விடையிறுப்பதாகவும் இப் பாடலின் போக்கைக் கருதலாம். 'யாது எனின்' என்பதற்கு 'யாது என்று கேட்பின்' என்று பொருள் கொள்ள வேண்டும். இனி, ஆசிரியரே பொருளை முன்மொழிந்து அதற்கு விளக்கம் கூறும் வகையில் 'யாது எனின்' என்பதற்கு 'என்னவென்ருல்' என்று அமைதி கொள்ளலாம்.

எவ்வகையாக நோக்கினும், இவ்வகை அமைப்பில் ஒரு வினுவும் அதற்கு விடையான விளக்கமும் உள்ளமை விளங்கும். மற்றும், வினுவிடை முறையில் வரும் வேறு குறள்கள் வருமாறு :

*அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை*
*வேண்டும் பிறன்கைப் பொருள்.* (குறள் 178)

*அருளல்லது யாதெனின் கொல்லாமை கோறல்*
*பொருளல்லது அவ்வூன் தினல்.* (குறள் 254)

*அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்*
*பிறவினை எல்லாம் தரும்.* (குறள் 321)

*நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*கொல்லாமை சூழும் நெறி.* (குறள் 324)

*நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி*
*ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.* (குறள் 789)

*பழைமை எனப்படுவது யாதெனில் யாதும்*
*கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.* (குறள் 801)

*பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு*
*ஊதியம் போக விடல்.* (குறள் 831)

*வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை*
*உடையம்யாம் என்னும் செருக்கு.* (குறள் 844)

*சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி*
*துலையல்லார் கண்ணும் கொளல்.* (குறள் 986)

*இன்மையின் இன்னுதது யாதெனின் இன்மையின்*
*இன்மையே இன்னு தது.* (குறள் 1041)

*நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பில்*
*பிறற்குரியாள் தோள்தோயா தார்.* (குறள் 149)

*எற்றிற் குரியர் கயவரொன்று உற்றக்கால்*
*விற்றற் குரியர் விரைந்து.* (குறள் 1080)

இங்கே காட்டியவற்றுள் முதற்பத்துப் பாடல்களிலும் 'யாது' என்பதும், பின்னர், 'யார்,' 'எற்றிற்கு' என்பன ஒவ்வொரு பாடலிலும் வினாவாக வந்துள்ளன. வினாவிற்கு ஆசிரியர் விடுக்கும் விடையும் ஒவ்வொரு வினாவையும் அடுத்துவந்து, பாடலைக் கற்பார்க்கு வினாவிடை வகையில் பொருள் உணர்த்தும் குறள்களாக இவை அமைந்துள்ளன.

## குறிப்புகள்

1. *யாவென் வினாவும் ஆயியல் திரியாது.*
*(தொல். எழுத்து. உருபு. 3)*

யாவென் வினாவின் ஐயென் இறுதியும்
(தொல். எழுத்து. உருபு. 6)

*யாவினா மொழியே இயல்பு மாகும்.*
*(தொல். எழுத்து. குற்றிய. 23)*

யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும்
*அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்.*
(தொல். சொல். கிளவி. 31)

யாதுஎன வருஉம் வினாவின் கிளவி.
(தொல். சொல். கிளவி. 32)

யாஅர் என்னும் வினாவின் கிளவி.
(தொல். சொல். வினை. 13)

*யாவன் யாவள் யாவர் என்னும்*
(தொல். சொல். பெயர். 8)

*யாதுயா யாவை என்னும் பெயரும்*
(தொல் சொல். பெயர். 13)

2. "எவன் என்னும் வினாப்பெயர் என்னென்றாய் ஈண்டு இன்மை குறித்து நின்றது. 'கொல்' என்பது அசைநிலை." (குறள் 2, பரி. உரை.)

3. யாது வினாப்பொருளில் வந்த இடங்கள்: *178, 254, 291, 321, 324, 789, 801, 831, 844, 986, 1041.* யார் வினா : *149.*

## 6. எண்ணுல் பொருள் வரையறை

### *(அ) எண்ணும் முறை*

கவிஞன் ஒருவன் ஏதேனும் ஒரு பொருள் குறித்துப் பேசும் பொழுது, அதன் இயல்புகளையோ சிறப்புகளையோ, அதனுல் விளையும் நலம் தீங்குகளையோ இத்துணைய என எண் வரையறை தோன்றக் கூறும் மரபும் பண்டு தொட்டே உள்ளது. 'உம்,' 'என்று,' 'என,' 'ஒடு' முதலிய எண்ணிடைச் சொற்களைப் பயன் படுத்திப் பொருள்களை எண்ணிக் கூறுவர். சொல்லக் கருதிய பொருள்களைத் திட்டவட்டமாக வரையறுத்து உணர்த்துவதற்கு இவ்வெண்ணிடைச் சொற்கள் பெரிதும் பயன்படுகின்றன.[1] இவற்றுள் 'உம்' இடைச்சொல் எண்ணுப் பொருளில் பயன்பட்டு வருதல் பெருவழக்காம்.

திருக்குறளில் 'உம்'மை எண்ணுல் ஆசிரியர் பொருள்களை வரையறுத்துக் கூறும் பாடல்கள் பல. பெயர்ப் பொருளேயன்றி வினை நிகழ்ச்சிகளையும் எண்ணிக் கூறியுள்ளார். பின்வரும் பாடல்கள் இருபொருள்களை உம்மை எண்ணுல் சுட்டிக் கூறுகின்றன.

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்*
*பண்பும் பயனும் அது.* (குறள் 45)

*அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
*கேடும் நினைக்கப் படும்.* (குறள் 169)

*புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே*
*ஒப்புரவின் நல்ல பிற.* (குறள் 213)

*நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்*
*பகையும் உளவோ பிற.* (குறள் 304)

*சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்*
*உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.* (குறள் 499)

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (குறள் 505)

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். (குறள் 510)

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். (குறள் 511)

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும். (குறள் 525)

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். (குறள் 543)

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு. (குறள் 545)

கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. (குறள் 554)

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம். (குறள் 567)

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. (குறள் 642)

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து. (குறள் 694)

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின். (குறள் 709)

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். (குறள் 755)

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல். (குறள் 834)

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னும்
தகைமாண்ட தக்கார் செறின். (குறள் 897)

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். (குறள் 937)

இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. (குறள் 951)

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். (குறள் 1116)

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். (குறள் 1120)

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. (குறள் 1306)

இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களும் உம்மை எண்ணல் குறிக்கப்பட்டுள்ளமையை மேல்வரும் பாடல்கள் காட்டும் :

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. (குறள் 42)

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. (குறள் 431)

இவறலும் மாண்பிறந்த மானமும் மாணு
உவகையும் ஏதம் இறைக்கு. (குறள் 432)

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு. (குறள் 631)

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். (குறள் 676)

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. (குறள் 731)

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. (குறள் 734)

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். (குறள் 756)

சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை. (குறள் 769)

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர். (குறள் 813)

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல். (குறள் 909)

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். (குறள் 949)

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். (குறள் 471)

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு. (குறள் 737)

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண். (குறள் 742)

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு. (குறள் 793)

இவ்வாறு பெயர்ப் பொருள்களை எண்ணிக் கூறுவது போலவே, செயல்களையும் எண்ணுமுறையாகக் காட்டும் நிலையிலும் உள்ள சில பாடல்களை வள்ளுவர் குறளில் காணலாம். பெயரைப் போலவே வினையிலும் இரண்டு மூன்று நான்கு செயல்கள் வரை உம்மை எண்ணிட்டுக் கூறப்பெற்றிருக்கின்றன.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. (குறள் 15)

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். (குறள் 166)

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். (குறள் 264)

அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும். (குறள் 768)

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. (குறள் 941)

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். (குறள் 1005

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு. (குறள் 1281)

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு. (குறள் 633)

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு. (குறள் 634)

முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரியது அரண். (குறள் 747)

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. (குறள் 385)

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல். (குறள் 461)

நிற்க, எண்ணும்மையோடு எண்ணுத் தொகைப் பெயரும் பெற்றுவரும் பாடல்களும் திருக்குறள் நூலுள் காணலாம்.

ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். (குறள் 581)

இக் குறளில் ஒற்றும் நூலும் என உம்மை எண் வந்த பின்னர், இவையிரண்டும் என எண்ணுத்தொகைப் பெயராலும் அறுதியிட்டுக் கூறுகின்றார் ஆசிரியர்.

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி. (குறள் 1022)

ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். (குறள் 581)

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். (குறள் 952)

இவ்வகையாக எண்ணும்மைக்கும் மேலாக எண்ணுத்தொகைப் பெயர் பெற்று வருதல் சிறுபான்மையே.

உம்மை எண்ணேயன்றி என்று, என, ஒடு என்பனவும் இங்ஙனமே எண்ணுப்பொருளில் வந்துள்ள பாடல்களும் உள.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. (குறள் 43)

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். (குறள் 674)

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். (குறள் 939)

இவற்றில் வரும் 'என்று' என்பது பாடலில் வரும் பிற பொருள்களோடும் கூட்டி எண்ணும் வகையில் அமைந்துள்ளது.[2] இதுபோன்ற நிலையில் 'என,' 'ஒடு' என்பனவும் வந்து எண்ணுப் பொருள் பயத்தலைப் பின்வரும் பாடல்களில் காணலாம்.

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். (குறள் 146)

மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. (குறள் 766)

பொருள் கருவிகாலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். (குறள் 675)

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். (குறள் 983)

இவ்விரண்டினுள்ளும் 'ஒடு' என்பது எண்ணுப்பொருள் தருதலேயன்றி 'உம்மை' எண்ணின் நிலையில் நின்று எண்ணு முறை போன்று வரும் சில இடங்களும் உள :

*சிறப்பொடு பூசனை செல்லாது வானம்*
*வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.* (குறள் 18)

*சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில*
*நீர்மை யுடையார் சொலின்.* (குறள் 195)

*நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு.* (குறள் 994)

*பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி*
*வாலெயிறு ஊறிய நீர்.* (குறள் 1121)

## (ஆ) செவ்வெண் மரபு

எண்ணுப்பொருள்படும் சிற்சில இடங்களில் எண்ணிடைச் சொல் தொக்கு வரும் வகையில் செவ்வெண்ணாகவும் கவிஞர்கள் பயன்படுத்துவது உண்டு.

*அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்*
*பேணாது அழுக்கறுப் பான்.* (குறள் 163)

இப் பாடலில் அறன் ஆக்கம் என்பது செவ்வெண்ணும். அறனும் ஆக்கமும் என உம்மையை விரித்துக் கூறாது உம்மை மறைந்துவரும் நிலையில் அறன்-ஆக்கம் எனக் கூறியதனால் இதனைச் செவ்வெண் என்று இலக்கண நூலார் கொள்வர்.

*வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு*
*யாண்டும் இடும்பை இல.* (குறள் 4)

*பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து*
*அறம்பொருள் கண்டார்கண் இல்.* (குறள் 141)

*செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை*
*உள்ளறிவான் உள்ளம் கொளல்.* (குறள் 677)

*அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்*
*பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.* (குறள் 681)

*அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்*
*என்பரியும் ஏதிலான் துப்பு.* (குறள் 862)

*உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற் குரு.* (குறள் 261)

*கடனறிந்து காலம் கருதி இடனறிந்து*
*எண்ணி உரைப்பான் தலை.* (குறள் 687)

*புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாம் கிழமை தரும்.* (குறள் 785)

*நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்*
*பேணுமை பேதை தொழில்.* (குறள் 833)

*செய்வானை நாடி வினைநாடிக் காலத்தொடு*
*எய்த உணர்ந்து செயல்.* (குறள் 516)

*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்,* (குறள் 948)

இப்பாடல்களிற்போலவே எண்ணிடைச் சொற்கள் தொக்கு நிற்க, அதாவது மறைந்து நிற்க வரும் பிற இடங்களையும் செவ்வெண் எனவே கொள்ளுதல் வேண்டும்.

*தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்*
*வானம் வழங்காது எனின்.* (குறள் 19)

இங்கே தானம், தவம் என இரண்டு பொருளைச் செவ் வெண்ணுகக் கூறி, 'இரண்டும்' என எண்தொகையும் தரப்பட் டிருக்கிறது. செவ்வெண்ணுல் வரும் பொருள்கள் இதுபோன்று எண்தொகை பெற்று வருதலே முறையாகும். மேலே செவ் வெண்ணுக வந்த சில பாடல்களில் இந்த எண்தொகை அமைய வில்லை. வெளிப்படையாகப் பாட்டில் அமையாவிட்டாலும் எண்ணுப்பெயர் தொக்கு இருப்பதாகவே கொண்டு பொருள் செய்ய வேண்டும்.

*பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து*
*அறம்பொருள் கண்டார்கண் இல்.* (குறள் 141)

என்னும் குறளில் பரிமேலழகர், "அறம் பொருள் என்பன ஆகு பெயர்; செவ்வெண்ணின் தொகை விகாரத்தால் தொக்கது" என்று எழுதுவது செவ்வெண்கள் தொகை பெற்று வரல்வேண்டும்[3] என்னும் மரபு நோக்கியே.

வள்ளுவப் பெருந்தகை தமது பாடல்களில் பெரும்பான்மை இடங்களிலும் செவ்வெண்களைத் தொகையெண் இட்டே பாடிச் செல்லுகின்ருர். இவற்றை இரண்டு, மூன்று, நான்கு முதலிய எண் பெருக்க அடைவில் நிரல்பட இங்கே பார்ப்போம்:

**இரண்டு**

தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின். (குறள் 19)

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். (குறள் 455)

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (குறள் 392)

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள். (குறள் 662)

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (குறள் 992)

காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேன்இவ் விரண்டு. (குறள் 1247)

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். (குறள் 674)

**மூன்று**

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று. (குறள் 682)

அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. (குறள் 684)

தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. (குறள் 688)

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு. (குறள் 383)

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து. (குறள் 1085)

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். (குறள் 360)

**நான்கு**

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும். (குறள் 501)

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (குறள் 35)

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். (குறள் 146)

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி. (குறள் 390)

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (குறள் 605)

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. (குறள் 953)

மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. (குறள் 766)

உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல். (குறள் 743)

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு. (குறள் 382)

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. (குறள் 513)

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து. (குறள் 950)

ஐந்து

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. (குறள் 738)

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். (குறள் 983)

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. (குறள் 27)

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு. (குறள் 632)

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். (குறள் 675)

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். (குறள் 939)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றுங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. (குறள் 43)

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. (குறள் 1101)

ஆறு

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. (குறள் 381)

எண்ணிடைச் சொற்களைப் பயன்படுத்திப் பொருள்களை ஆசிரியர் வரையறுத்துக் காட்டும்போது அவ்வப் பொருள்களைப் பற்றிய நன்மை தின்மைகள் கற்பார் கேட்பார் நினைவில் வைத்துப் போற்றத்தக்க வகையில் தெளிவுற அமைகின்றன. அன்றியும், இரண்டு மூன்று முதலாக எண்ணிட்டுக் கூறுவது மேலும் நினைவில் வைத்துப் போற்றுதற்குரிய கருவியாக அமைகின்றமை காணலாம்.

## (இ) தொகைப்பெயர் விளக்கம்

இரண்டு, மூன்று முதலியவாகப் பொருள் வரையறுத்து உணர்த்துமிடத்து, அவை எண் அளவால் கற்பவரின் சிந்தையில் பதிதல் இயல்பே. பொருள்களை வெளிப்படக் கூறுது எண்ணுத் தொகைப் பெயரால் 'இருவினை' (குறள் 5), 'பூதங்கள் ஐந்து' (குறள் 271) என்றுற் போலக் கூறுவதும் உண்டு. இங்கே கூறும் இருவினை என்பது நல்வினை-தீவினை என்பவற்றைச் சுட்டிக்கூறும் தொடர் என்பது வழிவழிவரும் அடிப்பட்ட வழக்காகும். இது போலவே 'பூதங்கள் ஐந்து' என்பது நிலம், நீர், தீ, வளி, வான் ஆகிய ஐந்தையும் குறிக்கும். இவ்வாறு வரும் தொகைப்பெயர்கள் எல்லாம் அறிஞர் பெருமக்களால் குழூஉக்குறிபோலத் தத்தம் உரைகளில் பயன்படுத்தப்பட்டு வருவதால் வழக்குபற்றி இவற்றை உணரலாம்.

வள்ளுவரும் மரபுவழிப்பட்ட சில தொகைப் பெயர்களைத் தம் பாடல்களுள் எடுத்தாண்டுள்ளார். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வகையில் இத் தொகைப்பெயராட்சியும் பொருளுணர்த்தற்கு ஒரு கருவியாக அமைகின்றது :

*இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.* (குறள் 5)

*இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்*
*பெருமை பிறங்கிற்று உலகு.* (குறள் 23)

*இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்*
*வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.* (குறள் 737)

*இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு*
*நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.* (குறள் 1091)

*இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றின் நின்ற துணை.* (குறள் 41)

*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்ருர் நீடுவாழ் வார்.* (குறள் 6)

*உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்*
*வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.* (குறள் 24)

*ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்*
*இந்திரனே சாலும் கரி.* (குறள் 25)

*அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்*
*வேண்டிய எல்லாம் ஒருங்கு.* (குறள் 343)

*வஞ்ச மனத்தான் படிற்ருெழுக்கம் பூதங்கள்*
*ஐந்தும் அகத்தே நகும்.* (குறள் 271)

*ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்*
*காவலன் காவான் எனின்.* (குறள் 560)

*கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை.* (குறள் 9)

இவற்றுள் முறையே இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு, எட்டு என்னும் எண்ணுத் தொகைப் பெயர்கள் வந்துள்ளமை காணலாம்.

பிற்கால நிகண்டாசிரியர்கள் தொகைப் பெயர்களை ஒரு தனித் தொகுதியாகக் கொண்டு 'பல்பொருட் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி' எனத் தொகுத்து விளக்கம் தந்துள்ளனர். நிகண்டுப் பொருள்களை அடியொற்றி முதன்முதலில் அகராதி அமைத்துத் தந்த வீரமாமுனிவரும் தமது சதுரகராதியில் 'தொகை அகராதி' என ஒரு பகுதி தனிப்பட வகுத்துக் காட்டியுள்ளார். ஆகவே, தமிழில் தொகைப் பெயர் வழக்கும் பொருளுணர்த்தும் முறையில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளமை விளங்கும்.

## (ஈ) எண் அளவும் பொருட் சிறப்பும்

ஒரு பொருளின் சிறப்பினை எண்ணி இத்துணை அளவு பெரிது எனக் காண்பது அதன் உயர்வை நன்கு புலப்படுத்தும். துறந்தார் பெருமைகளைக் கூறவந்த இடத்தில் இவர்களின் பெருமை எண்ணிக் கூறுகின்ற அளவினும் விஞ்சியது என்கிருர்.

*துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து*
*இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.* (குறள் 22)

என்று வள்ளுவர் கூறும்போது, துறந்தார் பெருமை அளவிட்டு உரைக்க இயலாது என்பதோடு மிகப்பேரளவாக அவர்தம் பெருமை

சிறந்துள்ளது என்பது விளங்குகின்றது. 'உலகத்தில் பிறந்து இறந்தாரை எண்ணித் தொகை காணக் கூடாதது போல' என ஓர் ஒப்புமையையும் கொடுத்துத் துறந்தார் பெருமை சொல்லவும் பெரிதே என்கிறார். இதனால் ஒன்றன் பெருமையை எண் அளவானும் எண்ணிப் பார்த்தல் இயல்பு என்பது தெரியவரும்.

வள்ளுவர் சிற்சில இடங்களில் ஒரு பொருள் இவ்வளவு மடங்கு பெரிது என்று எண்ணளவால் கூறி, அப்பொருளின் சிறப்பை எடுத்துக் கூறுகின்றார். ஒன்றிற்கு ஏழு, பத்து, நூறு, ஆயிரம், கோடி, பத்துக்கோடி, எழுபது கோடி, அடுக்கிய பலகோடி என எண்ணளவால் கூறிய இடங்களைத் திருக்குறளில் காணலாம் :

**ஒன்றுக்கு ஏழு**

*ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்*
*எழுமையும் ஏமாப் புடைத்து.* (குறள் 126)

*ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப் புடைத்து.* (குறள் 398)

*ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்*
*தான்புக் கழுந்தும் அளறு.* (குறள் 835)

*நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்*
*எழுநாளேம் மேனி பசந்து.* (குறள் 1278)

**ஒன்றுக்கு பத்து**

*பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே*
*நல்லார் தொடர்கை விடல்.* (குறள் 450)

**ஒன்றுக்கு நூறு**

*ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்*
*நன்றெய்தி வாழ்வதோர் ஆறு.* (குறள் 932)

**ஒன்றுக்கு ஆயிரம்**

*அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று.* (குறள் 259)

**ஒன்றுக்குக் கோடி**

*பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்*
*ஏதின்மை கோடி உறும்.* (குறள் 816)

*கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்*
*இரவாமை கோடி யுறும்.* (குறள் 1061)

**ஒன்றுக்குப் பத்துக்கோடி :**

*நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்*
*பத்தடுத்த கோடி உறும்.* (குறள் 817)

**ஒன்றுக்கு எழுபதுகோடி :**

*பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்*
*எழுபது கோடி உறும்.* (குறள் 639)

**ஒன்றுக்குப் பலகோடி :**

*அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்*
*குன்றுவ செய்தல் இலர்.* (குறள் 954)

*கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய*
*கோடிஉண் டாயினும் இல்.* (குறள் 1005)

உலகோர் பொருள்களை எண்ணிக்கை மிகுதிபற்றி மதிக்கும் இயல்புடையார் என்பது கண்டு, அவர்தம் உளங்களை ஈர்க்கும் வகையில் எண்ணுல் இவ்வளவு பெரிதாகக் கருதத்தகும் எனக் கூறுவது பொருளுரை கேட்பாரைப் பிணிக்கும் திறங்களுள் உலகியலை ஒட்டி அமைவதொன்றும்.

## (உ) பொருள் அளவால் காட்டும் விளக்கம்

எண் அளவால் பொருள்களின் மதிப்பைப் பிறருக்குப் புலப் படுத்துதல் இயல்பாய் அமைந்த ஒன்று. மேலும், பொருளின் வண்ணம், வடிவம் முதலியவற்றைக் கொண்டும் ஒன்றனோடு ஒன்றின் பெருமை சிறுமை மரபுகளைக் கூறுவது உண்டு. வள்ளுவர் தமது திருக்குறளில் பொருள்களின் சிறுமை-பெருமைகளுக்குத் தினை-பனை என்பனவற்றை எடுத்துக்காட்டியுள்ளார்.

*தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன்தெரி வார்.* (குறள் 104)

*தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பழிநாணு வார்.* (குறள் 433)

*தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்*
*காமம் நிறைய வரின்.* (குறள் 1282)

இக் குறள்களில் வரும் 'தினை', 'பனை' என்பன சிறுமை, பெருமைகளைச் சுட்டும் அளவுப்பொருளாக உள்ளமை தெரியவரும். பரிமேலழகரும், "தினை பனை என்பன சிறுமை பெருமைகட்குக்

காட்டுவன சில அளவை" (குறள் 104) உரை எனக் குறிப்பிடுதலும் கவனிக்கத் தக்கது.

நிற்க, சிறுமை அளவையைக் குறிப்பதற்குத் தினையையேயன்றி எள், குன்றிமணி என்பனவற்றையும் வேறுசில குறள்களில் வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.

*குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ*
*குன்றி அனைய செயின்.* (குறள் 965)

*எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்*
*உட்பகை உள்ளதாம் கேடு.* (குறள் 889)

இவ்வாறாக எள், குன்றிமணி, தினை, பனை என்பன பொருள்களின் குறுமை நெடுமை அளவுகளைக் குறிப்பதற்கு மக்களால் பயன்படுத்தப்பட்ட அளவுப் பொருள்கள் என்பது விளக்கமாகும். 'குன்றன்னார்' (குறள் 897), 'குன்றின் அனையார்' (குறள் 965), 'மலையினும் மாணப் பெரிது' (குறள் 124) எனவரும் குறள்களில் பருமையும் உயர்ச்சியும் கொண்ட மலையைப் பெருமைக்கு எடுத்துக் காட்டுதல் தெளிவு. இங்ஙனமே, 'ஞாலத்தின் மாணப் பெரிது' (குறள் 102), 'கடலிற் பெரிது' (குறள் 103) என உலகப் பரப்பும் கடலின் பரப்பும் அளவிட்டுரைக்க இயலாத பேரளவிற்கு ஒப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவையெல்லாம் மக்கள் பொருள்களை ஒப்புக்காட்டி விளக்கப் பயன்படுத்திய உலகவழக்க அளவை மரபுகள்[4] என்று கொள்ளத் தக்கனவாம்.

## குறிப்புகள்

1. *உம்மை எண்ணும் எனவென் எண்ணும்*
*தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே.*
(தொல். சொல். இடை. *39*)

*எண்ணே காரம் இடையிட்டுக் கொளினும்*
*எண்ணுக்குறித் தியலும் என்மனார் புலவர்.*
(தொல். சொல். இடை. *40*)

*உம்மை தொக்க எனுவென் கிளவியும்*
*ஆயீ ருகிய என்றென் கிளவியும்*
*ஆயிரு கிளவியும் எண்ணுவழிப் பட்டன.*
(தொல். சொல். இடை. *41*)

அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்
பெயர்க்குறி மரபின் செவ்வெண் இறுதியும்
ஏயி ருகிய எண்ணின் இறுதியும்
யாவயின் வரினும் தொகையின்றி இயலா.
(தொல். சொல். இடை. 42)

2. என்றும் எனவும் ஒடுவும் ஒரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருள்தொறும் நேரும். (நன். 429)

வினையொடு வரினும்எண் இனையன ஏற்பன. (நன். 430)

3. பெயர்ச்செவ் வெண்ஏ என்ரு எனஎண்
நான்கும் தொகைபெறும் உம்மைஎன்று எனஒடு
இந்நான்கு எண்ணும் அஃதுஇன்றியும் இயலும்.
(நன். 428)

4. கடுகளவு, சுண்டைக்காயளவு, நெல்லிக்காயளவு, எலுமிச்சங் காயளவு, மாங்காயளவு, தேங்காயளவு, விளாங்காயளவு, கைப்பிடி யளவு, சிறங்கையளவு, சிட்டிக்கையளவு முதலியனவாகப் பொருள் களின் அளவுகளைக் குறிப்பிட்டுப் பேசும் உலக வழக்குப் பேச்சுகள் இங்குக் கருதத் தக்கவை.

# 7. விளைவு கூறி அறிவுறுத்தல்

## (அ) பயன் கருதிய நெறி

இன்ப விழைவும் துன்ப மறுப்பும் எல்லார்க்கும் ஒத்த பண்புகள். இன்பத்தை எல்லாரும் விரும்பி வரவேற்பர்; துன்பச் சூழ்நிலை தோன்றுமானால் அது குறித்துக் கவலை கொண்டு உள்ளம் தளர்வர். வள்ளுவர் ஓரிடத்தில் இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவிக்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

> *நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்*
> *அல்லற் படுவது எவன்?* (குறள் 379)

என்னும் குறளில் துன்பத்தையும் இன்பம் போலவே கருதாமலும், இன்பமும் துன்பமும் வருவது உலகியல் முறை என்று எண்ணாமலும் ஒருவன் துன்ப நிலையில் வருந்துதல் முறையாகாது என்கிறார்.

எவ்வளவுதான் எடுத்துக் கூறினாலும் துன்பம் எனின் வெறுப்பும் இன்பம் எனின் விருப்பும் கொள்வது மனித இயல்பு. இவ்வுளப் பாங்கினைத் தெளிய உணர்ந்த வள்ளுவர் தாம் உணர்த்தும் அறங்களைச் செய்தலால் வரும் நன்மையையும், தவிர்தலான் வரும் தீமையையும் அங்கங்கே எடுத்துக்காட்டிச் செல்லுகின்றார். இவ் வுலக வாழ்வில் மட்டுமின்றி மறுமை உலகிலும் நன்மை தீமை தொடரும் என்றும் சில இடங்களில் எடுத்துக் காட்டுகின்றார். எந்தப் பொருள் பற்றிக் கூறிய விடத்தும் நலம் தீங்கு இரண்டனையும் எடுத்துக்காட்டி விளக்கிச் செல்வது அவருடைய தனிச் சிறப்பு.

தமக்கு வரும் நற்பயன் நோக்கி அறத்தை மக்கள் விரும்பவும், தமக்குவரும் தீமை நோக்கிப் பாவத்தை ஒழிக்கவும் உளம்கொள்ளும்

வகையில் இவ்விருவகை நிலையையும் எடுத்து மொழிகின்றார். சில இடங்களில் இரண்டையும் ஒருசேர ஒரே பாடலில் அமைத்துக் காட்டுவதும் உண்டு.

*சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு?* (குறள் 31)

என அறன்வலியுறுத்தல் அதிகாரத்தில் அறத்தின் நல்விளைவுகளை முதலில் மொழிந்து, அதன் பின்னரே அறமாவது யாது என்று விளக்க வள்ளுவர் முற்படுகின்றார்.

*அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை*
*மறத்தலின் ஊங்கில்லை கேடு* (குறள் 32)

என்னும் குறளில் அறச்செயலால் ஒருவனுக்கு ஆக்கமெல்லாம் வரும் என்றவர், செய்யாது மறந்தவனுக்குக் கேடுவரும் என்றும் எடுத்துக்காட்டுகின்றார்.

*அறத்தா றிதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோ டூர்ந்தா னிடை.* (குறள் 37)

*வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்*
*வாழ்நாள் வழியடைக்கும் கல்.* (குறள் 38)

*அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்*
*புறத்த புகழும் இல.* (குறள் 39)

இப் பாடல்களால் அறம் செய்தார் இவ்வுலகில் நற்பயன் அடைதலோடு மறுமையிலும் பெரும்பேறு பெறுவர் என்று எடுத்துக்காட்டுதல் புலனும். பயன் நோக்கி ஒருவன் அறம் செய்ய விழைவதும் பழிபாவம் செய்யாமல் தவிர நினைத்தலும் உண்டாகவே அவனால் அறம் போற்றப்படும் என்பது தெளிவு.

மேலும், முதல் அதிகாரத்தைப் பார்ப்போமானால் மூன்று பாடல்களைத் தவிர (1, 2, 9) ஏனையவெல்லாம் கடவுளை வாழ்த்து தலினால் வரும் நன்மை-தின்மைபற்றி உரைப்பனவாகவே உள்ளன. இங்ஙனமே அதிகாரந்தோறும் ஆசிரியர் பொருளுரைகளை எடுத்துக் கூறும் முறைமையை நோக்கினால், எங்கும் நற்பயன் தீப்பயன் விளைவுகள்பற்றிக் கூறிச்செல்வது விளங்கும்.

விளைவு காட்டி ஒன்றனைப் பேணுக-தவிர்க என்று அறிவுறுத்தும் பகுதியை ஒவ்வொரு பொருளுரையிலும் பெரும்

பாலும் காணலாம். ஒன்றனைப் பேணுதல் பேணாமையால் விளையும் பயன்களை ஆசிரியர் எடுத்துரைக்கும் பகுதிகள் ஒவ்வோர் அதிகாரத்தும் காணப்படுவதால், அவற்றையெல்லாம் அதிகாரம் தோறும் தொகுத்து உரைப்பதாயின், மிக விரிந்துபட்டுச் செல்லும். எனவே, நாம் ஒவ்வொரு பொருளுரைபற்றிய பகுதியையும் பார்க்கும்போது, இந் நோக்கில் ஆசிரியர் தரும் பாடல்களை எளிதில் கண்டு கொள்ளலாம்.

## (ஆ) ஏது காட்டிய அறிவுரை

வள்ளுவர் தாம் உணர்த்தக் கருதும் பொருளையும் அதனால் நேரும் விளைவுகள், குணகுற்றங்கள் முதலியவற்றையும் முற்படக் கூறி, அவை அங்ஙனம் ஆவதற்குரிய ஏதுக்களையும் தொடர்ந்து காட்டி விளக்குதலைப் பல பாடல்களில் காணலாம்.

*ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்.* (குறள் 14)

இப் பாட்டில் உழுவார் ஏரால் உழுதலைச் செய்யார் என்று உரைத்தவர், தொடர்ந்து, 'புயல் தரும் மழைவளம் குறைந்து விடுமானால்' என்று அவர் உழுதொழில் செய்தற்கு இயலாததின் காரணத்தை எடுத்து மொழிகின்றார். இங்ஙனம் வரும் பாடல்களில் பொருள் முடிவு முதலடியிலும், எச்சத்தொடர் இரண்டாம் அடியிறுதியுடன் முடிவதாயும் அமைந்து வரும். ஒருசில இடங்களில் முதலடியில் வரும் பொருள். 'கற்றதனால் ஆய பயன் என் கொல்?' (குறள் 2), 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள?' (குறள், 30) என்றாற் போல வினாவும் முறையிலும் காணப்படுகின்றன. வேறு சில இடங்களில், 'நல்லாற்றான் நாடி அருளாள்க (குறள் 243), 'எனைத் தானும் நல்லவை கேட்க' (குறள் 416) என்றாற்போல வியங்கோளாகவும் உள்ளன. பொதுவாகப் பொருளைத் தொடர்ந்து ஏதுகாட்டும் முறையில் அமைந்த குறள்களுள் பெரும்பாலானவை எச்சமாக முடிவுறுகின்றன.

*மறத்தல் வெகுளியை யார்மாட்டும்—தீய*
*பிறத்தல் அதனால் வரும்.* (குறள் 303)

*நல்லாற்றால் நாடி அருளாள்க—பல்லாற்றால்*
*தேரினும் அஃதே துணை.* (குறள் 242)

*தொடங்கற்க எவ்வினையும்—எள்ளற்க முற்றும்—*
*இடங்கண்ட பின்அல் லது.* (குறள் 491)

அழுக்காற்றின் அல்லவை செய்யார்—இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து. (குறள் 164)

அறைபறை அன்னர் கயவர்—தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான். (குறள் 1076)

தேவர் அனையர் கயவர்—அவருந்தாம்
மேவன செய்தொழுக லான். (குறள் 1073)

அந்தணர் என்போர் அறவோர்—மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். (குறள் 30)

மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை—பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து. (குறள் 968)

அறத்தாறு இதுவென வேண்டா—சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை. (குறள் 37)

உருவுகண்டு எள்ளாமை வேண்டும்—உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து. (குறள் 667)

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்—அசைவிலா
ஊக்க முடையா னுழை. (குறள் 594)

கற்றதனா லாய பயனென்கொல்—வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (குறள் 2)

தானம் தவம்இரண்டும் தங்கா—வியன்உலகம்
வானம் வழங்கா தெனின். (குறள் 19)

பொய்ம்மையும் வாய்மை இடத்த—புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். (குறள் 292)

உள்ளிய தெல்லாம் உடனெய்தும்—உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். (குறள் 309)

துறப்பார்மன் துப்புர வில்லார்—உறற்பால
ஊட்டா கழியும் எனின். (குறள் 378)

வேலன்று வென்றி தருவது—மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின். (குறள் 546)

ஆபயன் குன்றும்—அறுதொழிலோர் நூல்மறப்பர்—
காவலன் காவான் எனின். (குறள் 560)

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்—
ஈதல் இயையாக் கடை. (குறள் 230)

நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு—அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. (குறள் 469)

ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை—
போகாறு அகலாக் கடை. (குறள் 478)

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர்—பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. (குறள் 837)

தலையின் இழிந்த மயிரனையர்—மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. (குறள் 964)

குலஞ்சுடும்—கொள்கை பிழைப்பின்; நலஞ்சுடும்—
நாணின்மை நின்றக் கடை. (குறள் 1019)

அல்லல் அருளாள்வார்க்கு இல்லை—வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. (குறள் 245)

இரப்பான் வெகுளாமை வேண்டும்—நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி. (குறள் 1060)

மருந்தென வேண்டாவாம்—யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். (குறள் 942)

இன்பம் இடையறா தீண்டும்—அவாவென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின். (குறள் 369)

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம்—ஆயம் கொளின். (குறள் 939)

வாணிகம் செய்வார்க்கு வாணிகம்—பேணிப்
பிறவும் தமபோற் செயின். (குறள் 120)

அஃகி அகன்ற அறிவென்னும்—யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். (குறள் 175)

அருவினை என்ப உளவோ—கருவியான்
காலம் அறிந்து செயின். (குறள் 483)

ஞாலங் கருதினுங் கைகூடும்—காலம்
கருதி இடத்தாற் செயின். (குறள் 484)

ஆற்றாரும் ஆற்றி அடுப—இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின். (குறள் 493)

எண்ணியார் எண்ணம் இழப்பர்—இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின். (குறள் 494)

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா—எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின். (குறள் 497)

அரியஎன்று ஆகாத இல்லை—பொச்சாவாக்
கருவியால் போற்றிச் செயின். (குறள் 537)

நிழல்நீரும் இன்னாத இன்னா, தமர்நீரும்
இன்னாவாம்—இன்னா செயின். (குறள் 881)

குன்றின் அனையாரும் குன்றுவர்—குன்றுவ
குன்றி அனைய செயின். (குறள் 965)

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னும்—
தகைமாண்ட தக்கார் செறின். (குறள் 897)

இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். (குறள் 900)

அல்லவை தேய அறம்பெருகும்—நல்லவை
நாடி இனிய சொலின். (குறள் 96)

சீர்மை சிறப்பொடு நீங்கும்—பயனில
நீர்மை யுடையார் சொலின். (குறள் 195)

வானுயர் தோற்றம் எவன்செய்யும்—தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின். (குறள் 272)

இன்மையின் இன்னாது உடைமை—முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். (குறள் 558)

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்—
கழகத்துக் காலை புகின். (குறள் 937)

பீலிபெய் சாகாடும் அச்சிறும்—அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். (குறள் 475)

பெண்ணிற் பெருந்தக்க யாவுள—கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். (குறள் 54)

எழுபிறப்பும் தீயவை தீண்டா—பழிபிறங்கா
பண்புடை மக்கட் பெறின். (குறள் 62)

அகனமர்ந்து ஈதலின் நன்றே—முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின். (குறள் 92)

தகுதி எனவொன்று நன்றே—பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின். (குறள் 111)

சொற்கோட்டம் இல்லது செப்பம்—ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின். (குறள் 119)

செறிவறிந்து சீர்மை பயக்கும்—அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின். (குறள் 123)

விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லை—யார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின். (குறள் 162)

உண்ணாமை வேண்டும் புலாஅல்—பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின். (குறள் 257)

கல்லா தவரும் நனிநல்லர்—கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். (குறள் 403)

உள்ளியது எய்தல் எளிதுமன்—மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின். (குறள் 540)

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம்—நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (குறள் 648)

எண்ணிய எண்ணியாங்கு எய்துப—எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். (குறள் 666)

முகம்நோக்கி நிற்க அமையும்—அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின். (குறள் 708)

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும்—கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின். (குறள் 709)

செறுவார்க்குச் சேணிகவா இன்பம்—அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். (குறள் 869)

இன்மை ஒருவற்கு இளிவன்று—சால்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின். (குறள் 988)

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா—அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். (குறள் 969)

இன்பம் ஒருவற்கு இரத்தல்—இரந்தவை
துன்பம் உறூஅ வரின். (குறள் 1052)

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்—தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். (குறள் 17)

இறலீனும்—எண்ணாது வெஃகின்; விறலீனும்
வேண்டாமை என்னும் செருக்கு. (குறள் 180)

எனைத்தானும் நல்லவை கேட்க—அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (குறள் 416)

குற்றமே காக்க பொருளாகக்—குற்றமே
அற்றம் தரூஉம் பகை. (குறள் 434)

புணர்ச்சி பழகுதல் வேண்டா—உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். (குறள் 785)

தன்நெஞ் சறிவது பொய்யற்க—பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். (குறள் 293)

ஆற்றின் அளவறிந்து கற்க—அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு. (குறள் 725)

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். (குறள் 380)

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ—உவப்பினும்
காயினும் தான்முந் துறும். (குறள் 707)

*குடிசெய்வல் என்னும் ஒருவற்குத்—தெய்வம்*
*மடிதற்றுத் தான்முந் துறும்.* (குறள் 1023)

*சிறப்பொடு பூசனை செல்லாது—வானம்*
*வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.* (குறள் 18)

மேலே காட்டப்பெற்ற குறள்கள் எல்லாம் பொருளை முன்னர்க் கூறி, ஏது முதலிய விளக்கப் பகுதிகளைத் தொடர்ந்து பின்வருமாறு கொண்டவை. இவற்றில் எல்லாம் பாட்டின் பயனிலையாகிய முடிவுச்சொல் முதலடியில் அமைந்துவர, ஏது விளக்கம் கூறும் பிற்பகுதியை முன்னுரைத்து, மொழிமாற்று முறையில் கொண்டு கூட்டிப் பொருள்முடிவு கொள்ளவேண்டும்.

இவ்வாறன்றி இவற்றிற்கு எதிரான முறையில், பொருளின் தன்மை, சிறப்பு முதலியவற்றிற்கான ஏதுவை முதலில் கூறி, அதன் விளைவாக வரும் பொருளை யாற்றொழுக்காகத் தொடர்ந்து உரைத்தலும் உண்டு.

*வீழ்நாள் படாஅமை நன்றாற்றின்—அஃதொருவன்*
*வாழ்நாள் வழியடைக்குங் கல்.* (குறள் 38)

*மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின்—வாழ்க்கை*
*எனைமாட்சித் தாயினும் இல்.* (குறள் 52)

இவ்வாறு வரும் பாடல் ஏது முதலியவாக எடுத்துக்காட்டும் பொருள் எச்சத் தொடராய் அமைந்து, இறுதியில் உள்ள வினை முடிவுச் சொற்களோடு இயைந்து பொருள் பயக்கின்றன. இவ் வகை அமைப்பில் மொழிமாற்றிப் பொருள் கொள்ளவேண்டும் நிலை பெரும்பாலும் இல்லை. இவ்வகையில் பொருள் உணர்த்தும் குறட் பாக்கள் வருமாறு :

*ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்—*
*காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.* (குறள் 642)

*சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்—*
*உழந்தும் உழவே தலை.* (குறள் 1031)

*தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்—*
*மனக்கவலை மாற்றல் அரிது.* (குறள் 7)

*அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்—*
*பிறவாழி நீந்தல் அரிது.* (குறள் 8)

விசும்பின் துளிவீழின் அல்லால்—மற்றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது. (குறள் 16)

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்—
பொன்றாது நிற்பதொன் றில். (குறள் 233)

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின்—வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். (குறள் 52)

ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்—
நன்றாகா தாகி விடும். (குறள் 128)

தன்னைத்தான் காதல னாயின்—எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். (குறள் 209)

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்—
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். (குறள் 563)

ஒழுக்கம் விழுப்பம் தரலான்—ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (குறள் 131)

வேண்டிய வேண்டியாங்கு எய்தலான்—செய்தவம்
ஈண்டு முயலப் படும். (குறள் 265)

சூழ்வார்கண் ணாக ஒழுகலான்—மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். (குறள் 445)

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம்—மாணாப் பிறப்பு. (குறள் 351)

சிறப்புஈனும் செல்வமும் ஈனும்—அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. (குறள் 31)

அறன்ஈனும் இன்பமும் ஈனும்—திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். (குறள் 754)

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்—
உயிர்க்கிறுதி ஆகி விடும். (குறள் 476)

தொட்டனைத் தூறும் மணற்கேணி—மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (குறள் 396)

நீர்இன்று அமையாது உலகெனின்—யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு. (குறள் 20)

ஒப்புரவி னால்வரும் கேடெனின்—அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. (குறள் 220)

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும்—சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. (குறள் 328)

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க—காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். (குறள் 305)

வேண்டின்உண் டாகத் துறக்க—துறந்தபின்
ஈண்டியற் பால பல. (குறள் 342)

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை—மற்றது
வேண்டாமை வேண்ட வரும். (குறள் 362)

எய்தற் கரியது இயைந்தக்கால்—அந்நிலையே
செய்தற் கரிய செயல். (குறள் 489)

அவாவினை ஆற்ற அறுப்பின்—தவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும். (குறள் 367)

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின்—அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். (குறள் 38)

அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின்—புறத்தாற்றின்
போய்ஒப் பெறுவது எவன். (குறள் 46)

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. (குறள் 126)

நிலவரை நீள்புகழ் ஆற்றின்—புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு. (குறள் 234)

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்—
ஊறுபாடு இல்லை உயிர்க்கு. (குறள் 945)

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்—
நோயள வின்றிப் படும். (குறள் 947)

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின்—ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. (குறள் 357)

உள்ளத்தால் பொய்யா தொழுகின்—உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (குறள் 294)

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின்—மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். (குறள் 359)

தன்னைத்தான் காக்கின்—சினங்காக்க; காவாக்கால்—
தன்னையே கொல்லும் சினம். (குறள் 305)

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்—
நிலமென்னும் நல்லாள் நகும். (குறள் 1040)

அகப்பட்டி ஆவாரைக் காணின்—அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ். (குறள் 1074)

துறந்தார் பெருமை துணைக்கூறின்—வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. (குறள் 22)

இன்றாமை இன்பம் எனக்கொளின்—ஆகுந்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. (குறள் 630)

ஏந்திய கொள்கையார் சீறின்—இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். (குறள் 899)

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின்—தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். (குறள் 319)

முறைகோடி மன்னவன் செய்யின்—உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். (குறள் 559)

மடிமை குடிமைக்கண் தங்கின்—தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும். (குறள் 608)

உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும். (குறள் 885)

ஆரா இயற்கை அவாநீப்பின்—அந்நிலையே
பேரா இயற்கை தரும். (குறள் 370)

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்—
அதுநோக்கி வாழ்வார் பலர். (குறள் 528)

ஒன்றாமை ஒன்றியார் கட்படின்—எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது. (குறள் 886)

பெற்றார் பெறின்—பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. (குறள் 58)

விண்இன்று பொய்ப்பின்—விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி. (குறள் 13)

மனத்தொடு வாய்மை மொழியின்—தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. (குறள் 295)

நடுவின்றி நன்பொருள் வெஃகின்—குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். (குறள் 171)

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்—
ஏதில ஏதிலார் நூல். (குறள் 440)

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்—
என்குற்ற மாகும் இறைக்கு. (குறள் 436)

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றங் காண்கிற்பின்—
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. (குறள் 190)

இவை எல்லாம் எச்சத் தொடரும் முற்றுத் தொடரும் ஆக வந்து ஆற்றொழுக்காகப் பொருள்தரும் பாடல்களாம். ஏதுக் காட்டிப் பொருளை விளக்கும் முறையில் பொருளையும் ஏதுவையும் முன்னாகவோ பின்னாகவோ அமைத்துக் கூறும் வகைமுறைகளை ஆசிரியர் தம் நூலுள் மேற்கொண்டுள்ளமையும் விளக்கமாகும்.

# 8. ஒரு நீதிக்கு மற்ருெரு நீதி

ஓர் அறத்தின் நன்மையையும் அதனைச் செய்யாவிடில் வரும் தீமையையும் எடுத்துக்காட்டி அறச்செயலில் கேட்பார் உள்ளம் ஈடுபடும் வகையில் கூறிச்செல்வது குறள் நூலில் எங்கும் உண்டு. கேட்போருடைய சூழலில் நித்தமும் காணும் காட்சிப்பொருள்களை எடுத்துக்காட்டியும் பல இடங்களில் விளக்கம் தருகிருர். இதற்கும் மேலாகக் கருத்துப் பொருளுக்கு மற்ருெரு கருத்துப் பொருளை ஒப்பாக வைத்து உயர்வுதாழ்வு எடுத்துக்கூறுதலும் உண்டு. ஒரு நீதியை விளக்குமிடத்து ஆசிரியர் தாம் பிறிதோரிடத்தில் கூறிய மற்ருெரு நீதியையே ஒப்பாக வைத்துப் பேசுவதும் குறளகத்துக் காணப்படுகிறது. ஒரு நீதிக்கு மற்ருெரு நீதியை எடுத்துக்காட்டு மிடத்து இரண்டின் இன்றியமையாமையும் ஒருசேரக் காட்டும் பயனும் விளைகின்றது. ஒன்றிேடு ஒன்றற்குள்ள ஏற்றத் தாழ்வு களும் இதனல் இனிது புலப்படும். எடுத்துக்காட்டாகச் சில குறள் மணிகளைப் பார்ப்போம் :

*அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை*
*ஒழுக்க மிலான்கண் உயர்வு.* (குறள் 135)

இது ‘ ஒழுக்கமுடைமை ’ அதிகாரத்தில் வரும் பாடல் ; இதில், ‘ஒழுக்கமில்லாதவனிடம் உயர்ச்சி இல்லை’ என்று சொல்ல வந்தவர் இதற்கு ஒப்பாக, ‘பொருமைக்காரனிடம் செல்வம் இல்லையாதற் போல, என்று எடுத்துக் காட்டுகின்ருர். ஆகவே, ஒழுக்கமிலான் நிலைக்குப் பொருமையுடையானின் நிலைமையைக் காட்டுதல் மற்ருெரு நீதிக் கருத்தையும் ஒப்ப வைத்து விளக்கியவாரும்.

பொறையுடைமை அதிகாரத்தில் அறிவின்மையால் தமக்குப் பிழைசெய்தாரைப் பொறுத்தல் வேண்டும் என்று கூறவந்தவிடத்து,

*இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்*
*வன்மை மடவார்ப் பொறை.* (குறள் 153)

என்று கூறுகிறார். இங்கே எடுத்துக்காட்டாக வறுமையுள் வைத்து வறுமையாவது விருந்தினரை ஏற்றுக் கொள்ளாது நீக்குதல் என்று கூறுகின்றார். இதனால் விருந்து விலக்குதலின் மேற்பட்ட வறுமையும், ஒருவர் செய்த குற்றம் பொறுத்தலின் மேற் பட்ட வல்லமையும் உலகத்தில் இல்லை என்பது உணர்த்தப் படுகிறது. இவ்வாறாக ஒன்றற்கொன்று ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக் காட்டித் தாம் சொல்லக் கருதிய பொருளைக் கேட்பார்க்கு அறிவுறுத்தும் முறையிலும் பல குறட்பாக்கள் உள :

**இன்னாச் சொல்லைப் பொறுப்பார்க்கு நோற்பார்**

*துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்*
*இன்னாச்சொல் நோற்கிற் பவர்.* (குறள் 159)

*உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்*
*இன்னாச்சொல் நோற்பாரின் பின்.* (குறள் 160)

**அருளுக்குப் பொருள்**

*அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு*
*இவ்வுலகம் இல்லாகி யாங்கு.* (குறள் 247)

*பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்*
*அற்றார்மற் றாதல் அரிது.* (குறள் 248)

**அருளாட்சிக்குப் பொருளாட்சி**

*பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி*
*ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.* (குறள் 252)

**அருளும் மெய்ப்பொருளும்**

*தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்*
*அருளாதான் செய்யும் அறம்.* (குறள் 249)

**ஊனுண்டார்க்குப் படைகொண்டார்**

*படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்*
*உடல்சுவை உண்டார் மனம்.* (குறள் 253)

**சான்றாண்மையும் நோன்மையும்**

*கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை*
*சொல்லா நலத்தது சால்பு.* (குறள் 984)

**கொல்லாமையும் பொய்யாமையும்**

*ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்*
*பின்சாரப் பொய்யாமை நன்று.* (குறள் 323)

**உடையார் - இல்லார் : கற்றூர் - கல்லாதவர்**

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றூர்
கடையரே கல்லா தவர். (குறள் 395)

**கல்லாதான் சொல் விருப்பும் முலையில்லாள் காமமும்**

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. (குறள் 402)

**கல்லார் செல்வமும் நல்லார் வறுமையும்**

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னுதே
கல்லார்கண் பட்ட திரு. (குறள் 408)

**பெரியார் சார்பின்மை முதலிலார்க்கு ஊதியம் இன்மை**

முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை. (குறள் 449)

**பொச்சாப்பும் வெகுளியும்**

இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு. (குறள் 531)

**பொச்சாப்பும் வறுமையும்**

பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுவுலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு. (குறள் 533)

**பொச்சாப்பும் அச்சமும்**

அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. (குறள் 534)

**தாளாண்மையில்லாதான்—பேடி கைவாள்**

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். (குறள் 614)

**வினை நலமும் துணை நலமும்**

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும். (குறள் 651)

**நட்டாரும் ஒட்டாரும்**

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். (குறள் 679)

**அவைக்களமும் பகைக்களமும்**

*பகையகத்துச் சாவார் எளியர் அரியர்*
*அவையகத்து அஞ்சா தவர்.* (குறள் 723)

*வாளோடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடன்*
*நுண்ணவை அஞ்சு பவர்க்கு.* (குறள் 726)

*பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து*
*அஞ்சு மவன்கற்ற நூல்.* (குறள் 727)

**வில்லேருழவர் சொல்லேருழவர்**

*வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்கச்*
*சொல்லே ருழவர் பகை.* (குறள் 872)

**சூதும் உயிரும்**

*இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்*
*உழத்தொறூஉம் காதற்று உயிர்.* (குறள் 940)

**சான்றோரும் கீழ்மக்களும்**

*சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்*
*கொல்லப் பயன்படும் கீழ்.* (குறள் 1078)

**நாணின்மையும் கொள்கை பிழைத்தலும்**

*குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்*
*நாணின்மை நின்றக் கடை.* (குறள் 1019)

**காம இன்பத்திற்கு அறிவு நிலை**

*அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்*
*செறிதோறும் சேயிழை மாட்டு.* (குறள் 1110)

**கெட்டார்க்கு நட்டார் இன்மை**

*கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சேநீ*
*பெட்டாங் கவர்பின் செயல்.* (குறள் 1293)

**உணவின்பமும் காம இன்பமும்**

*உணலினும் உண்ட தறலினிது காமம்*
*புணர்தலின் ஊடல் இனிது.* (குறள் 1326)

மேலே காணும் குறள் போன்றவை கருத்துச் செறிவுடைய சிந்தனைக் குறள்களாம். ஒரு கருத்துக்கு மற்றொரு கருத்தின் வன்மை மென்மை காட்டப்படுதலால் இது கேட்பார்க்கு இரு பொருள் பற்றிய சிந்தனையும் மேலெழும். காட்சிப் பொருள் உவமையைவிடக் கருத்துப் பொருள் உவமை அறிவுக்கு விருந்தாக உள்ளன.

# 9. இயைபுடைய பொருள்களை இணைத்து மொழிதல்

திருக்குறளின் ஒவ்வோர் அதிகாரமும் அவ்வதிகாரத்துள் மிகுதியும் விவரிக்கப்படும் பொருள்பற்றிப் பெயர் சூட்டப் பெற்றுள்ளது. ஆசிரியர் தாம் எடுத்துக்கொண்ட பொருளின் இயல்புகளையும் சிறப்புகளையும், அதனால் விளையும் பயன்களையும் உடன்பாட்டு முறையாலும், எதிர்மறைவகையாலும், வினவும் முறையிலும், வியங்கோள் வகையிலும், இன்னும் பல்வேறு உத்திகளை மேற்கொண்டும் தெளியவைக்கிறார். அவ்வாறு கூறும்போது அந்நீதியோடு தொடர்புடைய பிறநீதிகளையும் வேறு கருத்துகளையும் உடன் இணைத்து அங்கங்கே வெளியிடும் திறம் சிந்திக்கத் தகும். இனமும் சார்பும் பற்றி இயைபுடையனவற்றை ஒருங்கு கூறுதல், உணர்த்தக் கருதிய பொருளின் இன்றியமையாமையை மேலும் விளக்கமுறச் செய்வதற்காவதோர் உபாயமாம். இதனை அறிஞர் 'ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்' என்பதோர் உத்தியின் பாற்படுத்துக் கூறுவர். இவ்வாறு அதிகாரம்தோறும் அமைந்து வரும் தொடர்புடைய கருத்துரைப் பகுதிகளை முறையே இங்குப் பார்ப்போம்.

*கடவுள் வாழ்த்தில் கல்வி*

முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தில், "உலகிற்கு முதலாகிய முதற்கடவுள் ஒருவன் உண்டு" என்று உரைத்தவர், தொடர்ந்து, "கல்வியின் பயன் கடவுளைத் தொழுதலே" என அடுத்த பாடலில் உரைக்கின்றார். இங்கே கல்விப் பொருளின் மேன்மையும் அது கடவுளை உணர்வதற்கு அடிநிலையாயுள்ளமையும் குறிக்கப்பட்டுள்ளன. கற்றவர்களே மெய்ப்பொருள் உணர்ச்சி பெறுதல் கூடும்.

*கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்*
*மற்றீண்டு வாரா நெறி* (குறள் 356)

என்பது 'மெய்யுணர்தலி'ல் வரும் குறட்பா. முழுமுதற் பொருளை உணர்வதற்குக் கேள்வி, விமரிசம், பாவனை என்னும் மூன்றும் முக்கியமானவை என்பர். இப் பொருள்களை உணர்வதற்கு அடிநிலையான கல்வியின் இன்றியமையாமையும், அது இந்நிலையில் கூட்டுவிக்குமாறும் 'கற்றதனால் ஆய பயன் என் கொல்?' என வினவிச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கின்றார். கடவுள் வாழ்த்துடன் தொடர்புடையது மெய்ப்பொருள் நாட்டம் என்பதனை இதனால் ஆசிரியர் குறிப்பினால் பெறவைத்தவாறும்.

"மெய்யுணர்தலாவது எக்காலத்திலும் எவ்விடத்திலும் அழியாது நிற்கும் பொருள் இது என உணர்தல்" என்பது மணக்குடவர் மெய்யுணர்தலுக்குத் தரும் விளக்கம். இதனால் இறை நிலையை உள்ளபடி உணரும் தன்மை உணர்த்தப்படுகிறது என்பது தெளிவு.

*பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்*
*செம்பொருள் காண்ப தறிவு* (குறள் 358)

என்பதில் 'சிறப்பு என்னும் செம்பொருள்' என்று மெய்ப்பொருளாம் இறைநிலை உண்மை குறிக்கப்பட்டுள்ளது காணலாம்.

*செம்பொருள் துணிவே சீருடைக் கழலே*
*செல்வமே சிவபெரு மானே*
*எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந் தருளுவது இனியே* (திருவா. பிடித்த. 1)

என மாணிக்கவாசகர் இறைவனைச் 'செம்பொருள் துணிவே' என விளிப்பதும் ஈண்டு ஒப்புநோக்கி உணரத்தகும்.

**வான்சிறப்பில் தானமும் தவமும்**

*தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்*
*வானம் வழங்கா தெனின்.* (குறள் 19)

இங்கே இல்லற-துறவற நெறிகளுக்கு மழை இன்றியமையாதது என அறத்துப்பாலின் தொடக்கமாகிய பாயிரப் பகுதியில் இருவகை நெறிகளுக்கும் வள்ளுவர் தோற்றுவாய் செய்துள்ளார். இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் உரிய சீரிய தனிப் பண்புகளாகிய தானமும் தவமும் முறையே எடுத்துக்காட்டி

யுள்ளமையால், அவ்விருவகை நெறியும் தோன்ற வைத்துள்ளமை காணலாம்.

**நீத்தார் பெருமையுள் வாய்மையும் வெகுளாமையும்**

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்.* (குறள் 28)

*குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி*
*கணமேயுங் காத்தல் அரிது.* (குறள் 29)

இவ்விரண்டு பாட்டிலும் துறந்தாரது வாய்மொழி குறித்தும், அவர்க்கு வெகுளி இயல்பாக இன்மை குறித்தும், கூறப்பட்டுள்ளன. துறவறவியலில் 'வாய்மை' (அதி. 30), 'வெகுளாமை' (அதி. 31) என இரண்டு அதிகாரங்களுள் விவரிக்கப்படும் பொருள்களின் சாரமாக இக்குறள்கள் உள்ளமை கவனிக்கத்தக்கது.

**அறன்வலியுறுத்தலில் அறனல்லாதவை**

*அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்.* (குறள் 35)

அறத்தின் இயல்பு யாது என்று விளக்க வந்த இடத்து, 'மனத்துக்கண் மாசில்லாமையே அறம்' எனப் பல கருத்துகளையும் உள்ளடக்கி,

*மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற* (குறள் 34)

என இரத்தினச் சுருக்கமாக உரைத்த கருத்திற்கு விளக்கமாக அடுத்து வருவது இக் குறள். இதில் மனத்துக்கண் சேரக்கூடாத மாசுகள் நான்கு என சுட்டிக் காட்டுகின்றார் வள்ளுவர். பின்னர், ஆசிரியர் விளக்கமாக உரைக்கப்போகும் பொருள்களின் வித்தாக அமைகிறது இப் பாட்டு. நூலுள், 'அழுக்காறாமை' (17), 'அவா வறுத்தல்' (37), 'வெகுளாமை' (31) என இவை தனித்தனி அதிகாரங்களால் கடியப்பட்டுள்ளமை காணலாம். இன்னா சொல்லாமையை 'இனியவை கூறல்' (10) அதிகாரத்துள் அடக்கிச் சுட்டியுள்ளார். இனியவை கூறுதலே அறம் என்பதனால் இன்னா கூறுதல் அறமன்று என விலக்கப்படுதல் பெறப்படும். எனினும், அவ்வதிகாரத்துள் வரும் இறுதி இரண்டு பாடல்களிலும் இன்னாத கூறுதலாகிய வன்சொல் வழங்குதலைக் கடிந்துரைக்கின்றார் (99, 100). 'இன்னா செய்யாமை' என்பது குறித்துத் துறவற

வியலில் ஓர் அதிகாரம் (32) 'வெகுளாமை'யை (அதி. 31) அடுத்து வைக்கப்பட்டுள்ளது. இன்னு செய்வதற்கு முக்கியமான ஏது வெகுளியே. அதனுல்தான் வெகுளாமை வேண்டும் என்றவர் அதனையடுத்து இன்னு செய்தலும் கூடாது என 'இன்னு செய்யாமை' என்னும் அதிகாரத்தால் ஆசிரியர் துறவறவியலில் விளக்குகின்ருர்.

## இல்வாழ்க்கையும் தவ வாழ்க்கையும்

இல்வாழ்க்கையின் இயல்பினையும் சிறப்பினையும் நன்கு விளக்கி, இவ் வையத்தில் இல்லற நெறி தவருது வாழ்பவன் வானுலகத்துறையும் தேவனுக மதிக்கப்படுவான் என்று உரைக்கின்ருர் தெய்வப் புலவர்.

இல்வாழ்க்கை பற்றிப் பேசுமிடத்து அது துறவியரின் நிலையினும் மேம்பாடுடையது எனப் பாராட்டுகின்ருர். இல்வாழ்க்கைக்கு ஏற்றம் கூறும் வகையில் துறவு வாழ்க்கையை அதனேடு ஒப்பிட்டுக் காட்டுகிருர்.

*அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்*
*போஒய்ப் பெறுவது எவன்.* (குறள் 46)

*இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*
*முயல்வாருள் எல்லாம் தலை.* (குறள் 47)

*ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை*
*நோற்பாரின் நோன்மை யுடைத்து.* (குறள் 48)

*அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
*பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.* (குறள் 49)

இந்நான்கு பாடல்களும் நோற்பார் ஆகிய துறவியர் நிலையினும் இல்வாழ்க்கை மேம்பட்டது என்னும் நோக்கில் கூறப்பட்டனவாம். இம்முறையிலேயே 'தவம்' (அதி. 27), 'துறவு' (அதி. 35) என்பவை குறித்துப் பேசும் அதிகாரங்களில் இல்லறத்தார் நிலையை எடுத்துரைத்து, துறவியர் வாழ்வு சிறப்புடைத்து எனக் காட்ட முற்படுகின்ருர்.

*துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்*
*மற்றை யவர்கள் தவம்.* (குறள் 263)

*தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற் றல்லார்*
*அவம்செய்வார் ஆசையுள் பட்டு.* (குறள் 266)

எனத் தவம்பற்றிப் பேசுமிடத்து, அதனை மேற்கொள்ள இயலாத ஏனையரைக் குறித்துப் பேசுகின்றார்.

*தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி*
*வலைப்பட்டார் மற்றை யவர்.* (குறள் 348)

என்று துறவியர் பெருமை பேசுகின்றார். இவ்வாறு ஒவ்வொரு பொருளின் ஏற்றத்தைக் குறிக்குமிடத்தும் அதனோடு இயைபுடைய பிறபொருளையும் ஒப்ப வைத்து ஒன்றற்கொன்றுள்ள ஏற்றத்தாழ்வு களைப் பேசுவது கேட்பார்க்கும் அவைபற்றித் தெளிவு பிறக்க ஏதுவாம். ஊன்றி நோக்கின், இல்லறமும் துறவறமும் அதனதன் நெறிப்படி அமைந்தால் சிறப்பு என்பதனை வலியுறுத்துவதே ஆசிரியரின் நோக்கம் என்பது தெளிவு.

## இல்வாழ்க்கையின் உயிர்நிலை அன்பு

'அன்புடைமை' வாழ்க்கைக்கு ஆதாரமானது என்பது குறித்து ஓர் அதிகாரமே அமைத்து (அதி. 8) ஆசிரியர் விளக்கம் தருகிறார். இதனை முதலில் குறிப்பால் வெளிப்படுப்பார் போல 'இல்வாழ்க்கை' அதிகாரத்தில்,

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது* (குறள் 45)

என்று எடுத்துக் கூறுதல் உளங்கொளத் தக்கது.

இவ்வாறே ஒவ்வோர் அதிகாரத்தையும் ஊன்றி நோக்குவோமாயின், அதனோடு தொடர்புடைய பிற பொருள்களை ஆசிரியர் உடன் வைத்து விளக்கிக் கேட்பார் தாம் உணர்த்தும் பொருளை நன்கு உளம் கொளும் வகையில் நூல் முழுமையும் அமைத்துச் செல்லுகின்றார். அவை ஒவ்வொன்றையும் விளக்கி உரைத்துக் கொண்டு போவோமானால், அது எல்லையின்றி விரிந்து பரந்து செல்லும். ஆகவே, பாடல்கள் மட்டும் இங்கே தொடர்ந்து முறையே தரப்பட்டுள்ளன. சிலவற்றிற்குச் சுருக்கமான குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளன.

## வாழ்க்கைத் துணைக்குப் புகழ் விருப்பு வேண்டும்

*புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்*
*ஏறுபோல் பீடு நடை.* (குறள் 59)

புகழொடு வாழ்தல் வேண்டும் என்பது 'புகழ்' அதிகாரத்தில் (24) விளக்கப்படுகிறது.

**வாழ்க்கைத்துணைக்கு நன்கலம் நன் மக்கட்பேறு**

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு.* (குறள் 60)

இது அடுத்துவரும் 'புதல்வரைப் பெறுதல்' அதிகாரத்திற்குத் தோற்றுவாய்.

**மக்கட்பேறு-கல்வி, அறிவுடைமை, சான்றாண்மைகளால் சிறப்புறும்**

*தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையதது*
*முந்தி யிருப்பச் செயல்.* (குறள் 67)

*தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது.* (குறள் 68)

*ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்.* (குறள் 69)

'கல்வி' (அதி. 40), 'அறிவுடைமை' (அதி. 43) 'சான்றாண்மை' (அதி. 99) என்பவை குறித்துப் பொருட்பாலில் தனித்தனி அதிகாரங்கள் உள. கல்வியும் அறிவுடைமையும் சான்றாண்மையும் புதல்வர் இன்றியமையாது பெறுதல் வேண்டும் என்பது இவற்றால் வலியுறுத்தப்பட்டுள்ளமை தெளிவாம்.

**இனியவை கூறலுக்கு இணையானது பணிவு**

*பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
*அணியல்ல மற்றுப் பிற.* (குறள் 95)

பணிவுடைமையாகிய 'அடக்கமுடைமை' (அதி. 13) தனி அதிகாரத்தால் பின்னர் விளக்கப்படுகிறது.

இக் குறளின் உரையில், "இன்சொலனாதற்கு இனமாகலின் பணிவுடைமையும் உடன் கூறினார்" எனப் பரிமேலழகர் தரும் உரை விளக்கம் ஆசிரியர் இனமான பொருள்களை ஒருசேர வைத்து விளக்கும் இயல்புடையார் என்பதனைத் தெளிவுபடுத்துகிறது.

**விருந்தோம்பலால் வித்தின்றி விளைதல்**

*வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி*
*மிச்சில் மிசைவான் புலம்.* (குறள் 85)

வித்தின்றி விளைவு செய்வது இறைவனுடைய அருட்சத்தியாம். "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" (திருவாச. திருச்சதகம் 96) என்கிறார் மாணிக்கவாசகர். விருந்தோம்புவான் நிலம் தானே

விளையும் என விருந்தோம்புதலினால் வரும் தன்மையை வள்ளுவர் உயர்வுபடுத்திப் பேசுகிறார். இங்கே வித்திட்டு விளைவு செய்யும் உழவுத் தொழிற் செய்தி பொதிந்துள்ளமையும் காணலாம். 'உழவு' என்னும் அதிகாரத்துள் (104) தெரிவிக்கப்பட்டுள்ள உழவுச் செய்திகளுடன் இதனையும் இணைத்துக்கொள்ள வேண்டுவதாம். குடிமை அதிகாரத்துள் உவமையாக எடுத்துக்காட்டப்பெறும் நிலத்துள் மறைந்து கிடக்கும் விதைத்த விதைபற்றிய செய்தியையும் இதனோடு சேர்த்துக் கொள்ளலாம்.

*நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்*
*குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.* (குறள் 959)

இங்கே வித்து நிலத்துள் மறைந்து கிடந்தாலும் அது உள்ளிருப்பதையும் அதன் தன்மையையும் அதிலிருந்து தோன்றும் முளை தெரிவிக்கும் என்னும் செய்தி புலனாகும். இஃது உழவு அதிகாரத்தில் ஆசிரியரால் கூறப்படாத புதுச்செய்தி—விளைவுக்கு ஏதுவாகவுள்ள முதற்செய்தி என்பதும், இதனை வேறு அதிகாரங்களில் ஆசிரியர் பெற வைத்துள்ளார் என்பதும் தெரியவரும்.

### செய்ந்நன்றியறிதலில் நட்பு

தமக்கு உதவியவர்களின் நட்பை என்றும் மறவாது போற்றுதல் வேண்டும் எனக் கூறும் அவசியம் நோக்கி, 'நட்புடைமை'யின் இயல்பும் இவ்வதிகாரத்துள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளமை காணலாம்:

*மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க*
*துன்பத்துள் துப்பாயார் நட்பு.* (குறள் 106)

*எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்*
*விழுமந் துடைத்தவர் நட்பு.* (குறள் 107)

'நட்பு'க் குறித்துப் பொருட்பாலில் 'நட்பியல்' என ஓர் இயலே வகுத்துரைக்கப்படுகிறது. இங்குக் கூறிய இரு பாடல்களும் 'நட்பு' அதிகாரத்திற்கும் (79) ஏற்புடைத்தாதல் காணலாம்.

### நடுவுநிலைமையில் அவையத்துச் சான்றோரும் வாணிகரும்

*சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர்க் கணி.* (குறள் 118)

*சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா*
*உட்கோட்டம் இன்மை பெறின்.* (குறள் 119)

*வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவும் தமபோற் செயின்.* (குறள் 120)

எல்லார்க்கும் நடுவு நிலைமை வேண்டும். ஆயினும், அறங்கூறும் அவையத்துச் சான்றோர்க்கும் வாணிகர்க்கும் இது சிறப்பாக அமைய வேண்டும் பண்புகளாகும். இதனை விளக்கும் பொருட்டே வள்ளுவர் இவ்விருவரையும் இங்குத் தனிப்பட எடுத்துக் கூறினாராதல் வேண்டும்.

## அடக்கமுடைமையில் சொற்குற்றமும் வெகுளியும்

*யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.* (குறள் 127)

*ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்*
*நன்றாகா தாகி விடும்.* (குறள் 128)

*தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினாற் சுட்ட வடு.* (குறள் 129)

*கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி*
*அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.* (குறள் 130)

அடக்கம் வேண்டும் என்பது மனம், மொழி, மெய் பற்றிய தாதலின் இங்குச் சொற்குற்றம் காக்கக் கூறியது பொருத்தமே. மேலே சொல் பற்றிப் 'புறங்கூறாமை' (அதி. 19) 'பயனில சொல் லாமை' (அதி. 20) எனத் தனித்தனி அதிகாரங்களிலும் வேறுபல இடங்களிலும் சொல்லினால் வரும் தீங்குகள் எடுத்துக்காட்டப் படுகின்றன. இங்கே 'அடக்கம்' என்னும் பொருள் இயைபு நோக்கி, 'நாவடக்கமும்' எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. 'துறவியர்க்குப் போலவே ஏனையர்க்கும் வெகுளி கூடாது' என்பதும், அரசர்க்குப் போலவே மற்றையோர்க்கும் கல்வி வேண்டும் என்பதும் 'கதம் காத்துக் கற்றடங்கலாற்றுவான்' என்பதனால் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளமை காணலாம்.

## ஒழுக்கமுடைமை குடிமைப்பண்பு

*ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்*
*இழிந்த பிறப்பாய் விடும்.* (குறள் 133)

*உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்.* (குறள் 140)

குடிமை (அதி. 96), கல்வி (அதி. 40) பற்றிக் கூறும் அதிகாரங் களுக்கும் இப் பாடல்கள் பொருத்தமுடையவாதல் காணலாம்.

மேலும்,

*அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை*
*ஒழுக்க மிலான்கண் உயர்வு.* (குறள் 135)

என அழுக்காறு உடையான் ஒப்பாக எடுத்துக்காட்டப்படுகிறுன். அடுத்து 'அழுக்காருமை' (அதி. 17) குறித்து ஓர் அதிகாரம் உள்ளமையும் கருதத்தகும்.

### பிறனில் விழையாமை—சான்ருேர்க்கு அறம்

*பிறன்மனை நோக்காத பேராண்மை சான்ருேர்க்கு*
*அறனென்ருே ஆன்ற ஒழுக்கு.* (குறள் 148)

சான்ருண்மை (அதி. 99) அதிகாரத்திற்கும் இக் குறள் பொருந்துவதாகும்: இஃது எல்லாரும் தவிரத் தகுவதேயாயினும் சான்ருேர் நிலைக்குச் சற்றும் பொருந்தாது எனக் காட்டும்பொருட்டு பிறனில் விழையாமையில் இவரைத் தனிப்படச் சுட்டியுரைக்கின்ருர் ஆசிரியர்.

### பொறையுடைமையில் நிறையுடைமை

*நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை*
*போற்றி ஒழுகப் படும்.* (குறள் 154)

இங்கே நிறையுடைமை என்பது நிறை குணமுடைய சான்ருண்மையாளரையும் மனமொழி மெய்களை அடக்கி நிறுத்தும் அடக்கமுடையாரையும் குறிக்கும். ஆகவே பொறையுடைமை சிறப்பாக அடக்கமுடைய சான்ருேர்க்குரிய பண்பு என்பது விளங்கும். எனவே, தமக்கு வரும் துன்பங்களைப் பொறுக்கும் பண்புடையாராகிய துறவோருடன் ஒப்பிட்டுப் பேசுகின்ருர் ஆசிரியர்.

*துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்*
*இன்ஞச்சொல் நோற்கிற் பவர்.* (குறள் 159)

*உண்ணுது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்*
*இன்ஞச்சொல் நோற்பாரின் பின்.* (குறள் 160)

இவற்ருல் துறவோர்க்குப் பொறுமை இன்றியமையாது வேண்டும் என்பதோடு ஏனையோர்க்கும் இப் பண்பு வேண்டும் என்பது எடுத்துக் கூறப்படுதல் காணலாம்.

### அழுக்காறு இல்லாமை ஒழுக்கநெறி

*ஒழுக்காருக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து*
*அழுக்காறு இலாத இயல்பு.* (குறள் 161)

அன்புடைமை, பண்புடைமை முதலியன எல்லாம் ஒழுக்க நெறியாயினும் இவ்வழுக்காறாமையை ஒழுக்க நெறி போலக் கொண்டு போற்ற வேண்டும் என்பதாம்.

### புறங்கூறலுக்கு இணையானது பொய்ம்மை

*அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே*
*புறனழீஇப் பொய்த்து நகை.* (குறள் 182)

*புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்*
*அறங்கூறும் ஆக்கந் தரும்.* (குறள் 183)

பொய்ம்மை உண்மைக்கு நேர்மாறானது. புறங்கூறுவான் பொய்கூறி வாழ்தலினும் சாதல் நன்று என்கிறார் ஆசிரியர். வாய்மை பற்றிப் பேசிய அதிகாரத்தில் (30) அதற்கு மாறான பொய்யைக் கூறலாகாது எனக் கடிந்துரைத்துள்ளமை போலவே (293, 294, 296, 297, 299) புறங்கூறாமை வேண்டும் என்ற இடத்தும் பொய் கடியப்பட வேண்டும் என்கிறார்.

### புறங்கூறுவோர் நட்பின் மாண்பு அறியாதார்

*பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி*
*நட்பாடல் தேற்றா தவர்.* (குறள் 187)

*துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்*
*என்னைகொல் ஏதிலார் மாட்டு.* (குறள் 188)

'நட்பாடல்' (187) என்றும் 'துன்னியார்' (188) என்றும் கூறியவை நட்பின் இயல்புகளைக் காட்டுவன. நட்பிற்குப் பொருந்தாத செய்கை புறங்கூறுதல் என எடுத்துக்காட்டுவார் இங்கு நட்பின் பாங்கும் பகர்வாராயினர்.

### பயனில சொல்லுதலும் நட்டார்க்கு நயனில செய்தலும்

*பயனில பல்லார்முன் சொல்லல் நயனில*
*நட்டார்கண் செய்தலின் தீது.* (குறள் 192)

நட்டார்க்கு விரும்பத் தகாதவற்றைச் செய்தலை விடத் தீமை தருவது பயனில சொல்லுதல் என்பதாம். இதுபோன்று பகைவரைத் துணையாக்கிக் கொள்க என்றவிடத்தும் நட்டார் எடுத்துக் காட்டப் படுதல் கவனிக்கத்தக்கது.

*நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே*
*ஒட்டாரை ஒட்டிக் கொளல்.* (குறள் 679)

### பயனில சொல்லாமை சான்றோர்க்கு இயல்பு

*நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்*
*பயனில சொல்லாமை நன்று.* (குறள் 197)

*அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்*
*பெரும்பயன் இல்லாத சொல்.* (குறள் 198)

*பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த*
*மாசறு காட்சி யவர்.* (குறள் 199)

இம் மூன்று பாடல்களும் சான்றாண்மை அதிகாரத்திற்கும் (99) பொருத்தமானவை. மெய்யறிவு படைத்த சான்றோர் விலக்க வேண்டுவது பயனில்சொல் என எடுத்துக் காட்டவேண்டி இங்கு அமைக்கப் பெற்றன இப் பாடல்கள்.

### தீவினைப் பகையும் பிற பகைகளும்

*எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை*
*வீயாது பின்சென்று அடும்.* (குறள் 207)

'தீவினையச்சம்' கூறுமிடத்துத் தீவினையாகிய பகை மீளமுடியாத துயர் தருவது என்பது காட்டப் பிறபகைகளும் ஒப்பாகக் கூறப் பெற்றன.

*வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்*
*தீயெச்சம் போலத் தெறும்.* (குறள் 674)

எனப் பின்னர் வினைசெயல்வகை அதிகாரத்துள் (68) வினைக் குறையும் பகைக்குறையும் தீப்போலப் பெருகி வருத்தந்தரும் எனக் குறிப்பிட்டுள்ளமையும் இதனோடு ஒருங்குவைத்துக் காணத்தகும்.

### ஈகையில் இரத்தல்

*நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்*
*இல்லெனினும் ஈதலே நன்று.* (குறள் 222)

*இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்*
*இன்முகங் காணும் அளவு.* (குறள் 224)

*இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய*
*தாமே தமியர் உணல்.* (குறள் 229)

கொள்ளுதல் தீது கொடுப்பது நன்று என்று எடுத்துக்காட்டும் முகத்தால் இரந்து கோடலும் இங்கு உடன் எடுத்துக் கூறப் பெற்றதாம். பின்னர், இரத்தலைக் குறித்து 'இரவு' (அதி. 106), இரவச்சம்' (அதி. 107) என ஈரதிகாரங்கள் பொருட்பாலில்

உள்ளமையும் சிந்திக்கத்தக்கது. ஈகையை எண்ணும்போது இரத்தலும் இரவச்சமும் தோன்றுதல் இயல்பே.

ஈகையை உரைக்கும்போது இங்கே இரத்தலும் உடன் பேசியது போல, பின்னர் இரத்தலைக் கூறும் இரவு அதிகாரத்துள் ஈகை பற்றி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அவை பின் வருமாறு:

*இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்*
*கனவிலும் தேற்றாதார் மாட்டு.* (குறள் 1054)

*இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்*
*மரப்பாவை சென்றுவந் தற்று.* (குறள் 1058)

*ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்*
*மேவார் இலாஅக் கடை.* (குறள் 1059)

இப் பாடல்களால் மறுக்காது கொடுப்பவரிடம் இரந்தும் ஒன்றைப் பெறலாம் என்பதும், இரப்பார் உள்ளமையினால்தான் உலகத்தில் ஈவாரின் பெருமை புலப்படுகிறது என்பதும் விளங்கும்.

### ஈகையார் நற்குடிப் பிறந்தார்

*இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்*
*குலனுடையான் கண்ணே உள.* (குறள் 223)

இப் பாடல் குடிப் பிறப்புப் பற்றிப் பேசும் 'குடிமை' (96) என்னும் அதிகாரத்திற்கும் ஏற்புடையது.

### புகழ் ஈகையால் வரும்

*ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது.*
*ஊதியம் இல்லை உயிர்க்கு.* (குறள் 231)

ஈகையால் புகழுளதாம் எனக்காட்ட வேண்டி ஈகையை அடுத்து அமைத்துள்ள புகழ் அதிகாரத்தின் முதற் பாடலிலும் ஈகை பற்றி வள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

### அருளுடைமையும் பொருளுடைமையும்

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. (குறள் 241)

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (குறள் 247)

பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது. (குறள் 248)

*பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி*
*ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.* (குறள் 252)

அருளின் உயர்வு கூறுவார், அஃது உலகியல் வாழ்வுக்குப் பொருள்போல் மேலுலக வாழ்வுக்கு இன்றியமையாதது என்று காட்டுகின்றார். இல்லறத்தார்க்குப் பொருள் போலத் துறவறத் தார்க்கு அருள் சிறந்தது என்றும் எடுத்துகாட்டியவாறும். மேற் காட்டியவற்றுள் 'அருளில்லார்க்கு' (குறள் 247) 'பொருளாட்சி (குறள் 252) எனவரும் குறள்கள் 'பொருள் செயல்வகை' எனவரும் அதிகாரத்திற்கும் (76) பொருத்தமாக உள்ளமை கவனிக்கத்தக்கது.

## அருளும் உறுதிப்பொருள் மெய்ப்பொருள்களும்

*பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி*
*அல்லவை செய்தொழுகு வார்.* (குறள் 246)

*தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்*
*அருளாதான் செய்யும் அறம்.* (குறள் 249)

அருளில்லாதான் உறுதிப்பொருள், மெய்ப்பொருள்கள் காணான் என்கிறார். மேல் வரும் 'மெய்யுணர்தல்' அதிகாரத்தின் (அதி. 36) பொருளைக் குறிப்பாக அருளுடையார் பெறுவர் எனக் காட்ட முற்படு கின்றார் ஆசிரியர்.

## புலால்மறுத்தலில் அருளுடைமை, கொல்லாமை

*தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்.* (குறள் 251)

*அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்*
*பொருளல்லது அவ்வூன் தினல்.* (குறள் 254)

அருள் காரணமாகக் கொல்லாமையும், புலால்மறுத்தலும் உண்டாதல் கூடும் என்பதைக் காட்டல்வேண்டிப் புலால்மறுத்தலில் முக்கியமாக முற்கூறிய அருளுடைமைக் கருத்துகளையும் எடுத் துரைக்கின்றார்.

*தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்*
*விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்* (குறள் 256)

எனவரும் பாடல் கொல்லாமை அதிகாரத்திற்கும் (33) பொருந்தும் பாடலாம்.

## புலால் மறுத்தலில் பொருளாட்சி

*பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி*
*ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு* (குறள் 252)

'பொருள் செயல் வகை' அதிகாரத்திற்கு (76) ஏற்புடைய கருத்து இங்கு உவமை வாயிலாக எடுத்தாளப்பட்டுள்ளது.

### தவம் செய்வாரும் மற்றையவரும்

*துறந்தார்க்குத் துப்புரவுவேண்டி மறந்தார்கொல்*
*மற்றை யவர்கள் தவம்.* (குறள் 263)

*தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்*
*அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.* (குறள் 266)

இங்கே 'மற்றையவர்' என்பதில் இல்லறத்தாரும் அடங்குவ ரன்றோ? இல்வாழ்க்கையில் துறவியர் நிலையினும் இல்வாழ்வார் நிலை சிறந்தது என்றாற்போல இங்கும் துறவறத்தார் உயர்வு காட்ட இவ்வாறு பேசுகின்றார்.

### கூடாவொழுக்கம் தவத்தினரைக் குறித்தது

*தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து*
*வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.* (குறள் 274)

*நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து*
*வாழ்வாரின் வன்கணார் இல்.* (குறள் 276)

இவ்வொழுக்கம் துறவறவியலில் வருவதால் துறந்தாரை நோக்கிக் கூறியது என்பது தெரியவருமாயினும், இங்கே வெளிப் படையாகத் துறந்தாரை குறிப்பிட்டிருத்தல் கவனிக்கத் தக்கது.

### உருவமும் செயலும்

*கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன*
*வினைபடு பாலால் கொளல்.* (குறள் 279)

யாழும் கணையும் தத்தம் உருவிற்கு எதிர்மாறான செயல் புரிதல் கூறப்பட்டுள்ளமை காணலாம். தவத்தினரின் புறத்தோற்றம் கண்டு ஒருவரைத் தெளியற்க,—அவருடைய செயலைக் கொண்டு தெளிக என எடுத்துக் காட்டுகின்றார்.

*உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு*
*அச்சாணி அன்னார் உடைத்து.* (குறள் 667)

என வினைத்திட்பத்தில் வரும் (அதி. 67) பாடலின் பொருளுக்கும் இதற்கும் கருத்து வகையால் ஒப்புமை உள்ளமை காணலாம்.

### கூடாவொழுக்கத்தில் தவத்தினரின் வடிவு

*புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி*
*மூக்கிற் கரியார் உடைத்து.* (குறள் 277)

*மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின்.* (குறள் 280)

இது முந்திய அதிகாரமாகிய தவம் (அதி. 27) என்பதனோடு இயைபுடைமையால் தவவேடத்தால் தகாத ஒழுக்கம் புரிந்து மறைந்து ஒழுகும் போலித் துறவிகளின் போக்கினை இவற்றால் புலப்படுத்துகின்றார். இவ்வதிகாரம் முந்திய அதிகாரமாகிய 'தவம்' என்பதனோடு மிகவும் நெருங்கிய இயைபுடையது. இவற்றால் துறவியரின் புறத்தோற்றத்தை ஆசிரியர் வள்ளுவர் நமக்குச் சித்திரித்துக் காட்டுகின்றார்.

### கள்ளாமையில் அருளும் அன்பும்

*அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்*
*பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.* (குறள் 285)

அருளின் உயர்ச்சியைப் பெற அன்புடையராதல் என்பது

*அருளென்னும் அன்பீன் குழவி பொருள்என்னும்*
*செல்வச் செவிலியால் உண்டு* (குறள் 757)

எனப் 'பொருள் செயல் வகை' அதிகாரத்துள் வரும் (76) இப் பாடலின் கருத்தை ஒத்துளது. 'பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்' என்பது பின்னர் 54-ஆம் அதிகாரமாக வரும் 'பொச்சாவாமை' என்னும் அதிகாரப் பொருளுக்கும் இயைபுடைய பாடலே.

### வாய்மையுள் பொய்ம்மை

வாய்மை என்பதன் எதிரான பொய்ம்மை பற்றிக் கூறியதோடு அதனைச் செய்யாமை என்பதனால், 'பொய்யாமை' என்னும் சொல்லும் வாய்மையையே குறித்து வழங்குதலை வாய்மை அதிகாரத்தில் ஆசிரியர் சுட்டுகின்றமை நோக்கி அறியலாம்.

*பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்.* (குறள் 292)

*தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்*
*தன்நெஞ்சே தன்னைச் சுடும்.* (குறள் 293)

*உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்*
*உள்ளத்து ளெல்லாம் உளன்.* (குறள் 294)

*பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை*
*எல்லா அறமும் தரும்.* (குறள் 296)

*பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற*
*செய்யாமை செய்யாமை நன்று.* (குறள் 297)

*எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு.* (குறள் 299)

இங்ஙனமாக ஆறு குறள்கள் பொய்யாமை பற்றி 'வாய்மை' அதிகாரத்துள் காணப்படுகின்றன.

## வெகுளாமையில் இன்னுசெய்யாமை

*இணர்எரி தோய்வன்ன இன்னு செயினும்*
*புணரின் வெகுளாமை நன்று.* (குறள் 308)

இங்கே அடுத்து ஆசிரியரால் கூறப்பட இருக்கும் 'இன்னு செய்யாமை' பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது காணலாம்.

## இன்னுசெய்யாமையில் அறிவுடைமை

*அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்*
*தன்நோய்போல் போற்ருக் கடை.* (குறள் 315)

அறிவின் பயன் பிறர் நோய்க்குப் பரிதல் எனக் கூறுதலால் இஃது 'அறிவுடைமை அதிகாரத்திற்கும்' (43) வரும் தகுதி படைத்ததாம்.

## கொல்லாமையும் ஒப்புரவும்

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.* (குறள் 322)

இங்கே உயிர் ஓம்புதல் என்பதனுல் 'கொல்லாமை'யைக் குறிப்பினுல் பெற வைக்கின்ருர். ஆயினும் எல்லார்க்கும் உபகாரியாம் தன்மை பேசுதலான் 'ஒப்புரவறிதல்' அதிகாரப் (22) பொருளுக்கும் இது பொருந்திய பாட்டாம்.

*பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்*
*தீப்பிணி தீண்டல் அரிது.* (குறள் 227)

என ஈகை அதிகாரத்திலும் பகுத்துண்டல் பேசப்படுதல் காணலாம். ஆகவே உயிர் நிலை பெற 'உணவு' இன்றியமையாதது என்னும் கருத்து இவற்ருல் போதரும்.

'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே'

எனவரும் சங்கநூல் பாடல் கருத்து இங்கு நினைவு கூரத்தகும்.

**கொல்லாமையோடு பொய்யாமை**

வாய்மை அதிகாரத்தில் (அதி. 30) பொய்யாமை பற்றி உரைத்த போதிலும், கொல்லாமையின் உயர்வு கூறும் பொருட்டாகப் பொய்யாமையும் பின்வரும் குறளில் உடன் கூறப் பட்டுள்ளமை காணலாம்.

*ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றுஅதன்*
*பின்சாரப் பொய்யாமை நன்று.* (குறள் 323)

**கொல்லாமையுள் துறவுக்காரணம்**

*நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்*
*கொல்லாமை சூழ்வான் தலை.* (குறள் 325)

தவம் (அதி. 27), துறவு (அதி. 35) அதிகாரங்களில் விளக்கப்பட வேண்டிய கருத்து இங்கு எடுத்துக்காட்டப்படுதல் காணலாம். நிலையாமையை (அதி. 34) அடுத்துத் துறவு அதிகாரம் (35) வைக்கப்பட்டுள்ளமையினுலும் துறவுக் காரணம் புலப்படு மாயினும், மேற்குறித்த பாடல் தெளிவுற நிலையாமை காரணமாகத் துறவு மேற்கொள்ளப்படுதலை அறிவுறுத்துதல் காணலாம்.

**நிலைமையுள் ஈகை**

*அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்ருல்*
*அற்குப ஆங்கே செயல்.* (குறள் 333)

நிலையாமை உணர்ச்சியே அறவழிச் செலுத்தும் என்னும் கருத்தில் நில்லாத செல்வம் பெற்ருர் அதன் இயல்பு தெரிந்து அப்பொழுதே என்றும் நிலைபெறும் அறம் செய்யவேண்டும் என்று வள்ளுவர் வற்புறுத்தி உரைக்கின்ருர்.

**துறவில் கடவுள்-பற்று**

*பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு.* (குறள் 350)

இது கடவுள் வாழ்த்து அதிகாரப் பாடல்களுடன் ஒருசேர வைத்து நோக்கும் பொருள் நோக்கு உடையது.

**ஊழ்வினையும் ஆள்வினையும்**

*ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்*
*போகூழால் தோன்றும் மடி.* (குறள் 371)

பொருட்பாலில் தனித்தனி அதிகாரங்களில் விளக்கப் பெற்ற மடியின்மை (அதி. 61), ஆள்வினையுடைமை (அதி. 62) அதிகாரங் களின் கருத்துகளை உட்கொண்டு கூறப் பெற்றது இப் பாட்டு.

### ஊழால் பேதைமையும் அறிவும்

*பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்*
*ஆகலூழ் உற்றக் கடை.* (குறள் 372)

பேதைமை (அதி. 86), அறிவுடைமை (அதி. 43) என்பவை குறித்துப் பொருட்பாலில் தனித்தனி அதிகாரங்கள் வந்துள்ளமை காணலாம்.

### கல்வியும் செல்வமும் ஊழான் மாறுபடுதல்

*நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்*
*உண்மை அறிவே மிகும்.* (குறள் 373)

*இருவேறு உலகத்து இயற்கை திருவேறு*
*தெள்ளிய ராதலும் வேறு.* (குறள் 374)

*பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்*
*சொரியினும் போகா தம.* (குறள் 376)

கல்வி, செல்வம் என்னும் இரண்டும் உலகில் வெவ்வேறு நிலையில் பொருந்திக் காணப்படுதல் பற்றிக் கூறப்படுதலால் இங்கு 'ஊழ்' அதிகாரத்து உரைக்கப்படுகிறது. பொருட்பாலில் வரும் கல்வி (அதி. 40), பொருள் செயல் வகை (அதி. 76) பற்றி உரைக்கப்பட்ட அதிகாரப் பொருள்கள் ஊழான் மாறுபடுதல் நோக்கி உரைக்கப்பட்டதாகக் கொள்ளல் வேண்டும்.

### ஊழால் வருபயன்-தெய்வத்தால் வருபயன்

*வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி*
*தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.* (குறள் 377)

இது கடவுள் வாழ்த்துப் பாடல்களுடன் ஒப்பவைத்துப் பார்க்கத் தக்க பாடலாகும்.

### ஊழினுல் துறவறம் வரும்

*துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால*
*ஊட்டா கழியு மெனின்.* (குறள் 378)

இங்கே சிலருடைய துறவிற்குக் காரணம் கூறப்பட்டுள்ளது. எனவே, இது துறவு என்னும் அதிகாரத்திற்கும் (அதி. 35) பொருத்தமுடையதாம்.

### இறைமாட்சி—ஒரு தொகுப்புரை அதிகாரம்

மன்னனின் மாட்சி உரைக்கும் இவ்வதிகாரத்துள் அரசனுக்குரிய குணநலன்கள் குறித்தும், அவனுக்குத் துணையாக

உள்ளாரைக் குறித்தும் பற்பல கருத்துகள் தொகுத்துரைக்கப் பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக,

*படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு.* (குறள் 381)

என்பவை குறித்துத் தனித்தனி இயல்களும் பல அதிகாரங்களும் பொருட்பாலில் வகுத்துரைத்துள்ளமை காணலாம். தவிரவும், வேறு பல குணநலன்களும் இங்கு உரைக்கப்பட்டுள்ளன. அவை யாவன: அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் (குறள் 382) தூங்காமை, கல்வி, துணிவுடைமை (குறள் 383) மானம் (குறள் 384) இயற்றல், ஈட்டல், காத்தல், காத்த வகுத்தல் (குறள் 385) காட்சிக்கு எளியன்; கடுஞ்சொல்லன் அல்லனுதல் (குறள் 386) இன்சொலனுதல், ஈதல் (குறள் 387) முறை செய்தல் (குறள் 388) கொடை, அளி, செங்கோல் குடியோம்பல் (குறள் 390) இங்குக் கூறியவற்றுள் பெரும்பாலனவும் பொருட்பாலில் தனி அதிகாரங்கள் வகுத்து விளக்கப்பட்டுள்ளமை காணலாம். இன்சொலனுதல், ஈதல் போன்றவை சில அறத்துப்பாலில் விவரிக்கப்பட்ட அதிகாரப் பொருள்களைச் சுட்டுவனவாம்.

### கல்லாமையுள் உவமையாகப் பிறபொருள்

கல்லாமை பேசவந்த இடத்து உவமை வாயிலாக பெண்ணின் காமவிழைவும், களர்நிலம் விளையாமையும் நல்லாரிடம் தோன்றும் வறுமையும் எடுத்துக் கூறுகின்றார். இவை முறையே காமத்துப் பாலுக்கும், உழவு, நல்குரவு என்னும் பொருட்பால் அதிகாரங் களுக்கும் பொருத்தமான பொருள்களாம்.

*கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்*
*இல்லாதாள் பெண்காமுற் றற்று.* (குறள் 402)

*உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்*
*களரனையர் கல்லா தவர்.* (குறள் 406)

*நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னுதே*
*கல்லார்கண் பட்ட திரு.* (குறள் 408)

### கேள்வியுள் காணும் பிறபொருள்

இவ்வதிகாரத்துள் செல்வம், உணவுகோடல், ஒழுக்க முடையார் உரை, பேதைமை சொல்லாமை, பணிமொழி என்பவை

பற்றிக் கூறப்பட்டுள்ளன. இவை முறையே பொருட்பாலில் வரும் பொருள் செயல்வகை (அதி. 76), மருந்து (அதி. 95), பேதைமை (அதி. 86) என்னும் அதிகாரத்துள் வரும் பொருள்களோடும், அறத்துப்பாலில் ஒழுக்கமுடைமை (அதி. 14), அடக்கமுடைமை (அதி. 13), எனவரும் அதிகாரப் பொருள்களோடும் தொடர் புடையனவாம். இக்கருத்துகள் குறித்துவரும் குறட்பாக்களாவன:

*செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்*
*செல்வத்துள் எல்லாம் தலை.* (குறள் 411)

*செவிக்குண வில்லாத போழ்து சிறிது*
*வயிற்றுக்கும் ஈயப் படும்.* (குறள் 412)

*பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து*
*ஈண்டிய கேள்வி யவர்.* (குறள் 417)

*இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே*
*ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.* (குறள் 415)

*நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய*
*வாயின ராதல் அரிது.* (குறள் 419)

### அறிவுடைமை: உலகத்தாரோடு ஒத்து நடத்தல்

*உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்.* (குறள் 140)

இதன் கருத்தாவது உலகத்தோடு ஒத்து நடத்தலே—அதாவது உயர்ந்தோர் வழியில் ஒழுகுதலே—அறிவுடையார் செயல் என்பது. இதன் விளக்கமாக அறிவுடைமையில் (அதி. 43) பின்வரும் குறள்கள் உள.

*உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்*
*கூம்பலும் இல்ல தறிவு.* (குறள் 425)

*எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு*
*அவ்வ துறைவது அறிவு.* (குறள் 426)

இவ்விருபாடல்களும் ஒழுக்கமுடைமையில் கூறிய 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்பதன் பொருளை விளக்கி உரைப்பனவாகும்.

### அறிவுடைமையில் பேதைமை

*அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது*
*அஞ்சல் அறிவார் தொழில்.* (குறள் 428)

'பேதைமை' என்பது குறித்துப் பொருட்பாலில் ஓர் அதிகாரமே (84) பின்னர் வருவது கருதத்தகும். இங்கே

அறிவுடையாரியல்போடு அவருக்கு நேர் எதிரான பேதைமை யுடையாரின் இயல்பு முரணொப்பாக உடன்கூறப் பெற்றுள்ளன.

## அறிவுடைமை-வருமுன்காத்தல்

*எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை*
*அதிர வருவதோர் நோய்.* (குறள் 429)

இஃது அறிவுடைமை அதிகாரத்தின் ஒன்பதாவது பாடல். இக் கருத்தையே நேர்மாறாகக் காவாதார் அழிவர் என்று இவ் வறிவுடைமையை அடுத்து வரும் குற்றம் கடிதலில் கூறப்படுதல் காணலாம் : அது வருமாறு :

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்.* (குறள் 435)

## குற்றம் கடிதல்: உலோபகுணம் போக்கல்

*செயற்பால செய்யாது இவறியான் செல்வம்*
*உயற்பால தன்றிக் கெடும்.* (குறள் 437)

*பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்*
*எண்ணப் படுவதொன் றன்று.* (குறள் 438)

பொருட்பாலில் பின்னர்த் தனி அதிகாரமாக விவரிக்கப் பெற்ற நன்றியில் செல்வம் (அதி. 101) என்பது இவ்விரண்டு பாட்டானும் விளக்கப்படுதல் கவனிக்கற்பாலது.

## தன் குற்றம் கடிதல் தலையாய அறம்

*தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்*
*என்குற்ற மாகும் இறைக்கு.* (குறள் 436)

தன் குற்றத்தை அறிந்து நீக்க வல்லவனே பிறர் குற்றத்தையும் கடிதற்குத் தகுதி படைத்தவன். இஃது அறத்துப்பாலில் புறங் கூறாமையில் (அதி. 19) கூறிய கருத்தைத் தழுவி, அரசனுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

*ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்*
*தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.* (குறள் 190)

எனவரும் புறங்கூறாமை அதிகாரப் பாடலுடன் இஃது ஒப்பு நோக்கிக் காணத்தக்கது.

### பெரியார் நட்பு

'பெரியாரைத் துணைக்கோடல்' (அதி. 45) என்பது பெரியாரை நட்பாகக் கொள்ளுதலாம். எனவே, இதில் கூறிய சில குறள்கள் 'நட்பு' அதிகாரத்திற்கும் (79) பொருத்தமானவை :

*அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை*
*திறனறிந்து தேர்ந்து கொளல்.* (குறள் 441)

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். (குறள் 446)

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். (குறள் 450)

இவை தவிரப் பிற பாடல்களிலும் ஒரு சில இடங்களில் இக் கருத்துப் பொதிந்த சொல்-தொடர்களைக் காணலாம்.

### பெரியாரைத் துணைக் கோடலில் பொருள் செயல்வகை

முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை. (குறள் 449)

உவமை வாயிலாகத் தரப்பட்ட பொருளியல் கருத்து பொருள் செயல்வகை அதிகாரத்தோடு (76) பெரிதும் இயைபுடையதாம்.

### சிற்றினம் சேராமை : நல்லினத்தாரை ஒப்புக்காட்டல்

*சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்*
*சுற்றமாச் சூழ்ந்து விடும்.* (குறள் 451)

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். (குறள் 460)

இவை முந்திய அதிகாரமாகிய பெரியாரைத் துணைக்கோடலில் (அதி. 45) இருந்தாலும் பொருத்த முடைத்தாகும். ஒன்றின் சிறப்போ தீமையோ கூறுமிடத்து அதன் இனமான அல்லது எதிரான பொருளையும் உடன்கூட்டிச் சொல்லுதல் முறைமை பற்றி இப் பாடல்கள் அமைந்தனவாம்.

### சான்றோர்க்கும் நல்லின நாட்டம் வேண்டும்

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும். (குறள் 457)

மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து. (குறள் 458)

இவ்விரண்டும் சிற்றினம் சேராமை அதிகாரத்துள் இருப்பினும் இவை முறையே புகழ்வரு காரணமும் நல்லார் கூட்டுறவும் பற்றி உரைப்பதால் முறையே 'புகழ்' (அதி. 24), 'சான்றாண்மை' (அதி. 99) அதிகாரங்களுக்கும் பொருத்தமுடையன. பொதுவாக நோக்கின், பெரியாரைத் துணைக்கோடல் (அதி. 45), சிற்றினம் சேராமை (அதி. 46), சான்றாண்மை (99) என்னும் மூன்றதிகாரங் களும் ஒன்றற்கொன்று பொருட் பொருத்தமுற அமைந்தவை என்பது விளங்கும்.

## சிற்றினஞ் சேராமையில் முக்கரணத் தூய்மை

*மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்*
*இனந்தூய்மை தூவா வரும்.* (குறள் 455)

இங்கே மனம், சொல், செயல் தூய்மைகள் நல்லினச் சேர்க்கையால் உளவாம் என உணர்த்தப்பட்டுள்ளன. இக் கருத்து இக் குறளுக்குரிய பரிமேலழகர் விளக்கத்தாலும் நன்கு விளங்கும். அது வருமாறு :

> *"மனந்தூயனாதலாவது விசேடவுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமையின் நீங்குதல். செய்வினை தூயனாத லாவது மொழிமெய்களால் செய்யும் நல்வினையுடையனாதல். 'தூ' என்பது அப்பொருட்டாதல் 'தூவறத் துறந்தாரை (கலி. 118 : 9) என்பதனானும் அறிக. ஒருவன் இனந் தூயனாகவே அதனோடு பயிற்சி வயத்தான் மனந்தூயனாய் அதன்கண் விசேடவுணர்வு புலப்பட்டு அதனால் சொல்லும் செயலும் தூயனாம் என இதனால் இனத்துள்ளவாமாறு கூறப் பட்டது."* (குறள் 455 - பரிமேலழகருரை)

இங்கே வரும் செய்வினை தூய்மை என்பது அடுத்து வரும் 'தெரிந்து செயல் வகை' (அதி. 47) என்னும் அதிகாரத்தை எதிர் நோக்கி உரைக்கப் பெற்ற கருத்தாகும்.

## தெரிந்து செயல்வகையில் பொருளியல் கருத்து

*ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை*
*ஊக்கார் அறிவுடை யார்.* (குறள் 463)

இஃது "முதலிலார்க்கு ஊதியம் இல்லை" (குறள் 446) என வரும் குறளின் பொருளோடு ஒப்புமையுடையது. 'பொருள் செயல் வகை' (அதி. 76) என்னும் அதிகாரப் பொருளுக்குப் பொருத்த மானவை இவ்விரண்டும். 'அறிவுடையார் இது செய்யார்' என

வருதலின், முன்னர்க் கூறப் பெற்ற 'அறிவுடைமை' அதிகாரத்துள் (43) இதனை அடக்கிக் கூறினும் ஒக்கும்.

### வலியறிதலில் பொருளின் வலிமை

வலியறிதலில் பொருள்வலி அறிந்து செயலாற்ற வேண்டும் என்று உணர்த்துகிறார். பொருள்வலி அறிந்து வினை போற்ற வேண்டும் என்கிறார்.

> *ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்*
> *போற்றி வழங்கும் நெறி.* (குறள் 477)

'ஈக' என்பதுகொண்டு ஈகை அதிகாரத்துள் (24) இப் பாடல் இருப்பினும் தக்கதே.

> *ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை*
> *போகாறு அகலாக் கடை.* (குறள் 478)

> *அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல*
> *இல்லாகித் தோன்றாக் கெடும்.* (குறள் 479)

> *உளவரை தூக்காத ஒப்புர வாண்மை*
> *வளவரை வல்லைக் கெடும்.* (குறள் 480)

இவை பொருள் செயல்வகை (76) அதிகாரத்துள் வரினும் தவறாகா. இறுதியில் உள்ள பாடலில் 'ஒப்புரவாண்மை' என்றுள்ளமையால் 'ஒப்புரவறிதல்' என்னும் அதிகாரத்தின் (22) பொருளுக்கும் இஃது ஏற்புடையதாய் உள்ளமை நோக்கத்தகும்.

### காலமறிதலில் இடனறிதல்

> *ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
> *கருதி இடத்தாற் செயின்.* (குறள் 484)

எனக் காலமறிதலில் வரும் நான்காம் பாடல் அடுத்து வரும் அதிகாரமாகிய இடனறிதல் (அதி. 50) கருத்தையும் உடன் இணைத்துக் கூறுகிறது.

### தக்காரைத் தெளியாவிடின் அரசனுக்கு அறியாமை வரும்

> *காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்*
> *பேதைமை எல்லாம் தரும்.* (குறள் 507)

'தெரிந்து தெளிதலில்' அரசன் அறிவிலாரைத் தேறுதல் அவனுக்கு அறியாமையை விளைவிக்கும் என்கிறார். பேதையார்

இயல்பு குறித்துப் 'பேதைமை' என ஓர் அதிகாரம் (84) பின்னர் உள்ளது. இக் குறள் அரசனுக்குப் பேதைமை பற்றிக் கூறுவதால் அரசியல் பகுதியில் வைக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், பேதைமை அதிகாரப் பொருளோடு இதன் பொருள் பொருத்தமாக உள்ளமை காணத்தகும்.

## குடிப்பிறப்பும் நாணமும் கண்டு தெளிதல்

*குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்*
*நாணுடையான் கட்டே தெளிவு.* (குறள் 502)

தக்காரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒருவருடைய குடிப்பிறப்பும் நாணமும் நோக்கித் தெளிக என்றமையால், 'குடிமை' (அதி. 96) 'நாணுடைமை' (102)யின் சிறப்பு விளங்கும். இவைபற்றிப் பின்னர்த் தனித்தனி அதிகாரங்கள் ஆசிரியரால் அமைக்கப் பட்டுள்ளமையும் கருதற்பாலது.

## கற்றவரிடத்தும் அறியாமை

*அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்*
*இன்மை அரிதே வெளிறு.* (குறள் 503)

'கல்வி' அதிகாரத்திற்கும் (அதி. 40) இக் குறளின் பொருள் ஏற்புடையதாகும். கற்றாரையும் கல்லாரையும் ஆராய்ந்து தெளிக என்று கூறுவதனால், இக் கல்விப் பொருள் 'தெரிந்து தெளிதல்' என்னும் இவ்வதிகாரத்துள் இயைபுபடுத்தப்பட்டுள்ளது.

## தெரிந்து தெளிதலில் பெருமை சிறுமை

*பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்.* (குறள் 505)

பின்வரும் 'பெருமை' (98) என்பது அதிகாரப்பட்ட இடத்தில் சிறியோரையும் ஒப்பிட்டு நோக்கிக் கூறப்பெற்ற பாடல்களைப்போன்று (978, 979, 980) இதுவும் உள்ளமை நோக்கத்தகும்.

## வினையாடலும் வினைசெயலும்

'தெரிந்து வினையாடல்' (அதி. 52), 'ஆள்வினையுடைமை' (அதி. 62), 'வினைத்தூய்மை' (அதி. 66), 'வினைத்திட்பம்' (அதி. 67), 'வினைசெயல் வகை' (அதி. 68) என்பன செயலாற்றும்

வகைமை பற்றிக் கூறுவன. எனவே, இவற்றுள் ஓர் அதிகாரத்துள் சொல்லிய கருத்துகளுள் சில பிறிதொன்றற்கு இயைபுடைத்தாகக் காணப் பெறுதல் இயல்பே.

*இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்.* (குறள் 517)

தெரிந்து வினையாடலில் (அதி. 52) வரும் இப் பாட்டு வினைசெயல் வகை அதிகாரத்திற்கும் (அதி. 68) பொருத்தமாக உள்ளமை காணலாம்.

## தெரிந்து வினையாடலில் வினையாளனின் நட்பு

*வினைக்கண் வினையுடை யான் கேண்மை வேறாக*
*நினைப்பானை நீங்கும் திரு.* (குறள் 519)

வினையாளனின் நட்பை மாறுபடக் கருதலாகாது என்று கூறப் படுகிறது. எனவே, இப் பாட்டு 'நட்பு' அதிகாரத்திற்கும் ஏற்புடைத்தாக உள்ளது.

## சுற்றந்தழாலில் பொருளும் ஈகையும்

பொருள் படைத்தார் சுற்றத்தார்க்கும் வழங்கி அவரை தழுவிக் கொண்டு வாழவேண்டும் என்று அறிவுத்துகின்றார் வள்ளுவர். இங்கே அவர் சொல்லிய குறள்கள் 'பொருள் செயல் வகை' (அதி. 76), 'ஈகை' (அதி. 23) ஆகிய அதிகாரப் பொருள்களுக்கும் பொருந்துமாப் போலக் காணப்படுதல் கவனிக்கத்தக்கது. இவ் வகையில் அமைந்த குறள்கள் வருமாறு :

*சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்*
*பெற்றத்தால் பெற்ற பயன்.* (குறள் 524)

*கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய*
*சுற்றத்தால் சுற்றப் படும்.* (குறள் 525)

*பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்*
*மருங்குடையார் மாநிலத்து இல்.* (குறள் 526)

*காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
*அன்னநீ ரார்க்கே உள.* (குறள் 527)

## பொச்சாவாமையில் வெகுளி, புகழ்

*இறந்த வெகுளியின் தீதே சிறந்த*
*உவகை மகிழ்ச்சியிற் சோர்வு.* (குறள் 531)

*பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை*
*நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.* (குறள் 532)

*பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுவுலகத்து*
*எப்பால் நூலோர்க்கும் துணிவு.* (குறள் 533)

புகழுக்குக் கேடு தருவது பொச்சாப்பு என்னும் மறதி என்று எடுத்துக் காட்டும் முகமாகப் புகழ்பற்றியும் இவ்வதிகாரத்துள் கூறப் பட்டிருக்கிறது. இது 'புகழ்' அதிகாரத்திற்கும் (24) பொருத்த முடையதாகும். தீங்கு பயத்தல் ஒப்புமை கருதி 'வெகுளியும்' உடன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

### பொச்சாவாமையும் உள்ளுதலும்

மறவாமைக்கு நினைப்பு எப்பொழுதும் வேண்டும். ஊக்க முடைமையில் (அதி. 60) 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' (குறள் 596) என்றபடி, உள்ளியதை மறவாது போற்றுக என்று கூறுகிறார்.

*உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்*
*உள்ளியது உள்ளப் பெறின்.* (குறள் 540)

என உள்ளுதலின், அதாவது மறவாது போற்றுதலின் அவசியத்தைப் பேசுகிறது இப் பாடல். இங்குக் கூறிய முறையிலேயே,

*உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்*
*உள்ளான் வெகுளி எனின்.* (குறள் 309)

என 'வெகுளாமை' அதிகாரத்துக் (31) கூறப்பட்டுள்ளமையும் ஒப்பு நோக்கத் தக்கதாம்.

### செங்கோன்மை—கொடுங்கோன்மை

கொடுங்கோலாட்சி ஒழிக; செங்கோலாட்சி சிறக்க என்பதுவே நல்லார் விருப்பம்: இவ்விரண்டின் நன்மை தீமை உரைக்கும் வள்ளுவர் இவை குடிமக்களுக்கு அரசனால் விளைவன வாதலால், குடிகளின் நிலைமையையும் இவற்றுடன் இணைத்துப் பேசுகிறார். அவை வருமாறு:

*வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
*கோல்நோக்கி வாழும் குடி.* (குறள் 542)

*குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்*
*அடிதழீஇ நிற்கும் உலகு.* (குறள் 544)

*குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்*
*வடுவன்று வேந்தன் தொழில்.* (குறள் 549)

*அல்லற்பட்டு ஆற்றுது அழுதகண் ணீரன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை.* (குறள் 555)

குடிப்பிறந்தார் ஒழுக்கம் குறித்துப் பேசுகிறது 'குடிமை' என்னும் அதிகாரம் (96). இங்கோ மன்னன் குடிகளைப் புரக்கும் கடமை பற்றி உரைக்கப்பட்டிருக்கிறது.

### மன்னவன் செங்கோன்மை மழை போல்வது

உலகமெல்லாம் வாழ வானமழை தவருது பெய்ய வேண்டும்: ஆகவே, உலகம் மழையை எதிர்பார்த்து வாழ்கிறது. மழையின் இன்றியமையாமையை எடுத்துக்காட்டி வள்ளுவர் செங்கோன்மை (அதி. 55), கொடுங்கோன்மை (அதி. 56) இரண்டன் இயல்பினையும் புலப்படுத்துகின்ருர்.

*வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
*கோல்நோக்கி வாழும் குடி.* (குறள் 542)

*துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்*
*அளியின்மை வாழும் உயிர்க்கு.* (குறள் 557)

*முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி*
*ஒல்லாது வானம் பெயல்.* (குறள் 559)

வான்சிறப்பில் கூறப்படும் மழையின் பெருமைகளுள் இங்கே வரும் கருத்துகளும் இணைத்து நோக்கத்தக்கன.

### கொடுங்கோன்மையில் செங்கோன்மை

*மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்*
*மன்னுவாம் மன்னர்க் கொளி.* (குறள் 556)

இப் பாட்டு இதற்கு முந்திய 'செங்கோன்மை' அதிகாரத்துள் இடம் பெறுதல் மிகவும் பொருத்தமாகுமன்ருே ?

### வெருவந்த செய்யாமையில் இன்முகமும் கடுஞ்சொல்லும் விலக்கப்படுதல்

இன்முகத்தோடு கூடிய இன்சொல் அறம் என முன்னர்க் கூறினற்போல (குறள் 93) வெருவந்த செய்யாமையில் இன்முகமும், கடுமொழியும் ஆகா என விலக்குகின்ருர்.

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்னது உடைத்து. (குறள் 565)

இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். (குறள் 564)

கடுஞ்சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும். (குறள் 566)

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம். (குறள் 567)

**கண்ணோட்டத்தில் பொறையுடைமைக் கருத்து**

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. (குறள் 579)

இஃது பொறையுடைமை அதிகாரத்துள் வரும் (16)

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை (குறள் 151)

என்னும் பாடலொடு பெரிதும் பொருளொப்புமையுடையதாகும்.

**ஊக்கம் உடைமையில் ஆக்கம் உடைமை**

ஊக்கத்துடன் உழைப்பவர் மட்டுமே எல்லாவகைச் செல்வங்களும் நலனும் எய்த இயலும். எனவே, பொருளாக்கமும் அது வரும் வகையும் இங்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளன. 'பொருள் செயல் வகையில்' (அதி. 76) பொருளின் உயர்வும் இன்றியமையாமையும் கூறப்படினும் அது வருவழியும் பயனும் வேறு பல இடங்களிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளமை குறள் நூலகத்துக் காணலாம்.

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார். (குறள் 593)

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை. (குறள் 594)

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. (குறள் 598)

**மடியின்மையில் குடிமை**

'குடிமை' என்பது 96 ஆம் அதிகாரம். அங்கே குடிப் பிறந்தார் ஒழுக்கமும் மாண்பும் பேசப்படுகின்றன. இங்கே குடிமை

சிறக்க மடிமை போக்க வேண்டும் என எடுத்துக்காட்டு முகத்தான் குடிமைப் பண்பு பேசுகிறார் வள்ளுவப் பெருந்தகை.

குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும். (குறள் 601)

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். (குறள் 602)

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து. (குறள் 603)

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு. (குறள் 604)

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும். (குறள் 608)

குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். (குறள் 609)

### ஆள்வினையுடைமையில் மடியுளான் மடியிலான் நிலைமை

மடியுளான் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள். (குறள் 617)

இது முந்திய அதிகாரமாகிய மடியின்மை என்பதனுள் கூறப்பட்டாலும் பொருந்துவதாகும்.

### இடுக்கண் அழியாமையில் ஈகை அறம்

அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்றா தவர். (குறள் 626)

தாம் பெற்ற பொருளை எல்லார்க்கும் வழங்கி வாழ்பவர் பொருளின்றித் துன்பம் வந்த இடத்தில் சிறிதும் துன்புறார்: ஈகையும் என்றும் போற்றத்தக்கது என்பதாம்.

### அமைச்சியலில் கல்வியும் அறிவும்

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்னிற் பவை. (குறள் 636)

அமைச்சரின் அறிவுத்திறன் கூறுமுகத்தால் கூறிய இப் பாட்டு கல்வி (40), அறிவுடைமை (43) அதிகாரங்களுள்ளும் அமைந்து வரத்தக்க பொதுமையுடைத்தாய் உள்ளது.

### சொல்வன்மையுள் கல்வி

இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார். (குறள் 650)

இப் பாட்டு கல்வி அதிகாரத்துள்ளும் அமைந்து வரலாம்.

### வினைத்தூய்மையுள் புகழையும் பிணைத்தல்

என்றும் ஒருஉதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. (குறள் 652)

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர். (குறள் 653)

புகழ்பற்றிக் கூறிய (அதி. 24) அதிகாரப்பொருளோடு இயைபுடையவை இப் பாடல்கள். வினையைப் புகழுக்கு ஏதுவாக வைத்துக் கூறுதலின், வினைத்தூய்மையில் இவை இடம் பெறுகின்றன.

### வினைத்தூய்மையாய்ப் பொருள் சேர்த்தல்

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று. (குறள் 660)

எனவரும் வினைத்தூய்மை அதிகாரத்து (66) இறுதிப்பாடல் நல்வழியில் பொருள் தேட அறிவுறுத்துகிறது. எனவே, 'பொருள் செயல் வகை' அதிகாரப் (76) பொருளுக்கும் பொருத்தமுடையதாக இதனைக் கொள்ளலாம்.

### வினைசெயல் வகையுடன் பகைத்திறம்

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். (குறள் 674)

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். (குறள் 679)

இங்கே 'வினையெச்சம் போல்வது பகையெச்சம்' என்றும், நட்டாரினும் ஒட்டாரைத் தழுவிக்கொளல் சிறந்த வினையாம் என்றும் 'வினைசெயல் வகையில்' (அதி. 68) பகைவனை வெல்லும் உபாயமும் இன்றியமையாமையும் எடுத்துரைக்கின்றார். 'வினைபகை' எனத் தொடங்கும் குறளின் உரையில், 'பின் வளர்தல் ஒப்புமை பற்றிப் பகையெச்சமும் உடன் கூறினார்' எனப் பரிமேலழகர் உரைக்கும் விளக்கக் குறிப்பும் இங்குக் கவனிக்கத்தகும்.

## தூது அதிகாரத்துள் அன்புடைமை முதலிய பல பண்புகள்

தூதரின் மாண்புகளை வகுத்துரைக்குமிடத்து வள்ளுவர் தம் நூலுள் தனித்தனி அதிகாரங்களாக அமைத்து விளக்கிய கருத்துகள் பல இடம்பெற்றுள்ளமை தெரியவரும். இவ்வதிகாரத்துள் வரும் பின்வரும் குறள்கள் இதற்குச் சான்று பகரும் :

*அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்*
*பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.* (குறள் 681)

*அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு*
*இன்றி யமையாத மூன்று.* (குறள் 682)

*அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்*
*செறிவுடையான் செல்க வினைக்கு.* (குறள் 684)

*கடனறிந்து காலம் கருதி இடனறிந்து*
*எண்ணி உரைப்பான் தலை.* (குறள் 687)

*தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்*
*வாய்மை வழியுரைப்பான் பண்பு.* (குறள் 688)

இப் பாடல்களுள் சுட்டப்பெறும் பொருள்கள் 'அன்புடைமை' (அதி. 8), 'குடிமை' (அதி. 96), 'பண்புடைமை' (அதி. 100), 'அறிவுடைமை' (அதி. 43), 'கல்வி' (அதி. 40), 'காலம் அறிதல்' (அதி. 49) 'இடன் அறிதல்' (அதி. 50), 'வினைத்தூய்மை' (அதி. 66) எனத் தனித்தனி அதிகாரங்களில் விவரிக்கப் பட்டுள்ளமையைக் குறளகத்துக் காணலாம்.

## மன்னரைச் சேர்ந்தொழுகலில் குறிப்பறிதல்

*குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில*
*வேண்டுப வேட்பச் சொலல்.* (குறள் 696)

இது அடுத்துவரும் 'குறிப்பறிதல்' (71) அதிகாரப் பொருளை முன் மொழிந்து கொள்வதுபோல அமைந்துள்ளது. பரிமேலழகரை ஒழிந்த பிற உரையாசிரியர்களாகிய மணக்குடவர், பரிதியார், காளிங்கர் ஆகியோர் இப் பாடலை இந்த அதிகாரத்தின் முதற் பாடலாகக் கொண்டுள்ளமையும் இதன் முதன்மையை எடுத்துக் காட்டும்.

### மன்னரைச் சேர்ந்தொழுகலில் பழைமை

*பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்*
*கெழுதகைமை கேடு தரும்.* (குறள் 700)

இது நட்பு இயலில் வரும் 'பழைமை' அதிகாரப்பொருளைக் (அதி. 81) குறிப்பினால் சுட்டி உணர்த்துகின்றது.

*பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்*
*கிழமையைக் கீழ்ந்திடா நட்பு* (குறள் 801)

என்னும் பழைமை அதிகாரத்தின் தொடக்கப் பாடலுடன் இது ஒப்புக் காணத்தக்கது.

### அவையறிதலால் கல்வி விளங்கும்

*கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்*
*சொல்தெரிதல் வல்லா ரகத்து.* (குறள் 717)

கல்வியும் சொல்வன்மையும் அவைக்கண் செல்வார்க்கு வேண்டுமாதலால் அவ்விரண்டும் ஒருங்கு இதன்கண் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

### நாடு என்பதன் இறுதியில் அரசன்

*ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே*
*வேந்தமை வில்லாத நாடு.* (குறள் 740)

இக் கருத்து இறைமாட்சி அதிகாரத்தும் இடம் பெறலாமன்றோ?

*நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்* (புறம். 186)

என்னும் புறப்பாட்டின் கருத்தோடு இக் குறளின் கருத்தும் ஒத்துள்ளது.

### அரணில் வினைமாட்சித் திறம்

*எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி*
*இல்லார்கண் இல்லது அரண்.* (குறள் 750)

### 'பொருள் செயல்வகை'யில் ஏனைய உறுதி பொருள்கள்

பொருள் மட்டுமன்று; அதற்கு அடியாக அன்பு அருள் முதலியன வேண்டும். அறமும் இன்பமும் சுரக்க அது ஏதுவாகும் என்று எடுத்துக் கூறுகிறார்.

*அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து*
*தீதின்றி வந்த பொருள்.* (குறள் 754)

*அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்*
*புல்லார் புரள விடல்.* (குறள் 755)

*அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்*
*செல்வச் செவிலியால் உண்டு.* (குறள் 757)

*ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்*
*ஏனை இரண்டும் ஒருங்கு.* (குறள் 760)

### நட்பில் நீரவருடன் பேதையார்

*நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்*
*பின்நீர பேதையார் நட்பு.* (குறள் 782)

நீரவர் என்பது சான்றோரையும் பேதையார் என்பது அறிவிலிகளையும் குறிக்கும். இவை முறையே—சான்றாண்மை (அதி. 99), பேதைமை (84) அதிகாரப் பொருள்களோடும் தொடர்புடையனவாம். நட்பின் இன்றியமையாமை கருதி இங்கு விளக்கப்படுகிறது. இது போன்றே வருகிற நட்பாராய்தலிலும் (அதி. 80) இவ்வகையிருவர்தம் கேண்மை குறித்துக் கூறப்பட்டுள்ளன :

*மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்*
*ஒருவுக ஒப்பிலார் நட்பு.* (குறள் 800)

*ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்*
*கேண்மை ஒரீஇ விடல்.* (குறள் 797)

### நட்பாராய்தலில் குடிமை

*குணனும் குடிமையும் குற்றமும் குன்றா*
*இனனும் அறிந்தியாக்க நட்பு.* (குறள் 793)

*குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்*
*கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.* (குறள் 794)

குடிமை, குடிப்பிறப்புப் பற்றிப் பேசும் இப் பாடல்கள் குடிப் பிறந்தார் இயல்புகளை விளக்கும் குடிமை அதிகாரத்தின் (அதி. 96) பொருட் கூற்றைத் தழுவியன என்று கொள்ளலாம். நற்குடிப் பிறந்தாரோடு நட்புச் செய்க என்று உணர்த்துவாராகக் குடிமைப் பண்புகளும் இங்குச் சுட்டப்பெற்றனவாம்.

### நட்பாராய்தலில் ஊக்கமுடைமை

*உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது*
*தள்ளினும் தள்ளாமை நீர்த்து.* (குறள் 596)

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. (குறள் 598)

இவை ஊக்கமுடைமை அதிகாரத்துள் வரும் பாடல்கள். இவற்றின் கருத்திற்கு எடுத்துக்காட்டாக அமையும் வகையில் நட்பாராய்தலில் பேசப்படுவது கவனிக்கத்தக்கது. அது வருமாறு :

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. (குறள் 798)

### கூடாநட்பை நட்புக்கு முற்கூறிய முறையில் விலக்குதல்

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. (குறள் 786)

என நட்பதிகாரத்துள் கூறிய முறையானே,

பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல். (குறள் 830)

எனக் கூடாநட்பு கடியப்படுதல் காணலாம்.

### புல்லறிவாண்மையில் ஈகை

அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம். (குறள் 842)

### புல்லறிவாண்மையில் கல்விநலம்

கால்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும். (குறள் 845)

### பகைமாட்சியில் வெகுளியும் காமமும்

நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. (குறள் 864)

காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். (குறள் (866)

கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லாது ஒளி. (குறள் 870)

சினமுடையானிடம் எல்லாரும் பகைமை பாராட்டுவர்; காமுகனுக்கோ காரியம் எதுவும் விளங்காது. இவற்றால் வெகுள்

வோனையும் காமுகனையும் எளிதில் வெல்லலாம் என்பது கருத்து. எனவே, பகைமை பாராட்டுதற்குரியார் இவர் எனக் காட்டுமிடத்து, வெகுளி, காமம் உடையாரைக் கூறும் வாயிலாக இவ்விரண்டின் இயல்புகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

### பகைத்திறம் தெரிதலில் சொல்லேர் உழவர்

வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. (குறள் 872)

இங்கே 'சொல்லேருழவர்' என்பது கற்று, உணர்ந்த சான்றோரைக் குறிப்பிடுகிறது.

### உட்பகையில் கூடாநட்பு

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி. (குறள் 887)

செப்பின் புணர்ச்சிபோல் உள்ளவர் என்பவர் நட்டார் போன்று கூடி உளத்தால் ஒட்டாது மாறுகொண்டுள்ளவராவர். இவர் கூடாநட்பு என வள்ளுவர் முன்னர்க் குறித்த கூட்டத்தாரை ஒப்பர்.

### பெரியாரைப்பிழையாமையில் அவர்தம் வெகுளி ஆற்றல்

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னும்
தகைமாண்ட தக்கார் செறின். (குறள் 897)

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். (குறள் 899)

இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். (குறள் 900)

இவற்றோடு நீத்தார் பெருமையுள் (அதி. 3) வரும்,

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. (குறள் 29)

என்னும் பாடலும் ஒருசேர வைத்து உணரத்தகும்.

### பெண்வழிச்சேறலில் மனையாளுக்கு அடங்கலால் விளையும் பேதைமை

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். (குறள் 190)

பேதைமை அதிகாரமும் (84) தனிப்பட உள்ளமை கவனிக்கத்தக்கது.

## வரைவின் மகளிரில் மேல்வரும் கள்ளுண்ணாமையும் சூதும்

அடுத்துவரும் கள்ளுண்ணாமை, சூது என்னும் அதிகாரங்களைத் தோற்றுவாய் செய்து உரைப்பதாக உள்ளது வரைவின் மகளிரில் உள்ள பின்வரும் பாடல்:

*இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்*
*திருநீக்கப் பட்டார் தொடர்பு.* (குறள் 920)

அதிகாரத்தின் இறுதிப்பாடலாக உள்ள இது வரும் அதிகாரங்களுக்குத் தோற்றுவாயாக உள்ளது.

## 'மருந்து' என்பதில் உணவு கொள்நெறிக்கும் முதன்மை

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின்.* (குறள் 942)

என்பதும் மற்றும் 943, 944, 945, 946, 947ஆம் பாடல்களும் உணவு உட்கொள் நெறி பற்றிய பாடல்களாம். அவையும் வருமாறு:

*அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கு மாறு.* (குறள் 943)

*அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல*
*துய்க்க துவரப் பசித்து.* (குறள் 944)

*மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு.* (குறள் 945)

*இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்*
*கழிபே ரிரையான்கண் நோய்.* (குறள் 946)

*தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்*
*நோயள வின்றிப் படும்.* (குறள் 947)

இங்ஙனமாக மருந்து அதிகாரத்துள் வரும் பாடல்களில் செம்பாதிக்குமேல் (6) உணவு கொள் நெறி பற்றிப் பேசப்படுவது சிந்தையில் என்றும் நினைவு கூரத்தக்கது. இங்கே உணவே மருந்தாக அமையும் திறம் எடுத்துகாட்டியுள்ளமை எண்ணி எண்ணி என்றும் போற்றத்தக்கதாம்.

### குடிமையில் ஒழுக்கம், வாய்மை முதலிய அறங்கள்

இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. (குறள் 951)

ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். (குறள் 952)

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. (குறள் 953)

நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. (குறள் 960)

இக் குறள்களில் குறிக்கப்பெற்ற குணங்கள் தனித்தனி அதிகாரங்களில் குறள் நூலகத்து விவரிக்கப் பட்டுள்ளமை காணத் தகும்.

### மானத்துள் பணிதலாகிய அடக்கமுடைமை

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. (குறள் 963)

### பெருமை அதிகாரத்து மாறுய சிறுமை

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. (குறள் 978)

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். (குறள் 979)

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். (குறள் 980)

### சான்றாண்மையில் அதற்குறுப்பான குணங்கள்

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். (குறள் 983)

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. (குறள் 984)

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. (குறள் 985)

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (குறள் 987)

*இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்*
*திண்மை உண்டாகப் பெறின்* (குறள் 988)

*சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்*
*தாங்காது மன்னோ பொறை.* (குறள் 990)

இங்கே எடுத்துக் கூறப்பெற்ற குணச்சிறப்பு—ஒழுக்கச் சிறப்புகளாகிய அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, கொல்லாமை, பொறையுடைமை, அடக்கமுடைமை, இன்னா செய்யாமை, நல்குரவு முதலியன குறித்துத் தனித்தனி அதிகாரங்கள் குறள் நூலுள் உள்ளமை காணத்தகும். சான்றாண்மை என்பது பல குணங்களின் நிறைவாதலின் ஆசிரியர் பற்பல குண நலங்களையும் கோடிட்டுக் காட்டுவது போலச் சுருங்கச் சுட்டி இவ்வதிகாரத்தில் விளங்க வைக்கிறார் என்று கொள்வது முறையாகும்.

### பண்புடைமையிலும் பலகுணம் போற்றியமை

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (குறள் 992)

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு. (குறள் 994)

அன்பும் அறனுமே இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும் என்று இல்லறவியலின் தொடக்கத்திலே வள்ளுவர் எடுத்துக் காட்டியுள்ளார். இங்கே நயன் என்பது நீதியையும் 'நன்று' என்பது அறத்தையும் குறிக்கும்.

### பண்புடைமையில் பண்பிலான் செல்வ நிலைமை

*பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்*
*கலந்தீமை யால்திரிந் தற்று.* (குறள் 1000)

இது அடுத்து வரும் 'நன்றியில் செல்வம்' என்னும் அதிகாரத்திற்குத் தோற்றுவாயாக உள்ளமை காணலாம்.

### நன்றியில் செல்வத்துள் ஈகை நலம்

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். (குறள் 1005)

ஏதம் பெருஞ்செல்வம் தான்றுவ்வான் தக்கார்க்கொன்று
ஈதல் இயல்பிலா தான். (குறள் 1006)

*அற்ருர்க்கொன் று ஆற்ருதான் செல்வம் மிகநலம்*
*பெற்ருள் தமியள்மூத் தற்று. (குறள் 1007)*

*செல்வத்துப் பயனே ஈதல்*
*துய்ப்பேம் எனினே தப்புந பலவே*

எனவரும் (189) புறநானூற்றடிகளை நோக்கி உரைத்த விளக்கம் போன் று இப் பாடல்கள் அமைந்துள்ளமை காணலாம்.

### *நாணுடைமையில் சான்ருண்மை*

*ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்*
*நன்மை குறித்தது சால்பு. (குறள் 1013)*

*அணியன்ரே நாணுடைமை சான்ரோர்க்கு அஃதின்றேல்*
*பிணியன்ரே பீடு நடை. (குறள் 1014)*

சான்ருண்மைக்கு சிறந்த பண்பு-நலம் 'நாணுடைமை' என்பதை எடுத்துக் காட்டும் பொருட்டு, நாணுடைமையில் சான்ரோர் இயல்பையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்ருர்.

### *நாணுடைமையில் குலனுடைமை*

*குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்*
*நாணின்மை நின்றக் கடை. (குறள் 1019)*

குலம் பற்றிய இச் செய்தி குடிமை (அதி. 96) அதிகாரத்திற்கும் பொருந்தும்.

### *குடிசெயல் வகைக்கு ஆள்வினையும் அறிவும்*

*ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்*
*நீள்வினையாள் நீளும் குடி. (குறள் 1022)*

இக் குறளில் குறித்த பண்புகள் குறித்து ஆள்வினையுடைமை (அதி. 62) அறிவுடைமை (அதி. 43) எனத் தனி அதிகாரங்கள் உள்ளமை நோக்கத்தகும்.

### *உழவினுல் ஈகையறம்*

*இரவார் இரப்பார்க்கொன் று ஈவர் கரவாது*
*கைசெய்தூண் மாலை யவர். (குறள் 1035)*

பொருளாக்கத்திற்கு அடிப்படையான உழுதொழில் செய்வோராலேயே ஏனையோர் வாழ்க்கை வசதிகளைப் பெறுகின்றனர் என்பது இதனுல் புலனுகும்.

## நிலம் சென்று நோக்காதவனுக்கு இல்லாளின் ஊடல் உவமை

*செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து*
*இல்லாளின் ஊடி விடும்.* (குறள் 1039)

இக் குறளிற் போன்றே முன்பு கல்லாதான் பேச விரும்புதலுக்கு முலையிரண்டும் இல்லாளாகிய பெண் காமுற்ற தன்மைக்கு ஒப்புக் கூறப்பட்டுள்ளது (குறள் 402).

## நல்குரவில் முற்றத் துறவாமை

*துப்புரவு இல்லார் துவரத் துறவாமை*
*உப்பிற்கும் காடிக்கும் கூற்று.* (குறள் 1050)

## இரத்தல் ஈதலை ஒத்தல்

*இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்*
*கனவிலும் தேற்றாதார் மாட்டு.* (குறள் 1054)

## இரப்பாரால் ஈவார்க்குப் புகழ்

*ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்*
*மேவார் இலாஅக் கடை.* (குறள் 1059)

## இரப்பார்க்கு வெகுளாமை வேண்டும்

*இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை*
*தானேயும் சாலும் கரி.* (குறள் 1060)

## இரவச்சத்தில் முயற்சியை வற்புறுத்தல்

*தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது*
*உண்ணலின் ஊங்கினியது இல்.* (குறள் 1065)

ஆள்வினையுடைமை வேண்டும் என்பதனை ஆசிரியர் இங்கு எடுத்துக் காட்டுதலின் பொருத்தம் சிந்திக்கத்தகும்.

## கயமை அதிகாரத்துள் கயவர் இயல்புடன் சான்றோர் இயல்பு

*சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்*
*கொல்லப் பயன்படும் கீழ்.* (குறள் 1078)

கயவரின் நிலையை எடுத்துக்காட்டும் முகமாகச் சான்றோரின் சீரிய இயல்பும் இங்கு உணர்த்தப்பட்டுள்ளன.

### காமத்துப்பாலிலும் அறவொழுக்கம் முதலியன

காமத்துப்பால் முற்றும் இன்பப் பகுதியே ஆயினும், உவமை வாயிலாகவும், வாழ்க்கைச் சூழலை எடுத்துக்காட்டும் முகமாகவும், உலகியலில் காதலர் வாழ்க்கையைச் சித்திரிக்கும் வகையிலும் வள்ளுவர் அறம், பொருள், வீடு பற்றிய செய்திகளையும் அங்கங்கே பொதிந்து கூறியுள்ளமை காணலாம். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் பற்றிய குறிப்பு நூல் முழுமையும் விரவிவரும் தன்மையும் கூர்ந்து நோக்கி மகிழத்தகும். இவ்வகையில் காமத்துப்பாலுள் வரும் கருத்துகளைத் தக்க தலைப்புகளில் அகராதி அடைவில் அமைத்து அவை பற்றி விளக்கும் பாடல்களையும் இங்கே காண்போம்.

### அளவோடு பட்டமைதல்

*உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது*
*மிக்கற்றால் நீள விடல்.* (குறள் 1302)

### அறிவின் திறம்

*அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்*
*செறிதோறும் சேயிழை மாட்டு.* (குறள் 1110)

### ஆண்பாற்குணம்: நாணும் நல்லாண்மையும்

*நோனா உடம்பும் உயிரும் மடலேறும்*
*நாணினை நீக்கி நிறுத்து.* (குறள் 1132)

*நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்*
*காமுற்றார் ஏறும் மடல்.* (குறள் 1133)

### இருளும் ஒளியும்

*விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்*
*முயக்கற்றம் பார்க்கும் பசப்பு* (குறள் 1186)

### கணவன் தலையளி

*வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு*
*வீழ்வார் அளிக்கும் அளி.* (குறள் 1192)

### கணவன் மனைவியர் உறவு

*வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்*
*அதற்கன்னள் நீங்கு மிடத்து.* (குறள் 1124)

செற்றா ரெனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர். (குறள் 1245)

பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை. (குறள் 1258)

நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல். (குறள் 1260)

உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன். (குறள் 1263)

வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட. (குறள் 1266)

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. (குறள் 1268)

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து. (குறள் 1285)

காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை. (குறள் 1286)

இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. (குறள் 1288)

எள்ளின் இளிவாம் என்றுஎண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. (குறள் 1298)

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று. (குறள் 1314)

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள். (குறள் 1315)

உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள். (குறள் 1316)

## கணவனிடம் மனைவி காட்டும் விருப்பம்

நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு (குறள் 1199)

## காதலார் செய்கை

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள. (குறள் 1099)

## காதலார் நட்புத் திறம்

உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. (குறள் 1122)

துப்பின் எவனுவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர். (குறள் 1165)

## காமத்தியற்கை

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனு உடம்பி னகத்து. (குறள் 1163)

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல். (குறள் 1164)

இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. (குறள் 1166)

ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது. (குறள் 1196)

பருவரலும் பைதலும் காணுன்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான். (குறள் 1197)

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய். (குறள் 1227)

காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேன்இவ் விரண்டு. (குறள் 1247)

காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. (குறள் 1251)

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின். குறள் 1282)

மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார். (குறள் 1289)

## காமத்திற்கு இன்பம் ஊடுதல்

உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது. (குறள் 1326)

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். (குறள் 1330)

## காமத்தின் வேகமும் விரிவும்

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை. (குறள் 1134)

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல். (குறள் 1137)

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல். (குறள் 1164)

## காமமும் கள்ளும்

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. (குறள் 1090)

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. (குறள் 1145)

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது. (குறள் 1201)

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு. (குறள் 1281)

## காமமும் நெருப்பும்

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள். (குறள் 1104)

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ. (குறள் 1159)

## காமமும் நோயும்

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து. (குறள் 1102)

## காம வெளிப்பாடு

நிறையரியர் மன்அளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும். (குறள் 1138)

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று. (குறள் 1146)

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய். (குறள் 1147)

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல். (குறள் 1148)

## குறிப்பு வெளிப்பாடு

மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன்று உண்டு. (குறள் 1273)

செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கு மருந்தொன்று உடைத்து. (குறள் 1275)

பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வது உடைத்து. (குறள் 1276)

பெண்ணிறுல் பெண்மை உடைத்தென்ப கண்ணிறுல்
காமநோய் சொல்லி இரவு. (குறள் 1280)

## செய்துபின் இரங்குதல்

தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன். (குறள் 1172)

## துன்பத்திற்கு மேல் துன்பம்

அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றுல் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். (குறள் 1303)

ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று. (குறள் 1304)

## நட்பு நிலை

கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல். (குறள் 1293)

## நெஞ்சுரம்

பெறின்என்னும் பெற்றக்கால் என்னும் உறின்என்னும்
உள்ளம் உடைந்துக்கக் கால். (குறள் 1270)

## நெஞ்சே நல்ல துணை

துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி. (குறள் 1299)

தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தம்முடைய
நெஞ்சம் தமரல் வழி. (குறள் 1300)

## பிரிவு

அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு. (குறள் 1154)

அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர். (குறள் 1160)

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண். (குறள் 1232)

பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். (குறள் 1234)

ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்
வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு. (குறள் 1269)

நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சிற் பட்டு. (குறள் 1297)

## பிரிவு அச்சம்

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக் கொள்வற்றே பசப்பு. (குறள் 1187)

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். (குறள் 1238)

## பிரிவு உலகியற்கை

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். (குறள் 1153)

## பிரிவுத்துன்பம்

இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு. (குறள் 1158)

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும். (குறள் 1161)

மன்னுயி ரெல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை. (குறள் 1168)

கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா. (குறள் 1169)

உள்ளம்போன் றுஉள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண். (குறள் 1170)

கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து. (குறள் 1173)

மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து. (குறள் 1180)

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையும் தந்து. (குறள் 1183)

வீழ்வாரின் இன்சொல் பெறுஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல். (குறள் 1198)

கனவினான் உண்டாகும் காமம் நனவினான்
நல்காரை நாடித் தரற்கு. (குறள் 1214)

மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது. (குறள் 1221)

புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை. (குறள் 1222)

காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும். (குறள் 1224)

காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. (குறள் 1225)

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை. குறள் 1228)

## புலவியால் நேரும் பிணைப்பு

நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூஅன்ன கண்ணா ரகத்து. (குறள் 1305)

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. (குறள் 1306)

நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. (குறள் 1309)

இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு. (குறள் 1321)

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து. (குறள் 1323)

## பெண்ணின் மென்மை

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். (குறள் 1120)

## பெண்ணின் இன்பம்

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. (குறள் 1101)

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். (குறள் 1105)

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள். (குறள் 1106)

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. (குறள் 1113)

பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர். (குறள் 1121)

## பொருள் முயற்சி

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு. (குறள் 1107)

பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர். (குறள் 1230)

# 10. வள்ளுவர் உரைக்கும் பொருளும் எடுத்துக்காட்டும்

அறமுதற் பொருள்களை உலகிற்கு அருளால் உணர்த்தப் புகுந்த வள்ளுவர், தாம் உரைக்கும் பொருள்களைத் தொகைவகை செய்து, கேட்பாரது உள்ளம் விரும்பி ஏற்றுக் கொள்ளும் வகையில், அங்கங்கே தக்க எடுத்துக்காட்டுகளையும் தந்து, விளக்கிச் செல்லுகிறார். நன்று இது தீது இது, இன்னின்னவை செய்யத் தக்கன, இன்னின்னவை விலக்கத்தக்கன, வாழ்வு சிறக்க இவை இவை இன்றியமையாதவை, உலகில் வாழும் மாந்தரின் உளப் பாங்குகள் இப்படிப் பட்டவை, இன்னது செய்தால் இன்னது விளையும் என்று இவைபோன்ற முறைகளில் பொருள்களை அடுக்கிக் கொண்டே போகும் போது, கேட்பார்க்கும் மலைப்புத் தோன்றும். அங்ஙனம் சோர்வு தட்டாதபடி இடையிடையே உவமை, உருவகம், வேற்றுமை, பிறிதுமொழிதல் முதலிய அணி நலன்களையும் தம் பொருள் விளக்கத்திற்குப் பயன்படுத்துகின்றார். துலாக்கோல், குழல், யாழ், அனிச்சம், கடல், மலை, ஊருணி, பயன்மரம், நச்சுமரம், கனி, காய், எள், தினை, பனை, குன்றிமணி, பளிங்கு என்று இப்படிப் பற்பல பொருள்களைக்காட்டி, தாம் கூறும் பொருளுடன் ஒப்பிட்டு விளக்கும் பகுதிகள் கேட்பாருளங்களில் பசுமரத்தாணிபோல் பதியத் தக்கனவாம்.

சிற்சில இடங்களில் வள்ளுவர் நன்மை தீமை விளைவதற்கு ஏதுவான காரணங்களையும் எடுத்துக் காட்டுகின்றார். 'மறைமொழி காட்டி விடும்' (குறள் 28), 'களித்தானைக் காரணம் காட்டுதல்' (குறள் 929), 'அடுத்தது காட்டும் பளிங்கு' (குறள் 706), 'நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்' (குறள் 959) என்றாற்போலச் சில இடங்களில் இதனை இது காட்டும் என்று உரைத்தலும் பொருளை

விளங்க கூறுவதற்கு ஏற்ற முறையாக உள்ளது. பொருள்களை விளக்க வள்ளுவர் எடுத்துக் காட்டும் பொருள்கள் எல்லாம் மக்களின் வாழ்க்கையொடு பெரிதும் தொடர்புடையனவாயும், அவர்களால் அறியப்பட்டனவாயுமே உள்ளன.

ஒரு பொருளின் நலந் தீங்குகளை விளக்குவதற்கு ஏற்ற காரணங்களைக் காட்டுதலும், ஒத்த பிற பொருள்களையோ நிகழ்ச்சிகளையோ எடுத்துக் காட்டுதலும் ஆன்றோர் வழக்காகும். திருஞானசம்பந்தர் தமது தேவாரப் பாடல் ஒன்றில், 'சோதியாய் விளங்கும் இறைவனின் உண்மையை ஏதுக்களாலும் எடுத்துக்காட்டுகளாலும் ஆராய்ந்து அறிய வேண்டாம்; அவன் எங்கும் சுடர்விட்டு விளங்குகிறான்' என்று அறிவுறுத்துகிறார்.

*ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும்*
*சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள்சோதி*
(தேவா *3 : 353 : 5*)

என்பது அவருடைய வாக்கு. இங்கே இறைவனது உண்மையை ஆராய்ந்தறியக் காரணங்களும் ஏற்ற உதாரணங்களும் எடுத்துரைக்க வேண்டா என்பதனால், ஒரு பொருளை விளக்குவதற்கு ஏதுக்களும் எடுத்துக்காட்டுகளும் தருதல் அவசியம் என்பது விளக்கமாகும்.

தொல்காப்பியர் தமது பெருநூலில் சூத்திரப் பொருள் விளக்கத்திற்கு ஏதுவும் எடுத்துக்காட்டும் இன்றியமையாதன என்கிறார்.

*'பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்*
*கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்'*
(தொல். பொருள். மரபு. *103*)

*'விட்டு அகல்வின்றி விரிவொடு பொருந்திச்*
*சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா*
*ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்*
*மேவாங்கு அமைந்த மெய்ந்நெறித் ததுவே'*
(தொல். பொருள். மரபு. *104*)

இவற்றால் உரை விளக்கத்திற்கு ஏது நடையும் எடுத்துக்காட்டும் இரு கண்கள் போன்றவை என்பது கருதத்தகும்.

மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார் தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதையில் பல தத்துவப் பொருள்களை விளக்கும்

போது, ஏது, திட்டாந்தம் பற்றியும் தக்கவண்ணம் விளக்கியுள்ளமை காணலாம். சாத்தனூர் தரும் விளக்கம் வருமாறு :

*பக்கம், ஏதுத், திட்டாந்தம், உபநயம்,*
*நிகமனம் என்ன ஐந்துள: அவற்றில்,*
*பக்கம் இம்மலை நெருப்புடைத் தென்றல்;*
*புகையுடைத் தாதலால் எனல்பொருந் தேது;*
*வகையமை அடுக்களை போலத் திட்டாந்தம்;*
*உபநயம் மலையும் புகையுடைத் தென்றல்;*
*நிக்மனம் புகையிடைத் தேநெருப் புடைத்தெனல்'*

(மணி : 29 : 57—63)

இங்கே பக்கம் என்பது உரைக்க எடுத்துக் கொண்ட பொருள்; அப் பொருளின் காட்சிக்கு அடித்தளமான காரணம் காட்டுதலே ஏது; எது போல் உள்ளது இக் காட்சி என வேருெரு பொருளை எடுத்துக் காட்டுவது திட்டாந்தம் எனப்படும் எடுத்துக்காட்டு. பொருளிற்கும் எடுத்துக் காட்டிற்கும் உரிய ஒப்புமையைக் கருதுவது உபநயம் ஆம். இறுதியில் அப்பொருளால் பெறப்பட்ட உண்மையை அறுதியிட்டுரைத்தல் நிகமனம் என்று கூறப்படுகிறது.

இங்ஙனம் ஐவகையாக விளக்கப்பெறும் பொருள் விளக்கத்தில் அதற்கு ஏற்ற எடுத்துக்காட்டுத் தருதலே சிறப்பான பகுதி. தெரியாத ஒரு பொருளைத் தெரிய வைப்பதற்குக் கேட்பவர் பழக்கப்பட்டதொரு தெரியும் பொருளை எடுத்துக்காட்டினுல் உடனே அவருக்கு ஒப்பு வகையால் தெளிவு பிறக்கும். இப்படிப் பொருள்களைத் தெளிவுறுத்தும் முறையில் வள்ளுவர் மிகமிக வல்லவர் என்பதை அவர்தம் வாக்குகளில் கண்டு கொள்ளலாம்.

மேலும், திருக்குறளுக்கு 'முது மொழி' என்று ஒரு சிறப்புப் பெயரும் வழங்கப் படுகிறது. இதற்குக் காரணம் உலக வசனங்களாகிய பழமொழிகளைப் போன்று வள்ளுவரின் பாடல் தொடர்கள் பல விடங்களில் நூலகத்து உள்ளமையே யாகும். முதுமொழிக்கு விளக்கம் தரும் தொல்காப்பியர்,

'ஏது நுதலிய முதுமொழி' (தொல். பொருள். செய்யு. 158) என்று அதனைச் சிறப்பிதது்க் கூறியதோடு,

*நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்*
*எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்*
*குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்*
*ஏது நுதலிய முதுமொழி என்ப*
(தொல். பொருள். செய்யு. *170*)

என்று அதன் இயல்புகளையும் விளக்கிக் கூறுகின்றார். சுருக்கம், தெளிவு, ஆழமுடைமை, எளிமை என்னும் பண்புகள் கொண்டனவாய் உணர்த்தும் பொருளுக்குத் தக்க ஏதுக்களையும் காட்டி விளக்குதலே முதுமொழி என்பது இப் பாடலின் கருத்து. இங்குக் கூறிய பண்புகள் யாவும் குறட்பாடல்களிலும் பொதிந்துள்ளன.

திருக்குறளில் முந்நூற்றைம்பதுக்கு மேற்பட்ட எடுத்துக் காட்டுகளை ஆசிரியர் பொருள் விளக்கும் பொருட்டுத் தந்துள்ளார். அவற்றையெல்லாம் ஒருசேர அடைவுபடுத்திப் பார்க்கும்போது வள்ளுவரின் பொருளுணர்த்தும் ஆற்றல் நமக்குத் தெள்ளிதின் புலனும்.

வள்ளுவர் எந்தெந்தப் பொருள்களுக்கு எந்தெந்தப் பொருள்களை எடுத்துக்காட்டாகத் தருகின்றார் என்பதனைப் பொருள்களின் அகராதி அடைவில் இங்குக் காணலாம். வள்ளுவர் வாய்மொழியை அப்படியே அமைத்தால் எல்லார்க்கும் எளிதில் விளங்காது என்பது கருதி, அவர்தம் வாய்மொழியைச் சற்று எளிய முறையில் உரை நடையாக மாற்றி, இங்குத் தரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பொருளும் அதற்குரிய எடுத்துக்காட்டும், அது பயின்று வரும் குறள் எண்ணும் உடன் கொடுத்திருப்பதால், ஆசிரியரின் வாய் மொழியிலேயே காண விரும்புவோர் உரிய இடங்களில் நூலுள் கண்டு கொள்ளலாம்.

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் வாழ்க்கை | பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்த்தல் | 78 |
| அகத்தூய்மைக்கு வாய்மை | புறத்தூய்மைக்கு நீர் | 298 |
| அகத்தே கறுத்துப் புறத்தே செம்மையாய்த் தோற்ற மளிப்போர் | குன்றிமணி | 277 |
| அகத்தே பொருந்தாது புறத்தே பொருந்திய நட்பு | எறிவதற்கு உரிய பட்டடை | 821 |
| அடக்கம் பேணுதல் | பொருளைக் காத்தல் | 122 |
| அடங்கியான் தோற்றம் | மலையினும் மிகப் பெரிது | 124 |
| அரசரைச் சார்ந்தொழுகல் | தீக்காய்வார் போல் அகலாது அணுகாது இருத்தல் | 691 |
| அரிய முயற்சியில் தோற்றல் | யானை பிழைத்த வேல் ஏந்தல் | 772 |
| அருஞ்செவ்வி இன்னு முகத் தான் செல்வம் | பேய் கண்டு காத்திருக்கும் செல்வம் | 565 |
| அருள் | அன்பு ஈன்ற குழந்தை | 757 |
| அருள் இல்லாத அரசு | மழைத்துளி இல்லாத உலகம் | 557 |
| அருள் உடையார்க்கு அல் லல் இல்லை | வளம் பொருந்திய பெரிய உலகம் சான்று | 245 |
| அருளாட்சி ஊன் தின் போர்க்கு இல்லை | பொருளாட்சிபோற்ருதார்க்கு இல்லை | 252 |
| அருளாதான் அறஞ் செய் தல் | தெருளாதான் மெய்ப்பொருள் காணுதல் | 249 |
| அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லாதிருத்தல் | பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாதிருத்தல் | 247 |
| அல்லவை செய்தொழுகும் வேந்தன் | கொலைத் தொழில் புரிவோன் | 551 |
| அல்லற்கண் கைவிடுபவர் நட்பினைக் கொள்ளாதிருத் தல் | ஊக்கம் குறைவதற்கான செயல்களை எண்ணுதிருத் தல் | 798 |
| அலர் | உயிரை நிலை நிறுத்தும் மருந்து | 1141 |
| அலர்கூறிக் காமத்தை அடக்க முயலுதல் | நெய்யால் நெருப்பை அவிக்க முயலுதல் | 1148 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| அலராகிய செய்தி பரவுதல் | திங்களைப் பாம்பு கொண்டது போல் பரவுதல் | 1146 |
| அவா | ஒருவனை வஞ்சிப்பது | 366 |
| அவா | துன்பத்துள் துன்பம் | 369 |
| அவா | பிறவித் துன்பத்தை உண்டாக்கும் வித்து | 361 |
| அவாவிற்கு அஞ்சுவது | அறம் | 366 |
| அவாவின்மை | தூய்மை | 364 |
| அவாவை நீக்குதல் | அழியாத இன்ப வாழ்வு | 370 |
| அவையகத்து அஞ்சாதவர் அரியர் | பகையகத்துச் சாகத் துணிந்தவர் எளியர் | 723 |
| அவையஞ்சிக் கற்றது உரையாதார் | இருந்தும் இறந்தார்க்கு ஒப்பாவர் | 730 |
| அவையஞ்சுபவன் கற்ற நூல் | பகையகத்து பேடிகை ஒள்வாள் | 727 |
| அவையஞ்சுவோர்க்கு நூலோடுள்ள தொடர்பு | அஞ்சும் வீரர்க்கு வாளோடு உள்ள தொடர்பு | 726 |
| அவையறியாது தம் இனத்தவர் அல்லார் முன் பேசுதல் | தூய்மையில்லாத முற்றத்தில் அமிழ்தத்தைச் சிந்துதல் | 720 |
| அழல் போன்ற மாலைப் பொழுதின் தூதும் கொல்லும் படையும் | புல்லாங்குழல் | 1228 |
| அழுக்காறு உடையான் | ஒருபாவி | 168 |
| அளவளாவு இல்லாதவன் வாழ்க்கை | கரையில்லாக் குளத்தில் நீர் நிறைதல் | 523 |
| அளவறிந்தார் நெஞ்சில் அறம் | களவறிந்தார் நெஞ்சில் கரவு | 288 |
| அற்றார்க் கொன்று ஆற்றாதான் செல்வம் | மிக அழகு பெற்ற மங்கை தனியாக வாழ்ந்து முதுமையுறல் | 1007 |
| அறத்தின் பயன் | சிவிகையைச் (பல்லக்கு) சுமப்பவனும், அதன் மீது ஊர்ந்து செல்வோனும் | 37 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| அறிந்து உணர்கின்றவரின் அவைக்களத்தின் முன்னே குற்றப்படுதல் | ஒழுக்க நெறியிலிருந்து நிலை தளர்ந்து கெடுதல் | 716 |
| அறிவில்லாதவனுடைய பொருந்திய நட்பு | அறிவுடையவரின் நட்பில்லாமை | 816 |
| அறிவு | அற்றம் காக்கும் கருவி, அழிக்கமுடியா உள்ளரண் | 421 |
| அறிவு வளர்தல் | நீர் ஊறுதல் | 396 |
| அறிவுக் கூர்மை | அரத்தின் கூர்மை | 997 |
| அறிவுடையோர் நட்பின் பெருக்கம், பேதையார் நட்பு | வளரும் பிறைமதி, முழுமதி தேய்தல் | 782 |
| அன்பில்லாத உயிரை அறம் வருத்துதல் | எலும்பில்லாத புழுவை வெயில் காய்ந்து வருத்துதல் | 77 |
| அன்பிலது | என்பிலது | 77 |
| அறம் காய்தல் | வெயில் காய்தல் | 77 |
| அன்பின் தோற்றம் | ஆர்வலர் புன்கண்நீர் | 71 |
| அன்பு வாழ்க்கையின் பயன் | உயிருக்கு உடம்பொடு கூடிய வாழ்வு | 73 |
| அன்பு வாழ்க்கையின் பயன் | இன்புற்றவர் அடையும் சிறப்பு | 75 |
| அன்னையின் கடுஞ்சொல் | நீர் | 1147 |
| ஆகலூழ் | அறிவைப் பெருக்கும் | 372 |
| ஆட்சிச் சின்னமான கோலைத் தாங்கிய மன்னன் குடிகளிடம் பொருள் கேட்டல் | வேல் ஏந்தி நின்ற கள்வன் தனிவழிச் செல்வானைப் 'பொருள் கொடு' எனக் கேட்டல் | 552 |
| ஆண்மகனின் பீடு நடை | ஏற்றின் நடை | 59 |
| ஆண்மை | பகைவரை எதிர்த்தல் | 773 |
| ஆண்மையின் கூர்மை | பகைவருக்கு துன்பம் வந்த போது உதவுதல் | 773 |
| ஆண்மையின் தன்மை | கைவேல் களிற்றொடு போக்கி மெய்வேல் பறித்து மகிழ்தல் | 774 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| ஆராய்ந்து தெளிந்த பின் ஐயுறல் | இடும்பை | 510 |
| ஆராயாது தெளிதல் | இடும்பை | 510 |
| ஆளும் அரசனின் கருணை யின்மை | மழை பெய்யாமை | 557 |
| ஆற்றுவார்க்கு ஆற்ருதார் இன்ன செய்தல் | கூற்றத்தை கையால் விளித்தல் | 894 |
| இகல் | தீய பண்பை வளர்க்கும் நோய் | 851, 853 |
| இகல் | துன்ப நோய் | 853 |
| இகலால் துன்பமானவை உண்டாதல் | நட்பால் பெருமித நிலை உண்டாதல் | 860 |
| இகழ்வாரைப் பொறுப்போர் | அகழ்வாரைத் தாங்கும் நிலம் | 151 |
| இடனறிந்து வினை தொடங்குதல் | நீரில் பிறவற்றை வெல்லும் முதலையை நிலத்தில் பிற உயிர்கள் வெல்லுதல் | 495 |
| இடனறிந்து வினைகளைத் தொடங்குதல் | நீரில் பிறவற்றை வெல்லும் முதலையை நிலத்தில் பிற உயிர்கள் வெல்லுதல் | 495 |
| இடனறிந்து வினைமேற் செல்லுதல் | நெடுந்தேர் கடலில் ஓடாமையும் நாவாய் நிலத்தில் ஓடாமையும் | 496 |
| இடனறியாது வினை தொடங்கும் வலியானை மெலியான் வெல்லுதல் | அஞ்சாத யானையையும் சேற்று நிலத்தில் நரிகள் கொன்று விடல் | 500 |
| இடும்பை மிகுதி | வெள்ளப் பெருக்கு | 622 |
| இரப்பார் இல்லாத உலகின் இயக்கம் | மரப்பாவை கயிற்ருல் இயங்கும் இயக்கம் | 1058 |
| இரவு (இரத்தல்) | ஏமாப்பில் தோணி | 1068 |
| கரவு | பார் (வன்னிலம்) | 1068 |
| இழத்தொறூஉம் சூதாடலைக் காதலிக்கும்—சூதன் | துன்பம் படப்பட மேலும் வாழ விரும்பும்—உயிர் | 940 |
| இழவுஊழ் | பேதைப்படுத்தும் | 372 |
| ஆகலூழ் | அறிவைப் பெருக்கும் | 372 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா-எண் |
|---|---|---|
| இறப்பு | உறக்கம் | 339 |
| பிறப்பு | விழிப்பு | 339 |
| இறைவன் | அகரம் | 1 |
| இன்சொல் | இனிய கனி | 100 |
| இன்பம் விழையான் வினை விழைவான் | கேளிரின் துன்பம் துடைக்கும் தூண் | 615 |
| இன்மை (வறுமை) | ஒப்பற்ற பாவி | 1042 |
| இன்னாச் சொல்லைப் பொறுப்பவர் | உண்ணாது நோற்பவர் | 160 |
| இன்னாச் சொல்லைப் பொறுப்பவர் | துறந்தாரினும் தூய்மையர் | 159 |
| இன்னா செய்தலின் கொடுமை | பல சுடர்களையுடைய நெருப்பு சூழ்ந்து கொள்ளல் | 308 |
| இன்னாத சொல்லுதல் | காயை உண்ணுதல் | 100 |
| இன்னாமை | எரி | 308 |
| இன்னாவின் தன்மை | கொன்றாற் போன்ற துன்ப நிலை | 109 |
| இனத்தின் இயல்பால் அறிவு திரிதல் | நிலத்தின் இயல்பால் நீர் திரிதல் | 452 |
| இனம் | ஏமப்புணை : பாதுகாப்பான தெப்பம் | 306 |
| இனிய உளவாக இன்னாத கூறல் | கனியிருக்கக் காயினை விரும்புதல் | 100 |
| இனியார்ப் பிரிவு இன்னாது | இனன் இல் ஊர் வாழ்தல் இன்னாது | 1158 |
| ஈதல் இயலாத நிலை | சாதல் இனிது | 230 |
| உட்பகை | மட்கலம் அறுக்கும் கருவி | 883 |
| உட்பகை உண்டான குடி புறத்தே கூடியொழுகினும் அகத்தே கூடாமை | செப்பின் புணர்ச்சி | 887 |
| உட்பகை உற்றகுடி தேய்தல் | அரம் பொருத பொன் தேய்தல் | 888 |
| உட்பகையின் சிறுமை | எள்ளின் பிளவு | 889 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா-எண் |
|---|---|---|
| உடம்பு தனித்திருக்க அதை விட்டு நீங்கும் உயிர் | கூடு தனித்திருக்க அதை விட்டு நீங்கும் பறவை | 338 |
| உடம்பு, உயிர் | கூடு, பறவை | 338 |
| உடன்பாடு இல்லாதவரோடு கூடி வாழ்தல் | குடிசையில் பாம்போடு உடன் வாழ்தல் | 890 |
| உணரும் தன்மையுடையார் முன் பேசுதல் | தானே வளரும் பயிருள்ள பாத்தியில் நீரைச் சொரிதல் | 718 |
| உயிர் | பறவை | 338 |
| உயிரும் உடம்பும் | பறவையும் கூடும் | 338 |
| உயிரை உடம்பினின்றும் பிரித்தவர் | நோயுடன் கூடிய இழிந்த வாழ்க்கை வாழ்பவர் | 330 |
| உரவோர் அழிவு வந்த விடத்தும் தளராமை | யானை தன் உடம்பு முழுதும் அம்புகளால் புண்பட்டும் தனது பெருமையை நிலை நிறுத்துதல் | 597 |
| உருவு கண்டு எள்ளாமை | உருள் பெருந்தேர்க்கு அச்சாணி | 667 |
| உருவுகண்டு தெளியாது செயல் கண்டு தெளிதல் | கணை யாழ்களின் தோற்றமும் பயனும் | 279 |
| உலகத்தார் 'உண்டு' என்பது 'இல்' என்பான் | வையத்து அலகை (பேய்) | 850 |
| உலகத்தில் உயர்ந்த வாழ்வு | தேவர் வாழ்வை நிகர்த்தது | 906 |
| உலகம் வாழ்வதற்கு இன்றியமையாதது | நீர் | 20 |
| ஒழுக்க நிலைபேற்றுக்கு இன்றியமையாதது | மழை | 20 |
| உலகிற்கு முதல்வன் இறைவன் | எழுத்திற்கு முதல் அகரம் | 1 |
| உலகோரால் நச்சப்படாதவன் செல்வம் | நடுவூரில் உள்ள நச்சுமரம் | 1008 |
| உழாது வாழ்பவர் | தொழுதுண்டு உழவர்பின் செல்கின்றவர் | 1033 |
| உழுவார் | உலகத்தார்க்கு ஆணி | 1032 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| உள்ளம் பொருந்திய காதல் | நிலத்தொடு நீர் பொருந்திய தன்மை | 1323 |
| உள்ள வலிமை யுடையவர் | செல்வமுடையவர் | 592 |
| உள்ளக் களிப்பையும் காண மகிழ்ச்சியையும் தருவது காமம் | உள்ளக்களிப்பையும் காண மகிழ்ச்சியையும் தாராதது கள் | 1281 |
| ஊக்கத்தின் அளவாகும் உயர்ச்சி | வெள்ளத்தின் அளவாகும் மலரின் நீட்சி | 595 |
| ஊக்கம் இல்லாதவர் | மரங்கள் | 600 |
| ஊக்கம் உடையோர் பெருஞ் செயலையும் செய்தல் | புலி ஊக்கமிகுதியால் பருத்த யானையைத் தாக்கி அச் சுறுத்தல் | 599 |
| ஊக்கமுடையான் ஒடுங்கி யிருத்தல் | ஆட்டுக்கடா தன்பகையைத் தாக்கப் பின்வாங்குதல் | 486 |
| ஊடல் அளவு | தினைத்துணை | 1282 |
| ஊடல் தரும் இன்பம் | தேவருலகம் தரும் இன்பம் | 1323 |
| ஊடியவரை ஊடலுணர்த்தி அன்பு செய்யாதிருத்தல் | வாடிய கொடியின் அடிப் பகுதியை அறுத்தல் | 1304 |
| ஊர் அலர் தூற்றல்<br>அன்னையின் கடுஞ்சொல்<br>காமநோய் | எரு<br>நீர்<br>பயிர் | 1147 |
| ஊரார் சொல்கின்ற அலர் | காமத்தின் வளர்ச்சி | 1144 |
| ஊராருடைய அலர் தூற்றல் | எரு (காதல் வளர்க்கும் எரு) | 1147 |
| ஊன் உண்டார் மனம் | படை (கொலைக் கருவி) கொண்டார் நெஞ்சம் | 253 |
| ஊன் உண்டாரின் மனம் நன்றூக்காது | படைகொண்டார் நெஞ்சமும் நன்னெறிச் செல்லாது | 253 |
| எண்ணும் எழுத்தும் | உயிர்க்கு இருகண்கள் | 392 |
| எல்லைமீறி வினையாற்றலால் அடையும் துன்பம் | நுனிக்கொம்பர் ஏறியவரின் உயிர்க்கு இறுதி | 476 |
| எளிய முயற்சியில் வெற்றி | கான முயலை அம்பால் எய்து வெற்றி பெறல் | 772 |
| அரிய முயற்சியில் தோல்வி | யானை பிழைத்த வேல் ஏந்துதல் | 772 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா-எண் |
|---|---|---|
| எளியவர் | எலி | 763 |
| ஐந்தடக்கல் | ஆமை | 126 |
| ஐம்புலன்கள் | யானை | |
| யானையை அடக்குவது | தோட்டி | |
| புலன்களை அடக்குவது | அறிவு | 24 |
| ஐயப்படாது அகத்தது உணர்வான் | தெய்வம் | 702 |
| ஐம்பொறிகளையும் அடக்கி யாளுதல் | ஆமையின் உறுப்புகள் அடக்கம் | 126 |
| ஒப்புரவறியான் | செத்தான் | 214 |
| ஒப்புரவறிவான் | உயிர்வாழ்வான் | 214 |
| ஒப்புரவாளனிடம் செல்வம் சேர்தல் | உள்ளூர்ப் பயன்மரம் பழுத்தல் | 216 |
| ஒப்புரவினால் வரும் கேடு | தன்னைவிற்றுக் கொள்ளத் தக்க பேறு | 220 |
| ஒருவரிடம் செல்வம் சேர்தல் | கூத்தாட்டவைக்குக் கூட்டம் சிறுகச் சிறுகச் சேர்தல் | 332 |
| ஒருவன் சூதினால் வரும் பொருளை விரும்பி ஆடுதல் | மீன் இரையான் மறைந்த தூண்டிலை விழுங்குதல் | 931 |
| ஒருவனுக்கு அணி | பணிவுடைமையும் இன் சொல்லும் | 95 |
| ஒருவன் தன்னைத்தான் காத்தொழுகப் பெருமை உளதாதல் | மகளிர் தன்னைத்தான் காத்தொழுகக் கற்பு உளதாதல் | 974 |
| ஒழுக்கத்தை யோம்புதல் | உயிரோம்புதல் | 131 |
| ஒழுக்கமில்லாதவனுடைய வாழ்வில் உயர்வு இல்லாமை | பொறாமை உடையவனிடத்தில் ஆக்கம் இல்லாமை | 135 |
| ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் | சேற்று நிலத்தில் ஊன்றுகோல் | 415 |
| ஒழுக்க நிலை பேற்றுக்கு இன்றியமையாதது | மழை | 20 |
| ஒற்றும் உரைசான்ற நூலும் | மன்னவனுடைய கண்கள் | 581 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| ஒன்றன் உயிரைக் கொன்று தின்னுமை | அவிசொரிந்து ஆயிரம் வேள்வி செய்தல் | 259 |
| கடுமொழி, கையிகந்த தண்டம் | வேந்தனுடைய வலிமையைத் தேய்க்கும் அரம் | 567 |
| கண் | பெருமழை | 1239 |
| கண் | மலர் | 1231 |
| கண்டாரை மகிழ்விக்கும் காமம் | உண்டாரை மகிழ்விக்கும் கள் | 1090 |
| கண்கள் | மலர்கள் | 1112, 1119, 1142, 1231 |
| கண்ணிற்கு அணிகலம் | கண்ணோட்டம் | 575 |
| கண்ணோட்டம் | கழிபெருங் காரிகை | 571 |
| கண்ணோட்டம் இல்லாத கண் | பாடலோடு இயைபில்லாத இசை | 573 |
| கண்ணோட்டம் இல்லாத கண் | புண் | 575 |
| கண்ணோட்டம் இல்லாதவர் | கண்ணிலர் | 577 |
| கண்ணோட்டம் உடையார் | கண்ணுடையார் | 577 |
| கண்ணோடியைந்து கண்ணோடாதவர் | மண்ணோடியைந்த மரம் | 576 |
| கணவனுக்கு மனைவியைப் பிரிதலும் கூடுதலும் | உயிர்க்குச் சாவும் வாழ்வும் | 1124 |
| கயமையால் விரும்புகின்றவற்றைச் செய்பவர் கயவர் | நல்வினையால் விரும்புகின்றவற்றைச் செய்பவர் தேவர் | 1073 |
| கயவர் | அறையப்படும் பறை | 1076 |
| கரவு | பாா (வன்னிலம்) | 1068 |
| கருமத்தால் நாணுவதே நாணம் | மகளிருக்குரிய நாணம் வேறு | 1011 |
| கல்லாதவர் | களர்நிலம் | 406 |
| கல்லாதவர் | விலங்கு | 410 |
| கல்லாதவரிடத்து உளதாய செல்வம் | நல்லவரிடத்துப் பொருந்திய வறுமை | 408 |
| கல்லாதான் கற்றவர் அவையின் முன் பேச விரும்புதல் | முலை இரண்டும் இல்லாதாள் பெண் தன்மையினை விரும்புதல் | 402 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| கல்லாதோர் | புண்ணுடையர் | 393 |
| கல்வி | கேடில் விழுச் செல்வம் | 400 |
| கல்வி இன்பத்திற்கு அளவோடு அமைந்த புலவி | உணவுக்கு அளவோடு அமைந்த உப்பு | 1302 |
| கழி பேரிரையான்கண் நோய் | இழிவறிந்து உண்பான்கண் இன்பம் | 946 |
| கள் உண்பவர் | நஞ்சுண்பவர் | 926 |
| கள் உண்பவர் நஞ்சு உண்பவருக்கு நிகர் | துஞ்சினர் செத்தார்க்கு நிகர் | 926 |
| கள்ளுண்டு களித்தான் ஒருவனைக் காரணம் காட்டித் தெளிவித்தல் | நீருள் மூழ்கிய ஒருவனைக் கை விளக்குக் கொண்டு தேடுதல் | 929 |
| களவறிந்தார் நெஞ்சில் கரவு | அளவறிந்தார் நெஞ்சில் அறம் | 288 |
| களன் அஞ்சிக் கற்ற செலச் சொல்லாதார் | உளரெனினும் இல்லார் | 730 |
| கற்கக் கற்க வளரும் அறிவு | தோண்டத் தோண்ட நீர் பெருகும் மணற்கேணி | 396 |
| கற்பு | திண்மை | 54 |
| கற்றும் பிறர் உணர விரித்துரையார் | மலர்ந்தும் மணம் வீசா மலர் | 650 |
| கற்றார் | மக்கள் | 410 |
| கற்றாரின் பணிவுடைமை | உடையார்முன் இல்லார் போல் நிற்றல் | 395 |
| கற்றோர் | கண்ணுடையர் | 393 |
| காதல் இயல்பாக வெளிப்படல் | தும்மல் இயல்பாக வெளிப்படல் | 1253 |
| காதலர் | கண் | 1267 |
| காதலர் இல்லாத இடத்து வரும் மாலையின் வருகை | கொலைக் களத்து வரும் ஏதிலர் | 1224 |
| காதலர் முயக்கத்திடையே விலகும் பொழுதின் சிறுமை | தலைவியின் மேனியில் வந்து செறிந்த பசலையின் மிகுதி-அள்ளிக் கொள்ளும் பொருள் போலும் காட்சி | 1187 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| காதலனைக் கண்டபோது அவனிடம் குற்றம் காணு திருத்தல் | கண்களுக்கு மைதீட்டும் போது தீட்டும் கோலைக் காணுதிருத்தல் | 1285 |
| காதலியின் அழகினுள் விளங்கும் குறிப்பு | மணியில் விளங்கும் நூல் | 1273 |
| காதலியின் புன்முறுவலில் அடங்கிய குறிப்பு | முகைமொக்குள் உள்ள நாற்றம் | 1274 |
| காம அளவு | பனைத்துணை | 1282 |
| காம இன்பம் | கடல் | 1166 |
| காமத்தின் மென்மை | மலரின்மென்மை | 1289 |
| காம நோய் | கடல் | 1137, 1164, 1175 |
| காம நோய் | பயிர் | 1147 |
| காம நோய் | நெருப்பு | 1159 |
| காமம் | கள் | 1190 |
| காம இன்பம் | கடல் | 1166 |
| காமம் | கடும்புனல் | 1134, 1167 |
| காம நோயும் நாணமும் | காவடித் தண்டின் இரு புறத்தும் தூங்கும் பொருள் | 1163 |
| காமம் வெளிப்படுதல் | தும்மல் வெளிப்படுதல் | 1253 |
| காமம் அலரால் வெளிப்படுந் தோறும் இனிமை மிகுதல் | கள்ளுண்டு மயங்க மயங்கக் கள்ளுண்பவர் மேலும் விரும்புதல் | 1145 |
| காம விருப்பு இருவரிடமும் இருத்தல் | காவடியின் பாரம் இருபாலும் இருத்தல் | 1196 |
| காலத்தினுற் செய்த நன்றி | உலகத்தினும் பெரிது | 102 |
| காலம் பார்த்துப் பகைவரை வெல்லுதல் | காக்கை வலிய கோட்டானைப் பகலில் வெல்லுதல் | 481 |
| காலம் வாய்க்காத போது செயலற்றிருத்தல் | கொக்கு இரையை நாடி அமைதியுடன் இருத்தல் | 490 |
| காலம் வாய்த்தபோது தவரு மல் செய்து முடித்தல் | கொக்கு இரையைக் கண்டதும் குத்தியெடுத்தல் | 490 |
| குடி | குன்றுவிளக்கு | 601 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா-எண் |
|---|---|---|
| குடிக்குக் குற்றம் வாராமல் காப்பவன் உடம்பு | இடும்பைக்குக கொள்கலம் | 1029 |
| குடிகள் அல்லலுற்று ஆற்ருது அழுத கண்ணீர் | செல்வத்தைத் தேய்க்கும் படை | 555 |
| குடி சிறக்கப் பிறரைத் தாங்க வல்லவர் | அமரகத்து வன்கண்ணர் | 1027 |
| குடிப்பிறந்தார் கண் விளங்கும் குற்றம் | விசும்பின் மதிக்கண் பலரறியும் வண்ணம் தோன்றும் களங்கம் | 957 |
| குடிப்பிறப்பின்கண் ஐயம் | நல்ல பண்புகளுக்கிடையில் அன்பில்லாமை | 958 |
| குடி மன்னவன் கோல்நோக்கி வாழ்தல் | உலகு வான்நோக்கி வாழ்தல் | 542 |
| குடியின் உயர்வுக்கும் நன்மைக்கும் | பணிவும் நாணமும் | 960 |
| குடிப் பிறப்பைக் காட்டும் வாய்ச்சொல் | நிலத்தின் தன்மையைக் காட்டும் முளை | 959 |
| குணத்தின் செறிவு | குன்று | 29 |
| கூடா நட்பினரின் கேண்மை | பொது மகளிரின் மனம் | 822 |
| கூறுமை நோக்கிக் குறிப்பறிவான் | உலகிற்கு ஓர் அணிகலன் | 701 |
| கெடு நீராரின் காமக் கலன் | நெடுநீர், மறவி, மடி, துயில் | 605 |
| கைம்மாறு கருதாத ஒப்புரவாளர் | மழை | 211 |
| கொண்கன் முயக்கற்றம் பார்க்கும் பசப்பு | விளக்கற்றம் பார்க்கும் இருள் | 1186 |
| கொலையிற் கொடியாரை அரசன் ஒறுத்தல் | பயிரினைக் காப்பாற்ற உழவன் களையினைக் களைதல் | 550 |
| கொலை வினையர் | புலை வினையர் | 329 |
| சாயலும் நாணும் | பசலையும் நோயும் | 1183 |
| சால்பிற்கு உரைகல் | தாழ்ந்தோரிடத்தும் தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பண்பு | 986 |
| சால்பு | திண்மை | 988 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா–எண் |
|---|---|---|
| சால்பு | பாரம் | 983 |
| சால்பிற்கு அடிநிலைக் குணங்கள்: அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம், வாய்மை | சால்பு பாரத்தைத் தாங்கும் தூண்கள் | 983 |
| சால்பு நாணத்திற்கு இருப்பிடம் | ஊன் உயிருக்கு இருப்பிடம் | 1013 |
| சான்றாண்மை | கடல் | 989 |
| சான்றோர் குழாத்துப் பேதை புகல் | தூய்மையல்லாதவற்றை மிதித்த கழுவாத காலைப் படுக்கையில் வைத்தல் | 840 |
| சான்றோர் மாற்றாரை மாற்றும் படை | பணிதல் | 985 |
| சான்றோரின் சால்பு குறைதல் | பெரிய உலகமும் பாரத்தைத் தாங்காது போதல் | 990 |
| சினத்தில் அளவு கடந்தவர் இறந்தவர் | சினத்தைத் துறந்தவர் துறந்தவர் | 310 |
| சினத்தைப் பொருளெனக் கொண்டவன் அழிதல் | நிலத்தை அறைந்தவனுடைய கை தவறாமல் அதனை உறுதல் | 307 |
| சினம் | சேர்ந்தாரைக் கொல்லி (நெருப்பு) | 306 |
| சீருடைச்செல்வர் பெற்ற சிறு வறுமை | உலகத்தைப் புரக்கும் மேகம் உற்ற மிகுந்த வறுமை | 1010 |
| சுற்றத்தாருள்ளும் துன்பம் தரும் தன்மை | நிழலும் நீரும் இன்னல் தருவன நோய் தரும் தன்மை | 881 |
| சூதில் வெற்றி பெறுதல் | தூண்டில் இரும்பை இரை என மயங்கி மீன் விழுங்குதல் | 931 |
| சூது | முகடி (மூதேவி) | 936 |
| செம்பொருள் | மெய்யறிவு | 91, 358 |
| செய்த உதவியும் காட்டும் நன்றியும் | தினையளவும் பனையளவும் | 104 |
| செய்யாமற் செய்த உதவி | வையகமும் வானகமும் | 101 |
| செல்வம் சேர்தல் | கூத்தாட்டவைக்குக் கூட்டம் சேர்தல் | 332 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
| --- | --- | --- |
| செல்வச்செவிலி பொருள் | அன்பு ஈன்ற குழந்தை அருள் | 757 |
| செவ்வி அரியனும் இன்னு முகத்தினையுமுடையானது செல்வம் | பேய் கண்டு காத்திருக்கும் செல்வம் | 565 |
| செல்வம் நீங்கிப் போதல் | கூத்து முடிந்ததும் கூட்டம் கலைதல் | 332 |
| செவியுணவிற் கேள்வி உடையார் | அவியுணவின் ஆன்றோர் | 413 |
| செறி தொடி செய்து விட்டுச் சென்ற கள்ளக்குறிப்பு | உறுதுயர் தீர்க்கும் மருந்து | 1275 |
| தத்தம் கருமம் | பெருமையையும் சிறுமையையும் தேர்ந்தறியும் உரைகல் | 505 |
| தம் இனத்தவர் அல்லார் முன் பேசுதல் | தூய்மை யில்லாத முற்றத்தில் அமிழ்தத்தைச் சிந்துதல் | 720 |
| தம் மக்கள் | தம்பொருள் | 63 |
| தம்மால் விரும்பப்படும் காதலரால் அன்பு செய்யப் பெற்றவர் நிலைமை | விதை இல்லாத பழத்தைப் பெற்றவர் நிலைமை | 1191 |
| தலைவன் பிரிந்த செய்தியைப் பலரறியத் தெரிவித்தல் | மெலிவான் முன்கையினின்றும் கழலும் வளையல்கள் | 1157 |
| தலைவனை நோக்கித் தலைவி தலை குனிதல் | வளர்க்கும் அன்புப் பாத்தியுள் வார்க்கின்ற நீர் | 1093 |
| தலைவனைப் பிரிந்த தலைவியின் நெஞ்சு அவன் பின்னே செல்லுதல் | கெட்டார்க்கு நட்டார் இல் | 1293 |
| தலைவியின் மேனியில் வந்து செறிந்த பசலையின் மிகுதி | அள்ளிக் கொள்ளும் பொருள் போலும் காட்சி | 1187 |
| தவக்கோலம் பூண்டு தீய செயல்களைச் செய்தல் | வேடன் புதரில் மறைந்து கொண்டு பறவைகளை வலைவீசிப் பிடித்தல் | 274 |
| தவம் செய்வோரைத் துன்பம் வருத்த வருத்த மெய் யுணர்வு மிகும் | சுடச்சுடப் பொன்னும் ஒளிரும் | 267 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| தன்னுடைய உயர்ந்த நிலையினின்றும் தாழ்ந்த மாந்தர் | தலையினின்றும் விழுந்து தாழ்வுற்ற மயிர் | 964 |
| தன்னைக் காக்கப் பெருமைப் பண்பு சிறக்கும் | தன்னைக்காக்க மகளிரின் கற்புச் சிறக்கும் | 974 |
| தனக்கு நன்மையானவற்றைப் பிறர் ஏவவும் செய்யாமல் தானும் உணரா திருத்தல் | உயிர் போகுமளவும் இருக்கும் நோய் | 848 |
| தனக்கு இணையற்ற பொருள் மேல் வெற்றி பெறல் | கான முயலை அம்பால் எய்து வீழ்த்துதல் | 772 |
| தாமே தமியர் உணல் | இரத்தலினும் துன்பமானது | 229 |
| தாம் விரும்பும் காதலியரின் தோள் மேல் துயிலும் இன்பம் | தாமரைக் கண்ணான் உலகின் பேரின்பம் | 1103 |
| தாளாண்மை இல்லாதவன் வேளாண்மை | பேடிகையில் கொண்ட வாளாண்மை | 614 |
| தானும் நுகராது தக்கார்க்குக் கொடுத்தும் வாழாதவன் | பெருஞ்செல்வத்தின் நோய் | 1006 |
| திண்மை | கற்பு, சால்பு | 54, 988 |
| தீயவை | தீ | 202 |
| தீயவை செய்தார் தவறுது கெடுதல் | தன் நிழல் விடாது தன் அடியின்கீழ் தங்கியிருத்தல் | 208 |
| துஞ்சினர் | செத்தார் | 926 |
| துணைவர் இல்லாதவர்க்கு நிலைபேறு இல்லை | முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை | 449 |
| துறந்தாரின் பெருமையை அளவிட்டுக் கூறுதல் | இறந்தாரை எண்ணிக் கணக்கிடுதல் | 22 |
| துன்பக் காலத்து ஒருவனை நீங்கும் நட்பினர் | போர்க்களத்து தள்ளி விட்டோடும் குதிரை | 814 |
| துன்பத்தால் மயங்கிய மகளிர் | காலத்தால் மயங்கிய மாலைப் பொழுது | 1222 |
| துன்பத்தை வெளிப்படுத்தும் கண்கள் | செய்தியை அறிவிக்கும் பறை | 1180 |
| துன்புறுத்துதலால் பயன் படுவர் கீழ்மக்கள் | அழித்துப் பிழிந்தால் பயன் படும் கரும்பு | 1078 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| துனியும் புலவியும் | கனியும் கருக்காயும் | 1306 |
| தோள் | வேய் (மூங்கில்) | 1113 |
| தோற்றத்தால் மக்கள் | பண்பால் கயவர் | 1071 |
| நகைக்கும் நட்பினரால் வருவன | பகைவரால் வருவன | 817 |
| நங்கைக்கும் நம்பிக்கும் உள்ள தொடர்பு | உடம்பிற்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பு | 1122 |
| நச்சப் படாதவன் செல்வம் | நடுவூரில் உள்ள நச்சுமரம் பழுத்தல் | 1008 |
| நட்பினை அளக்கும் கோல் | துன்பம் வரும் காலம் | 796 |
| நடுவு நிலைமை | துலாக்கோல் | 118 |
| நண்பனுக்கு இடுக்கண் உற்றதும் விரைந்து களைதல் | உடை நெகிழ்ந்தவன் கை உடனே விரைந்து ஆடையைச் சரிசெய்தல் | 788 |
| நம்பியவருடைய மனைவியிடத்துத் தீமைசெய்வோர் | செத்தவர் | 143 |
| நயனுடையான் நல்கூர்தல் | செய்யத்தக்க உதவிகளைச் செய்யாமல் வருந்துகின்ற தன்மை | 219 |
| நல்குரவு | இடும்பை | 1045 |
| நல்லாருடைய தொடர்பைக் கைவிடுதல் | பலருடைய பகையைத் தேடிக் கொள்ளுதல் | 450 |
| நல்லினத்தின் வரும் துணை | தீய இனத்தினால் வரும் அல்லல் (பகை) | 460 |
| நலத்தைக் கெடுப்பது நாணின்மை | குலத்தைக் கெடுப்பது ஒழுக்கக் கேடு | 1019 |
| நாண் | காவலாகிய வேலி | 1016 |
| நற்பண்புடையானிடம் செல்வம் சேர்தல் | பயன்மரம் பழுத்தல் | 216 |
| நாண் | நல்லாள் | 924 |
| நாண் அகத்தில்லார் இயக்கம் | மரப்பாவையைக் கயிறு கொண்டு ஆட்டி உயிர் உள்ளதாக மயக்குதல் | 1020 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா-எண் |
|---|---|---|
| நாண் இல்லாதவரின் பீடு நடை | பிணி | 1014 |
| நாணத்திற்கு இருப்பிடம் சால்பு | உயிருக்கு இருப்பிடம் ஊன் | 1013 |
| நாணம்<br>நிறை<br>காமம் | தாழ்ப்பாள்<br>கதவு<br>கோடரி | 1251 |
| நாணமும், நல்லாண்மையும் | காமக் கடும் புனலைக் கடக்க உதவும் தோணி | 1134 |
| நாணின்மை நலத்தைக் கெடுக்கும் | ஒழுக்கக் கேடு குலத்தைக் கெடுக்கும் | 1019 |
| நாணுக்கு உறைவிடம் | பிறர்பழியும் தம் பழியும் நாணுவார் | 1015 |
| நாணுடைமை | சான்றோர்க்கு அணிகலம் | 1014 |
| நாணுடைமை | மாந்தர் சிறப்பு | 1012 |
| நாவினல் சுட்ட வடு | தீயினல் சுட்டபுண் | 129 |
| நாள் | உயிரை உடம்பினின்றும் பிரிக்கும் வாள் | 334 |
| நிரம்பிய நூலறிவின்றிப் பேசுதல் | அரங்கின்றி வட்டாடுதல் | 401 |
| நிலத்திற்கு உரியவனல் சரியான முறையில் கவனிக்கப்படாத நிலம் | தலைவனின் பிரிவால் ஊடல் கொண்ட மனைவி | 1039 |
| நிலையாமைத் தன்மையுடைய நாள் | உயிரை உடம்பினின்றும் பிரிக்கும் வாள் | 334 |
| நிறைக்கு நாணம் | கதவிற்குத் தாழ்ப்பாள் | 1251 |
| நிறைமொழி மாந்தர் பெருமை | உலகிற்கு அவர் தரும் மறைமொழி | 28 |
| நிறை; காமம்; நாணம் | கதவு ; கோடரி, தாழ்ப்பாள் | 1251 |
| நினைக்கும் போது எல்லாம் மகிழ்ச்சி தருவது: காமம் | உண்டபோது மகிழ்ச்சி தருவது : கள் | 1021 |
| நீங்கினல் சுடும் காமநோய் | தொட்டால் சுடும் நெருப்பு | 1159 |
| நீங்கினல் துன்பமும் அணுகினல் இன்பமும் தருகின்ற பெண் | தீ (நெருப்பு) | 1104 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் | கண் | 710 |
| நுண்மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம் | மண்மாண் புனைபாவை | 407 |
| நெஞ்சம் கருதியதைக் காட்டுவது முகம் | அடுத்த பொருளைக் காட்டுவது பளிங்கு | 706 |
| நெஞ்சு உருகுதல் | கொழுப்பு தீயில் உருகுதல் | 1260 |
| நெடுந்தொலை சென்றவர் வருநாளை எண்ணி ஏங்குபவர்க்கு ஒருநாள் | எழுநாள் | 1269 |
| நெடுநீர், மறவி, மடி, துயில் | கெடுநீராரின் காமக் கலன் | 605 |
| நோக்கித் தலைகுனிதல் | வளர்க்கும் அன்புப் பாத்தியுள் வார்க்கின்றநீர் | 1093 |
| நோக்கினள் நோக்கு எதிர்நோக்குதல் | தானே வருத்தும் அணங்கு ஒரு படையையும் கொண்டு தாக்குதல் | 1082 |
| பகுத்துண்டு வாழ்வார்க்கு ஆக்கம் சேர்தல் | காகம் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணுதல் | 527 |
| பகை | பண்பு இல்லாத தீமை | 871 |
| பகைவரைத் தொடக்க நிலையிலேயே அழித்தல் | முள் மரத்தினை இளையதாக இருக்கும் போதே களைதல் | 879 |
| பகையை வெல்லும் காலம் | காக்கை வலிய கோட்டானைப் பகலில் வெல்லுதல் | 481 |
| பகைவர் அழுத கண்ணீரில் தீமை | தொழுத கையினில் படை | 828 |
| பசப்பு—கொண்கன் முயக்கற்றம் பார்க்கும் | இருள்—விளக்கற்றம் பார்க்கும் | 1186 |
| பசி | தீப்பிணி | 227 |
| பசியைப் போக்குவாரின் ஆற்றல் | பசியைப் பொறுக்கும் தவத்தினரின் ஆற்றல் | 225 |
| பண்பிலாரின் தோற்றப் பொலிவு | விருப்ப மிகுதியால் பருகுவார் போலக் காணும் காட்சி | 811 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| பண்பிலான் பெற்ற பெருஞ் செல்வத்தினுல் கேடு விளைதல் | வைத்த கலத்தின் கெடுதியால் நல்லபால் தன் சுவை கெடல் | 1000 |
| பண்பு ஒத்தல் | மக்கள் ஒத்தல் | 993 |
| பண்புடையாளர் தொடர்பு தரும் இன்பம் | பயிலப் பயில நூல் தரும் இன்பம் | 783 |
| பணிமொழி வாலெயிறு ஊறிய நீர் | தேன் கலந்த பால் | 1121 |
| பயன்படாமை அறிந்தும் ஊடல் கொள்ளுதல் | வெள்ளம் இழுத்துச் செல்வதை அறிந்தும் புனலில் பாய்தல் | 1287 |
| பயனில் சொல் பாராட்டுவான் | மக்கட் பதடி | 196 |
| பயனை அளந்து பார்க்கும் நண்பர் | அன்புகொள்ளாது பெறுகின்ற பொருளைக் கொள்ளும் விலைமகளிர், கள்வர் | 813 |
| பயனை எதிர்பாராது செய்த உதவி | கடலினும் பெரிது | 103 |
| பருவத்தோடு ஒட்ட ஒழுகல் | செல்வம் நீங்காதிருக்கக் கட்டும் கயிறு | 482 |
| பழுதெண்ணும் மந்திரி | பக்கத்தில் எழுபது கோடிப் பகைவர் | 639 |
| பற்றுக் கொடுத்துத் தாங்க வல்ல நல்லாள் இல்லாத குடி துன்பம் வருத்த வீழும் | மரம் கோடரியால் வெட்ட வீழும் | 1030 |
| பனி அரும்பி நடுக்கம் தரும் மாலை | துனி (வெறுப்பு) அரும்பித் துன்பம் வளரும் நிலை | 1223 |
| பிணங்கியவரை ஊடலுறுத்தித் தழுவாதிருத்தல் | துன்பத்தால் வருந்தியவரை மேலும் துன்ப நோய் வருத்துதல் | 1303 |
| பிரிந்த தலைவரின் கொடுமைத் தன்மை | நீண்டு கழியும் இராக் காலத்தின் கொடுமை | 1169 |
| பிரிந்த தலைவிக்குக் கொல்லும் படை | குழலோசை | 1228 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| பிரிந்த மகளிர்க்கு மாலைப் பொழுது | அழல் | 1228 |
| பிரிவுத் துன்பம் பொருத உயிர் | காவடித்தண்டு | 1163 |
| பிரிவுத் துன்பம் வரினும் மேலும் மேலும் விரும்பும் காதலனின் மார்பு | இழிவு வரத்தக்க துன்பங்களைச் செய்யினும் கள்ளுண்போர் மேலும் மேலும் விரும்பும் கள் | 1288 |
| பிறப்பு செம்பொருள் | பேதைமை மெய்யறிவு | 358 |
| பிறப்பு | விழிப்பு | 339 |
| பிறவிப் பெருக்கம் | பெருங்கடல் | 10 |
| பிறன் மனையாள் | பிறன் பொருள் | 141 |
| பீடுநடை | ஏற்றின் நடை | 59 |
| புணர்தலின் ஊடல் இனிது | உணலினும் உண்டது அறல் இனிது | 1326 |
| புலந்தாரைப் புல்லாவிடல் | துன்பத்தால் வருந்தியவரை மேலும் துன்ப நோய் வருத்துதல் | 1303 |
| புலவி | உணவில் அளவோடு அமைந்த உப்பு | 1302 |
| புலவி அன்பு செலுத்துவோரிடத்து இனிமையானது | நீர் நிழலை அடுத்திருப்பது இனிமையானது | 1309 |
| புலவியை நீட்டித்தல் | உணவில் சிறிதளவு உப்பு மிகுதியாதல் | 1302 |
| புலால் | பிறிதொன்றன் புண் | 257 |
| புலன்களை அடக்குவது அறிவு | யானையை அடக்குவது தோட்டி | 24 |
| பெண்ணின் மென்மை | அனிச்சப்பூவின் மென்மை | 1111 |
| பெண்ணினுடைய தழுவலினால் வரும் இன்பம் | வீட்டிலிருந்து கொண்டு தாம் ஈட்டிய பொருளைப் பகுத்துக் கொடுத்து உண்ணலால் வரும் இன்பம் | 1107 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மை | நாணுடைய பெண்மை | 907 |
| பெண்ணைத் தழுவுதல் | வீட்டிலிருந்து கொண்டு தாம் ஈட்டிய பொருளைப் பகுத்துக் கொடுத்து உண்ணல் | 1107 |
| பெண் தன்மையுடன் போர் செய்யும் பெரிய கண்கள் | எமன் | 1083 |
| பெண்மை உடைக்கும் படை | பன்மாயக் கள்வன் பணிமொழி | 1258 |
| பெரியாரின் உயர்ச்சி | குன்றின் உயர்ச்சி | 898, 965 |
| பெரியாரைப் பிழைத்தவர் தப்ப முடியாமை | எரியால் சுடப்பட்டவர் தப்ப முடியாமை | 896 |
| பெருந்தகையான் செல்வம் | எல்லா உறுப்புகளும் பயனுகும் மரம் | 217 |
| பெருமை — தன்னைத் தான் காத்தொழுகுதல் | கற்பு—மகளிர் தன்னைத்தான் காத் தொழுகுதல் | 974 |
| பேதை பொருள் பெற்று மயங்குதல் | பித்துப் பிடித்த ஒருவன் கள் குடித்து மயங்குதல் | 838 |
| பேதையர் நட்பு குறைதல் | முழுமதி தேய்தல் | 782 |
| பேதையார் கேண்மையைக் கைவிடுதல் | ஊதியம் | 797 |
| பேரறிவாளன் செல்வம் | ஊரார் நீருண்ணும் குளம் | 215 |
| பொருட் பெண்டிரின் பொய்ம்மை முயக்கம் | இருட்டறையில் ஏதில் பிணந் தழுவல் | 913 |
| பொறுத்தாரைப் பேணிப் போற்றுதல் | பொன்னைப் பொதிந்து போற்றுதல் | 155 |
| பொருள் | செல்வச் செவிலி | 757 |
| அருள் | அன்பு ஈன்ற குழந்தை | 757 |
| பொருள் | செறுநர் செருக்கறுக்கும் எஃகு | 759 |
| பொருள் | நந்தா விளக்கு | 753 |
| பொருள் சேர்த்தலை விரும்பிப் புகழை விரும்பாதவர் | நிலத்திற்குப் பாரம் | 1003 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| பொருள் தன் கையகத்து இருக்கச் செயல் செய்தல் | குன்றின்மேல் ஏறி யானைப் போர் காணுதல் | 758 |
| போகும் காலத்துச் செல்வம் ஒருங்கே நீங்கிப் போதல் | கூத்து முடிந்ததும் கூட்டம் ஒருங்கே கலைதல் | 332 |
| மக்கட் பண்பில்லாதவர் | மரம் | 997 |
| மக்கள் சிறுகை அளாவிய கூழ் | அமிழ்து | 64 |
| மக்கள் மழலைச் சொல் | குழல், யாழ்களின் இசை | 66 |
| மக்களைக் காப்பாற்றக் கொலைத் தண்டனையினால் அரசன் கொடியாரை ஒறுத்தல் | பயிரைக் காப்பாற்ற உழவன் களையினைக் களைதல் | 550 |
| மகளிர் கண் | வேல் | 1113 |
| மகளிர் பல் | முத்து | 1113 |
| மகளிர் மணம் | இயற்கை மணம் | 1113 |
| மகளிர் மேனி | தளிர் | 1113 |
| மகளிரிடம் பொருந்தப் பொருந்தத் தெரியவரும் காதல் நிறைவு பெருமை | நூற்பொருள்களை அறிய அறிய உணரப்படும் அறியாமை | 1110 |
| மகளிரின் தோள் | அமிழ்து | 1106 |
| மடநோக்கு (இளமைப் பார்வை) | பெண்மான் பார்வை | 1089 |
| மடவரல் நோக்கம் | கூற்றம், பிணை (பெண் மான்) | 1085 |
| மடி | மாசு | 601 |
| மடியிலான் | திருமகள் சேர்வாள் | 617 |
| மடியுளான் | மாமுகடி சேர்வாள் (மூதேவி) | 617 |
| மலரணிந்த கூந்தலையுடைய மகளிரின் தோள்கள் தரும் இன்பம் | விரும்பிய பொருள்கள் விரும்பியவாறு தருகின்ற இன்பம் | 1105 |
| மறதி உடையார்க்கு நன்னிலை வரினும் பயனில்லை | அச்சம் உடையார்க்கு அரண் இருந்தும் பயனில்லை | 534 |
| மறதி புகழைப் போக்கும் | வறுமை அறிவை அழிக்கும் | 532 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| மறதியால் வரும் சோர்வின் தீமை | வரம்பு கடந்த சினத்தால் வரும் தீமை | 531 |
| மறைப்பவர்க்குக் காமநோய் மிகுதல் | இறைப்பவர்க்கு ஊற்று நீர் மிகுதல் | 1161 |
| மன்னவன் முறை கோடுதல் | வானம் உறைகோடுதல் | 559 |
| மன அடக்கம் இல்லாதவன் தவக்கோலம் கொண்டிருத்தல் | பசு புலியின் தோலைப் போர்த்துக் கொண்டு மேய்தல் | 273 |
| மனத்தொடு வாய்மை மொழிபவன் | தவத்தொடு தானம் செய்பவன் | 295 |
| மனை மாட்சியும் நன்மக்களும் | மங்கலமும் நன்கலமும் | 60 |
| மனைவியோடு கூடுதல் | உயிர்க்கு வாழ்வு | 1124 |
| மனைவியைப் பிரிதல் | உயிர்க்குச் சாவு | 1124 |
| மாதர் | அணங்கு, ஆய்மயில் | 1081 |
| மாதர் அடியின் மென்மை | அனிச்சமலர், அன்னப் பறவை இறகுகளின் மென்மை | 1120 |
| மாதர் முகம் | திங்கள் | 1116-1119 |
| மாதர் முலைமேல் துகில் | மதம் பிடித்த யானையின் முகபடாம் | 1087 |
| மாதரால் வரும் காமநோய்க்கு அம் மாதரே மருந்து | பிற நோய்க்கும் வேறு மருந்து | 1102 |
| மாலை(க்காலம்) | மகளிரின் உயிரை உண்ணும் இறுதிக் காலம் அல்லது உயிரை உண்ணும் வேல் | 1221 |
| மானக்குறைவின் சிறுமை | குன்றிமணி | 965 |
| மானம் அழிய நேர்ந்தால் உயிர் வாழ விரும்பாதார் | மயிர்நீங்கினுல் உயிர் வாழாத கவரிமான் | 969 |
| முகம் | திங்கள் | 1116-1119 |
| முயற்சி | திரு | 616 |
| முயற்சியின்மை | வறுமை | 616 |
| முறை செய்து காப்பாற்றும் மன்னவன் | இறைவன் | 388 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா—எண் |
|---|---|---|
| முறை செய்யா மன்னவன் கீழ் வாழ்தல் துன்பம் தரும் | பொருள் இல்லாத வறுமை நிலையைவிடச் செல்வ நிலை துன்பம் தரும் | 558 |
| வகையறச் சூழாது வினை மேற் செல்லுதல் | பகைவரை வளரும் பாத்தியில் நிலை பெறச் செய்தல் | 465 |
| வஞ்சம் நிறைந்த பொது மகளிரின் சேர்க்கை | ஆராய்ந்தறியும் அறிவு இல்லாதவர்க்கு அணங்கின் தாக்கு | 918 |
| வஞ்சனைச் செயல்களால் பொருள் சேர்த்துக் காப்பாற்றுதல் | சுடப்படாத பசிய மட்கலத்துள் நீரை வைத்துக் காப்பாற்றுதல் | 660 |
| வரு முன்னர்க் காவாதான் வாழ்க்கை | எரிமுன்னர் வைக்கோற் போர் | 435 |
| வரைவிலா மாணிழையார் மென்றோள் | உயர்வில்லாத கீழ்மக்கள் ஆழ்ந்து கிடக்கும் நரகம் | 919 |
| வலியவர் | பாம்பு | 763 |
| வலிய வீரர்க்குத் தோல்வி | வேல் கொண்டெறிய விழித்த கண் இமைத்தல் | 775 |
| வலியற்ற பகைவரின் வெற்று ஆரவாரம் | எலிக்கூட்டத்தின் பெரும் ஆரவார ஒலி | 763 |
| வலியறியாது அளவின்றி வினையாற்றி அழிதல் | மயிலிறகு ஏற்றிய வண்டியாலும் மிகுதி காரணமாக முறிதல் | 475 |
| வலியானும் மெலியானும் | பாம்பும் எலியும் | 763 |
| வறியவர் பசி தீர்த்தல் | பொருள் வைக்குமிடம் | 226 |
| வனப்பால் தலைவனை வருத்தும் தலைவி அவன் பார்வைக்கு எதிராக நோக்கி வருத்துதல் | தானே வருத்தும் அணங்கு ஒருவகைப் படையையும் கொண்டு தாக்குதல் | 1082 |
| வறுமை | நெருப்பு | 1049 |
| வறுமையின் துன்பம் | கொலையின் துன்பம் | 1048 |
| வான் | உலகிற்கு அமிழ்தம் | 11 |
| விடாமல் செய்கின்ற அறம் | பிறவி வழியை அடைக்கும் கல் | 38 |

| பொருள் | எடுத்துக்காட்டு | பா–எண் |
|---|---|---|
| விடா முயற்சி உடையான் | வண்டியை இழுக்கும் பகடு | 624 |
| விருந்தினர் | அனிச்சப்பூ | 90 |
| விருந்து நோக்கக் குழைதல் | அனிச்சம் மோப்பக் குழைதல் | 90 |
| விரும்பிய மனைவியின் தோள் மேல் துயிலும் இன்பம் | தாமரைக் கண்ணன் உலகின் பேரின்பம் | 1103 |
| விரும்புகின்றவர்க்குக் காதலர் அளிக்கும் அன்பு | உயிர் வாழ்கின்றவர்க்கு மழை பெய்து மேகம் காப்பாற்றும் தன்மை | 1192 |
| வில்லேருழவர் பகை | சொல்லேருழவர் பகை | 872 |
| வில் வணக்கம் தீமை தரும் | பகைவரின் சொல் வணக்கம் தீமை தரும் | 827 |
| வினைத்திட்பம் பொருந்திய தோற்றத்தால் சிறியவர் | உருள் பெருந்தேர்க்கு அச்சாணி | 667 |
| வினைநலம் வேண்டிய எல்லாம் தரும் | துணை நலம் ஆக்கம் தரும் | 651 |
| வினை, பகைகளின் குறை | தீயின் குறை | 674 |
| வினையால் வினையை ஆக்குதல் | யானையால் யானையைப் பிடித்தல் | 678 |
| வீரர்க்குப் பயன்படாத நாள் | விழுப்புண் படாத நாள் | 775 |
| வெளிப்படையான பகையும் உட்பகையும் | வாளும் கேளும் | 882 |
| வேண்டாமை | சிறந்த செல்வம் | 363 |
| வேறுபட்டு நோக்க விருந்தினர் வாடுதல் | முகர்ந்தவுடன் அனிச்சப்பூ வாடுதல் | 90 |
| வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | வானுறையும் தெய்வம் | 50 |

# 11. சொற்பொருள் ஒப்புமை

வள்ளுவர் வகுத்துரைக்கும் பொருள்களுள் சிற்சில கருத்துரைகள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு முறையில் வெவ்வேறு பயன் கருதி எடுத்துரைக்கப் படுகின்றன. மேற்போக்காகப் பார்க்கும்போது ஒருசில கருத்துகள் மீண்டும் மீண்டும் வருவது போல் தோன்றும். எனினும், கூர்ந்து பார்ப்போமானல் அவற்றிற்குள் நுண்ணிய வேறுபாடுகள் இருப்பதும் தெரியவரும். இங்ஙனம் வரும் இடங்கள் வள்ளுவரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டும்.

சிறுசிறு சொற்களும் சொற்ருெடர்களும் விரிந்து பரந்து ஆழ்ந்த நுண்ணிய அரும் பொருள்களை உள்ளடக்கியனவாயுள்ளன. திருவள்ளுவமாலையில் கபிலர், "தினையினும் சிறிய அளவுடைய புல்லின் நுனியிலுள்ள பனித்துளி நீண்ட பனைமரத்தின் சாயையும் காட்டும். அதுபோல வள்ளுவரின் குறள் வெண்பா மிகப்பல பொருள்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது" என்கிருர்.

*தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட*
*பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு*
*வள்ளைக் குறங்கும் வளநாட! வள்ளுவனர்*
*வெள்ளைக் குறட்பா விரி* (திருவள்ளுவமாலை—5)

என்பது கபிலரின் போற்றுரை. இப் போற்றுரை உண்மையே என்பதைக் குறள்மணிகளை ஊன்றிக் கற்பார் நன்குணர்வர்.

சொல்லால், சொற்ருெடரால், சொல்லும் முறையால், பொருள்களை எடுத்துக்காட்டும் வகையால், கருத்து வகையால் ஒப்புடையனவாய்க் காணப்படும் பகுதிகள் திருக்குறளில் அங்கங்கே உள. எடுத்துக்காட்டாக, 'வைக்கப்படும்' என்னும் ஒரு சொல்லை நோக்குவோம். மதிக்கப்படும், போற்றப்படும், கருதப்படும் என்னும் பொருள் தரும் இச்சொல் பின்வரும் நான்கு குறள்களில் வந்துள்ளது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் 50)

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும். (குறள் 388)

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். (குறள் 214)

உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். (குறள் 850)

இவற்றுள் முதலிரண்டு பாடல்கள் புகழ் மதிப்பும், பின்னிரண்டு பாடல்கள் இகழ் மதிப்பும் பெறுதலை உணர்த்துகின்றன.

இவற்றால் யார் யார் எங்ஙனம் உலகினரால் மதிக்கப்படுவார் என்பது தெரியவரும். வள்ளுவர் இக் கருத்துகளை குறள் நூலில் நால்வேறிடங்களில் வைத்துள்ள சொல்லமைப்பும் பொருளின் போக்கும் ஒப்புமையுடையவாய்க் காணப்படுகின்றன.

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி. (குறள் 40)

அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா. (குறள் 366)

இவ்விரண்டு குறள்களும் சொல்லும் முறையால் ஒன்றுபோல் தோன்றினும், முதற்குறளில் இரண்டு கருத்தும் அடுத்த குறளில் ஒரு கருத்துமே ஆசிரியரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். (குறள் 942)

அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு. (குறள் 943)

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்கத் துவரப் பசித்து. (குறள் 944)

இம் மூன்று குறள்களிலும் பசித்துப் புசித்தலும், ஏற்ற உணவுகளை உட்கொள்ளுதலும், ஆசைக்கு ஆட்பட்டு அளவில் மிக உண்ணாது முன் உண்டது அற்றபடியை அறிந்து உணவு கொள்ளுதலும் கூறி, இங்ஙனம் உணவு நியமமுடையானுக்கு நோய் வாராது என்றும், எனவே, அவனுக்கு மருந்து என ஒன்று தேவைப்படாது என்றும் எடுத்துரைக்கின்றார். இதனால் அளவோடு உடலின் தன்மை அறிந்து

உண்பானுக்கு உணவே மருந்தாகும் என்பது விளங்கும். இதே கருத்தைக் காமத்துப் பாலில் உவமையாக எடுத்துக்காட்டு முகத்தால்,

*உணலினும் உண்டது அறல் இனிது, காமம்*
*புணர்தலின் ஊடல் இனிது* (குறள் 1326)

என்று கூறுகிறார். பசித்துப் புசித்தலால் வரும் இன்பம் போன்றது அகன்று கூடுதலால் பெறும் இன்பம் என்பது இதன் கருத்து. இங்கே மருந்து அதிகாரத்தில் ஆசிரியர் எடுத்துக் கூறிய கருத்து, உவமை வாயிலாகவும் விளக்கம் பெறுதல் காணலாம்.

உலகநடப்பை நன்கு உணர்ந்த உபகாரியின் செல்வம் எல்லார்க்கும் எளிதின் பயன்படும். இது மாந்தர்க்குப் பயன்படும் மரம் ஊர் நடுவே பழுத்தாற் போன்று உள்ளதாம். ஊர்ப் பொது வாயுள்ள உண்ணுதற்குரிய பழம் எல்லாரும் பெற்று இன்புறத் தக்கதாயிருக்கும். இச் செய்தியை ' ஒப்புரவறிதல் ' அதிகாரத்துள் (22) வரும்,

*பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*
*நயனுடை யான்கண் படின்.* (குறள் 216)

என்ற குறளில் காண்கிறோம். இந்தக் கருத்தின் மறுபதிப்புப் போலப் பிறர்க்கு உதவாதான் செல்வத்தை,

*நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்*
*நச்சு மரம்பழுத் தற்று* (குறள் 1008)

என்று ' நன்றியில் செல்வம் ' பற்றிக் கூறும் அதிகாரத்தில் (101) அமைத்துள்ளார். ஊர் நடுவிலுள்ள நச்சு மரத்தின் பழத்தை யார் தாம் விரும்புவர் ? எவரும் விரும்பி நெருங்கி எடுத்துப் பயன் படுத்துவாரல்லர். அதுபோல, எவருக்கும் உதவாது சேர்த்து வைத்துள்ள ஈயாதானையும் உலகத்தார் விரும்பார் என்பது விளக்க பெற்றுள்ளது. ஒரே கருத்து பயன்படுதல், பயன்படாமை என்னும் காரணம்பற்றி வெவ்வேறு வகையில் சித்திரித்துக் காட்டப் பெற்றுள்ளது. இவற்றால் ஆசிரியர் உலகோர்க்கு உணர்த்தக் கருதிய கருத்து நன்கு கேட்பார் உளத்தில் பதியுமாறு விளக்கம் பெற்றிருத்தலும் தெரியவரும்.

உள்ளம் கலந்த இருவருடைய உணர்ச்சிதான் நட்பு ; முகத் தளவில், பேச்சளவில் நட்பினர் போலக் காட்டிக் கொள்வது உண்மை நட்பு என்று கொள்ளும் தகுதி பெறாது.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு (குறள் 787)

என்னும் பாடலால் உண்மை நட்பின் இயல்பு எது என்பதனை ஆசிரியர் விளக்குகிறார்.

பகைவனிடத்து உளங்கலந்த நட்புறவு ஏற்படுதல் கூடுமா? கூடாதல்லவா? ஆகவே, ஒருகால் பகைவன் நட்பாக வரும் காலம் வாய்க்குமானால், அவனோடு முகத்தளவால் நட்புக் காட்டி அகத்துளதாம் உள்ள உணர்ச்சி கொள்ளுதல் கூடாது என்கிறார்.

பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல் (குறள் 830)

எனவரும் பாட்டு உண்மை நட்புப் பற்றிக் கூறிய பாட்டிற்கு எதிர் மாறான கருத்தைத் தெரிவித்தல் கவனிக்கத்தக்கது. இவற்றால் உள்ளுணர்ச்சி ஒற்றுமைதான் இருவர் நட்புக்கு உறுதுணை என்பதும் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளமை அறியலாம்.

அரசனது செங்கோல் ஆட்சி உலகிற்கு வான மழை போன்றது என்று எடுத்துக் கூறியவர் (அதி. 55) அடுத்து வரும் கொடுங் கோன்மை கூறும் அதிகாரத்தில் (56) மழையின்மையால் உலகம் எவ்வாறு நலிவுறுமோ அவ்வாறு கொடுங்கோலாட்சியால் குடிகள் துன்புறுவர் என்று எடுத்துக்காட்டுகின்றார்.

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. (குறள் 542)

துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. (குறள் 557)

இப் பாடல்களின் சொற்பொருள் ஒற்றுமை கண்டு இன்புறத் தக்கது. ஒரு நாட்டிற்கு எல்லாவற்றினும் மேலானது அரசனது சீரிய செங்கோல் ஆட்சி என்னும் கருத்தை இப் பாடல்களால் ஆசிரியர் நயம் பெற விளக்கியுள்ளார். அரசனே நாட்டிற்கு உயிர் போல்வான் என்பதனை,

ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமைவு இல்லாத நாடு. (குறள் 740)

எனவரும் 'நாடு' பற்றிக் கூறிய இடத்துக் காணும் பாடலாலும் இனிது உணரலாம்.

இவ்வாறே ஒரு பொருளை வெவ்வேறு தன்மை பற்றி ஒப்புக் காட்டும் இடங்களும் குறளகத்து உள. உதாரணமாகக் காமத்திற்குக் கள்ளை ஒப்புக் கூறிய பாடல்களை இங்குப் பார்ப்போம் :

*உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்*
*கண்டார் மகிழ்செய் தல் இன்று.* (குறள் 1090)

*களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்*
*வெளிப்படுந் தோறும் இனிது* (குறள் 1145)

*உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்*
*கள்ளினும் காமம் இனிது.* (குறள் 1201)

*உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்*
*கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு.* (குறள் 1281)

*இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்கு*
*கள்ளற்றே கள்வநின் மார்பு.* (குறள் 1288)

இவற்றால் கள், காமம் இரண்டின் ஒற்றுமை வேற்றுமைத் தன்மைகளும் கள்ளின் தன்மை போலக் காமத்தின் தன்மையும் அதனையுடையாரை வருத்துதலும் மகிழ்வித்தலும் ஆகிய நிகழ்ச்சி களும் நன்கு நயம்படக் கூறப்பட்டுள்ளமை தெரியவரும்.

ஒருசில இடங்களில் ஆசிரியர் திருவள்ளுவர் தாம் சொல்லக் கருதிய கருத்தை ஒரு குறளில் கூறி, அதனை மேலும் தெளிவுறச் செய்யும்பொருட்டு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குதலும் உண்டு.

*எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை*
*வீயாது பின்சென்று அடும்.* (குறள் 207)

எனத் தீவினைச்சத்தில் தீவினையால் ஆய துன்பப்பகை செய்தாரை விட்டு நீங்காமல் அவர் சென்ற இடமெல்லாம் தொடர்ந்து சென்று அவரை அழிக்கும் என்று கூறியவர்,

*தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை*
*வீயாது அடிஉறைந் தற்று.* (குறள் 208)

என அடுத்த குறளில் நிழல் ஒருவரை விட்டு நீங்காமை போல அவருடைய கேடு நிச்சயம் என்கிறார்.

இங்ஙனமே, 'மானம்' என்னும் அதிகாரத்தில் சான்றோர் மானம் அழிந்தபின் உயிர் வாழார் என்று ஒரு குறளில் கூறியவர், அடுத்துத் தன் மயிரை இழந்தால் பின் உயிர்வாழாத கவரிமானைப் போல அவரும் உயிர் விடுதல் உறுதி என்கிறார்.

மருந்தோமற்று ஊனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து. (குறள் 968)

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். (குறள் 969)

எனவரும் வள்ளுவர் வாய்மொழிகள் இதனைத் தெளிவிக்கின்றன. இவைபோன்ற அமைதியுடைய குறட் பகுதிகள் வேறும் உள.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள் 355)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (குறள் 423)

இந்த இரு குறள்களும் சொற்பொருள் அமைப்பாலும் கருத்து வகையாலும் பெரிதும் ஒப்புமையுடையன. இவற்றுள் முதலது மெய்யுணர்தல் அதிகாரத்தும், அடுத்தது அறிவுடைமை அதிகாரத்தும் அமைந்துள்ளது. அதிகாரப் பெயர்களைக் கொண்டு பார்த்தோமானால். முந்தியது மெய்யறிவையும் பிந்தியது உலகிய லறிவையும் குறித்துக் கூறப்பெற்றதாதல் தெளிவாகும். இரண்டும் நெருங்கிய சொற்பொருள் ஒப்புமையுடையனவாயினும் ஆசிரியர் கருத்து வேறுவேறாதல் விளங்கும்.

பேடி கை வாளாண்மையை இருவேறிடங்களில் ஆசிரியர் ஒப்புக் கூறுகின்றார். படை கண்டு அஞ்சும் பேடியின் கையில் உள்ள வாள் அவனுக்குப் பயன்படாதல்லவா? ஆண்மையாளன் கையிலிருக்க வேண்டிய வாள் பேடி கையிலிருந்தால் பயனின்றிக் கழிகின்றது. இதனை மனத்துக் கொண்டு பின்வரும் குறள்களில் பேடி கைவாள் ஒப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை காணலாம்.

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். (குறள் 614)

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல். (குறள் 727)

மேலே குறிப்பிடப்பட்டவை போன்ற முறைகளில் எல்லாம் சொற் பொருள் ஒப்புமையும் கருத்தமைதியும் கொண்ட குறட்பகுதிகளை அங்கங்கே வள்ளுவரின் நூலகத்துக் காணலாம். இவையெல்லா வற்றையும் தனிததனி எடுத்து விளக்கத் தொடங்கினால் எல்லை யின்றி விரிந்து செல்லும். எனவே, குறள் நூலகத்துள்ள சொற் பொருள் ஒப்புமையுடைய பாடல்கள் எல்லாம் அவற்றின் பொதுக்

கருத்து விளங்கும் வகையில் ஏற்ற தலைப்புகளின் கீழ் அகராதி அடைவாக இங்குத் தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது. அவற்றை நோக்கி அவற்றின் ஒப்புமைக் கருத்துகளையும் அவற்றிடையே நுண்ணிதாக மறைந்துகிடக்கும் வேற்றுமைகளையும் காண்பது இன்பம் தருவதொன்றும்.)

## அகத்தின்னு வஞ்சர்

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னு
வஞ்சரை அஞ்சப் படும். (824—கூடா நட்பு)

நகை வகையராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும். (817—தீ நட்பு)

## அகநகநட்பது நட்பு

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. (786—நட்பு)

பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல். (830—கூடாநட்பு)

## அரிவை முயக்கு

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு. (1107—புணர்ச்சி மகிழ்தல்)

வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. (1108—புணர்ச்சி மகிழ்தல்)

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். (1105—புணர்ச்சி மகிழ்தல்)

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. (1110—புணர்ச்சி மகிழ்தல்)

## அருள் வேட்கையும் பொருள் வேட்கையும்

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். (176—வெஃகாமை)

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். (285—கள்ளாமை)

## அருளும் பொருளும்

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (247—அருளுடைமை)

பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன் தின்பவர்க்கு. (252—புலால் மறுத்தல்)

## அல்ல செயினும் இது செய்யற்க

அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. (150—பிறனில் விழையாமை)
அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. (181—புறங்கூறாமை)

## அல்லற்படுவது எவன்

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். (379—ஊழ்)

தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன். (1172—கண்விதுப்பழிதல்)

## அழுக்காறுடையான் ஆக்கம் பெறான்

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. (135—ஒழுக்கமுடைமை)

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். (166—அழுக்காறாமை)

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ். (1079—கயமை)

## அளவும் அளவு மீறலும்

சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும். (498—இடன் அறிதல்)

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். (476—வலியறிதல்)

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். (479—வலியறிதல்)

## அறத்தின் இயல்பு

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற. (34—அறன் வலியுறுத்தல்)

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (35—அறன் வலியுறுத்தல்)

முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்
இன்சொ லினிதே அறம். (93—இனியவை கூறல்)

## அறம் யார் யாரைச் சேரும், யார் யாரை வருத்தும்?

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.
(130—அடக்கமுடைமை)

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். (77—அன்புடைமை)

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு. (204—தீவினையச்சம்)

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்கது உடைத்து. (1018—நாணுடைமை)

## அறமும் புகழும் அழியாமை

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.
(36—அறன் வலியுறுத்தல்)

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல். (233—புகழ்)

## அறிவிலான் அருமறை விடுக்கும்

அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. (847—புல்லறிவாண்மை)

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான். (1076—கயமை)

## அறிவினால் ஆய பயன்

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.
(315—இன்னா செய்யாமை)

அஃகி அகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். (175—வெஃகாமை)

## அறிவுடையான் வினைக்குரியான்

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தானென்று ஏவற்பாற் றன்று.
(515—தெரிந்து வினையாடல்)

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும். (507—தெரிந்து தெளிதல்)

**அறை பறை**

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். (1076—கயமை)

மறைபெறல் ஊரார்க் கரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து.
(1180—கண் விதுப்பழிதல்)

**அன்பும் அறிவும்**

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.
(513—தெரிந்து வினையாடல்)

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று. (682—தூது)

**அன்பும் இன்சொலும் ஆக்கும் நன்மை**

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. (74—அன்புடைமை)

துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. (94—இனியவை கூறல்)

அருளென்னும் அன்பின் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு.
(757—பொருள் செயல் வகை)

**அனிச்சப் பூவினும் மென்மை**

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (90—விருந்தோம்பல்)

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள். (1111—நலம் புனைந்துரைத்தல்)

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். (1120—நலம் புனைந்துரைத்தல்)

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. (1115—நலம் புனைந்துரைத்தல்)

**ஆற்றுவார் ஆற்றல்**

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். (225—ஈகை)

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை. (891-பெரியாரைப் பிழையாமை)

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. (985—சான்றாண்மை)

## ஆற்றுவார்க்கு இன்னாசெயல்

கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு. (893—பெரியாரைப் பிழையாமை)

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்.
(894—பெரியாரைப் பிழையாமை)

## இகல் மிகலின் கேடு தரும்

இகலிற் கெதிர்சாய்த்த லாக்கம் அதனை
மிகலூக்கின் ஊக்குமாங் கேடு. (858—இகல்)

இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு. (859—இகல்)

## இசை என்னும் எச்சம்

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். (238—புகழ்)

எச்சமென்று என்எண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன். (1004—நன்றியில் செல்வம்)

## இரங்குவ செய்யாமை

எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. (655 வினைத்தூய்மை)

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள். (662—வினைத்திட்பம்)

## இருவர்க்கு இனிது

வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. (1108—புணர்ச்சி மகிழ்தல்)

ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது. (1196—தனிப்படர் மிகுதி)

## இல்லார் இகழப்படுவர்

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. (752—பொருள் செயல்வகை)

அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். (1047—நல்குரவு)

## இலன் என்று தீயவை செய்யற்க

இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. (205—தீவினையச்சம்)

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். (174—வெஃகாமை)

## இளிவந்த செய்யாமை

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். (654—வினைத்தூய்மை)

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. (656—வினைத்தூய்மை)

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். (954—குடிமை)

இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல். (961—மானம்)

## இன்சொல்லும் தீச்சொல்லும்

நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். (97—இனியவை கூறல்)

ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும். (128—அடக்கமுடைமை)

## இன்பத்துள் இன்பம் பயக்கும்

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். (854—இகல்)

துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. (94—இனியவை கூறல்)

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். (629—இடுக்கண் அழியாமை)

## இன்மையின் இன்னாது

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. (1041—நல்குரவு)

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். (558—கொடுங்கோன்மை)

## இன்மையுள் இன்மை

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. (153—பொறையுடைமை)

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு. (841—புல்லறிவாண்மை)

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. (89—விருந்தோம்பல்)

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின். (988—சான்றாண்மை)

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாம் தலை.
(444—பெரியாரைத் துணைக்கோடல்)

இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்டது இல். (1063—இரவச்சம்)

## இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல்

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (987—சான்றாண்மை)

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (314—இன்னா செய்யாமை)

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. (308—வெகுளாமை)

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள். (312—இன்னா செய்யாமை)

## ஈதலே நன்று

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (222—ஈகை)

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. (220—ஒப்புரவறிதல்)

## ஈன்றாளும் விரும்பாதன

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. (923—கள்ளுண்ணாமை)

அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். (1047—நல்குரவு)

**உடம்பும் உயிரும்**

உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.
(1122—காதற்சிறப்புரைத்தல்)

குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு. (338—நிலையாமை)

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து.
(1124—காதற் சிறப்புரைத்தல்)

**உடைக்கும் படை**

பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை உடைக்கும் படை. (1258—நிறையழிதல்)

புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை. (1324—ஊடலுவகை)

**உணலினும் உண்டது அறல் இனிது**

உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது. (1326—ஊடலுவகை)

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். (942—மருந்து)

**உதவியின் அளவு**

உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.
(105—செய்ந்நன்றியறிதல்)

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். (87—விருந்தோம்பல்)

**உயர்வு உள்ளல்**

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (596—ஊக்கம் உடைமை)

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. (798—நட்பாராய்தல்)

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. (598—ஊக்கம் உடைமை)

## உயிர் துறக்கும் மேன்மையாளர்

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின். (969—மானம்)

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர். (1017—நாணுடைமை)

## உயிர்ப்ப உளரல்லர்

உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்க லாதார். (880—பகைத்திறம் தெரிதல்)

ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். (763—படைமாட்சி)

## உயிரோம்பல்

மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. (244—அருளுடைமை)

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான். (30—நீத்தார் பெருமை)

நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை. (242—அருளுடைமை)

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. (324—கொல்லாமை)

## உலகத்தோடு ஒட்ட ஒழுகல்

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். (140—ஒழுக்கமுடைமை)

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். (214—ஒப்புரவறிதல்)

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு. (426—அறிவுடைமை)

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல். (637—அமைச்சு)

உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். (850—புல்லறிவாண்மை)

## உலகம் உண்டு

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு. (571—கண்ணோட்டம்)

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன். (996—பண்புடைமை)

## உலகில் உயர்ந்தது நீத்தார் பெருமை

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு. (23—நீத்தார் பெருமை)

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. (325—கொல்லாமை)

## உலகு எங்கே தங்கும்

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. (389—இறைமாட்சி)

இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு. (387—இறைமாட்சி)

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.
(874—பகைத்திறம் தெரிதல்)

## உள்ளத்தின் உள்ளக் கெடும்

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.
(622—இடுக்கண் அழியாமை)

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும். (109—செய்ந்நன்றியறிதல்)

## ஊடுதல் காமத்திற்கு இன்பம்

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். (1330—ஊடலுவகை)

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன். (1109—புணர்ச்சி மகிழ்தல்)

## ஊழும் வினை முயற்சியும்

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். (380—ஊழ்)

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். (620—ஆள்வினை உடைமை)

சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு. (1024—குடி செயல்வகை)

### ஊற்று நீர்

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும். (1161—படர்மெலிந்திரங்கல்)

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (396—கல்வி)

### ஊன்றுகோலாம் துணை

கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை. (414—கேள்வி)

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல். (415—கேள்வி)

### எச்சத்திற்கு ஏமாப்பு

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து. (112—நடுவு நிலைமை)

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும் (114—நடுவு நிலைமை)

மனந்தூய்யார்க் கெச்சம் நன்றாகும் இனந்தூயார்க்கு
இல்லைநன் றாகா வினை. (456—சிற்றினம் சேராமை)

### எண்ணியபடி முடிப்பார்

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். (666—வினைத்திட்பம்)

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின். (483—காலம் அறிதல்)

அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின். (537—பொச்சாவாமை)

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின். (540—பொச்சாவாமை)

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். (309—வெகுளாமை)

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். (611—ஆள்வினையுடைமை)

சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு. (1024—குடிசெயல்வகை)

**எத்தகையார் மாட்டும் குற்றம் குற்றமே**

எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல். (144—பிறனில் விழையாமை)

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின். (272—கூடா ஒழுக்கம்)

**எய்தலின் எய்தாமை நன்று**

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று. (815—தீ நட்பு)

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. (798—நட்பாராய்தல்)

அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. (814—தீ நட்பு)

**எல்லாம் உடையவர்**

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (430—அறிவுடைமை)

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. (53—வாழ்க்கைத்துணை நலம்)

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு. (841—புல்லறிவாண்மை)

**எல்லா உயிரும் தொழும்**

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். (260—புலால் மறுத்தல்)

தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும். (268—தவம்)

**என்ன பயத்தது**

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (987—சான்றாண்மை)

குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண். (705—குறிப்பறிதல்)

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. (1100—குறிப்பறிதல்)

## ஐந்து அடக்கல்

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார். (6—கடவுள் வாழ்த்து)

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. (24—நீத்தார் பெருமை)

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. (343—துறவு)

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. (25—நீத்தார் பெருமை)

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. (126—அடக்கமுடைமை)

## ஒட்ட ஒழுகல்

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு. (482—காலமறிதல்)

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். (140—ஒழுக்கமுடைமை)

## ஒரு பாவி

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். (168—அழுக்காறுமை)

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். (1042—நல்குரவு)

## ஒல்லும் வாயும் செல்லும் வாயும்

ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல். (673—வினைசெயல்வகை)

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். (33—அறன் வலியுறுத்தல்)

## ஒழுக்கம் உடைமை குடிமை

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். (133—ஒழுக்கமுடைமை)

குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை. (1019—நாணுடைமை)

### ஒழுக்கமும் இழுக்கமும்

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. (136—ஒழுக்கமுடைமை)

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து. (164—அழுக்காறாமை)

### ஒன்று உண்டு

கரப்பினும் கையிகந் தொல்கலாநின் உண்கண்
உரைக்க லுறுவதொன்று உண்டு.
(1271—குறிப்பறிவுறுத்தல்)

மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன்று உண்டு.
(1273—குறிப்பறிவுறுத்தல்)

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன்று உண்டு.
(1274—குறிப்பறிவுறுத்தல்)

### கட்டளை

சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். (986—சான்றாண்மை)

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (505—தெரிந்து தெளிதல்)

### கடப்பாடு

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு. (211—ஒப்புரவறிதல்)

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. (981—சான்றாண்மை)

### கண்ணோட்டம் இல்லாத கண்

பண்ணென்னும் பாடற்கு இயைபின்றேல் கண்ணென்னும்
கண்ணோட்டம் இல்லாத கண். (573—கண்ணோட்டம்)

உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண். (574—கண்ணோட்டம்)

### கண் புண்ணாக மதிக்கப் படுதல்

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (393—கல்வி)

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும். (575—கண்ணோட்டம்)

**கணவனைக் காணும் விருப்பு**

பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்
காணாது அமைவில கண். (1178—கண்விதுப்பழிதல்)

பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண். (1283—புணர்ச்சி விதும்பல்)

**கருதலளவைக் கூற்று**

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். (246—அருளுடைமை)

உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். (330—கொல்லாமை)

**கருமமே கட்டளைக்கல்**

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (505—தெரிந்து தெளிதல்)

கணைகொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கன்ன
வினைபடு பாலால் கொளல். (279—கூடா ஒழுக்கம்)

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர். (514—தெரிந்து வினையாடல்)

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து. (667—வினைத்திட்பம்)

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (972—பெருமை)

உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. (993—பண்புடைமை)

ஊனுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. (1012—நாணுடைமை)

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்டது இல். (1071—கயமை)

**கல்லான் சொற்சோர்வுபடும்**

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். (405—கல்லாமை)

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும். (845—புல்லறிவாண்மை)

**கல்வியும் மெய்ப்பொருளும்**

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின். (2—கடவுள் வாழ்த்து)

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. (356—மெய்யுணர்தல்)

**கற்றவழி நிற்க**

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (391—கல்வி)

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல். (834—பேதைமை)

**கற்றறிந்தார் உலகிற்குப் பயன்படுவர்**

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். (399—கல்வி)

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (68—புதல்வரைப்பெறுதல்)

**காக்கவேண்டுவன**

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு. (122—அடக்கமுடைமை)

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை. (132—ஒழுக்கமுடைமை)

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை. (434—குற்றங்கடிதல்)

**காட்சிக்கு எளிமையும் கடுஞ்சொல் இன்மையும்**

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். (386—இறைமாட்சி)

கடுஞ்சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும். (566—வெருவந்த செய்யாமை)

**காதல் கொண்டாரிடம் காதல் தன்மை இல்லையா**

நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை. (1195—தனிப்படர்மிகுதி)

காதல் அவரில ராகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு. (1242—நெஞ்சொடுகிளத்தல்)

### காதலனைக் காணுங்காலும் காணாக்காலும்

காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை. (1286—புணர்ச்சிவிதும்பல்)

பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண். (1283—புணர்ச்சிவிதும்பல்)

ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு.
(1284—புணர்ச்சிவிதும்பல்)

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து. (1285—புணர்ச்சிவிதும்பல்)

### காமத்தால் வந்த துன்பம்

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன். (1167—படர்மெலிந்திரங்கல்)

மன்னுயி ரெல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை. (1168—படர்மெலிந்திரங்கல்)

காம மெனஒன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில். (1252—நிறையழிதல்)

### காமநோயுற்றார் செயல்

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன்று அன்று. (1255—நிறையழிதல்)

செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றென்னை உற்ற துயர். (1256—நிறையழிதல்)

நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல். (1260—நிறையழிதல்)

### காமமும் கள்ளும்

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று.
(1090—தகையணங்குறுத்தல்)

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது. (1201—நினைந்தவர் புலம்பல்)

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு.
(1281—புணர்ச்சி விதும்பல்)

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. (1145—அலர் அறிவுறுத்தல்)

இனித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. (1288—புணர்ச்சி விதும்பல்)

## காமமும் காம இன்பமும் கடல்

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல். (1164—படர்மெலிந்திரங்கல்)

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில். (1137—நாணுத்துறவுரைத்தல்)

இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. (1166—படர்மெலிந்திரங்கல்)

## காமமும் தீயும்

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள். (1104—புணர்ச்சி மகிழ்தல்)

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ. (1159—பிரிவாற்றாமை)

## காமமும் நாணும்

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பி னகத்து. (1163—படர்மெலிந்திரங்கல்)

காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேன்இவ் விரண்டு.
(1247—நெஞ்சொடு கிளத்தல்)

## கீழ்மகனின் இறுமாப்பு

அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ். (1074—கயமை)

இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின். (977—பெருமை)

## குடிப்பிறப்பும் பழிநாணலும்

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு. (502—தெரிந்து தெளிதல்)

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு. (794—நட்பாராய்தல்)

## குலமும் நலமும்

குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை. (1019—நாணுடைமை)

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும். (958—குடிமை)

## குலனுடையானின் செய்கை

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. (223—ஈகை)

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. (953—குடிமை)

## குறிப்புணர் உறுப்பு

குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை
உறுப்போ ரனையால் வேறு. (704—குறிப்பறிதல்)

குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண். (705—குறிப்பறிதல்)

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின். (708—குறிப்பறிதல்)

## கேள் போல் பகைவர்

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. (882—உட்பகை)

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். (827—கூடாநட்பு)

## கொடாதான் செல்வம் கெடும்

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். (437—குற்றங்கடிதல்)

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். (1005—நன்றியில் செல்வம்)

## கொடுத்தும் கொளல் வேண்டும்

கொடுத்தும் கொளல்வேண்டு மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. (867—பகைமாட்சி)

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். (703—குறிப்பறிதல்)

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு. (794—நட்பாராய்தல்)

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. (800—நட்பாராய்தல்)

## கொல்லாதான் நெடிது வாழ்வான்

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணுங் கூற்று. (326—கொல்லாமை)

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு. (269—தவம்)

## கொல்லா நலம்

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. (984—சான்றாண்மை)

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. (261—தவம்)

## கொல்லாமையும் கோறலும்

அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல். (254—புலால்மறுத்தல்)

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும். (321—கொல்லாமை)

## கொன்று உண்ணாமை நன்று

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. (259—புலால்மறுத்தல்)

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. (328—கொல்லாமை)

## கோடி உறும்

பேதை பெருங்கெழீஇ நட்பின் பகைவரால்
ஏதின்மை கோடி உறும். (816—தீநட்பு)

நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும். (817—தீநட்பு)

## சான்றாண்மைக்கு நாண்

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். (983—சான்றாண்மை)

ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்
நன்மை குறித்தது சால்பு. (1013—நாணுடைமை)

## சான்றோர் குழாத்துப் பேதை

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். (840—பேதைமை)

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல். (720—அவையறிதல்)

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். (403—கல்லாமை)

## சான்றோர் முன் கள்ளுண்பான் இகழப்படுவான்

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. (923—கள்ளுண்ணாமை)

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார். (922—கள்ளுண்ணாமை)

## சிறப்பும் செல்வமும்

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. (31—அறன்வலியுறுத்தல்)

சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். (311—இன்னாசெய்யாமை)

## சிறுபொறி பெருந்தீ

எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு. (889—உட்பகை)

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். (674—வினைசெயல்வகை)

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.
(879—பகைத்திறம் தெரிதல்)

## செத்தாருள் வைக்கப்படுவார்

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். (214—ஒப்புரவறிதல்)

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. (80—அன்புடைமை)

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்துஒழுகு வார். (143—பிறனில் விழையாமை)

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். (926—கள்ளுண்ணாமை)

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. (310—வெகுளாமை)

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல். (1001—நன்றியில் செல்வம்)

## செம்பொருள் கண்டார்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். (91—இனியவைகூறல்)

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு. (358—மெய்யுணர்தல்)

## செயற்பாலது

செயற்பாலது ஓரும் அறனே ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி. (40—அறன்வலியுறுத்தல்)

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். (437—குற்றங்கடிதல்)

## செல்வத்துள் செல்வம்

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. (241—அருளுடைமை)

செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை. (411—கேள்வி)

## சேர்ந்தார் குற்றமும் தூற்றுவர்

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு. (188—புறங்கூறாமை)

துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர். (1165—படர்மெலிந்திரங்கல்)

## சொற்சோர்வு காக்க

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. (642—சொல்வன்மை)

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (127—அடக்கமுடைமை)

## தம் குற்றமும் பிறர் குற்றமும்

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. (190—புறங்கூறாமை)

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு. (436—குற்றங்கடிதல்)

## தம் பொருள் தமக்கே

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. (376—ஊழ்)

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. (659—வினைத்தூய்மை)

## தலைமக்கள் வேண்டும்

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. (740—நாடு)

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண். (750—அரண்)

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல். (770—படைமாட்சி)

## தன்னைத்தான் காப்பான்

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். (209—தீவினையச்சம்)

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். (305—வெகுளாமை)

## தாம் தேடி உண்ணலின் இனிமை

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கியது இல். (1065—இரவச்சம்)

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு. (1107—புணர்ச்சி மகிழ்தல்)

## தாளாண்மையும் வேளாண்மையும்

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு.
(613—ஆள்வினையுடைமை)

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். (614—ஆள்வினையுடைமை)

## திண்மை உண்டாகப் பெறல்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.
(54—வாழ்க்கைத் துணைநலம்)

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். (988—சான்றாண்மை)

## திருமகள் சேரா இடம்

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். (167—அழுக்காறாமை)

வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக
நினைப்பானை நீங்கும் திரு. (519—தெரிந்து வினையாடல்)

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. (920—வரைவின் மகளிர்)

## திருமகள் சேருமிடம்

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். (84—விருந்தோம்பல்)

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந் தாங்கே திரு. (179—வெஃகாமை)

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள். (617—ஆள்வினையுடைமை)

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். (1023—குடிசெயல்வகை)

## தினையளவு பனையளவாதல்

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். (104—செய்நன்றியறிதல்)

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். (433—குற்றங்கடிதல்)

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின். (1282—புணர்ச்சி விதும்பல்)

## தீயவை செய்தார் கெடுதல் திண்ணம்

எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின் சென்று அடும். (207—தீவினையச்சம்)

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று. (208—தீவினையச்சம)

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. (307—வெகுளாமை)

## தீயவை தீய பயக்கும்

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான். (206—தீவினையச்சம்)

நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். (320—இன்னாசெய்யாமை)

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும். (319—இன்னாசெய்யாமை)

## தீயை ஒக்கும் தீயவை

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (202—தீவினையச்சம்)

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். (306—வெகுளாமை)

## தீரா இடும்பை தருவன

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். (508—தெரிந்து தெளிதல்)

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். (510—தெரிந்து தெளிதல்)

## துப்புரவில்லாரின் துறவு

துறப்பார்மன் துப்புர வில்லார் உற்றபால
ஊட்டா கழியும் எனின். (378—ஊழ்)

துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று. (1050—நல்குரவு)

## தும்மலால் விளைந்த துயர்

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும். (1203—நினைந்தவர் புலம்பல்)

வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று. (1317—புலவி நுணுக்கம்)

தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. (1318—புலவி நுணுக்கம்)

## துன்பம் துடைத்தல்

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.
(615—ஆள்வினையுடைமை)

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். (628—இடுக்கண் அழியாமை)

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். (629—இடுக்கண் அழியாமை)

## தெய்வத்தோடு ஒப்பக் கொள்ளத்தக்கவர்

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். (702—குறிப்பறிதல்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (50—இல்வாழ்க்கை)

## தேர்ந்து செய்வதே முறை

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. (541—செங்கோன்மை)

தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின். (111—நடுவுநிலைமை)

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. (561—வெருவந்த செய்யாமை)

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (504—தெரிந்து தெளிதல்)

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். (511—தெரிந்து வினையாடல்)

## நட்டார் போன்று ஒட்டாதார்

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். (826—கூடாநட்பு)

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி. (887—உட்பகை)

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். (679—வினைசெயல்வகை)

## நடுநிலை தவறிய ஆக்கம் ஆகாது

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். (113—நடுவுநிலைமை)

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். (171—வெஃகாமை)

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். (283—கள்ளாமை)

## நயனுடையான் வறுமை

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு. (219—ஒப்புரவறிதல்)

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து.
(1010—நன்றியில் செல்வம்)

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. (117—நடுவுநிலைமை)

## நல்லார் தொடர்பு

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.
(450—பெரியாரைத் துணைக்கோடல்)

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். (460—சிற்றினம் சேராமை)

ஏமுற் றவரினும் ஏழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன். (873—பகைத்திறம் தெரிதல்)

## நல்லார் வறுமையும் கல்லார் திருவும்

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. (408—கல்லாமை)

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. (657—வினைத்தூய்மை)

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். (558—கொடுங்கோன்மை)

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. (1041—நல்குரவு)

## நல்லாள்

நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. (924—கள்ளுண்ணாமை)

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். (1040—உழவு)

## நல்லாறு

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. (324—கொல்லாமை)

நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை. (242—அருளுடைமை)

## நாணும் நல்லாண்மையும்

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு.
(1088—தகையணங்குறுத்தல்)

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல். (1133—நாணுத் துறவுரைத்தல்)

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.
(1134—நாணுத்துறவுரைத்தல்)

காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. (1251—நிறையழிதல்)

## நாளிழுக்கம்

கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின். (808—பழைமை)

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து. (776—படைச்செருக்கு)

## நிலத்திற்குப் பாரம்

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை. (570—வெருவந்த செய்யாமை)

கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. (572—கண்ணோட்டம்)

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. (1003—நன்றியில் செல்வம்)

## நிலத்தின் பொறுமை

அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. (189—புறங்கூறாமை)

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. (990—சான்றாண்மை)

## நிலமும் நீரும்

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. (452—சிற்றினம் சேராமை)

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து. (1323—ஊடலுவகை)

## நிறைமொழி மாந்தர் பெருமை

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (28—நீத்தார் பெருமை)

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். (264—தவம்)

## நீங்கா நினைவு

தந்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எந்நெஞ்சத்து ஓவா வரல். (1205—நினைந்தவர் புலம்பல்)

நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்எம்மைப் பீழிப் பது. (1217—கனவுநிலை உரைத்தல்)

## நீர்இன்று அமையாது உலகம்

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு. (20—வான்சிறப்பு)

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று. (11—வான்சிறப்பு)

### நீரும் நிழலும்

நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. (1309—புலவி)

நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின். (881—உட்பகை)

### நெஞ்சு வருத்தும் நிலை

தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு.
(1296—நெஞ்சொடு புலத்தல்)

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று.
(1244—நெஞ்சொடு கிளத்தல்)

துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி. (1299—நெஞ்சொடு புலத்தல்)

தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தம்முடைய
நெஞ்சம் தமரல் வழி. (1300—நெஞ்சொடு புலத்தல்)

### நெஞ்சே கண்கண்ட சான்று

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். (271—கூடா ஒழுக்கம்)

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். (293—வாய்மை)

### நோற்பாரின் ஆற்றல்

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. (48—இல்வாழ்க்கை)

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.
(160—பொறையுடைமை)

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். (225—ஈகை)

### பகுத்துண்டு வாழ்தல்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. (322—கொல்லாமை)

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது. (227—ஈகை)

### பகையினும் மிக்க பகை

அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது. (165—அழுக்காறாமை)

அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. (843—புல்லறிவாண்மை)

### பசலைநோய் படுத்தும்பாடு

உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்பூர் வது. (1185—பசப்புறு பருவரல்)

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கண்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. (1186—பசப்புறு பருவரல்)

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு. (1187—பசப்புறு பருவரல்)

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். (1238—உறுப்புநலன் அழிதல்)

முயக்கிடைத் தண்வளிப் போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். (1239—உறுப்புநலன் அழிதல்)

தெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து. (1278—குறிப்பறிவுறுத்தல்)

### பண்பிலான் பெற்ற செல்வம்

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. (1000—பண்புடைமை)

அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள் மூத்தற்று. (1007—நன்றியில் செல்வம்)

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம் பழுத்தற்று. (1008—நன்றியில் செல்வம்)

### பண்பு இல்லாப் பகை

பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று.
(871—பகைத்திறம் தெரிதல்)

இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய். (851—இகல்)

### பண்புடைமை என்னும் வழக்கு

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (991—பண்புடைமை)

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (992—பண்புடைமை)

### பணிவுடைமையின் மேன்மை

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. (95—இனியவை கூறல்)

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. (125—அடக்கமுடைமை)

நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. (960—குடிமை)

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. (985—சான்றாண்மை)

### பயில்தொறும் பயன்மிகும்

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (396—கல்வி)

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (783—நட்பு)

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.
(1110—புணர்ச்சி மகிழ்தல்)

### பழமை பாராட்டுதல்

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. (521—சுற்றந்தழால்)

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. (806—பழைமை)

### பழிப்பில்லா வாழ்க்கை

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று. (49—இல்வாழ்க்கை)

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். (280—கூடாஒழுக்கம்)

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி. (846—புல்லறிவாண்மை)

## பழுமரமும் நச்சுமரமும்

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். (216—ஒப்புரவறிதல்)

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. (1008—நன்றியில் செல்வம்)

## பிரிவாற்றியிருக்கக் காரணம்

நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் உயிர்.
(1213—கனவுநிலை உரைத்தல்)

மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன். (1206—நினைந்தவர் புலம்பல்)

உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன்.
(1263—அவர்வயின் விதும்பல்)

## பிரிவுத்துயர்

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை. (1151—பிரிவாற்றாமை)

அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர். (1160—பிரிவாற்றாமை)

## பிழை பொறுக்க

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று. (157—பொறையுடைமை)

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (151—பொறையுடைமை)

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல். (158—பொறையுடைமை)

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (314—இன்னா செய்யாமை)

சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். (986—சான்றாண்மை)

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (987—சான்றாண்மை)

அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல். (203—தீவினையச்சம்)

ஒறுத்தாற்றும் பண்பினுர் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. (579—கண்ணோட்டம்)

பகல்கருதிப் பற்ரு செயினும் இகல் கருதி
இன்னு செய்யாமை தலை. (852—இகல்)

நண்பாற்ரு ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்ரு ராதல் கடை. (998—பண்புடைமை)

## பிறப்பீனும் வித்து

அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. (361—அவாவறுத்தல்)

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானும் மாணுப் பிறப்பு. (351—மெய்யுணர்தல்)

பொருளானும் எல்லாமென்று ஈயாது இவறும்
மருளானும் மாணுப் பிறப்பு. (1002—நன்றியில் செல்வம்)

## பிறர் ஆக்கம் கொள்ளற்க

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். (177—வெஃகாமை)

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும். (284—கள்ளாமை)

## பிறர்சொல் பயன்கோடல்

வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்ருர் கோள். (646—சொல்வன்மை)

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. (424—அறிவுடைமை)

## பின்னடிகள் ஒத்துவரும் குறட்பாக்கள்

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்ருகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. (452—சிற்றினம் சேராமை)

மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு. (454—சிற்றினம் சேராமை)

மனநலம் நன்குடைய ராயினும் சான்ருேர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து. (458—சிற்றினம் சேராமை)

மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து.
(459—சிற்றினம் சேராமை)

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி. (887—உட்பகை)

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி. (888—உட்பகை)

மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா
ஏதம் பலவுந் தரும். (884—உட்பகை)

உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும். (885—உட்பகை)

இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர். (1129—காதற் சிறப்புரைத்தல்)

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும்இவ் வூர். (1130—காதற் சிறப்புரைத்தல்)

பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். (573—கண்ணோட்டம்)

உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண். (574—கண்ணோட்டம்)

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். (104—செய்ந்நன்றியறிதல்)

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். (433—குற்றங்கடிதல்)

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். (54—வாழ்க்கைத்துணை)

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். (988—சான்றாண்மை)

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். (508—தெரிந்து தெளிதல்)

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். (510—தெரிந்து தெளிதல்)

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். (628—இடுக்கண் அழியாமை)

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். (629—இடுக்கண் அழியாமை)

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். (711—அவையறிதல்)

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். (721—அவையஞ்சாமை)

பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.
(1234—உறுப்பு நலன் அழிதல்)

கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.
(1235—உறுப்பு நலன் அழிதல்)

துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி. (1299—நெஞ்சொடு புலத்தல்)

தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தம்முடைய
நெஞ்சம் தமரல் வழி. (1300—நெஞ்சொடு புலத்தல்)

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (991—பண்புடைமை)

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. (992—பண்புடைமை)

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு. (351—மெய்யுணர்தல்)

பொருளானும் எல்லாம்என்று ஈயாது இவறும்
மருளானும் மாணாப் பிறப்பு. (1002—நன்றியில் செல்வம்)

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (355—மெய்யுணர்தல்)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (423—அறிவுடைமை)

வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று. (1317—புலவி நுணுக்கம்)

நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று. (1320—புலவி நுணுக்கம்)

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். (276—கூடா ஒழுக்கம்)

வீழ்வாரின் இன்சொல் பெறுஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல். (1198—தனிப்படர் மிகுதி)

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (81—விருந்தோம்பல்)

தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (212—ஒப்புரவறிதல்)

## பீடு நடை

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை. (1014—நாணுடைமை)

புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. (59—வாழ்க்கைத்துணைநலம்)

## புலத்தலும் புல்லலும்

புலப்ப லெனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்த லுறுவது கண்டு. (1259—நிறையழிதல்)

நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல். (1260—நிறையழிதல்)

புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்அன்ன கேளிர் வரின். (1267—அவர்வயின் விதும்பல்)

ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு.
(1284—புணர்ச்சி விதும்பல்)

கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று.
(1290—புணர்ச்சிவிதும்பல்)

இனிஅன்ன நின்னோடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.
(1294—நெஞ்சொடு புலத்தல்)

## பெரியர் செயற்கரிய செய்வர்

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (27—நீத்தார் பெருமை)

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். (975—பெருமை)

## பெரியாரைப் பிழைப்பார் உய்யார்

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.
(896—பெரியாரைப் பிழையாமை)

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னும்
தகைமாண்ட தக்கார் செறின்.
(897—பெரியாரைப் பிழையாமை)

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. (29—நீத்தார் பெருமை)

## பெரியாரைப் பேணுதல்

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.
(443—பெரியாரைத் துணைக்கோடல்)

சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு. (976—பெருமை)

## பெருகலின் குன்றல் இனிது

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது. (811—தீநட்பு)

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில். (839—பேதைமை)

## பெற்ற பொருளைப் பிறர்க்கு உதவுவார் துன்புறார்

அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்றா தவர். (626—இடுக்கண் அழியாமை)

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். (88—விருந்தோம்பல்)

## பெறத்தக்க பொருள்கள்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.
(54—வாழ்க்கைத்துணைநலம்)

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. (61—புதல்வரைப் பெறுதல்)

## பெறினும் பெறாவிடினும் துயர்

பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் னெஞ்சு.
(1295—நெஞ்சொடு புலத்தல்)

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண். (1179—கண்விதுப்பழிதல்)

## பேடிகை ஒள்வாள்

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல். (727—அவையஞ்சாமை)

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு. (726—அவையஞ்சாமை)

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். (614—ஆள்விணையுடைமை)

## பேதை தொழில்

நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில். (833—பேதைமை)

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். (428—அறிவுடைமை)

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும். (958—குடிமை)

## பேதையார் கேண்மை

ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். (797—நட்பாராய்தல்)

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும். (816—தீநட்பு)

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல். (839—பேதைமை)

## பேரறிவாளன் திரு

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. (215—ஒப்புரவறிதல்)

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். (216—ஒப்புரவறிதல்)

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். (217—ஒப்புரவறிதல்)

## பேராண்மை

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. (773—படைச்செருக்கு)

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.
(148—பிறனில் விழையாமை)

நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். (1026—குடிசெயல்வகை)

### பொருள் அறனும் இன்பமும் ஈனும்

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். (754—பொருள் செயல்வகை)

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. (760—பொருள் செயல்வகை)

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும். (501—தெரிந்து தெளிதல்)

### மக்களும் மாக்களும்

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். (410—கல்லாமை)

குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு. (704—குறிப்பறிதல்)

### மடவரல் நோக்கம் (கண்)

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.
(1085—தகையணங் குறுத்தல்)

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.
(1113—நலம் புனைந்துரைத்தல்)

### மதியும் மடந்தை முகனும்

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். (1116—நலம் புனைந்துரைத்தல்)

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.
(1117—நலம் புனைந்துரைத்தல்)

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. (1118—நலம் புனைந்துரைத்தல்)

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி. (1119—நலம் புனைந்துரைத்தல்)

### மரத்திற்கு ஒப்பாம் மாந்தர்

உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃதில்லார்
மரம்மக்க ளாதலே வேறு. (600—ஊக்கம் உடைமை

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. (78—அன்புடைமை

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர். (576—கண்ணோட்டம்

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர். (997—பண்புடைமை)

## மரப்பாவையை ஒப்பார்

நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று. (1020—நாணுடைமை)

இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. (1058—இரவு)

## மலர் நாணும் கண்

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண். (1231—உறுப்பு நலன் அழிதல்)

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.
(1112—நலம்புனைந்துரைத்தல்)

காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழைகண் ணொவ்வேம் என்று.
(1114—நலம்புனைந்துரைத்தல்)

## மறத்தல் நன்று—எவற்றை

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. (108—செய்ந்நன்றியறிதல்)

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. (152—பொறையுடைமை)

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும். (303—வெகுளாமை)

## மன்னவன் காவல்

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். (543—செங்கோன்மை)

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின். (560—கொடுங்கோன்மை)

## மாசற்றார் கேண்மை மருவுக

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. (800—நட்பாராய்தல்)

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. (106—செய்ந்நன்றியறிதல்)

### மாலை நோய்செய்தல்

மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன்.
(1226—பொழுதுகண்டு இரங்கல்)

காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும். (1224—பொழுதுகண்டு இரங்கல்)

### முதலிழக்கும் செய்வினை

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். (463—தெரிந்து செயல்வகை)

பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல். (831—பேதைமை)

### முயற்சியும் தெய்வமும்

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (619—ஆள்வினை உடைமை)

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். (1023—குடிசெயல் வகை)

### மெய்ப்பொருள் காண்பது அறிவு

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (355—மெய்யுணர்தல்)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (423—அறிவுடைமை)

### மேலும் கீழும்

மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு. (409—கல்லாமை)

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். (973—பெருமை)

### மேலுலகினும் மிக்க இன்பம்

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. (1103—புணர்ச்சி மகிழ்தல்)

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து. (1323—ஊடலுவகை)

## வருமுன் காத்தல் அறிவுடையார் திறம்

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். (435—குற்றங்கடிதல்)

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய். (429—அறிவுடைமை)

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர். (427—அறிவுடைமை)

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.
(422—பெரியாரைத் துணைக்கோடல்)

முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை
பின்னூறு இரங்கி விடும். (535—பொச்சாவாமை)

## வலியாரும் மெலியாரும்

வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. (861—பகைமாட்சி)

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. (250—அருளுடைமை)

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். (471—வலியறிதல்)

## வளை கூறும் உண்மை

துறைவன் துறந்தமை தூற்றுகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை. (1157—பிரிவாற்றாமை)

தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை. (1277—குறிப்பறிவுறுத்தல்)

## வறுமையிலும் பிறர்க்கு வழங்குதல்

இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர். (218—ஒப்புரவறிதல்)

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று. (955—குடிமை)

**வாய்மை நன்று**

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. (300—வாய்மை)

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. (323—கொல்லாமை)

**வான்நோக்கி வாழும் உலகம்**

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. (542—செங்கோன்மை)

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று. (11—வான்சிறப்பு)

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு. (20—வான் சிறப்பு)

துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. (557—கொடுங்கோன்மை)

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. (1192—தனிப்படர்மிகுதி)

**வானுறை தெய்வ நிலையுறுவார்**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (50—இல்வாழ்க்கை)

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. (58—வாழ்க்கைத்துணைநலம்)

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு. (75—அன்புடைமை)

**விடத்தக்க நட்பு**

பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல். (830—கூடாநட்பு)

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். (818—தீநட்பு)

மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று. (829—கூடாநட்பு)

### விடல்வேண்டும்

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. (343—துறவு)

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். (674—வினைசெயல்வகை)

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். (341—துறவு)

### விழுச்செல்வம்

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. (400—கல்வி)

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல். (363—அவாவறுத்தல்)

### வினைத்திட்பமும் மாட்சியும்

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு. (670—வினைத்திட்பம்)

அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. (534—பொச்சாவாமை)

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண். (750—அரண்)

### வினைவேறு சொல்வேறுபட்டார்

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. (819—தீநட்பு)

இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். (822—கூடாநட்பு)

### வேண்டத்தக்கவை

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு. (21—நீத்தார் பெருமை)

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். (178—வெஃகாமை)

நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. (960—குடிமை)

## வேண்டத்தகாதவை

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். (177—வெஃகாமை)

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. (931—சூது)

## வேண்டியது பெறுவார்

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். (265—தவம்)

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். (309—வெகுளாமை)

வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டு இயற்பால பல. (342—துறவு)

## வேளாண்மை செய்தல் பொருளால் வருபயன்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (81—விருந்தோம்பல்)

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (212—ஒப்புரவறிதல்)

## வேறு அல்லர்

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார். (143—பிறனில் விழையாமை)

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். (926—கள்ளுண்ணாமை)

## வைக்கப்படும்

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். (214—ஒப்புரவறிதல்)

உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். (850—புல்லறிவாண்மை)

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும். (388—இறைமாட்சி)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (50—இல்வாழ்க்கை)

# பொருட் குறிப்பு அகராதி

[எண் : பக்க எண்]


அ

அகத்தின்னா வஞ்சர் 385
அகநக நட்பது நட்பு 385
அங்கவியல் 19
அசைநிலை 253
அடக்கமுடைமை 48, 89, 175, 306
அடக்கமுடைமையில் சொற்குற்றமும் வெகுளியும் 308
அடிப்பட்ட வழக்கு 280
அடைமொழி 3
அடைமொழித் தொடர் 224
அடைமொழிப்பெயர் 62
அணி 239
அனுவதித்துக் கூறுதல் 64
அதிகார அடைவிற்குரிய காரணங்கள் 29
அதிகாரப் பகுப்பு முறை 20, 28
அதிகாரப் பகுப்புச் செய்தவர் ஆசிரியர் 20
அதிகாரப் பகுப்புச் செய்தவர் வள்ளுவரே 20
அதிகாரப்பாடல் அடைவு 209, 212
அதிகாரப்பெயர் வகை 24, 28
அதிகாரப்பெயர் அடைவு 22
அதிகாரப் பெயர் விளக்கமும் வைப்பு முறையும் 29–171
அதிகாரப் பொருள் அடக்கம் 172
அதிகாரப் பொருள் அடைவு 172, 198
அந்தணர் 33
அந்தாதி மண்டலிப்பு முறை 168
அமரர்கண் முடியும் அறுவகை 35
அமைச்சர் திறம் பகர்வன 108
அமைச்சரது இயல்பு 19
அமைச்சனது இயல்பு 107
அமைச்சியல் 16, 107
அமைச்சியலில் கல்வியும் அறிவும் 330
அமைச்சு 107, 124, 184
அரசர்க்குரிய திறம் 19
அரசனுடைய மாட்சிமைகள் 107
அரசியல் 16, 19, 84
அரசியலின் தொகுப்புரை 85
அரசு 124
அரசு முறை நூல்கள் 217
அரண் 117, 185
அரணில் வினைமாட்சித் திறம் 333
அரிவை முயக்கு 385
அருகதேவர் 4
அருள் 67
அருள்வேட்கையும் பொருள் வேட்கையும் 385
அருளாட்சிக்குப் பொருளாட்சி 298
அருளுக்குப் பொருள் 298
அருளுடைமை 66, 177
அருளுடைமையும் பொருளுடைமையும் 312
அருளும் உறுதிப்பொருள் மெய்ப்பொருளும் 313
அருளும் பொருளும் 385
அருளும் மெய்ப்பொருளும் 298
அருமையிற்கூடல் 18
அல்லசெயினும் இது செய்யற்க 386
அல்லற்படுவது எவன் 386
அல்விகுதி வியங்கோள் 247, 248
அலரறிவுறுத்தல் 155, 183
அவர்வயின் விதும்பல் 20, 163, 197

அவா வறுத்தல் 81, 179
அவைக்களமும் பகைக்களமும் 300
அவையத்தார் 47
அவையத்துச் சான்றோரும் வாணிகரும் 308
அவையஞ்சாமை 115, 185
அவையஞ்சாமையின் அருமை 115
அவையறிதல் 114, 185
அவையறிதலால் கல்வி விளங்கும் 333
அழுக்காறுமை 54, 176, 309
அழுக்காறு இல்லாமை ஒழுக்க நெறி 309
அழுக்காறுடையான் ஆக்கம் பெறுன் 386
அளத்தல் நெறி 73
அளவும் அளவு மீறலும் 386
அளவோடு பட்டமைதல் 342
அறங்கூறும் அவையம் 47
அறத்தின் இயல்பு 386
அறம் யார்யாரைச் சேரும், யார் யாரை வருத்தும்? 387
அறம் செய்யும் முறைமை 36
அறமும் புகழும் அழியாமை 387
அறமுரைத்தான் 4
அறன் வலியுறுத்தல் 34, 173, 287
அறன் வலியுறுத்தலில் அறனல்லாதவை 303
அறிவிலான் அருமறை விடுக்கும் 387
அறிவின் திறம் 342
அறிவிஞல் ஆயபயன் 387
அறிவுடைமை 59, 89, 180
அறிவுடைமை : உலகத்தாரோடு ஒத்து நடத்தல் 320
அறிவுடைமை : வருமுன் காத்தல் 321
அறிவுடைமையில் பேதைமை 320
அறிவுடைய நல்லார் 219
அறிவுடையார் 69
அறிவுடையான் விளைக்குரியான் 387
அறிவுடையோர் பெயர் 224
அறுமுறை வாழ்த்து 35-36
அறுவகைத் தொழில் 170
அறுவகைக் குற்றம் 91
அறைபறை 388
அன்புடைமை 41, 174, 305
அன்புடையார் அன்பிலார் 241
அன்பும் அறிவும் 388
அன்பும் இன்சொலும் ஆக்கும் நன்மை 388
அனிச்சப் பூவினும் மென்மை 388


## ஆ


ஆகுபெயர் 38, 117
ஆசிரியர் வள்ளுவர் 84
ஆசிரியரின் கட்டளை 248
ஆசிரியரின் வாய்மொழி 353
ஆண்பாற்குணம் : நாணும் நல்லாண்மையும் 342
ஆண்பாற் கூற்று 17
ஆய்வள்ளல் 63
ஆராய்ச்சி 10
ஆராய்ச்சித் தொகுதி 10
ஆருகதர் 73
ஆள்விளையுடைமை 106, 183
ஆள்விளையுடைமையில் மடியுளான் நிலைமை 330
ஆற்றுவார் ஆற்றல் 388
ஆற்றுவார்க்கு இன்ஞசெயல் 389
ஆற்றெழுக்கு 296
ஆரும் வேற்றுமைத் தொகை 128
ஆறு 279
ஆறு உறுப்பு 124


## இ


இகல் 126, 187
இகல் நகல் 127
இகல் மிகலின் கேடுதரும் 389
இகலீற்று வியங்கோள் 247
இகழ் மதிப்பு 380
இசை என்னும் எச்சம் 389
இசை நிறை 253, 254
இடன் அறிதல் 95, 181
இடந்தலைப்பாடு 149, 150, 152, 153
இடுக்கண் அழியாமையில் ஈகை அறம் 330
இடுக்கணழியாமை 106, 183
இத்தகையார் இவ்வியல்பினர் 242
இது செயல்வேண்டும் 251
இயல் 12
இயல்பாகுபாடு 12-20
இயற்கைப் புணர்ச்சி 149-153
இயைபுடைய மொழிகளை இணைத்து மொழிதல் 301-349
இரங்குவ செய்யாமை 389
இரட்டுற மொழிதல் 128

இரண்டு 278
இரத்தல் ஈதலை ஒத்தல் 341
இரத்தினச் சுருக்கம் 303
இரப்பார்க்கு வெகுளாமை வேண்டும் 341
இரப்பாரால் ஈவார்க்குப் புகழ் 341
இரவச்சத்தில் முயற்சியை வற்புறுத்தல் 341
இரவச்சம் 144, 191
இரவு 144, 191
இரவுக்குறி 152
இராகவையங்கார், மு. 10, 36
இராமாநுஜகவிராயர் 33
இருபாற்கிளவி 19
இருபாற் கூற்று 17
இருவர்க்கும் இனிது 389
இருவியங்கோள் 249
இருளும் ஒளியும் 342
இல்லறத்தார் : பிறனில் விழைதல் 82
இல்லறத்தார் : வெஃகாமை 56
இல்லறத்தார்க்கு உரிய கடமைகள் 67
இல்லறத்துறவற நெறிகளுக்கு மழை 302
இல்லறம் 12, 168
இல்லறவியல் 36
இல்லாண்மை 142
இல்லார் இகழப்படுவர் 389
இல்வாழ்க்கை 36, 173
இல்வாழ்க்கையின் உயிர் நிலை அன்பு 305
இல்வாழ்க்கையின் குறிக்கோள் 61
இல்வாழ்க்கையும் தவ வாழ்க்கையும் 304
இல்வாழ்வான் வாழும் திறம் 37
இலக்கணத் தொன்னூல் 145
இலக்கண நூலார் 261, 276
இலக்கிய மரபு 153
இலன் என்று தீயவை செய்யற்க 390
இழிவுசிறப்பு 253
இளம்பூரணர் 152
இளிவந்த செய்யாமை 390
இறந்தது காத்தல் 114
இறைநிலை 302
இறைப்பற்று 81
இறைமாட்சி 84, 179
இறைமாட்சி ஒரு தொகுப்புரை அதிகாரம் 318
இறையனார் 4
இன்சொல்லும் தீச்சொல்லும் 390
இன்பத்துள் இன்பம் பயக்கும் 390
இன்பப்பால் 8, 11
இன்மையின் இன்னாது 390
இன்மையுள் இன்மை 391
இன்னா கூறல் 303
இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்தல் 391
இன்னாசெய்யாமை 76, 178, 303
இன்னாசெய்யாமையில் அறிவுடைமை 316
இன்னா சொல்லுதல் 54
இன்னாச் சொல்லைப் பொறுப்பார்க்கு நோற்பார் 298
இன்னாது 238
இன்னார் இது செய்வார் 242
இனமும் சார்பும் பற்றி இயைபுடையனவற்றை ஒருங்கு கூறுதல் 301
இனியவை கூறல், 44. 99, 174, 303
இனியவை கூறலுக்கு இணையானது பணிவு 306
இனிது 237, 238


ஈ


ஈகை 62, 63, 99, 176
ஈகையார் நற்குடிப்பிறந்தார் 312
ஈகையில் இரத்தல் 311
ஈத்துவக்கும் இன்பம் 63
ஈதலே நன்று 391
ஈற்றசை 254
ஈன்றாளும் விரும்பாதன 391


உ


உட்பகை 129, 188
உட்பகையில் கூடாநட்பு 336
உடம்பும் உயிரும் 392
உடம்பொடு புணர்த்தல் 247
உடன்பாட்டு முறை 227
உடன்பாட்டு வகை 250
உடன்பாடு 248
உடன்பாடு எதிர்மறை 227, 230
உடன்போக்கு 150, 152
உடைக்கும் படை 392
உடையார் இல்லார், கற்றோர் கல்லாதவர் 299
உணலினும் உண்டது அறல் இனிது 392
உண்வின்பமும் காம இன்பமும் 300

உதவியின் அளவு 392
உபகாரியாம் தன்மை 60
உபாயம் 372
உம் இடைச்சொல் 271
உம்மை எண் 271, 273
உம்மைத்தொடர் 60
உயர்வு உள்ளல் 392
உயர்வுசிறப்பு 253, 259
உயிர் துறக்கும் மேன்மையாளர் 393
உயிர்ப்ப உளரல்லர் 393
உயிரோம்பல் 393
உருத்திரங்கண்ணனார், கடியலூர் 47
உருவகம் 75
உருவக வகை 138
உருவக வாய்பாடு 60
உருவமும் செயலும் 314
உரைகாரர் அடைவு முறை 211
உரைப்பாயிரம் 5, 210
உலகத்தார் 223
உலகத்தோடு ஒட்ட ஒழுகல் 393
உலகத்தோடு பொருந்த ஒழுகல் 222
உலக நடை 61, 223
உலகம் 221
உலகம் உண்டு 393
உலக வசனம் 203
உலகவழக்க அளவை மரபுகள் 284
உலக வழக்கம் 221
உலக வழக்குப் பேச்சுகள் 285
உலகியல் வழக்கு முறை 253
உலகில் உயர்ந்தது நீத்தார் பெருமை 394
உலகில் வாழும் உயர்ந்தாராகிய சான்றோர் 222
உலகின் மேலிட்டு உரைத்தல் 221, 226
உலகு 221
உலகு எங்கே தங்கும்? 394
உலோபர் 140
உழவினால் ஈகையறம் 340
உழவு 142, 190
உழவுத் தொழிற்செய்தி 307
உள்ளத்தின் உள்ளக்கெடும் 394
உள்ளம் உரை செயல் 46
உளப்பாட்டுத் தன்மை 245
உறுப்பு ஐந்து 200
உறுப்பு நலன் அழிதல் 161, 190

ஊ

ஊக்கம் உடைமையில் ஆக்கம் உடைமை 329
ஊக்கமுடைமை 105, 183
ஊடல் உவகை 167, 198
ஊடிக்கூடல் 18, 166
ஊடுதல் காமத்திற் கின்பம் 394
ஊழ் 83, 179
ஊழ்வினையும் ஆள்வினையும் 317
ஊழால் பேதைமையும் அறிவும் 318
ஊழால் வருபயன் தெய்வத்தால் வருபயன் 318
ஊழினால் துறவறம் வரும் 318
ஊழும் வினை முயற்சியும் 394
ஊற்று நீர் 395
ஊன்று கோலாம் துணை 395
ஊனுண்டலை ஒழித்தல் 68
ஊனுண்டார்க்குப் படை கொண்டார் 298

எ

எகரவினா வாக்கியம் 267
எகரவினாவும் அகரச்சுட்டும் 266-267
எச்சத்திற்கு ஏமாப்பு 395
எச்சத்தொடரும் முற்றுத் தொடரும் 296
எடுத்துக்காட்டு 352
எண் அளவும் பொருள் அளவும் 281
எண்ணால் பொருள் வரையறை 271-285
எண்ணிடைச் சொற்கள் 271, 277
எண்ணியபடி முடிப்பர் 395
எண்ணுத்தொகை 274, 275
எண்ணுத்தொகைப் பெயர் 274, 275, 280, 281
எண்ணுப்பொருள் 253
எண்ணும் முறை 271, 274
எண்ணும்மை 274
எத்தகையார்மாட்டும் குற்றம் குற்றமே 396
எதிர்மறை 248
எதிர்மறை முகஅதிகாரம் 23
எதிர்மறைமுகம் 87, 92, 119, 130, 250
எதிர்மறை முறை 227
எதிர்மறை வாய்பாடு 251

எய்தலின் எய்தாமை நன்று 396
எல்லா உயிரும் தொழும் 396
எல்லாம் உடையவர் 396
எவன் என்பதன் விகாரம் 262
எவன் என்னும் விகுப்பெயர் 270
எறிச்சலூர் மலாடனூர் 13, 15
என் 262
என்று, என, ஒடு 275
என்ன பயத்தது 396

ஏ

ஏகாரத்தால் ஏற்படும் பொருள் நலம் 253
ஏது 352
ஏதுக்களும் எடுத்துக் காட்டு களும் 351
ஏதுகாட்டிய அறிவுரை 288
ஏது காட்டும் முறை 288
ஏது நடையும் எடுத்துக் காட்டும் 351
ஏது விளக்கம் 293
ஏவல் வியங்கோள் 259
ஏழாம் வேற்றுமைத் தொகை 128
ஏற்புடைக்கடவுள் 31

ஐ

ஐங்குறு நூறு 204
ஐந்து 279
ஐந்தடக்கல் 397
ஐம்புலன்களுக்கும் இன்பம் 148

ஒ

ஒட்ட ஒழுகல் 397
ஒடு என்பது எண்ணுப் பொருள் 276
ஒடு என்னும் எண்ணுப்பெயர் 276
ஒத்த அறங்கள் 45
ஒப்புடையனவாய்க் காணப் படும் பகுதிகள் 379
ஒப்புரவறிதல் 38, 60, 99, 176, 381
ஒப்புரவு 63
ஒரு நீதிக்கு மற்றொரு நீதி 297-300
ஒருபாவி 397
ஒருபொருள் பற்றி வெவ் வேறு கருத்துகள் 248
ஒரே கருத்து உடன்பாடு எதிர்மறை 228
ஒரே கருத்து உடன்பாடு எதிர் மறை வகையால் உணர்த்துதல் 249
ஒருவழித் தணத்தல் 153
ஒருவழித் தணப்பு 153
ஒல்லும் வாயும் செல்லும் வாயும் 397
ஒழிபியல் 19
ஒழுக்கத்தின் சிறப்பு 50
ஒழுக்கமுடைமை குடிமை 397
ஒழுக்கமுடைமை 49, 89, 175, 297
ஒழுக்கமுடைமை குடிமைப் பண்பு 308
ஒழுக்கமும் இழுக்கமும் 397
ஒற்றுடல் 104, 183
ஒறுத்தார்-பொறுத்தார் 54
ஒன்றற் கொன்று ஒற்றுமை வேற்றுமை 298
ஒன்றற் கொன்று பொருள் இயைபுடைய அதி காரங்கள் 23
ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் 301
ஒன்று உண்டு 398
ஒன்றுக்கு ஆயிரம் 282
ஒன்றுக்கு எழுபது கோடி 283
ஒன்றுக்கு ஏழு 282
ஒன்றுக்குக் கோடி 282
ஒன்றுக்கு நூறு 282
ஒன்றுக்குப் பத்து 282
ஒன்றுக்குப் பத்துக் கோடி 283
ஒன்றுக்குப் பலகோடி 283

ஔ

ஔவை பாடல் 41
ஔவையார் 266

க

கட்டளை 398
கடப்பாட்டாளனுடைய பொருள் 62
கடப்பாடு 398
கடவுள் வாழ்த்தில் கல்வி 301
கடவுள் வாழ்த்து 21, 30, 173
கடியலூர் உருத்திரங் கண்ணனார் 47
கடை 236
கண்ணகி 43

கண்ணை முன்னிட்டுக் கூறும்
 கருத்துரைகள் 157
கண்ணோட்டத்தில் பொறை
 யுடைமைக் கருத்து 329
கண்ணோட்டம் 103, 183
கண்ணோட்டம் இல்லாத கண் 398
கண் புண்ணாக மதிக்கப்படுதல் 398
கண் விதுப்பழிதல் 157, 194
கணவன் தலையளி 342
கணவன் மனைவியர் உறவு 342
கணவனிடம் மனைவி காட்டும்
 விருப்பம் 343
கணவனைக் காணும் விருப்பு 399
கணிகையர் கூட்டம் 9
கணிகையரிடம் கொள்ளும்
 காமம் 132
கந்தழி 36
கபிலர் 379
கம்பர் 44
கயமை 145, 191
கயமை அதிகாரத்துள் கயவர்
 இயல்புடன் சான்றோர்
 இயல்பு 341
கயவரது ஒழுக்கம் 19
கருத்தின் வன்மை-மென்மை 300
கருத்துடையடை 31
கருத்துப்பொருள் உவமை 300
கருத்துப் பொருளுக்கு மற்றொரு
 கருத்துப் பொருள் 297
கருத்து வகையான் நேர்
 முரண்பட்ட பொருள்கள் 231
கருதலளவைக் கூற்று 399
கருமமே கட்டளைக்கல் 399
கருவியாகு பெயர் 3
கல்லாடர் 215
கல்லாதான் சொல் விருப்பும்
 முலையில்லாள் காமமும் 299
கல்லாமை 87, 180
கல்லாமையுள் உவமையாகப்
 பிற பொருள் 319
கல்லார் செல்வமும் நல்லார்
 வறுமையும் 299
கல்லான் சொற்சோர்வு படும் 399
கல்வி 86, 179, 308
கல்வியும் செல்வமும் ஊழான்
 மாறுபடுதல் 318
கல்வியும் மெய்ப்பொருளும் 400
கல்வியொடு தொடர்புடைய
 அதிகாரங்கள் 87
கலித்தொகை 139, 201
கலிப்பா 200
கலிவெண்பா 201
கலிவெண்பாட்டு 201
கவரிமான் 383
கவிக்கூற்று 21
கழகம் 133
கள் காமம் இரண்டின் ஒற்றுமை
 வேற்றுமை 383
கள்ளாமை 72, 177
கள்ளாமையில் அருளும்
 அன்பும் 315
கள்ளுண்ணாமை 132, 189
களவியல் 19
களவியற் பகுதிகள் 150
களவு 145
களவு கற்பு 18
கற்பியல் 19
கற்பு வாழ்க்கை 155
கற்றவரிடத்தும் அறியாமை 325
கற்றவழி நிற்க 400
கற்றறிந்தார் உலகிற்குப் பயன்
 படுவர் 400
கன்னியர் கூட்டம் 9
கனவுநிலை உரைத்தல் 160, 195
கனைத்திறம் உரைத்த காதை 201


கா


காக்கவேண்டுவன 400
காட்சிக்கு எளிமையும் கடுஞ்சொல்
 இன்மையும் 400
காட்சியவர், காட்சியார் 224
காதல் கொண்டாரிடம் காதல்
 தன்மை இல்லையா 400
காதல் மிக்க இடத்து நிகழும்
 மடலேறல் 154
காதலனைக் காணுங்காலும்
 காணாக்காலும் 401
காதலார் செய்கை 343
காதலார் நட்புத்திறம் 344
காதற்சிறப் புரைத்தல் 152, 192
காமத்தால் வந்த துன்பம் 401
காமத்தால் வரும் குற்றம் 125
காமத்தால் வருவன 125
காமத்தியற்கை 344
காமத்திற்கு இன்பம் ஊடுதல் 344
காமத்தின் வேகமும் விரிவும் 345
காமத்துப்பால் 8-10, 145
காமத்துப்பால் அவதாரிகை 18
காமத்துப் பாலிலும் அற
 வொழுக்கம் முதலியன 342

காம இன்பத்திற்கு அறிவுநிலை 300
காம நோயுற்றார் செயல் 401
காமப்பகுதி தவிர்தல் 66
காமம் காரணமாக வரும் குற்றம் 130
காமம்பற்றி வரும் தீங்கு 53
காமமும் கள்ளும் 345, 401
காமமும் காம இன்பமும் கடல் 402
காமமும் தீயும் 402
காமமும் நாணும் 402
காமமும் நெருப்பும் 345
காமமும் நோயும் 345
காம வெளிப்பாடு 345
காயச் செய்தியின் அறத்தியல்பு 59
காரணக்குறி 201
காரணகாரியத் தொடர்பு 39
காருகத்தம் 15
காலமறிதல் 95, 181
காலமறிதலில் இடனறிதல் 324
காளிங்கர் 13, 14, 16-18, 29, 34, 49, 56, 59, 67, 77, 79, 80, 82, 86, 88, 99, 97, 102-104, 109, 116, 117, 119, 124, 126, 132, 134, 140, 148, 153-155, 157, 332
காளிங்கர் உரையில் மட்டும் மூன்று இடங்களில் அதிகாரப் பிறழ்ச்சி 212

கீ

கீரந்தையார் 5
கீழ்மகனின் இறுமாப்பு 402

கு

குடிகளை ஒறுத்து ஆள்வது எப்படி 103
குடிசெயல்வகை 19, 142, 143, 190
குடிசெயல்வகைக்கு ஆள்வினையும் அறிவும் 340
குடிப்பிறப்பும் நாணமும் கண்டு தெளிதல் 325
குடிப்பிறப்பும் பழி நாணலும் 402
குடிமை 134, 136, 189, 308
குடிமையில் ஒழுக்கம் வாய்மை முதலிய அறங்கள் 388
குடியியல் 16, 134
குல ஒழுக்கம் 50
குலமும் நலமும் 403
குலனுடையானின் செய்கை 403
குற்றங்கடிதல் 90, 180
குற்றம் கடிதல் : உலோப குணம் போக்கல் 321
குறட்பா மரபு 202
குறட்பா விரவிவருதல் 200
குறள் 3
குறள் என்னும் சிறப்புப் பெயர் 203
குறிப்பறிதல் 113, 147, 185, 191
குறிப்பறிவுறுத்தல் 165, 197
குறிப்புணர் உறுப்பு 403
குறிப்புப் பொருள் 266
குறிப்பு வெளிப்பாடு 346
குறியெதிர்ப்பை 63
குறுந்தொகை 267
குன்றிமணி, தினை, பனை 284

கூ

கூடா ஒழுக்கம் 21
கூடா நட்பு 123, 187
கூடா நட்பை நட்புக்கு முற் கூறிய முறையில் விலக்குதல் 335
கூடாவொழுக்கத்தில் தவத்தினரின் வடிவு 314
கூடாவொழுக்கம் 70, 177
கூடாவொழுக்கம் தவத்தினரைக் குறித்தது 314
கூறியது கூறல் 208

கெ

கெட்டார்க்கு நட்டார் இன்மை 300

கே

கேள்போல் பகைவர் 403
கேள்வி 87, 180
கேள்விச் செல்வம் 88
கேள்வி, விமரிசம், பாவனை 302
கேள்வியுள் காணும் பிற பொருள் 319

கை

கைக்கிளை 146

கொ

கொச்சகக்கலி 201
கொடாதான் செல்வம் கெடும் 403
கொடிநிலை 36

கொடுத்தும் கொளல்வேண்டும் 403
கொடுங்கோன்மை 101, 102, 182
கொடுங்கோன்மையில் செங்கோன்மை 328
கொல் என்னும் அசைநிலை 266
கொல் என்னும் இடைச்சொல் 266
கொல் ஐயப்பொருள் 265
கொல் வினாப்பொருள் 265, 266
கொல்லாதான் நெடிது வாழ்வான் 404
கொல்லா நலம் 404
கொல்லாமை 76, 178
கொல்லாமையும் ஒப்புரவும் 316
கொல்லாமையும் கோறலும் 404
கொல்லாமையும் பொய்யாமையும் 298
கொல்லாமையுள் துறவுக் காரணம் 317
கொல்லாமையோடு பொய்யாமை 317
கொள்ளத்தக்கன — தள்ளத்தக்கன 231
கொன்று உண்ணுமை நன்று 404

கோ

கோடி உறும் 404
கோப்பெருஞ்சோழன் 39, 41
கோபத்தால் வரும் தீங்கு 53
கோபால கிருஷ்ணமாச்சாரியார், வை. மு. 40, 169, 256, 258
கோவலன் 43

ச

சங்கச் சான்றோர் 39
சங்கநூல் பாடல் 316
சங்கப்பாடல் 39, 62
சங்கப்புலவர் குழு 4
சங்கரநமச்சிவாயப் புலவர் 4, 254
சடகோபர் 267
சதுரகராதி 281
சந்நியாசம் 15, 66
சமுதாய ஒழுக்கம் 50
சரவணப் பெருமாளையர், திருத்தணிகை 15
சனகாதி நால்வர் 4

சா

சால்தல் 138
சான்றாண்மை 60, 129, 138, 190, 309, 311
சான்றாண்மைக்கு நாண் 404
சான்றாண்மையில் அதற்குறுப்பான குணங்கள் 338
சான்றாண்மையும் நோன்மையும் 298
சான்றோர் 58, 225, 383
சான்றோர்க்கும் நல்லினநாட்டம் வேண்டும் 322
சான்றோர் குழாத்துப் பேதை 405
சான்றோர்முன் கள்ளுண்பான் இகழப்படுவான் 405
சான்றோரின் சீர்மை 225
சான்றோரும் கீழ்மக்களும் 300
சான்றோரை முன்னிட்டு அறப்பொருளைக் காட்டும் மரபு 226

சி

சிந்தனைக் குறள்கள் 300
சிந்தாமணி 41
சிலப்பதிகார அரும்பதவுரை 200
சிலப்பதிகாரம் 199,201
சிற்றினம் சேராமை 92, 180
சிற்றினம் சேராமை : நல்லினத்தாரை ஒப்புக்காட்டல் 322
சிற்றினஞ் சேராமையில் முக்கரணத்தூய்மை 323
சிறப்பும் செல்வமும் 405
சிறியர் 241
சிறிய இனம் 92
சிறுபொறி பெருந்தீ 405
சிறுமேதாவியார் 15
சிறுமை–பெருமை அளவு : தினை–பனை 283
சினமும் காமமும் 128

சீ

சீத்தலைச் சாத்தனார் 351
சீதையின் உள நினைவுகள் 44

சு

சுட்டுப் பெயர் 21
சுற்றம் தழால் 99, 182
சுற்றந்தழாலில் பொருளும் ஈகையும் 326

சூ

சூதாடும் கருவி 133
சூது 133, 189
சூதும் உயிரும் 300

செ

செங்கோல் ஆட்சி 382
செங்கோன்மை 100, 182, 209
செங்கோன்மை–கொடுங்கோன்மை 327
செத்தாருள் வைக்கப்படும் 405
செந்தமிழ்ப் பத்திரிகை 14-16
செம்பொருள் கண்டார் 406
செய்தபின் இரங்குதல் 346
செய்ந்நன்றியறிதல் 45, 175
செய்ந்நன்றியறிதலில் நட்பு 307
செய்யும் பண்புடையார் 241
செய்யுள்களின் வைப்புமுறை 209
செய்வதும் செய்யாமையும் 240
செயல்களின் எண்ணுமுறை 274
செயல்முறைபற்றிய அறம் 59
செயலால் நிகழும் பாவம் 76
செயற்பாலது 406
செல்வத்துள் செல்வம் 406
செல்வம் நிலையாமை 78
செல்வர் 48
செவ்வெண் 277
செவ்வெண்கள் தொகைபெற்று வரல்வேண்டும் 277
செவ்வெண்தொகை 277
செவ்வெண் தொகை பெற்று வரல் 277
செவ்வெண் மரபு 276

சே

சேர்ந்தார் குற்றமும் தூற்றுவர் 406
சேனாவரையர் 200, 247, 259

சொ

சொல்–தொடர் 21
சொல்லில் நிகழும் பாவம் 58
சொல்லினால் வரும் தீங்குகள் 308
சொல்லுவான் குறிப்பு 254
சொல்வன்மை 108, 129, 184
சொல்வன்மையுள் கல்வி 331
சொற்குற்றம் : புறங்கூறாமை 56
சொற் சோர்வு காக்க 406
சொற்பொருள் அமைப்பு 384
சொற்பொருள் ஒப்புமை 379
சொற்பொருள் ஒப்புமையுடையன 389

சோ

சோமேசர் முதுமொழி வெண்பா 202

ஞா

ஞானம் 65, 78

த

தக்காரைத் தெளியாவிடின் அரசனுக்கு அறியாமை வரும் 324
தக்கிணாமூர்த்தி 4
தகையணங்குறுத்தல் 145, 191
தடைவிடை 123, 149
தண்டபாணி தேசிகர், ச. 10
தத்துவஞானம் 80
தந்திர உத்தி 114
தம் குற்றமும் பிறர் குற்றமும் 407
தம் பொருள் தமக்கே 407
தமிழ்ச்சுடர் மணிகள் 10, 19
தமிழ் நாவலர் சரிதை 4
தமிழ்ப்பண்பாடு 39
தருமத்தியானம் 73
தருமி 4
தலை 235, 236
தலைப்பெயர் 21, 22, 86, 90
தலைமக்கள் வேண்டும் 407
தலைமகள் கூற்று 19, 154
தலைமகன் கூற்று 154, 155, 162
தவத்தோர் 71
தவம் 69, 177
தவம் செய்வாரும் மற்றைய வரும் 314
தவ வேடங்கள் 71
தன் குற்றம் கடிதல் தலையாய அறம் 321
தன்னைத்தான் காப்பான் 407
தனிச்சிறப்பு 286
தனிப்படர் மிகுதி 195, 211, 195
தனியறங்கள் 62

தா

தாம் தேடி உண்ணலின் இனிமை 407
தாளாண்மையில்லாதான்–பேடிகை வாள் 299
தாளாண்மையும் வேளாண்மையும் 407
தானம், தவம் 70

தி

திட்டாந்தம் 352
திண்மை உண்டாகப்பெறல் 408
திரிபுணர்ச்சி 225
திரிவர்க்கம் 7, 10
திருக்குறள் 3
திருக்குறள்–உரைவளம் 10, 19
திருக்குறளின் பாயிரம் 15
திருக்குறளின் பெரும்பகுப்பு 5
திருஞானசம்பந்தர் 351
திருத்தணிகை சரவணப் பெருமாளையர் 15
திருநாவுக்கரசர் தேவாரப் பதிகம் 10
திருமகள் 132
திருமகள் சேராவிடம் 408
திருமகள் சேருமிடம் 408
திருமணம் செல்வக் கேசவராய முதலியார் 20, 205, 207
திருமுருகாற்றுப்படை 3
திருவள்ளுவமாலை 3–5, 9, 13, 15, 17, 20, 204, 379
திருவள்ளுவர் 36, 50, 65, 69, 203, 205, 231, 247, 249
திருவள்ளுவனுர் 89
திருவறம் 4
திருவாசகம் 306
திருவாய்மொழி 267
திவாகரச் சூத்திரம் 224
தினை–பனை : சிறுமை பெருமை அளவு 283
தினையளவு பனையளவாதல் 408

தீ

தீது 231–234
தீ நட்பு 122, 187
தீயவை செய்தார் கெடுதல் திண்ணம் 409
தீயவை தீய பயக்கும் 409
தீயை ஒக்கும் தீயவை 409
தீரா இடும்பை தருவன 409
தீவினைப் பகையும் பிற பகைகளும் 311
தீவினையச்சம் 28, 176

து

துணை 240
துப்புரவில்லாரின் துறவு 409
தும்மலால் விளைந்த துயர் 409
துறந்தார் 33
துறந்தாரது வாய்மொழி 303
துறவறத்தார் : கள்ளாமை 56
துறவறத்தார் ; கூடா வொழுக்கம் 52
துறவறம் 12, 65, 169
துறவறவியல் 65, 304
துறவியர் நிலையினும் இல் வாழ்க்கை மேம்பட்டது 304
துறவியர் வாழ்வு சிறப்புடைத்து 304
துறவில் கடவுள்–பற்று 317
துறவு 69, 178
துறவு நெறியாளர் 80
துறவோர் கடமை 67
துறவோர்க்குப் பொறுமை இன்றியமையாதது 309
துறவோருடைய தத்துவ உணர்வு 33
துன்பத்திற்கு மேல் துன்பம் 346
துன்பப் பகுதி 130
துன்பம் துடைத்தல் 410
துன்பவியல் 16, 124, 125

தூ

தூதர் தன்மை 112
தூதர் திறம் உரைப்பன 108
தூது 84
தூது அதிகாரத்தில் அன்புடைமை முதலிய பல பண்புகள் 332

தெ

தெய்வத்தோடு ஒப்பக் கொள்ளத் தக்கவர் 410
தெரிந்து செயல்வகை 93, 181
தெரிந்து செயல்வகையில் பொருளியல் கருத்து 323
தெரிந்து தெளிதல் 96, 181
தெரிந்து தெளிதலில் பெருமை சிறுமை 325
தெரிந்து வினையாடல் 98, 182
தெரிந்து வினையாடலில் வினையாளனின் நட்பு 326
தெய்வப் புணர்ச்சி 146
தெய்வப் புலவர் 304
தெய்வ வணக்கம் 31

தே

தேர்ந்து செய்வஃதே முறை 410
தேவாரத் திருமுறை 247

தேவாரப் பாடல் 351
தேற்றப்பொருள் 257
தேற்றம் 253

தொ

தொகுப்புரை 135
தொகுப்புரை அதிகாரம் 77
தொகை அகராதி 281
தொகைநிலைப் பாயிரம் 34
தொகை நூல்கள் 145
தொகைப் பெயர்கள் 280
தொகைப்பெயர் வழக்கு 281
தொகைப்பெயர் விளக்கம் 280
தொடர்புடைய கருத்துரைப் பகுதிகள் 301
தொல்காப்பிய உரைகாரர் 212
தொல்காப்பியச் சூத்திரங்கள் 223, 267
தொல்காப்பியச் சொல்லதிகார வுரை 200
தொல்காப்பிய நூற்பா 30
தொல்காப்பியப் பாயிர உரை 5
தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி 36, 168
தொல்காப்பியம் 35, 36
தொல்காப்பியர் 6, 145, 246, 247, 253, 260, 351
தொல்காப்பிய விதி 253

தோ

தோழி கூற்று 162
தோழியிற் கூட்டம் 162

ந

நக்கீரனார், மதுரைக் கணக்காயனார் மகனார் 62
நகர் இலக்கணம் 117
நச்சினார்க்கினியர் 5, 41, 82, 152
நட்டார்போன்று ஒட்டாதார் 410
நட்டாரும் ஒட்டாரும் 299
நட்பாராய்தல் 120, 122, 123, 186
நட்பாராய்தலில் ஊக்கமுடைமை 334
நட்பாராய்தலில் குடிமை 334
நட்பியல் 16, 119, 307
நட்பில் நீரவருடன் பேதையார் 334
நட்பு 19, 57, 119, 186
நட்புநிலை 346
நடுநிலைதவறிய ஆக்கம் ஆகாது 411
நடுவு நிலைமை 46, 175
நடுவு நிலைமையில் அவையத்துச் சான்றோரும் வணிகரும் 307
நயத்தக்க நாகரிகம் 104
நயனுடையான் வறுமை 411
நல்குரவில் முற்றத்துறவாமை 341
நல்குரவு 143, 190
நல்லார் தொடர்பு 411
நல்லார் வறுமையும் கல்லார் திருவும் 411
நல்லாள் 412
நல்லாறு 412
நல்லொழுக்கமும் தீயொழுக்கமும் 50
நலம்புனைந்துரைத்தல் 151, 192
நன்றியில் செல்வத்துள் ஈகை நலம் 339
நன்றியில் செல்வம் 139, 190, 381
நன்மை தின்மை 287
நன்மை தின்மைகள் 280
நன்மை தீமை விளைவதற்கு ஏதுவான காரணங்கள் 351
நன்று 231, 232
நன்னூல் 253, 261, 267
நன்னூல் உரை 254
நன்னூலார் 247

நா

நாட்டிற்கு அரசனே உயிர் 116
நாடகப் பாண்மை 145
நாடு 115, 185
நாடு என்பதன் இறுதியில் அரசன் 333
நாடும் அரணும் பொருளும் 19
நாணின்மையும் கொள்கை பிழைத்தலும் 300
நாணுடைமை 141, 190
நாணுடைமையில் குலனுடைமை 340
நாணுடைமையில் சான்றாண்மை 340
நாணுத்துறவு உரைத்தல் 154, 193
நாணும் நல்லாண்மையும் 412
நாநலம் 108
நால்வகைப்பட்ட அறம் 14
நாலடிப் பாடல் 7

நாலடியார் 7, 205
நாளிழுக்கம் 412
நான்கு 278
நான்மணிக்கடிகை 40

நி

நிகண்டாசிரியர் 281
நிகண்டு 200
நிகமனம் 352
நிலத்திற்குப் பாரம் 412
நிலத்தின் பொறுமை 413
நிலம் சென்று நோக்கா தவனுக்கு இல்லாளின் ஊடல் உவமை 341
நிலமும் நீரும் 413
நிலையாமை 78, 178
நிலையாமையுள் ஈகை 317
நிலையொழுக்கம் 50
நிறை அழிதல் 163, 196
நிறைமொழி மாந்தர் பெருமை 413
நிறையுடைமை 309
நினைந்தவர் புலம்பல் 159, 195, 212

நீ

நீங்கா நினைவு 413
நீத்தார் பெருமை 21, 32, 173
நீத்தார் பெருமையுள் வாய்மையும் வெகுளாமையும் 303
நீதி நூலுடையார் 220
நீர் இன்று அமையாது உலகம் 413
நீரும் நிழலும் 414

நு

நுகத்தடியின் பகலாணி 46

நூ

நூல் மரபு 7
நூலோர் 216
நூற்பா 200

நெ

நெஞ்சுரம் 346
நெஞ்சு வருத்தும் நிலை 414
நெஞ்சே கண்கண்ட சான்று 414
நெஞ்சே நல்ல துணை 346
நெஞ்சொடு கிளத்தல் 162, 196
நெஞ்சொடு புலத்தல் 166, 197

நே

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா 201

*நோ

நோற்பாரின் ஆற்றல் 414

ப

பக்கம் 352
பகற்குறி 152, 153
பகுத்துண்டு வாழ்தல் 414
பகை 19
பகைத்திறம் தெரிதல 128, 188
பகைத்திறம் தெரிதலில் சொல்லேர் உழவர் 336
பகைமாட்சி 127, 188
பகைமாட்சியில் வெகுளியும் காமமும் 335
பகைமுகத்தால் கூறியவை 125
பகையினும் மிக்க பகை 415
பகைவர்க்கம் 90
பசப்புறு பருவரல் 158, 194
பசலை நோய் படுத்தும்பாடு 415
பசிப்பிணி 64
பட்டினப்பாலை 47
படர்மெலிந்திரங்கல் 157, 194
படை 19
படைச்செருக்கு 119, 186
படைமாட்சி 118, 186
பண்பிலான் பெற்ற செல்வம் 415
பண்பு இல்லாப் பகை 415
பண்புடைமை 139, 190
பண்புடைமை என்னும் வழக்கு 416
பண்புடைமையில் பண்பிலான் செல்வ நிலைமை 339
பண்புடைமையிலும் பல குணம் போற்றியமை 339
பணிதலின் மேன்மை 48
பணிவுடைமையின் மேன்மை 416
பத்து என்னும் வரையறை 207
பத்துப்பாட்டு 204
பதிற்றுப்பத்து 41, 204
பதிற்றுப்பத்துப் பதிகங்கள் 19
பதினெண் கீழ்க்கணக்கு 3
பதுமனர் 205
பயன் கருதிய நெறி 286
பயனில சொல்லாமை 57, 176, 308

பயனில சொல்லாமை
சான்றோர்க்கு இயல்பு 311
பயனில சொல்லுதலும் நட்டார்க்கு
நயனில செய்தலும் 310
பயில்தொறும் பயன் மிகும் 416
பரிதியார் 44, 75, 79, 98, 114, 117–119, 151, 332
பரிப்பெருமாள் 6, 8, 9, 12–14, 31, 45, 47, 49, 66, 114, 116, 120, 123, 135, 146, 149, 150, 155, 156, 160, 161, 169, 212
பரிமேலழகர் 5, 6, 8, 10, 13, 14, 17, 18, 20, 21, 29, 31, 33, 34, 39, 42, 43, 47, 49, 51, 53, 54, 57, 58, 61, 62, 64, 65, 67, 69, 73, 77, 79, 83, 88, 90, 91, 102, 103, 106, 109, 112, 117, 119, 124, 128, 129, 133, 134, 137, 139, 140, 143, 147, 150, 151, 153–156, 161, 162, 164, 165, 169, 172, 200, 212, 215-217, 220, 222, 254, 255, 258, 283, 306, 332
பரிமேலழகர் உரைத்தன்மை 169
பரிமேலழகரின் தொகுப்புரை 74
பரிமேலழகரின் பாடல்முறை
வைப்பு 168
பரியாயப் பெயர் 38
பல்பொருள் கூட்டத்து ஒரு
பெயர்த் தொகுதி 281
பலதுறை நூல்கள் 217
பவணந்தி முனிவர் 246, 253, 261
பவானந்தம் பிள்ளை 199
பழமை 121, 186
பழமை பாராட்டுதல் 416
பழமொழி 161, 203, 352
பழிப்பில்லா வாழ்க்கை 416
பழுமரமும் நச்சுமரமும் 417

பா

பாங்கற் கூட்டம் 149, 150, 152
பாட்டின் பயனிலை 293
பாடல் தொகை வகை 204-208
பாயிரப் பகுதி 80
பாயிரம் 13, 30
பால் 12

பி

பிரம்மதேவர் 10
பிரிந்து கூடல் 18
பிரிநிலை-தேற்றம் 254
பிரிநிலைப் பொருள் 255, 256
பிரிவச்சம் 153
பிரிவாற்றுமை 155, 194
பிரிவாற்றியிருக்கக் காரணம் 417
பிரிவு 346
பிரிவு அச்சம் 347
பிரிவு உலகியற்கை 347
பிரிவுத்துயர் 417
பிரிவுத் துன்பம் 347
பிழைபொறுக்க 417
பிறப்பீனும் வித்து 418
பிறர் ஆக்கம் கொள்ளற்க 418
பிறர் சொல் பயன் கோடல் 418
பிறர்மனைக் கூட்டம் 9
பிறனில் விழையாமை 51, 175
பிறனில் விழையாமை—
சான்றோர்க்கு அறம் 309
பின்னடிகள் ஒத்துவரும்
குறட்பாக்கள் 418

பீ 421

பீடு நடை

பு

புகழ் 64, 176
புகழ் ஈகையால் வரும் 312
புகழ் மதிப்பு 380
புணர்ச்சி மகிழ்தல் 148, 192
புணர்ச்சி விதும்பல் 165, 197
புதல்வரைப் பெறுதல் 39, 40, 174
புருடார்த்தம் 10
புல்லறிவாண்மை 126, 187
புல்லறிவாண்மையில் ஈகை 335
புல்லறிவாண்மையில் கல்வி
நலம் 335
புலத்தலும் புல்லலும் 421
புலவி 166, 197
புலவி நுணுக்கம் 167, 198
புலவியால் நேரும் பிணைப்பு 348
புலால் மறுத்தல் 68
புலால் மறுத்தலில் அருளுடைமை
கொல்லாமை 313
புலால் மறுத்தலில்
பொருளாட்சி 313
புலான் மறுத்தல் 177
புறங்கூறலுக்கு இணையானது
பொய்ம்மை 310
புறங்கூறுமை 56, 176, 308

புறங்கூறுவோர் நட்பின் மாண்பு
அறியாதார் 310
புறத்திரட்டு 30
புறநானூற்றடிகள் 232, 340
புறநானூறு 6, 39–41, 63
பு[illegible]ப்பாட்டு 226

பெ

பெண்ணின் இன்பம் 349
பெண்ணின் மென்மை 348
பெண்பாற் கூற்று 17
பெண்வழிச் சேறல் 130, 188
பெண்வழிச் சேறலில் மனை
யாளுக்கு அடங்கலால்
விளையும் பேதைமை 336
பெரியர் 33
பெரியர், சிறியர் 241
பெரியர் செயற்கரிய செய்வர் 421
பெரியார் சார்பின்மை—
முதலிலார்க்கு ஊதியம்
இன்மை 249
பெரியார் நட்பு 322
பெரியாரைத் துணைக்
கோடல் 91, 130, 180
பெரியாரைத் துணைக்கோடலில்
பொருள் செயல்வகை 322
பெரியாரைப் பிழைப்பார்
உய்யார் 421
பெரியாரைப் பிழையாமை 129, 188
பெரியாரைப் பிழையாமையில்
அவர்தம் வெகுளி ஆற்றல் 336
பெரியாரைப் பேணுதல் 422
பெருகலின் குன்றல் இனிது 422
பெருங்காப்பியம் 7
பெருந்தொகை 17, 18
பெருமை 137, 189
பெருமை அதிகாரத்து மாறுய
சிறுமை 338
பெற்ற பொருளைப் பிறர்க்கு
உதவுவார் துன்புறுர் 422
பெறத்தக்க பொருள்கள் 422
பெறினும் பெருவிடினும் துயர் 422

பே

பேடிகை ஒள்வாள் 422
பேடிகை வாளாண்மை 384
பேணுக—தவிர்க 287
பேதை தொழில் 423
பேதைமை 124, 187
பேதைமையுடையான் 90
பேதையார் கேண்மை 423
பேரறிவாளன் திரு 423
பேராசிரியர்
எஸ். வையாபுரிப் பிள்ளை 211
பேராண்மை 423

பொ

பொச்சாப்பும் அச்சமும் 299
பொச்சாப்பும் வறுமையும் 299
பொச்சாப்பும்-வெகுளியும் 299
பொச்சாவாமை 100, 182
பொச்சாவாமையில் வெகுளி
புகழ் 326
பொச்சாவாமையும்
உள்ளுதலும் 327
பொத்தியார் 39
பொதுவறம் 62
பொய்ம்மை வாழ்வு 57
பொய்யாமொழிப் புலவர் 4
பொருட்பால் 8, 84, 306, 307, 311
பொருட்பாலில் இருமனப்
பெண்டிர் 51
பொருட்பாலின் உள்ளடக்கம் 84
பொருட்பாலின் இயல்
பகுப்பு 16, 17
பொருள் அளவால் காட்டும்
விளக்கம் 283
பொருள் அறனும் இன்பமும்
ஈனும் 424
பொருள் செயல்வகையில்
ஏனைய உறுதிப் பொருள்கள் 3[illegible]
பொருள் நுட்பம்
பொருள்பற்றி நிகழும் குற்றம்
பொருள் முயற்சி
பொருள் விளக்கம்
பொருளியல் 16, 115, 1[illegible]
பொருளுரை
பொழுதுகண்டிரங்கல் 21, 161,
பொறையுடைமை 53, 175,
பொறையுடைமையில்
சான்றாண்மை
பொறையுடைமையில்
நிறையுடைமை

போ

போலி வடிவு

ம

மக்கட்பேறு—கல்வி, அறிவுடைமை, சான்றாண்மைகளால் சிறப்புறும் 306
மக்களும் மாக்களும் 424
மகளிரின் கற்பு மேம்பாடு 38
மகாபாரதம் 10
மடலேற்றம் 154
மடவரல் நோக்கம் (கண்) 424
மடியின்மை 105, 183
மடியின்மையில் குடிமை 329
மணக்குடவர் 16–18, 33, 37, 39, 42, 45, 50, 57, 62, 69, 76, 78, 83, 84, 86, 88, 93, 100, 104, 106–109, 111–114, 119, 123, 124, 130, 134, 141, 147, 155, 156, 159, 166, 172, 211, 212, 302
மணிமேகலை 57, 133, 351
மதியும் மடந்தை முகனும் 424
மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் 62
மதுரைத் தமிழ் நாகனார் 215
மயக்கத்தால் வரும் பகை 125
மயக்கம் 125
மயக்கம் தவிர்தல் 66
மரத்திற்கு ஒப்பாம் மாந்தர் 424
மரப்பாவையை ஒப்பார் 425
மருந்து 134, 189
மருந்து என்பதில் உணவுகொள் நெறிக்கும் முதன்மை 337
மலர் நாணும் கண் 425
மறுத்தல் நன்று–எவற்றை 425
மன்னரைச் சேர்ந்தொழுகல் 22, 12, 185
மன்னரைச் சேர்ந்தொழுகலில் குறிப்பறிதல் 332
மன்னரைச் சேர்ந்தொழுகலில் பழமை 333
மன்னவன் காவல் 425
மன்னவன் செங்கோன்மை மழைபோல்வது 328
மன்னனே மாந்தர்க்குத் தெய்வம் 85
மனக்கருத்தின் அறத்தியல்பு 59
மனமொழி மெய்களால் செய்யத் தகுவன 61, 251
மனு முதலிய நூல்கள் 220
மனைக்கு விளக்கம் மடவாள் 40
மனையாளின் மாண்பு 38

மா

மாசற்றார் கேண்மை மருவுக 425
மாணிக்க வாசகர் 302, 306
மாலை நோய் செய்தல் 426
மானத்துள் பணிதலாகிய அடக்கமுடைமை 338
மானம் 136, 137, 189

மு

முக்கரணங்களாலும் தவிரத் தகுவன 61
முக்குணம் : சத்துவம், இராசதம், தாமசம் 31
முக்குற்றம் 53
முதலிழக்கும் செய்வினை 426
முதற்பா 199
முதுமொழி 202, 352, 353
முதுமொழி இலக்கணம் 203
முதுமொழிமேல் வைப்பு 202
முப்பால் 3-11
முப்பொருட் பேறு 7
மும்மூர்த்தி : அரி, பிரமன், சிவன் 31
முயற்சியும் தெய்வமும் 426
முரண்பட்ட கருத்துகள் 230
முரண்பாட்டால் விளக்கல் 227-244
முற்றத் துறத்தல் 33
முல மொழி அடை 23
முன்னூலாரும் அறிஞர் பெருமக்களும் 218
முனிவர் 130

மூ

மூன்று 278

மெ

மெய்ப்பொருள் உணர்ச்சி 301
மெய்ப்பொருள் காண்பது அறிவு 426
மெய்ப்பொருள் நாட்டம் 302
மெய்ம்மை–பொய்ம்மை 74
மெய்யுணர்தல் 80, 178

மே

மேலும் கீழும் 426
மேலுலகினும் மிக்க இன்பம் 426

மொ

மொழிமாற்றுப் பொருள்கோள் 293
மொழிமாற்று முறை 293

**மோ**

மோசி கீரனூர் 11

**யா**

யா 263
யாஅர் என்னும் வினு 270
யாக்கை நிலையாமை 78
யாது வினு 270
யாப்பருங்கலச் சூத்திரம் 201
யாப்பருங்கல விருத்தி 199
யார் 263
யாவினு 264
யாவென்வினு 270
யாற்ருெழுக்கு 293

**வ**

வஞ்சின மாலை 201
வடநூல் மதம் 220
வடநூல் வழக்கு 220
வடநூலாசிரியர் 171
வடநூலார் 7, 90
வருமுன் காத்தல் அறிவுடையார் திறம் 427
வரைவிடை வைத்துப் பிரிவு 154
வரைவின் மகளிர் 131, 188
வரைவின் மகளிரில் மேல்வரும் கள்ளுண்ணுமையும் சூதும் 337
வரைவு கடாதல் 150
வலியறிதல் 94, 181
வலியறிதலில் பொருளின் வலிமை 324
வலியாரும் மெலியாரும் 427
வழிபடு கடவுள் 31
வள்ளி 36
வள்ளுவக் கடவுள் 14
வள்ளுவ நாயனுர் 6
வள்ளுவப் பெருந்தகை 3, 23, 51, 55, 225, 277
வள்ளுவ மாலை 5, 10
வள்ளுவர் 55, 59, 63, 64, 71, 93, 94, 97, 110, 123, 124, 130, 135, 143, 208, 218, 223, 233, 246, 283, 303, 307, 315, 353
வள்வளுவர் உரைக்கும் பொருளும் எடுத்துக் காட்டும் 350-378
வள்ளுவர் குறள் 274
வள்ளுவர் பொருளுணர்த்தும் முறை 217
வள்ளுவர் வழங்கிய பா 199-203
வள்ளுவர் வாக்கு 267
வள்ளுவர் வாய்மொழி 353
வள்ளுவரின் கோட்பாடு 5
வள்ளுவருடைய அடைவு முறை 210
வளை கூறும் உண்மை 427
வறுமையிலும் பிறர்க்கு வழங்குதல் 427
வன்சொல் வழங்குதல் 303

**வா**

வாக்கின்கண் நிகழும் குற்றம் 57
வாணிகர் 47
வாத மண்டலம் 107, 108
வாய்மை 74, 177, 303
வாய்மை நன்று 428
வாய்மையுள் பொய்ம்மை 315
வாய்மொழியின் அறத்தியல்பு 59
வாழ்க்கைத் துணைக்கு நன்கலம் நன்மக்கட்பேறு 306
வாழ்க்கைத் துணைக்குப் புகழ் விருப்பு வேண்டும் 305
வாழ்க்கைத் துணைநலம் 38, 174
வாழ்க்கை முறை 8
வாழ்த்து 35
வான் சிறப்பு 32, 173
வான் நோக்கி வாழும் உலகம் 428
வானப்பிரத்தம் 15, 66
வானின் வேறு பெயர் 32
வானுறை தெய்வ நிலையுறுவார் 428

**வி**

விடத்தக்க நட்பு 428
விடல் வேண்டும் 429
விதிக்கும் முறை 245-259
விதி முகம் 119
விதிமுறை அதிகாரம் 23, 120
வியங்கோள் 246, 288
வியங்கோள் ஈறு 247
வியங்கோள் சொற்கள் 249
விரதம் 65, 66
விருந்தோம்பல் 42, 174
விருந்தோம்பலில் வித்தின்றி விளைதல் 306
விரை ஐந்து 200
வில்லேருழவர்-சொல்லேருழவர் 300

விழுச்செல்வம் 429
விளைவு கூறி அறிவுறுத்தல் 286-296
வினா 263
வினாச்சொற்கள் 263
வினாப்பொருள் 253
வினா வாய்பாடு 260
வினாவிடை முறை 269
வினாவிடை வகையில் பொருள் உணர்த்தும் குறள்கள் 270
வினாவிப் பொருள் உணர்த்தல் 260-270
வினாவின் கிளவி 270
வினாவும் சுட்டும் அடுத்தடுத்து வருதல் 268
வினாவும் முறை 288
வினாவும் விடையும் 268
வினைசெயல் வகை 111, 184
வினைசெயல் வகையுடன் பகைத்திறம் தெரிதல் 331
வினைத்திட்பம் 110, 184
வினைத்திட்பமும் மாட்சியும் 429
வினைத்தூய்மை 21, 109, 184
வினைத்தூய்மையாய்ப் பொருள் சேர்த்தல் 331
வினைத்தூய்மையுள் புகழையும் பிணைத்தல் 331
வினைநலமும் துணைநலமும் 299
வினைப்பகை 60
வினையாடலும் வினைசெயலும் 325
வினையாலணையும் பெயர் 239
வினைவேறு சொல்வேறு பட்டார் 429

வீ

வீடுபற்றிய கருத்துரைகள் 6
வீடுபேறு 82
வீரமாமுனிவர் 281
வீரர்களின் வாய்மொழி 119

வெ

வெஃகாமை 55, 176
வெஃகாமை–கள்ளாமை 73
வெகுளாமை 75, 178, 303, 304
வெகுளாமையில் இன்னா செய்யாமை 316
வெகுளிப் பகுதி தவிர்தல் 66
வெகுளியான் வரும் குற்றம் 125
வெகுளியான் வருவன 125
வெண்கலிப்பா 201
வெருவந்த செய்யாமை 102, 182
வெருவந்த செய்யாமையில் இன்னாமுகமும் கடுஞ் சொல்லும் விலக்கப்படுதல் 328
வெள்ளைச் சுரிதகம் 201

வே

வேண்டத்தக்கவை 429
வேண்டத்தகாதவை 430
வேண்டியது பெறுவார் 430
வேந்தர்ச் சேர்ந்தொழுகல் 22
வேந்தரைச் சேர்ந்தொழுகுவார் 113
வேளாண்மை செய்தல் பொருளால் வருபயன் 430
வேறு அல்லர் 430

வை

வைக்கப்படும் 430
வையாபுரிப் பிள்ளை, எஸ். 10, 19